# மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்

EXCEEDING GREAT AND PRECIOUS PROMISES

வேதாகம விளக்கவுரை

EXPANDED BIBLICAL COMMENTS

# மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்

## விளக்கவுரை

*(Expanded Biblical Comments)*

வாக்குத்தத்த வசனங்களுக்கான சகோ. சார்லஸ் டேஸ் ரசல்
அவர்களுடைய எழுத்துகளிலிருந்து சேகரித்து,
தொகுக்கப்பட்ட விளக்கங்கள்

[தமிழாக்கம்]

சங்கீதம் 1:2

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

# தமிழ் வெளியீட்டாளரின் முன்னுரை

கிறிஸ்துவுக்குள்ளான பிரியமான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துகள்!

சர்வவல்ல தேவன் தம்முடைய மாபெரும் இரக்கத்தினால், கடைசிக் காலங்களில் வாழும் தம் பிள்ளைகளுக்கென்று ஏற்றகால சத்தியங்களை, அவர்தம் கருவியாகிய சகோ. சார்லஸ் டேஸ் ரசல் அவர்கள் மூலமாக வழங்கி இருக்கிறார். இதுவே வேத மாணவர்களாகிய நமது நம்பிக்கையும்கூட. அந்தக் கருவி, உண்மையுள்ள ஊழியக்காரனாய் தனது ஏறத்தாழ 37 வருட ஊழிய காலத்தில், பல்வேறு வேதாகம தலைப்புகளின்கீழும், பல்லாயிரக்கணக்கான வசனங்கள் மீதும் எண்ணற்ற ஆழமான மற்றும் துல்லியமான விளக்கங்களை எடுத்துரைத்திருந்தார்.

வேதத்தையும் சத்தியங்களையும் ஆராய்ந்து தியானிக்கும் வேத மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக, பலவருடங்களாக, ஐக்கிய அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த பல சகோதர சகோதரிகள் தங்கள் தாலந்துகளை மனமார பலிசெலுத்தி, இந்த அரும் பொக்கிஷமான விளக்கங்களை, சகோதரருடைய எழுத்துகளிலிருந்து பிரித்தெடுத்து, தொகுத்து, விளக்கவுரை வடிவில், **"Expanded Biblical Comments"** எனும் தலைப்பின்கீழ் கடந்த காலங்களில் வெளியிட்டிருந்தனர். வெளிவந்த நாள்துவக்கி இன்றளவும் அநேக சகோதர சகோதரிகளுடைய வேத ஆராய்ச்சிக்கு உதவும் ஓர் இன்றியமையாத கருவியாக இந்த விளக்கவுரை இருந்து வந்துள்ளது.

அதின் ஒவ்வொரு விளக்கமும், ஒரு பெரிய சமுத்திரத்தின் ஒரு துளியாக திகழ்கிறது. ஒவ்வொரு வாக்கியமும் அந்தந்த சத்தியத்திற்குத் தொடர்புடைய பல இணையான சத்திய கதவுகளைத் திறந்துவைத்து, வேத மாணவர்களின் ஆராய்ச்சியில், இன்றியமையாத வழித்துணையாக இருந்து வந்துள்ளது.

மறுபுறம், நமது சகோதர சகோதரிகளுடைய அநுதின தியானங்களில், அநுதின பரலோக மன்னா, இரவின் இனிய கீதங்கள், வாக்குத்தத்தங்கள் ஆகிய புத்தகங்கள் முக்கிய பங்கு வகிப்பதையும் நாம் கவனித்திருப்போம்.

இவ்வாறிருக்க, விளக்கவுரையில், இந்த அநுதின தியானங்களில் வரும் வசனங்களுக்கான விளக்க மேற்கோள்களை தேடி எடுத்து வாசிக்கும்போது, அது இன்னும் ஆழமான தியானத்திற்குள்ளாக வழிநடத்துவதை அநேகரால் உணர முடிந்தது.

ஆகவே, இரக்கமுள்ள பரமபிதாவின் மாபெரும் கிருபையினால், பரிசுத்தவான்களின் வேண்டுகோளுக்கு இணங்க, சகோதர சகோதரிகளுடைய தியானத்திற்கு உதவியாக இருக்கும்படிக்கு, முதல் முயற்சியாக "**மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்த வசனங்களுக்கான விளக்கவுரை**"யின் தமிழாக்கத்தை ஜெபத்தோடும், நன்றியோடும் தங்கள் மத்தியில் வெளியிடுவதில் நாங்கள் அகமகிழ்கிறோம்.

இந்தப் பணியில், தேவையான ஏற்றகால உதவிக்கரங்களை நீட்டிய, பிதாவாகிய தேவனுக்கும், அன்பின் கர்த்தருக்கும், அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு சகோதர சகோதரிகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"பிதாவாகிய தேவனுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் என்றென்றும் மகிமை உண்டாவதாக. ஆமென்."

இங்ஙனம்,
வெளியீட்டாளர்.

# பணிவான வேண்டுகோள்

விளக்கவுரையின் அமைப்பு, பின்பற்றப்பட்ட நெறிமுறைகள், விளக்கங்களை வாசிக்கும்போது மனதில் வைக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்கள், உதவிகரமான தகவல்கள் மற்றும் ஆங்கில முன்னுரைகளின் தமிழாக்கம் என்பவைகளை வாசகருக்கு உதவியாக இருக்கும் என்று எண்ணி பின்வரும் பக்கங்களில் பதிவுசெய்துள்ளோம்.

இவை அனைத்தையும் சற்று நிதானித்து உள்வாங்கிய பிறகு, விளக்கவுரையைப் பயன்படுத்தும்போது, வாசகருக்குத் தெளிவான பார்வை கிடைக்கும் என்பதை பணிவான வேண்டுகோளாக முன் வைக்கிறோம்.

# ஆங்கில முன்னுரை I ன் தமிழாக்கம்

**(பழைய ஏற்பாட்டிற்கு விளக்கவுரை தொகுக்கப்பட்டபோது, வெளியான முன்னுரை)**

சகோ. சார்லஸ் டேஸ் ரசல் அவர்கள், **கி.பி. 1879** முதல் **கி.பி. 1916** வரையிலான தம்முடைய ஏறத்தாழ **37 வருட** ஊழிய காலத்தின்போது, தயாரித்து வெளியிட்ட எழுத்துகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட **39,000 பக்கங்களளவும்** இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது, தோராயமாக, நாள் ஒன்றுக்கு **4 பக்கங்களுக்கு** மேலாக இருந்திருக்க வேண்டும். அவருடைய இப்பேர்ப்பட்ட மகத்தான படைப்புகளில், பல்வேறு வேதாகம தலைப்புகளின்கீழ், ஆயிரமாயிரம் வேத வாக்கியங்களுக்கான துல்லியமும் ஆழமுமான விளக்கங்கள் காணப்படுகின்றன. அவர் ஒவ்வொரு தலைப்பின்கீழாக கட்டுரைகளை எழுதியிருப்பதால், குறிப்பிட்ட வசனங்கள் சம்பந்தப்பட்ட அவருடைய போதனைகளைக் கண்டறிந்து பிரித்தெடுப்பது என்பது எப்போதும் சுலபமான காரியமாக இருந்ததில்லை.

ஆகவே, குறிப்பிட்ட வேதவாக்கியங்கள் பற்றிய அவருடைய விளக்கங்களை தனியே பிரித்தெடுக்கும் இந்தப் பணியை வேத மாணவர்களுக்கு எளிதாக்கி தருவதற்காக, கடந்த பல வருடங்களாக **நான்கு** முயற்சிகள் ஏறெடுக்கப்பட்டன. இந்த முயற்சிகள் ஒவ்வொன்றிலும் அதன் முந்தைய முயற்சியை விடவும் எல்லா விளக்கங்களையும் உள்ளே கொண்டுவருவதற்கேதுவாக பிரயாசங்கள் ஏறெடுக்கப்பட்டன, இதுவே இந்தப் பணியின் நோக்கமும்கூட.


*LINEAR PARALLEL EDITION*

THE HOLMAN

COMPARATIVE SELF-PRONOUNCING

S. S. TEACHERS' BIBLE

CONTAINING, IN COMBINED TEXT, THE AUTHORIZED AND REVISED VERSIONS OF THE OLD AND NEW TESTAMENTS

AND

VARIOUS BIBLE STUDY HELPS

SPECIAL EDITION PREPARED FOR WATCH TOWER BIBLE AND TRACT SOCIETY, ALLEGHENY, PA.

BY

A. J. HOLMAN & CO., PHILADELPHIA, PA.

ஆரம்பத்தில், **கி.பி. 1901ல்**, அகல – ஓரமுடைய லீனியர் பைபிளின் (wide margin edition of the Linear Bible) விசேஷித்த பதிப்பொன்றை தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன, அதில் அப்போது வரைக்கும் வெளியாகியிருந்த வேதாகமப் பாடங்களின் **ஐந்து** தொகுதிகளிலிருந்தும், அதற்கு முந்தைய **ஆறு** வருட காவற்கோபுர இதழ்களிலிருந்தும் எடுக்கப்பட்ட அந்தந்த வசனங்களுக்குரிய பொருத்தமான மேற்கோள்கள் அனைத்தும் அந்தந்த வசனத்திற்கு அருகிலேயே விளிம்பு குறிப்புகளாக அச்சிடப்பட்டிருந்தன. இந்த பைபிளில், பொதுவான கிங் ஜேம்ஸ் மொழியாக்கம் மற்றும் ரிவைஸ்டு மொழியாக்கம் என இரண்டினுடைய வசனங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. அதைப் பற்றிய கூடுதல் விவரங்களை, காவற்கோபுர ரீப்பிரிண்ட்ஸ் (reprints), பக்கங்கள் 2850 மற்றும் 3451ல் காணலாம் (R2850/R3451).



**கி.பி. 1907ம்** ஆண்டில், சகோ. கிளேட்டன் ஜேம்ஸ் வுட்வொர்த்து (Bro. Clayton James Woodworth) அவர்கள் தனிப்பட்ட வகையில், ஆறு தொகுதிகள் கொண்ட வேதாகமப் பாடங்களிலிருந்து தனித்தனி வேத வாக்கிய விளக்கங்களைக் கண்டறிந்து பிரித்தெடுக்கும் பணியை மேற்கொண்டிருந்தார், இது பின்னாட்களில், வேத மாணவர்களின் புதிய பைபிளுடைய பின்னிணைப்புகளின் ஒரு பகுதியாக, சர்வதேச வேத மாணவர் ஐக்கிய சபையால் வெளியிடப்பட்டது. இந்தப் பின்னிணைப்புகளில், சகோதரி. கொர்ட்ரூட் வுட்காக் சைபர்ட்டு (Sr. Gertrude Woodcock Siebert) அவர்களால் தொகுக்கப்பட்ட "Topical Index" (வேத வாக்கிய மற்றும் காவற்கோபுர எழுத்துகளின் மேற்கோள்கள் அடங்கிய அட்டவணை) மற்றும் "Instructor's Guide" (பல்வேறு வேதாகம தலைப்புகள் கீழ்,



அதற்குரிய ஆதார வசனப்பகுதி, வசனங்களின் இருப்பிடம் மற்றும் காவற்கோபுர எழுத்துகளின் மேற்கோள்கள் அடங்கிய தொகுப்பு) என்பவைகளும், சகோ. வுட்வொர்த்து அவர்களால் தொகுக்கப்பட்ட கடினமான மற்றும் தெளிவற்ற வசனப்பகுதிகளுக்கான காவற்கோபுர எழுத்துகளில் காணப்படும் விளக்கங்கள் பற்றிய ஒரு பகுதியும் (a section on Difficult Texts) கொடுக்கப்பட்டிருந்தன. அந்தப் படைப்பானது **கி.பி. 1907**ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் விநியோகிக்கப்படுவதற்குத் தயாராக இருந்தது, இது குறித்து காவற்கோபுர ரீப்பிரிண்ட்ஸ் பக்கங்கள் 3992 மற்றும் **4072**ல் அறிவிக்கப்பட்டுள்ளது **(R3992/R4072)**. சகோ. வுட்வொர்த்து அவர்கள், **கி.பி. 1906**ம் ஆண்டு நவம்பர் மாதம் துவக்கி, **கி.பி. 1907**ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலான 6 மாத காலமளவும், நாள் ஒன்றுக்கு **7 மணிநேரம்** செலவழித்து, இந்த விளக்கங்களை ஒன்றுதிரட்டியதாக, இந்த ரீப்பிரிண்ட்ஸ் பக்கங்கள், நமக்குத் தெரிவிக்கின்றன.

**கி.பி. 1908**ம் ஆண்டு மே மாதத்தில், சகோ. வுட்வொர்த்து அவர்களால் காவற்கோபுர கட்டுரைகளிலிருந்தும், வேதாகமப் பாடங்களின் **ஆறு** தொகுதிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட இன்னும் கூடுதலான விளக்கங்களைக்கொண்டு புதுபிக்கப்பட்ட அந்த பைபிளின் **இரண்டாம்** பதிப்பிற்கான திட்டங்கள் அறிவிக்கப் பட்டன. இந்த அறிவிப்பை ரீப்பிரிண்ட்ஸ் பக்கம் **4096**லும், மீண்டும் அச்சடிக்கப்பட்டது பற்றின அறிவிப்பைப் பக்கம் **4852**லும் காணலாம் **(R4096/R4852)**.



BEREAN
BIBLE TEACHERS'
MANUAL

*PART I*
ZION'S WATCH TOWER
ETC., AND
DAWN—STUDIES—COMMENTS

*PART II*
INSTRUCTORS' GUIDE-TEXTS

*PART III*
BEREAN TOPICAL INDEX

*PART IV*
DIFFICULT TEXTS EXPLAINED
SPURIOUS PASSAGES NOTED

COPYRIGHTED, 1909
BY THE
WATCH TOWER BIBLE & TRACT SOCIETY
BROOKLYN, N. Y., U. S. A.

இப்படியாக **கி.பி. 1908** வாக்கில் வெளிவந்த அந்தப் பதிப்பே, **(கி.பி. 1982க்கு** முந்தைய) **70 ஆண்டு** காலமளவும் பல வேத மாணவ நூலகங்களில் (Bible Student libraries) வசன விளக்கத்திற்கான மேற்கோள்களுக்கு உதவும் ஒரு நிலையான கையேடாக (a standard reference work) மாறியிருந்தது. மேலும், அந்தப் படைப்பானது சிகாகோ வேத மாணவ புத்தக மறுபதிப்புக்குழுவால், **16 ஆண்டுகளில் ஆறு** முறை மறுபதிப்பு செய்யப்பட்டது. இந்தத் தொகுதிக்கான தேவை தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே வருகிறது, இதுவே வேத மாணவர் களிடையே இந்தப் புஸ்தகம் பெற்றிருக்கும் நீடித்த நன்மதிப்பிற்கான நல்லதொரு அறிகுறியாக இருக்கிறது.

இருப்பினும், அந்தப் படைப்பில், பாஸ்டர் ரசல் அவர்களின் **கி.பி. 1907** வரையிலான எழுத்துகளிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் மட்டுமே காணப்பட்டதாலும், அவர் எழுதிய மற்ற பல புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட விளக்கங்கள் அதில் சேர்க்கப்படவில்லை என்பதாலும், அந்தப் படைப்பைப் புதுப்பிப்பது ஞானமாக இருக்குமென்று கருதப்பட்டது. இன்னுமொரு காரணம் என்னவென்றால், முந்தைய தயாரிப்பில், பல முரண்பாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது, அதாவது வசன விளக்கங்களுக்காக குறிப்பிடப்பட்டிருந்த மேற்கோள்கள் பலவற்றை எடுத்துப் பார்க்கும்போது, அந்த விளக்கத்தின் துல்லியத்தை உறுதிசெய்ய (verify) முடியவில்லை. (இந்தப் பழைய ஏற்பாட்டு விளக்கவுரை **கி.பி. 1982**ம் ஆண்டு வெளிவந்தது, ஆக அதற்கு) **ஏழு** ஆண்டுகளுக்கு முன்பே, **முதலாம்** பாகமாகிய பழைய ஏற்பாட்டிற்கான விளக்கவுரை பணியானது தொடங்கப்பட்டது. அந்தச் சமயத்தில், **நான்கு** கட்ட திட்டமொன்று (four stage program) வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது.

**முதல்** கட்டமாக, **கி.பி. 1909** முதல் **கி.பி. 1916** வரை வெளிவந்த ரீப்பிரிண்ட்சைக் கவனமாகவும், வரிசை கிராமமாகவும் வாசிப்பதற்கும், வாசித்துப் பிறகு அந்தக் கருத்துகளை உள்வாங்கி, ஒவ்வொரு வேதாகம தலைப்பின் கீழாக அட்டைகளில் பதிவுசெய்வதற்கும், ஐக்கிய அமெரிக்க தேசம் முழுவதிலுமிருந்து கிட்டத்தட்ட **50 சகோதர சகோதரிகள்** அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. பாஸ்டர் ரசல் அவர்களின் இதர புத்தகங்களும் இந்த வாசிப்புப் பணியில் சேர்க்கப்பட்டன. இதன் விளைவாக, **ஓர் ஆண்டிற்குப்** பிறகு, சுமார் 20,000 முதல் 25,000 வரையிலான தனித்தனி விளக்கங்கள் சேகரிக்கப்பட்டு, வேத வாக்கிய வரிசையில் பதிவு செய்யப்பட்டன. அது மாத்திரமல்லாது, பல்வேறு அட்டவணைகளில் (indexes) மேற்கோள் காட்டப்பட்டிருந்த அனைத்து வேத வாக்கியங்களும் கூடுதலான விளக்கங்களுக்காக மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்டன.

திட்டத்தின் **இரண்டாம்** கட்டத்தில், புதிதாக கிடைத்த விளக்கங்களை, பழைய பதிப்புகளோடு இணைப்பதற்கும், ஒவ்வொரு விளக்கத்தின் துல்லியத்தை உறுதிசெய்வதற்கும் நான்கு கைப்பிரதி தொகுப்பாளர்கள் (manuscript compilers) கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. புதிய புத்தகத் திற்கான எழுத்துகளை (material) தெரிந்தெடுக்கும்போது, சகோதரரின் எல்லா கருத்துகளையும் உள்ளது உள்ளபடி பதிவுசெய்வதை (objectivity) உறுதிப்படுத்துவதற்காக வழிகாட்டு நெறிமுறைகள் (set of guidelines) வகுக்கப்பட்டன. **(இந்த வழிகாட்டு நெறிமுறைகளுடைய மாதிரியைப் பின்வரும் பக்கங்களில் காணலாம்.)**

**[தமிழ் வாசகருக்கான குறிப்பு: 'objectivity' என்பதை எவ்வாறு புரிந்துகொள்ளலாம் என்றால், சகோ. ரசல் அவர்களுடைய எழுத்துகளில் ஓர் இடத்தில் காணப்பட்ட சில கருத்துகள் வேறொரு இடத்தில் மேலும் வெளிச்சம் கிடைக்கப்பெற்று, மாற்றத்திற்கு உள்ளாகி பதிவாகியிருக்கும். எனவே, Expanded Biblical Comments தொகுப்பாசிரியர்கள், இத்தொகுப்பு எல்லாவற்றையும் உள்ளடக்கிய நடுநிலையான தொகுப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக, உள்ளது உள்ளபடி பதிவுசெய்யும் வண்ணமாக, சகோ. ரசல் அவர்களுடைய முந்தைய கருத்தையும், மேலும் வெளிச்சம் கிடைக்கப்பெற்று மாற்றத்திற்கு உள்ளான கருத்தையும் பதிவுசெய்துள்ளனர்.]**

**மூன்றாம்** கட்டமாக, இந்தப் பிரதிகளைச் சரிபார்த்து, தொகுத்து வைக்கும் பணிதான் (editing), அதிக காலம் எடுத்துக்கொண்டது, மேலும் இப்பணியைத் தாமதப்படுத்தவும் செய்தது. ஆகவே, எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான தொகுத்தமைக்கும் செயல்முறையொன்று வகுக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட அனைத்து எழுத்துகளின் துல்லியம் (accuracy), சகோதரரின் எல்லா கருத்துகளையும் உள்ளது உள்ளபடி பதிவுசெய்வது (objectivity) மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருப்பது (exhaustiveness) என்பவைகளைச் சரிபார்த்து, அவை அனைத்தையும் மதிப்பாய்வு (review) செய்வதற் கென்று தலைமை தொகுப்பாசிரியர் (master editor) **ஒருவர்** நியமிக்கப்பட்டார். இந்தப் பணியில் அவருக்கு உதவும் வண்ணமாக, தேவையான மூல ஆராய்ச்சிப் பிரதிகள் அனைத்தும் வழங்கப்பட்டன.

பின்னர் 13 பேர் கொண்ட **இரண்டாம் நிலை** தொகுப்பாசிரியர் (secondary editors) குழுவொன்று அமைக்கப்பட்டு, தலைமை தொகுப்பாசிரியரின் தலையீடு இல்லாமல், தனிப்பட்ட வகையில் கைப்பிரதிகளைச் சரிபார்ப்பதற்காக, குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் அந்தப் பிரதிகள் அனுப்பப் பட்டன. இந்த **இரண்டு** தொகுப்பாசிரியர்களின் பணியும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களிடம் (project coordinators) சமர்ப்பிக்கப்பட்டது; இவர்கள், இறுதித் திருத்தத்திற்காக அவர்கள் சமர்ப்பித்த எழுத்துகளை முழுமையாக உள்வாங்கி சரிபார்க்கலாயினர்.

சிகாகோ வேத மாணவர்களின் **இரண்டு** மூப்பர்கள் இறுதித் திருத்தச் செயல்முறையைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டனர். இவர்களில் முதலாம் மூப்பர், தலைமை மற்றும் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் தொகுத்து வழங்கிய அனைத்து எழுத்துகளையும் மதிப்பாய்வு செய்வதோடுகூட, பல்வேறு வேத வாக்கிய அட்டவணைகளில் (Scripture indices) குறிப்பிடப்பட்டிருந்த ரீப்பிரிண்ட்ஸ் மற்றும் பாஸ்டர்

ரசல் அவர்களின் மற்ற எழுத்துகள் என அனைத்தையும் மீண்டும் வாசித்து, கிடைக்கின்ற கூடுதலான விளக்கங்களையும் அதில் இணைக்க வேண்டியிருந்தது. அடுத்து, இவர்களில் இரண்டாம் மூப்பர், முதலாம் மூப்பருடைய கூடுதலாக சேகரிக்கப்பட்ட விளக்கங்கள் உட்பட முழுப் பணியையும் மீண்டும் மதிப்பாய்வு செய்ய வேண்டியிருந்தது.

**நான்காம்** கட்டமாகிய இறுதிக் கட்டமானது தயாரிப்பு ஆகும் (production), இதிலும் கூட அச்செழுத்துகளைக் கோர்க்கும் பணிக்காகவும் (typesetting), பிழைகள் உள்ளனவா எனப் பன்முறை சரிபார்ப்பதற்காகவும் (proofreading), நிறுத்தற்குறிகள் மற்றும் தேவையான இடத்தில் பெரிய எழுத்து பயன்பாடு (capital letters) என்பது போன்ற இலக்கணப் பிழை திருத்தம் செய்வதற்காகவும், மீண்டும் பல சகோதர சகோதரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இப்படியாக இந்தப் பல கட்டங்களடங்கிய கடினமான செயல்முறையின் பலனாக, இப்போது இந்தப் புத்தகம் உங்கள் கரங்களுக்குக் கடந்து வந்துள்ளது, இதில் ஏறக்குறைய தட்டச்சு செய்யப்பட்ட **1127** பக்கங்களும், பழைய ஏற்பாட்டில் மட்டும் மொத்தம் **27,659** மேற்கோள்கள் கொண்ட **20,200** தனித்தனி விளக்கங்களும் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில், முந்தைய கையேட்டில் **7,007** விளக்கங்களும், **7,860** மேற்கோள்களும் இருந்தன.

உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள இந்தப் புஸ்தகத்தில், சகோதரரின் எல்லா கருத்துகளையும் உள்ளது உள்ளபடி பதிவுசெய்வதையும் (objectivity), சீரான தன்மையையும் (uniformity) தக்கவைப் பதற்காக, பல வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, பின்பற்றப்பட்டுள்ளன. அதற்கேற்ப, இங்குள்ள வாக்கியங்கள், இந்த எழுத்துகளின் ஆசிரியராகிய பாஸ்டர் சார்லஸ் ரசல் அவர்களின் சிந்தையைத் துல்லியமாக பிரதிபலிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் – இவரது எழுத்துகளையே நாங்கள் விளக்கவுரை வடிவில் கொடுக்க விரும்பி, முயற்சிகளை ஏறெடுத்துள்ளோம்.

சகோதரனுடைய கிட்டத்தட்ட **40 ஆண்டுகால எழுத்துப் பயணத்தில்**, கருத்துகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும், அதோடுகூட, அவை பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும், இதனால் அந்தக் கருத்துகளைப் பலவிதமாக புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது; ஆக, இதனை மனதில் வைத்து, முடிந்தவரைக்கும் இந்த விளக்கவுரையை நடுநிலையாக (unbiased) இருப்பதற்கேதுவாக முயற்சிகள் ஏறெடுக்கப்பட்டுள்ளன. ஒருவேளை ஒரு காரியத்தைக் குறித்து (ஓர் இடத்தில் ஒரு வகையிலும், இன்னொரு இடத்தில் இன்னொரு வகையிலும்) முரண்பட்டவையாக தோன்றும் கருத்துகளோ அல்லது வார்த்தைகளோ கண்டறியப்பட்டால், இரண்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டன. அதேசமயம் இதற்கு ஒரு விதிவிலக்கும் உண்டு, அதாவது, ஆசிரியரால் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கண்ணோட்டத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில், பிந்தைய கண்ணோட்டங்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டன. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு யாதெனில், புதிய உடன்படிக்கையின் செயல்பாட்டின் விஷயத்தில் ஏற்பட்ட கண்ணோட்டத்தின் மாற்றத்தைக் குறித்து, **கி.பி. 1909** மற்றும் **கி.பி. 1910**ம் ஆண்டுகளில் மிகவும் பரவலாக பேசப்பட்ட காரியமாகும்.

பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துகளில், அவரைத் தவிர மற்ற நபர்களால் பேசப்பட்ட காரியங்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தன, அந்த எழுத்துகளை எவ்வாறு கையாள்வது என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது. பத்திரிக்கையின் ஆசிரியராகிய பாஸ்டர் ரசல் அவர்களின் மேற்பார்வையின் கீழ்தான், மற்றவர்களது கருத்துகள் / எழுத்துகள் காவற்கோபுர எழுத்துகளில் சேர்க்கப்பட்டன என்ற காரணத்தினால், அந்தக் கருத்துகளையும் இந்த விளக்கவுரையில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்துகள், இந்தத் தொகுதியில், ஒரு **நட்சத்திரக் குறியீடு** (*) மூலமாக சுட்டிக்காட்டப்பட்டது. அத்தகைய கருத்துகள் முந்தைய வேத மாணவர்கள் கையேட்டிலும் சேர்க்கப்பட்டிருந்தன (original Bible Students Manual). இருப்பினும், இதற்கும்

விதிவிலக்குகள் உண்டு; Harvest Gleanings எனும் புத்தகத்தில் காணப்படும் விவாதங்களில் Rev. White (ஒயிட்) மற்றும் யூளஸ. சிழிமிலிஜ (ஈட்டன்) என்பவர்களிடமிருந்து வெளிவந்த எதிரிடையான கருத்துகள் போன்றவைகளுக்கு, பாஸ்டர் ரசல் அவர்கள் தரப்பிலிருந்து வெளிவந்த கருத்துகளும், இந்த விளக்கவுரையில் மேற்கோள்களாக சேர்க்கப்பட்டுள்ளன – ஆனால், நட்சத்திரக் குறியீடு இல்லாமல் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், Harvest Gleanings எனும் புத்தகத்தில் காணப்படும் "தி த்ரீ வேர்ல்ட்ஸ்" ("The Three Worlds" ) புத்தகத்தின் சில சிறுபகுதிகளும்கூட இந்த விளக்கவுரையில் நட்சத்திரக் குறியீடு இல்லாமல் சேர்க்கப்பட்டுள்ளன – இருப்பினும், இந்தப் புத்தகத்தின் ("The Three Worlds") உண்மையான ஆசிரியர் பாஸ்டர் ரசல் அவர்களா அல்லது N.H. பார்பரா என்பது விவாதத்திற்குரியது. அந்தச் சிறுபகுதிகளும்கூட வெகு சொற்ப அளவில்தான் மேற்கோள்களாக சேர்க்கப்பட்டுள்ளன. ரீப்பிரிண்ட்சில், கையொப்பமிடப்படாத அனைத்து கட்டுரைகளும், (கட்டுரையின் கீழே நபரின் பேர் வெளிப்படையாக குறிப்பிடப்படாதபோது அது) பாஸ்டர் ரசல் அவர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்டது.

பாஸ்டர் ரசல் அவர்களின் செய்தித்தாள் பிரசங்கங்களிலிருந்து (Newspaper Sermons) எடுக்கப்பட்டதும், **"N"** என்ற குறியீட்டால் குறிக்கப்பட்டதுமாகிய பழைய கருத்துகளின் பகுதிகளைச் சரிபார்க்க (verify) முடியாததால் அவை சேர்க்கப்படவில்லை (N குறியீடு பயன்பாடு இத்தொகுப்பில் காணப்படாது). இருப்பினும், இதற்கு விதிவிலக்காக, மல்கியா புத்தகத்தில் **இரண்டு** இடங்களில் அவை பயன்படுத்தப்பட்டுள்ளன, ஏனெனில், இந்தப் பிரசங்கங்கள், Harvest Gleanings எனும் புத்தகத்தின் 2ம் தொகுதியில் வெளிவந்ததால், அந்தக் கருத்துகளைச் சரிபார்த்து, விளக்கவுரையில் பயன்படுத்த முடிந்தது. Harvest Gleanings புத்தகத்தின் **முதலாம்** தொகுதியின் மேற்கோள்களிலிருந்து, இரண்டாம் தொகுதியின் மேற்கோள்களை வேறுபடுத்தி காட்டுவதற்காக, **"NS"** (Newspaper Sermons / செய்தித்தாள் பிரசங்கங்கள்) எனும் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாஸ்டர் ரசல் அவர்கள், அவ்வப்போது, வேதவாக்கியங்களை தனது வழக்கமான வாக்கியங்களில் இடையிடையே வெகு இயல்பாக மேற்கோள் காட்டும் பழக்கமுடையவர் – இது முழு வேதாகமத்தில் அவர் பெற்றிருந்த பரிச்சயத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இம்மாதிரி இடையிடையே வெகு இயல்பாக பயன்படுத்தப்பட்ட வேத வசனத்திற்கான எண்ணும் (verse number) அரிதாகவே அங்கே இடம் பெற்றிருக்கும். இந்தக் காரணத்தினால், குறிப்பாக **கி.பி.1909**க்கு முந்தைய ஆண்டுகளுக்குரிய முறையாக ஆய்வு செய்யப்படாத கட்டுரைகளிலிருந்து, இம்மாதிரியான 'வசன எண்' இல்லாத கருத்துகள் பலவற்றைப் பிரித்தெடுப்பது கடினமாக இருந்தது. எனவே, இந்தச் சிக்கலின் காரணமாக, குறிப்பிடத்தக்க கருத்துகள் பல தற்செயலாக விடுபட்டுப் போயிருக்க வாய்ப்புள்ளது.

முதல் கட்டத்தில், **கி.பி. 1908**க்குரிய எழுத்துகள் ஆய்வு செய்யப்படாததால், மற்ற குறிப்பிடத்தக்க கருத்துகள் விடுபட்டுப் போயிருக்க வாய்ப்புள்ளது, ஏனெனில் அந்த நேரத்தில் அது அசல் விளக்கவுரையில் சேர்க்கப்படவில்லை என்பதை நாங்கள் அறியாதிருந்தோம். மேலும், இறுதித் தொகுத்து அமைக்கும் கட்டத்தில் காரியம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வரும்போதே, 'இறுதி ஆராய்ச்சி இன்னும் முழுமையாகவும், துல்லியமாகவும் இருப்பது அவசியம்' என்பது உணரப்பட்டது, இது ஐந்து ஆகமங்கள் போன்ற ஆரம்ப புத்தகங்களில் உணரப்படவில்லை.

கட்டுரைகளில் கொடுக்கப்பட்டிருந்த வார்த்தைகளை, மேற்கோள்களில் அப்படியே பயன்படுத்த முயற்சிகள் ஏறெடுக்கப்பட்டிருந்தபோதிலும், பல சந்தர்ப்பங்களில் இது சாத்தியப்படவில்லை, அதுமாத்திரமல்லாது இம்மாதிரியான பெரிய தொகுதியின் நீளத்தையும் கருத்தில்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, கருத்து மாறாமல் வாக்கியங்களைச் சுருக்கி எழுதும் பாணி (paraphrasing) பின்பற்றப்பட்டது. இந்தத் தொகுதிக்காகப் பின்பற்றப்பட்ட விரிவான தொகுத்தமைக்கும் செயல் முறையானது, மூல எழுத்தில் ஆசிரியர் விளம்பிய கருத்துகள், இந்தச் சுருக்கமான வாக்கியங்களில் துல்லியமாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரையில் ஒரு வசனத்திற்கான விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ள பொதுவான நிழல் படங்கள் (typical pictures), மற்ற பொருத்தமான வசனத்திற்கும் மேற்கோளாக பயன்படுத்தப்படுவதை எவ்வாறு கையாள்வது என்பது இறுதியான ஒரு பிரச்சனையாக இருந்தது. [**தமிழ் வாசகருக்கான குறிப்பு: முந்தைய பதிப்புகளில், என்ன நடந்தது என்றால், சகோ. ரசல் அவர்கள் தமது கட்டுரையின் ஒரு பகுதியில் ஒரு வசனம் குறித்து விளக்கிப் பேசியிருப்பார். தொகுப்பாசிரியர்களோ அதே விளக்கம் அந்த வசனத்திற்கு மாத்திரம் அல்லாமல், வேறு வசனத்திற்கும் பொருத்தமாக இருப்பதாக உணர்ந்து, வேறு வசனங்களின்கீழும் அந்த விளக்கத்தைப் பதிவுசெய்திருந்தனர்.**] இப்படியாக, அவை அந்தக் குறிப்பிட்ட வேத வாக்கியத்திற்கான பாஸ்டர் ரசல் அவர்களின் கருத்துகளாக இல்லாதிருந்தபோதும், பொருத்தத்தின் பேரில் மற்ற வேத வாக்கியங்களுக்கு மேற்கோள்களாக பயன்படுத்துவது, முந்தைய விளக்கங்களில், ஒரு பொதுவான நடைமுறையாக இருந்தது. ஆனால், முந்தைய கையேட்டில் காணப்பட்ட இம்மாதிரியான வாக்கியங்களை, தற்போதைய தொகுதியானது முழுவதும் சேர்த்துக்கொள்ளவில்லை. எப்படியெனில், தொகுப்பாளர்களோ (compilers) அல்லது தொகுப்பாசிரியர்களோ (editors), எங்கெல்லாம் குறிப்பிட்ட வேத வாக்கியத்தின்கீழ் கொடுக்கப்பட்ட பொதுவான கருத்து சரியாக பொருந்தி வருவதாக உணர்ந்தார்களோ, அங்கெல்லாம் அது சேர்த்துக்கொள்ளப்பட்டது; அதேசமயம், எங்கெல்லாம் பொருந்தி வராமல் வேறுபாடு இருப்பதாக உணர்ந்தார்களோ, அங்கெல்லாம் அது சேர்த்துக் கொள்ளப்படாமல் விலக்கப்பட்டது. இருப்பினும், இந்த விஷயத்தை, தொகுப்பாசிரியர்கள் சுயாதீனமாக நிதானித்து முடிவெடுப்பதற்கென்று விட்டுவிடப்பட்டது.

அடுத்து, கருத்துகள் எந்தப் பக்கங்களிலிருந்து எடுக்கப்பட்டன என்பதை எவ்வாறு குறிப்பிடுவது என்பதில் கவனம்செலுத்தப்பட்டது. ஒவ்வொரு படைப்பிற்குமான சுருக்கக் குறியீடுகள் (Abbreviated symbols), பொருத்தத்தின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டன, அவற்றைக் குறித்து இந்தத் தொகுதியின் முன்பகுதியில் தனியாக பக்கம் ஒதுக்கி விளக்கப்பட்டுள்ளது.

- வேதாகமப் பாடங்களின் **ஆறு** தொகுதிகள் மற்றும் ஆசரிப்புக்கூடார நிழல்கள் என்பவைகளிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துகளுக்கு அதற்குரிய பக்க எண்ணை மட்டும் குறிப்பிடுவது போதுமானதாயிருக்கும் என்று கருதப்பட்டது (**எ.கா. – F20**).

- Question Book (சகோ. ரசல் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள், அதற்கு அவர் அளித்த பதில்களின் தொகுப்பு), Sermon Book (சகோ. ரசல் அவர்களது பிரசங்கங்களின் தொகுப்பு) மற்றும் Overland Monthly (ஓவர்லேண்ட் மந்த்லி எனும் மாதாந்திர இதழில், சகோ. ரசல் அவர்களது மரணம் வரைக்கும் வெளியாகிக்கொண்டிருந்த அவரது கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு) போன்ற சிறிய புத்தகங்களுக்கான மேற்கோள்களில், பக்க எண்ணையும், ஒரு முக்கால்புள்ளியையும் ( : ), அதன் பிறகு அதற்குரிய பத்தி எண்ணையும் காண்பீர்கள் (**எ.கா. – SM483:5**).

- முந்தைய பக்கத்தில் ஆரம்பமாகி அடுத்த பக்கத்தின் மேல் பகுதி (top of a page) வரை வரும் பத்திகளிலிருந்து கருத்துகள் மேற்கோள் காட்டப்படும்போது, அது “T” என்ற எழுத்தின் மூலமாக குறிப்பிடப்பட்டது (**எ.கா. – OV9:T**).

- காவற்கோபுர ரீப்பிரிண்ட்ஸ், Harvest Gleanings, Convention Report Sermons போன்ற சற்று பெரிய புத்தகங்களின் மேற்கோள்கள், சற்று வித்தியாசமாக கையாளப்பட்டது. இங்கு காண்பிக்கப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு பக்கமும் **ஆறு சம பிரிவுகளாக** (six equal sections) பிரிக்கப் பட்டன. ஆக, இங்கு முக்கால்புள்ளிக்குப்பின் ( : ) உள்ள எண்ணானது பத்தி எண்ணைக் குறிக்காமல், மாறாக இங்குள்ள படத்தில் சித்தரிக்கப்

| | |
|---|---|
| *1* | *4* |
| *2* | *5* |
| *3* | *6* |

பட்டுள்ளபடி, பிரிவு எண்ணைக் (section number) குறிக்கும் வண்ணமாக பயன்படுத்தப்பட்டது **(எ. கா. – R4061:6)**. கவிதைகள், பக்க ஓரத்திலிருந்து உள்தள்ளப்பட்ட வேத வாக்கியங்கள் (indented Scriptures) மற்றும் நீண்ட துணைத் தலைப்புகள் என்பவைகளை உள்ளடக்கியிருக்கும் பத்திகளை எண்ணுவதற்கு பல்வேறு முறைகள் இருந்தாலும், மேலே குறிப்பிடப்பட்ட இந்த நடைமுறையே இங்கு பின்பற்றப்பட்டுள்ளது.

- **இரண்டு** கூடுதல் காரியங்களை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஒன்று, சிருஷ்டிப்பின் புகைப்பட நாடகம் எனும் புத்தகத்தின் (the Photo-Drama of Creation) புதிய பதிப்பின் பக்க எண்கள் மூல பதிப்பிலிருந்து வேறுபடுவதால், இரண்டுமே ஒரு சாய்வான கோடு (/) மூலம் பிரிக்கப்பட்டு பதிவிடப்பட்டுள்ளது, அதாவது, பழைய பதிப்பின் பக்க எண்கள் கோட்டிற்கு முன்பும், புதிய பதிப்பின் பக்க எண்கள் கோட்டிற்குப் பின்பும் குறிப்பிடப்பட்டுள்ளன **(எ. கா. – PD21/30)**.

- மற்றொன்று, “What Pastor Russell Taught” என்ற புத்தகத்தைப் பொறுத்தவரையில், **பக்கம் 323**க்குப் பின் உள்ள, சகோ. பெஞ்சமின் பார்டன் அவர்கள் எழுதிய பகுதியின் மேற்கோள்கள் மட்டுமே இந்த விளக்கவுரையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில், மற்ற பகுதிகள் அனைத்தும் காவற்கோபுர ரீப்பிரிண்ட்சிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

வெவ்வேறு வெளியீட்டாளர்களால் அச்சிடப்பட்ட **ஆறு** வேதாகமப் பாடங்களின் பல்வேறு பதிப்புகள் (editions) ஒவ்வொன்றும் சற்று வித்தியாசமான பக்க எண்களைக் கொண்டிருக்கக்கூடும் என்பதால், அசல் பதிப்பிற்கு மிகவும் ஒத்திருந்து, பெரும்பாலான பதிப்புகளிலும் காணப்பட்ட அதே பக்க எண்களைப் பயன்படுத்திக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஒருவேளை நீங்கள் வைத்திருக்கும் பதிப்பு மாறியிருக்குமேயானால், மேற்கோள் காட்டப்பட்ட பக்கத்திற்கு அண்மையில் இருக்கும் சில பக்கங்களுக் குள்ளாகவே அந்த மேற்கோள்கள் தங்களுக்குத் தென்படும். தொகுதி 5க்கான (E) பல்வேறு மேற்கோள் எண்களைப் பதிவுசெய்வது கைவிடப்பட்டது, ஏனெனில் இதுபோன்ற பல உள்ளீடுகளை அவசியமாக்கிய ஒரேயொரு பதிப்பும்கூட (edition) இப்போது கிட்டத்தட்ட புழக்கத்தில் இல்லை என்பதே காரணமாகும்.

வேதாகமத்தின் மூலமாக கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள அவருடைய வார்த்தைகளை இன்னும் துல்லியமாகப் புரிந்துகொள்ளுவதற்கு, உலகெங்கிலும் உள்ள வேத மாணாக்கருக்கு இந்தப் புத்தகம் ஒரு பயனுள்ள கருவியாக இருக்கும் என்று நம்பி, இந்தப் படைப்பினை வெளியீட்டாளர்கள் ஜெபத்தோடு வெளியிடுகின்றனர். இதை விடை காணும் புத்தகமாகவோ (answer book) அல்லது பரிசுத்த தேவ வாக்கிய ஆராய்ச்சியை மாற்றீடு செய்யும் ஒரு மாற்றுப் புத்தகமாகவோ (replacement) அல்லாமல், மாறாக, வேத வாக்கியங்களுக்கான விளக்கங்களைக் கொண்டிருக்கும் மூல கட்டுரைகளைச் சுட்டிக்காட்டும் மேற்கோள்கள் அடங்கிய கையேடாகவும் (reference guide), ஒரு கருவியாகவும் இருப்பதற்காகவே வெளியிடப்பட்டுள்ளது, ஆக அனைவரும் இதனை அவ்வண்ணமாகவே பயன்படுத்துவீர் என எதிர்பார்க்கிறோம்.

மாம்ச பெலவீனங்களையும், இந்தப் பணியின் பெரிய அளவினையும் கவனத்தில் கொள்ளும் போது, இந்தப் புத்தகத்தில் அவ்வப்போது அச்சுப் பிழைகளும், கருத்துகளை தற்செயலாக தவறாக பதிவுசெய்யப்படுவதும் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். எங்களால் முடிந்தமட்டும் இவற்றை அகற்ற முயற்சித்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மன்னிப்பும் கோருகிறோம்.

இத்தொகுப்பைத் தயாரிப்பதற்கு உடன் உழைத்த அநேக சகோதர சகோதரிகளுக்கு நாங்கள் பெரிதும் நன்றிக்கடன்பட்டிருக்கிறோம், அதே சமயம், அவர்கள் கர்த்தர்பேரிலும், பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துகளிலுள்ள சத்தியங்கள்பேரிலுமான அர்ப்பணிப்பினிமித்தமாக மனமுவந்து

உழைத்திருக்கிறார்கள் என்பதை உணரும்போது, அவர்களது அன்பின் பிரயாசங்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இந்தத் தொகுதியும், இன்னும் சில ஆண்டுகளில் நிறைவடையப்போகிற புதிய ஏற்பாட்டு தொகுதியும், **தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிவதற்கு** வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்ப்பதில் உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்கிற மனமார்ந்த நம்பிக்கையோடு இந்தப் படைப்பை உங்கள் கரங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

சிகாகோ வேத மாணவர்கள்
புத்தக மறுபதிப்புக் குழு, 1982

**பி.கு.**: ஆங்கில EBC – ஐத் தொகுத்தமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களில் சிலர், இந்த ஆங்கில முன்னுரைகளின் பத்திகளில் சிலவற்றை நமக்குக் கூடுதலாக விளக்கி உதவினார்கள். தேவனுக்கு நன்றி!

# வழிகாட்டு நெறிமுறைகளின் மாதிரி

**SOME PERTINENT GUIDELINES USED IN COMPILING THE COMMENTS**

1. Please note that Bro. Russell's views on some points change slightly from earlier to later writings. Our intent is NOT to give only the latest—or what we believe to be the most accurate thought—but rather to create a fairly exhaustive source of Bro. Russell's comments. This would include references from his earliest writings to his latest.

   If two comments appear identical, but include additional proof, or a slight shade of difference, it is usually wiser to use both.

2. A comment may be: (1) a direct quotation; (2) a quotation composed by using the wording of the article with ellipses (...); but do not use the ellipses themselves; (3) a paraphrase where the wording of the article is too long to condense by using the wording of the article; and (4) a general reference to subject material in rare instances that do not lend themselves to any of the other methods. The preference is (1).

3. Be as brief as you can, but accurate, in conveying Bro. Russell's thought. Seek to restrict the comment length to three typewritten lines (70 characters each).

4. The Explanation of Format sheet from the front of the Old Testament Expanded BIBLICAL COMMENTS gives the correct symbols and page areas, etc., which should be used. IMPORTANT: Please note the section numbers, rather than paragraph numbers, are to be used for the Reprints, Convention Report Sermons, Harvest Gleanings, and Newspaper Sermons.

5. The order of the list of reference numbers should be (1) the reference for the comment as stated, plus any additional references from that book source, (2) Volumes, (3) Reprints, listing the numbers from the highest to the lowest pages, and (4) other books

*– Chicago Book Republishing Committee*

**விளக்கங்களைத் தொகுப்பதற்குப் பின்பற்றப்பட்ட பொருத்தமான வழிகாட்டு நெறிமுறைகளில் சில பின்வருமாறு:**

1. சில கருத்துகள் மீதான சகோ. ரசல் அவர்களது கண்ணோட்டங்கள், அவரது முந்தைய எழுத்துகளிலிருந்து பிந்தைய எழுத்துகளில் சற்று மாற்றமடைந்திருப்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும். அவரது சமீபத்திய / பிந்தைய கருத்தே மிகவும் துல்லியமான சிந்தனை என்று நாங்கள் நம்புகிறோம், ஆனால் அந்தக் கருத்தை மட்டும் கொடுப்பது எங்கள் நோக்கம் அன்று, மாறாக சகோ. ரசல் அவர்களது கருத்துகள் அனைத்தையும் உள்ளடக்கிய நல்லதொரு தொகுப்பை உருவாக்குவதே எங்களின் நோக்கமாகும். எனவே, அவரது ஆரம்பகால எழுத்து களிலிருந்து அவரது சமீபத்திய எழுத்துகள் வரையிலான மேற்கோள்கள் அனைத்தும் இதில் உள்ளடக்க வேண்டும்.

   ஒருவேளை இரண்டு விளக்க வாக்கியங்களும் ஒரே மாதிரியாக இருந்து, ஆனால் ஒன்றில் கூடுதல் ஆதாரம் கொடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது சிறிய வித்தியாசம் தென்பட்டாலோ, இரண்டையுமே பதிவுசெய்வது ஞானமாக இருக்கும்.

2. ஒரு விளக்க வாக்கியம் பின்வரும் வகைகளில் இருக்கலாம்: (1) ஒரு நேரடியான மேற்கோள்; (2) மிகையான கட்டுரையின் வார்த்தைகளைக் களைந்துவிட்டு, முக்கியமான கட்டுரையின் வார்த்தைகளை மட்டும் பயன்படுத்தி எழுதப்படும் ஒரு மேற்கோள்; இருப்பினும், அம்மாதிரியான

மேற்கோள்களில், ‘ellipsis’ எனும் மூன்று புள்ளிகளைப் (...) பயன்படுத்த வேண்டாம்; (3) சில சமயங்களில், கட்டுரையின் வார்த்தைகள் சுருக்க முடியாதளவுக்கு நீளமாக இருக்கும்பட்சத்தில், அப்போது கருத்து மாறாமல் வேறு வார்த்தைகளைக் கொண்டு சுருக்கி எழுதப்படும் ஒரு மேற்கோள் (a paraphrase); மற்றும் (4) அரிதான சந்தர்ப்பங்களில், மேற்சொன்ன எந்த வகைகளின்கீழ் வராத பாடத்திற்கான ஒரு பொதுவான மேற்கோள். அப்போது (1)ம் முறையைப் பயன்படுத்தவும்.

3. சகோ. ரசல் அவர்களின் கருத்தைத் தொகுக்கும்போது, முடிந்தவரைக்கும் சுருக்கமாக ஆனால் துல்லியமாக இருக்கும்படிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். இயன்றளவுக்கு வாக்கிய நீளத்தை மூன்று வரிகளுக்குள்ளும், ஒவ்வொரு வரியும் 70 எழுத்துகளுக்குள்ளும் (characters) இருக்கும்படிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்.

4. பழைய ஏற்பாட்டின் Expanded BIBLICAL COMMENTSன் முன்பகுதியிலுள்ள, ‘Explanation of Format sheet’ எனும் குறியீடு வடிவமைப்பை விளக்கும் பக்கத்தில், சரியான குறியீடுகள் மற்றும் பக்கத்தின் பல்வேறு பகுதிகள் போன்றவை காணப்படுகிறபடியால், அதனையே பயன்படுத்துவீராக. முக்கியமாக: ரீப்பிரிண்ட்ஸ், Convention Report Sermons, Harvest Gleanings மற்றும் Newspaper Sermons என்பவைகளுக்கு, பத்தி எண்களுக்குப் பதிலாக, பக்கப்பிரிவு எண்கள் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

5. மேற்கோள் எண்களின் பட்டியல் பின்வரும் வரிசையில் காணப்பட வேண்டும்: (1) கொடுக்கப்பட்ட கருத்துக்கான மேற்கோள் எண் + அதே புத்தகத்திலிருக்கும் கூடுதலான மேற்கோள்கள், (2) தொகுதிகள், (3) ரீப்பிரிண்ட்ஸ், (பல கட்டுரைகள் இருப்பின், முதலில்) பெரிய பக்க எண், அடுத்து சிறிய பக்க எண் என வரிசைப்படுத்துகள், பின்னர் (4) மற்ற புத்தகங்கள்

– சிகாகோ புத்தக மறுபதிப்புக் குழு

# ஆங்கில முன்னுரை II ன் தமிழாக்கம்

**(புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷங்களுக்கான விளக்கவுரை தொகுக்கப்பட்டபோது, வெளியான முன்னுரை)**

புதிய ஏற்பாட்டிற்கான வேத வாக்கிய விளக்கவுரையாகிய “Expanded Biblical Comments on the New Testament” என்ற இரண்டு தொகுதிகள் கொண்ட தொகுப்பில் முதல் பகுதியை வெளியீட்டாளர் பெரு மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறார்கள். இந்தப் புத்தகங்கள், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அச்சிடப் பட்ட பழைய ஏற்பாட்டிற்கான வேத வாக்கிய விளக்க வுரையாகிய “Expanded Comments on the Old Testament” எனும் தொகுதிக்கு துணை புத்தகங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.




சகோ. சார்லஸ் டேஸ் ரசல் அவர்களின் எண்ணற்ற விளக்கங்களைப் பிரித்தெடுத்து தொகுத்தமைக்கும் முந்தைய பணியில், பல கரங்களை ஈடுபடுத்திய அதே செயல்முறை, இந்தத் திட்டத்திலும் பின்பற்றப்பட்டது. முடிந்தவரைக்கும், மறைந்த பாஸ்டர் ரசல் அவர்களின் முந்தைய கண்ணோட்டங்கள், மாற்றமடைந்த கண்ணோட்டங்கள் என அனைத்தையும் கொடுப்பதற்கேதுவாக அவரது அனைத்து எழுத்துகளையும் தேடிப் பார்க்கும் முயற்சி மீண்டும் ஒருமுறை ஏறெடுக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டிற்குச் செய்யப்பட்டது போலவே, கொடுக்கப்பட்ட உபதேச அச்சுக்கு ஏற்றவாறு அவரது கருத்துகளை வளைக்க எந்த முயற்சியும் இங்கேயும் ஏறெடுக்கப்படவில்லை, மாறாக, முரண்பாடாக தோன்றும் கருத்துகள் உட்பட, அனைத்து தனித்தனி விளக்கங்களும் பதிவு செய்யப்பட்டன. இந்தத் தொகுதியும், தன் துணை புத்தகங்களைப் போலவே, ஒரு “விடை காணும் புத்தகம்” ( “answer book” ) எனும் நோக்கில் கொடுக்கப்படாமல், மாறாக இது மாணவர்களை மூல எழுத்துகளுக்கு வழிநடத்துகிற, மேற்கோள்கள் அடங்கிய ஒரு கையேடாக (reference work) பயன்படுத்தப் படுவதற்காக தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளது.

முடிந்தவரை, நேரடி மேற்கோள்கள் பிரித்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பல சந்தர்ப்பங்களில், இம்மாதிரி பெரியதொரு படைப்பிற்குத் தேவையான சுருக்கத்தைத் (brevity) தக்கவைக்கும் வண்ணமாக, வாக்கியங்களில் மிகையான வார்த்தைகளை நீக்கிவிட்டு முக்கியமான வார்த்தைகளை மாத்திரம் உபயோகப்படுத்தியோ (condense) அல்லது சகோதரர் விளம்பின கருத்து மாறாமல் வேறு வார்த்தைகளை உபயோகப்படுத்தியோ (paraphrase) வாக்கியங்களைச் சுருக்க வேண்டியிருந்தது. தொகுப்பாளர்கள் (compilers) இத்தகைய சுருக்கங்களைச் செய்த இடத்தில், தட்டச்சு தெளிவுக்காக, மிகையான வார்த்தைகளை நீக்கின இடத்தில் ‘ellipsis’ எனும் மூன்று புள்ளிகளைப் (...) பயன்படுத்தாமல் தவிர்த்துள்ளனர்.

பாஸ்டர் ரசல் அவர்கள் தனது கட்டுரைகளில் மற்ற ஆசிரியர்களின் எழுத்துகளையும் குறிப்பிட்டுள்ளார், அதுவும் இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், அத்தகைய சந்தர்ப்பங்களில் அவை மற்ற ஆசிரியர்களால் எழுதப்பட்டவை என்பதை அடையாளம் காண ஒரு நட்சத்திரக் குறியீடு (*) பயன்படுத்தப்பட்டுள்ளது.

நமது கர்த்தருடைய வாழ்க்கையைப் பற்றிய வெவ்வேறு சுவிசேஷப் பதிவுகளில், ஒரே சம்பவம்

பன்முறை பதிவுசெய்யப்பட்டிருக்கும். இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே மேற்கோள்களை மீண்டும் மீண்டும் சேர்ப்பதென்பது இயலாத காரியமாக இருந்தது. எனவே, இணையான நெடுவரிசைகளில் (parallel columns), ஒரே மாதிரியான பத்திகளைக் காட்டும் பிற்சேர்க்கையொன்று தயாரிக்கப்பட்டது. இந்தப் பிற்சேர்க்கையைப் பயன்படுத்துவதன் மூலமாக, கவனமுள்ள மாணவரால், கொடுக்கப்பட்ட சம்பவத்திற்குப் சம்பந்தப்பட்ட அனைத்து கருத்துகளையும் கண்டறிய முடியும். **(தமிழ் வாசகருக்கான குறிப்பு: பின்னர், சில காரணத்தினால், இந்தப் பிற்சேர்க்கை பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது.)** புதிய ஏற்பாட்டில் மீதமுள்ள புத்தகங்களுக்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்று, இறுதித் தொகுதி விரைவில் நடைமுறைக்கு வரும்.

இந்தத் தொடரின் முந்தைய புத்தகத்தைப் போலவே, வெளியீட்டாளர்கள் தங்கள் மாம்ச பெலவீனங்களைப் பற்றி நன்கு அறிந்தவர்களாய், இந்தப் பிரதியில் தற்செயலான பிழைகளும் ஊடுருவியிருக்கலாம் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். இதுபோன்று சேர்க்கப்பட்ட அல்லது நீக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட பிழைகளுக்காக நாங்கள் மனப்பூர்வமாக மன்னிப்புக்கோருகிறோம், அத்தகைய பிழைகளைத் தடுப்பதற்கு நாங்கள் முடிந்தளவிற்கு முயற்சி செய்து வருகிறோம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த முயற்சியைச் சாத்தியமாக்குவதற்கு, தங்களது பல்லாயிரக்கணக்கான மணிநேரங்களைப் பலிசெலுத்தின அநேக சகோதர சகோதரிகளுக்கு நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். இதில் ஈடுபட்ட ஆய்வாளர்கள், தொகுப்பாளர்கள் மற்றும் தொகுப்பாசிரியர்கள் மட்டுமல்லாது, தட்டச்சு, திருத்தம் மற்றும் தயாரிப்பின் பல்வேறு கட்டங்களில் ஈடுபட்ட மற்ற சகோதர சகோதரிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படியாக இந்தப் புத்தகம், "**தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிவதற்காக**" வேதவாக்கியங்களைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்வதில், உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்பி, இந்தப் படைப்பை உங்கள் கரங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

சிகாகோ வேத மாணவர்கள்
புத்தக மறுபதிப்புக் குழு
நவம்பர் 1, 1988

# ஆங்கில முன்னுரை III ன் தமிழாக்கம்

**(புதிய ஏற்பாட்டின் மீதமுள்ள புத்தகங்களுக்கான விளக்கவுரை தொகுக்கப்பட்டபோது, வெளிவந்த முன்னுரை)**

அநேக வேத மாணவர்கள் சேர்ந்து, 14 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சிசெய்து, தொகுத்து, தயாரித்த, வேத வாக்கிய விளக்கவுரையாகிய "Expanded Biblical Comments: 1879 – 1916" எனும் இந்த **மூன்றாம்** தொகுதியை நாங்கள் நன்றியோடும் பெருமகிழ்ச்சியோடும் வெளியிடுகிறோம்.

இந்தப் பணியை இன்னும் சீரிய கவனத்தோடும், நுணுக்கத்தோடும் செய்ய வேண்டும் என்பதற்காக, புதிய ஏற்பாட்டு விளக்கவுரைக்கான செயல்முறையை சற்று வேறு மாதிரி கையாள முயற்சி செய்துள்ளோம். ஆய்வாளர்களின் குழுவொன்று, மிகுந்த கவனத்தோடும் மிகுந்த பிரயாசத்தோடும், ரீப்பிரிண்ட்சின் "வேதவாக்கிய மேற்கோள்களின் அட்டவணையில்" காணப்பட்ட ஒவ்வொரு மேற்கோளையும், சார்லஸ் டேஸ் ரசல் அவர்களின் மற்ற எழுத்துகளுக்கான கூடுதல் மேற்கோள்களையும் ஆய்ந்து பார்த்தனர்.

மற்ற பணியாட்கள், இவைகளை, **கி.பி. 1909 – கி.பி. 1916** ஆண்டுகளுடைய ரீப்பிரிண்ட்சிலிருந்து விளக்கங்களைப் பிரித்தெடுத்த, ஏறக்குறைய 50 "வாசகர்" கொண்ட குழுவொன்றால் தயாரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விளக்கங்கள் எழுதப்பட்ட அட்டைகளோடு வைத்து மீண்டும் சரிபார்த்தனர் (cross-checked).

இத்திட்டத்தின் விரிவான வரலாறு குறித்தும், இதனைச் செய்து முடிப்பதற்கு கையாளப்பட்ட ஆரம்பக்கட்ட செயல்முறையின் விளக்கம் குறித்தும் அறிந்துகொள்ள இந்தப் படைப்பின் தொகுதி 1ன் முன்னுரையைப் பார்க்கும்படிக்கு வாசகரைக் கேட்டுக்கொள்கிறோம்.

வேதாகம சத்தியங்களில், சகோ. சார்லஸ் டேஸ் ரசல் அவர்களுக்கிருந்த புலமையின்மீதும், அவரது ஊழியத்தின்மீதும் ஏற்பட்ட ஆழ்ந்த மரியாதையுணர்வே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த எங்களைத் தூண்டியது. இந்த "உண்மையும் உத்தமுமான ஊழியக்காரர்" எல்லாவற்றையும் கருத்தாகவும் நுணுக்கமாகவும் ஆராய்ந்தறிந்து பதிவுசெய்திருந்ததையும் (thoroughness), அவருடைய நியாயமாக பகுத்தறிந்து சிந்திக்கும் ஆற்றலையும் (logic) இந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் கவனித்தபோது, அது அவர்களது மனதிலிருந்த மரியாதையை இன்னும் ஆழமாக்கியது.

அவருடைய தொலைநோக்கு பார்வையின் நீடித்த தன்மையும், அதிலிருந்த தெளிவும், இந்த விளக்கவுரை தொகுதிகளில் பணிபுரியும் பாக்கியம் பெற்றவர்களுக்கு அதிகமதிகமாக புலப்படலாயின.

ஆசிரியரால் பயன்படுத்தப்பட்ட 'வேதாகமத்தை தலைப்பின் கீழ் ஆராய்ச்சிசெய்யும் முறை' (topical method of Bible Study) மற்றும் அவரால் மிகவும் பரிந்துரைக்கப்பட்ட 'கருப்பொருளின் கீழ் ஆராய்ச்சிசெய்யும் முறை' (contextual method) ஆகிய இரண்டிலிருந்தும் வேத மாணவர் பயனடைவதற்கேதுவாக, இதில் காணப்படுகிற வசனவாரியான அணுகுமுறையானது அமைந்துள்ளது.

"Advent/பிரசன்னம்" முதல் "Zion/சீயோன்" வரையிலான ஏறக்குறைய 75 முதல் 100 வேதாகம தலைப்புகளடங்கிய பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துகளைத் தொகுத்து, ஒரு துணைத் தொகுதியாக தயாரிப்பது சாத்தியமா என்பதை தீர்மானிக்க மேலும் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

மீண்டும் ஒருவிசை, 50க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளருக்கும், தொகுப்பாளருக்கும் மாத்திர மல்லாமல், தயாரிப்பின் பல்வேறு கட்டங்களில் பணியாற்றிய ஏராளமான உதவியாளர்களுக்கும்

எங்கள் மனமார்ந்த நன்றிதனை உரித்தாக்குகிறோம். ஐக்கிய அமெரிக்க தேசம் முழுவதிலும் உள்ள பல நகரங்களைச் சேர்ந்த இந்தச் சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பானது ஒரு பொதுவான நோக்கத்திற்கான அவர்களின் அர்ப்பணிப்பை வெளிக்காண்பிக்கின்றது.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, எண்ணற்ற சத்தியங்கள் கொட்டிக்கிடக்கும் "பொக்கிஷ சாலையாகிய" பரிசுத்த வேதாகமத்தை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்த நமது பரமபிதாவிற்கும், அந்தப் "பொக்கிஷசாலையிலிருந்து வரும் புதியதும் பழையதுமாகிய" சத்தியங்கள்மீது அறிவொளி பிரகாசிப்பிக்கப்படும் காலமாகிய இரண்டாம் வருகையில் பிரசன்னமாகியிருக்கும் அவரது குமாரனுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

இறுதியாக, வேத மாணவர்கள் இந்தப் படைப்பை ஒரு "விடை காணும் புத்தகமாக" பயன் படுத்தாமல், மாறாக மூல எழுத்துகளுக்கு வழிநடத்துகிற மற்றும் ஆராய்ச்சிக்கு உதவும் ஒரு கருவியாக, ஒரு மேற்கோள் கையேடாக பயன்படுத்த வேண்டும் என்பதே எங்கள் வாஞ்சையாக இருக்கிறது என்பதையும், இங்குள்ள தாற்பரியங்களை (concepts) வேதாகமத்தோடு ஒப்பிட்டு, சரிபார்ப்பதன் மூலமாக இவைகளின் துல்லியத்தை வாசகர் உறுதிபடுத்திக்கொள்வது நலமாக இருக்கும் என்பதையும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

பாஸ்டர் ரசல் அவர்கள் சொன்ன விஷயத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறோம்: "சத்தியத்தைத் தேடுபவர்கள் சேறுள்ள தண்ணீராகிய மனுஷருடைய பாரம்பரியங்களை விட்டுவிட்டு, சத்திய நீரூற்றாகிய தேவனுடைய வசனத்தை தங்கள் பாத்திரங்களில் (மனதில்) நிரப்ப வேண்டும். சத்தியத்தைத் தேடிச் செல்பவரை இந்த நீரூற்றுக்கு வழிநடத்தாத எந்த மத போதனைக்கும், எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்பட வேண்டியதில்லை." **A12 (தமிழில், தொகுதி 1 – ப. 5)**

நாங்கள் தவறு செய்திருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை அறிந்தவர்களாய், இந்தப் படைப்பின் பயனர்களில் எவரேனும் சேர்க்கப்பட்ட அல்லது நீக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட பிழைகளைக் கண்டறிந்தால், எதிர்கால பதிப்புகளில் சரி செய்வதற்கேதுவாக, அவைகளை வெளியீட்டாளரிடம் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய வார்த்தையையும், அவருடைய தெய்வீகச் சித்தத்தையும் எப்போதும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கான உங்கள் தொடர்ச்சியான ஆராய்ச்சிக்கு இது ஒரு பயனுள்ள கருவியாக இருக்கும் என்றும், இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில் கர்த்தர் நமக்குப் பாராட்டியுள்ள "தற்கால சத்திய" ஊழியத்தில் நீங்களும் அதிக சந்தோஷமடையலாம் என்றும் ஜெபத்தோடும் நம்பிக்கையோடும் இந்த விளக்கவுரையை உங்கள் கரங்களில் பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

"விசுவாச குடும்பத்தாரைச்" சேர்ந்த சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் செய்யும்
பாக்கியத்திற்காக நன்றியுடன்,

சிகாகோ வேத மாணவர்கள்
புத்தக மறுபதிப்புக் குழு
செப்டம்பர் 1, 1989

# தமிழ் வாசகரின் கனிவான கவனத்திற்கு

- ஆங்கில விளக்கவுரையில், வாக்கியங்களைச் சுருக்கி எழுதும் பாணியை ஆங்காங்கே பின்பற்றியுள்ளனர். பெரும்பாலும், இவைகளை, மேலோட்டமாக வாசிக்கையில் (superficial reading), வாசகருக்கு ஒரு பொதுவான அர்த்தம் கிடைக்கும். ஆனால், அந்த வாக்கியம் இடம்பெற்ற இடத்திற்குச் சென்று, அதின் முழு பத்தியையோ கட்டுரையையோ வாசிக்கும் போதுதான், சகோதரர் என்ன சொல்ல வருகிறார் என்பதை துல்லியமாகவும், ஆழமாகவும், குழப்பமில்லாமலும் புரிந்துகொள்ள முடியும் (apt contextual deeper meaning). விளக்கவுரையின் ஒரு சிறு வாக்கியத்தை வைத்துக்கொண்டு, கற்பனையாக வேறு மாதிரி அனுமானிக்கும் ஆபத்து இதிலுள்ளது. எனவே, வாசகர்கள், விளக்கங்களையும், அதற்குரிய கட்டுரைகளையும் உத்தம நிதானிப்போடு கையாளும்படிக்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- சில இடங்களில், குழப்பமாகவோ கருகலாகவோ காணப்படும் வாக்கியங்களை, தமிழ் வாசகருக்கு எளிதாக்கித் தரும்படிக்கு, அந்த வாக்கியங்களுக்கு அருகிலேயே, அடைப்புக் குறிகளுக்குள் ( ), தேவையான அளவில், கூடுதலான சகோ. ரசல் அவர்களது விளக்கத்தைச் சேர்த்துக் கொடுக்க முடிந்தளவிற்கு முயற்சித்துள்ளோம்.

- ஆங்கில அகராதியில், ஒரு வார்த்தைக்கு பல கோண அர்த்தங்கள் காணப்படும்; அதேபோல, சகோ. ரசல் அவர்களது எழுத்துகளில், "Idioms and Phrases" / "மரபுவழக்குச் சொற்றொடர்களும்" காணப்படும்; ஆக, கருப்பொருளுக்கு உகந்த அர்த்தத்தைத் தேர்ந்தெடுத்து, 1 அல்லது 2 அல்லது 3 சாட்சிகளிடம் உறுதிசெய்த பிறகு, பயன்படுத்த முடிந்தளவிற்கு முயற்சித்துள்ளோம்.

- ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ் வார்த்தை கிடைக்காதபோது, சரியான புரிதலுக்காக அடைப்புக்குறிகளுக்குள் ( ), ஆங்கில வார்த்தையையும் சேர்த்துக் கொடுத்துள்ளோம்.

- எல்லா சமயத்திலும், ஆங்கில வசன இருப்பிடமும் தமிழ் வசன இருப்பிடமும் ஒரேபோல் இருப்பதில்லை. உதாரணத்திற்கு, **Job 34:29**க்கு இணையான தமிழ் வசனம் **யோபு 34:30**ல் காணப்படுகிறது. அங்கெல்லாம், (தமிழில்-) எனக் குறிப்பிட்டு, தமிழ் வசன இருப்பிடத்தைக் கொடுத்துள்ளோம் (**உ. தா.: தமிழில் – யோபு 34:30**).

- இங்கு, பொதுவான மொழியாக்கம் தவிர, 'திருவிவிலியமும்' (திருவி), 'இந்திய சமகால தமிழ் மொழிப்பெயர்ப்பும்' (TCV) பயன்படுத்தப்பட்டுள்ளன.

- Diaglott, Rotherham போன்றவைகளுடைய வாக்கியங்களை, கிட்டத்தட்ட சரியான மொழிமாற்றம் செய்வதற்கு, முடிந்தளவிற்கு முயற்சித்துள்ளோம்.

- அடுத்து, இந்தப் புத்தகத்தில் காணப்படுகிற, பக்கம், பத்தி மற்றும் பக்கப்பிரிவு சார்ந்த எண்கள் அனைத்தும் ஆங்கில பதிப்பில் காணப்படுகிற எண்களாகும்.

- விளக்கங்கள் காணப்படவில்லையெனில், "விளக்கம் அளிக்கப்படவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளோம்.

- இறுதியாக, ஆங்கில பதிப்பில் சொற்பளவில் காணப்படும் சில தற்செயலான பிழைகளைத் தமிழில் முடிந்தளவிற்குத் திருத்தி பதிவிட முயற்சி செய்துள்ளோம்.

- கணிசமானளவிற்கு, தமிழாக்கத்தை, பிழை திருத்தமும், சரிபார்ப்பும் செய்ய முயற்சித்துள்ளோம். பிழைகள் இருப்பின் மன்னிப்புக் கோருகிறோம், அவைகளை எங்களுக்குத் தெரியப்படுத்தி உதவும்படிக்கும், தேவனுக்குச் சித்தமானால் அடுத்த பதிப்புகளில், அவைகளைக் களைவதற்கு முயற்சி செய்வோம் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி!

# உதவிகரமான இணையதளங்களும், செயலிகளும்

- ஆங்கில "Expanded Biblical Comments" pdf தரவிறக்கம் செய்வதற்கான இணையதளம்: https://chicagobible.org/product/expanded-biblical-comments/

- இணையவழியில், ஆங்கில "Expanded Biblical Comments" வாசிப்பதற்கான இணையதளங்கள்:

  - http://www.mostholyfaith.com/Beta/bible/BibleIndex.asp?parm=KJVwc

    (குறிப்பு: இங்கே மட்டும் 'http' என்று பயன்படுத்தவும்)

  - https://htdbv8.com/indexec.html

- கி.பி. 1901ல், Watch Tower Society ஆனது Holman Bible Publishing Company உடன் இணைந்து, கி.பி. 1901 வரை வெளிவந்த காவற்கோபுர எழுத்துகளை, வேதாகமத்தில், மேற்கோள்களாக இணைத்து "Holman Linear Bible with Watchtower Study Helps" என்ற லீனியர் பைபிளை வெளியிட்டது, அதுகுறித்த சிறுகுறிப்பிற்கு:
  https://www.pastorrussell.pl/dziela/inne-publikacje/holman-linear-bible-1901-r/

- "Expanded Biblical Comments" தொகுப்பிற்கு முந்தி, வேத மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த "Watchtower Berean Bible Teachers Manual – 1909" புத்தகத்தைத் தரவிறக்கம் செய்வதற்கான இணையதளம்:
  https://www.pastorrussell.pl/dziela/inne-publikacje/berean-bible-teachers-manual-1909-r/

- பல்வேறு தமிழ் வேதாகம மொழிப்பெயர்ப்புகள் கொண்ட கைபேசி செயலியின் விவரம்: Google **Play Store → YouVersion Bible App + Audio**

- சத்தியங்களை வாசிப்பதற்கும், சத்திய குறிப்புகளைக் குறித்து வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட கைபேசி செயலியின் பெயர்: **MySword**

- ஏழாம் தூதனுடைய சத்தியங்கள் சம்பந்தமான 'MySword Modules' தரவிறக்கம் செய்வதற்கான இணையதளங்கள்:

  - ஆங்கிலத்திற்கு: https://www.ctrussell.us/mysword_1afd4913.html
  - தமிழிற்கு: https://tazetech.in/mysword/

- தமிழில் வெளியான ஏழாம் தூதனின் எழுத்துகளுக்கான தளங்கள்:

  - https://biblestudentstamilnadu.com/
  - https://foodfornewcreature.com/

- கி.பி.1876 துவக்கி கி.பி.1917 வரை வெளிவந்த காவற்கோபுர புத்தகங்கள், பைபிள்கள், இழல்கள் முதலிய வெளியீடுகளைப் பார்வையிட:
  https://www.pastorrussell.pl/dziela/inne-publikacje/

- ஆரம்பக்கட்ட மொழிமாற்றத்திற்கு உதவிய செயலி: Google Translate

- தமிழ் அகராதிக்கான கைபேசி செயலி : **Google Play Store →** தமிழ் அகராதி (**Tem Tech**)
- எபிரேயு/கிரேக்க வார்த்தையின் சரியான ஒலி உச்சரிப்புக்கு உதவிய இணையதளம்: *https://www.blueletterbible.org/*

# அருஞ்சொற்பொருள்

- **சமுகம்** – பிரசன்னம்/presence; 'மு' எனும் குறில் எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.
- **கறைதிரை** – கறை என்பது மாசு / அழுக்கு / spot ஆகும்; திரை என்பது சுருக்கத்தை / wrinkle குறிக்கும் ஒரு தமிழ்ச் சொல்லாகும்.
- **நினைவுகூருதல் / களிகூருதல் / அன்புகூருதல்** – கூர்தல் என்றால் மிகுதல் ஆகும்; கூறுதல் என்றால் சொல்லுதல் ஆகும்; ஆக, கூருதல் என்பதே சரியான தமிழ் பயன்பாடு.
- **El / எல் / ஏல்** – எபிரேயு பாஷையில், தேவனைக் குறிக்கும் பதமாகும், எனவே 'வேல்' என்பதைத் தவிர்த்து, இஸ்ரயேல் / யோயேல் / மிகாயேல் / சாமுயேல் என்பது போன்று பயன்படுத்துவது நலம்.
- **யேகோவா தேவன்** – யூதர்கள் உட்பட, பலரிடையேயும் தேவனுடைய நாமத்தைப் பயன் படுத்துவது குறித்த ஐயப்பாடு நிலவுகிறது. இது சம்பந்தமாக சகோ. ரசல் அவர்கள் தனது **R3038** கட்டுரையில், பின்வருமாறு சில விளக்கங்களை அளித்துள்ளார்:
- **யாத்திராகமம் 20:7 – "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கா திருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்."**

  **R3038:6** – "தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது என்று இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையானது, அவர்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லவே கூடாது என்பதை அர்த்தப்படுத்தவில்லை, ஆனால், இந்த விஷயத்தில் இஸ்ரயேலர் உச்சத்திற்குச் சென்று, தேவனுடைய உடன்படிக்கை நாமமாகிய "Jehovah / யேகோவா" என்பதைப் பயன் படுத்துவதையே தவிர்த்துவிட்டனர். மாறாக, "வீணிலே" எனும் வார்த்தையானது, அலட்சியமான, அற்பமான வகையிலோ அல்லது புனிதமற்ற, பயபக்தியற்ற வகையிலோ பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இத்தகைய எந்தக் கட்டளையும் "கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிக்கு" தேவைப்படாது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, (மெய்யான) ஒரு புதிய சிருஷ்டியால் எவ்வாறு மனப்பூர்வமாய் அல்லது வேண்டுமென்றே தனது பரமபிதாவைக் குறித்து அலட்சியமாகவோ அல்லது பயபக்தியில்லாமலோ பேச முடியும்? பயபக்தியோட ல்லாமல், வேறுவிதமாக பேசுவதற்கு விருப்பம் / சித்தம் கொண்டிருப்பது என்பது, அந்த நபர் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதையும், அவர் ஒரு குமாரன் அல்ல, மாறாக வேசிப்பிள்ளை என்பதையும் சுட்டிக்காட்டும் உறுதியான ஓர் அறிகுறியாக இருக்கும்.

# குறியீடு வடிவமைப்பின் விளக்கம்

## பயன்படுத்தப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகள்

**A** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 1 – யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டம்

**B** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 2 – காலம் சமீபமாயிருக்கிறது

**C** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 3 – உம்முடைய இராஜ்யம் வருவதாக

**D** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 4 – அர்மகெதோன் யுத்தம்

**E** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 5 – தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதல்

**F** – வேதாகமப் பாடங்கள், தொகுதி 6 – புது சிருஷ்டி

**R** – காவற்கோபுர ரீப்பிரிண்ட்ஸ் (Reprints)

**Q** – Question Book / What Pastor Russell Said

**T** – ஆசரிப்புக்கூடார நிழல்கள்

**CR** – Convention Report Sermons

**HG** – Harvest Gleanings, தொகுதி. 1

**NS** – Newspaper Sermons (Harvest Gleanings, தொகுதி 2)

**OV** – Overland Monthly (What Pastor Russell Wrote)

**PD** – சிருஷ்டிப்பின் புகைப்பட நாடகம் (Photo Drama of Creation)

**PT** – What Pastor Russell Taught

**SM** – Sermon Book

# பக்கத்தின் பல்வேறு பகுதிகளுக்கான குறியீடு

| | |
|---|---|
| *:1 – 6* | பக்கப்பிரிவு (Section of Page, இங்குள்ள விளக்கப்படத்தைக் காணவும்)<br>(ரீப்பிரிண்ட்ஸ், Convention Report Sermons, Harvest Gleanings, Newspaper Sermons என்பவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது) |
| *:1 – 9* | பத்தி எண்கள்<br>(பக்க எண் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும் தொகுதிகள் (volumes) தவிர, மற்றெல்லா புத்தகங்களுக்கும் இது பயன்படுத்தப் பட்டுள்ளது) |
| *:T* | முன்பக்கத்தில் துவங்கி அடுத்த பக்கத்தின் மேல்/top பகுதி வரை வரும் பத்தி |
| *:i – x* | 6 தொகுதிகளுடைய முன்னுரையின் பக்க எண்கள் |
| * | பாஸ்டர் ரசல் அவர்களால் எழுதப்படாத கட்டுரைகளுக்கான குறியீடு |
| – | "இதிலிருந்து இதுவரைக்கும்" என்பதைக் குறிக்கிறது;<br>ஒரு மேற்கோள் ஒரு பக்கத்தின் பல பிரிவுகளையோ அல்லது பல பக்கங்களையோ உள்ளடக்கியிருக்கும் பட்சத்தில், இந்தக் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது |
| / | சிருஷ்டிப்பின் புகைப்பட நாடகத்தின் பழைய மற்றும் புதிய பதிப்புகளின் பக்க எண்களைப் பிரித்துக் காண்பிக்கும் குறியீடு |
| *சாய்வு எழுத்து* | எபிரேயு மற்றும் கிரேக்க வார்த்தைகள் |

| | |
|---|---|
| *1* | *4* |
| *2* | *5* |
| *3* | *6* |

# பொருளடக்கம்

**பழைய ஏற்பாடு** ........ 1

1. ஆதியாகமம் 15:1 ........ 1
2. ஆதியாகமம் 18:14 ........ 1
3. ஆதியாகமம் 28:15 ........ 1
4. யாத்திராகமம் 4:12 ........ 1
5. யாத்திராகமம் 33:14 ........ 2
6. உபாகமம் 28:12 ........ 2
7. உபாகமம் 31:6 ........ 2
8. உபாகமம் 31:8 ........ 2
9. உபாகமம் 33:12 ........ 3
10. யோசுவா 1:9 ........ 3
11. யோசுவா 23:14 ........ 3
12. 1 சாமுயேல் 2:9 ........ 3
13. சங்கீதம் 31:15 ........ 3
14. 1 சாமுயேல் 12:22 ........ 4
15. 2 சாமுயேல் 22:2 ........ 4
16. 2 நாளாகமம் 16:9 ........ 4
17. நெகேமியா 8:10 ........ 4
18. யோபு 5:19 ........ 5
19. சங்கீதம் 16:8 ........ 5
20. சங்கீதம் 16:11 ........ 5
21. சங்கீதம் 18:2 ........ 6
22. சங்கீதம் 18:32, 29 ........ 6
23. சங்கீதம் 23:1 ........ 6
24. சங்கீதம் 23:2 ........ 7
25. சங்கீதம் 23:3 ........ 8
26. சங்கீதம் 23:4 ........ 8
27. சங்கீதம் 23:5 ........ 9
28. சங்கீதம் 23:6 ........ 10
29. சங்கீதம் 25:9 ........ 11
30. சங்கீதம் 25:12 ........ 12
31. சங்கீதம் 25:14 ........ 12
32. சங்கீதம் 27:1 ........ 13
33. சங்கீதம் 27:5 ........ 14
34. சங்கீதம் 27:10 ........ 14
35. சங்கீதம் 27:14 ........ 14
36. சங்கீதம் 29:11 ........ 15

*37.* ***சங்கீதம் 31:20*** ..... 15

*38.* ***சங்கீதம் 31:24*** ..... 15

*39.* ***சங்கீதம் 32:8*** ..... 16

*40.* ***சங்கீதம் 34:7*** ..... 16

*41.* ***சங்கீதம் 34:8*** ..... 18

*42.* ***சங்கீதம் 34:15*** ..... 18

*43.* ***சங்கீதம் 34:18*** ..... 18

*44.* ***சங்கீதம் 34:19*** ..... 18

*45.* ***சங்கீதம் 37:4, 5*** ..... 19

*46.* ***சங்கீதம் 37:23*** ..... 19

*47.* ***சங்கீதம் 37:24*** ..... 19

*48.* ***சங்கீதம் 37:25*** ..... 21

*49.* ***சங்கீதம் 45:10, 11*** ..... 21

*50.* ***சங்கீதம் 46:1, 2, 3*** ..... 22

*51.* ***சங்கீதம் 55:22*** ..... 24

*52.* ***சங்கீதம் 59:16*** ..... 24

*53.* ***சங்கீதம் 63:3*** ..... 24

*54.* ***சங்கீதம் 73:24*** ..... 25

*55.* ***சங்கீதம் 73:26*** ..... 26

*56.* ***சங்கீதம் 84:11*** ..... 26

*57.* ***சங்கீதம் 89:34*** ..... 27

*58.* ***சங்கீதம் 91:1*** ..... 28

*59.* ***சங்கீதம் 91:2*** ..... 28

*60.* ***சங்கீதம் 91:3*** ..... 28

*61.* ***சங்கீதம் 91:4*** ..... 29

*62.* ***சங்கீதம் 91:5, 6*** ..... 29

*63.* ***சங்கீதம் 91:7*** ..... 30

*64.* ***சங்கீதம் 91:9*** ..... 31

*65.* ***சங்கீதம் 91:10*** ..... 31

*66.* ***சங்கீதம் 91:11*** ..... 32

*67.* ***சங்கீதம் 91:12*** ..... 32

*68.* ***சங்கீதம் 91:14*** ..... 33

*69.* ***சங்கீதம் 91:15*** ..... 33

*70.* ***சங்கீதம் 97:11*** ..... 34

*71.* ***சங்கீதம் 103:13, 14*** ..... 34

*72.* ***சங்கீதம் 103:17, 18*** ..... 35

*73.* ***சங்கீதம் 107:7*** ..... 36

*74.* ***சங்கீதம் 107:29*** ..... 36

*75.* ***சங்கீதம் 116:15*** ..... 37

76. *சங்கீதம் 119:105* ........ 37
77. *சங்கீதம் 119:165* ........ 38
78. *சங்கீதம் 121:2* ........ 38
79. *சங்கீதம் 121:3* ........ 39
80. *சங்கீதம் 121:7* ........ 39
81. *சங்கீதம் 121:8* ........ 39
82. *சங்கீதம் 125:1* ........ 39
83. *சங்கீதம் 125:2* ........ 39
84. *சங்கீதம் 145:18, 19* ........ 39
85. *சங்கீதம் 145:20* ........ 39
86. *நீதிமொழிகள் 3:5, 6* ........ 41
87. *நீதிமொழிகள் 4:18* ........ 42
88. *நீதிமொழிகள் 10:22* ........ 43
89. *நீதிமொழிகள் 29:25* ........ 44
90. *ஏசாயா 26:3* ........ 45
91. *ஏசாயா 30:15* ........ 46
92. *ஏசாயா 33:16* ........ 46
93. *ஏசாயா 33:17* ........ 46
94. *ஏசாயா 40:31* ........ 47
95. *ஏசாயா 41:10* ........ 47
96. *ஏசாயா 41:13* ........ 48
97. *ஏசாயா 43:2* ........ 48
98. *ஏசாயா 46:10, 11* ........ 48
99. *ஏசாயா 49:15, 16* ........ 49
100. *ஏசாயா 50:7* ........ 49
101. *ஏசாயா 51:7, 12* ........ 49
102. *ஏசாயா 51:16* ........ 49
103. *ஏசாயா 54:17* ........ 49
104. *ஏசாயா 55:11* ........ 51
105. *ஏசாயா 58:11* ........ 52
106. *ஏசாயா 62:2, 3* ........ 53
107. *ஏசாயா 63:9* ........ 53
108. *ஏசாயா 65:24* ........ 54
109. *ஏசாயா 66:13* ........ 54
110. *எரேமியா 33:3* ........ 54
111. *புலம்பல் 3:22, 23* ........ 54
112. *புலம்பல் 3:26* ........ 54
113. *நாகூம் 1:7* ........ 55
114. *மல்கியா 3:17* ........ 55

புதிய ஏற்பாடு ........ 58
1. மத்தேயு 4:4 ........ 58
2. மத்தேயு 5:3 ........ 59
3. மத்தேயு 5:4 ........ 61
4. மத்தேயு 5:5 ........ 62
5. மத்தேயு 5:6 ........ 63
6. மத்தேயு 5:7 ........ 65
7. மத்தேயு 5:8 ........ 66
8. மத்தேயு 5:9 ........ 68
9. மத்தேயு 5:10 ........ 69
10. மத்தேயு 5:11 ........ 68
11. மத்தேயு 5:12 ........ 70
12. மத்தேயு 6:28, 30 ........ 73
13. மத்தேயு 6:32, 33 ........ 74
14. மத்தேயு 10:30 ........ 76
15. மத்தேயு 11:27 ........ 77
16. மத்தேயு 18:10 ........ 77
17. மத்தேயு 28:20 ........ 79
18. லூக்கா 11:13 ........ 78
19. லூக்கா 12:32 ........ 82
20. லூக்கா 12:37 ........ 86
21. யோவான் 6:45 ........ 88
22. யோவான் 7:17 ........ 88
23. யோவான் 8:31, 32 ........ 92
24. யோவான் 10:3 ........ 95
25. யோவான் 10:4, 5 ........ 96
26. யோவான் 10:27 ........ 98
27. யோவான் 14:3 ........ 99
28. யோவான் 14:21 ........ 98
29. யோவான் 14:23 ........ 103
30. யோவான் 14:27 ........ 104
31. யோவான் 15:2 ........ 106
32. யோவான் 15:7 ........ 110
33. யோவான் 15:9 ........ 113
34. யோவான் 15:16 ........ 114
35. யோவான் 16:13 ........ 115
36. யோவான் 16:22 ........ 118
37. யோவான் 16:24 ........ 119
38. யோவான் 16:27 ........ 119

*39.* **யோவான் *17:23*** ........ 121
*40.* **உரோமர் *6:5*** ........ 121
*41.* **உரோமர் *6:8*** ........ 122
*42.* **உரோமர் *8:16*** ........ 123
*43.* **உரோமர் *8:17*** ........ 124
*44.* **உரோமர் *8:18*** ........ 127
*45.* **உரோமர் *8:28*** ........ 127
*46.* **உரோமர் *8:31*** ........ 130
*47.* ***1* கொரிந்தியர் *3:21, 23*** ........ 131
*48.* ***1* கொரிந்தியர் *10:13*** ........ 132
*49.* ***2* கொரிந்தியர் *4:8 – 10*** ........ 133
*50.* ***2* கொரிந்தியர் *4:17*** ........ 135
*51.* ***2* கொரிந்தியர் *5:1*** ........ 138
*52.* ***2* கொரிந்தியர் *6:18*** ........ 140
*53.* ***2* கொரிந்தியர் *9:8*** ........ 140
*54.* ***2* கொரிந்தியர் *12:9*** ........ 140
*55.* **கலாத்தியர் *3:29*** ........ 143
*56.* **எபேசியர் *2:10*** ........ 146
*57.* **பிலிப்பியர் *1:5*** ........ 147
*58.* **பிலிப்பியர் *2:13*** ........ 149
*59.* **பிலிப்பியர் *4:7*** ........ 151
*60.* **பிலிப்பியர் *4:9*** ........ 154
*61.* **பிலிப்பியர் *4:13*** ........ 154
*62.* **பிலிப்பியர் *4:19*** ........ 155
*63.* **கொலோசெயர் *2:10*** ........ 155
*64.* **கொலோசெயர் *3:4*** ........ 155
*65.* ***1* தெசலோனிக்கேயர் *5:24*** ........ 157
*66.* ***2* தெசலோனிக்கேயர் *3:3*** ........ 158
*67.* ***2* தீமோத்தேயு *1:7*** ........ 158
*68.* ***2* தீமோத்தேயு *2:11, 12*** ........ 160
*69.* ***2* தீமோத்தேயு *2:19*** ........ 162
*70.* ***2* தீமோத்தேயு *3:12*** ........ 163
*71.* **எபிரெயர் *1:14*** ........ 166
*72.* **எபிரெயர் *3:14*** ........ 166
*73.* **எபிரெயர் *4:16*** ........ 167
*74.* **எபிரெயர் *6:19*** ........ 170
*75.* **எபிரெயர் *10:23*** ........ 171
*76.* **எபிரெயர் *10:35*** ........ 172
*77.* **எபிரெயர் *10:36*** ........ 173

*78.* *எபிரெயர் 12:6, 7, 11* ........ 174

*79.* *எபிரெயர் 13:5* ........ 177

*80.* *எபிரெயர் 13:6* ........ 179

*81.* *யாக்கோபு 1:5, 6* ........ 181

*82.* *யாக்கோபு 1:12* ........ 182

*83.* *யாக்கோபு 4:6* ........ 184

*84.* *யாக்கோபு 4:8* ........ 185

*85.* *1 பேதுரு 1:3, 4* ........ 186

*86.* *1 பேதுரு 1:5* ........ 187

*87.* *1 பேதுரு 3:12* ........ 188

*88.* *1 பேதுரு 4:12, 13* ........ 188

*89.* *1 பேதுரு 5:7* ........ 192

*90.* *2 பேதுரு 1:4* ........ 193

*91.* *2 பேதுரு 1:5, 8* ........ 198

*92.* *2 பேதுரு 1:10, 11* ........ 198

*93.* *1 யோவான் 1:9* ........ 212

*94.* *1 யோவான் 2:5* ........ 214

*95.* *1 யோவான் 3:1* ........ 215

*96.* *1 யோவான் 3:2, 3* ........ 217

*97.* *1 யோவான் 4:4* ........ 223

*98.* *1 யோவான் 4:12* ........ 224

*99.* *1 யோவான் 5:4* ........ 225

*100.* *1 யோவான் 5:18* ........ 228

*101.* *வெளிப்படுத்தல் 2:10* ........ 232

*102.* *வெளிப்படுத்தல் 2:11* ........ 235

*103.* *வெளிப்படுத்தல் 2:17* ........ 236

*104.* *வெளிப்படுத்தல் 3:5* ........ 238

*105.* *வெளிப்படுத்தல் 3:10* ........ 240

*106.* *வெளிப்படுத்தல் 3:12* ........ 245

*107.* *வெளிப்படுத்தல் 3:20* ........ 246

*108.* *வெளிப்படுத்தல் 3:21* ........ 248



# பழைய ஏற்பாடு

## 1. ஆதியாகமம் 15:1

**“இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.”**

**ஆபிராமே, நீ பயப்படாதே** – நீ தற்போது ஜெயங்கொண்ட இராஜாக்கள் தரப்பிலிருந்து ஏறெடுக்கப்படும் எந்தப் பழிவாங்குதலின் முயற்சிகளைக் குறித்தும் நீ பயப்பட வேண்டாம். R3944:3

**நான் உனக்குக் கேடகமும்** – “அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்?” (தமிழில் -யோபு 34:30) R3944:4

**மகா பெரிய பலன்** – வேறு வகையில் சொல்ல வேண்டுமானால், நான் உனக்கு என்னையே கொடுப்பேன், அதுவே உனக்குக் கிடைக்கக்கூடிய மிகப்பெரிய பலனாக (reward) அமைந்திடும். R3944:4 தேவனை ஒரு சிநேகிதராகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் கொண்டிருப்பதை எந்தவொரு பூமிக்குரிய நாட்டத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றென உயர்வாக மதித்திட வேண்டும். R2853:6

## 2. ஆதியாகமம் 18:14

**“கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 3. ஆதியாகமம் 28:15

**“நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.”**

**இந்தத் தேசத்துக்கு** – பாலஸ்தீனத்திற்கு மாம்சீக இஸ்ரயேலரை மீண்டும் கூட்டிச்சேர்க்கப்படுவது குறித்த ஒரு தீர்க்கதரிசனம். R1630:2

**உன்னைக் கைவிடுவதில்லை** – அன்றிலிருந்து இன்றுவரை மாம்சீக இஸ்ரயேலரைத் தேவன் (கை)விடவில்லை. R3965:4

## 4. யாத்திராகமம் 4:12

**“ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.”**

**நான் உன் வாயோடே இருந்து** – முற்காலத்தில் மோசேயிடம் கூறினது போன்று இன்றும் தாழ்மையுள்ளவர்களிடம் தேவன் கூறுவது என்னவென்றால், ‘நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்’ என்பதாகும்; நாம் நம்மீது எந்த நம்பிக்கையும் வைக்காமல், தேவன்மீதே முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதே இங்குள்ள முக்கியமான பாடமாகும். R5262:4

### 5.யாத்திராகமம் 33:14

**“அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.”**

**திருவிவிலியம் – “அதற்கு ஆண்டவர், ‘எனது பிரசன்னம் உன்னோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்’ என்று கூற,”**

**என் சமுகம் / எனது பிரசன்னம் (திருவி)** – அவரது ஆவி வாயிலாகவும், அவரது தூதுவர்கள் வாயிலாகவும். R5547:5 அவரது வல்லமை மற்றும் நிலைத்திருக்கும் கிருபை. R5548:1 ஏனெனில், மத்தியஸ்தராக இருந்த மோசேயிடம் தேவன் இந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தார். R5387:6 சொல்லர்த்தமாக இல்லை. வெறுமனே என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்வதற்காக மாத்திரமல்லாமல், தமது திட்டங்களை நிறைவேற்றும் வகையில் அனைத்து நிகழ்வுகளையும் மேற்பார்வையிடுவதற்காகவும்கூட, தேவன் தமது பல்வேறு வல்லமைகளையும், பிரதிநிதிகளையும் கொண்டு தமது ஜனங்களுக்கு தம்முடைய வல்லமையையும், அன்பையும் வெளிப்படுத்தி வருகிறார். மேலும் அவர் தமது ஜனத்தினை வழிநடத்தி, அவர்களது பிரயாசங்களுக்கு உதவவுஞ்செய்கிறார். R5387:2 தேவ பிரசன்னமானது, இஸ்ரயேலரிடையே மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஷெக்கினா மகிமையிலும், பகலில் மேகஸ்தம்பத்திலும், இரவில் அக்கினிஸ்தம்பத்திலும் நேரடியாக வெளிப்பட்டது. R5387:5, R5548:1 அதேபோல, வாழ்வின் சகல காரியங்களிலும் அவருடைய பிரசன்னம் நம்மோடுகூட இருக்குமென தேவன் வாக்களித்திருக்கிறார். R5548:2, R5862:5

**உன்னோடு செல்லும் (திருவி)** – பகலின் பரபரப்பான நேரத்திலாவது, இரவின் அமைதியான காவலிலாவது, நாம் அவரை எப்போது அழைத்தாலும்சரி, நம்மை தாங்குவதற்கும், தூக்கி நிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் அவர் கூடவே இருக்கிறார். R5549:1

**நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்** – கானானின் இளைப்பாறுதல் என்பது, சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்த தேவ ஜனங்களுடைய இளைப்பாறுதலுக்கு ஒரு நிழலாக இருக்கிறது. எப்படியெனில், நாம் அவருடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறோம். R5388:1

### 6. உபாகமம் 28:12

**“ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.”**

**நீ … கடன்கொடுப்பாய்** – முன்னறிவித்தபடி, அவர்கள் பல தேசங்களுக்குக் கடன்கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். R2125:1

### 7. உபாகமம் 31:6

**“நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### 8. உபாகமம் 31:8

**“கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### 9. உபாகமம் 33:12

**“பென்யமீனைக் குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான்.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### 10. யோசுவா 1:9

**“நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.”**

**திருவிவிலியம் – “நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடம் எல்லாம் உன்னோடே இருப்பேன்.”**

**நான் உனக்குக் கட்டளையிடவில்லையா?** – இது நமது போர் அல்ல, மாறாக கர்த்தருடைய போராகும். R4061:6

**கலங்காதே / கவலைப்படாதே (திருவி)** – பலவீனங்கள் மற்றும் பாவ-பழக்கவழக்கங்கள் எனும் இராட்சதர் குறித்த பயத்தினாலோ அல்லது சுற்றிலும் நெருக்கியிருக்கிற பாவத்தின் பெரிய பெரிய சுவர்கள் குறித்தும், அதின் அரண்கள் குறித்தும் எழும்புகிற சிந்தையினாலோ நீ கலங்க வேண்டாம். R4064:2

### 11. யோசுவா 23:14

**“இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிறவழியே போகிறேன்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை என்பதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமாவாலும் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளெல்லாம் உங்களுக்கு நிறைவேறிற்று; அவைகளில் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை.”**

**ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை** – நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களைக் குறித்து அநுதினமும் எண்ணிப்பார்ப்பதென்பது பொருத்தமானதாயிருக்கும். R2737:1 நம்முடைய வாழ்வின் மிகச்சிறிய விஷயங்களிலும்சரி, மிகப்பெரிய விஷயங்களிலும்சரி, அவர் எப்போதுமே நம்முடைய நலன்களைக் கவனித்துக்கொள்கிறவராய் இருக்கின்றார். R5387:5, R5538:3

### 12. 1 சாமுயேல் 2:9

**“அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்; துன்மார்க்கர் இருளில் மௌனமாவார்கள்; பெலத்தினால் ஒருவரும் மேற்கொள்ளுவதில்லை.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### 13. சங்கீதம் 31:15

**“என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.”**

**காலங்கள் உமது கரத்திலிருக்கிறது** – தேவஜனங்களுடைய வாழ்க்கையின் இம்மைக்குரிய மற்றும் ஆவிக்குரிய சகல காரியங்களும் (அவரது கரத்திலிருக்கிறது). R4527:3, R4533:6 நமது

மறுரூபமடைதலின் காலம் (time of our change) உட்பட, அநுதினமும் நாம் ஒன்றாக அனுபவிக்கும் காரியங்கள் அனைத்திலும், கர்த்தருடைய சித்தமே செய்யப்பட வேண்டுமென விரும்புகிறோம். R5728:5

### 14. 1 சாமுயேல் 12:22

**“கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக் கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனங்களைக் கைவிடமாட்டார்.”**

**கைவிடமாட்டார்** – ஆவிக்குரிய பாபிலோனில் உள்ள உத்தம இஸ்ரயேலரைக் (கைவிடமாட்டார்). R4200:2

### 15. 2 சாமுயேல் 22:2

**“கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகருமானவர்;”**

**கர்த்தர் என் கன்மலையும்** – அவர் மீது பாதுகாப்பாக நான் எனது நம்பிக்கைகளைக் கட்டுவிப்பேன். R2032:4

**என் கோட்டையும்** – அவரில் நான் பத்திரமாக / பாதுகாப்பாக மறைந்து கொள்ளலாம். R2032:4

**என் இரட்சகருமானவர்** – ஒவ்வொரு ஆபத்துக்காலத்திலும் (என் இரட்சகருமானவர்). R2032:4

### 16. 2 நாளாகமம் 16:9

**“தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்.”**

**கர்த்தருடைய கண்கள்** – இது கர்த்தருடைய செல்வாக்கையும், எவ்வகையிலாவது காரியத்தை அறிந்துகொள்ளுகிற அவரது வல்லமையையும் குறிக்கின்றது. R5634:2 அவருடைய தெய்வீக ஞானம். SM623:1 தேவனுடைய கண்கள் நம்மேல் இருப்பதை நாம் எவ்வாறு உணருகிறோமோ அதுபோல, உங்கள் கண்ணும் தேவனுடைய கண்ணும் எப்போதும் உங்கள் பிள்ளைகள் மீது இருப்பதை அவர்களும் உணரும்படிக்குச் செய்யுங்கள். R1097:5*

**பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது** – இது பூமியிலுள்ள ஒவ்வொரு நபருடைய ஒவ்வொரு தனிப்பட்ட செயலையும் தேவன் தனிப்பட்ட முறையில் கண்ணோக்குகிறார் என்பதை அர்த்தப் படுத்தவில்லை, மாறாக அவர் தமது வல்லமையின் மூலமாகவும், தமது பிரதிநிதிகள் மூலமாகவும், பிரபஞ்சமெங்கும் நடக்கிற விஷயங்களை அறிந்துகொள்கிறார் / கவனத்தில் கொள்கிறார் என்பதையே அர்த்தப்படுத்துகின்றது. R5634:2

### 17. நெகேமியா 8:10

**“பின்னும் அவன் அவர்களை நோக்கி: நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.”**

**திருவிவிலியம் – “அவர் அவர்களைப் பார்த்து, ‘நீங்கள் போய்க் கொழுத்தவற்றை உண்டு, இனிய திராட்சை இரசத்தைக் குடியுங்கள்: எதுவும் தயார் செய்யாதவருக்குச் சிறிது அனுப்பிவையுங்கள்.**

**ஏனென்றால், நம் ஆண்டவரின் புனித நாள் இதுவே: எனவே வருந்த வேண்டாம்: ஏனெனில் ஆண்டவரின் மகிழ்வே உங்களது வலிமை' என்று கூறினார்"**

**மதுரமானதைக் குடித்து** - நாம் நமக்குக் கொடுக்கப்பட்ட மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் புசிக்கவும், அவரது தயவு எனும் மதுரமானதைக் குடிக்கவும், தெய்வீகக் கிருபை எனும் ஐசுவரியத்தை இதுவரை காணாத மற்றும் கேட்காத மற்றும் சுவைக்காத மற்றவர்களுக்கு இந்த ஆசீர்வாதத்தின் பங்குகளை அனுப்பவும் வேண்டும். R2532:1

**பங்குகளை அனுப்புங்கள்** - பூமி முழுவதையும் நிரப்புவதற்காக, கர்த்தரை அறிகிற அறிவினை அனுப்புவதைக் குறிக்கிறது. R2531:5

**இந்த நாள்** – ஆயிரமாண்டு நாளை நிழலாகக் காண்பிக்கிறது. R2531:5

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே / ஆண்டவரின் மகிழ்வே (திருவி)** - கர்த்தர் நமக்குக் கோட்டையாயிருக்கிறார் என்பதையும், அவருக்குத் தெரியாமல் நமக்கு எந்தத் தீங்கும் நேரிடாது என்பதையும், சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதையும் உணர்ந்துகொள்வதினால் உண்டாகும் மகிழ்ச்சி. R3677:5

**உங்களுடைய பெலன்** - அதனால், பாதையின் அனைத்து சோதனைகளும் சிரமங்களும் ஒன்றுமேயில்லை எனத் தோன்றும். R3677:5

## 18. யோபு 5:19

**"ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது."**

**உம்மை நீங்கலாக்குவார்** - (இது) மணவாட்டி வகுப்பாருக்கான மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தமாகும். R4784:2

## 19. சங்கீதம் 16:8

**"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை."**

**என் வலதுபாரிசத்தில்** - பிரதான அதிபதிக்கு அடுத்துள்ள பிரதான இடத்தைக் குறிக்கின்றது. A92; R2089:5

## 20. சங்கீதம் 16:11

**"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு."**

**ஜீவமார்க்கம்** - இடுக்கமான வாசலுள்ள நெருக்கமான வழி. R814:1* தேவன் நமது மீட்பருக்கு, மகிமையான நிறைவை நோக்கின பாதையைப் படிப்படியாக தெரியப்படுத்தினார். CR158:3 பலியின் பாதையே மகிமைக்கான பாதை என்பது நமது கர்த்தருக்குக் காண்பிக்கப்பட்டது; அதேபோல, அவரும் இந்த வெளிச்சத்தைத் தமது பின்னடியாருக்கும் பகிர்ந்தளித்தார். R4155:4 "நானே வாசல்" (யோவா. 10:7) – வாய்ப்பின் வாசல், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வழி. R1647:3

**எனக்குத் தெரியப்படுத்துவீர்** - அதுகுறித்த அறிவினைப் பெறச் செய்தீர். E52 (ஜீவமார்க்கத்தை) தெளிவுபடுத்திக் காட்ட வேண்டும் என்று பணிவுடன் வாஞ்சித்தாலும்சரி, ஒரு பாடத்தின் / கருப்பொருளின் மீதான தேவனுடைய போதனையைக் குறித்து நேர்மையான வகையில் ஏதேனும் சந்தேகம் / கேள்வி எழுந்தாலும்சரி (அதற்கான விளக்கத்தை அவர் நமக்குத் தெரியப்படுத்துவார்). R1256:3

**உம்முடைய சமுகத்தில்** – நாம் எப்படிப்பட்ட சூழலிலிருந்தாலும்சரி (கர்த்தருடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமுண்டு). R1949:5 படிப்படியாக தேவனுடைய மிகவும் நெருக்கமான பிரசன்னத்தில். R1949:2 நன்றியுணர்வானது அவரோடு ஜீவனுள்ள மற்றும் மகிழ்ச்சியான ஒரு ஐக்கியத்தினை ஏற்படுத்துகின்றது; இந்த ஐக்கியமே மனித வாழ்க்கையின் பிரதான இலக்காகக் காணப்படுகின்றது; இதுவே சிருஷ்டியின் விஷயத்திலும், சிருஷ்டிகரின் விஷயத்திலும் பிரதான விருப்பமாகவும் காணப்படுகின்றது. R2031:3

**பரிபூரண ஆனந்தம்** – தேவனுடைய பிள்ளைகளில் எவரேனும் அவருக்குள் சந்தோஷமாக காணப்படாவிட்டால், அவன் தனக்குரிய சிலாக்கியங்களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் கீழான நிலையில் வாழ்ந்துவருகிறான் என்பதே அர்த்தமாகும். R1949:5 "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்." (யோவா. 16:24) R1949:5

**உம்முடைய வலதுபாரிசத்தில்** – நாம் அந்த வலதுபாரிசத்தை ஜெபத்தின் வாயிலாக அணுகலாம். F679 தயவு மற்றும் வல்லமையின் ஓர் இடம். R2089:5, R655:6, R1394:1, R2607:5; A92

**நித்திய** – தற்கால ஜீவியத்தில் ஆரம்பமாகின்றது. R1949:2

**பேரின்பமும் உண்டு** – பரமபிதாவின் குணலட்சண சாயலுக்கொத்த குணலட்சணத்தை வளர்த்திக் கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரமே மெய்யான சந்தோஷம் கிடைக்கும். R1840:6

### 21. சங்கீதம் 18:2

**"கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்."**

**கொம்பும்** – கொம்புகள் வல்லமையை / அதிகாரத்தைக் குறிக்கும் அடையாளங்களாகும். T42

### 22. சங்கீதம் 18:32, 29

**வ. 32 – "என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

**வ. 29 – "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்"**

**உம்மாலே நான்** – "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலி. 4:13) R2154:3

**ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்** – எதிர்த்து நிற்கின்ற எதிராளிகளின் சேனைக்குள். R3337:5

**ஒரு மதிலைத் தாண்டுவேன்** – அடிமைத்தனத்தின் மதிலைத் தாண்டி, தேவ புத்திரருக்கென்றுள்ள மகிமையான சுயாதீனத்திற்குள்ளாக (செல்வேன்). R3337:5

### 23.சங்கீதம் 23:1

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்"**

**திருவிவிலியம் – "ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை."**

**கர்த்தர்** – யாவே / யேகோவா தேவன். E45; F251, F396 மாபெரும் மேய்ப்பராகிய யாவே / யேகோவா

தேவன் தமது குமாரனை உடன் மேய்ப்பராக நியமித்தார். R5490:1, R2706:5 யோவா. 10:1-16 வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ள மேய்ப்பனுக்கும் மந்தைக்குமான ஏற்பாடுகள், தாவீதின் நாட்களில், முழுமையடைந்திருக்கவில்லை. R2672:1 இந்தச் சங்கீதத்தின் அனைத்து அம்சங்களுமே நமது மீட்பருக்கும் பொருந்தும், அவரது பின்னடியாருக்கும் பொருந்தும். R5653:6

**என் மேய்ப்பராயிருக்கிறார்** - இந்த வார்த்தையின் மிகப்பெரிய அர்த்தத்தில் பார்த்தால், யாவே / யேகோவா தேவனே மேய்ப்பராயிருக்கிறார்; இயேசு எல்லா மந்தைக்கும் மாபெரும் மேய்ப்பரா யிருக்கிறார்; ஒவ்வொரு உள்ளூர் மூப்பரும் ஓர் உள்ளூர் வகுப்பாருக்கு ஒரு மேய்ப்பராயிருக்கிறார். F251 "யாவே / யேகோவா தேவனுடைய பெலத்தினில்" மேசியாவால் மேய்க்கப்படுகிறார்கள் / போஷிக்கப் படுகிறார்கள். (மீகா 5:4) E45 முதலில் யூத தேசமே இம்மந்தையாக இருந்தது, தாவீதுதாமே அந்தச் செம்மறியாடுகளில் ஒருவராக இருந்தார். R5490:2 தற்போது, சிறு மந்தை மட்டுமே. R3268:3, R1396:2 ஒரேபேறான குமாரன் தேவ ஆட்டுக்குட்டி என்றழைக்கப்படுகிறார், அவருடைய ஜனங்கள் அனைவரும் அவருடைய செம்மறியாடுகள் என்கிற பாணியில் பேசப்படுகிறார்கள். R2441:2 (யாவே / யேகோவா தேவன்) தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து என்கிற நிஜமான தாவீதின் மேய்ப்பராயிருக்கிறார். R4851:3, R5490:3 ஆவிக்குரிய இஸ்ரயேலரின் காரியங்கள்மீது மேய்ப்பனுக்கு விசேஷ அக்கறை / கவனம் இருக்கிறது. R5490:2, R5491:1 செம்மறியாடுகள் சாந்த குணமுள்ளவை, சாதுவானவை; மேய்ப்பனுடைய சத்தம் கேட்டதும், அதற்குக் கீழ்ப்படிவதற்காக அவரை நோக்கி ஓடிவருபவை. R3116:2

**எனக்கேதும் குறையில்லை (திருவி)** - இம்மைக்குரிய தேவைகளில் (எனக்கேதும் குறையில்லை). "அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்." (ஏசா. 33:16) R1745:2, R4279:3 ஒளி. "ஜீவஒளியை அடைந்திருப்பான்." (யோவா. 8:12) R1745:2 கவனிப்பும் ஒழுங்குப்படுத்தப்படுவதும் (discipline). "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." (எபி. 12:6) R1745:5, R4279:3 ஆறுதலும் ஐக்கியமும். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." (எபி. 13:5) R1745:5 ஒன்றும் (எனக்கு குறைவில்லை). "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது." (உரோ. 8:28) R1396:3, R5654:2 நாம் அவருடைய அன்பில் நிலைத்திருந்து, அவருடைய வழிநடத்துதலைப் பின்பற்ற வேண்டும் என்பதே இந்த வாக்குத்தத்தத்தோடு இணைந்துள்ள ஒரே நிபந்தனையாக இருக்கின்றது. R4279:3 சரியான செம்மறியாடுகளாக இருப்பவர்கள் அவருடைய வழிநடத்துதலை முழுவதுமாக நம்புவார்கள், இதனால் அவர்கள் உலகத்தார் மத்தியில் மிகவும் பொதுவாக காணப்படும் அந்தக் கவலைமிகு ஏக்கத்திலிருந்து விடுபட்டவர்களாயும் இருப்பார்கள். R3269:2 தேவனுடைய வார்த்தையில் காணப்படும் வாக்குத்தத்தங்கள், வலிவேதனையை உணருவதிலிருந்து நம்மைத் தடுக்காது என்றாலும், அவை வலியையும், அது அடிக்கடி ஏற்படுவதையும் (frequency) மாற்றியமைப்பதாய் இருக்கின்றன. R2083:3

## 24. சங்கீதம் 23:2

**"அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்."**

**திருவிவிலியம் – "பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்"**

**புல்லுள்ள இடங்களில்** - ஆவிக்குரிய புத்துணர்ச்சி, தனிப்பட்ட பக்தி ஆராதனைகள், தெய்வீகக் காரியங்களைப் பற்றிய தியானங்கள், கிறிஸ்தவ ஐக்கியம் என்பது போன்ற (புல்லுள்ள இடங்களில்). R3269:3 ஆவிக்குரிய வகையில் போஷிக்கப்பட்டு, புத்துணர்ச்சி அடைவது. R5654:2 ஏற்றகால

போஜனத்தால் நாம் தாராளமாய் / ஏராளமாய் போஷிக்கப்படுவோம். R1396:5

**இளைப்பாறச் செய்வார் (திருவி)** – விசுவாசத்தின் இளைப்பாறுதல். R3116:5, R4279:5 இந்த இளைப்பாறுதல், இந்த இருதயத்தின் சமாதானம், புதிய சிருஷ்டிகளாக நம்முடைய வளர்ச்சிக்கு முற்றிலும் அவசியமாக இருக்கின்றது. R4279:5

**அமர்ந்த தண்ணீர்கள்** – தற்கால சத்தியமெனும் ஆழமான தண்ணீர்கள். R3295:6 சத்தியம் மற்றும் கிருபையின் நீரோடைகள். R3269:4, R5654:2 ஜீவனுள்ள தண்ணீர், ஆனால் ஒப்பீட்டளவில் அமரிக்கையான தண்ணீர். R3269:4

**என்னைக் கொண்டுபோய் விடுகிறார்** – உலகப்பிரகாரமான இலட்சியத்திற்கான போராட்டத்திலிருந்து விலக்கி (கொண்டுபோய் விடுகிறார்). R3269:4 சத்தியம் மற்றும் கிருபையின் நீரோடைகளைக் கண்டறிவதற்குத் தெய்வீக வழிநடத்துதல் தேவைப்படுகின்றது. R3269:4 அவருடைய வழிகளின் விரும்பத்தக்க தன்மையையும், மற்றெல்லா வழிகளின் விரும்பத்தகாத தன்மையையும் மதித்துணருவதற்காக. R5654:3 நம்முடைய பாதையில் காணப்படும் ஒவ்வொரு எதிரியிடமிருந்தும், ஆபத்தான கண்ணிகளிலிருந்தும் நம்மைப் பாதுகாத்து (கொண்டுபோய் விடுகிறார்.) R5490:6

## 25. சங்கீதம் 23:3

**“அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.”**

**திருவிவிலியம் – “அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்; தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்.”**

**என் ஆத்துமாவைத் தேற்றி / எனக்குப் புத்துயிர் அளிப்பார்** (திருவி) – ஜீவனை அடையும்படிக்கு என்னை நீதிமானாக்கினீர். R3269:5, R1396:5 அவர் மீண்டும் என்னை தம்மிடம் சேர்த்துக் கொள்கிறார். R5654:3

**தம்முடைய நாமத்தினிமித்தம்** – ஏனெனில் நாம் அவருடையவர்கள் என்பதாலும், அவருடைய நாமத்தின்பேரிலேயும், அவருடைய புண்ணியத்தின்பேரிலேயும் நாம் நம்பிக்கை கொண்டிருப்பதாலும். R1396:5 நான் அவருடைய பிள்ளை என்பதால் அவருடைய நாமத்தை நான் தரித்துள்ளேன். R3116:5 இதில் அவருடைய வாக்குத்தத்தம் சம்பந்தப்பட்டுள்ளது; (அவருடைய மேய்ப்பத்துவத்தில் சற்று தவறு நேர்ந்தாலும் அது) அவருடைய கனத்திற்கு ஆபத்தாக மாறிடும் (அல்லது அதனை இழக்கச்செய்திடும்). R4280:1

**நீதியின்** – ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்றது. R3269:5 அவருடைய வழிகளெல்லாம் பரிபூரணமும், நீதியுமானவை. R5654:3

**பாதைகளில்** – சாந்தம், விசுவாசம், பொறுமை, அன்பு போன்றவற்றின் பாதை எனக் கர்த்தருடைய வார்த்தை சுட்டிக்காட்டும் பாதை. R1646:5

## 26. சங்கீதம் 23:4

**“நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.”**

**மரண** – இந்தப் பள்ளத்தாக்கில் நான் பிறந்தேன், இங்கேயே நான் மரித்தும்போவேன். R1396:5 நாம் 6000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பள்ளத்தாக்கினில் காணப்படுகிறோம், ஆனால் (சந்தோஷப்

பட்டுக் களிகூருங்கள்) அதின் முடிவு சமீபமாயிற்று. R4280:2, R5654:4

**இருளின்** – வீழ்ச்சியிலிருந்து ஆரம்பமான ஜீவிதப் பயணமானது, மரண இருள் தங்கியிருக்கும் கண்ணீரின் பள்ளத்தாக்கு வழியாக போய்க்கொண்டிருக்கிறது. R3116:5 மரண இருள் பள்ளத்தாக்கின் விளிம்பில் நடந்துகொண்டிருப்பது. T90

**பள்ளத்தாக்கிலே** – ஜீவன் மற்றும் பரிபூரணம் எனும் மலை உச்சிகளுக்கு எதிரிடையான மிகவும் கீழானநிலை. R360:3 கேட்டிற்காக விசாலமான பாதையும், ஜீவனுக்காக இடுக்கமான பாதையும் காணப்படுகிற பாவத்தின் பள்ளத்தாக்கிலே. R3269:5 இந்தப் பள்ளத்தாக்கிற்குள் நாம் எவ்வளவு தூரம் செல்கிறோமோ அந்தளவிற்கு அது இருளடைகிறது, ஜீவனின் கடைசி மூச்சும் (last spark of life) அணைந்துபோகும் வரைக்கும் அது இன்னுமதிகமாக இருளடைந்துகொண்டே செல்லும். R15:2

**நான் … நடந்தாலும்** – உலக மனுக்குலத்தின் மற்ற அனைவரோடுங்கூட பொதுவாக (நான் … நடந்தாலும்). R3269:5, R5654:3

**பொல்லாப்புக்குப் பயப்படேன்** – உம்முடைய உறுதியான உடன்படிக்கை தோல்வியுராது. R1396:5 ஏனெனில் மேய்ப்பன் நம்மோடேகூட இருக்கிறார். R4280:3 தெய்வீக அன்பு இரட்சிப்பினை அருளியுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். R3269:6 தேவனுடைய வார்த்தைக்குச் செவிசாய்த்து, அதனை நம் மனதின் முன்பாக நிறுத்தி, தேவனுடைய அன்பு மற்றும் மேற்பார்வை குறித்து தேவ வார்த்தையிலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைக் கருத்தில் கொண்டு, நம்முடைய அச்சங்களை விரட்டுவதற்கு நாம் நாட வேண்டும். Q272:2

**என்னோடேகூட இருக்கிறீர்** – இங்கேயும் கூட (என்னோடேகூட இருக்கிறீர்). R1396:5

**உமது கோலும்** – என்னைத் திருத்துவதற்கும், மந்தையோடு மீண்டும் என்னை இணைத்துக் கொள்வதற்கும் இத்தகைய சிட்சைகள் இன்றியமையாததாயிருக்கின்றன. R2672:5, R4663:1

**உமது தடியும்** – வாக்குத்தத்தம் மற்றும் நம்பிக்கை எனும் (தடியும்). R1396:5 மேற்பார்வையான கவனிப்பு எனும் (தடியும்). R1721:3 நம்மைத் திருத்துவதற்கான ஒரு கோல்; நமது துயர் நீக்குவதற்கும், உதவி மற்றும் பாதுகாப்பிற்குமான ஒரு தடி. R4280:3 வழிதவறிச் செல்லும் ஆடுகளை மேய்ப்பன் அப்படியே விட்டுவிடமாட்டார். R5654:2 இந்த லவுகீகக் கவலைகளினால் ஒருவர் பாரமடைந்திருந்தால், அதற்கான ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்காக கர்த்தர் உபத்திரவத்தையோ அசம்பாவிதத்தையோ அனுமதிக்கலாம்; அப்படிப்பட்ட பாடமானது அவர் அனுமதிக்கும் கஷ்டத்தின் மூலமாக அல்லாமல் வேறு எவ்வகையிலும் கற்றுக்கொள்ள முடியாத பாடமாயிருக்கும். R4663:1

**என்னைத் தேற்றும்** – கஷ்டங்களிலிருந்து என்னைக் காப்பாற்றி, எதிரிகளிடமிருந்து என்னைப் பாதுகாத்திடும். R3269:6 "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்." (சங். 119:67) F648 கோலும் தடியும், மேய்ப்பனின் அடிச்சுவடுகளிலிருந்து விலகி, தவறான திசையில் செல்லும் செம்மறியாடுகளைத் திரும்பக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. F648

## 27. சங்கீதம் 23:5

**"என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது."**

**என் சத்துருக்களுக்கு முன்பாக** – வானமண்டலங்களில் இருக்கும் எதிராளி மற்றும் பொல்லாத ஆவிகளுக்கு (முன்பாக). R3270:1 அவர்கள் (பெயர்ச்சபை மண்டலம்) (தேவன் அருளியுள்ள) ஏராளமான பொக்கிஷங்களைப் பார்த்து, பொறாமை கொள்கிறார்கள், அதேசமயம் நாம் அவர்களுடன்

உற்சாகமாக பகிர்ந்துகொள்ள விரும்பும் நன்மையானவைகளை ஏற்கவும் மறுக்கிறார்கள். R3396:1

**நீர்** – என்னை உபசரிப்பவராக. R3270:1

**எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி** – அவருடைய பிள்ளைகள், எல்லா நேரத்திலும், பொங்கி வழியும் மகிழ்ச்சியினால் நிரம்பியிருக்க வேண்டும் என்கிற நோக்கத்திற்காக. R1494:2 தெய்வீகச் சத்தியம். R3270:2 சுத்தமான, நன்மையான, ஏராளமான மற்றும் அழகாக ஒழுங்குப்படுத்தப்பட்ட (ஒரு பந்தி). (ஏசா. 28:8 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) R1475:2 கர்த்தர் தாமே இடைக்கட்டிக்கொண்டு, அவருடைய களஞ்சியத்தில் உள்ள பழையதும் புதியதுமான பொக்கிஷங்களை நமக்கு முன்பாக வைக்கிறார்/பரிமாறுகிறார். R4280:5, R3455:5 குறிப்பாக அவருடைய பிரசன்னந்துவக்கி. R4280:5 இந்தப் பந்தியில் விருந்துண்ணும் சிலாக்கியமானது, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு எதிர்க்கப்பட்டாலும் கூட, அது தேவன் தம்முடைய ஜனங்களுக்காக வைத்துள்ள ஏற்பாட்டையும், தயவையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. R5654:4

**எண்ணெயால்** – பரிசுத்த ஆவிக்கான அடையாளம். T116

**என் தலையை ... அபிஷேகம்பண்ணுகிறீர்** – சரீரத்தின் தலையாகிய கிறிஸ்து இயேசு. R5654:5, R3270:4

**என் பாத்திரம்** – சந்தோஷம் மற்றும் துக்கம், இனிப்பு மற்றும் கசப்பு என இரண்டிற்குமான பாத்திரம்; இது நினைவுகூருதல் ஐக்கியத்தின் பாத்திரத்தில் அடையாளப்படுத்தப்படுகிறது. R3270:4, R5654:5 நம்முடைய பாத்திரம் நிரம்பியிருக்கிறது, அதிலிருந்து ஒரு துளிகூட குறைவதற்கு நாம் விரும்ப மாட்டோம். R5654:5 இது மரணபரியந்தமான துக்கங்களைக் குறிக்கின்றது. R4555:5

**நிரம்பி வழிகிறது** – சந்தோஷத்தின் பாத்திரம் மற்றும் துக்கத்தின் பாத்திரம்; இந்த இரண்டு விஷயத்திலுமே அது நிரம்பி வழிகின்றதாய் இருக்கின்றது. R3270:4, R4280:6, R4555:5

## 28. சங்கீதம் 23:6

**"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்."**

**திருவிவிலியம் – "உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்துவரும்: நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்."**

**உண்மையாகவே ... அருள் நலமும்** (திருவி) – இந்த நம்பிக்கையின் வாக்கியத்தைச் சொல்ல முடிகிற ஒரு சிலருக்கு, அதில் மற்றவர்கள் பெற்றிராத ஒரு மாபெரும் சந்தோஷமும், மன அமைதியும் கிடைக்கின்றது. R5425:2

**என்னைத் தொடரும்** – "என்னைப் பின்தொடர்ந்துவரும்" ("Pursue me") என்பது இன்னும் துல்லியமான மொழிப்பெயர்ப்பாகத் தோன்றுகிறது. R4280:6 இது ஏற்கனவே தொடங்கியாயிற்று, மேலும் இது திரைக்கு அந்தப் பக்கமும் தொடரும். R3270:4 தேவனுடைய நன்மையும் கிருபையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும், நம்மைப் பின்தொடர்ந்து, நமது நன்மைக்கு ஏதுவாக சகலத்தையும் நடக்கச்செய்து கொண்டிருக்கின்றன. R5654:6

**கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய்** – அவருடைய பிள்ளையாக, அவருடைய குடும்பத்தில் ஓர் அங்கத்தினனாக. R3116:5 அவர் பாதையின் முடிவுவரைக்குமே நம்முடைய மேய்ப்பராக இருந்து, பிரயாணத்தின் முடிவிலே மகிமையான நிலைமைக்குள்ளாக நம்மை ஏற்றுக்கொள்வார். CR92:3

**வீட்டிலே** – உன்னதத்திலிருக்கும் பிதாவினுடைய வீட்டில் காணப்படும் பரலோக நிலை. R3270:5, R5654:6; CR92:3

**நிலைத்திருப்பேன்** – விசுவாசத்தின் மூலமாக, தற்கால ஜீவியத்தில். R2642:5

## 29. சங்கீதம் 25:9

**"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."**

**சாந்தகுணமுள்ளவர்களை** – தேவனுடைய வழிகளை அறிந்துகொள்வதற்கும், அதிலே நடப்பதற்கும் தங்களுடைய சொந்த வழிகளையும் நினைவுகளையும் தள்ளி வைத்துவிட்டு, தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ள தேவபிள்ளைகள். R1023:2 எந்த நபர் மூலமாய் எஜமானர் பேசினாலும்சரி, அவருடைய சத்தத்தைக் கேட்பவர்கள். R1574:3 தவறானது எனக் கண்டறியப்பட்ட (விசுவாச) அறிக்கையையும், தப்பறையானது எனக் கண்டறியப்பட்ட சபை உட்பிரிவையும் விட்டுவிடத் தயாராக இருப்பவர்கள். R1305:5 ஒரு பாடத்தின் மீதான தேவனுடைய போதனை குறித்து நேர்மையான வகையில் ஏதேனும் சந்தேகம் / கேள்வி எழுந்தால், அதனை தெளிவுபடுத்திக் காட்ட வேண்டும் என்று பணிவோடு வாஞ்சையோடு கேட்டால், தேவன் உங்களை அந்தச் சத்தியத்திற்கு நேராய் வழிநடத்துவதற்கு ஆயத்தமாகவும் மனவிருப்பமுள்ளவராயும் இருக்கிறார். R1256:3

**நியாயத்திலே நடத்தி** – அவருடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கான வழிகாட்டுதல். R590:1* இப்படியாக ஆழ்ந்து சிந்தித்தல்களின் முடிவானது, யாவராலும் கர்த்தருடைய சிந்தை என்றும், அவரது அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக பரிசுத்த ஆவியே இவ்விதமாய்ப் பேசுகின்றது என்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். R1891:6 தெளிந்த புத்தியின் ஆவியானது ஒருவனைத் தேவனுடைய அறிவுரைகளை ஏற்றுக்கொள்ள செய்து, தன்னுடைய சொந்த தவறான தீர்ப்பை / நிதானிப்பை நிராகரிப்பதற்கு நேராக வழிவகுக்கின்றது. R5095:4 மனுக்குலத்தில் காணப்படுகிற எல்லா வகுப்பாருக்கும் தெய்வீக வழிகாட்டுதல் தேவைப்படுகின்றது. R5370:1

**சாந்தகுணமுள்ளவர்களுக்கு ... போதிக்கிறார்** – கர்த்தராகிய இயேசு சாந்தகுணமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக அனுப்பப்பட்டார். (ஏசா. 61:1) R3103:3 சாந்தகுணமுள்ளவர்களுக்குப் போதிக்க நாம் முற்படும்போது, நாமும் சாந்தகுணமுள்ள, சிறுபிள்ளைபோன்ற மனப்பான்மையைக் காத்துக்கொள்வதற்குக் கவனமாய் இருப்போமாக. R957:4 மேன்மைக்கு முன்னானது தாழ்மை, உயர்வுக்கு முன்னானது தாழ்ச்சி. R764:5 சத்தியத்தைப் பாராதபடிக்குத் தன்னம்பிக்கை தடுத்துவிடுகின்றது. R2882:3 "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்." (யாக். 4:6) R5370:4 சாந்தகுணமுள்ளவர்கள் மாத்திரமே போதனையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் காணப்படுகிறார்கள். R5370:4 எனவே, பெருமையும் அகந்தையும் உள்ளவர்கள் மிகவும் பாதுகாப்பற்ற/ஆபத்தான ஆவிக்குரிய வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். R2241:3

## 30. சங்கீதம் 25:12

**"கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 31. சங்கீதம் 25:14

**"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத்**

தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்."

**கர்த்தருடைய இரகசியம்** - தேவனுடைய ஆழமான காரியங்கள், தெய்வீகத் திட்டம். R5989:5, R2208:3, R5462:4 "இரகசியம்" – இது மற்றனைவருக்கும் மறைவாயிருந்து, பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டது. (தமிழில் – கொலோ. 1:25) R4492:1, R4715:2 நாம் உடன்–சுதந்தரராயும், நமது மீட்பருடைய சுபாவமுள்ளவராயும் இருக்க வேண்டும். (எபே. 3:6) SM152:2 உறுதிமொழியினால் செய்யப்பட்ட மாபெரும் உடன்படிக்கையின் முழு அர்த்தம். R5285:3 கர்த்தருடைய பிரசன்னத்தின் இரகசியத்தில் / மறைவில், கிருபை மற்றும் சத்தியம் எனும் போராயுதவர்க்கமொன்று விசேஷமாக வழங்கப்படுகிறது. SM289:2 தெய்வீக நோக்கம் இரகசியமாக வைக்கப்பட்டு, ஏற்றகாலத்தில் அதனை புரிந்துகொள்வதற்கான திறவுகோலை வழங்கிடுதல் எனும் கொள்கையானது, ஒரு வங்கியினுடைய நேர–பூட்டு மூலம் விளக்கப்பட முடியும் (இப்பூட்டில் முன்னரே ஒரு குறிப்பிட்ட மணிநேரத்தை உள்ளீடு செய்து பூட்டிவிடலாம்; அந்தக் குறிப்பிட்ட மணிநேரம் வரும்வரையிலும், அப்பூட்டினை யாராலும் எவ்விதத்திலாகிலும் திறக்க முடியாது). OV6:2

**அவருக்குப் பயந்தவர்களிடத்தில்** - பலியின் மூலமாக கர்த்தரோடு உடன்படிக்கை செய்துள்ளவர்கள். R4666:3, R5462:4, R5039:2; SM457:3; Q719:7; CR9:4, CR10:3, CR90:4, CR92:2 மாறாக மற்றவர்களிடத்தில் இல்லை, சாத்தானிடத்திலும் இல்லை - சந்தேகத்திற்கிடமின்றி, அவனுக்கு வார்த்தையின் பெரும்பகுதி தெளிவற்றதாகவே காணப்படுகிறது. A171; D611, D612; R4492:1, R4631:3; OV65:3; CR10:1, CR92:2; Q621:2 இப்போது புதியதும் பழையதுமான காரியங்கள் திறக்கப்படுவதற்கான ஏற்றகாலமாக இருக்கின்றது. CR92:4 பரிபூரண அன்பின் ஆவியை அவர்களில் வளரச்செய்கிறது. CR9:5 கேட்கக்கூடிய காதுகள் எல்லாரிடமும் காணப்படுவதில்லை. SM183:2 கர்த்தர் தம்முடைய இரகசிய நோக்கங்களைப் பற்றிய அறிவினைக்கொண்டு உலகத்தையோ, உலக ஞானிகளையோ கனம்பண்ணுவதில்லை. R1617:6 உலகத்தால் நம்முடைய சந்தோஷத்தைப் புரிந்துகொள்ளவும் முடியாது, தேவன் மற்றும் அவருடைய குமாரனுடனான இந்த ஐக்கியத்தின் இனிமையை அவர்களால் அறிந்துகொள்ளவும் முடியாது. R1906:5 மாபெரும் மருத்துவர் தங்களுக்குத் தேவை என்பதை உணராமல், உலகத்தார் அத்திசையில் செவிசாய்ப்பதுமில்லை, அவருடைய சத்தத்தைக் கேட்பதுமில்லை. R3915:2 இருதயம் நொறுங்காதவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று சொல்லுவது, அவர்கள் தேவனுடைய திட்டத்தை இன்னுமதிகமாக எதிர்த்து, அதற்கே உரிய இன்னுமதிகமான பொறுப்பின் கீழாக வருவார்கள் என்பதை அர்த்தப்படுத்துவது போலிருக்கும். R4599:2 "துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ (ஏற்றகாலத்தில் வெளியரங்கமாகும் காரியங்களை) உணர்ந்துகொள்ளுவார்கள்." (தானி. 12:10) R3947:1 "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ (அவிசுவாசிகளுக்கோ) அருளப்படவில்லை." (மத். 13:11) R1063:3*, R1957:6 எந்தளவிற்கு நாம் கர்த்தருடைய ஆவியை இழக்கின்றோமோ, அந்தளவிற்கு நாம் அதின் வெளிச்சத்தையும் இழக்க நேரிடும். R5100:2 ஒருதரம் பரிசுத்தமாக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவர், மீண்டும் பாவத்தின் "சேற்றிலே புரளுவதற்குத்" திரும்பினால், தேவனுடைய ஆழமான காரியங்களின் மீதான தங்களுடைய ஆர்வத்தை / நாட்டத்தை இழக்க நேரிடும். R3213:5 இது மனிதனுக்கும், மனிதனுடைய கிரியைக்கும், சபை உட்பிரிவு அமைப்புகளுக்கும், விசுவாச அறிக்கைகள் முதலானவைகளுக்கும் பயப்படுகிற வர்களைக் குறிக்காது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (சங். 111:10) ஏனெனில் அது குமாரத்துவத்திற்கு (sonship) நேராக வழிவகுக்கிறது. R2208:3 மற்ற மனுஷரைக்காட்டிலும் கர்த்தரையும், அவருடைய சித்தத்தையும், அவருடைய வழியையும் அன்புகூருகிறவர்கள். CR159:5, CR175:3 "பயம்" - பயபக்தி. R4599:2, R4631:3, R4715:1, R5100:1; SM6:1 நேர்மையும் உண்மையும் (sincerity), பிதாவின் சித்தத்தை அறிந்துகொள்வதற்கும் அதனை செய்வதற்குமான வைராக்கியத்திற்கு நேராய் நம்மை வழிநடத்திடும். R5522:2

**இருக்கிறது** – அதினால், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனம் தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தை அறிந்து, அதிகமதிகமாக உயிர்ப்பிக்கப்பட்டு, புது வலுவூட்டப்பட்டு, உலகத்திலிருந்தும் அதன் ஆவியிலிருந்தும் பிரித்தெடுக்கப்படுவார்கள். HG399:1

**தம்முடைய உடன்படிக்கை** – ஆபிரகாமின் சந்ததியாகிய கிறிஸ்துவுக்குள், "பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிரகாமுக்குச் செய்துகொடுக்கப்பட்ட உடன்படிக்கை. R2209:3; CR9:6, CR11:1 அதை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதே அவருடைய உடன்படிக்கையாக இருக்கின்றது. R1913:5, R3371:4 இந்த இரகசியத்தைக் குறித்த பார்வையை இழக்கும் எவருமே அதற்காகப் பிரயாசப்படுவதை நிறுத்திவிடுவார்கள். R4535:5 தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாக இருப்பதென்பது தேவனோடு இசைவாக இருப்பதாகும்; மேலும் அதின் முழு அளவுகோலாக, தேவனுடைய புத்திரன் என்றழைக்கப்படும் காரியம் காணப்படுகிறது. CR93:3,4 இருதயத்தில் பாத்திரவான்களாகக் காணப்பட்டவர்களுக்கு, தேவன் தம்முடைய குமாரனை வெளிப்படுத்தினார். R4715:1 அத்தகையோருக்கு வேதாகமமானது, தெய்வீகக் காரியங்களைக் கிட்டப் பார்வைக்குக் கொண்டு வரும் ஒரு தொலைநோக்கியாக (telescope) இருக்கிறது; மேலும் அது, வாழ்க்கையின் எல்லா சிறிய விஷயங்களிலும் தேவனுடைய பிரமாணத்தைப் பெரிதாக்கிக் காண்பிக்கும் ஒரு நுண்ணோக் கியாகவும் (microscope) இருந்து, ஒவ்வொரு எண்ணத்தையும் தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்த நமக்கு உதவுகின்றது. R2210:5

**அவர்களுக்குத்... தெரியப்படுத்துவார்** – தற்காலத்தில் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தப் படுவதில்லை. A171 அவர் தெரியப்படுத்தாவிட்டால், நம்மால் அதனை புரிந்துகொள்ள முடியாது. R4631:3 அதனை தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு, நாம் சரியான இருதய மனப்பான்மையோடும், சர்வவல்லவருடைய நிழலின் கீழேயும் காணப்பட வேண்டியிருக்கிறது. CR159:6, CR175:3

## 32. சங்கீதம் 27:1

(தாவீதின் சங்கீதம்)

**"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?"**

**தாவீதின் சங்கீதம்** – இந்த முழு சங்கீதமுமே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. R3248:5

**கர்த்தர் என் வெளிச்சமும்** – இருதயத்தை வழிநடத்திச்செல்கின்ற (வெளிச்சம்). R3248:2 பரியாசத்துடன் சுட்டிக்காட்டும் கைவிரலையோ, எதிர்மறையான ஏளனத்தையும் அவதூறையும் வீசிடும் உதடுகளையோ எதிர்கொள்ளும்போது (இது நமக்கு) ஓர் ஊக்கமாயிருக்கின்றது. R4857:5

**என் இரட்சிப்புமானவர்** – நமது காரியங்களை நன்மைக்கேதுவாக மேற்பார்வையிட்டு வருகிறார். R3248:2 அந்தகார வல்லமைகளுடனான போராட்டமானது எந்தளவுக்குக் கடுந்தீவிரமானதாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு விடுதலையும் மிகவும் மகிமைவாய்ந்ததாய் இருக்கும். R1915:1

**யாருக்கு அஞ்சுவேன்?** – இதுவே விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரிடத்தும் காணப்பட வேண்டிய / காணப்படும் சரியான மனநிலையாக இருக்கின்றது. R2016:4 விசுவாசத்தினால் உண்டாகி, சகிப்புத்தன்மையால் பலப்படுத்தப்பட்ட தைரியமானது, மிகவும் குழப்பமான கஷ்டங்களின் ஆழமான அந்தகாரத்தின் மத்தியில் அடக்கமான தைரியத்துடன் (யாருக்கு அஞ்சுவேன்? எனச்) சத்தமிடும். R1915:4 தேவனிடம் நேர்மையாக (loyalty) இருப்பது குறித்தும், தெய்வீக வழிகாட்டுதல் குறித்தும் நாம் உணர்ந்து வைத்திருப்பது, நம்மை அச்சமின்றி இருக்கச்செய்திடும். R4922:4

### 33. சங்கீதம் 27:5

**“தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.”**

**தீங்குநாள்** – இவ்வார்த்தை, “தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே” எனும் வசனத்தில் “தீங்கு” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. (ஏசா. 45:7) A125; R1351:2*

### 34. சங்கீதம் 27:10

**“என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.”**

**என் தகப்பனும் என் தாயும்** – என்னுடைய மிகவும் நம்பகமான மாம்சீக சிநேகிதரும். R1788:4

### 35. சங்கீதம் 27:14

**“கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.”**

**கர்த்தருக்குக் காத்திரு** – ஏதோ ஊழியக்காரன் ஒருவன் தன்னுடைய எஜமானனுக்குக் காத்திருப்பது போல கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது என்கிற அர்த்தத்தில் இது சொல்லப்படவில்லை, மாறாக நம்முடைய கர்த்தர் நாம் என்ன செய்ய பிரியமாயிருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளும் வரைக்கும் பொறுமையாக விழித்திருந்து காத்திருப்பதாகும். R5711:3, R5712:1

**உன் இருதயத்தை** – ஆத்துமா, ஜீவி, குறிப்பாக மனிதனுடைய அறிவார்ந்த பகுதி. R5712:2

**ஸ்திரப்படுத்துவார்** – அதினால் நாம் அமிழ்ந்துபோகாதிருப்போம். R5712:3

**திடமனதாயிருந்து** – கர்த்தருடைய ஊழியத்தில், தேவபிள்ளைக்கு தைரியம், மனவலிமை, விடாமுயற்சி என்பவை மிகவும் இன்றியமையாததவையாக இருக்கின்றன. R5712:2 கஷ்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவன் மீதும், அவருடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மீதுமான விசுவாசத்தால் பிறக்கும் தைரியமானது தேவைப்படுகின்றது. R5712:3

**காத்திரு** – பாதை கடினமானதாக இருப்பினும், நாம் விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். R5331:4

### 36. சங்கீதம் 29:11

**“கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.”**

**தமது ஜனத்திற்கு** – அவருடைய நம்பிக்கையும், உண்மையுமுள்ள ஊழியக்காரருக்கு. R4818:6

**பெலன்** – தைரியம் (கொடுப்பார்). கர்த்தர் நம்மை பல வழிகளில் ஊக்குவிக்கின்றார். R4817:6

**கர்த்தர் ... கொடுப்பார்** – (கொடுப்பார் என்று வாக்களிக்கப்பட்டிருக்கும்போது) உண்மையுள்ளவர்களாக உங்கள் தாலந்தைப் பயன்படுத்த உங்களுக்குப் பெலன் இல்லை என்றால், எங்கோ நீங்கள்தான் தவறியிருக்கிறீர்களே ஒழிய, தேவன் பக்கம் தவறு இருக்காது. R1282:6

**சமாதானம் அருளி** – அனைத்து சிருஷ்டிகளும் ஏகமாய்த் தவித்து, பிரசவவேதனைப்படுகிற இந்த யுகத்தில், (சமாதானம் அருளி). R4818:5

### 37. சங்கீதம் 31:20

**“மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்.”**

**நாவுகளின் சண்டை** – மனித பாரம்பரியங்களுடைய குழப்பம். R1788:2

### 38. சங்கீதம் 31:24

**“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.”**

**திருவிவிலியம் – “ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே, நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள்.”**

**ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே** (திருவி) – கர்த்தர் நம்முடைய எல்லாக் காரியங்களையும் மேற்பார்வையிடுபவர் என்பதால் நாம் அவர்பேரில் நம்பிக்கையாக இருக்க வேண்டும். R5329:3 பரமபிதாவையும், பரலோக மணவாளனையும் அறிந்துகொள்ளுவதிலும், அவர்களில் நம்பிக்கை வைப்பதிலும்தான் கிறிஸ்தவனுடைய சந்தோஷமான வாழ்க்கைக்கான இரகசியம் அடங்கியிருக்கின்றது. R2083:5

**திடமனதாயிருங்கள்** – பாவஞ்செய்யும் போக்கை எதிர்த்துப் போராடுவதற்குத் தைரியம் / திடமனம் அவசியமானதாயிருக்கின்றது. R5329:6 நாம் நம்முடைய பரமபிதாவிடம் நம்முடைய பூமிக்குரிய நலன்களை ஒப்படைத்துவிட்டு, அவருடைய மேற்பார்வையின் கீழாக அவைகளை விட்டுவிட வேண்டும். நம்முடைய தைரியத்தை முறியடிப்பதற்கு எதிராளியை அனுமதித்தோமேயானால், அவன் விரைவிலேயே நம்மை யுத்தகளத்திலிருந்து முழுவதுமாக வெளியேற்றிவிடுவான். R5329:3 கர்த்தர் மீதான விசுவாசத்தினை அடிப்படையாய்க்கொண்டிருக்கும் சரியான கொள்கைகளிலிருந்து பெறப்படுகிற பலமான தைரியம், தேவ தைரியம்; இப்பேர்ப்பட்ட தைரியமானது, உங்களைக் குறித்து கர்த்தருடைய சித்தம் என்னவாக இருந்தாலும்சரி, உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்று நமக்குக் கூறுகின்றது. R5330:1 இவ்வாறாக நாம் நமது கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோம். R5330:4

**உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்** – நம்முடைய பெலன் மற்றும் நம்முடைய சமாதானம் என இவ்விரண்டிற்குமான அடிப்படையாக நம்முடைய விசுவாசமே காணப்படுகின்றது. R4817:6

### 39. சங்கீதம் 32:8

**“நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.”**

**என் கண்ணை வைத்து** – கண் என்பது ஞானத்தைக் குறிக்கும் ஓர் அடையாளமாக இருக்கின்றது. R4858:6 வாழ்க்கையின் சகல காரியங்களிலும் (நம்மை) வழிநடத்திடுமாறு நாம் கர்த்தரையே நோக்கியிருக்க வேண்டும். R4859:1, R4858:3, R3062:1 தோல் பட்டை வார்களோ கடிவாளமோ இல்லாமல், வெறும் கண் அசைவிலேயே இயக்கப்பட்டு, எஜமானருடைய சித்தத்தைக் கவனித்திருக்கும் ஒரு குதிரையைப் போல – புறம்பாக எந்தவொரு கட்டுப்படுத்தும் உபகரணமும் பொருத்தப்படாதிருக்கும் ஒரு விலங்கைப் போல. R4273:2 தேவையான சரியான ஆலோசனையை கர்த்தர் நமக்குக் கொடுக்கும்படிக்கு அவருடைய கண் நம்மேல் கவனமாயிருக்கும் / நோக்கமாயிருக்கும். R4273:1 தொடர்ச்சியாக கசையடிகளால் மாத்திரமே வழிநடத்தப்பட்டு வருபவர்கள் ஜெயங்கொள்ளும்

வகுப்பாரைச் சேர்ந்தவர்களாய் இருக்க முடியாது. E234 கீழ்க்காணும் சங். 31:3ம் வசனத்திற்கான விளக்கங்களைப் பார்க்கவும்.

### சங்கீதம் 31:3 – என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்.

**உமது நாமத்தினிமித்தம்** – உமது ஊழியத்தினிமித்தமாகவும், அதில் எனக்கு இருக்கக்கூடிய பங்கினிமித்தமாகவும். R3062:4 தேவனுடைய மகிமையை வேண்டி, ஜெபியுங்கள். R5380:6*, R5381:1*

**எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்** – ஒவ்வொரு ஆவிக்குரிய இஸ்ரயேலரும் கர்த்தரின் தலைமைத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். R3061:6 மேலும், முதலாவதாக ஒரு காரியத்தைக் குறித்த கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள நாடாமல், இம்மைக் குரிய அல்லது ஆவிக்குரிய எந்தப் பணியையும் / முயற்சியையும் மேற்கொள்ளுவதற்கு முயன்றிட வேண்டாம். R4859:1, R3062:1

## 40. சங்கீதம் 34:7

### "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்."

**கர்த்தருடைய தூதன்** – ஏதோவொரு வல்லமையைக்கொண்டு தேவன் தம்முடைய பரிசுத்த ஜனங்களைச் சுற்றி சூழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. CR314:4 அது, தேவன் பயன்படுத்த விரும்பும், உயிருள்ள அல்லது உயிரற்ற, எந்தவொரு கருவியாகவோ வல்லமையாகவோ இருக்கலாம். R5633:3, R3798:1 தேவதூதர் "பணிவிடை ஆவிகளாக" (எபி. 1:14) இருந்து, அவருடைய சிறு மந்தையின் சார்பாக எப்போதும் பிதாவின் முகத்தைத் தரிசித்துக்கொண்டிருக்கிறார்கள். F76 பூர்வகாலங்களில், தேவன் தமது தூதர்களைக்கொண்டு தமது ஜனங்களைக் தொடர்புகொண்டார். R5634:1 இந்த வசனத்தில் தூதன் என்கிற வார்த்தை ஆவிக்குரிய ஜீவிகளைக் குறிக்கிறது. R5634:1 சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தருடைய தூதர்கள், முன்னெப்போதும் போல் இப்போதும் கர்த்தருடைய ஜனங்களோடு கூடவே இருக்கின்றார்கள். R5606:1, R5635:1; Q437:4; F76 ஒருவேளை ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு பாதுகாவல் தூதனோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தூதரோ நியமிக்கப்பட்டிருக்கலாம். R2350:4 ஆவிக்குரிய தளத்தில், இந்தத் தூதர்களை நாம் சந்தித்து பழகப்போகிறோம் என்பது நம்முடைய வருங்கால சந்தோஷத்தின் ஒரு பகுதியாக இருக்கப்போகின்றது. R4823:5 நீதி மற்றும் சத்தியத்திற்கு இசைவாக இருக்கும் நபர்கள், அதற்கேற்ப பொல்லாத ஆவிகளின் ஊடுருவலிலிருந்து தங்களைக் காக்கின்ற ஒரு பாதுகாப்பு செல்வாக்கினால் / வளையத்தினால் சூழப்பட்டுள்ளனர். R4218:3, R4069:2

**அவருக்குப் பயந்தவர்களை** – வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தவொரு விசேஷமான மேற்பார்வையும், கர்த்தருடைய "சிறியவர்களுக்கு" மாத்திரமானதாகும். R3798:1 விசேஷமாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கருத்தாகப் பார்த்துக்கொள்ளவும், அவர்களுக்கு ஊழியஞ்செய்யவும் (தேவனுடைய) பிரதிநிதிகளாகச் செயல்பட்டு வருகிறார்கள். R3441:3 சரியானதைச் செய்ய விரும்புவது மாத்திரமல்லாமல், தங்களால் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்குச் சரியானதைச் செய்பவர்களை (சூழப் பாளயமிறங்குகிறார்கள்). R3641:4

**சூழப்** – அவர்களின் விடுதலை அல்லது பாதுகாப்பிற்காக. R4477:3, R4348:4, R4769:3, R5634:5, R5781:5 எலிசாவின் வேலைக்காரனுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளது. R3441:1, R2349:2 ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கு மேலே இருக்கும் திரைச்சீலையிலும், அதின் ஒவ்வொரு பக்கத்திலும், கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தன. R158:6 *

**பாளயமிறங்கி** – தெய்வீகப் பிரதிநிதிகளின் தொடர்ச்சியான மற்றும் நிலையான பிரசன்னத்தைக் குறிக்கின்ற ஒரு பாளையம். R3441:2 அவர்களின் சமுகத்தை (பிரசன்னத்தை) நம்மால் பார்க்கமுடியாத வகையில், அவர்கள் நம் மத்தியில் காணப்படுகிறார்கள். R265:2 இருக்கிறார்கள், ஆனால் கண்ணுக்குத் தெரியாமல். A182; R5781:5 இதேபோல கர்த்தரும், தமது இரண்டாம் வருகையின்போது கண்ணுக்குத் தெரியாமல் பிரசன்னமாகியிருக்க முடியும். R2974:3

**அவர்களை விடுவிக்கிறார்** – மிகப்பெரிய அளவில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் வகையில். R5634:5 தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாக இருப்பவர்களை மாத்திரமே. R4769:3 அவர்களை அச்சுறுத்தும் அசம்பாவிதத்திலிருந்து எப்போதும் பாதுகாத்துக்கொண்டிருக்காமல், மாறாக அதனால் ஏற்படும் தீங்கான அல்லது தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பார்கள். R3641:3 கர்த்தருடைய தூதன், விடுவிக்கப்பட்ட பேதுருவுடன் உண்மையாகவே கூட இருந்தார், அதுபோல, கொலைசெய்யப்பட்ட யாக்கோபுடனும் உண்மையில் கூட இருந்தார். விடுதலை என்பது இயற்கை / மாம்சீக புலன்களால் எப்போதும் அறிந்துணரக்கூடிய ஒன்றாக இருக்காது; சில சமயங்களில் விடுவிக்காவிட்டாலும்கூட, தாங்கிக்கொள்வதற்கான பலத்தை அளிக்கவும் செய்கின்றது. R2140:5 பரி. யாக்கோபுடைய சம்பவத்தில் “தப்பித்தல்” (escape) என்பது இறுதியானதும் உறுதியானதுமாயிருந்தது; பேதுருவின் காரியத்திலோ அது தற்காலிகமானதாக இருந்தது. R3004:5 ஆனால், புதிய சிருஷ்டியின் நலனும், நன்மையுமே கருத்தில் கொள்ளப்படுகிறதே ஒழிய, மாம்சத்தின் நலன்கள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. R5606:1

## 41. சங்கீதம் 34:8

**“கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.”**

**ருசித்துப்பாருங்கள்** – தெரிந்துகொள்ளப்பட்ட சுவிசேஷ யுகச் சபைக்காக இப்போது வைக்கப் பட்டிருக்கும் விருந்தினை அல்லது ஆயிரமாண்டின் அனைத்து ஜனங்களுக்காக இருக்கப்போகிற விருந்தினை (ருசித்துப்பார்ப்பது). R1957:6 ஆனால், பலரும் செய்வதைப் போல, இதனை இத்துடன் நிறுத்திவிடாதீர்கள் (ருசித்துப்பார்த்துக்கொண்டேயிருங்கள்). F117

## 42. சங்கீதம் 34:15

**“கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.”**

**கர்த்தருடைய கண்கள்** – தேவனுடைய கண்கள் நம்மேல் இருப்பதை நாம் எவ்வாறு உணருகிறோமோ அதுபோல, உங்கள் கண்ணும் தேவனுடைய கண்ணும் எப்போதும் உங்கள் பிள்ளைகள் மீது இருப்பதை அவர்களும் உணரும்படிக்குச் செய்யுங்கள். R1097:5*

**அவருடைய செவிகள்** – அவை கைதியின் வேதனையைக் கேட்பதற்காகக் குனிந்துள்ளன. SM623:1

**அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது** – தவறான ஒரு வழியில், எவ்வளவு காலமாக நாம் கவனமில்லாதவர்களாய் நடந்திருந்தாலும்சரி (அவருடைய செவிகள் நம்முடைய கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கவே செய்கின்றன). R2147:4

## 43. சங்கீதம் 34:18

**“நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.”**

**நொறுங்குண்ட இருதயம்** - எல்லா நம்பிக்கையும் அற்றுப்போய், ஊக்கமும் நம்பிக்கையுமிழந்தவர்கள். R5862:2

**நருங்குண்ட ஆவி** - தற்கால ஜீவியத்தில் அவர்கள் பெற்றிருக்கும் கீழான / தாழ்ச்சியான நிலைமையானது, வரப்போகும் காலத்தின் மகிமைக்கும், ஊழியத்திற்கும் அவர்களைப் பொருந்தச் செய்வதற்குத் தேவையான ஒழுக்கரீதியிலான பயிற்சி மாத்திரமேயாகும். R2139:5* பொன்னான பிரமாணத்திற்கு எதிரான யாதொரு மீறுதலாவது பின்னர் வலியையும் மனவருத்தத்தையும் உண்டாக்குமேயானால், அது அம்மீறல் வேண்டுமென்றே செய்யப்படவில்லை, மாறாக ஆவியின் வாஞ்சைகளுக்கு விரோதமாக இருக்கிற மாம்சத்தினால் இடறிவிழுந்ததினிமித்தமே செய்யப்பட்டது என்பதற்கான உறுதியான ஓர் அறிகுறியாக இருந்திடும். F375

## 44. சங்கீதம் 34:19

### “நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.”

**துன்பங்கள் ... இருக்கும்** - “தீங்கையும் (தீமை) உண்டாக்குகிறவர் நானே” என்பதில் “தீங்கு / தீமை” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. (ஏசா. 45:7) A125; R1351:2* பிரச்சனை / உபத்திரவம் என்பது தயவின்மைக்கான (disfavor) ஓர் அறிகுறியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. தேவனே நமக்குத் துன்பங்கள் வருவதற்கு அனுமதிக்கிறார். R5879:4 யோபுவின் வாழ்க்கை மூலம் சித்தரிக்கப் பட்டுள்ளது. SM523:1

## 45. சங்கீதம் 37:4, 5

### வ. 4 – “கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.”

### திருவிவிலியம் – “ஆண்டவரிலேயே மகிழ்ச்சி கொள்: உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்.”

**மனமகிழ்ச்சியாயிரு** - இது அவர்பேரில் நம்பிக்கையாய் இருப்பதைத்தாண்டியும் ஒரு படி மேலானதாகும். “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.” (சங். 40:8) R1840:1 இப்படியாக கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருப்பதென்பது அவர்மேல் நேசங்களை மையப்படுத்துவதாகும். R1840:2 தொடர்ச்சியாக தெய்வீக வழிகாட்டுதலை நாடிடும் இருதயமானது தொடர்ந்து ஜெப சிந்தையிலேயே காணப்படும். வேறெந்த நிலைமையும் கிறிஸ்தவனுக்குச் சரியானதாய் / பொருத்தமானதாய் இருக்காது. R3806:1

**வேண்டுதல்களை / விருப்பங்களை** (திருவி) - அந்த வேண்டுதல்கள் / விருப்பங்கள் அவருடைய திட்டத்திற்கு இசைவாயிருக்குமேயானால் (அவைகளை உனக்கு அருள்செய்வார்). R4983:6

### வ. 5 – “உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.”

**உன் வழியை ... ஒப்புவித்து** - கர்த்தருடைய கரத்தில் நம்மை ஒப்புவிப்பது மாத்திரம் போதுமானதாயிருக்காது (நம்முடைய வழியையும் ஒப்புவிக்க வேண்டும்). R4790:1 பன்மடங்கு கவலைகளில் சிக்கி, நம்முடைய சொந்த தவறான போக்கின் விளைவால் தடைப்பண்ணப்படுவதற்கு முன்பாக (நம்முடைய வழியை அவரிடம் ஒப்புவித்துவிடுவது). R1554:2

**காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்** – அவர்களுடைய ஊக்கமான ஜெபங்கள் மிகுந்த பலனைத் தரும்.

R1840:4 வாழ்க்கையின் புயல்களுக்கு மத்தியில் கூட ஆசீர்வாதங்களும் சமாதானமும் (அருளப்படும்); இறுதியில் கிறிஸ்துவின் மூலமாக மகிமை, கனம் மற்றும் அழியாமை என்பவையும் (அருளப்படும்). R4506:4

## 46. சங்கீதம் 37:23

### "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்."

**நல்ல மனுஷனுடைய** – தேவ குமாரனுடைய மரணத்தின் வாயிலாக தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட ஒரு நீதிமான். R4628:6, R3156:1

**நடைகள்** – சரியான பாதையில் நடப்பது. R4628:6, R3155:6 "கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்." (சங். 1:6) R3155:6

**கர்த்தரால்** – தன்னுடைய தனிப்பட்ட காரியங்களை மேற்பார்வையிடுகிற (கர்த்தரால்). R3155:6

**உறுதிப்படும்** – இப்படிப்பட்டவர்களுடைய பாதையைக் கர்த்தர் நிச்சயமாக வழிநடத்திடுவார். R5711:5, R4628:6 குறிப்பாக சத்திய ஊழியத்தைப் பொறுத்தவரையில். R3157:2 சில சமயங்களில், அலைந்து திரிந்துகொண்டிருக்கிற தமது செம்மறியாடுகளைத் திரும்பக் கொண்டுவருவதற்காக, பொருளாதார / சமுதாய ஏமாற்றங்களையோ அல்லது வியாதியையோ அனுப்புவதினால் (நமது நடைகள் உறுதிப்படும்). R3157:2 தமது புத்திரர்மேல் தேவன் கொண்டிருக்கும் மேற்பார்வையானது மிகவும் குறிப்பிடத்தக்க மேற்பார்வையாய் இருக்கின்றது. R1561:2 எனவே, கிறிஸ்தவர் எந்த அனுபவத்தையும் அதிர்ஷ்டம் என்றோ துரதிர்ஷ்டம் என்றோ பார்க்கக்கூடாது. R4628:6 தேவன் தமது ஜனங்களுடைய காரியங்களில் தன்னிச்சையாக (arbitrarily) தலையிடுவதில்லை, அவர்களின் சுயாதீனத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களை வெறும் இயந்திரங்களாக நகரும்படிக்குக் கட்டாயப்படுத்துவதுமில்லை. R3156:5 சாத்தானுடைய தந்திரத்தை / சதித்திட்டத்தைத் தேவனுடைய மேற்பார்வை என்றும், அவருடைய சித்தத்தின் ஓர் அறிகுறி என்றும் நாம் தவறாகக் கருதிவிடாதபடிக்கு, நாம் நமது வாழ்க்கையின் சூழ்நிலைகளை நன்கு கூர்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். R614:2,3

**அவனுடைய வழியின்மேல்** – அவர்களும் தேவனுடைய வழியின்மேல் பிரியமாயிருக்கிறார்கள்; ஏனெனில், அது எப்போதும் முட்கள்நிறைந்ததாகவும், இடுக்கமாகவும், பாறைகள்நிறைந்ததாகவும் காணப்பட்டாலும், முடிவு மிகவும் சிறப்பானதாயிருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். R2762:6

**அவர் பிரியமாயிருக்கிறார்** – தேவனுடைய அன்பு மற்றும் ஞானத்தின்மீதுள்ள தைரியத்தின் (confidence) காரணமாக. R2762:6

## 47. சங்கீதம் 37:24

### "அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்."

**அவன் விழுந்தாலும்** – பாத வகுப்பார். R1268:2 தீர்ப்பில் / நிதானிப்பில் தவறி, தன் தவறினிமித்தம் ஏற்படும் விளைவுகளை தன்மீது வருவித்துக்கொண்டாலும். R3156:6 பந்தயசாலையில் நீங்கள் இதுவரை அறிந்ததிலேயே மிகவும் உன்னதமான (கதா)பாத்திரங்களாக இருப்பவர்கள்கூட, சில சமயங்களில் தோல்விகளைச் சந்தித்தவர்களாய் / தவறினவர்களாய் இருப்பார்கள். CR153:1 நீதியுள்ள மனிதன் (நீதிமான்) பாவத்தில் விழமாட்டான். அவன்(ள்) அதிகபட்சமாக இடற மாத்திரமே செய்வான்(ள்). R5218:3 எல்லா மணவாட்டி வகுப்பாரும் பாபிலோனுடனேகூட விழப்போவதில்லை என்றாலும்,

உண்மையில் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும் சிலர், விழுவார்கள், ஆனாலும் முற்றிலுமாக தள்ளுண்டு போவதில்லை. R177:5

**தள்ளுண்டு** – அதாவது இரண்டாம் மரணத்தை அர்த்தப்படுத்துகின்றது. CR153:1; R3157:5

**போவதில்லை** – ஆனால், ஏற்றகாலத்தில், தொடர்ச்சியான முயற்சியின் வாயிலாக, குறைந்தபட்சம் கணிசமான அளவிற்கு, அவன்(ள்) தன்னுடைய சுபாவ பலவீனங்களை மேற்கொள்ள முடியும். R628:5*

**தமது கையினால்** – அவருடைய வழியில் நடப்பதற்கு நாம் கடுமையாக பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் அவர் நம்மைக் கைவிடவே மாட்டார். R3157:5 கர்த்தர் இன்னுமே அவனு(ளு)டைய கரத்தை இறுகப் பிடித்துள்ளார். R3157:4

**கர்த்தர்... அவனைத் தாங்குகிறார்** – அப்படிப்பட்டவர்களை நீதியில் நிலைநிறுத்தி, அவனுடைய கவனக்குறைவான தவறுகளையும், பலவீனங்களையும்கூட, இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவத்தை அடையும்படிக்கு அவனைப் பொருத்துவதற்கேதுவாக செயல்பட வைத்திடுவார். R3156:6, R5218:3

## 48. சங்கீதம் 37:25

**"நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை."**

**நீதிமான் கைவிடப்பட்டதையும்** – நாம் இல்லாமல் கூட, கர்த்தருடைய பிள்ளைகளும், கர்த்தருடைய பணியும் முன்னேறிச் செல்லும் / தொடர்ந்து நடைபெறும்; ஒருவேளை நாம் உறுதுணையாக நின்று உதவிசெய்யாமல் போனால், அப்பேர்ப்பட்ட வாய்ப்பையும், ஆசீர்வாதத்தையும் நாம்தான் இழந்துபோக வேண்டியிருக்கும். R548:3,4

**அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும்** – உணவும், தண்ணீரும், அடிப்படையான உடையும் கிடைக்கும் என்கிற நம்பிக்கை (confidence) ஒவ்வொருவருக்குமே உள்ளது. அவர்கள் பயப்படுவது எதற்கென்றால், தேவன் நமக்கு உத்தரவாதம் அளிக்காத சில சொகுசுகளையும், ஆடம்பரங்களையும் இழக்க நேரிடும் என்பதேயாகும். R832:5 (இது) அவர்களின் விடுதலைக்கான வழிவகைகளை வழங்குவதை விலக்கி வைக்கவில்லை. R1963:1* கர்த்தர் அவர்களுடைய சொந்த தொழிலின் வாயிலாகவோ, நண்பர்களின் தாராள மனப்பான்மையின் வாயிலாகவோ அல்லது பொதுஜன ஏற்பாட்டின் வாயிலாகவோ (தேவையானதை) வழங்கிடலாம். R2021:5 இவ்வாறு மனமுவந்து வழங்கப்படும் உதவியை ஏற்றுக் கொள்வதென்பது பிச்சையெடுப்பது என்றாகாது. R2021:5 கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். R4101:5* (அதாவது, தங்கள் கைகளினால் நலமான வேலைசெய்து பிரயாசப்படாமல், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய கர்த்தரிடத்தில் தங்கள் குறைவைக் குறித்து மன்றாடாமல், மாறாக ஒருவரிடத்திலொருவர் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். இக்காரியத்தை நியாயப்படுத்தும் வண்ணமாக எந்தவொரு வசன ஆதாரமும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. எபே. 4:28; 2 தெச. 3:11; சங். 37:3, 25, 84:11 போன்ற வசனங்களைக் காணவும் – R4101: "GIVE US TODAY OUR DAILY BREAD."

## 49. சங்கீதம் 45:10,11

**வ. 10 – "குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு."**

**குமாரத்தியே கேள்** – கிறிஸ்துவின் குமாரத்தி அல்ல, மாறாக யாவே / யேகோவா தேவனுடைய குமாரத்தி. E49; R385:1* கிறிஸ்துவுக்கென்று நிச்சயிக்கப்பட்டுள்ள திருச்சபை. CR39:2 இதுவரையில் (இதுபோன்ற) மிக நேர்த்தியான மற்றும் அழகான சொல் நடையில் திருமண கோரிக்கை (proposal of marriage) முன்வைக்கப்பட்டுள்ளதா? R1494:6

**உன் செவியைச் சாய்த்துச்** – யாவே / யேகோவா தேவனுடைய அறிவுரைகளுக்குக் கவனங் கொடுங்கள்; வேதவாக்கியங்களை ஆராய்ந்து, அவரிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். R354:2, R458:3

**சிந்தித்துக்கொள்** – தற்கால ஜீவியம் கொஞ்சக்காலமே என்பதையும், வருங்காலத்தின் நித்திய ஜீவனுக்காக தற்கால ஜீவியத்தைப் பலிசெலுத்துவதற்கு நமக்கு வாய்ப்புள்ளது என்பதையும் (சிந்தித்துக்கொள்ளுங்கள்). HG450:3

**உன் ஜனத்தையும்** – பூமிக்குரிய சிநேகங்கள். R1386:5, R1318:2*

**உன் தகப்பன் வீட்டையும்** – மனித சுபாவம். R1386:5 உலகம் – அதின் மாயைகள், புன்னகைகள், முகக்கோணல்கள், புகழ்ச்சிகள் மற்றும் ஏளனங்கள் என்பவைகளை. R354:2, R1141:5 ஆதாமின் வீடாகிய பொதுவான உலகத்தை. R1494:6; CR39:2 மனித உறவுகள், ஆதாமினுடைய சந்ததியாரின் குறிக்கோள்கள், நம்பிக்கைகள் மற்றும் நோக்கங்கள் என்பவைகளை. C193; R5862:5

**மறந்துவிடு** – இப்போது "அவசியமானவைகளாக" இருப்பவைகளைத் தவிர, தற்காலத்தின் மற்ற காரியங்களைக் கிட்டத்தட்ட மறந்தேபோய்விடுமளவிற்கு, வருங்கால வாய்ப்புகளின்பேரில் வெகுவாய்க் கவர்ந்திழுக்கப்பட்டிருப்பதன் மூலமாக (மறந்துவிடு). R4090:4

### வ. 11 – "அப்பொழுது இராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்."

**அப்பொழுது இராஜா** – கர்த்தராகிய இயேசு. R5862:5; C193; E49

**உன் அழகில்** – உன்னுடைய குணலட்சணத்தின், இருதய நேர்மையின் (அழகில்). R5862:5, R1554:3 கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கின்றவரானபடியாலும், அதில் நீ அவருக்காக கொண்டிருக்கும் நேர்மையை (loyalty) அவர் வாசித்தறிகிறபடியாலும், நீ ஏற்கனவே அவருடைய கண்களில் அழகாக இருக்கிறாய். R1141:5 "அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி." (1 பேது. 3:4) R1820:6, R5862:6

**Greatly desire / (பெரிதும்) பிரியப்படுவார்** – அவருடைய அங்கீகாரம், அவருடைய புன்னகை, அவருடைய புகழ்ச்சி, அவருடைய முகக்கோணல் (frown) போன்ற இவைகளுக்கு மாத்திரமே மதிப்பளியுங்கள். R354:2 வானத்திலும் பூமியிலுமுள்ள சகல குடும்பமும் அவர் மூலமாய் ஆசீர்வதிக்கப்படப்போகின்றது என்றாலும், அவருடன் ஒத்துழைத்துக்கொண்டிருக்கும் அவருடைய மனைவி (வகுப்பார்) மாத்திரமே அவருடைய துணை(வி)யாகவும், நம்பிக்கைக்குரியவளாகவும், பொக்கிஷமாகவும் இருக்கப்போகிறாள். R5862:5

**அவர் உன் ஆண்டவர்** – இதின் எபிரெயு பதம் அதோன் / Adon ஆகும், இது யாவே / யேகோவா தேவனைக் குறிக்காது. E49

**அவரைப் பணிந்துகொள்** – நம்முடைய கர்த்தர், பூமியில் இருந்தபோது, மெய்யாகவே தொழுது கொள்ளப்பட்டார், மேலும் அது சரியானதும்கூட. R2337:3; E72

## 50. சங்கீதம் 46:1, 2, 3

### (அலாமோத்தில் வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட பாட்டு.)

### வ. 1 – "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்."

**பாட்டு** – இச்சங்கீதம், யாக்கோபின் இக்கட்டுக் காலத்தின்போது இஸ்ரயேலில் இருக்கப்போகிற உண்மையுள்ளவர்கள் காண்பிக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்கின்றது. R820*

**தேவன் நமக்கு அடைக்கலமும்** – இஸ்ரயேலின் நிழலான அடைக்கலப்பட்டணங்களின் நிஜம் (தேவனே). R3093:1 சபையின் அடைக்கலமும் பாதுகாப்பும் (தேவனே). A323; D158 நீதியானது பாவத்திற்காக பழிவாங்குபவராய் இருக்கின்றது, கிறிஸ்துவே அடைக்கலமும் விடுதலையாயும் இருக்கின்றார். R3093:5 இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் குமாரன் மூலமாக பிதாவிடமிருந்து வருகின்றவையாகும். R3093:5

**பெலனும்** – "கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார் / பெலனாயிருக்கிறார்." (ஏசா. 26:4) R1787:3

**ஆபத்துக்காலத்தில்** – சமுத்திரத்திலே எறியப்பட்ட ஏந்திரக்கல்லைப் போல, பாபிலோன் வீழ்ச்சியடையப் போகிற இந்த யுகத்தின் முடிவில் ஏற்படும் உபத்திரவம் எனும் மாபெரும் புயலில்/புசலில். R5058:6 இது சமுதாயத்தின் தற்போதைய கட்டுமானத்தை முற்றிலுமாக மாற்றியமைக்கப்போகின்ற ஆபத்துக் காலமாகும். R5059:1

### வ. 2 – "ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,"

**பூமி** – வானமண்டலங்களின் (சபை மண்டலங்களின்) அதிர்வானது மூடநம்பிக்கையின் கட்டுகளை உடைத்து, ஜனங்களைச் சந்தேகத்திலும் அவிசுவாசத்திலும் ஆழ்த்தும் வரையில், பூமியின்மீதான (சமுதாயத்தின்மீதான) உபத்திரவமானது அதின் தீவிரத்தை எட்டாது. R1308:4 தற்போதிருக்கும் சமுதாய அமைப்பு. A323; C229; D46

**நிலைமாறினாலும்** – கட்டுப்பாடற்று, ஒழுங்கற்றுப்போய், தூக்கியெறியப்படுவது. A323; C229; D46; CR18:3 தேவனுடைய ஊழியருடைய "நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும்" இது நடக்காது. (வெளி. 7:3) R1863:2 செய்தித்தாள்கள், வங்கிகள், அரசியல்வாதிகள் என அனைவரும் இல்லாது போகும் போது, ஒவ்வொரு மனிதனுடைய கையும் அவனுடைய அயலானுக்கு விரோதமாக இருக்கும். HG480:5 இந்த 46ம் சங்கீதமானது வெளிப்படுத்தின விசேஷத்தில் வருகிற ஏழாம் வாதையின் முழுமையான படத்தைக் கொடுப்பதாகத் தெரிகின்றது. R511:4

**மலைகள்** – இராஜ்யங்கள், ஏகாதிபத்திய (அதாவது, நாட்டின் முழு அதிகாரமும் ஒருவரிடமே இருக்கும்) அரசாங்கங்கள். A323; C229; D46, D551; SM320:3; R4990:2, R5059:1 மலைகளும் குன்றுகளும் பூமியின் மேலே உயர்ந்திருப்பதால், அவை பூமியின் அரசியல் சக்திகளைப் (civil powers) பொருத்தமாக அடையாளப்படுத்துகின்றன. R716:2* இராஜ்யங்கள் (மலைகள்) குடியரசுகளுக்கு (தீவுகள்) இடம் விட்டுகொடுக்கும் அதே வேளையில், ஏற்றகாலத்தில் தீவுகளும் அகன்றுபோகும். (வெளி. 16:20) R511:4

**நடுச்சமுத்திரத்தில்** – சட்டத்தை மீறுகிற மற்றும் சமாளிக்க முடியாதவகையிலிருக்கும் வெகுஜனக் கூட்டம். A323; C229; D46, D551, D596; R5364:1, R5863:6, R1489:4; Q842:2 கள்ள

அமைப்புகளை விழுங்கப்போகிற அராஜகம். R5478:2, R4772:3, R5059:1; SM320:3 நீலிசம், கம்யூனிசம், சோசியலிசம் மற்றும் அராஜகவாதத்தின் பேரலைகள் (லூக். 21:25) தற்கால அமைப்புகளின் அரண்களுக்கு எதிராக தடுக்கமுடியாத சக்தியுடன் வீசிக்கொண்டிருக்கின்றன. Q841:4 "பெரிய ஏந்திரக்கலொன்று சமுத்திரத்திலே எறிப்படுவதுபோல ... பாபிலோன் தள்ளுண்டு" போகும். (எரே. 51:62-64; வெளி. 18:21) R5478:3

**சாய்ந்து** - வெகுஜனங்களின் புரட்சிகர எழுச்சியின்கீழ் அரசாங்கம் திணறடிக்கப்படுவதைக் குறிக்கின்றது. R816:1, R686:2,3 மற்றவை கடுமையான வெப்பத்தால் உருகிப்போகும். (சங். 97:5) R815:6, R4573:1 அதனுள் அடித்துச் செல்லப்படுவது. A323 மாபெரும் பொங்கிவரும் கடலலையொன்றால். R5364:1, R5863:6; SM320:3

**போனாலும்** - போகும்போது. A323

### வ. 3 – "அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா.)"

**அதின் ஜலங்கள் கொந்தளித்து** - சீற்றமாகிவிடும். A323

**பொங்கி** - சண்டையிட்டுக்கொள்ளும் பிரிவுகளின் சச்சரவுடன். C229; HG401:6 தண்டனை மற்றும் சுத்திகரிப்பு சார்ந்த உபத்திரவங்களுடன். R1470:3

**அதின் பெருக்கினால்** - அச்சுறுத்தும் மற்றும் எழும்புகிற / உயருகிற சக்தி. C229

**பர்வதங்கள்** - இராஜ்யங்கள். C229; D45

**அதிர்ந்தாலும்** - பயங்கரமான புரட்சிகளால். D551 பயம் மற்றும் பாதுகாப்பின்மையினிமித்தம் நடுங்குதல். C229; R1489:4 கிறிஸ்துவின் நாமத்தைப் புனைந்துகொண்டிருந்த போதிலும், உண்மையில் அவருடைய ஜனங்களாக இல்லாத பலரை அவர் பிரித்து விடுவார் என்பதால், அவர் அசைத்து சலித்தெடுக்கின்றார். R1307:6

**நாம் பயப்படோம்** - ஏனெனில், கர்த்தரை நாம் நம்முடைய அடைக்கலமாகவும் வாசஸ்தலமாகவும் கொண்டிருக்கிறோம். CR18:3; R5059:1 ஏனெனில், மேசியாவின் பரலோக இராஜ்யம் அறிமுகப் படுத்தப்படுவதைக் காண்பதற்கு நாம் காத்துக்கொண்டும், எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கிறோம். R879:6 அதேசமயம், நம்முடைய மீட்பு சமீபமாயிருப்பதையும் அறிவோம். R1379:4 மற்றவர்கள் புலம்பி அழுகின்ற அதேசமயம் பரிசுத்தவான்களோ களிகூர்ந்து, மன அமைதியுடன் காணப் படுகிறார்கள். R5989:5 அவர்கள் சமுத்திரத்தின் நடுவில் மூழ்கும் வரை நாம் உயிரோடிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டாலும் (நாம் பயப்படோம்.) R845:4*

## 51. சங்கீதம் 55:22

### "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்."

**உன் பாரத்தை வைத்துவிடு** - "ஒவ்வொருவரும் அவரவர் சுமையைத் தாங்கிக் கொள்ளட்டும்." (கலா. 6:5 – திருவிவிலியம்) இந்தச் சங்கீதம் நம்மால் தாங்கிக்கொள்ள முடியாதபடிக்கு இருக்கும் பாரங்களைப் பற்றி கூறுகின்றது. R549:6*

## 52. சங்கீதம் 59:16

### "நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை

**மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 53. சங்கீதம் 63:3

**"ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்."**

**திருவிவிலியம் – "ஏனெனில், உமது பேரன்பு உயிரினும் மேலானது: என் இதழ்கள் உம்மைப் புகழ்கின்றன."**

**ஏனெனில்** (திருவி) – பணத்திற்காகவோ நற்பெயருக்காகவோ அல்லாமல். R2853:4

**உமது கிருபை/உமது பேரன்பு** (திருவி) – தெய்வீகத் தயவு. R2850:3, R5435:3, R5475:3 அனைத்து சிருஷ்டிகள்பேரிலும் அவரது கிருபை உள்ளது என்றாலும், விசேஷமாக, அன்பான இருதய நற்பண்புகளைக் கொண்டவர்கள்பேரில் (அவரது விசேஷித்த அன்பும் கிருபையும் உள்ளது). R5440:3 இது யுகங்கள் பற்றிய தெய்வீகத் திட்டத்தின் மூலமாக – உலகத்தோற்றத்திற்கு முன்னே திட்டமிடப்பட்ட இரட்சிப்பின் மூலமாக உணரப்பட்டது. R5441:3; CR480:4 இங்கே சங்கீதக்காரன் கிறிஸ்துவைக் குறிக்கின்றார். R5436:1, R5441:1,3 இந்தக் கிருபை நமக்கு எவ்வளவுக்கதிகமாக ஒரு யதார்த்தமாக / உண்மையாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கதிகமாக அவருடைய ஊழியத்தில் நமது ஜீவியத்தை அர்ப்பணிப்போம். R5441:1,4,5 தயவானது எதிர்கால வாய்ப்புகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் மாத்திரமல்லாமல், தற்கால ஜீவியத்துக்கும்கூட நீண்டுள்ளது. R2852:2, R5441:4 ஆனால் மனப்பூர்வமான பாவியைத் தேவன் அன்புகூருவதில்லை. R5440:3

**ஜீவனைப்பார்க்கிலும் ... நல்லது / உயிரினும் மேலானது** (திருவி) – எதிர்காலத்திற்கான தேவனுடைய ஏற்பாடுகளைக் கண்ணோக்குகையில், தற்கால ஜீவியத்தில் எஞ்சியிருக்கும் காரியங்களை அற்பமான காரியங்களாகவே எண்ணுகிறோம், அத்துடன் தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதிலும், நம்முடைய மனித ஜீவனைக் கையளிப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறோம். CR481:2; R5436:1, R2852:1 "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்." (பிலி. 3:8) R2851:6 தேவனோடுகூட நடப்பவர்கள் மற்றும் பேசுபவர்களாலேயன்றி வேறு எவராலும் இதனைச் சொல்ல முடியாது. R5441:3, R2850:3 இயேசு, தேவனுடைய கிருபை நிமித்தமாக எழுந்த நன்றியுணர்வினால், தம்முடைய ஜீவனையே கையளித்தார். அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்களைப் பொறுத்தவரையிலும் அவ்வாறே உள்ளது. CR481:2, CR489:4 நாம் இந்தப் பூமிக்குரிய வாழ்க்கை மற்றும் அதின் நன்மைகளைப்பார்க்கிலும் (கிருபையை / lovingkindness) மிகவும் உயர்வாக மதிக்கின்றோம். R2853:4 தெய்வீகத் தயவில்லாமல் வாழ்வதைக் காட்டிலும் தான் மரித்துப்போவது நலமாயிருக்கும் என்பதாக தாவீது கூறுகின்றார். இது, தீர்க்க தரிசனமாக, கிறிஸ்துவைப் பொறுத்தவரையிலும் உண்மையாக இருக்கின்றது. R5436:1, R5475:3

**என் உதடுகள்** – திருச்சபையாரின் உதடுகள். CR481:1; R5436:1, R5441:3, R2850:3

**உம்மைத் துதிக்கும் / உம்மைப் புகழ்கின்றன** (திருவி) – ஏதோ கடமை உணர்விலிருந்தோ, பண ஆசையிலிருந்தோ, உலக பதவி ஆசையிலிருந்தோ அல்லாமல், மாறாக அடக்கி வைக்கமுடியாதளவிற்குச் செய்தியானது அவ்வளவு நன்றாய் இருக்கின்றது. R2852:4 "நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்." (சங். 40:3) R2852:4 நமது தேவனுடைய மகிமையான குணாதிசயத்தையும், அன்பான இரக்கத்தையும் வெளிப்படுத்தும்வண்ணமாக. R5436:4, R5476:1, R5440:6; CR481:3 இதனால் பிரச்சனை, பணம் இழப்பு, தவறான புரிதல்கள், துன்புறுத்தல் மற்றும் வீட்டு உறவுகளில் விரிசல் போன்ற நஷ்டங்கள் ஏற்படும். R5441:2 தெய்வீகத் திட்டத்தின்

அதிசயங்களைக் கூறுவதன் மூலமாக. R5436:4, R5476:4 உலகத்திற்கு ஒரு சாட்சியாக மாத்திரமல்ல. சாட்சி கொடுப்பது நம்மீதும் நல்ல தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதாய் இருக்கின்றது. R5436:4, R5476:1

## 54. சங்கீதம் 73:24

### "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்."

**உம்முடைய ஆலோசனையின்படி** – வேதவாக்கியங்களில் உள்ள உம்முடைய ஆலோசனையின்படி. R2240:5 தொடர்ச்சியான கசையடிகளால் மாத்திரமே வழிநடத்தப்படக்கூடியவர்கள் ஜெயங்கொள்ளும் வகுப்பாரைச் சேர்ந்தவர்களாய் இருக்க முடியாது. E234 எதிர்கால ஜீவியம் குறித்து மாத்திரமல்லாமல், இந்தத் தற்கால ஜீவியத்தின் விஷயங்களையும் குறித்துமுள்ள (உம்முடைய ஆலோசனையின்படி). R2240:2 நாம் தெய்வீக மேற்பார்வைகளை நம்புகிறோம் என்றாலும், இவை தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. R2240:5 பூமிக்குரிய ஆலோசனைகளில் மிகச் சிறந்தவை கூட, தெய்வீக ஆலோசனையால் வழிநடத்தப்பட்டிருந்தால் மாத்திரமே, மதிப்புடையதாக இருக்கும். R2240:3 பரிபூரணராகவும் தம்முடைய வழியை தாமே வழிநடத்தக்கூடியவராகவும் இயேசு இருந்தபடியால், ஒரு சுபாவ மனிதனாக, அவருக்குப் பிதாவின் விசேஷித்த ஆலோசனை தேவைப் படவில்லை, ஆனால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு தனிநபராக, அவருக்கும்கூட, தம்முடைய சரீர அங்கங்களைப் போலவே, பிதாவினுடைய ஆலோசனை தேவைப்பட்டது. R4246:6*

**நீர் என்னை நடத்தி** – தேவன் தம்முடைய வார்த்தையைக்காட்டிலும் வேறு ஏதேனும் வழியில் தம்முடைய எண்ணங்களை / கருத்துகளை தம்முடைய ஜனத்தின்மீது பதியவைத்து அவர்களை வழிநடத்துவதற்குப் பிரியமாயிருக்கிறார் என எந்த வாக்கியமும் சுட்டிக்காட்டுவதில்லை. R2240:6 வழிகாட்டுதல் வேண்டும் என்று இருதயம் வாஞ்சிக்கும்போது, பரிசுத்த ஆவியின் தெளிவூட்டுகிற வல்லமையின்கீழாக, தேவ வார்த்தையின் வாயிலாக தெய்வீக வெளிச்சமானது வீசப்படும். R590:5* வாழ்க்கையின் மிக முக்கியமான பாடங்களில் ஒன்று, நம்முடைய சொந்த பற்றாக்குறையைப் பற்றின மற்றும் நம்முடைய சொந்த ஞானக்குறைவைப் பற்றின பாடமேயாகும். R2240:2 அவர்தம் செம்மறியாடுகளைப் பின்னிருந்து ஓட்டிக்கொண்டுச் செல்லுவதில்லை, மாறாக அவைகள் தம் பின்னே தொடர்ந்து வரும்படிக்கு, அவைகளுக்கு முன்னே செல்கின்றார். R2672:3 நம்முடைய அறிவிற்கு அப்பாற்பட்டதாயிருக்கிற தெய்வீக ஞானத்தை எல்லா சமயங்களிலுமே புரிந்துகொள்ள முடியும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது, இருப்பினும், பெரும்பாலான சமயங்களில், பின்னாட்களில் நாம் அதனை புரிந்துகொள்ளுவோம். R1562:2

**முடிவிலே** – நாம் ஆலோசனைக்குச் செவிசாய்த்தால். R2240:3 தற்கால ஜீவியமானது, ஓர் ஆயத்தமாக இருப்பதால், தேவனுடைய புத்திரருக்கு இது கற்றுக்கொள்ளுவதற்கும் (schooling), ஒழுங்குப்படுத்தப்படுவதற்குமான (discipline) சமயமாக இருக்கின்றது. R1561:2 "பிற்காலத்தில் ... அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." (எபி. 12:11) R1562:2

**என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்** – சுவிசேஷ யுகத்தின் ஜெயங்கொள்ளும் வகுப்பார் பரலோக மகிமைக்கும், ஆயிர வருட யுகத்தின் ஜெயங்கொள்ளும் வகுப்பார் பூமிக்குரிய மகிமைக்கும் (ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்). R2242:5 கர்த்தருடைய ஆலோசனையின் மிக நுணுக்கமான அம்சங்களை அறிந்துகொள்வதற்கு ஜாக்கிரதையாக நாடுபவர்கள் மாத்திரமே பிற்பாடு மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். R4247:2* இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தின் மகிமைக்குள்ளாக யூத யுகத்தைச் சேர்ந்தவர்கள் காணப்படுவார்கள்; பரலோக பாகத்தின் மகிமைக்குள்ளாக சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்தவர்கள் காணப்படுவார்கள். R1562:2 மனிதனாகிய கிறிஸ்து இயேசுவானவர்

மகிமையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை (புதுச்சிருஷ்டியாகிய கிறிஸ்து இயேசுவானவரே மகிமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்). R4247:1*

## 55. சங்கீதம் 73:26

**"என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்."**

**என் இருதயமும் மாண்டுபோகிறது** – உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் பலப்படுத்தப்பட்டு தூக்கி நிறுத்தப்பட்டாலன்றி, இந்தத் தீமையான காலத்தில் நீதிமான்களுக்காக வைக்கப்பட்டுள்ள பாதையில் தொடருவதற்கு மாம்சமானது மிகவும் பலவீனமாகவும், இருதயமானது மிகவும் திடனற்றதாகவும் இருக்கின்றது. R1562:5 தாம் ஒரு மனிதனாக, பரிபூரணராக இருந்தாலும், தெய்வீகக் கிருபையால் தம்முடைய இருதயமும் மாம்சமும் வலுவூட்டப்படாவிட்டால், அவை மாண்டுபோகும் என்பதை இயேசு உணர்ந்திருந்தார். R1807:2

## 56. சங்கீதம் 84:11

**"தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்."**

**தேவனாகிய கர்த்தர்** – வருங்காலத்தில் அவருடைய பரமவீட்டிற்குள்ளாக சேர்க்கப்படுவதற்காக இங்கே நாம் காத்திருக்கும்போதும்கூட (தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமாய் இருக்கிறார்). R1402:4

**சூரியனும்** – அதாவது, அவருடைய மகத்துவம் மற்றும் பரிபூரணம் பற்றி நமக்கு அறிவொளிவூட்டி, நம்மை நிரப்பி, நம்முடைய பாதையின்மீதும், நம்முடைய இருதயங்களிலும் பிரகாசிக்கின்ற சூரியன். R1906:2, R1402:4, R4219:6

**கேடகமுமானவர்** – பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களிலிருந்து நம்மைக் காப்பதற்கான (கேடகமுமானவர்). R1906:4 கிறிஸ்துவின் புண்ணியமானது, அதனை தங்களுடைய மூடுதலாகவோ கேடயமாகவோ ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இலவசமாக தரிப்பிக்கப்படுகிறது. R1402:5

**கிருபையையும் மகிமையையும் அருளுவார்** – அருளையும் மேன்மையையும் அருளுவார் (திருவி), இதில் பொறுமையை உண்டாக்கும் உபத்திரவமும் கலந்திருக்கும். R1402:5

**நன்மையை** – பிதாவினுடைய வீட்டில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நம்மைப் பொருத்தமானவர்களாக மாறச்செய்வதற்கு இது மிகவும் சாதகமானதாயும் பயனுள்ளதாயும் இருக்கின்றது. R1402:5, R5835:5 ஆம், சிட்சைகள் மற்றும் சோகமான அனுபவங்கள் கூட. R5654:2 நமக்கு நமது அப்பமும் தண்ணீரும் நிச்சயமாய்க் கிடைக்கும். (ஏசா. 33:16) R2326:3

**வழங்காதிரார்** – அவருடைய பிள்ளைகளின் சரியான வளர்ச்சிக்காக. R5296:4 இந்தத் தற்கால ஜீவியத்திலும்கூட. R2087:4 ஆனால், சில சமயங்களில், கணிசமான ஒரு காலமளவும் நாம் காத்திருக்க வேண்டுமென அவர் எதிர்பார்த்திடுவார். மற்ற சமயங்களில் வெகுவிரைவான பதில் கிடைத்திடக்கூடும். R5835:5 கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். R4101:5* (அதாவது, தங்கள் கைகளினால் நலமான வேலைசெய்து பிரயாசப்படாமல், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளா தவருமாகிய கர்த்தரிடத்தில் தங்கள் குறைவைக் குறித்து மன்றாடாமல், மாறாக ஒருவரிடத்திலொருவர் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். இக்காரியத்தை நியாயப்படுத்தும் வண்ணமாக எந்தவொரு வசன ஆதாரமும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. எபே. 4:28; 2 தெச. 3:11; சங். 37:3, 25, 84:11

போன்ற வசனங்களைக் காணவும் – R4101: “GIVE US TODAY OUR DAILY BREAD”). (அதேசமயம் மற்றவர்கள் மனமுவந்து இரக்கம் பாராட்டி ஒருவருக்கொருவர் உதவி செய்வதை ஏற்றுக்கொள்வது பிச்சை எடுப்பது என்றாகிடாது – R2021:5.)

## 57. சங்கீதம் 89:34

**“என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.”**

**என் உடன்படிக்கையை** – குறிப்பாக, ஆபிரகாம் உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை எனும் உடன்படிக்கைகள். R3109:2

**மீறாமலும்..மாற்றாமலும் இருப்பேன்** – “நான் கர்த்தர், நான் மாறாதவர்.” (மல். 3:6) R3107:3 “நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.” (எபி. 6:18 – 19) R3109:3 கர்த்தரும் தம்மைப்போலவே தம்முடைய ஜனங்களும், தங்களுடைய உடன்படிக்கைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார். R3109:5

## 58. சங்கீதம் 91:1

**“உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.”**

**உன்னதமானவரின்** – பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்கென்று முற்றிலும் பிரித்து வைக்கப் பட்டவர்களாய் (உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்). D158

**மறைவில்** – அர்ப்பணிப்பின், ஐக்கியத்தின் (மறைவில்). D66; R1788:2; HG717:3 ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தால் (மகா பரிசுத்த ஸ்தலம், D43; R3331:5) நிழலாகக் காண்பிக்கப்பட்டது. R4925:3, R5815:2, R5989:5, R159:1*, R1913:5 இந்த ஆபத்தான காலங்களில், தெய்வீகத் திட்டத்தைப் பற்றியும், அதன் காலங்கள் வேளைகள் பற்றியுமான தெளிவான அறிவானது வழங்கப் படுகின்றது. R5989:5 அவர்கள் “(மகா) பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக இயேசுவின் இரத்தத்தினால்” பிரவேசித்துள்ளனர். (தமிழில் – எபி. 10:19, 20) R4767:6

**இருக்கிறவன்** – இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலிருக்கும் சபை; கிறிஸ்து. R4925:3, R5437:3; A338 விழுந்துபோகாதிருப்பவர்களுடைய பாதுகாப்பிற்கான காரணம் யாதெனில், அவர்கள் தேவனுக்குள் வாழ்கிறார்கள் என்பதேயாகும். R862:3, R593:4, R4227:6

**Under the shadow / நிழலின் (கீழ்)** – பொல்லாங்கன் நம்மைத் தொட முடியாத இடமாகிய கர்த்தருக்கு மிக அருகில். R4311:2, R4524:6, R4736:3, R4925:6 நிழலான ஆசரிப்புக்கூடாரத்தை மூடியிருந்த மேகத்தால் அடையாளப்படுத்தப்படுகின்றது. R1913:4, R5989:5

## 59. சங்கீதம் 91:2

**“நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.”**

**நான்** – இங்கே தாவீது, திருச்சபைக்கு உரையாற்றுகிற கிறிஸ்து இயேசுவை அடையாளப்படுத்துகிறார். R3331:5, R4925:6

**நீர் என் அடைக்கலம்** – கர்த்தரைத் தங்களுடைய அடைக்கலமாகவும், கோட்டையாகவும்

வைத்திருப்பவர்களுக்கு மனித சக்திக்கு அப்பாற்பட்ட கவனிப்பும் பாதுகாப்பும் உண்டு. R4487:4

**கர்த்தரை நோக்கி ...சொல்லுவேன்** – யாவே / யேகோவா தேவனை நோக்கி...சொல்லுவேன். R3331:5

## 60. சங்கீதம் 91:3

**“அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.”**

**வேடனுடைய கண்ணிக்கும்** – சாத்தானுடைய வஞ்சனைகள். R3331:6, R4304:4, R4925:6 சாத்தான் ஒரு வேடனாகக் குறிப்பிடப்படுகிறான், எப்படிப் பூமிக்குரிய வேட்டைக்காரர்கள், பலவர்ணமான பட்சிகளை வேட்டையாடுவதற்கே அதிக வாய்ப்புள்ளதோ, அதுபோல சாத்தான் எனும் வேடனும் (வேட்டையாடுவதற்காக) கர்த்தருடைய ஜனங்களுக்குப் பின்செல்கிறான். R5693:4 தப்பறையின் வலுவான வாதங்களுக்கும், அதின் ஆழமாக அஸ்திபாரமிடப்பட்ட திட்டங்களுக்கும். R36:3

**பாழாக்கும் கொள்ளைநோய்க்கும்** – அழித்திடும் கொள்ளைநோய். பழைய சுபாவத்தின் பாவ நாட்டங்கள் மற்றும் கிறிஸ்தவ அறிவியல் (Christian Science), ஆவியுகலத் தொடர்பு கோட்பாடு (Spiritism), ‘மக்கள் அனைவருமே முடிவில் மீட்கப்படுவார்கள் என்னும் இறைமைக் கோட்பாடு’ (Universalism) போன்ற ஆவிக்குரிய கொள்ளைநோய்கள். R3331:6, R4926:1

**உன்னை ... தப்புவிப்பார்** – சர்வவல்லவருடைய பாதுகாப்பின்கீழாக தரித்திருப்பவர்கள். R4925:6

## 61. சங்கீதம் 91:4

**“அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.”**

**தமது சிறகுகளாலே** – புதிய சிருஷ்டிகளாகிய நம்மை, எதிராளியிடமிருந்து (பாதுகாக்கும்) ஒரு கேடகமாக. R5438:4 வலிமையான, பாதுகாப்பளிக்கும் செட்டைகள் / இறக்கைகள் (wings) மாத்திரமல்ல, தாய்-கோழியின் மார்பு பகுதியின் சிறகுகளும் (feathers) அவளுடைய குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. R5438:1

**அவர் ... உன்னை மூடுவார்** – யாவே / யேகோவா தேவன், நேர்மையும் உண்மையுமுள்ள தம்முடைய பிள்ளைகள், தம்முடைய அன்பின் அரவணைப்பை / கதகதப்பை உணரும் வகையில், அவர்களை தம்முடைய இருதயத்திற்கு மிகவும் நெருக்கமாகக் கூட்டிச்சேர்க்கிறார். R3331:6, R4926:1 “பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.” (யோவா. 16:27) “பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.” (லூக். 12:32) “என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்.” (யோவா. 14:21) R3331:2

**அவர் செட்டைகளின் கீழே** – இங்குள்ள சித்திரம் யாதெனில், பருந்து சுற்றி வரும்போது, தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழாக, தன் விசேஷித்த பாதுகாப்பின் கீழாக வந்துவிடுமாறு கொக்கரித்தழைக்கும் ஒரு தாய் கோழி பற்றியதாக உள்ளது; கொக்கரித்தழைப்பது “உறுதிமொழி / Vow” உடன் தொடர்புடையதாக உள்ளது. R4304:2 தாய்-கோழியின் இறக்கைகளுக்குக் கீழே இருக்கும் மென்மையான, பட்டுப் போன்ற சிறகுகள், குஞ்சுகளைக் கதகதப்பாக வைத்திருப்பதற்கும், எதிரிகளிடமிருந்து அவற்றை மறைத்து வைத்திருப்பதற்கும் உதவுகின்றன. R5438:1

**அவருடைய சத்தியம்** – யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தில் அடங்கியிருக்கிற அந்த மாபெரும் சத்திய அமைப்பு. R3332:1, R4926:1

**பரிசையும் கேடகமுமாகும்** – வாழ்க்கையின் புயல்கள் நம்மை எவ்வளவுதான் கடுமையாகத்

தாக்கினாலும்சரி, அப்பேர்ப்பட்ட ஆபத்துக்காலத்தின் மத்தியிலேயும் நிலைநிற்பதற்கு நமக்கு உதவுகின்ற தேவனுடைய சர்வாயுதவர்க்கம். C228, R3332:1, R4817:6, R707:4 தேவனுடைய வார்த்தையைப் பற்றிய தெளிவான மற்றும் இசைவான புரிதல் மாத்திரமே, இந்தக் காலக்கட்டத்தின் சக்திவாய்ந்த தாக்குதல்களை எதிர்த்து நிற்பதற்கு நமக்கு உதவிடும். R36:4

## 62. சங்கீதம் 91:5, 6

### வ. 5 – "இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,"

**இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்** – தெய்வீகச் சத்தியத்தைப் பகிர்ந்தளிக்கும் காரியத்தில், "ஒருவனும் கிரியை செய்யக்கூடாத" (யோவா. 9:4) மகா உபத்திரவ காலமாகிய இருண்ட இரவின் பயங்கரத்துக்கும்; அப்போது பயங்கரமும், கொந்தளிப்பும், உபத்திரவமும், துன்புறுத்தலும் மாபெரியதாக இருக்கும். R3332:1, R4926:2

**பகலில் பறக்கும்** – வரவிருக்கும் இருண்ட இரவோடு தற்காலத்தை ஒப்பிடுகையில், தற்காலமானது பகல் என்று அழைக்கப்படுகின்றது. R3332:1, R4926:2 அவதூறுகள் மற்றும் தவறான சித்தரிப்புகள், நடுப்பகலிலிருப்பதைப்போல, வெளியரங்கமாக இருக்கும். R2450:3

**அம்புக்கும்** – சத்தியத்தை எதிர்ப்பவர்களுடைய "கசப்பான வார்த்தைகளாகிய ... அம்புகள்" (தமிழில் – சங். 64:4). R3332:1, R4926:2, R112:3

### வ. 6 – "இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்."

**இருளில் நடமாடும்** – இரகசியமாக, மறைவான வகையில். R2450:3 இருளில் இருப்பவர்களாய், சத்தியத்தை அறியாதவர்களாய் அல்லது அதற்கு உண்மையற்றவர்களாய் இருப்பதினால் தப்பறையின் கொடிய வஞ்சனைகளுக்கு ஆளானவர்களிடையே பரவி, அப்படிப்பட்டவர்களை தன்னுடைய பலியாடுகளாக ஆக்கிக்கொள்ளுகின்ற (கொள்ளைநோய்க்கும்). R3332:1, R4926:3

**கொள்ளைநோய்க்கும்** – ஒழுக்கநெறி ரீதியிலான மற்றும் ஆவிக்குரிய ரீதியிலான இடறுதலின் கற்களாகிய தப்பறை, வேதாகம விமர்சனம், நம்பிக்கையின்மை, உண்மையற்றத்தன்மை. R3332:1; SM289:1; R5437:3, R4926:2, R844:3, R36:3 ஆவியுலகத் தொடர்பு எனும் உபதேசத்தின் (Spiritualism) நன்னெறிசார்ந்த கொள்ளைநோய். R267:1, R125:2 ஒரு கொள்ளைநோயாக, உண்மையற்றத்தன்மையானது (infidelity) பல்வேறு சூழலுக்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிய மைத்துக்கொள்கின்றது. R36:3 ஜனங்கள் மோசமான உடல் ஆரோக்கியத்தைக் கொண்டிருப் பதாலேயே கொள்ளைநோய் பரவுகின்றது. ஆவிக்குரிய கொள்ளைநோயும் அப்படித்தான். இருதயத்தி னின்றே ஜீவ ஊற்றுப் புறப்படுகின்றது. R3826:5 கொள்ளைநோய்ப் பரவிக்கொண்டிருக்கும்போது, அது ஒரு நபருக்குள் அவர் அறியாமலேயே புகுந்து விடுகின்றது – அதுபோலவே ஆவிக்குரிய கொள்ளைநோயும் உள்ளது. R5815:6

**மத்தியானத்தில் பாழாக்கும்** – தெய்வீகச் சத்தியத்தின் ஒளியானது, இன்றுள்ளது போல, உண்மையுள்ளவர்களின் மீது மகிமையுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது பலருடைய விசுவாசத்தைத் தகர்த்துப்போடுகின்ற (சங்காரமும் நடக்கின்றது). R3332:1 ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையானது அதன் உச்சநிலையில் இருப்பதாக, அதன் வெளிச்சம் மற்றும் மகிமையின் உச்சத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. R862:3

**சங்காரத்துக்கும்** – இந்தக் கொள்ளைநோய்களால் ஏற்படுகின்றது. R3332:1

## 63. சங்கீதம் 91:7

**"உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது."**

**உன் பக்கத்தில்** – உண்மையான திருச்சபையின் பக்கம். R5801:6 உண்மையில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், மறுபுறம், அவர்களைப் போன்ற நிலையிலிருக்கிறோமென்று பாவனை செய்பவர்கள்; உதாரணமாக, களைகள். R4926:3, R4304:2 அசைக்க முடியாத, உண்மையும் உத்தமுமானவர்கள் மாத்திரமே நிலைநிற்பார்கள். R3053:2, R5816:5; OV320:1

**ஆயிரம்பேரும் ... விழுந்தாலும்** – அவிசுவாசத்திற்குள்ளாக. C241; R4926:4, R5816:2 ஆனால் நித்திய வேதனைக்குள்ளாகவோ இரண்டாம் மரணத்திற்குள்ளாகவோ அல்ல. SM325:2; CR115:3 தேவன் சிலர் விழுவார்கள் என்கிறார். SM325:2 சிலுவை எப்போதுமே மாபெரிய இடறுதலின் கல்லாக இருந்து வருகின்றது. R5801:6, R1644:2, R4110:4 இப்போது திருச்சபையின்மீது ஒரு சோதனைகாலம் வந்துள்ளது. R4304:2, R4745:3, R4926:3, R5437:3 உண்மை மிகைப்படுத்திக் காண்பிக்கப் படவில்லை. R867:6, R2817:2, R684:4; HG317:5 வெறும் சமுதாய ஒழுக்கத் தத்துவத்திற்குள்ளாக (விழுந்தாலும்). R1911:5 ஏனெனில், பெயரளவிலான கிறிஸ்தவரில் ஆயிரத்தில் ஒருவன் மாத்திரமே உண்மையில் கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவனாய் இருக்கின்றான். R1307:6 இது ஓரளவுக்கு இயற்கை பேரிடராலும், அத்துடன் சமுதாய, பொருளாதார மற்றும் மதஞ்சார்ந்த கொந்தளிப்புகளாலும் ஏற்படுகின்றது. R3033:5 இது தற்போதைய இந்த யுகத்தின் முடிவிற்கான அறிகுறிகளில் ஒன்றாக இருக்கின்றது. R3199:1 நிழலான கிதியோனின் சேனையைப் போல, ஜெயம் (victory) உண்மையுள்ள சிலருக்கு மாத்திரமே கிடைக்கப்போகிறது. R1356:6

**உன் வலதுபுறத்தில்** – தேவையான குணலட்சண வளர்ச்சியைப் புறக்கணித்ததாலும், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ள தவறினதாலும் இவர்கள் விழுகின்றனர். R5678:4

**பதினாயிரம்பேரும் விழுந்தாலும்** – ஆயிரம் பேர் முழு அவநம்பிக்கைக்குள்ளாக விழலாம் என்றும், பத்தாயிரம் பேர், அதாவது திரள்கூட்டத்தார், தங்கள் வஸ்திரங்களை வெளுப்பதற்காக மகா உபத்திரவ காலத்திற்குள் விழலாம் என்றும் நாம் அனுமானிக்கலாம். R4926:4 ஒருகாலத்தில் சத்தியத்தைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டவர்கள்கூட பின்வாங்கிப் போகுமளவிற்கு, சத்தியத்தை விட்டு விலகுவது மிகப்பெரிய அளவில் காணப்படும். R3332:2 வேதாகம விமர்சனம், பரிணாமம், பிரம்மஞானம் (Theosophy), கிறித்துவ அறிவியல் மற்றும் பல்வேறு வஞ்சனைகள். R4304:2 நமது நாளின் அதிகம் கற்றறிந்த சிலரையும்கூட உள்ளடக்கியிருக்கும். SM245:2

**அது உன்னை அணுகாது** – உண்மையான திருச்சபையாருடைய நேர்மை (loyalty) மற்றும் சமரசத்திற்கு இடந்தராத உண்மைத்தன்மையின் (uncompromising faithfulness) காரணமாகவும், சத்தியம் மற்றும் நீதியின் போதுமான ஆயுதவர்க்கத்தின் காரணமாகவும், அது அவர்களை (அணுகாது). R3332:2, R4926:3, R4955:6, R4167:6; D592 விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய வல்லமையால் பராமரிக்கப்படுவார்கள். R3295:5 சபை மண்டலத்தின் வெகுஜனங்கள் விழுந்து போனாலும், சத்தியத்தின் கோட்டை காக்கப்படும். R3455:3 ஜீவபுஸ்தகத்திலிருந்து தனது நாமம் கிறுக்கிப்போடப்பட்ட (வெளி. 3:5) ஒருவர்கூட நிலைநிற்கமாட்டார்; அதேசமயம் யாருடைய நாமம் (கிறுக்கிப்போடப்படாமல்) அதில் காணப்படுகின்றதோ அவர் விழவுமாட்டார். R745:2

## 64. சங்கீதம் 91:9

**"எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்."**

**உனக்கு** – கர்த்தருக்கு மிகவும் நெருங்கி ஜீவிப்பவர்களே காக்கப்படுவார்கள். R4438:6, R4379:4

**உனக்குத் தாபரம்** – கோபாக்கினை நாளில் பாதுகாப்பான ஒரே இடம். D242; R2770:6 இவர்கள் அசைக்கப்படமாட்டார்கள், எனினும் இவர்களில் அநேகம் பேர் மிகக் கடுமையான பரீட்சைகள் மற்றும் சோதனைகள் ஊடாக கொண்டு செல்லப்படுவார்கள். R5652:4

## 65. சங்கீதம் 91:10

**"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது."**

**பொல்லாப்பு உனக்கு நேரிடாது** – புதிய சிருஷ்டி; நமது கர்த்தருக்கு, ஒரு புதிய சிருஷ்டியாக, எப்பொல்லாப்பும் நேரிடவில்லை என்பதாக நாம் காண்கிறோம். R4767:2, R4311:2 முந்தி குறிப்பிடப் பட்ட எந்த வகையான பொல்லாப்பும் (உனக்கு நேரிடாது). பொல்லாப்பாய்த் தோன்றும் வேறேதேனும் கூட, தெய்வீக மேற்பார்வையின்கீழாக, நன்மைக்கேதுவாக கிரியை செய்திடும். R3332:2, R4926:5 இது நம்முடைய ஓட்டத்தின் இறுதிவரையிலும் தெய்வீகப் பாதுகாப்பு இருப்பதைக் குறிக்கின்றது. R5817:4 திரள்கூட்டத்தினுடைய மாம்சத்தின் அழிவுக்காக, அவர்களுக்கு சில தீமைகள் நேரிடுகின்றன. R4767:6

**வாதை ... அணுகாது** –"பொல்லாங்கன் அவனைத் தொடான்." (1 யோவா. 5:18) SM289:2

## 66. சங்கீதம் 91:11

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்."**

**திருவிவிலியம் – "நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார்."**

**உன் வழிகளிலெல்லாம்** – திருச்சபையின் எல்லாக் காரியங்களிலும், இருண்ட காலம் உட்பட, எல்லாக் காலங்களிலும். R5257:5

**உன்னைக் காக்கும்படி** – நம்முடைய மேய்ப்பராகிய கர்த்தர் உண்மையான செம்மறியாடுகளைப் பார்த்துக்கொள்வார் / கவனித்துக்கொள்வார். பரமபிதா, பூமிக்குரிய தீங்கு இவர்களுக்கு ஆதாயமாக இருக்கும் எனக் கண்டு அனுமதித்தாலன்றி, வேறெதுவும் இவர்களைச் சேதப்படுத்த முடியாது. R4926:6, R3332:4, R4545:1

**உனக்காக** – உன்னைக் குறித்து. R3332:2 தலையும் சரீரமுமாகிய மேசியா வகுப்பார். R5257:2, R4545:1

**தம்முடைய தூதர்களுக்கு** – பரலோகத்தின் தூதர்களும்சரி, கர்த்தருடைய பூமிக்குரிய பிள்ளைகளும்சரி, பணிவிடைக்காரராகவும், ஊழியக்காரராகவும், பல்வேறு கருவிகளாகவும் அவரால் பயன்படுத்தப்படுகிறார்கள். R4926:6, R5257:2, R3441:4, R5815:5, R5816:6 தேவன் உண்மையுள்ள சில மேய்ப்பரையும், போதகரையும் எழுப்புவார். R4926:5, R4927:1 தெய்வீக வாக்குத்தத்தங்கள் மற்றும் பரிசுத்தவான்களின் உதவிகரமான சகாயம். R5437:6

**அவர்** (திருவி) – பரமபிதாவாகிய யாவே / யேகோவா தேவன். R5257:2

**கட்டளையிடுவார்** – தேவனுடைய அன்பான, பாதுகாத்திடும் பராமரிப்பு. R5257:2 தற்கால சத்திய செய்தி. R2647:6, R1268:2, R745:2 அறுவடை காலத்திலிருக்கும் சகல பாத அங்கத்தினரும் இடறாதபடிக்கு, அவர்களைத் தாங்குவதற்கு ஒரு "கட்டளை" அல்லது ஆலோசனை வழங்கப்படுகிறது. R3441:5 தெய்வீகப் பிரதிநிதியும் (agency), வல்லமைகளும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன,

மேலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவில் பயன்படுத்தப் படுவதற்கேதுவாக, எந்த நேரத்திலும் அவை ஆயத்தமாகவும் காணப்படுகின்றன. R4769:3

## 67. சங்கீதம் 91:12

**“உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.”**

**கல்லில்** – கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்ட, “பாத” வகுப்பார் மாத்திரமே இடறாதபடிக்குப் பாதுகாக்கப்படுவார்கள். R844:3, R2647:6 கள்ள உபதேசங்கள் எனும் இடறுதலின் கற்கள்; குறிப்பாக கிறிஸ்துவின் இரத்தத்தினால் வரும் மீட்பு மற்றும் நமது கர்த்தருடைய பிரசன்னம் என்பவை பற்றிய மாபெரும் அடிப்படை உபதேசம் தொடர்பாக எழும் தப்பறைகள் எனும் இடறுதலின் கற்கள். R4927:1, R5817:1, R3332:4, R4110:4 சில தாங்கிக்கொள்ள முடியாத மூழ்கடித்திடும் சோதனைகள் அவர்களை மேற்கொள்ளாதபடிக்கு. R1801:6

**உன் பாதம் ... இடறாதபடிக்கு** – கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கத்தினரைக் குறிக்கும் அடையாளம். R3332:4, R4927:1, R5257:6, R5437:6, R681:6, R3719:1, R3298:5, R2244:2, R1688:6, R757:6, R288:1; B157 இந்தப் “பாத” வகுப்பார் காணப்போகிற தீங்கு நாள் குறித்து விளக்கிய பிற்பாடு, அதன் மத்தியில் “பாதத்திற்கு” விசேஷித்த உதவியும் ஆதரவும் கிடைக்கும் என்றும் வாக்களிக்கப்பட்டுள்ளது. R844:3 நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்நாளில்தான், “பாத” வகுப்பார் இடறுவதற்கான விசேஷித்த அபாயத்தில் காணப்படுகின்றனர். R3668:6

**அவர்கள்** – சந்தேகத்திற்கிடமின்றி பரலோக தூதரும் இந்தப் பணியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றனர், இருப்பினும் இது மாம்சத்திலிருக்கும் சபை மூலமே செய்யப்படுகின்றது. R4927:1, R3441:4 மனித கருவிகள். R844:6, R1480:4*

**தங்கள் கைகளில்** – அவருடைய நீதியின் வலது கரத்தால், அவருடைய சத்தியத்தின் வல்லமையால் தாங்கப்படுவார்கள். R1307:6

**உன்னை... ஏந்திக்கொண்டுபோவார்கள்** – கிறிஸ்துவினுடைய சரீர அங்கத்தினரை, தனித் தனியாகவும்சரி, ஒட்டுமொத்தமாகவும்சரி (ஏந்திக்கொண்டுபோவார்கள்). R3332:4, R4927:1 சத்தியத்தைப் பற்றிய தெளிவான புரிதலடையும்படிக்கு அவர்களுக்கு உதவுவதன் மூலமும், அதற்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் (அவர்களை ஏந்திக்கொண்டுபோவார்கள்). R3332:4, R4927:1, R4545:1, R5437:6, R2567:5 பக்தி மற்றும் தெய்வீக அன்பினை மதித்துணருகிற ஓர் உயரிய தளத்திற்கு. R5105:1, R4674:5

## 68. சங்கீதம் 91:14

**“அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.”**

**திருவிவிலியம் – “அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன்: அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்.”**

**என்மீது** (திருவி) – யாவே / யேகோவா தேவன் சொல்கிறார். R3332:5

**அன்புகூர்ந்ததால்** (திருவி) – “பாத” வகுப்பாரின் ஒவ்வொரு அங்கத்தினனுடைய அன்பும் நேர்மையும் (loyalty). R4927:4

**அவனை விடுவிப்பேன்** – பரமபிதா அவரை ("பாத" வகுப்பாரை) கொள்ளைநோய் முதலிய வற்றிலிருந்து விடுவிப்பார். R3332:5, R4927:4

**அவன் அறிந்திருக்கிறபடியால்** – உணர்ந்துள்ளபடியால். R3332:5, R4927:4

**உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்** – கிறிஸ்துவுடன் உடன்-சுதந்தரராக, திவ்ய சுபாவத்தின் பங்காளியாக. R3332:5, R4927:4

## 69. சங்கீதம் 91:15

**"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்."**

**அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான்** – இந்தச் சங்கீதமானது குறிப்பாக இயேசுவுக்கும், திருச்சபைக்கும் பொருந்துகின்ற ஒன்றாகும். R5757:3,5

**ஆபத்தில்** – கர்த்தருடைய ஞானமானது ஆபத்து / உபத்திரவம் நமக்கு நேரிடுவதே நமக்குச் சிறந்ததென்று கண்டால், அவர் அதனை தடுக்காமலும், நம்மை அதிலிருந்து விடுவிக்காமலும் போகலாம். R5758:4

**நானே அவனோடிருந்து** – தனித்து நின்றாலும்சரி, மற்றவர்களுடன் சேர்ந்து நின்றாலும்சரி. R4927:5

**நானே ... அவனைத் தப்புவித்து** – நம்முடைய தேவைகளுக்கேற்ப தற்போதுகூட நாம் தப்புவிக்கப் படுகின்றோம். R5758:5 உயிர்த்தெழுதலில் இறுதி விடுதலை கிடைக்கும். R5758:5

**அவனைக் கனப்படுத்துவேன்** – உலகம் இப்போது பாராட்டும் வகையான கனமல்ல, மாறாக இறுதியில்தான் அது அந்தக் கனத்தின் மதிப்பை உணர்ந்துகொள்ளும். R5758:5

## 70. சங்கீதம் 97:11

**"நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது."**

**நீதிமானுக்காக** – சத்தியம் என்பது அர்ப்பணிக்கப்பட்ட தேவ ஜனங்களுக்கு மாத்திரமானதாகும். Q719:7; R1305:5, R652:1; HG745:6 விசுவாசம் இல்லாதவர்களும், அதன் விளைவாக நீதிமானாக்கப்படாதவர்களும், சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியுமென்று நினைப்பது ஒரு தவறாகும். இது அப்படிப்பட்டவர்களுக்கானது அல்ல. A20 "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்." (நீதி. 4:18) A20 தர்சுப்பட்டணத்தானாகிய சவுலைப் போல, இருதயத்தில் நீதிமானாய் இருப்பவருக்காக. R1444:2 நீதிமானாக்கப்பட்டவர், தேவனுடைய பார்வையில் நீதிமானாகக் கருதப்படுபவர். R945:6 உண்மை யுடனும், நன்றியுடனும் அதைப் பெற்றுக்கொண்டு பரவச்செய்பவர். R3648:2 துன்மார்க்கரில் எவரேனும் சத்தியத்தைப் பற்றிய ஓரளவு அறிவைப் பெற்றாலும்கூட, அவர்கள் போகப்போக அதனை இழந்துதான்போவார்கள் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். R2823:6 வெளிச்சம் கிடைக்கப் பெற்றும் அதனை பயன்படுத்தாமல் இருப்பவர்கள், அதைத் தக்கவைத்துக் கொள்ளும் பாக்கியம் இல்லாதுபோகிறார்கள். R946:2 எந்த அளவிற்கு மனிதர்கள் நீதியின் கொள்கைகளைக் கடைப் பிடிக்கிறார்களோ, அதற்கேற்ப அவர்கள் சத்தியத்தையும், இணையான ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். R945:3 கால ஓட்டத்தில் பின்வரப்போகிற நீதிமான்களுக்காக, தீர்க்கதரிசிகள் மூலமாக, விதைக்கப்பட்டது. R946:1 பல நூற்றாண்டுகளுக்கு முன்பு விதைக்கப்பட்டது, ஆனால்

இப்போது அது யாருக்காக விதைக்கப்பட்டதோ அவர்களுக்காக மிகவும் மகிமையாக வெளிப்படுத்தப் பட்டு வருகிறது. R947:4

**வெளிச்சமும்** – சத்தியம். A20

**மகிழ்ச்சியும்** – இது சத்தியத்தை உணர்ந்துகொள்ளும்போது கிடைக்கின்ற மகிழ்ச்சியாகும். R3648:2

## 71. சங்கீதம் 103:13, 14

### வ. 13 – "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்."

**தன் பிள்ளைகளுக்கு** – தேவனுடன் இசைவிற்குள்ளாக வந்து, அவருடைய பிள்ளையாக மாற வேண்டியதே முதல் படியாக இருக்கின்றது. SM682:T சிறுபிள்ளை போன்ற விசுவாசமும், தேவனுக்குக் கீழ்ப்படிதலும் உள்ளவர்களை அவர் தம்முடைய "சிறியர்" ("little ones") என்று அழைக்கின்றார். R657:1*

**தகப்பன் ... இரங்குகிறதுபோல** – "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." (2 கொரி. 6:17 – 18) R5739:5 ஒரு குட்டிக் கதையின் மூலமாக இது சித்தரிக்கப்படுகிறது: அதில் ஒரு தகப்பன் தன் சாகக்கிடக்கும் மகளிடம், "உன் தகப்பனாகிய என்னைப் போல, தேவன் உன்னைக் கவனித்துக்கொள்ளுகிறார் எனும்போது..." என்கிறார். R3808:1

**தமக்குப் பயந்தவர்களுக்கு** – அவருக்குப் பயபக்தியாய் இருப்பவர்களுக்கு. R2083:5 பூரண அன்பு அடிமைத்தனமான பயத்தைப் புறம்பே தள்ளுமே ஒழிய, பயபக்தியைப் புறம்பே தள்ளாது. R2289:4 – 6, R2986:6

**கர்த்தர்... இரங்குகிறார்** – பரிவிரக்கங்காட்டுகிறார். R1585:4 பிள்ளைகளைப் போல, அவரில் முழு நம்பிக்கை வைக்கவும், நம்மைப் பற்றின (அந்தரங்கமான – வெளியரங்கமான) அனைத்துக் காரியங்களையும் அல்லது நமக்குக் கவலையளிக்கும் அனைத்துக் காரியங்களையும் குறித்து அவரிடம் மனம்விட்டு பேசும்படிக்கும் அவர் நம்மை அழைக்கின்றார். R3161:4

### வ. 14 – "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்."

**நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்** – நாம் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், சரீரரீதியாகவும் விழுந்துபோனவர்கள் என்பதை அவர் அறிவார். R5101:3, R5585:6 அவர் நம்மேல் மனதுருக்கம் கொண்டவர். கிறிஸ்துவின் சாற்றப்பட்ட நீதியைக்கொண்டு நம்மை அவர் மூடியுள்ளபடியால், நாம் பலவீனமாகவும் முடமாகவும் இருந்தாலும் அது நம்மை அவருடைய அன்பிலிருந்தும், வல்லமையிலிருந்தும் பிரித்திடாது. R4818:1, R5803:2; Q655:T நம்முடைய சோதனைகள் நமக்கு மிகவும் கடுமையானதாக இருக்கக்கூடாது என்பதற்காக, சிறிது நேரம் நெருப்பிலிருந்து நம்மை வெளியே எடுத்துப்போடுவதற்குக் கர்த்தர் அனுமதிக்கின்றார். R5778:6 நாம் எப்போதுமே நமக்கு எதிராக போராடிக்கொண்டிருப்போம், அதாவது, அபூரண சரீரத்துக்கு விரோதமான பரிபூரண சித்தத்தின் போராட்டம் தொடரும் என்பது அவருடைய நோக்கம் இல்லை; மாறாக, அவர் நமது புதிய சிந்தைக்கு ஏற்றமாதிரியான பரிபூரண உயிர்த்தெழுதலுக்குரிய சரீரங்களை நமக்காக ஏற்பாடுபண்ணியுள்ளார். R4897:6 ஓட்டப்பந்தயத்தில் நன்றாக ஓடி, குணலட்சணத்தையும் நன்றாக வளர்த்திக்கொள்வதற்கான காலத்தைக் கிருபையாக தேவன் தந்துகொண்டிருக்கிறார். F372 இப்படியாக, சோதனை வேளையில் புத்துணர்ச்சிக்கான சிறிது இடைவேளையையும் நாம் பெற்றிருக்கத்தக்கதாக அவர் ஏற்பாடு பண்ணியுள்ளார். R5779:1

**நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்** – அதாவது, நாம் செய்ய விரும்புவதை நம்மால் செய்ய முடியாது என்பதை (அவர் நினைவுகூருகிறார்). R5437:4 வாழ்க்கையின் சிறிய விஷயங்களிலும் நாம் அவர்பேரில் நம்பிக்கை வைக்கும்படிக்கு தேவன் அழைக்கிறார். R3161:4 மேலும் அவர் தமது அன்புக்குரிய புத்திரர் மீது மனதுருக்கம் கொண்டவராய், மிகவும் பரிவோடும் இரக்கத்தோடும் காணப்படுகிறார். R4818:1 நமக்கான பரீட்சையானது மாம்சத்தின்படி நாம் பரிபூரணமாக இருக்கிறோமா என்பதைப் பார்ப்பதற்காக வைக்கப்படவில்லை. R5115:1

## 72. சங்கீதம் 103:17, 18

### வ. 17 – "கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது."

**அவருக்குப் பயந்தவர்கள்மேலும்** – தேவன் மீதான பயபக்தி குறைந்து போனதே ஏவாள், ஆதாம், சாத்தான் ஆகியோரின் வீழ்ச்சிக்கான காரணமாகவும், லோத்து, இஸ்மயேல் மற்றும் ஏசா என்பவர்களுக்கு ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கான காரணமாகவும் இருந்தது. (அதேசமயம்) கர்த்தர் பேரிலான பயபக்தியே நோவா, ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு போன்றோருக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தது. R2872:3

### வ. 18 – "அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 73. சங்கீதம் 107:7

### "தாபரிக்கும் ஊருக்குப்போய்ச்சேர, அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார்."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 74. சங்கீதம் 107:29

### "கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது."

### திருவிவிலியம் – "புயல்காற்றை அவர் பூந்தென்றலாக மாற்றினார்: கடல் அலைகளும் ஓய்ந்துவிட்டன."

**கொந்தளிப்பை** – மனுக்குலத்தார் சமுதாயக் கடலில் பலமான சுழற்காற்றொன்றை எதிர்கொண்டு வருகிறார்கள்; வாய்ப்பு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சுயநலமானது எப்போதுமே ஒரு புயலைக் கிளப்பிக்கொண்டிருக்கிறது. மனுக்குலமானது நமது மாபெரும் இரட்சகரைக் குறித்து மதித்துணரக் கற்றுக்கொள்ளும்படிக்கு தேவன் இதனையெல்லாம் அனுமதிக்கிறார். R5695:6,3, R5696:1 எதிராளியானவன் சில சமயங்களில், நமக்கு விரோதமாக சோதனை (அ) எதிர்ப்பு (அ) துன்புறுத்தலின் சுழற்காற்றைத் திடீரென்று கொண்டு வரக்கூடியவனாய் இருக்கிறான். R3324:6 புயல்கள் உலகத்திலிருந்து வருவது போல் தோன்றலாம், ஆனால் உண்மையில் உலகத்திற்கு அப்பால் எதிராளியாகிய பிசாசே காணப்படுகிறான். R3325:4, R5239:2 இந்தப் புயல்கள் நமக்குள்ளாக காணப்படக்கூடும் – கோபம், கட்டுப்பாடற்ற உணர்ச்சி அல்லது வெறுப்பு எனும் புயல்கள் போன்றவை. R5239:4 புயல்கள், சோதனைகள் மற்றும் சிரமங்கள் இல்லாதவர்கள் தேவனுடைய பிள்ளைகள் தானா என்பதற்கான ஆதாரம் இல்லாது போகிறார்கள். (எபி. 12:7 – 8) R5239:2 பாவமும் மரணமும் நிறைந்த இந்த முழு 6000 வருஷ காலப்பகுதியுமே, அவ்வப்போது சிறிது மந்தநிலைகளுடன்கூடிய ஒரு தொடர்ச்சியான புயலாக இருந்துவருகின்றது. R5239:5 இந்த உபத்திரவமும், அதனை தொடர்ந்து

வரப்போகின்ற மகிமையும்தான், சகல பரிசுத்த தீர்க்கதரிசிகளும் உரைத்தவைகளுடைய கருப் பொருளாக இருக்கின்றன. R5696:3 வாழ்க்கையின் கஷ்டங்கள் திருச்சபைக்கு மதிப்புமிக்கவையாக இருக்கின்றன. R5695:6

**அமர்த்துகிறார்** - வாழ்க்கையில் புயல்கள் தொடர்ந்து வீசிக்கொண்டிருக்கலாம், ஆனால் கர்த்தரோ நம்மிடம் சமாதானத்தையே உரைக்கின்றார். R5696:1 சரியான நேரத்தில், கிறிஸ்து சகல புயல்களையும் அமரும்படிக்குக் கட்டளையிடுவார். R5695:3 கடலில் ஏற்படும் புயலின்போது, கப்பல் பிரயாணி தனது சிறுமையையும், அந்தப் புயலை எந்த மனித கரத்தாலும் அமர்த்த முடியாது என்பதையும் உணருகிறார். ஆனால் நமது பரமபிதாவோ உபத்திரவத்தின் புயல்களை அமர்த்த வல்லவராய் இருக்கிறார். R5239:1 வாழ்க்கையின் சீற்றமான புயல்கள் மற்றும் இதமான சூரிய வெளிச்சம் என்பவைகளின் வாயிலாக, கர்த்தர் நம்மை, விரும்பிய புகலிடத்திற்குக் / துறைமுகத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறார். SM745:1 பொல்லாங்கனிடமிருந்து ஓராயிரம் வருஷமளவும் மனுக் குலத்திற்கு ஒரு மாபெரும் ஓய்வு இருக்கப்போகிறது. R3325:4 இயேசு கடலை அமர்த்திய அற்புதம் இதைச் சித்தரிக்கிறது. R3324:1

## 75. சங்கீதம் 116:15

### "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது."

**கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்**- "நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்." (சங். 82:7) C239 அவர்களுக்கு ஏற்படும் எதுவுமே தற்செயலானதல்ல. F646 அவர்களின் விஷயத்தில், "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனுடைய" (எபி. 2:14) அதிகாரமானது கொஞ்ச காலத்திற்கு மாத்திரமே இருக்கும். R2180:1 கர்த்தருடைய வாழ்வில் நடந்தது போலவே, மரணபரியந்தம் அநுதினமும் மரிப்பது (1 கொரி. 15:3). R3282:5 அர்ப்பணிப்பு – அநுதினம் மரிப்பது – இறுதியாக, உண்மையான மரணம் - இவை அனைத்துமே பிதாவுக்கு அருமையானதாய் இருக்கின்றன. Q221:2 அப்படிப்பட்டவர்கள், அவருடைய வருகையின்போது, அவருடைய சாயலில் எழுப்பப்படுகிறார்கள். R1210:3* யூத யுகத்தைச் சேர்ந்தவர்கள், இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தின் மகிமைக்குள்ளும்; சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்தவர்கள், அதின் பரத்திற்குரிய பாகத்தின் மகிமைக்குள்ளும் பிரவேசிப்பார்கள். R1562:2, R2354:6 உறுதிமொழி (vow) சுயத்திற்கும், உலகத்திற்கும், பாவத்திற்கும் மரித்துள்ளதை அடையாளப்படுத்துகிறது. R4266:5

**அவர் பார்வைக்கு** - "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." (யோவான் 16:27) R2355:4

**அருமையானது** - அது எவ்வளவு காலத்திற்கு முன்பு நடந்திருந்தாலும் பரவாயில்லை. C233 அவர்களுடைய மரணத்தின் விஷயத்தில் அவர் விசேஷித்த கவனம் செலுத்துவதைச் சுட்டிக் காட்டுகின்றது. R4651:3

## 76. சங்கீதம் 119:105

### "(நூன்.) உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."

**என் கால்களுக்கு** - பாதையின் ஒவ்வொரு அடிக்கு மாத்திரம் வெளிச்சம் கொடுக்கும் வகையில், தனது பாதரட்சையின் முன்பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் விளக்கோடு பயணிக்கும் ஒரு பிரயாணியைச் சித்தரிக்கின்றது. SM242:1; R5055:2 வெகு தொலைவிற்கு வீசும் சந்திரனைப் போன்ற ஓர் ஒளி அல்ல, மாறாக, அதற்காக விழித்திருந்து கவனித்திருப்பவர்களின் காலடியைச் சுற்றி மாத்திரம் ஒளிரும் ஒரு சிறு

ஒளியாகும். விழித்திராமல் நித்திரைபண்ணுகிறவர்களுடைய வெளிச்சம் அணைந்து போகும். R5256:6

**உம்முடைய வசனம் ... தீபமும்** – அவருடைய மேற்பார்வையும், வார்த்தையும். R4663:4 ஒரு தீர்க்கதரிசன தீபம். D617 பொழுது விடியும் வரைக்கும் நாம் இருண்ட காலத்தில் காணப்படுவதால், இந்தச் சமயத்தில் வெளிச்சம் தரும் விளக்காகிய வேதாகமம் நமக்குத் இன்றியமையாததாய் இருக்கிறது. Q43:2; CR251:4 உலகம் இருக்கும் காலந்துவக்கி வேதாகமம் தேவனுடைய ஜனங்களுக்கு தீபமாக அல்லது ஒளியாக இருந்து வருகிறது. CR267:3 இந்த யுகத்தில் வார்த்தையே விளக்காக இருக்கிறது, திருச்சபை விளக்குத்தண்டாக இருக்கிறது, அடுத்த யுகத்திலோ நாம் நமது பிதாவின் இராஜ்யத்தில் சூரியனாக பிரகாசித்துக்கொண்டிருப்போம். (மத். 13:43) R243:6*, R244:1* ஆயிரமாண்டு யுகத்தில் உலகம் இன்னும் சிறப்பானதொன்றைப் பெற்றிருக்கும், தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறின என்பதை அவர்கள் காணும்போது வேதாகமத்திலிருந்து ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள். Q43:2 நெருக்கமான பாதையில் செல்லும் அனைவருமே விளக்கைப் பயன்படுத்தி, மிகுந்த கவனத்தோடு நடக்க வேண்டும். CR340:4 நாம் எந்தளவிற்கு ஆவியின் சுடருக்குச் சத்தியத்தை ஊற்றுகிறோமோ, அந்தளவிற்கு கர்த்தருடைய ஆவியை நமக்குள் பெற்றவர்களாய், நாம் உலகத்தினில் எரிந்து பிரகாசித்துக்கொண்டிருக்கும் விளக்குகளாக இருப்போம். R4419:4 வேதவாக்கியங்களை ஆராய்வதன் மூலமாக விளக்குகள் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன / ஆயத்தப் படுத்தப்படுகின்றன (trimmed). C92 விசுவாசிகள் கூட ஓரளவு மாத்திரமே பார்க்கிறார்கள், ஆதலால் சபைக்கென்று மாத்திரம் தேவனால் வைக்கப்பட்டுள்ள ‘அதிகரித்துக் கொண்டே செல்லும் வெளிச்சத்தை’ அவர்கள் வாஞ்சிக்க வேண்டும். HG745:6 புறஜாதிகள் காரிருளில் உள்ளனர். நாகரீக உலகமும் இருளில் உள்ளது, இருப்பினும் புறமதத்தைப் போல காரிருளில் இல்லை. HG179:6 இந்த வெளிச்சம் இல்லாதவர்கள் இருளில் இடறுகிறார்கள். R3686:3, R4988:1

**என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** – காலத்தின் அடையாளங்களை விளக்குகின்றது. R2973:3 இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களுக்கு மாத்திரமே. இது எதிர்காலத்தைப் பார்க்கத்தக்கதாக பிரகாசிக்காது, மாறாக முன்னோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடிக்கு தேவைப்படுமளவிற்கு மாத்திரம் பிரகாசித்திடும். A20; OV203:1; R3468:6 “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.” (நீதி. 4:18) A20 வெளிச்சமானது “இடறுதலின் கன்மலையின்” மீது இடறாதபடிக்குத் தடுக்கிறது. (ஏசா. 8:14) R176:5 எவ்வளவு ஜெபம்பண்ணினாலும்சரி, அது கர்த்தருடைய வார்த்தையைத் தியானிப்பதைப் புறக்கணித் திடுவதை ஈடுசெய்திடாது. R5709:5 நியாயப்பிரமாணம் ஒரு வெளிச்சமாக இருந்தது, ஆனால் இறுதியில் உண்மையான வெளிச்சமாகிய சுவிசேஷத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது. R2439:1, R2504:4 மகிமையான காலையைப் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடையாளப்பூர்வமாக “ஒளி / வெளிச்சம்” என்றழைக்கப்படுகின்றன, மேலும் இவை வேதாகமத்திலேயே காணப்படுகின்றன. R5038:2 ஆனால் இந்நாட்களில் தோன்றுகிற “புதிய வெளிச்சங்கள்” குறித்தும், பலர் தங்களை விசேஷித்த போதகர்களாகக் காட்டிக்கொள்வதைக் குறித்தும் எச்சரிக்கையாக இருப்போமாக. R2532:4

## 77. சங்கீதம் 119:165

### “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.”

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு** – தேவனுக்கென்று ஒரு மாபெரிய நோக்கம் இருக்கிறது என்கிற உண்மையைப் பாராட்டவும்; தேவனுடைய சித்தம் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதில் பிரியப்படவும்; அவருடைய நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமையின் மீது முழு நம்பிக்கை

கொள்ளவும் செய்கிறவர்களுக்கு. R4898:1; Q528:5 தேவனுடைய வேதம் / பிரமாணம் என்பது தேவனுடைய சித்தத்தைக் குறிக்கின்றது. R4898:1

**மிகுந்த சமாதானமுண்டு** – "சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்." (1 கொரி. 7:15) R2946:3 தங்களுடைய காரியங்கள் அனைத்தும் தெய்வீக மேற்பார்வையின்கீழாக உள்ளன என்கிற அறிவு. R5933:1

**இடறலில்லை** – சரியான வகையில், தேவனுடைய வேதத்திற்கு இசைவாய்க் காணப்படாதவர்கள் இடறலடைவார்கள். R5933:1; Q528:5

## 78. சங்கீதம் 121:2

### "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்"

**எனக்கு ஒத்தாசை** – கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்னெப்போதைக்காட்டிலும் தற்போது வெகு அதிகமான உதவி தேவைப்படுகின்றது. இருப்பினும், தங்களுடைய தேவையை உணராமல் இருப்பதே சிலரிடம் காணப்படும் பிரச்சினையாக உள்ளது. R4311:1

**கர்த்தரிடத்திலிருந்து ... வரும்** – நமது சொந்த பலத்தையோ ஞானத்தையோ நமது சக பங்காளிகளின் உதவியையோ சார்ந்திராமல்; மாறாக உதவி எங்கிருந்து வந்தாலும் அதை அசட்டைபண்ணிடாமல், அது கர்த்தரிடமிருந்தே வருகிறது என்கிற நம்பிக்கையில் அதனை ஏற்றுக்கொள்வதாகும். R4311:2

## 79. சங்கீதம் 121:3

### "உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 80. சங்கீதம் 121:7

### "கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 81. சங்கீதம் 121:8

### "கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்."

**உன் போக்கையும்... காப்பார்** – விசேஷமாக, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறிக்கின்றது. R1682:4

## 82. சங்கீதம் 125:1

### "கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்."

**சீயோன் பர்வதத்தைப்போல்** – தேவனுடைய இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகம். A295; R5574:4

## 83. சங்கீதம் 125:2

### "பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்."

**எருசலேமை** – இதன் காரணமாக, எதிரிகளால் வெற்றிகரமாக தாக்குவதற்குக் கடினமான நகரமாக இந்நகரம் இருந்திருக்க வேண்டும்; கர்த்தருடைய ஜனங்களுக்கிருக்கும் பாதுகாப்பும் அப்படியாகத்தான் இருக்கின்றது. R4623:3

**சுற்றிலும் இருக்கும்** – ஒவ்வொரு பாதகமான தாக்குதலின்போதும் ஒரு கோட்டையாகவும், பாதுகாப்பாகவும் இருந்தன. R4623:3 நாமோ தேவ தூதரால் சூழப்பட்டுள்ளோம். (சங். 34:7) R158:6*

## 84. சங்கீதம் 145:18, 19

### வ. 18 – "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### வ. 19 – "அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்."

**தமக்குப் பயந்தவர்கள்** – பூரண அன்பு அடிமைத்தனமான பயத்தைப் புறம்பே தள்ளும், அதேசமயம் பயபக்தியை அதிகரிக்கச் செய்திடும். R2986:6, R2289:5

## 85. சங்கீதம் 145:20

### "கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்."

**தம்மில் அன்பு கூருகிற யாவரையும்** – சுவிசேஷயுகக் காலத்தில், சபைக்கு தெய்வீக ஆசீர்வாதங்கள் அருளப்பட்டு வருகின்றன. R3658:5

**கர்த்தர்... காப்பாற்றி** – தீமைகளுக்கு இசைவாய் இல்லாதவர்களுக்கு, அத்தீமைகளிலிருந்தே ஓர் ஆசீர்வாதத்தை, தேவன் இறுதியில், கொண்டுவருவார்; ஆனால் தீமைகளையும், துன்மார்க்கரையும் அவர் அழித்திடுவார். R3145:4* நித்திய நித்தியத்திற்கும். OV439:3*

**துன்மார்க்கர் யாவரையும்** – சாத்தானையும், வேண்டுமென்றே தேவனை எதிர்க்கும் அனைவரையும். E392; R4811:6, R5839:4, R769:4 நீதியின் ஆளுகையை மறுப்பவர்கள் அனைவரும் "துன்மார்க்கர்" என்று எண்ணப்படுவார்கள் எனும் மாபெரும் பாடத்தினைச் சித்தரிப்பதற்காக, சோதோமியரையும் ஜலப்பிரலயத்திற்கு முந்தி வாழ்ந்தவர்களையும் தேவன் வைத்தார். R5179:1, R5167:6; SM502:2; CR113:4 அறிவோடு செயல்படும் துன்மார்க்கர். R5839:1 அறியாமையில் இருப்பவர்களை (ignorant) அல்ல. R3083:2 மனப்பூர்வமான துன்மார்க்கரையே ஒழிய, அறியாமையில் இருப்பவர்கள், தவறாக வழிநடத்தப்பட்டவர்கள், குருடாக்கப்பட்டவர்கள் அல்லது வஞ்சிக்கப்பட்டவர்கள் போன்றவர்களை அல்ல. HG728:5 அவர்கள் இப்போது சோதனையின்கீழாக இருக்கும் வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது மேசியாவினுடைய ஆளுகையின்போது சோதனையின்கீழாக இருக்கப்போகின்ற வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கலாம். R5408:2 "துன்மார்க்கர்" என்று தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்பதாக, அனைவரும் விழித்தெழுப்பப்பட்டு, முழு அறிவிற்குள்ளாகக் கொண்டு வரப்படுவார்கள். ஆனால் துன்மார்க்கர் ஒருபோதும் ஜீவனைக் கண்டடையமாட்டார்கள். R1106:6 தேவன் தாம் ஏற்றுக்கொள்ளாத நிலைமைகளை அனுமதித்தாலும், இறுதியில் அவைகளை அழித்திடுவார். R5209:6

**அழிப்பார்** – வேதனைப்படுத்துவார் (torment) என்று சொல்லப்படவில்லை. F332; SM520:2, SM153:2; CR498:4; R5238:3; OV439:3*; SM589:3 "துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள்." (சங். 37:20)

R2607:3 “நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.” (2 தெச. 1:9) E392 இறுதியில், முழு வாய்ப்பு கொடுக்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு கள்ள போதகரும், ஒவ்வொரு மனப்பூர்வமான பாவியும் அழிக்கப்படுவார்கள். R4740:5, R5209:6, R5340:2, R5694:2; SM87:1 வேதனை என்பது அநீதியானது மற்றும் இரக்கமற்றது, ஆனால் புதிய உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்காதவர்களிடமிருந்து ஜீவனை எடுத்துவிடுவது என்பது நியாயமானதாயும், நீதியானதாயும், இரக்கமானதாயும் இருக்கிறது. R3083:5 தேவனால் ஒரு மனித ஆத்துமாவை உருவாக்கவும் முடியும், அதனை அழிக்கவும் முடியும். OV34:1 நமக்கு ஜீவனைத் தந்தவர், அதை நம்மிடமிருந்து எடுத்துக்கொள்வதற்கும் வல்லவராயிருக்கிறார். R363:1 தேவனுடைய தயவையும் அவருடைய நீதியான, நியாயமான, அன்பான நிபந்தனைகளையும் மறுப்பவர்களுக்கு இது ஒரு நீதியான, நியாயமான தண்டனையாகும். Q219:T பாவமோ பாவிகளோ ஆயிர வருட யுகத்தைத் தாண்டி செல்ல முடியாது. R765:4 அதைத் தாண்டி செல்லாதவர்கள் காலவரையின்றி நித்தியத்துக்கும் வாழ ஏன் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தவொரு நியாயமான காரணமும் காணப்படுவதில்லை. R5167:5 அவர் அவர்களைப் போஷிக்கவும் மாட்டார், என்றென்றைக்குமாக தொடர்ந்து ஜீவிக்க அவர்களை அனுமதிக்கவும் மாட்டார். R1176:1 ஆனால் “கொஞ்சக்காலம்” வரை மரணதண்டனை தாமதமாகும் என்கிற காரியமானது, எவ்வாறு ஏதேனில் ஏவாள் மரணதண்டனை செயல்படுத்தப்படாது என்று ஏமாற்றப்பட்டாரோ, அதுபோலவே நினைக்கச்செய்யும்படிக்குச் சிலரை வஞ்சிக்கும். R1234:5 நீதிமான்களைப்பார்க்கிலும் இப்படிப்பட்டவர்கள் செழித்து வளருகிற தற்கால ஜீவியத்தின்போதல்ல. R1383:5 நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, தேவனுடைய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளாது போகிறவர்கள், ஒருக்காலும் ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது. R2398:6 தேவன் முடிவில், பாவம் மற்றும் பாவிகளின் வாடையில்லாத, ஒரு தூய்மையான பிரபஞ்சத்தைப் பெற்றிருப்பார். R2607:3 எப்படிக் கொடிய மிருகங்களை அழிப்பதே சரியானதோ, அதுபோல முடிவில் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடிய கொடிய மிருகங்களைப் போல் இருப்பவர்களைத் தேவன் அழிப்பதும் சரியானதாயிருக்கும். Q225:T மர்மோன் பிரிவுகளின் (Mormonism) போதனைகளுக்கு முரணானதாய் இருக்கின்றது. HG731:4 ஆனால் ஆதாமின் மீறுதலினிமித்தமாக யாரும் இரண்டாம் மரணத்தில் மரிக்க மாட்டார்கள். SM589:3 “…ஆத்துமாவையும் சரீரத்தையும் … அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.” (மத். 10:28) CR498:4 கட்டாயப்படுத்தப்பட்ட கீழ்ப்படிதல் (forced obedience) இருக்காது. ஆனால், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கான முழு வாய்ப்பினைப் பெற்றுக்கொண்ட பிறகும்கூட, மனப்பூர்வமாக பாவம்செய்பவர்களுக்குக் கட்டாயமான அழிவுண்டு - இது ஒன்றே அவர்கள் மீது கட்டாயப்படுத்தப்படும். R891:4

## 86. நீதிமொழிகள் 3:5, 6

### வ. 5 – “உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,”

**உன் சுயபுத்தி** – ஒரு தனிப்பட்ட கடவுள் தேவையில்லை என்று கூறிடும் ஒரு கோட்பாட்டைக் கண்டுபிடிக்க முற்படும் சில விஞ்ஞானிகளைப் போல. R2834:3 நம்முடைய சொந்த தீர்ப்புகள் / நிதானிப்புகள் பாதுகாப்பற்றவையாக / ஆபத்தானவையாக இருக்கின்றன; அதில், தவறான திசையில் ஞானத்தைத் தேடும் அபாயம் உள்ளது. R2262:3 தன்னுடைய சொந்த நிதானிப்பின் அபூரணத்தையும், அனைத்து மனித ஆலோசனைகளின் தவறுகிற தன்மையையும் (fallibility) குறித்து அனுபவமானது மனப்பக்குவப்பட்ட தேவபிள்ளைக்குக் கற்றுக்கொடுத்துள்ளது. R2060:5, CR498:5

**கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து** – இவ்வாறு நம்பிக்கையாயிருப்பதற்கு, தேவனுடைய வார்த்தையைப் பற்றின அறிவும், இரட்சிப்பின் திட்டம் பற்றின அறிவும் மிகவும் முக்கியமானதாயிருக்கின்றன. R2060:5

### வ. 6 – “உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.”

**உன் வழிகளிலெல்லாம்** – வாழ்க்கையின் சகல காரியங்களிலும், தேவ வழிநடத்துதலை நாடுகிற இருதயமானது தொடர்ந்து ஜெப சிந்தையில் காணப்படும். வேறெந்த மனநிலையும் சரியானதாக இருக்காது. R3806:1 உணவுக்கு நன்றி செலுத்துவது உட்பட (நம்முடைய வழிகளிலெல்லாம்). (சகோ. ரசல் அவர்களின் பெத்தேல் இல்லத்தின் வழக்கத்தைப்போல,) அனைவரும் பூமிக்குரிய போஜனத்தைப் புசிப்பதற்காக ஒன்றாக அமரும்போது, ஆவிக்குரிய மன்னாவையும் சேர்த்துப் புசிக்கும்படிக்கு (தியானிக்கும்படிக்கு) நாங்கள் அறிவுறுத்துகிறோம். R4139:5

**அவரை நினைத்துக்கொள்** – பன்மடங்கு கவலைகளினால் சிக்குண்டுபோய், இப்படியாக நம்முடைய சொந்த தவறாக வழிநடத்தப்பட்ட போக்கின் விளைவால் இடையூறுக்கு உள்ளாவதற்கு முன்பே (அவரை நினைத்துக்கொள்). R1554:2 சொப்பனங்களின் வியாக்கியானங்கள் தன்னிடமிருந்து வரவில்லை, மாறாக தேவனிடமிருந்து வந்தவை என்று யோசேப்பு தெளிவாக இராஜாவிடம் கூறியதில் இது எடுத்துக் காட்டப்படுகின்றது. R5216:6 நாம் தெய்வீக மேற்பார்வைகளைக் கவனிப்பது மாத்திரமல்லாமல், அவற்றுக்கு யார் காரணம் என்கிற அங்கீகாரத்தையும் தெரியப்படுத்த வேண்டும். R2894:1 குறிப்பாக, தெய்வீக வார்த்தையின் ஆராய்ச்சியிலும், அதற்கு விளக்கமளிப்பதற்கு ஏறெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் (அவரை நினைத்துக்கொள்வது) பொருத்தமானதாயிருக்கிறது. R3978:6 தனக்கான ஆசீர்வாதத்திற்காகவும், தன்னை வழிநடத்தும்படிக்கும் கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளாமல், கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய யாராவது முயற்சி செய்தால் அது வீணானதாயிருக்கும். R4911:3, R3806:1 நீங்கள் அவரிடமும், அதே சமயம் அவரைக் குறித்தும், எந்தத் தயக்கமுமில்லாமல், எந்தச் சங்கடமுமில்லாமல் பேசக் கற்றுக்கொள்ளுவதற்கேதுவாக, அவருடைய பிரசன்னத்தைக் குறித்த ஓர் உணர்வை வளர்த்திக்கொள்ளுங்கள். R590:2*

**அவர்** – தம்மீது நம்பிக்கை வைத்து, தம்முடைய வழிகாட்டுதலை நாடுகிறவர்களுக்கு கர்த்தர் எப்போதுமே உண்மையுள்ளவராக இருக்கின்றார். R1538:5

**உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்** – விழுந்துபோன சுபாவத்துக்கு மிகவும் இசைவான வழிகளில் அவர் நம்மை நடத்தமாட்டார். R2060:5 அவர் நம்மை எப்படி வழிநடத்துகின்றாரோ அவ்வாறாக மட்டுமே நாம் முன்னோக்கி நகர வேண்டும். R5712:1 அவருடைய சித்தத்தைக் குறித்து நமக்குத் தெளிவாகத் தெரியாதபோது, நாம் வெகுவாக அவசரப்படவோ, நம்மை நாமே வழிநடத்த முயலவோ கூடாது. R5712:1, R5807:5

## 87. நீதிமொழிகள் 4:18

### “நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.”

**நீதிமான்களுடைய** – நீதிமானாக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், மேலும் குறிப்பாக நீதிமானாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்கள். R2389:5 “நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியம்) …விதைக்கப் பட்டிருக்கிறது” (சங். 97:11) … விசுவாசத்தையும் அதன் விளைவாகிய நீதிமானாக்கப்படுதலையும் உடையவர்கள். A20 “சகோதரரே… நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.” (1 தெச. 5:4) R2389:6

**பாதை** – “உம்முடைய வசனம் …என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” (சங். 119:105) A20 “நீதியின் பாதை.” (சங். 23:3) R1646:5 இந்தப் பகுதியானது கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக பொருந்தும், ஆனால் பயன்பாடானது விசேஷமாக முழு சபைக்கும் உள்ளது.

R2389:5, R1646:5; A20, 21

**நடுப்பகல்** – அது வருகிறபோது, சூரிய ஒளி பிரகாசித்துக்கொண்டிருக்கும் என்பதால், மனுஷருக்குத் தீபம் தேவைப்படாது; தேவனைப் பற்றிய அறிவும் பூமியை நிரப்பியிருக்கும். R5055:3 நாம் இப்போது அந்த நடுப்பகலின் துவக்கத்தில் காணப்படுகிறோம். SM555:1; R1646:6 புதிய யுகத்தின் அதிகாலை வெளிச்சமானது தேவனுடைய அன்பு எனும் குணாதிசயத்தையும், வேதாகமத்தின் பிரகாசத்தையும் காட்டி, அதன் போதனைகள் மிகவும் நியாயமானவை என்பதை வெளிக்காட்டுகின்றது. PD41/52 நாம் இன்னும் நடுப்பகலை அடையவில்லை என்பதால், வருங்காலத்தில் நமது தீபம் இன்னும் எவ்வளவு அதிக வெளிச்சமாக பிரகாசிக்கக்கூடும் என்பதை நம்மால் அறிய முடியாது. R2389:6; A21

**வரைக்கும்** – சீர்திருத்தப் பணியை நிறைவேற்றிய அதே வேதாகமமானது இன்று கிறிஸ்தவரின் வளர்ச்சிக்கும் அறிவுக்கும் அவசியமானதாயிருக்கின்றது. R183:5

**அதிகமதிகமாய்** – தேவ வார்த்தை எனும் தீபத்தினால் அதிகமதிகமாய்த் தெளிவாக பிரகாசிக்கிறது. R2389:6, R5569:1; PD41/52; Q554:4 அனைத்து விசுவாச அறிக்கைகளிலிருந்தும் வெளியேறுவதும், மாய்மாலத்தையும் தப்பறையையும் ஆதரியாமல் இருப்பதும் நமது பொறுப்பாகும். R5851:6, R1312:2, R780:2 நாம் இன்னும் இருளான ஸ்தலத்தில் காணப்படுகிறோம், இருள் விலகி, பகல் வருமளவும் அங்கேயே காணப்படுவோம். நமக்கு “பொழுது விடியுமளவும்” தீர்க்கதரிசன வார்த்தைக்கான தேவையிருக்கின்றது. (2 பேது. 1:19) R5339:2 பற்பல புதிய கண்டுபிடிப்புகளோடுகூட, வேதாகமத்தின்மீது புதிய ஒளி பிரகாசிப்பதையும் காண்கிறோம். CR250:2 (ஓடாமல்) உட்கார்ந்து கொண்டு, மேற்கொண்டு வெளிச்சத்தின் பாதையில் முன்செல்லாமல் இருப்பதுதான் பலரிடம் காணப்படும் பிரச்சனையாக இருக்கின்றது. A25 வேதாகமம் என்பது ஒரேயொரு மனிதனுக்காகவோ ஒரேயொரு யுகத்திற்காகவோ எழுதப்படவில்லை; மாறாக எல்லா மனுஷருக்காகவும், எல்லா யுகங்களுக்காகவும், “ஏற்றவேளை போஜனமாக” எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்திவருவதாக எழுதப்பட்ட ஒன்றாகும். (மத். 24:45) R24:5* நாம் முன்வைத்திடும் காரியங்களை (குறிப்பாக, உடன்படிக்கைகள் பற்றின காரியங்களை) அவற்றுடன் சரியாக தொடர்புடைய காரியங்களோடு வாசிக்கப்படும்போது, அவை இசைவான வகையில் சீராக வளர்ச்சியுறுகிற ஒன்றெனக் கண்டறியப்படும். R4334:5 சீர்திருத்த இயக்கமும், 2300 நாட்களின் முடிவும் (தானி. 8:14) சில தப்பறைகளிலிருந்து நம்மை விடுபட வைத்தன; ஆனால் விலையேறப்பெற்ற சத்தியங்கள் அனைத்துமே கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. R4534:6 சீர்திருத்தவாதிகளைப் பின்பற்றி வந்தவர்களோ சீர்திருத்த காலத்தில் உருவாக்கப்பட்ட விசுவாச அறிக்கைகளை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்லாமல், ஒளியை நோக்கி இன்னமும் முன்னேறிச்செல்வது வழக்கத்திற்கு மாறானதாக இருக்கும் என்றும் கருதினார்கள். F60, F61

**பிரகாசிக்கிற** – தேவனுடைய அறிவைக்கொண்டு. R493:1

**சூரியப்பிரகாசம்போலிருக்கும்** – தற்காலத்திய அதின் பிரகாசமான வெளிச்சமே, புதிய நாளாகிய மேசியா இராஜ்யத்தின் புதிய யுகம் நெருங்கிவிட்டதைக் காட்டுகின்றது. R4851:5 “…தேவன் (தேவனுடைய ஆவி, சத்திய ஆவி) … தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.” (2 கொரி. 4:6) E293 கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் அப்போஸ்தலரின் வார்த்தைகள் மூலமாக. F61

## 88. நீதிமொழிகள் 10:22

**“கர்த்தரின் (யாவே / யேகோவா தேவனுடைய) ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.”**

**கர்த்தரின் ஆசீர்வாதமே (யாவே / யேகோவா தேவனுடைய)** – கிறிஸ்துவுக்குள் மறைந்துள்ளன, “அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.” (கொலோ. 2:3) R2762:5 நாம் அவருடன் பரலோக மகிமையைப் பகிர்ந்துகொள்வதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்கேதுவாக பூமிக்குரிய உரிமைகளையும் ஆசீர்வாதங்களையும் பலிசெலுத்த ஒப்புக்கொள்கிறோம் என்கிற நிபந்தனையின் பேரிலேயே, இயேசு அவற்றை (பூமிக்குரிய உரிமைகளையும் ஆசீர்வாதங்களையும்) நமக்கு வழங்குகிறார். R4463:6 தேவன் இந்தச் சுவிசேஷ யுகத்தில், பூமிக்குரிய ஆசீர்வாதங்களையோ அல்லது நோய், வலி மற்றும் பாடு என்பவைகளுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியையோ வாக்களிக்கவில்லை. R2761:1 சகல சவுகரியங்களாலும் சூழப்பட்டுக் காணப்படும் வாழ்க்கையைவிடவும், வறுமையாக இருந்தாலும் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியம் ஜீவிப்பதில்தான் மிகுந்த மகிழ்ச்சி காணப்படுகின்றது. R4091:3 சத்தியத்தைக் கேட்பதற்கு முன்பே பூமிக்குரிய ஐசுவரியங்களைப் பெற்றிருப்பவர்களில் ஒருசிலரே, பரம அழைப்பை அடைய வாய்ப்புள்ளது. R2761:2

**ஐசுவரியத்தைத் தரும்** – ஆஸ்திசார்ந்த செழிப்பு மற்றும் திரளான ஐசுவரியவான்கள் என்பது போன்ற லவோதிக்கேயா சபையின் போலியான ஐசுவரியத்தை இது குறிக்காது. R2763:1 (யார் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறாரோ அவரே உண்மையில் ஐசுவரியவான்) அவர் எவ்வளவு உலக ஆஸ்திகளைப் பெற்றிருக்கிறார் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல (எ.கா. முற்பிதாவாகிய ஆபிரகாம்). R5171:1 “அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான் களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.” (2 கொரி. 8:9) R2761:4 அவருடைய கிருபையின் ஐசுவரியங்கள், ஞானம் மற்றும் அறிவின் பொக்கிஷங்கள், பரிசுத்த ஆவியின் ஐசுவரியங்கள் என்பவைகளை இப்போதுகூட நாம் முன்சுவைத்துக்கொண்டிருக்கலாம். R2762:4 உன்னதமான உணர்வுகளிலும், விசுவாசம், அன்பு, நற்கிரியைகள், தேவனுடைய ஆசீர்வாதம் மற்றும் மேற்பார்வையான கவனிப்பு என்பவைகளிலும் (ஐசுவரியமடையலாம்). R2762:6, R5171:4 தற்கால ஜீவியத்தில் ஆவிக்குரிய சிலாக்கியங்கள் மற்றும் நம்பிக்கைகள் (எனும் ஐசுவரியம்), மற்றும் வரவிருக்கும் ஜீவியத்தில் ஆவிக்குரிய மகிமை மற்றும் அழியாமை (எனும் ஐசுவரியம்). R5170:3, R5171:1, R2762:6, R4463:1; CR57:6 கர்த்தருடைய ஆசீர்வாதம் உலகத்திற்கு ஐசுவரியத்தைத் தரவில்லை என்றாலும், தேவனுடைய ஏற்றகாலத்தில் அது (நிச்சயமாக) தரப்படும். R4463:1, R5171:4; CR57:3

**அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்** – தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ. 3:12) என்றாலும், இவைகள் கர்த்தரிடமிருந்து வருபவை அல்ல, மாறாக அவரால் அனுமதிக்கப்பட்டவையாகும். R4463:2 துக்கங்கள் என்பது கர்த்தருடைய ஏற்பாடோ, அவரால் கூட்டிக் கொடுக்கப்பட்டவையோ அல்ல, மாறாக அவை பாவம் மற்றும் அபூரணத்தின் விளைவாக வருகின்றவையாகும். R4463:2; CR57:6 பணம், புகழ் போன்ற பூமிக்குரிய ஐசுவரியங்கள் மாற்றத்திற்கு உட்பட்டவையாகும், அழிந்துபோவதற்கு வாய்ப்புள்ளவையாகும், மேலும் இவற்றில் வெகுவாக மையங்கொண்டிருக்கும் இருதயமானது துக்கம் மற்றும் ஏமாற்றத்தின் படுபாதாளத்தில் தள்ளப்படலாம். R5862:1, R1820:2

## 89. நீதிமொழிகள் 29:25

**“மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.”**

**மனுஷனுக்குப் பயப்படும் பயம்** – மற்றும் மனிதனுடைய சபைகளுக்கு (பயப்படும் பயம்). R2208:3 “ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?” (யோவா. 5:44)

R4208:1 கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு நபரும், பாவம் மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து விடுதலை யடைந்து, தான் பெற்றுக்கொண்ட சுயாதீனத்தையும், தன்னுடைய எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் என அனைத்திற்கும் தேவனிடம் கணக்கொப்புவிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். R1788:5 இந்தப் பயமானது தேவனுடைய உண்மையான ஊழியரில் சிலரைக் கூட, (தேவனுக்கு) உண்மையாக (faithfulness) இருப்பதிலிருந்து தடுத்துவிடுகின்றது. D61 (சவுல் இராஜாவைப் போல,) தங்களுடைய வாழ்க்கைப்போக்கை முழுவதுமாக கர்த்தருடைய வார்த்தையால் வழிநடத்த விடாமல், மாறாக (மனுஷர் என்ன நினைத்துவிடுவார்களோ என) மற்றவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு (sentiments) இடமளித்து அதற்கேற்ப செயல்பட வைக்கும் சோதனை கர்த்தருடைய ஜனங்களுக்கும் வரும். R4208:1 மனுஷரால், உச்சபட்ச கெடுதலாக, நம்முடைய ஜீவனை எடுப்பதைத் தவிர, வேறொன்றையும் செய்திட முடியாது; அதேசமயம், மறுபுறத்தில், நித்திய ஜீவனைக் குறித்த நம்முடைய நம்பிக்கைகளோ தேவன்மீதே காணப்படுகிறது. (மத். 10:26 – 28) CR9:1

**கண்ணியை வருவிக்கும்** – தனிமனித நியாயத்தீர்ப்புள்ளது எனும் கொள்கையை புறக்கணித்த காரியமானது பெரிய விசுவாச துரோகமெனும் கண்ணியைச் சபையின்மீது கொண்டு வந்தது, அத்துடன் மனுஷரின் மனச்சாட்சியைச் சீர்குலைத்து, விசுவாசம் மற்றும் நடத்தை விஷயங்களில் அதிகாரஞ்செலுத்துவதற்குப் போப்புகளும் அங்கு வந்தனர். R1788:6

## 90. ஏசாயா 26:3

**“உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.”**

**உம்மை** – தேவனுடன் சமாதானம் (peace with God) என்ற நிலையைக் கடந்து, தேவனுடைய சமாதானத்தையே (the peace of God) பெற்றுக்கொண்ட ஒரு வகுப்பார். R5432:1

**உம்மையே நம்பியிருக்கிறபடியால்** – யாருடைய மனம் தேவன் மீது தரித்திருக்கவில்லையோ, நிலைத்திருக்கவில்லையோ, அவரால் இந்தச் சமாதானத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது; மாறாக, நாம் தேவனில் நிலைத்திருக்கும் அளவிற்கேற்ப நமக்குச் சமாதானம் கிடைக்கும். R5432:6 எவ்வகையிலும், இவர்களை எதுவுமே காயப்படுத்த முடியாது. R5432:4 நாம் நமது அனுபவங்களைச் சரியான பார்வையில் பார்க்கும்போது, நம்மால் பின்வரும் பாடல் வரிகளைப் பாட முடியும்: “அந்த அடைக்கலத்தைப் பற்றிக்கொண்டிருக்கையிலே, எங்களது உள்ளான அமைதியை எந்தப் புயலாலும் அசைக்க முடியாதே.” R5879:2 ஒரு சக்தி வாய்ந்த அடி நீரோட்டத்தால் இழுக்கப்பட்ட ஒரு பனிப் பாறையைப் போல, கிறிஸ்தவனும், தேவனுடனான சமாதான ஐக்கியமெனும் வலுவான அடி நீரோட்டத்தால் தூக்கிப்பிடிக்கப்பட்டு, முன்னோக்கி நகர்த்தப்படுகிறார். R1070:4*

**பூரண சமாதானத்துடன்** – “எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்.” (பிலி. 4:7) R5432:1, R5879:1 “அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்?” (தமிழில் – யோபு 34:30) R5878:2 வசனங்கள் 5, 6 & 21 என்பவைகளில் வருகிற துன்பக் காலத்தின் நடுவே, தேவன் தம்முடைய ஜனங்களை இளைப்பாறுதலடையச் செய்து, தம்மிலே சமாதானமடையச் செய்வார். R1787:3 வெளிப்புற நிலைமைகள் என்னவாக இருந்தாலும் சரி, கொந்தளிப்பு மற்றும் பிரச்சனைகள் மத்தியிலும் கூட (பூரண சமாதானத்தோடு காத்துக்கொள்வீர்). R5879:2, R5432:1,4 வெளிப்புறமான வகையில் அல்லாமல், ஓர் உள்ளான சமாதானம். R5432:2,1 இது வலுவான, அசைக்க முடியாத விசுவாசத்தின் மூலமே கிடைக்கும். R5432:6,4,3 நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் அளவிற்கேற்ப இது நமக்குக் கிடைக்கும். R5432:3 இது நாம் முழுவதுமாக கீழ்ப்படிந்து, நேரம்,

தாலந்துகள், செல்வாக்கு, வாழ்க்கை என அனைத்தையும் தேவனுக்கு வரம்பின்றி அர்ப்பணிப்பதைப் பொறுத்திருக்கின்றது. R5432:6,1 இதை அனுபவிக்க வேண்டுமானால் நாம் நமது பிதாவினுடைய அன்பின்மீது அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்திருக்க வேண்டும், அத்துடன் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருக்கவும் வேண்டும். R5432:5 மறுபுறம், நாம் மாம்சத்துடன் சமாதானமாக போய்விடக்கூடாது, மாறாக எப்போதும் அதற்கெதிராக போர்ப்புரிந்து கொண்டிருக்க வேண்டும். R5432:3

## 91. ஏசாயா 30:15

**"நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரயேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்; நீங்களோ அப்படிச் செய்ய மனதாயிராமல்;"**

**மனந்திரும்பி** – தேவனிடமாக. R1787:6

**அமர்ந்திருந்தால்** – அவரில் மாத்திரம் (அமர்ந்திருந்தால்). R1787:6

## 92. ஏசாயா 33:16

**"அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்."**

**அவன்** – கிறிஸ்துவின் சபை. Q270:T

**உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்** – உலகத்தைத் திணரடிக்கும் அச்சங்கள், அமைதியின்மை மற்றும் துயரங்கள் என்பவைகளுக்கு மேலாக (உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்). R1875:5 தெய்வீகத் தயவின் இடத்தில் (வாசம்பண்ணுவான்). R2087:4*

**கன்மலைகளின் அரண்கள்** – நித்திய கன்மலை. R1875:5

**அப்பம்** – ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஜீவ அப்பம். R1875:5 "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்." (மத். 6:11) R5202:4

**அவனுக்குக் கொடுக்கப்படும்** – நாம் எதைப் பெற்றிருந்தாலும்சரி, கர்த்தர் நமக்குக் கொடுப்பவைகளுக்காக நாம் அவரையே சார்ந்திருக்கிறோம் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம்; அவர் என்ன கொடுக்கிறாரோ, அதற்கு மேலாக நாம் வேறு எதையும் கேட்பதில்லை. R5202:5 எலியாவைப் பேணிக்காத்த தேவன் நம்மையும் பேணிக்காக்க வல்லவராயிருக்கிறார். R2326:3

**அவன் தண்ணீர்** – ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஜீவத்தண்ணீர். R1875:5 பெயரளவிலான இஸ்ரயேலில் பலர் பசிதாகத்தில் உள்ளனர். இதற்கிடையில், கிறிஸ்துவின் சபையோ பாதுகாப்பான இடத்தில் உள்ளது. R5032:1

**அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்** – கர்த்தர் நமது இம்மைக்குரிய தேவைகளுக்காகவும், நித்திய நலனுக்காகவும் தேவையானவற்றை ஏராளமாக வழங்குவதாக வாக்களிக்கவில்லை, மாறாக நிச்சயமாக வழங்குவதாக வாக்களித்துள்ளார். R1313:1, R1745:2 எருசலேம் அழிக்கப்பட்ட போதிருந்த யூதருக்கும், கர்த்தரில் நம்பிக்கை வைத்திருந்த மற்றவர்களுக்கும் இது பொருந்தலாம். R5031:6; Q269:8 "எனக்கேதும் குறையில்லை." (சங். 23:1 – திருவிவிலியம்) R1745:2 போஜனம், தண்ணீர், அடிப்படை உடை (நிச்சயமாய்க் கிடைக்கும்); ஆனால் தேவன் நமக்கு உத்தரவாதம் அளிக்காத சில

சொகுசுகளை, ஆடம்பரங்களை இழந்துவிடுவோமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். R832:5 பரிசுத்தவான்கள் பொருளாதார அசம்பாவிதங்களைக் குறித்து பயப்பட வேண்டியதில்லை. R2274:5

## 93. ஏசாயா 33:17

**"உன் கண்கள் இராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்."**

**இராஜாவை மகிமை பொருந்தினவராக** – பரிசுத்த அலங்காரம். R2087:6* வல்லமையிலும் மாமகிமையிலும் ஆட்சிசெய்துகொண்டிருக்கும் (இராஜாவை). R2087:5* ஆசீர்வாதமான ஊக்கமளிக்கும் வாக்குத்தத்தம். R5863:1

**உன் கண்கள் … காணும்** – விசுவாசத்தின் கண்களுக்கு, இனிவெளிப்படப்போகிற மகிமை பற்றிய ஆவியின் ஏவுதல் கிடைக்கும். R2087:5* C304

**தூரத்திலுள்ள** – ஆயிரமாண்டின் அழகிய காட்சிக்கு அப்பாலுள்ள. C304 தேவ வார்த்தை எனும் தொலைநோக்கி வழியாகப் பார்க்கையில், அது ஒரு மகிமைவாய்ந்த தரிசனமாக காணப்படுகிறது. R2087:4* "இவைகள் இல்லாதவன் எவனோ, அவன்… கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்." (2 பேது. 1:9) R2097:6*

**தேசத்தையும்** – மீட்டெடுக்கப்பட்ட பரதீசு. C304

## 94. ஏசாயா 40:31

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்."**

**காத்திருக்கிறவர்களோ** – நமது தனிப்பட்ட காரியங்களில் அவரது இரக்கமான மேற்பார்வைகள் செயல்படுவதற்கு நேரம் காலம் என்பது இன்றியமையாததாய் இருக்கிறது; ஏனெனில், தேவன் (தற்காலிகமாக என்பதாக அல்லாமல், மாறாக) நீடித்த ஆசீர்வாதமான முடிவுகளைக் கொண்டுவருவது எனும் கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுகிறவராவார். R1840:5

**புதுப்பெலன் அடைந்து** – நம்முடைய விசுவாசம் ஏன் சரியானது என்பதற்கான சான்றுகளை மீண்டும் எண்ணிப்பார்ப்பதன் மூலமாக, கர்த்தர் நமது இருதயத்தைப் பலப்படுத்துவார். R5712:6 இன்று அவருடைய ஜனங்களிடம் பேசும் தேவனுடைய சத்தியம் எனும் சத்தத்தினால் (புதுப்பெலன் அடைந்து). R4741:5 "விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்." (ஏசா. 65:22) R1649:5

**கழுகுகளைப்போல** – கழுகுகளைப்போல உலகத்திலிருந்து உயர மேலே வாழ்வது, தொலைநோக்குப் பார்வையைப் பெற்றிருப்பது; ஒளியைப் பார்ப்பதற்கு ஏற்றவாறு கண்களைக் கொண்டிருப்பது; இது புத்தியுள்ள ஊக்கமான கிறிஸ்தவரைக் குறிக்கிறது. R229:4

## 95. ஏசாயா 41:10

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."**

**நீ பயப்படாதே** – விசுவாசத்தை அதிகமாக அப்பியாசப்படுத்துபவர்கள் அமரிக்கையான நிலையை அடையப்பெறுவார்கள். R5345:5

**நான் உன்னுடனே இருக்கிறேன்** – கர்த்தருடைய ஊழியத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு இந்த வாக்குறுதி தேவைப்படுகிறது. R1652:1

**என் நீதியின் வலதுகரம்** – அவருடைய சத்தியத்தின் வல்லமையோடு. R1307:6

## 96. ஏசாயா 41:13

**“உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.”**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 97. ஏசாயா 43:2

**“நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.”**

**தண்ணீர்களைக் கடக்கும்போது** – துன்பங்கள், ஏமாற்றங்கள், குழப்பம், பிரச்சனைகள். மேலும் அனுபவம், ஒழுக்கம் மற்றும் பரீட்சை எனும் பள்ளி. R4005:1, R1857:5 நாம் நீரோட்டத்தோடுகூட மிதந்துசென்றுவிடக் கூடாது, மாறாக எதிர்நீச்சலிட்டு கடினத்தன்மையைச் சகிக்க வேண்டும். R4005:1 அவர் நம்மைப் பாதுகாப்பாக மறுபக்கம் கொண்டுபோய்ச் சேர்ப்பார். R4005:4 இந்த வாக்குத்தத்தங்கள் சொல்லர்த்தமானவையென எண்ணுவது தவறாகும், ஏனெனில் இவை மாம்சீக இஸ்ரயேலுக்கு மாத்திரமே சொல்லர்த்தமாக கொடுக்கப்பட்டன. R1408:3 இஸ்ரயேலர் நேர்மை யாகவும் கீழ்ப்படிதலோடும் இருந்த வரைக்கும், அது அவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் பாதுகாப்பின் உடன்படிக்கையாகவும் காணப்பட்டது. R1409:2

**நான் உன்னோடு இருப்பேன்** – ஒவ்வொரு உபத்திரவத்திலும், நமக்கு நேரிடுகிற சோதனைகள், இடுக்கண்கள், துன்பங்கள், குழப்பங்கள் எல்லாவற்றிலும் நமக்கு பரிவிரக்கம் / ஆதரவு காட்டுகிறார். R4005:1 இருதயத்திற்கு ஆறுதலோடும், நிலைநிறுத்தும் கிருபையோடும் (நான் உன்னோடு இருப்பேன்). R5758:4

**ஆறுகளைக் கடக்கும்போது** – இஸ்ரயேல் யோர்தானைக் கடந்து கானானுக்குள் செல்வதன் மூலமாக இது சித்தரிக்கப்படுகிறது. R3084:2

**அவைகள் உன்மேல் புரளுவதில்லை** – இஸ்ரயேலர், செங்கடலையும் யோர்தானையும் கடக்கும் போது, பயப்படுவதற்கு ஒன்றுமில்லாதிருந்தது; அதுபோல, ஒரு கிறிஸ்தவன் தெய்வீகப் பிரசன்ன த்தையும், அங்கீகாரத்தையும் உணர்ந்துகொண்டிருக்கும் வரையிலும், அவன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. R1408:3, R1857:2 அல்லது, உன்னை அழிப்பதில்லை. R4005:4

**அக்கினியில் நடக்கும்போது** – அக்கினிச் சூளையில் போடப்பட்ட மூன்று எபிரெய புருஷருடைய சம்பவத்தில் இது சித்தரிக்கப்படுகிறது. R1408:2 துன்பத்தின் சூளை – கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகளோ அதினால் காயப்படுவதில்லை. R1857:5, R1409:5

## 98. ஏசாயா 46:10, 11

**வ. 10 – “அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி,”**

**அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும்** – தேவன் மனுஷரைத் தவறுசெய்வதற்கு

அனுமதித்தார், அதனை அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார். R5211:1

**என் ஆலோசனை நிலைநிற்கும்** – தேவனால் அவர் வாக்களித்ததை நிறைவேற்ற முடியும் என்பதையும், அவருடைய நீதியும் தயாளமுமான திட்டம் தோல்வியடையாது என்பதையும் கர்த்தரும் அவரது அப்போஸ்தலரும் நம்பினபடியால், அவர்களால் நிலையான சமாதானத்தைப் பெற்றிருக்க முடிந்தது. R1834:6

**And I will / (நான்)** – "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1 தீமோ. 2:4) R630:5*

**எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்** – தேவனுடைய ஆதி திட்டம் இன்னும் செயல்பாட்டில் உள்ளது. A66; HG537:3

**வ. 11 – "உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 99. ஏசாயா 49:15, 16

**வ. 15 – "ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை."**

**ஸ்திரீயானவள் ... மறப்பாளோ?** – திவ்ய சுபாவத்தின் நிலைப்பாட்டிலிருந்து பார்த்தீர்களானால், இப்போது நீங்கள் வைக்கும் பெற்றோருக்குரிய பாசமானது (parental affection) இன்னும் பரந்தளவில் மற்றவர்களுக்கும் சென்று சேரப்போகிறது, அதில் ஆசீர்வதிக்கும் மாபெரும் வல்லமையும் காணப்படும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். R1211:5* (தேவன் இவர்களை மறப்பதைக்காட்டிலும்) ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளையை விரைவில் மறப்பதற்கே வாய்ப்புள்ளது. R957:5

**நான் உன்னை மறப்பதில்லை** – சீயோன், திருச்சபை. R957:4 நம்முடைய பரமபிதாவின் தரப்பில் காணப்படும் மிகவும் கனிவான அன்பைப் பற்றிய ஓர் உறுதிமொழி. R957:1 பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் எந்தவொரு ஊழியத்தையும் கர்த்தர் மறப்பதில்லை. R957:4

**வ. 16 – "இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது."**

**என் உள்ளங்கைகளில்** – "எனக்கான பிணையாளி (surety – எபி. 7:22) சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கின்றாரே; என் நாமமோ அவர் கரங்களில் எழுதப்பட்டுள்ளதுவே." R1829:5

## 100. ஏசாயா 50:7

**"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்."**

**கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்** – கர்த்தருடைய வாக்குறுதிகளின்மீது நாம் இளைப்பாறலாம். R5432:2

**கற்பாறையைப்போலாக்கினேன்** - தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு (கற்பாறையைப் போலாக்கினேன்), இது தேவனுக்கும், அவருடைய சத்தியத்திற்கும் நேர்மையாய் இருப்பதை விவரிக்கின்றது. R4670:5*

### 101. ஏசாயா 51:7, 12

**வ. 7 – "நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவி கொடுங்கள்; மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

**வ. 12 – "நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?"**

**மனுஷனுக்கு ... பயப்படுகிறதற்கும்** - "மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும். (நீதி. 29:25) R1788:5 மாறாக, தேவனிடமிருந்தும் எதிர்கால வாழ்விலிருந்தும் உங்களைப் பிரித்திடக்கூடியவைகளைக் குறித்தே அச்சம் கொள்ளுங்கள். R5390:3

### 102. ஏசாயா 51:16

**"நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்."**

**வானத்தை நிலைப்படுத்தி** - புதிய வானங்களை அல்லது ஆவிக்குரிய கட்டுப்பாட்டின் வல்லமைகளை நிலைப்படுத்தி. R1788:4; A318

**பூமியை** - புதிய பூமி, அல்லது சமுதாய ஒழுங்குமுறை. R1788:4; A318

**சீயோன்** - புதிய இராஜ்யத்தின் சுதந்தரர் - இவர்கள் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டவர்கள். R1788:4

### 103. ஏசாயா 54:17

**"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்."**

**உனக்கு விரோதமாய்** - புதிய சிருஷ்டிக்கு விரோதமாய். R3050:3 அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களாயிருந்த திருச்சபையாருக்கு விரோதமாய். R1239:2* இவ்வுலகத்தின் அதிபதி பலரை வஞ்சிப்பதற்கும், வழிதவறச் செய்வதற்குமான வல்லமையைப் பெற்றிருக்கிறான் - கூடுமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட வஞ்சிக்க முயற்சிப்பான். ஆனாலும், வஞ்சிக்கப்பட முடியாத ஒரே வகுப்பார் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே. R1239:2* தேவன் தம்முடைய அனைத்து நல்வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றப்போகிற வேளையாகிய வருங்காலத்தில், மாம்சத்தின்படி மீண்டும் கூட்டிச்சேர்க்கப்பட்டு, மீண்டும் தயவு கிடைக்கப்பெற்றிருக்கிற இஸ்ரயேலுக்கும் இது ஓரளவிற்குப் பொருந்திவரக்கூடும். R3050:3

**வாய்க்காதேபோம்** - இது உடல்நலம், சமூக அந்தஸ்து அல்லது பொருளாதார செழிப்பைப்

பாதித்தாலும்கூட. R3050:6 சத்தியத்தைப் பகைக்கிறவர்களுடைய ஆத்திரம் சத்தியத்தைத் தவறாக சித்தரித்து, அதை ஏமாற்று வாதமாக காட்டும்போது தவிர, மற்றபடிக்கு அவர்களின் ஆத்திரமானது வலிமையற்றதாயிருக்கிறது – இவை "தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க" முடியாது என்று கர்த்தர் நமக்கு உறுதியளிக்கிறார். (மத். 24:24) R2738:1

**உனக்கு விரோதமாய் … எழும்பும்** – பொறாமை, வன்மம், வெறுப்பு, சண்டை, அவதூறு ஆகியவற்றில். R3050:6 இது பழைய சிருஷ்டியை மாத்திரமே – ஏற்கனவே மரணத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள மாம்சத்தை மாத்திரமே காயப்படுத்துகின்றது. R3051:1

**என்னாலுண்டான** – "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (உரோ. 8:31) R3052:4

## 104. ஏசாயா 55:11

**"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."**

**என் வாயிலிருந்து** – யாவே / யேகோவா தேவனுடைய வாய்க்கருவியாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு. SM51:1

**புறப்படும்** – ஆபிரகாமிடம் அனுப்பப்பட்டது – பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படப்போகிறதைக் குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டது. SM90:2, R3052:1 இயேசுவின் மூலமாக – தம்முடைய நாமத்திற்கென்று, சிறு மந்தையாகிய திருச்சபை எனும் ஜனத்தைக் கூட்டிச்சேர்ப்பதற்காக. SM90:2; R256:6, R1023:6, R1079:6; HG693:6 கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார், மேலும் அவர்களை எப்படிச் சத்தியத்துடன் தொடர்புகொள்ள வைப்பது என்பது அவருக்குத் தெரியும். R2965:2 எப்படி, ஒரு மனிதன் ஒரு வீட்டைக் கட்டும்போது, முழு கட்டுமான செயல்முறையின் ஒவ்வொரு படி நிலையிலும் அந்த நோக்கத்தையே மனதில் கொண்டிருப்பானோ, அதுபோல எல்லாக் காலங்களிலும் கர்த்தருடைய வார்த்தையானது புறப்பட்டுச்சென்று, அதன் மாபெரும் முடிவை நோக்கியே சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். R98:6*

**அப்படியே …வசனமும் இருக்கும்** – அறுவடை செய்தி உட்பட. R3883:3

**வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்** – தேவனுடைய வார்த்தையானது நிறைவேறித்தீரும். OV184:T, OV86:T, R3598:4, R4347:3 அது யாருக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்த அனைவரையும் அது சென்றடையும் என்பது உறுதி. R690:5* தம்முடைய நீதி மற்றும் அன்பினைச் செயல்படுத்துவதற்காக, அவற்றை முன்னறிந்து, ஆயத்தஞ்செய்து, திட்டமிடும் ஞானத்தை அவர் பெற்றிருக்கிறார். மேலும், அவருடைய ஞானமும், நீதியும், அன்பும் திட்டமிடுகிற அனைத்தையும் நிறைவேற்ற தேவையான தெய்வீக வல்லமையும் அவரிடமே உள்ளது. SM85:1 எல்லா நேரங்களிலும் மனிதனுடைய கோபத்தை அவருக்கு ஊழியஞ்செய்வதற்கேதுவாகவும், மிஞ்சும் கோபத்தை அடக்குவதற்கேதுவாகவும் தெய்வீக ஞானத்தால் மேற்பார்வையிட முடியும், இப்படியாக அது சகலத்தையும் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுவதற்கேதுவாகச் செயல்பட வைக்கின்றது. R5263:1

**நான் விரும்புகிறதை** – மேலும் அது அவரது நோக்கங்களுக்கு இசைவில்லாத ஜெபங்களால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. R1999:2

**அது … செய்து** – உலகம் இன்னும் மனமாற்றப்படவில்லை – இதுவே, அந்த மனமாற்றும் பணிக்கென்று வார்த்தை இன்னும் அனுப்பப்படவில்லை என்பதற்கான ஆதாரமாக இருக்கின்றது.

OV223:5; R256:6, R2376:2, R2396:4, R1710:4, R4212:6, R1023:3; CR343:1; A95 இரட்சிப்பின் வேலையைத் தொடங்கிய பிறகு, தேவன் அதைக் கைவிடவில்லை, கைவிட வேண்டுமென விரும்பவுமில்லை. R2690:1 தெய்வீக அனுமதிக்கு மாறாக எதுவும் நடக்க முடியாது; பல விஷயங்கள் தெய்வீகப் பிரமாணத்திற்கு முரணாக நடப்பதற்காய்க் கடந்துபோனாலும் – அவை ஞானமான நோக்கங்களுக்காகவே அனுமதிக்கப்படுகின்றன. OV33:2 ஆதலால், இப்போது இயற்கையில் காணப்படும் இசைவில்லாத முரண்பாடுகளை, சகலத்தையும் சீர்பொருத்துவதற்கான ஆயத்த காரியங்களாக கருத வேண்டும் – இந்தப் சீர்பொருத்தும் காரியமானது கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சியைத் தொடர்ந்து, "காலங்கள் அவற்றின் நிறைவை அடையும்" (எபே. 1:10 – TCV) வரைக்குமே நடந்து கொண்டிருக்கும். R1560:3 துன்மார்க்கரைத் தண்டிப்பதாக அவர் அளித்த வாக்குறுதி ஒருபோதும் நிறைவேறாது என்று எண்ணி, மனுஷர் தேவனை மந்தமானவர் என்றழைத்தாலும், அவர்கள் மனிதனுடைய 1,000 ஆண்டுகள் தேவனுக்கு ஒரு நாள் போன்றது என்கிற உண்மையைக் கவனிக்கத் தவறுகின்றனர். R1364:5 தேவன் பாவத்தின் குறுக்கீட்டை அனுமதித்திருந்தாலும், தம்முடைய திட்டங்கள் தோல்வியடைய அவர் அனுமதிக்கவுமில்லை, அனுமதிப்பதற்கு சித்தங்கொள்ள வுமில்லை. R1267:4 தேவன் வாக்களித்தபடியே, யூபிலி திரும்பக்கொடுத்தல் நிச்சயமாக நிறைவேறும் – ஆனால் அதற்கென்று மூச்சே விடமுடியாத அளவுக்கு அவசரம் காட்டக்கூடாது, மாறாக அமைதியாகவும், பொறுமையாகவும், உண்மையாகவும் யாவே / யேகோவா தேவனுக்காக காத்திருக்க வேண்டும். OV86:T தெரிந்துகொள்ளப்படுதல் (election) குறித்த கால்வினிஸ்ட் கருத்துக்கு மாறாக உள்ளது. HG545:5

**நான் அதை அனுப்பின காரியமாகும்படி** – எனவே உலகை மாற்றுவதற்காய் அது இன்னும் அனுப்பப்படவில்லை என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். A95 தேவனால் தமது திட்டத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தமது ஏற்பாட்டைச் செயல்படுத்த முடியாது. R1560:1 அது அவருடைய பரிசுத்தவான்களை, அதாவது இருதயத்தில் பரிசுத்தமாக்கப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்க்கும். அது உலகத்தாரைச் கூட்டிச்சேர்க்காது. CR84:5 இந்த யுகத்தில், மனுக்குலத்தின் மத்தியிலிருந்து ஒரு விசேஷித்த ஜனங்களைக் கூட்டிச்சேர்ப்பதற்காக. R1023:6 அது இப்போது திருச்சபையாரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் செழித்து வருகிறது; போகப்போக, பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிக்கும் பணியிலும் அது செழிக்கும். HG354:1 எதினாலுமே தெய்வீகத் திட்டத்தின் திட்டவட்டமான, நிலையான முக்கியத்துவம்வாய்ந்த காரியங்களை மாற்றியமைக்க முடியாது. ஆனாலும், கர்த்தர் நம் அனுபவங்களில் சிலவற்றை மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட அனுமதிக்கின்றார். இங்குதான் ஜெபம் உள்நுழைகிறது. R4347:3 ஒன்றான மெய்த் தேவனே, தம்முடைய சொந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, பல்வேறு சூழ்நிலைகளிலும், பல்வேறு வழிவகைகளிலும் செயல்பட்டு வருகின்றார். E182

**வாய்க்கும்** – ஒன்றான மெய்த் தேவனின் ஒரே நோக்கத்தினிமித்தமாக. E182 சரியான நீதி, அன்பு, ஞானம் மற்றும் வல்லமை என்பவைகளால் அது ஆதரிக்கப்பட்டுள்ளபடியால், அது வாய்க்கும். E34 அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கென்று எந்தச் சொந்த திட்டங்களும் இல்லை; தேவனுடைய சித்தமே நடக்கட்டும் என்று அவர்கள் வாஞ்சிப்பார்கள். தேவனுடைய திட்டமே அவர்களுடைய திட்டமாகவும் இருப்பதினால், அவருடைய திட்டம் செழிக்கையில், அவர்களின் திட்டமும் செழிக்கும். R1383:5 தான் அதை தடுத்துக்கொண்டிருப்பதாக சாத்தான் கற்பனை செய்துகொண்டுள்ளபோதும்கூட. E485; HG433:2

## 105. ஏசாயா 58:11

**"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான**

**தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.”**

**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி** – உங்களை வழிநடத்திடுமாறு அவரிடம் கேளுங்கள்; ஆனால், உங்களுடைய சொந்த சித்தம் எதுவுமில்லாமல், பாதையில் எந்த சொந்த விருப்புவெறுப்பு காட்டாமல், சகலத்திலும் தேவனை நம்பி, அவருடைய சத்தத்தைக் கேட்பதற்கு அமைதியாகக் காத்திருப்பீர்களேயானால், அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் காரியமானது (பாக்கியமானது) உங்களுக்கு அருளப்படும். R590:5*

## 106. ஏசாயா 62:2, 3

**வ. 2 – “ஜாதிகள் உன் நீதியையும், சகல இராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.”**

**புது நாமத்தால்** – “எங்கள் நீதியாயிருக்கிற யேகோவா தேவன்” அல்லது “யேகோவா தேவனின் நீதி” என்னும் பெயரால் அவள் அழைக்கப்படுவாள். (எரே. 33:16) R4913:3

**வ. 3 – “நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் இராஜமுடியுமாயிருப்பாய்.”**

**அலங்காரமான கிரீடம்** – ஒவ்வொரு மணியும், அதற்கென்றுள்ள இடத்திலே, யாவே / யேகோவா தேவனால் வைக்கப்படும். “தேவன்... அவயவங்களை... சரீரத்திலே வைத்தார்.” (1 கொரி. 12:18) R4913:6; HG607:1

**தேவனுடைய கரம்** – நமது தேவன் கரத்திலிருக்கும் திருச்சபையானது, தேவதூதருக்கும்சரி, மனுஷருக்கும்சரி, ஓர் அதி அற்புதமான கைவேலைப்பாடாகக் காண்பிக்கப்படப்போகிறது. OV424:4; R4914:1; CR333:2; HG606:6

**இராஜமுடி** – ஒரு தீபம். R1389:1 தெய்வீகக் கரத்திலிருக்கும் ஓர் அழகான ஆபரணம். R4913:3; CR333:2 முதலில், நமது கர்த்தராகிய இயேசுவே இந்த மாபெரும் கிரீடத்தில் பொருத்தப்பட்டார், அதனை தொடர்ந்து அவருடைய அங்கத்தினரும் அதில் பொருத்தப்பட்டு வருகிறார்கள். R4913:6 “கிரீடம்” மற்றும் “இராஜமுடி” என்பவை நடைமுறையில் ஒரே கருத்தையே / அர்த்தத்தையே வெளிப்படுத்துகின்றன, திரும்பத்திரும்ப குறிப்பிடப்பட்டுள்ள காரியமானது இந்த உணர்வை இரட்டிப்பான முக்கியத்துவமுள்ளதாக்குகின்றது. ஓர் இராஜமுடியென்பது (diadem) ஒரு கிரீடமாகும். HG606:6 திவ்ய சுபாவம் எனும் பொன்னில் பொருத்தப்படும். OV424:4

## 107. ஏசாயா 63:9

**“அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச்சுமந்துவந்தார்.”**

**அவர் நெருக்கப்பட்டார்** – கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின் எல்லா நெருக்கத்திலும் அவரும் நெருக்கப்படுகிறார் எனுமளவிற்கு, அவர்கள் அவருக்கு முற்றிலும் சொந்தமானவர்களாய் இருக்கின்றார்கள். R5173:3 நம்முடைய கர்த்தர் விழுந்துபோன மாம்சீக நோய்களினால் பாதிக்கப் படவில்லை. அவருடைய பரிபூரண சரீரமானது விசேஷித்த நோய்களுக்கு எதிராக காக்கப்பட்டதாய் இருந்தது. அவர் வியாதிகளைக் குணப்படுத்தின காரியமானது அவருடைய உயிர்ச்சக்தியை இழக்கச் செய்து, நமது வியாதிகளின் பாரத்தை அவர்மேல் சுமத்திவிட்டுச் சென்றதாகத் தோன்றச்செய்கின்றது. R4138:3

**அவர்களை இரட்சித்தார்** – இது ஜெயங்கொள்ளும் முதற்பேறானவர்களின் சபைக்கு மாத்திரமே பொருந்தும், இவர்கள் முதலாம் பஸ்காவின் போது காக்கப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்களால் நிழலாக காண்பிக்கப்படுகிறார்கள். R2911:6

## 108. ஏசாயா 65:24

**"அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்."**

**அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே** – அவர்களுடைய இருதயத்தின் வாஞ்சைகள் வார்த்தைகளாக வெளிப்படுவதற்கு முன்பே. R1866:5 அந்தளவுக்குக் கர்த்தர் மிக அருகில் கூடவே இருப்பார், அந்தளவுக்கு மனுக்குலத்தின் அனைத்து நலன்களையும் கவனத்தில் கொள்வார். R1649:5 நாம் அவரை நோக்கி கூப்பிடுவதற்காக மாத்திரமே அவர் காத்திருக்கின்றாரே ஒழிய, மற்றப்படிக்குத் தேவன் நம்முடைய எல்லா கஷ்டங்களையும் முன்கூட்டியே அறிந்து, நம்முடைய நிவாரணத்திற்குத் தேவையான அனைத்தையும் ஏற்பாடு செய்துவைத்திருக்கிறார். R5278:4

**நான் மறுஉத்தரவுகொடுப்பேன்** – கூடியவிரைவில் பதிலைக் கொண்டுவரும் வகையில், காரியங்களை ஒழுங்குப்படுத்தத் தொடங்குவார். R1866:5 நொறுங்கி, நருங்குண்ட இருதயத்தோடு, அவர்கள் கர்த்தரிடமாகத் திரும்பும்போது. R1561:5 முதலாவதாக, வழங்கப்பட்ட மீட்பில்; இரண்டாவதாக, அவர்களை மனந்திரும்பச்செய்து, தேவன் மீது பணிவுடன் சார்ந்திருக்கச் செய்வதற்குத் தேவையான கடினமான அனுபவங்களில் (மறுஉத்தரவுகொடுக்கப்படுகின்றது). R1561:5 இது ஆயிரமாண்டு யுகத்தைப் பற்றின ஒரு தீர்க்கதரிசனம் என்றாலும், இந்த யுகத்தின் அவருடைய அனைத்து உண்மையுள்ளவர்களைப் பொறுத்தவரையிலும்கூட, இது உண்மையாக இருக்கின்றது. R1866:5

## 109. ஏசாயா 66:13

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 110. எரேமியா 33:3

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 111. புலம்பல் 3:22, 23

**வ. 22 – "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

**வ. 23 – "அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரியதாயிருக்கிறது."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 112. புலம்பல் 3:26

**"கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது."**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 113. நாகூம் 1:7

**"கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்."**

**கர்த்தர் நல்லவர்** – விழிக்கும் வேளையானது மேகங்களும் காரிருளும் சூழ்ந்த ஒன்றாக இருந்தாலும், அழிவின் வேலை ஒரு "குறுகிய வேலை"ஆக (மத். 24:22) மாத்திரமே இருக்கும், அதன் பிறகு உடனே மகிமைவாய்ந்த நீதியின் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கும். D558

## 114. மல்கியா 3:17

**"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்."**

**என் சம்பத்தை** – நம்முடைய கர்த்தராகிய இயேசு இந்த மணிகளில் முதல் மணியாய்க் காணப்பட்டார். மற்ற மணிகள் தேவகுமாரனுடைய சாயலுக்கேற்ப வெட்டப்பட்டு, மெருகூட்டப்படுகின்றன. R5119:1 இவர்களில் நம்முடைய கர்த்தராகிய இயேசுவே மிகப்பெரியவராக இருந்தார். பன்னிரண்டு அப்போஸ்தலரும் பன்னிரண்டு மாபெரும் கற்களாய் இருந்தனர். சுவிசேஷயுகக் காலம் முழுவதும், வெவ்வேறு அளவிலான மணிகள் கண்டுபிடிக்கப்பட்டு, வெட்டப்பட்டு வருகின்றன. முதலாம் உயிர்த்தெழுதலில் தேவன் அவர்கள் அனைவரையும் (ஏற்ற இடத்தில்) தூக்கி வைத்து, பொருத்திடுவார். OV424:3; R4931:1, R5119:1, R5470:4, R5758:1 சபை வகுப்பார். R4646:2 உடன்படிக்கையைக் கைக்கொள்ளும் பலிசெலுத்துபவர்கள். R1170:4 பிரதான ஆசாரியரின் மார்ப்பதக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த 12 விலையுயர்ந்த கற்களால் குறிக்கப்படுகின்றன. T36 சம்பத்து / மணிகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. நாம் அந்தச் சம்பத்தாக / மணிகளாக இருப்பதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம். CR56:3 பழைய ஏற்பாட்டுப் பாத்திரவான்கள் தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, இம்மணிகள் அனைத்தும் தயாராக்கப்பட்டு மகிமைப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. OV119:2; R4931:1 இயேசுவின் தலைமையின் கீழாக, அவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் உள்ளடங்கியிருப்பார்கள். SM130:2 எவ்வாறு வைரங்கள் கடினமாக இருக்கிறதோ அதுபோல, கர்த்தருடைய மணிகளுக்கு உறுதியும், சகிப்புத்தன்மையும், பொறுமையும் தேவைப் படுகின்றது. R5651:2 மணிகளின் நிஜமான பண்புகள் (real qualities) இன்னுமதிகமாக மிளிர வேண்டும் என்பதற்காய் அவைகளை வெட்டி மெருகூட்டப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை நாம் அனைவருமே அறிவோம்; அதுபோல நமக்கும் சோதனைகளும், சிக்கல்களும், துன்புறுத்தல்களும் தேவைப்படுகின்றன. OV425:1 மணிகள் / வைரங்கள் அரிதானவையாகும், வெளிச்சத்தைச் சரியாகப் பிரதிபலிக்கச் செய்வதற்கேதுவாக தயார்படுத்தப்படுவதற்கு முன்பாக, அவற்றைத் தேடி எடுக்கவும், சேற்றில் இருந்து கழுவப்படவும் வேண்டியிருக்கிறது. வைரங்கள் கடினமானவையாகும், இது குணலட்சணத்தைக் குறிக்கிறது; உறுதிப்படுத்தப்பட்டவையாகும், இது நீதிக்கு நேரான மன விருப்பத்தைக் குறிக்கிறது; வெட்டப்பட்டாலன்றி மதிப்பில்லாதவையாகும்; தங்களைத் தாங்களே வெட்டவோ, வடிவமைக்கவோ மெருகூட்டவோ முடியாது; சில சமயங்களில் அவை பொருத்தமானவையாக இருப்பதற்கு முன்பதாக பாதிக்கு மேல் வெட்டப்பட வேண்டியிருக்கும்; மேலும் மெருகூட்டப்படும் போது சிமெண்டில் பதிக்கப்படுகின்றன. R2404:3, R2405:3 கடந்த காலத்து உண்மையுள்ள யூதர்கள் பூமிக்குரிய தளத்தில் மணிகளாக / வைரங்களாக இருந்தது போல, கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய மணிகளாக / வைரங்களாக இருக்கப்போகிறார்கள். R4931:1 எப்படி மணிகள் / வைரங்கள் அரிதானவையோ, அதுபோல "கர்த்தருடைய சம்பத்தும்" ஒரு சிறு மந்தையாக மாத்திரமே

இருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. (லூக். 12:32) HG752:1 சொற்ப மணிகளை / வைரங்களை மாத்திரமே நீங்கள் கண்டடைந்தால், நீங்கள் மனச்சோர்வடைய வேண்டாம். R1348:6 மணிகள் / வைரங்கள் தங்களுக்கென ஒரு மதிப்பை, ஓர் உள்ளார்ந்த தரத்தைக் கொண்டுள்ளன, அவை ஏராளமாக கொட்டிக்கிடந்தாலும் பாராட்டப்படும், ஆனால் அவை ஒப்பீட்டளவில் குறைவாக கிடைப்பதினால், அவை இன்னுமே மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. R2404:2 நியாயப்பிரமாணத்தின் ஆவியைக் குறிக்கின்ற ஆரோனுடைய மார்ப்பதக்கத்தின் முன் பகுதியே, பொன்னில் பதிக்கப்பட்டிருந்த மணிகளை / கற்களைச் சுமந்துகொண்டிருந்தது, இம்மணிகள் உத்தம இஸ்ரயேலை, கர்த்தரின் "சிறு மந்தையைக்" குறிக்கின்றன. T36 வசனம் 15ன் "அகங்காரிகளிடமிருந்து" வேறுப்படுத்தப்படுகின்றது; இவர்கள்தான் அந்த "தேவனுக்குப் பயந்தவர்கள் மற்றும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்கள்." (வசனம் 16) R2404:2

**நான் சேர்க்கும்** – ஒன்றுசேர்ப்பதற்காய் நான் வரும் (நாளிலே). SM246:T; R5426:2 அவர்களை ஆயத்தஞ்செய்வது. R5119:2 அவர்களைத் தேடிச் சேகரிப்பது. B164 தேவனால் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, வெட்டப்பட்டு, மெருகூட்டப்பட்டு, பொருத்தப்படுவதற்காக மாபெரும் இரத்தினக்கல் செதுக்குபவராகிய (the great Lapidarist) இயேசுவின் கைகளில் வைக்கப்படுகின்றன. R5119:2 ஓர் உடனடியான வேலையை அல்லாமல், மாறாக ஒரு படிப்படியான வேலையை இது குறிக்கிறது. R58:2* சத்தியமெனும் காந்தம் சம்பத்தைக் கூட்டிச்சேர்த்து வருகின்றது, மேலும் உலகத்தின் மற்றும் பெயர்ச் சபையின் நிந்தைகள், எஜமானருடைய பயன்பாட்டிற்காக அவர்களைச் சுத்திகரித்து, பொருத்தி வருகின்றன. R472:6 விலையேறப்பெற்ற கற்களைக் கையாளும் கலைஞர், முதலில் அவை சரியாக வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்த பிறகே, அவற்றைத் தூக்கிச் சரியான இடத்தில் வைக்கின்றார் – தூக்கிச் சரியான இடத்தில் வைப்பதற்கும், கற்களின் அழகுக்கும் நிறைய தொடர்பு உள்ளது. OV424:2 தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் முழு எண்ணிக்கையும் கண்டுபிடிக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு தயார் செய்யப்படும் வரை, சம்பத்து உருவாக்கப்படாது, மகிமைப்படுத்தப்படாது. SM246:T தேவன் தம்முடைய மணிகளை, திவ்ய சுபாவம் எனும் பொன்னில் பதித்து, அழகான கிரீடம் ஒன்றை உருவாக்கிடுவார், அது அணிவதற்காய் அல்லாமல், மாறாக தூதருக்கும் மனுஷருக்கும் காட்சிப்படுத்தப்படும். OV424:4 "...என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்..." (சங். 50:5) "...கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள்..." (மத். 13:30) "...அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை... கூட்டிச் சேர்ப்பார்கள்..." (மத். 24:31) B164; C139; D600; OV107:T; R4244:4*

**நாளிலே** – ஒரு வகையில், கி.பி. 29ல் தொடங்கிய யூத அறுவடையைக் குறிக்கிறது; ஆனால் அதன் முழுமையானது சுவிசேஷயுக அறுவடையுடன் தொடர்புடையதாகக் காட்டப்பட்டுள்ளது. R2543:5 விதைக்கும் காலத்தை விட அறுப்புக்காலத்தையும், நடவுசெய்யும் காலத்தை விட சேர்ப்புக்காலத்தையும் குறிக்கின்றது – சகலத்தையும் தேவனுக்கென்று அர்ப்பணித்துள்ளவர்களைப் பூரணப்படுத்துவதற்கான காலத்தையும் குறிக்கின்றது. R442:2 கர்த்தருடைய இரண்டாம் பிரசன்னத்தின் காலம். B164; F274; T86; OV425:2 தேசங்களுடைய வீழ்ச்சியின் போது கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுகிறது. R82:5* கடந்த 6000 ஆண்டுகளாகவே கர்த்தர் தம்முடைய சம்பத்தைச் சேர்த்து வருகின்றார் என்கிற கருத்திற்கு முரணானது. R2404:2 உண்மையுள்ள "சம்பத்து / மணிகள்" அல்லது "கோதுமை" வகுப்பாருக்கு மகிமை சேர்க்கும் நாள், "களைகள்" வகுப்பாருக்கு வேறுமாதிரியான அனுபவத்தைத் தருகின்ற நாள். R2543:6

**அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்** – ஆவிக்குரிய இஸ்ரயேல்: இயேசு, தலையாகவும்; சபை, அவருடைய சரீர அங்கத்தினராகவும் இருப்பார்கள். R4931:1 பூமிக்குரிய ஒவ்வொரு நம்பிக்கையையும், குறிக்கோளையும், நோக்கத்தையும் பலிசெலுத்தத் தயாராக இருப்பவர்கள்.

R5426:2, R4873:2, R3871:4, R3849:5, R795:5, R176:2 தேவன் மற்றும் அவருடைய சத்தியத்திற்கு உண்மையுள்ள, நேர்மையான, வைராக்கியமுள்ள ஒரு வகுப்பார். R5145:1; OV424:7 இந்த விலையேறப்பெற்ற கற்கள் அனைத்தும் தேவனால் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கின்றன; அவர்களை ஆயத்தஞ்செய்வதில் பிரதான கலைஞராக (Master Workman) நமது கர்த்தரையே தேவன் நியமித்துள்ளார். R5119:1 யூத யுகத்தின் அறுவடையில் பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலிலிருந்து கூட்டிச்சேர்க்கப்பட்ட மற்றும் இப்போது பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலிலிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டு வருகிற உண்மையுள்ள வகுப்பார். R1538:5 அவர்களின் குணலட்சணம் உறுதியான தாகவும், நீதிக்கான அவர்களின் அன்பு நிரந்தரமானதாகவும், முழுமையாக வளர்ச்சியடைந்த ஒன்றாகவும் இருக்கிறது, அவர்களது அன்பின் ஆவி அழியாதபடிக்குக் குறியிடப்பட்டுள்ளது. R2689:5 சத்தியத்தின்மீதான அன்பினால் இது வெளிப்படுத்தப்படுகிறது. வேறெந்த நோக்கத்திலிருந்தோ வேறெந்தக் காரணத்திலிருந்தோ அதைப் பெற்றுக்கொள்ள முனைபவர்களுக்கு, தேவன் கொடிய வஞ்சனைகளை அனுப்புகிறார். R5800:4 மணவாளனின் நாமம் அவருடைய மணவாட்டிக்கு வழங்கப்படுகின்றது. R3970:5 "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." (2 தீமோ. 2:19) F76; R820:6 வருங்கால வெகுமதி குறித்த பாடம். R4930:6

**தன்னுடைய குமாரனை** – சரியான தகப்பன் என்பவர் மற்றவர்களின் மிகப்பெரிய தவறுகளைப் பொருட்படுத்தாமல் இருந்தாலும், தன்னுடைய புத்திரனைப் பொறுத்தவரையிலோ அவனைப் போதித்து, அவனை ஒழுங்குப்படுத்துவார். OV425:1; R2543:4

**நான் அவர்களைக் கடாட்சிப்பேன்** – சகல துன்பங்களிலிருந்தும் அவர்களை விடுவிப்பார் என்கிற அர்த்தத்தில் அல்ல. R5119:2 அவர்களுக்கு மிகவும் பாரமாக இருக்கும் விஷயங்களிலிருந்து அவர்களை விடுவிப்பது. R5119:2 ஆனால் அவர்களைப் புத்திரராக ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான மெருகூட்டல் செயல்முறைகளிலிருந்து அவர்களை விடுவிக்கமாட்டார். R2405:4 விலையுயர்ந்த மணிகளைப் பேணிப்பராமரிக்கும் ஒருவரைப் போல, தேவனும் தம்முடைய பரிசுத்தவான்களைக் கவனித்துக்கொள்கின்றார். OV424:2 மகா உபத்திரவ காலத்தின் உச்சக்கட்டத்தைக் கடந்து செல்வதிலிருந்து அவர்கள் காக்கப்படுவார்கள். OV425:2; C146; R2543:5, R1538:5, R1441:4 மகா உபத்திரவ காலத்திலிருந்தும், "மகா உபத்திரவ காலத்தின்" போது துவங்கும் 1000 ஆண்டின் நியாயத்தீர்ப்பிலிருந்தும் அல்லது விசாரணையிலிருந்தும் (கடாட்சிக்கப்படுவார்கள்). R2405:4 "இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பிக்க ... பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்." (லூக். 21:36) C146 "நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு." (1 கொரி. 11:32) R2405:4

# புதிய ஏற்பாடு

## 1. மத்தேயு 4:4

**"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."**

**அவர் பிரதியுத்தரமாக** – இயேசு எதிராளியுடன் காரியங்களை விவாதித்தார் என்கிற காரியமானது, இதுமாதிரி, அதாவது, ஆவியுலகத்துடன் நாமும் தொடர்புகொள்ளலாம் என்பதற்கான ஒரு சாக்குப் போக்கை (excuse) நமக்கு அளிப்பதில்லை. R5084:6 சோதனையை விட்டுவிலகுவதில் நாம் (கர்த்தரைப் போல) உறுதியாக இருந்தால், அது நம்முடைய குணலட்சணத்தின் வலிமையை அதிகரிக்கச் செய்திடும், ஏதோ அந்த நேரத்திற்கு மாத்திரமல்லாமல், அடுத்தடுத்த சோதனைகளிலும்கூட அதனை அதிகரிக்கச்செய்திடும். R2567:3

**அப்பத்தினாலே மாத்திரம்** – இவ்வாறு தமது தனிப்பட்ட ஆறுதலுக்காகவும், குணமாக்குதலுக்காகவும் தெய்வீக வல்லமையைப் பயன்படுத்த மறுத்தார். F636, 650; R4970:4 உயிர் வாழ்வதற்கு இயற்கையான போஜனம் மாத்திரம் போதாது. நமது தேவனாகிய கர்த்தருடைய புன்சிரிப்பு, தயவு, அங்கீகாரம் என்பவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் நம்மால் ஜீவிக்க முடியாது. இவை இல்லாமல் வாழ்வதென்பது, நம்மைப் பொறுத்தவரையிலும், ஜீவிப்பது என்றாகாது. R3717:6 ஜீவனை உண்டாக்குகிறதும், ஜீவனில் மரணத்தை விழுங்குகிறதுமான அப்பேர்ப்பட்ட அப்பத்தை, அப்பேர்ப்பட்ட போஜனத்தை மனிதனால் எங்குமே கண்டுபிடிக்க முடியாது. R3058:3 உலகம் சமீபத்தில் அனுபவித்து வருகிற கல்வி, ஐசுவரியம், சவுகரியங்கள், மருத்துவ வசதி, உணவுமுறை குறித்த அறிவு முதலானவை எவ்வளவுதான் அதிகரித்திருந்தாலும், அது உலகத்துடைய சமாதானத்தை அதிகரிக்கச்செய்யவில்லை. NS521:2 பூமிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆவிக்குரிய சிலாக்கியங்களைப் பலிசெலுத்துவது அல்லது ஆவிக்குரிய பொறுப்புகளை மீறுவது சம்பந்தமாக வருகிற ஒவ்வொரு சோதனையும் / தூண்டுதலும், (கர்த்தருக்கு வந்த) இந்த வகையான சோதனைக்கு ஒத்ததாக இருக்கும். R4544:6 நாம் அதிகபட்சம் செய்ய வேண்டியது என்னவெனில், இம்மைக்குரிய ஏற்பாடுகள் குறித்துள்ள வாக்குத்தத்தத்தையும், அவைகளின்பேரில் நமக்குள்ள நம்பிக்கையையும் குறித்து அவரிடம் தெரிவிப்பதேயாகும். R5202:5 கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக இருப்பதற்கு தேவனே நம்மை அழைத்திருக்கிறாரெனில், உணவு பற்றாக்குறையோ அல்லது வேறு ஏதாகிலுமோ நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயமாக்குவதற்கான முழுமையான வாய்ப்பிலிருந்து நம்மைத் தடுக்க முடியாது. R5202:5 தவறாக எடுக்கப்படும் பாதையானது, ஏசா தன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை ஒன்றுமில்லாத கூழுக்காக விற்றுப்போட்டதில், முன்னரே அடையாளமாக காண்பிக்கப் பட்டுள்ளது. (எபி. 12:16) R4544:6, 3717:6, 2567:2

**மனுஷன் (பிழைப்பதில்லை)** – எனதனைத்து விருப்பங்களும் / தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டாலும் கூட, என் அப்பாவுடனான ஐக்கியமில்லாமல் என்னால் வாழ்க்கையை அனுபவிக்க இயலாது. R314:3

**தேவனுடைய வாயிலிருந்து** – கீழ்ப்படிதல் நித்திய ஜீவனுக்கான நிபந்தனையாக இருக்கிறதென்று தேவ வார்த்தை நமக்குத் தெரிவிக்கிறது. R4896:6

**புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்** – வார்த்தையின் பால் ஆகாரம் மாத்திரமல்ல. R3622:2, 1568:2 நித்திய ஜீவனின் அனைத்து நம்பிக்கைகளும் தேவனை – தெய்வீகத் திட்டம் மற்றும் அதின் வாக்குத்தத்தங்களை – சார்ந்ததாயிருக்கின்றன. R3058:5, 4896:3 ஒவ்வொரு புத்திமதியும், ஒவ்வொரு ஊக்குவிப்பும், ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நித்திய ஜீவனுக்கென்று

அழைக்கப்பட்டவர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததவையாகும். R4896:6, 3060:4 நம்முடைய சரீரப்பிரகாரமான வாழ்வை நிலைக்கச்செய்வதற்கு அநுதினமும் இயற்கையான அப்பம் / ஆகாரம் தேவைப்படுவதுபோல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை நிலைக்கச் செய்வதற்கு ஆவிக்குரிய அப்பமாகிய சத்தியமும் நமக்குத் தொடர்ந்து தேவைப்படுகிறது. R136:3* சத்தியமே மனிதனுக்குரிய சரியான போஜனமாயிருக்கிறது, மேலும் அதில் பெரும் பங்கினை விசுவாசத்தின் மூலமாக பெறப்பட வேண்டியிருக்கிறது. இப்படியாக நாம் விசுவாசத்தினால் பிழைக்க வேண்டியிருக்கிறது. எப்படிப் புசிப்புக்கு அப்பமோ, அதுபோல, விசுவாசத்திற்குச் சத்தியம் இருக்கிறது. R74:1* நமக்கான தேவனுடைய வாயின் வார்த்தைகளும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கும் பரிசுத்த தூதருக்குமான தேவனுடைய வார்த்தைகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை. நமக்கோ அவை நீதி, அனுதாபம், குமாரத்துவம், வாக்குத்தத்தம், அறிவுரை, பொறுமை, ஆறுதல் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவைகளின் வார்த்தைகளாக இருக்கின்றன. R3058:6 – 3060:4 அவருடைய வார்த்தை இப்படியாக உள்ளது: “[தன்னுடைய உடன்படிக்கையை நஷ்டப்படுத்தி] தன் [பூமிக்குரிய] ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் [பூமிக்குரிய] ஜீவனை இழந்துபோகிறவன் [தன்னுடைய அர்ப்பணிப்பின் உடன்படிக்கைக்கு இசைவாக, மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக தன்னுடைய ஜீவனைக் கையளிக்கிறவன்] அதைக் [நித்திய ஜீவனைக்] காப்பான்.” (மத். 10:39) R2244:1 அவர் நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவராக இருந்திருக்கிறாரென்றால், அது தெய்வீகப் பிரமாணத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததன் விளைவாகவே இருந்திருக்க வேண்டும். R4544:5, 3058:5, 2567:2 அவர் இந்தப் பரலோக போஜனத்தையே புசித்து வந்தார். பிதாவின் சித்தத்தைச் செய்துமுடிப்பதற்கு அவர் ஆவியிலும், உறுதியிலும் (determination) திடமாக காணப்பட்டார். R3717:6 நமது தேவனுடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே நம்முடைய போஜனமும் பானமுமாய் இருக்க வேண்டும். (யோவா. 4:34) R1689:3 “அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.” (1 யோவா. 2:5) R4897:4

**என்று எழுதியிருக்கிறதே** – அவர் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தாலும், சோதனைகளுக்கான தம்முடைய பதில்களாக “எழுதியிருக்கிறவைகளையே” (“written”) சார்ந்திருந்தார். R1688:4; Q708:T இதுவே உண்மையான தேவ பிள்ளையின் உறுதியான தற்காப்பாகும். F200

## 2. மத்தேயு 5:3

### “ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.”

**ஆவியில் எளிமையுள்ளவர்கள்** – மனத்தாழ்மையானது ஆசீர்வாதம் / பாக்கியம் (Palace of Blessedness) எனும் மாளிகையின் அஸ்திபாரமாக இருக்கின்றது. R5003:5 கிரேக்க வார்த்தையானது “மிகவும் ஏழை, ஒன்றுமேயில்லாதவர்” என்பதைக் குறிக்கிறது. R2250:1 சில வகைகளில், இந்த முதலாம் பாக்கியமான நிலையானது மற்றனைத்தையும் உள்ளடக்கினதாய் இருக்கிறது. இது ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் மாளிகையின் நுழைவாயிலாக, முகப்பறையாக இருக்கிறது, இதிலிருந்து மற்றெல்லா அறைகளுக்கும் செல்ல முடியும். R2249:6 ஐசுவரியவான்கள், கல்விமான்கள், முக்கியஸ்தர்கள், ஆட்சியாளர்கள், தற்பெருமையுள்ளோர் போன்றவர்கள் அல்ல, மாறாக தன்னைக் குறித்து உயர்வாக எண்ணாமல், தங்களுடைய சிறுமையையும் அபூரணத்தையும் உணருகிறவர்கள். R3733:6, 5991:5, 2139:1 ஆனபோதிலும், நம்முடைய தற்போதைய பலவீனமான மற்றும் விழுந்துபோன நிலைமையில், மிதமான ஏழ்மையே (moderate poverty) நமக்கேற்ற மிகவும் சாதகமான நிலையாக இருக்கும். R2250:1 மனத்தாழ்மையுள்ளவர்கள், ஆகையால் கற்றுக்கொள்ளக் கூடியவராயும் இருப்பார்கள். R4969:4, 4557:3 தாழ்மையுள்ள அனைவருமே இராஜ்யத்தை அடைய மாட்டார்கள் என்றாலும், தாழ்மை இல்லாத எவராலும் இராஜ்யத்தை அடைய முடியாது. R2585:2

தேவன் பெருமை மற்றும் சுயநலமான இலட்சியம் கொண்ட ஒருவரை, இராஜ்ய வகுப்பாரில் அங்கத்தினனாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். R5003:5, 2585:3 பணப்பையில் எளிமை / தரித்திரனாய் இருப்பவனை இது குறிக்க வேண்டிய அவசியமில்லை. சிலர் பணப்பையில் எளிமை / தரித்திரராய் இருந்தும் (அ) அறிவிலும், சாதனைகளிலும் தரித்திரராய் இருந்தும், ஆவியில் செருக்குடையவர்களாய்க் காணப்படுகின்றனர். R2585:5, 1920:5 தெய்வீகக் கிருபையினைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக இருப்பதற்கு முன்பாக, நம்முடைய சொந்த ஆவிக்குரிய வறுமையைக் குறித்து முழுமையான புரிந்துணர்வு அவசியமானதாய் இருக்கிறது. R2250:1 நம்முடைய பார்வையில் நாம் சிறியவர்களாக இருக்கும்போது மாத்திரமே தேவனால் நம்மைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த முடியும். R1920:5 லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தில், "ஆவியில்" எனும் வார்த்தையைத் தவிர்த்திருக்கிறார்; அதாவது தங்களைப் பலியாகச் செலுத்துவதன் மூலமாக, (ஆவியில் மாத்திரமல்லாமல்) பொருளாதார ரீதியாகவோ, சமுதாய ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ ஏழைகளாக மாறுபவர்கள் பாக்கியவான்கள். பலிசெலுத்தும் அனைவரும் பாக்கியவான்கள். R1493:5* ஒருவேளை ஒருநாள் வெற்றிப்பெற்றுவிட்டு, அதேசமயம் அடுத்தநாள் அவமானத்தின்கீழாக வருத்தமடைவீர்களானால், ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவிக்குரிய வகையில், வேண்டிய அளவுக்கு நீங்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை என்பதையே இது அர்த்தப்படுத்துகின்றது. R1920:6

**பாக்கியவான்கள்** – மகிழ்ச்சியைக்காட்டிலும் மிகவும் அதிகமான ஒன்றாகும். மகிழ்ச்சி என்பது பொதுவாக வெளிப்புறக் காரணங்களினால் ஏற்படுகின்றது, அதே சமயம் இங்குள்ள பாக்கியவான் எனும் வார்த்தை மாபெரியவர்கள் அல்லது கனத்திற்குரியவர்கள் எனும் கருத்தையும் சுமந்து வருகிறது. R2249:6 மகிழ்ச்சி என்பது அவ்வப்போது வரும் சந்தோஷமான மனநிலையை விவரிக்கிறது; ஆனால் பாக்கியம் என்பது தேவனுக்கு இசைவான குணலட்சணத்தை அடைவதன் விளைவாகிய அந்த நிரந்தர மகிழ்ச்சியுடனும், ஆறுதலுடனும் தொடர்புடையதாயிருக்கிறது. R3733:2 பத்துக் கட்டளைகளுக்கும், எட்டு மலைப்பிரங்கச் செய்திகளுக்கும் இடையே உள்ள வேறுபாடானது, நியாயப்பிரமாண யுகத்திற்கும், கிருபையின் யுகத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குகின்றது. R5003:2 கிறிஸ்து மூலம் நாம் அனுபவிக்க வேண்டும் என்று பிதாவானவர் வடிவமைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான குறிப்பிட்ட குணலட்சணங்கள் இந்த மலைப்பிரசங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. R2249:3, 2240:1 இங்குள்ள (மத். 5ல் உள்ள) குணலட்சணங்களின் விளக்கத்தையும், 1 கொரி. 13ல் உள்ள அப். பவுலினுடைய இதே குணலட்சணங்கள் குறித்த சுருக்கத்தையும், ஒன்றுவிட்டு இன்னொரு ஞாயிற்றுக்கிழமைகளில் வாசிக்கவும், தியானிக்கவும் நாங்கள் அறிவுறுத்துகிறோம். R2240:1, 2234:5, 2205:6

**பரலோகராஜ்யம் அவர்களுடையது** – அவர்களே புதிய யுகத்தின் வருங்கால இராஜாக்களும் ஆசாரியருமாவார்கள். R2139:5* அவர்களுக்கே, குருவினுடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்களும், ஞானம், ஆறுதல் மற்றும் அறிவுறுத்தல் என்பவைகளின் படிப்பினைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. R5991:5 இப்போதும்கூட இவர்கள் கருநிலையான இராஜ்யத்தில் உள்ளடங்கியிருக்கின்றனர். R2139:4* ஆவியில் எளிமையுள்ளவர்களால் மாத்திரமே, இராஜ்யத்திற்குத் தங்களைத் தகுதிப்படுத்து வதற்கு தேவையான ஒழுங்குப்படுத்துதலுக்கும் (discipline), பயிற்சிக்கும் (training) தங்களை ஒப்புக்கொடுக்க முடியும். R2139:4*

## 3. மத்தேயு 5:4

### "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்."

**துயரப்படுகிறவர்கள்** – ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் மாளிகையின் வரவேற்பு அறை துக்கப்படுதலின் – துயரப்படுதலின் அறையாக இருக்கிறது. R5003:6 தங்கள் சொந்த குறைபாடுகளை உணர்ந்து

இரக்கத்தோடு இருப்பவர்கள், இவர்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிற பாவப்பட்ட சிருஷ்டிகள் துக்கத்திலும், வலியிலும், ஏமாற்றத்திலும் மரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, அவர்களுக்காகப் பரிதபிக்கக்கூடியவர்கள். R3734:1,2, 5003:6, 2586:1, 2250:2; NS190:4 உலகம், மாம்சம் மற்றும் பிசாசின் காரியங்களிலிருந்து நாம் முழுவதுமாக பிரித்தெடுக்கப்படுவதற்கு இது அவசியமாக இருக்கிறது. R5003:6 சீயோனில் துயரப்படுகிறவர்கள், பெயரளவிலான சபையில் உள்ள உண்மையான பரிசுத்தவான்கள், அதில் உள்ள உலகத்தன்மையைக் கண்டு வேதனையடைந் துள்ளனர். D30; R1441:2 துயரப்படுவது என்பது ஒரு குணலட்சணம் அல்ல, மாறாக அது கர்த்தருடைய பார்வையில் ஏற்புடையதாயிருக்கும் ஒரு மனப்பான்மையைக் குறிக்கின்றது. R2585:6 நமது பரமபிதா எப்போதும் துயரப்பட்டுக்கொண்டிருப்பவரில்லை. மாறாக, கருத்து என்னவெனில், இப்பொழுது துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதேயாகும். R2585:6 அக்கிரமம் பெருகுவதினிமித்தம் (துயரப்படுகிறவர்கள்). R2138:6*, 1493:6* அவருடைய சீஷராக மாறிவிட்டால், நாம் நமது சோதனைகள், கஷ்டங்கள், துயரங்கள், கண்ணீர் போன்றவற்றிலிருந்து விடுவிக்கப்படுவோம் என்று எதிர்பார்க்கக்கூடாது, மாறாக அத்தகைய அனுபவங்கள் நம்முடைய நன்மைக்கேதுவாக மேற்பார்வை யிடப்படும். R4557:5 அனுதாபத்தினால் ஏற்பட்ட இந்தத் துயரமே, லாசருவின் கல்லறையில் இயேசுவைக் கண்ணீர் சொரிவதற்கும், அவர் "துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமா யிருந்தார்" என்று அழைக்கப்படுவதற்கும் ஏதுவுண்டாக்கியது. (ஏசா. 53:3) R3734:3 இந்த அனுதாபத்தின் ஆவியை வளர்த்திக்கொள்வதற்கு நாம் அடிக்கடி மற்றவர்களையும், அவர்களுடைய நலன்களையும், நம்முடைய பிரச்சனைகள்போன்று எண்ணி, நாம் நமது உதவிகரத்தை நீட்ட வேண்டும். R2586:1 "நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்." (யோவா. 16:20) R1493:6*

**பாக்கியவான்கள்** – பல கிளைகளையுடைய மரமானது வேரிலிருந்து வளர்வதுபோன்று, முதலாவது அவசியமாய் இருக்கும் இக்குணலட்சணம் வளரும்போது, ஆவியின் மற்றக் குணலட்சணங்களும் வளருகின்றன. R2585:3 ஒருவேளை, மனுக்குலத்தின் பெரும்பாலான ஜனம் கணிசமான துயரத்தையும் துக்கத்தையும் ஏற்கனவே அனுபவித்துவிட்டார்கள் என்று நாம் நினைத்தோமேயானால், அந்தப் பெரும்பாலான ஜனம் ஆறுதலும், சந்தோஷமும் அடைவார்கள் என்று நாம் ஆறுதலடையலாம். NS614:4

**அவர்கள் ஆறுதலடைவார்கள்** – ஆறுதல் என்கிற வார்த்தையில், நிவாரணம் (relief) கிடைக்கும் என்கிற கருத்து காணப்படுவதில்லை, மாறாக ஒன்றாக பலப்படுத்தப்படுவார்கள் அல்லது கூடுதலான பலம் கொடுக்கப்படும் என்கிற கருத்தே காணப்படுகிறது. R3734:4 பாவத்திற்கு எதிரான அவர்களின் கண்ணீரையும், அவர்களின் பிரயாசங்களையும் நம்முடைய கர்த்தர் கவனிக்கின்றார். R2250:3 அவர்களின் துயரப்படுதல், கர்த்தருடைய தயவினை வேண்டிக்கொள்வதற்கு மனதைத் ஆயத்தப் படுத்தியிருக்கும் என்பதால் அவர்கள் ஆறுதலடைவது உடனடியாகத் தொடங்கும். R3734:2, 2586:1 தங்களைத் தாங்களே ஆறுதல்படுத்திக் கொண்டு, அவருடைய சரீரத்தின் மற்ற அங்கத்தினரையும் ஆறுதல்படுத்துவதில் கர்த்தரால் பயன்படுத்தப்படுபவர்கள் பாக்கியவான்கள். R3734:5 நீதிமான்களின் வெகுமதியைப் பெற்றுக்கொள்வதிலும், நீதி மற்றும் சத்தியத்தின் இறுதி வெற்றியைக் காண்பதிலும் (ஆறுதலடைவார்கள்). R1493:6* "சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும்." (ஏசா. 61:3) D30

## 4. மத்தேயு 5:5

**"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்."**

**சாந்தகுணமுள்ளவர்கள்** - ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் மாளிகையின் நூலகமாக சாந்தகுணம் காணப்படுகிறது. R5003:6 தெய்வீகச் சித்தத்திற்கு அடிபணிவது. R2586:3 கற்பிக்கப்படக்கூடிய / கற்றுக்கொள்ளுகிற குணம்; கற்றுக்கொள்வதில் அதிகம் பெருமை பாராட்டாது. R5003:6, 5186:1, 2586:1; Q469:2 சுயக்கட்டுப்பாடுடைய, மென்மையான, எளிதில் ஆத்திரமூட்டப்படாத அல்லது எரிச்சலடையாத குணம், காயத்தையோ எரிச்சலையோ பொறுத்துக்கொள்ளுகிற குணம். R3734:5,6 குணலட்சண வளர்ச்சியில் மதிப்புமிக்க பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கும், வருங்காலத்தில் உலகத்திற்குப் போதிக்கப்போகிறவர்களாக இருப்பதற்கும் சாந்தகுணம் இன்றியமையாததாக இருக்கின்றது. R5003:6, 4557:3,6 “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்.” (யாக். 4:6) E255 முதல் இரண்டு குணலட்சணங்களாகிய மனத்தாழ்மையும், துயரப்படுபவரின் பெரிய அனுதாபங்களும் இல்லாமல் இதனைப் பெற்றிருக்க முடியாது. R2586:2 உள்ளான குணாம்சமாகிய இரண்டாம் குணாதிசயத்தின் வெளிப்புற வெளிப்பாடு. R2586:2 தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் இந்தச் சாந்தத்திற்கும், சுயவிருப்பங்களை நிறைவேற்றுவதற்கென அவ்வப்போது காட்டப்படும் சாதாரணமான நிதானம் / கனிவுக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. R2586:2 எந்த அறிவாளியாலும் ஒரு குழந்தையிடமிருந்து ஏதோவொன்றைக் கற்றுக்கொள்ள முடியும்; ஆனால் சாந்தகுணமில்லாத ஒருவரோ எந்த இடத்திலும் எந்தவொன்றையும் கற்றுக் கொள்வதற்குச் சிரமப்படுவார். Q469:2 பூமியிலிருந்தும் அதிலுள்ள அனைவரிடத்திலிருந்தும் சிறந்ததைப் பெற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடைய, துணிகரமான, பிடிவாதமான, மூர்க்கமான, சுய-சித்தம் செய்யும் நபர்களை இது குறிக்காது, மாறாக வரவிருக்கும் இராஜ்யத்தின் நலன்களுக்காக அநீதியாக நடத்தப்படுவதற்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்களை இது குறிக்கிறது. R4557:6, 3734:5 வசனம் 5ன் பாக்கியமான சாந்தகுணமுள்ளவர்களே, 10 மற்றும் 11ம் வசனங்களில் வருகிற தீமையையும் தப்பறையையும் எதிர்த்து நின்று, நீதியையும் சத்தியத்தையும் ஆதரிக்குமளவுக்குத் திடமனமும் தைரியமுமுள்ள அதே வகுப்பாராயிருக்கிறார்கள். R1493:6* தங்களைப் பற்றி மிகவும் உயர்வாக மெச்சிக்கொள்வதை மேற்கொள்வதும், தங்கள் சொந்த தாலந்துகளைப் பொறுத்தவரையில் ஒரு தெளிந்த புத்தியின் ஆவியைப் பெற்றுக்கொள்வதும் பலருக்கு ஒரு வாழ்நாள் பணியாக இருக்கின்றது. E255 இறுமாப்பை விடவும் தேவனுடைய பிள்ளைக்கு ஆபத்தானது வேறு எதுவுமிருக்காது; இது இருதயம் சீர்திருத்தப்படுவதைத் தடுக்கிறது, அதேபோல மற்றவர்களுக்கும், குறிப்பாக தேவனுடைய ஊழியத்திலும் மெய்யாகவே பிரயோஜனமாக இருப்பதிலிருந்து அவர்களைத் தடுத்துவிடுகின்றது. R5186:1

**அவர்கள்** - ஆபிரகாமின் சந்ததி, மேசியாவின் அங்கத்தினர். R5370:5, 5003:6, 4557:6 சுயநலமும், தணியாத இச்சைநிறைந்த பேராசையும் கொண்டவர்கள் அல்ல. D633

**பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்** - கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட மாபெரும் பலியால் பூமியும்சரி, மனிதனும்சரி விலைகொடுத்து வாங்கப்பட்டனர். R2250:3 மற்றவைகளைப் போலவே இந்தக் குணலட்சணத்தின் வெகுமதியும் எதிர்காலத்தில் கொடுக்கப்படும். R2586:6 தேவனுடைய இராஜ்யம் வந்து, அவருடைய சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுவது போல, பூமியிலும் செய்யப்படும்போது. R3734:5 தற்காலத்தில், கர்த்தருடைய பின்னடியார்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் பூமியில் அதிக சந்தோஷமாயிருக்கிறார்கள்; மற்றவர்கள் (உலகத்திலுள்ளவைகளை) பேராசையோடு பின்தொடர்ந்து கொண்டிருக்கையில், இவர்களோ சகலவித நன்மைகளையும் அனுபவித்து வருகிறார்கள் (1 தீமோ. 6:17). R3734:6, 2586:3 வீடுகள், நிலங்கள், பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் நண்பர்களை இழந்து, இறுதியில் அவர்கள் பூமியையே சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். R4557:6 ஆபிரகாமின் சந்ததியாக, முதன்மை மற்றும் மூல உடன்படிக்கையின் கீழாக. மேசியாவின் அங்கத்தினராக, இவர்கள் பூமியின் முழு சுதந்தரத்தையும், கட்டுப்பாட்டையும் கொண்டிருப்பார்கள். R5370:5, 5003:6 முதற்பேறானவர்களின் சபையானது விரைவில் முழு

சுதந்தரத்தையும், பூமியையும், வல்லமையையும், அதிகாரத்தையும், மகிமையையும், கனத்தையும் பெற்றுக்கொள்வார்கள். R1164:2,4 தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் கடைசி அங்கத்தினன் ஆயத்தமாக்கப்பட்டவுடன், “ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்.” (சங். 2:8). R2250:4 அதை மீண்டும் தேவனுடைய பரதீசாக, உலகம் முழுவதும் ஏதேனாக மாற்றுவதற்காக. R4557:6 இந்த யுகத்தின் ஜெயங்கொள்ளுபவர்கள் இப்போது விசுவாசத்தின் மூலமாக அதனை சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள், மேலும் அடுத்த யுகத்தின் ஜெயங்கொள்ளுபவர்களோ உண்மையிலேயே அவ்வாறு சுதந்தரித்திருப்பார்கள். R3734:6 ஆயிர வருட யுகத்தின் போது, மீட்பின் வகுப்பாரைச் சேர்ந்த சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். R3734:6 மேசியாவினுடைய ஆளுகையின் முடிவிலோ, சாந்தகுணமுள்ளவர்கள் தங்களுடைய சுதந்தரமாகிய பூமியை மனுக்குலத்திடம் கொடுத்து விடுவார்கள். R5004:1, 2586:3

## 5. மத்தேயு 5:6

### “நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.”

**நீதியின்மேல்** – சரியானவை மற்றும் உண்மையானவைகளின்மேல் (சத்தியத்தின்மேல்). R4971:1, 3735:1 ஞானம், அறிவு, நன்மை மற்றும் உண்மை பற்றிய புரிதல். R3284:6 தெய்வீக ஏற்பாடு எனும் மேசையிலிருக்கும் திருப்தியடையச்செய்யும் பதார்த்தங்கள். OV260:3 “நீதிமான் ஒருவனும் இல்லை, ஒருவனாகிலும் இல்லை” (உரோ. 3:10) என்று வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. இருப்பினும், தேவன் அங்கீகரிக்கக்கூடிய சார்புநிலையான நீதியொன்று (relative righteousness) உள்ளது. R5218:2 நீதியான இருதயம் அல்லது குணலட்சணம். R5901:3* நீதியானது – நியாயம் மற்றும் அநியாயம், சத்தியம் மற்றும் தவறான உபதேசம், பரிசுத்தம் மற்றும் பாவம் போன்ற – அதன் பல்வேறு பகுதிகளுடன் மிகவும் பின்னிப்பிணைந்துள்ளது – ஒரு விஷயத்தில் (element) கவனக் குறைவாக இருப்பவர் எல்லாவற்றிலும் குறைவுபடுவார். NS123:2 இங்கே நீதி என்பது ஒவ்வொரு விஷயத்திலும் உள்ள சரியானவற்றிற்கும், உண்மையானவற்றிற்கும் கூட பொருந்துகின்றது. R3735:1; NS120:4 புத்தாண்டு என்பது புதிய காரியங்களின் துவக்கம் என்பதினால் மாத்திரமல்லாமல், விடுமுறை காலத்தில் ஏற்படும் இருதய ஏமாற்றங்களாலும் கூட, புத்தாண்டு என்பது இருதய சீர்திருத்தத்திற்குச் சாதகமான காலமாயிருக்கிறது. NS122:1 தங்களால் இயன்றமட்டும் அவரோடு இசைவாக இருக்க விரும்புவது, மேலும் நமது மீட்பரின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைப்பது. R5218:2 ஒருவேளை நம்முடைய இருதயங்கள் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் பசிதாகம் கொள்கின்றது என்றால், எல்லா விதத்திலுமுள்ள அசத்தியத்தையும், அனைத்து அநீதியையும், அநியாயத்தையும் வெறுக்கின்றது என்றால், அதிலும் முக்கியமாக, வரிசையில் மூன்றாவதாக வரும் பொறுமையோடு தெய்வீகச் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல் எனும் குணலட்சணத்தினால் இந்த வெறுப்பு வரையறுக்கப்பட்டு, தாக்கம் ஏற்படுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்றால், இது ஆசீர்வாதமான அறிகுறியாகும். R2586:5 விசுவாச அறிக்கைகளின் அடிமைத்தனத்தைத் துறந்து, கண்டனம் செய்து, சத்தியத்திற்காக நிற்குமளவுக்கு, நீதியையும், சத்தியத்தையும் நேசிக்கிறவர்கள். NS123:1 நாம் எதைத் தேடுகிறோமோ அதைக் கண்டடைகிறோம்! தேவனுடைய செய்தியைக் கண்டடைய விரும்புபவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்படுவார்கள். அதேபோல, தேவையில்லாமல் எதிர்ப்பு காட்டுவது, நம்பிக்கையின்மை, விரோதம் என்ற நிலைப்பாட்டிலிருந்து அணுகுபவர்கள், தாங்கள் தேடுவதையே கண்டடைவார்கள் என்பது நிச்சயம் – அதாவது, குறைபாடுகள், முரண்பாடுகள் முதலியவைகளையே கண்டடைவார்கள். R4971:1; HG473:6; Q643:2

**பசிதாகம்** – ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் அடையாள மாளிகையில் சாப்பாட்டு அறை என்பது நீதிக்கான பசியாக இருக்கின்றது. R5004:1 “மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல.” (சங். 42:1) R5163:6 மனித இருதயமும்சரி, மனித சரீரமும்சரி அதினதின் பசியார்வங்களை /

விருப்பங்களைக் (appetites) கொண்டுள்ளன. NS119:3 ஆத்துமாவின் சில பசிகள் பின்வருமாறு: (1) அனுதாபம் மற்றும் ஐக்கியத்திற்கான ஆசை; (2) சௌகரியம் மற்றும் சொகுசுக்கான ஆசை; (3) பேர் புகழுக்கான ஆசை; (4) (சிற்றி) இன்பத்திற்கான ஆசை. NS120:1 நீதியின் மீதான பசிதாகம் எனும் இந்தத் தன்மையானது ஆவியின் மற்றத் குணலட்சணங்களால் கட்டுப்படுத்தப்படாதக் காரணமாகத்தான், அநேக உலகப்பிரகாரமான மனிதர்களை வரம்பு மீறின சீர்திருத்தவாதிகளாக மாற்றியுள்ளது; தேவனுடைய பிள்ளைகளோ, தெளிந்த புத்தியுள்ள ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுவதினால், அவருடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காகக் காத்திருக்கிறார்கள். R2586:5 நீதிமானாக்கப்படுதல் எனும் முதல் படியானது கர்த்தருடைய மேஜையிடம் நம்மை அனுமதிப்பதில்லை, மாறாக அதற்கு நம்மைத் தயார்படுத்தவே செய்கின்றது. இரண்டாம் படியானது கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணிப்பு செய்வதாயிருக்கின்றது. NS121:4 விசுவாசம் மற்றும் கற்றுக்கொள்ளக் கூடியதன்மை எனும் இருதய நிலைமை; மேலும், நாம் நம்முடைய பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்துகிற அதேவேளையில், தெய்வீக வழிகாட்டுதலையும் நாம் எதிர்நோக்கியிருக்க வேண்டும். R4744:6 ஆவிக்குரிய வகையில் பசியாய் இருக்கும்போது, கிருபாசனத்தை அணுகுவதை விடவும் வேறெதுவும் பிரயோஜனமாய் இருக்க முடியாது. NS122:3 ஆபிரகாமுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தத்தால் உந்தப்பட்ட நம்பிக்கைதான், உலகம் எனும் மலையிலிருந்து ஆவிக்குரிய கல்லைப் பெயர்த்தெடுத்த வல்லமையாகவும் இருக்கின்றது. (தமிழில் – தானி. 2:44) OV429:3 தேவன் நமக்குச் சத்தியத்தைக் கொடுப்பதற்கு முன்பு, முதலில் நாம் நன்கு பசியடைவதற்கு அனுமதிக்கிறார். CR54:3 கர்த்தருடைய ஜனங்களில் பலர், கடும் பசியின்றி, அவருடைய மேசையிடமாக வருகிறார்கள் – அத்தகையவர்கள் சீக்கிரமே திருப்தி அடைந்துவிடுகிறார்கள். NS121:6 நீதியை நேசித்து, அக்கிரமத்தை வெறுப்பவர்கள். R5004:1 தாங்கள் வளருவதற்கேதுவாக, பலமான ஆவிக்குரிய ஆகாரத்தை அதிகளவில் வாஞ்சிப்பவர்கள். பால் ஆகாரம் குழந்தைகளுக்கானது, ஆனால் பலமான ஆகாரமோ குழந்தை பருவத்தைக் கடந்தவர்களுக்கானது. (எபி. 5:14) R1358:2 இது தேவனிடம் நெருங்கி வருவதற்கான வாஞ்சையில் வெளிக்காட்டப்படுகிறது, மேலும் அவர்கள் நிரப்பப்படுவார்கள் அல்லது திருப்தியடைவார்கள் என்ற தம்முடைய வாக்குத்தத்தத்தை தாம் நிறைவேற்றுவதற்கு முன்பாக, முதலில் அவர்களிடம் இந்த வாஞ்சை காணப்படுகிறதா என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். R2671:1

**உள்ளவர்கள் பாக்கியவான்கள்** – மற்றவர்கள், அதாவது, தெய்வீக உதவி தங்களுக்குக் குறைவாகவே தேவைப்படுகிறது என்று நினைக்கிற ஒழுக்கநெறியில் மேல்நிலையிலுள்ளவர்கள், இயேசுவிடம் வருவதற்கு முற்றிலும் தயாராக இல்லை. NS121:1

**அவர்கள் திருப்தியடைவார்கள்** – பரிசுத்தமாக்கப்படுவார்கள். R5901:3* நமக்குத் தேவையான ஒவ்வொரு கருப்பொருள்மீதான சத்தியமும், கர்த்தர் வெளிப்படுத்த பிரியப்படும்போது நமக்கு வெளிப்படுத்தப்படும். R5570:4, 4744:5, 5004:1 'நமக்கு எல்லாம் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை' என்பதே மகிழ்ச்சியின் ஆதாரமாயிருக்கின்றது, இதைக் குறித்து நாம் வருத்தமடை வதற்கு ஒன்றுமில்லை. ஒவ்வொரு புதிய அறிவுசார் தகவலும் மகிழ்ச்சியின் புதிய ஊற்றாயிருக்கிறது. NS742:3 தேவன் அளிக்கும் ஆவிக்குரிய புத்துணர்ச்சியால் திருப்தியடைகிறோம்; "ஏற்றவேளை போஜனம்" மற்றும் ஜீவத் தண்ணீரால் நாம் சம்பூரணமாய்ப் போஷிக்கப்பட்டு, இனிதே புத்துணர்ச்சி யூட்டப்படுவோம். R1396:5, 3735:1, 1899:2, 4558:1 கிறிஸ்து நமக்கு அளித்துள்ள ஜீவத் தண்ணீர் மற்றும் சத்தியத்தைப் போல, வேறெந்த காரியத்தாலும், நம்மைத் திருப்திப்படுத்த முடியாது. அதைப் பானம்பண்ணுபவர்களுக்கு, தேவனுடைய வார்த்தையைப் பொய்யாக்கும் மனுஷரின் வீணான தத்துவங்கள்மீது எந்த வாஞ்சையும் இருக்காது R1703:4 தற்காலத்தில் நீதியும், சத்தியமும் அரிதாயிருக்கின்றன. R4558:1 எந்த மனிதனையும் நிரப்புவதற்கு அநீதியில் எதுவுமே இல்லை. நீதியிலோ நிரப்பும் சக்தி இருக்கின்றது. NS122:5 சத்தியம் மற்றும் நீதியின் மீதான விருப்பம் இன்னமும் தொடர்ந்து காணப்படும். ஆனால், சத்தியம் மற்றும் நீதி நடைமுறையில் காணப்படும்போது திருப்தி

நிலவும். R2586:5 அதிசயமான வகையில் நிரப்பப்படுவதைக் குறிக்கவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் நேரத்தையும், அறிவையும், வாய்ப்புகளையும் பயன்படுத்தி, திருப்தியளிக்கும் நித்திய ஜீவ அப்பத்தை நாடித்தேடிடுவார்கள். R3735:1 தற்கால எளிய மண்பாண்டம் கொள்ளும் அளவுக்குத் தொடர்ச்சியாக நிரப்பப்படுவார்கள். நிரப்புதலுடன் நம்முடைய கொள்ளளவும் விரிவடையும், மேலும் நிரப்பப்படும்போது, மேலும் விரிவடையும். NS122:4 தற்கால ஜீவியத்தில் முழுமையாக திருப்தி அடைய முடியாது; விசுவாசி இந்தத் திருப்திக்கு நேராய் மேன்மேலும் முன்னேறி, திரைக்கு மறுபக்கத்தில் முழு அளவில் திருப்தியடைவார். R2671:1, 2586:6, 2250:5 முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்கள் தங்கள் சொந்த பரிபூரணத்தைப் பெற்றுக்கொள்வார்கள், மேசியாவின் ஆயிரமாண்டு அரசாட்சியின்போது பூமி முழுவதும் நீதி நிலைநாட்டப்படும். R5004:1

### 6. மத்தேயு 5:7

### “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.”

**இரக்கமுள்ளவர்கள்** – ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் அடையாள மாளிகையில் இரக்கம் கதவாக இருக்கின்றது. R5004:1 தெய்வீக இரக்கம் தங்களுக்குத் தேவை என்பதை உணர்ந்தவர்கள், மற்றவர்கள்மீதும் இரக்கமும் மனதுருக்கமும் உடையவர்களாய் இருப்பார்கள். R5004:1, 3735:2 அப்படிப்பட்டவர்களிடம் மட்டுமே மறுசீரமைப்பு / திரும்பக்கொடுத்தலின் பணிகள் ஒப்படைக்கப்படும். R4558:1 உண்மையான / மாயமில்லாத இரக்கம்; “மனப்பூர்வமாய்” மன்னிக்கும் குணம். (மத். 18:35) R2587:1 நாம் கறாரான நீதியைக் காண்பிப்பதைவிடவும் மிகுந்த இரக்கத்தைக் காட்டுவதையே தேவன் விரும்புவார், அதாவது, இரக்கமாயிருப்பதனிமித்தம் தவறினாலும் / ஏமாற்றப்பட்டாலும் பரவாயில்லை. SM432:2 மாயமில்லாத உண்மையான இரக்கம்; அது மற்றவர்களின் தோல்விகளையும், பலவீனங்களையும் (நம்முடைய) பார்வையிலிருந்து மறைக்கச்செய்யும், மேலும், முடிந்தவரை, அவைகளை (நம்முடைய) நினைவிலிருந்து அழித்திட வைக்கும். R2587:1 இது மனுஷரால் பகுத்துணரக்கூடிய ஒரு வெளிப்புற வெளிப்பாடாக இருக்கும்; இது நீதியைப் போற்றுதல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தில் காணப்படும் அதற்கான பசிதாகம் என்பவைகளின் விளைவாக ஏற்படும் ஒன்றாகும். R2586:6 தேவனே நீதிபரர், அவர் நீதியைப் (சரி)பார்த்துக்கொள்வார்; மனிதர்களாகிய நாமோ பாக்கியமான பண்புகளாகிய இரக்கம், பரிவு, மன்னிப்பு என்பவைகளைச் செயல்படுத்துகிற வர்களாய் இருப்போமாக. R2587:3 ஆபிரகாம் சோதோமுக்காய் இரக்கம் காட்டும்படி வேண்டிக் கொண்டபோது (ஆதி. 18:23 – 32), கர்த்தர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தம்முடைய தாசனைப் பார்க்கிலும் தாம் குறைவான நீதியும், குறைவான தாராள மனப்பான்மையும் கொண்டவரல்ல என்பதை நிரூபித்தார். R3948:1 சிந்தனைக்கு: சந்தேகங்கொள்ளுகிற மனதுடன் கசப்பாய் / வெறுப்பாய் வாழ்க்கையைக் கடந்து செல்வதைப்பார்க்கிலும் நூறு முறை ஏமாற்றமடைவது நலமாயிருக்கும். R4919:4 இரக்கமற்ற, தீய எண்ணம் கொண்ட சிந்தையே, பிறரிடம் காட்டப்படும் இரக்கமற்ற நடத்தைக்குப் பிதாவாக இருக்கிறது. R4919:4 தங்களுக்குத் தெய்வீக இரக்கம் தேவைப்படுகிறது என்று சொல்லுபவர்கள், மற்றவர்களுக்கு அவ்விரக்கம் காட்டப்படாமல் நீதிசரிக்கட்டப்பட வேண்டும் என்பதில் உச்சபட்ச பிடிவாதமாக இருப்பது சற்றும் பொருத்தமற்றதாயிருக்கிறது. R3735:3 “நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்” – நீதியை / நியாயத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும். (யாக். 2:13) R3735:2, 2587:2

**இரக்கம் பெறுவார்கள்** – இரக்கமுள்ளவர்கள் மட்டுமே இரக்கத்தைப் பெறுவார்கள்: “மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.” (மத். 6:15) R2587:1, 3803:1 இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்ற வாக்குத்தத்தமானது தெய்வீக அரசாங்கத்தின் ஒரு கொள்கையாகும், ஏனெனில் எந்தளவுக்கு ஓர் இருதயம் தாராளமாகவும் அன்பாகவும் இருக்கின்றதோ, அந்தளவுக்கு அது பூரண நிலைக்கு

நெருக்கமாக வந்திருக்கிறது என்பது அர்த்தமாகும். OV210:3 துணிகரமில்லாமல், வேண்டுமென்றே இல்லாமல் காணப்படும் மீறுதல்கள் தொடர்பான விஷயங்களில், தேவன் தமது இரக்கத்தை நமக்குப் பகிர்ந்தளிப்பார். R2587:4 அவர்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்பவர்களிடம் அவர்கள் எந்தளவிற்குத் தாராள மனப்பான்மை, மன்னிப்பு போன்ற மனப்பான்மையைக் காண்பிக்கிறார்களோ, அந்தளவிற்குத் தேவனும் அவர்களை தயவாக கையாளுவார், அவர்களின் குறைபாடுகளையும் பலவீனங்களையும் மன்னிப்பார். R3805:5 ஆனால், நம்முடைய சக மனுஷரிடம் நாம் இரக்கம் காண்பிக்காத வரையில், கர்த்தரும் தம்முடைய பிரமாணத்திற்கு விரோதமான நம்முடைய குற்றங்களையும் மன்னிக்க மறுத்துவிடுவார். R4558:2 சூழ்நிலைகள் அனுமதிக்கும் வகையில், நம்முடைய சக மனுஷருக்கு இரக்கமான நியாயத்தீர்ப்பை வழங்கினால் நமக்கும் இரக்கமான நியாயத்தீர்ப்பு கிடைக்கும் - இது இரக்கத்திற்கான சக்திவாய்ந்த பலனாக (strongest incentive) காணப்படுகிறது. R1493:6*

## 7. மத்தேயு 5:8

### "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்** - ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் அடையாள மாளிகையில் நாம் தேவனைக் தரிசிக்கக்கூடிய ஜன்னலாக இருதயத்தின் சுத்தம் காணப்படுகிறது. R5004:4 அவருடைய சிருஷ்டிப்பில், மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஆதியில் அவன் இருதயத்தில் சுத்தமுள்ளவனாகவே காணப்பட்டான். R5148:3, 3735:3 இருதயம், சிந்தை, நோக்கம், சித்தம் என்பவைகளின் தூய்மைக்கேற்ப நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். R4558:2 சித்தத்திலும் ஆவியிலும், மற்றும், முடிந்தளவிற்கு மாம்சத்திலும் நாவிலும் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டவர்கள். F409; R5389:3; SM335:1, 633:2; Q51:3 தெய்வீக இராஜாங்கத்தின் கொள்கைகளாகிய சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு நேர்மையாயிருப்பது; தேவனுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீர அங்கங்களுக்கும் நேர்மையாயிருப்பது. R4929:3 உள்நோக்கத்திலும், உள்ளெண் ணத்திலும், முயற்சியிலும், சித்தத்திலும் தூய்மை; வெளிப்படைத்தன்மை, உண்மைத்தன்மை எனும் அர்த்தத்தில்; நேர்மையான, கறைபடாத, கலப்படம் இல்லாத குணம். R5148:3, 5004:4, 5264:5, 3735:3, 2587:3; Q51:4 புதிய சித்தத்தின் உள்நோக்கங்கள் கனத்திற்குரியதாக இருக்குமளவும், கீழ்ப்படிதலின் வாயிலாக இறுதியில் நாம் பரிபூரணத்தை அடைவோம் என்கிற உறுதியும் நமக்குரியதாயிருக்கிறது. R5149:2, 5756:3 சோதனையின்போது பூரண இருதய வளர்ச்சியை அடையத் தவறினால், நாம் இரண்டாம் மரணத்தில் மரிக்க நேரிடும். ஆனால் இது மாம்சத்தில் பரிபூரணம் அடைவதை அர்த்தப்படுத்தவில்லை. R4400:6, 5902:1, 4558:3, 3735:5 சுத்தமுள்ள இருதயமென்பது நேர்மையாக இருப்பதும், நாம் சிந்திக்காமல் எதையும் பேசாமல் இருப்பதும் ஆகும். NS673:6 யாருடைய நோக்கங்கள் சுத்தமுள்ளவையோ, யாருடைய உள்ளெண்ணங்கள் சுத்தமுள்ள வையோ, யார் சிறந்ததையே வாஞ்சிக்கிறார்களோ – யார் சிறந்தவைக்காக ஏங்குகிறார்களோ அவர்களே இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள். Q51:4 ஆகவே, நமது இருதயங்களைக் கூர்ந்து ஆராய்வதில் அல்லது நிதானிப்பதில் முக்கியத்துவம் இருக்கிறது, கலகத்தனமான மற்றும் பாவமான அனைத்தையும் இருதயங்களிலிருந்து அகற்ற வேண்டிய அவசியம் இருக்கின்றது. NS163:6 கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வெளிப்புறமாக நாம் எதனைப் பெற்றிருக்கிறோமோ அதன்படி அல்லாமல், மாறாக உள்ளுக்குள் எதனைப் பெற்றிருக்கிறோம் என்பதைப் பொறுத்தே இருக்கும். NS593:4 நோக்கத்திலும், பிரயாசத்திலும் இருதயத்திலும் சுத்தமுள்ளவர்கள், மாம்சத்தின் பலவீனங்களை மேற்கொள்வதில் நன்கு முன்னேற்றமடைவார்கள் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். NS654:4; SM335:1 தூய்மை, அன்பு, இருதயத்திலும் சிந்தையிலும் பரிசுத்தம் என்பவை நம்முடைய அர்ப்பணிப்பிற்கு உரியவையாகும். R2015:4 நடத்தையில், சொல்லில் அல்லது சிந்தனையில் பூரணமடைவது அல்ல, மாறாக இவை அனைத்தையும் குறித்த உள்ளான நோக்கத்தில் பூரணம் அடைவதே கருத்தாகும்.

R2587:5, 2250:6, 1739:2 நேர்மையான இருதயமுள்ளவர்கள், முற்றிலும் சரியான நோக்கங்களைக் கொண்டவர்கள். R5148:3 அன்பின் ஆவியினால் நிரம்பிய இருதயமானது அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்திடும் என்பது உறுதி. R4770:6 சிந்தையின் தூய்மையால் இருதயத்தின் தூய்மையை நிலைக்கச் செய்யுங்கள். R5149:5 தீமையான வாயானது, மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வாயானது, இருதயம் தீமையாக இருப்பதையே குறிக்கிறது. R2444:1

**அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்** – கிரேக்க வார்த்தை, ஹர்ராவ் / horao, பகுத்தறிவது (discern). R1494:1* "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." (எபி. 12:14) R2587:3, 1739:2 அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்தைப் பற்றிய தெளிவான பார்வைகளைக் கொண்டிருப்பார்கள்; மேலும் அத்தகையவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் மறுரூபமாக்கப்படும்போது, அவரைக் கூடிய சீக்கிரத்தில் தரிசிக்கவும் போகிறார்கள். R3735:6 கர்த்தராகிய இயேசுவின் குணலட்சண சாயலை அடைவது மாத்திரமல்லாமல், இறுதியில் அவர்கள் அவரைப் போலாக்கப்படுவார்கள் மற்றும் முதலாம் உயிர்த்தெழுதலில் "அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிப்பார்கள்." (1 யோவா. 3:2) R5149:1, 2587:5 முழு பரலோக மகிமையில். CR393:2; R4929:3, 5004:4, 5958:3 அவர்களின் கண்களுக்கு முன்பாக தப்பெண்ணத்தையோ வீணான தத்துவத்தையோ கொண்டிராமல், தங்களுக்கும் தேவனுக்கும் இடையில் மேகங்கள் இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். R1494:1* "சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்வதற்கான" ஒரு முன்சுவை தற்கால ஜீவியத்திலேயே கிடைக்கின்றது (எபே. 3:18). R2587:6 எங்கு தேவன் தமக்கும், தமது ஆவிக்கும், அன்பின் பிரமாணத்திற்கும் சுத்தமுள்ளதாகவும் உண்மையாகவும் இருக்கின்ற இருதயத்தைப் பார்க்கின்றாரோ, ஏற்றவேளையில், அவர் அதற்கு ஏற்ற புதிய சரீரத்தைக் கொடுப்பார். F409 அவருடைய வார்த்தையிலும் அவருடைய திட்டத்திலும், அவருடைய மகத்தான கிரியைகளிலும், இயற்கையிலும், மறைவான அந்தரங்கமான ஜெப தொடர்புகளிலும், அவருடைய ஏற்பாடுகளிலும் (அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்). R1739:3 இப்படிப்பட்ட இருதயத் தூய்மையைப் பெற்றுக் கொள்பவர்களால் மாத்திரமே, தேவனைத் தரிசிப்பதற்கும், அவருடைய அன்பின் இந்த ஆதாரத்தை அனுபவிப்பதற்கும் எதிர்பார்க்க முடியும். R3735:5 பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் திருச்சபையானது, பழைய ஏற்பாட்டுப் பாத்திரவான்களால் பார்க்க முடியாத வகையில், அவரைத் தங்களுடைய புரிதலின் கண்களால் பார்க்கக்கூடும். R5149:5 இருமனம், இரட்டைச் சித்தம் உள்ளவர்களுக்கு இரட்டைப் பார்வை, இரட்டைக் கண் என்பவையும் இருக்கும். அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களை மாறுகண் பார்வையோடும், இரண்டு இரண்டாகவும், அதற்கேற்ப தெளிவற்ற வகையிலும் பார்க்கிறார்கள். R2587:6

## 8. மத்தேயு 5:9

### "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்."

**சமாதானம்பண்ணுகிறவர்கள்** – ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் அடையாள மாளிகையில், வரவேற்பறையானது ஒரு சமாதானம்பண்ணுகிறவரின் பண்புகளால் குறிப்பிடப்படுகிறது. R5004:4 இது அர்ப்பணிக்கப்பட்ட, இயேசுவின் சீஷருக்குச் சொல்லப்பட்டது. SM452:1, 456:2 சமாதானமான வாஞ்சைகளிலும், மற்றவர்களில் சமாதானத்தைத் தூண்டுவதற்கான பிரயாசங்களிலும், தேவனுக்கு நேரான இருதய சுத்தமானது வெளிக்காட்டப்படுகின்றது. R2588:1 சமாதானம்பண்ணுகிறவராக இருப்பதற்கு முன்பாக, முதலில் அவர் சமாதானத்தை விரும்புபவராக இருக்க வேண்டும். R2251:2 சமாதானத்தைத் தூண்டுவது பார்வையினால் ஏற்பட்டாலுங்கூட, இது பிரதானமாக நாவினாலேயே செய்யப்படுகின்றது. R2588:2 கர்த்தருடைய ஜனங்கள் அனைவரிடமும் பரிவிரக்கத்தோடு காணப்பட

வேண்டும், மேலும் போரிடும் உலகில் எவருடனும் நாம் ஒருமனப்பட்டுவிடக்கூடாது. R5767:4 நாம் ஆதரவு அளிக்க முடியாத காரியங்களை, குறிப்பாக கர்த்தருடைய வார்த்தையோடு எந்தத் தொடர்பும் இல்லாத காரியங்களைக் கண்டனம்பண்ணுவதை நாம் தவிர்த்துக்கொள்ளலாம். எவைகளை அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரமானவை என தேவன் காண்கின்றாரோ, அவைகள் சகிக்கப் படுவதற்கும் பாத்திரமானவை என்பதாக நாமும் காணலாம். R4978:6, 2621:6, 4558:4, 2948:6 இடையூறு செய்பவர்கள், சண்டைகளை வளர்ப்பவர்கள், சட்டத்தை மீறுபவர்கள் என்பவர்கள் அல்ல. R4558:4 மற்றவர்களுக்கு உதவுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுதல். R5004:4 வரவிருக்கும் சண்டையில் நாம் மனுஷரின் உணர்ச்சிகளை அடக்கி அமைதிப்படுத்தவே நாட வேண்டும். OV287:2 கிறிஸ்துவின் நாமம் தரிப்பிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சுத்த இருதயத்தையும், மாபெரும் அனுதாபங்களையும் பெற்றிருந்தாலும் கூட, தலைகீழான போக்கையே பின்பற்றுகிறார்கள். உண்மையான பரிசுத்தவான்களில் சிலர் கூட, சண்டை மூட்டிவிடுவதற்காய்த் தங்களுடைய நாவைப் பயன்படுத்துகிறார்கள். R2588:1,2, 3736:1 நம்மில் கேடான / மாறுபாடான சுபாவ இயல்புகள் இருக்கையில், தேவஜனங்களிடையே சமாதானத்தை உண்டுபண்ணும் வழியைக் கற்றுக்கொள் வதற்கும், அதனை அன்புகூருவதற்கும் கணிசமான நேரமும் பயிற்சியும் நமக்குத் தேவைப்படலாம். R2251:1 எந்த விலைகொடுத்தாவது சமாதானம்பண்ணுகிறவர்கள், அதாவது, கொள்கைகளை சமரசம் செய்து சமாதானம்பண்ணுகிறவர்கள் என்று சொல்லப்படவில்லை, இல்லையேல் நம்முடைய கர்த்தரும், உண்மையுள்ள சரீர வகுப்பாரும் பாடுபட்டிருக்க மாட்டார்களே. R2251:1 சில சந்தர்ப் பங்களில், கொள்கை சம்பந்தப்பட்டிருக்கும், பின்வாங்குவது முற்றிலும் தவறானதாயிருக்கும், அங்கே "முதுகெலும்புடன்" (தைரியமாக) செயல்பட வேண்டியிருக்கும்; ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் அரிதாகவே நிகழும். சந்தேகத்திற்கு இடமின்றி, மேற்சொன்ன சந்தர்ப்பங்கள் தவிர மற்ற சந்தர்ப் பங்களில், ஈசாக்கு அபிமெலேக்குடன் செய்தது போல, நாமும் அடிக்கடி விட்டுக்கொடுத்து சமாதானமாக போகலாம். (ஆதி. 26:12 - 25) R3953 சக சிருஷ்டிகளிடம் சண்டையிடுவதற்குப் பதிலாக, இரக்கத்தைக் காட்ட வேண்டும்; சத்தியத்திற்காகவும், தப்பறைக்கு எதிராகவும் போராட வேண்டுமே ஒழிய அறியாமையிலிருக்கும் தப்பறையின் ஊழியருக்கு எதிராக அல்ல. R2588:4 நாம் நமது சொந்த சுபாவங்களின் குறைபாடுகளுக்கும், பலவீனங்களுக்கும் எதிராக போராடிக்கொண்டிருந்தோமே யானால், மற்றவர்களுடன் போராடுவதற்கு நமக்கு நேரம் இருக்காது. R2588:4 நம்மைக்காட்டிலும் பெரும்பான்மையானவர்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று நாம் நினைத்தால், அவர்கள் தங்களது போக்கின் தவறைக் கற்றுக்கொண்டு அதைத் திருத்திக்கொள்ளும் வரையில், கர்த்தரைப் போல, பொறுமையாயிருப்பதற்கும், காத்திருப்பதற்கும் கற்றுக்கொள்வோமாக. R4772:6 குருவின் நோக்கத்தை ஊக்குவிப்பதற்கு நாம் ஒருபோதும் பட்டயத்தை, அதாவது, பூமிக்குரிய சக்தியை / ஆயுதங்களை, பயன்படுத்தக்கூடாது. R3888:1

**தேவனுடைய புத்திரர்** – அவர்களிடம் தேவனுடைய ஆவி காணப்படும். அவருடைய நேசகுமாரனுடைய சாயல் அவர்களின் இருதயங்களில் காணப்படும். R2588:3

## 9. மத்தேயு 5:10

**"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது."**

**நீதியினிமித்தம்** – மற்றவர்களிடம் குறைகளைக் கண்டுபிடிப்பதின் மூலமாகவும், தீயக்குணங்கள் மூலமாகவும், எல்லாரையும், எல்லாவற்றையும் எதிர்த்துச் சண்டை சச்சரவு செய்வதன் மூலமாகவும் நாம் துன்பங்களை வருவித்துக்கொள்ளக்கூடாது. R2588:5 பரம அழைப்புக்குக் கீழ்ப்படிவதினால், சத்தியத்தினிமித்தமாக வரும் துன்பங்கள். R4637:1 பரிசுத்தவான்களாகிய பேதுரு, யோவான், பவுல் மற்றும் சீலா ஆகியோர், முதுகில் இரத்தம்வழிய, கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டிருந்தபோதிலும், கிறிஸ்துவுடனேகூட பாடுகளைச் சகிப்பதற்காய்த் தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்காக

தேவனைத் துதித்துப் பாடினார்கள். R4866:1 "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்." (1 பேது. 4:16) R3736:2, 4558:4, 4326:4, 2251:4

**துன்பப்படுகிறவர்கள்** – குணலட்சணத்தை முழுமையடையச் செய்வதற்கும், சரியான போஷாக்கிற்கும், ஆவிக்குரியாதியில் மேம்படுவதற்கும் துணைபுரிகின்ற சோதனைகளும் சிரமங்களும் ஆசீர்வாதம் / பாக்கியம் எனும் அடையாள மாளிகையில், சமையலறையாக இருக்கின்றது. R5004:4 கடுமையான உபத்திரவங்களில் மட்டுமல்ல, சிறிய உபத்திரவங்களிலும்கூட, அதாவது "உங்களைப் புறம்பாக்கி, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போதும்" கூட. (லூக். 6:22) R3617:4 தாங்கள் துன்புறுத்தப்படும்போதும், தங்கள் எதிரிகளிடத்தும்கூட நீதியின் கொள்கைகளைக் கடைப்பிடித்து, அவர்களையும் நியாயமாக நடத்துமளவிற்கு, அக்கொள்கைகளுக்கு மிகவும் உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களையே கர்த்தர் தேடிக்கொண்டிருக்கிறார். R3736:3

**பாக்கியவான்கள்** – நீதியின் எதிரிகள், துன்புறுத்தலுக்கு இதுதகுதிதான் எனக் கருதும் ஒரு குணலட்சணத்தை, நமக்குள்ளாக நாம் வளர்த்தியிருக்கும்போது, இந்த ஆசீர்வாதத்திற்குப் பாத்திரவானாக நாம் கருதப்படுவோம். R4866:4 கர்த்தருடைய ஜனங்கள், இதற்கு முந்தின பாக்கியமான குணலட்சணங்களையெல்லாம் அடையாதது வரையிலும், அவர்களால் அப். பவுல் கூறினது போன்று, "உபத்திரவத்தில் மேன்மை பாராட்டும்" நிலையை அடையமுடியாது. (உரோ. 5:4) R2588:4

## 10. மத்தேயு 5:11

**"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்."**

**என்னிமித்தம்** – தவறான உபதேசத்திற்காக அல்லாமல், சத்தியத்திற்காக; மேலும், சபை உட்பிரிவுகளுக்காக அல்லாமல், கிறிஸ்துவுக்காக. R785:4 "என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக (நாங்கள் கர்த்தருடைய மகிமைக்காக இதைச் செய்கிறோம்) என்கிறார்களே." (ஏசா. 66:5) C182 ஒருவேளை அவருடைய பின்னடியார்கள் தேவனுடைய வார்த்தைக்கு நேர்மையாக / உண்மையாக (loyalty) இல்லாமல் போயிருந்தால், பெயரளவிலான மதம் சார்ந்தவர்களிடையே மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டிருப்பார்கள். உண்மையுள்ளவர்கள், பிரபலமான தவறான உபதேசங்களை சுட்டிக்காட்டுவதினிமித்தமாகவும், சத்தியத்திற்கு உண்மையாக இருப்பதாலும், சபை மண்டலத்தில் காணப்படும் முக்கியஸ்தரால் வெறுக்கப்படுகிறார்கள். R5173:1, 3736:4

**(மனுஷர்) உங்களை நிந்தித்து** – நீங்கள் காரியங்களை ஓர் உச்சத்திற்குக் கொண்டு செல்கிறீர்கள் என்றும், அளவுக்கு மிஞ்சின கவனத்தோடு இருக்கிறீர்கள் என்றும், மதம் சம்பந்தமான காரியங்களுக்கு அதிகப்படியான நேரம் ஒதுக்குகிறீர்கள் என்றும், மேலும் முன்புபோல தங்களுடன் அதிக நேரம் செலவழிப்பதில்லை என்றும் மனுஷர் நினைத்துக்கொண்டு (உங்களை நிந்தித்து). NS337:2, 605:2 "வையப்படும்போது பதில் வையாத" அவருடைய பின்னடியார்கள். R3736:3 "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்." (மத். 10:22) E490 தேவன் தமக்கு எவ்வகையான குணலட்சணம் பிரியமாயிருக்கும் என்பதை விளக்குவதற்காக, தம்முடைய குமாரன் நிந்திக்கப் படுவதற்கு அனுமதித்தார், அதோடுகூட இயேசுவின் நேர்மையை / உண்மையைச் (loyalty) சோதித்துப் பார்க்கவும் விரும்பினார். R5545:5 நமது கர்த்தருக்கு வந்த பிரதானமான எதிர்ப்பு, மதத் தலைவர்களிடமிருந்தும், (மதத்தின் விசுவாசத்தை) அறிக்கைசெய்பவர்களிடமிருந்துமே வந்தது; அதுபோலவே அவருடைய பின்னடியார்களுக்கும் நடக்கும். R4814:1, 4326:2; OV357:1 ஒருவேளை

அழுத்தத்தின்கீழாக, கட்டுப்பாட்டினை இழந்து, பதிலுக்கு பதில் நிந்திப்பார்களானால், அவதூறு மற்றும் புறம்பேசுவார்களானால், இராஜ்யத்தில் ஓரிடத்தையும்கூட பெற்றுக்கொள்வதற்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்பதை தாங்களாகவே அவர்கள் நிரூபித்து விடுவார்கள். R3736:5

**துன்பப்படுத்தி** – "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோ. 3:12) F464 பஸ்காவின் கசப்பான கீரைகளால் இது சித்தரிக்கப்படுகிறது. F464; NS75:5 சத்தியத்தினை முன்வைக்கும்போது, அது தப்பறைகளையும் மாய்மாலங்களையும் அம்பலப்படுத்திவிடுகின்றபடியால், கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள் (மற்றவர்களால்) இரக்கமின்றிப் பார்க்கப்படுவார்கள், வெறுக்கப்படுவார்கள், துன்புறுத்தப்படுவார்கள். R4814:4, 4558:4, 4557:5,6 இத்தகைய சோதனைகளும் கஷ்டங்களும், குணலட்சணத்தை முழுமையாக்குவதற்காகவும், ஆவிக்குரியரீதியில் ஊட்டமளிப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவுமே அனுமதிக்கப்படுகின்றன. R5004:4, 4326:1 இத்தகைய அனுபவங்கள், நன்மைக்கேதுவாக வழிநடத்தப்பட்டு, (நம்முடைய) உண்மைத் தன்மையையும் நம்பிக்கையையும் பரீட்சித்துப்பார்ப்பதற்கு உதவிசெய்கின்றன; இப்படியாக மிகுந்த உபத்திரவத்தின் வழியாக கிடைக்கப்போகிற இராஜ்யத்தின் சந்தோஷங்கள் அனைத்துமே, சிந்தப்பட்ட ஒவ்வொரு கண்ணீரையும், அனுபவித்த ஒவ்வொரு துக்கத்தையும் ஈடுசெய்திடும் (compensate). R4557:5 இவைகளை உண்மையோடும், அமைதியோடும், சந்தோஷத்தோடும் சகிக்க வேண்டும். R4558:4 தற்கால ஜீவியத்தின் பரலோக இராஜ்யமானது, அதாவது, கிறிஸ்துவின் உண்மையான திருச்சபையானது, வன்மையாகத் தாக்கப்படுகின்றது. தாக்குகின்றவர்கள் அதைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். (மத். 11:12 – திருவிவிலியம்) CR493:4 நடப்பவையெல்லாம் உங்கள் நலனுக்கு முரணாகவும், எண்ணிலடங்கா தீங்கு விளைவிக்கும் வண்ணமாகவும் இருப்பதுபோல தோன்றலாம் – ஆனால் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். R2699:4 துன்புறுத்துதல் என்பது துன்பப்பட்ட நபரிடம் பிறர் பார்த்து அஞ்சும் குணலட்சணங்கள் இருந்தது என்பதையும்; துன்புறுத்துபவர் தனக்கு முன்வைக்கப்பட்ட நியாயமான வாதங்களைப் பகுத்தறிவோடு எதிர்கொள்ளத் தவறினதால் தனக்குள்ள குறைபாடுகளைக் குறித்து மனதில் குத்தப்பட்டவராய், மற்றவரைத் துன்புறுத்துகிறார் என்பதையும்; இப்படியாக, ஒன்று துன்புறுத்துபவர்கள் பலவீனமானவர்களாய் இருக்கிறார்கள், இல்லையேல் துன்புறுத்தப்பட்டவர்களின் வாதங்கள் பலமானவையாக இருக்கின்றன என்பதையும் குறிக்கிறது. R4865:2 தங்களுடைய நம்பிக்கையின்பேரில் தைரியம் (courage) உள்ளவர்களுக்குத் துன்புறுத்தல் வரும். R5547:1 இடுக்கமான வழியில் நடந்த அனைவரும் – பாப்டிஸ்டுகள், மெத்தடிஸ்டுகள், பிரஸ்பைடிரியர்கள் போன்றவர்களிலும்கூட – தங்களுடைய ஆரம்ப நாட்களில் துன்புறுத்தப்பட்டனர், ஏனெனில் மற்றவர்களைவிடவும் அவர்களிடம் அதிக வெளிச்சமிருந்தது. R5546:6 துன்பப்பட்டவர்கள் எப்போதுமே சரியான தரப்பில் காணப்படுவார்கள் என்று சொல்ல முடியாது, ஆனால் துன்புறுத்து பவர்கள் எப்போதுமே (துன்புறுத்தல் எனும்) தவறு செய்கிறார்கள் என்று கூறுவது பாதுகாப்பான தாயிருக்கும். R4865:2 சிலசமயங்களில் இது, ஒருகாலத்தில் சத்தியத்தில் சகோதரராக இருந்தவர்களிட மிருந்தும், நம்முடன் ஒருகாலத்தில் கர்த்தருடைய மேஜையில் தெய்வீகப் போஷாக்கின் பாத்திரத்தில் உடன் தோய்த்தவர்களிடமிருந்துமே வருகின்றது. R4326:4

**பலவித தீமையான மொழிகளையும்** – இப்போதுள்ள அழைப்பானது அவமானத்திற்கானதாகும் / அவமானப்படுவதற்கானதாகும். R4841:6, 4637:1, 5145:2 சமுதாயரீதியாக புறக்கணிப்படுவார்கள், வியாபாரத்தில் புறக்கணிக்கப்படுவார்கள், கற்பனை செய்யக்கூடிய எல்லா விதத்திலும் அவதூறாகப் பேசப்படுவார்கள், அதிலும் அவர்கள் சற்றும் எதிர்பார்க்காதவர்களாலேயே அவதூறாகப் பேசப் படுவார்கள். R2496:2 (மனுஷர்) நியாயமான பகுத்தறிவின் மூலமாகவும், வேதவாக்கியத்தின் மூலமாகவும், தாங்கள் (நியாயமாக) எதிர்கொள்ள தவறின ஒரு காரியத்தை, தப்பெண்ணத்தின் மூலமாக வலுவிழக்கச் செய்வதே அவர்கள் துன்புறுத்துவதற்கான நோக்கமாக இருக்கின்றது. R1192:3 நம்மை எதிர்ப்பவர்கள், நம்முடைய வாழ்க்கையிலும் செயலிலும் நாம் எங்கு பின்வாங்கினோம் என்பதை

எடுத்துச்சொல்ல முயலமாட்டார்கள், மாறாக சபையை விட்டு நம்மை துரத்தினால் அது எப்பேர்ப்பட்ட பயங்கரமான விஷயமாக நமக்கு இருக்கும் என்று நமக்குத் திகிலூட்டுவதற்காகவே எல்லாப் பிரயாசங்களையும் ஏறெடுப்பார்கள். R2142:4* குற்றச்சாட்டுகள் தவறானவை எனத் தெரிந்தும், பலவித தீமையான மொழிகளையும் பொய்யாய்ச் சொல்லுபவர்களுக்கு, ஒருவேளை அதிகாரம் மாத்திரம் இருந்திருக்குமேயானால், சிலுவையில் அறையச்செய்திடும் அல்லது கம்பத்தில் கட்டிவைத்து எரிக்கச்செய்திடும் வகுப்பாராகவும் அவர்கள் மாறிவிடுவார்கள். R5545:2 "எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்." (லூக். 6:26) R5546:1

**பொய்யாய்** – உண்மையுள்ளவர்களுக்கு எதிராக வைக்கப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளையும், பொய்யான தந்திர உட்கருத்துகளையும் கண்டு நாம் ஆச்சரியப்படக்கூடாது. R5173:1, 5294:5 தீங்கிழைக்கும் குணத்தைக்காட்டிலும் அறியாமையே சத்தியத்திற்கு விரோதமான எதிர்ப்பினுடைய அஸ்திபாரத்தில் காணப்படுகிறது. R5145:3 பெரும்பாலும் தேவஞானம் மனிதரிடையே பைத்தியமாகக் கருதப்படுவதால், "(மத)வெறியர்" என்று பொய்யாய்க் குற்றம் சாட்டப்படுவோம். R2588:5 ஆயினும், எஜமானர் செய்ததுபோலவே பொறுமையாக அதனை தாங்கிக் கொள்ளுங்கள், எந்தக் கஷ்டமோ நஷ்டமோ நேரிட்டாலும்சரி, கர்த்தருக்கும் அவருடைய நோக்கத்திற்கும் தொடர்ந்து உண்மையுள்ளவர்களாக காணப்படுங்கள். E191

**சொல்வார்களானால்** – தம்முடைய ஜனங்கள்மேல் வரும் சரீரரீதியான துன்பங்களைக்காட்டிலும் அவர்கள்மேல் வரும் தீமைபேச்சைக் குறித்தே நமது கர்த்தர் அதிகம் கவனங்கொடுத்ததாகத் தெரிகின்றது. R2295:4

**பாக்கியவான்களாயிருப்பீர்கள்** – இந்த யுகம் முழுவதுமுள்ள அவருடைய பின்னடியாராகிய அவருடைய சீஷர் அனைவருக்கும் இது சொல்லப்பட்டுள்ளது. R5544:2 சுவிசேஷத்தை உங்கள் வாழ்க்கையின் 'முழுக்கவனத்தையும் கவர்ந்துகொள்கிற' கருப்பொருளாக (all–absorbing theme of life) மாற்றியதன் விளைவாக. A347; R5544:3 கர்த்தருக்காகவும் அவருடைய நோக்கத்திற்காகவும் நாம் உறுதியாக நிற்கும் தருணந்துவக்கி நாம் கர்த்தருக்குள் இன்னும் அதிக பலமடையத் துவங்குவோம். R4814:1 "பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்பது, துன்புறுத்துதல் என்பது தேவனிடத்திலிருந்து வரும் ஒரு தயவு/உதவி/அனுகூலம் என்பதைக் குறிக்கின்றது. R5544:2 அவருடைய பின்னடியார்கள் தங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவருக்குப்பின் செல்ல வேண்டும். அவர்கள் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டியிருக்கிறது. (மத். 16:24; அப். 14:22) NS71:2 நாம் உபத்திரவத்தை வேண்டுமென்றே நம்மேல் வலிய வரவழைத்துக்கொள்ள முயற்சி செய்யக்கூடாது, மாறாக நமது உண்மைத்தன்மைக்கான இந்தச் சாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கு வாஞ்சையோடே காணப்பட வேண்டும். R5544:3 தேவனுடைய எல்லா ஆலோசனையையும் அறிவிக்கத் தவறாமல், தனது ஸ்தானாபதித்துவத்தை உண்மையுடன் செயல்படுத்துகிற யாராயினும், கிறிஸ்துவின் பாடுகளில் சிலவற்றை விரைவாகவே அறிந்துகொள்வார்கள் / பெற்றுக்கொள்வார்கள். E490 தினம்தினம் பலிசெலுத்துவதை அதிகரிக்கும்போது, தினம்தினம் நீங்கள் அவருடையவர் என்பதற்கான ஆதாரமும் அதிகரித்திடும்; மேலும் இப்படிப்பட்ட தம்முடையவர்களையே அவர் கூட்டிச்சேர்த்து வருகிறார். R581:3 தேவன் சமாதானத்தை அருளும்போது, ஒருவனாலும் கலங்கடிக்க முடியாது. (தமிழில் – யோபு 34:30) R5879:2

## 11. மத்தேயு 5:12

**"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே."**

**சந்தோஷப்படுங்கள்** – இந்தச் சோதனையான அனுபவங்களில் மகிமைவாய்ந்த நோக்கமொன்று இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொண்டால் மாத்திரமே இது (சந்தோஷப்படுவது) சாத்தியமாகும். R5495:6, 4558:5, 5545:2, 5893:6

**பரலோகத்தில்** – இம்மைக்குரிய விஷயங்களில் அல்லாமல், ஆவிக்குரிய விஷயங்களில். R3223:2 மேலும் இந்தப் பரலோக பரிசுக்காகத்தான் நீங்கள் அழைக்கவும் பட்டீர்கள், பந்தயத்தில் பிரவேசித்தும் உள்ளீர்கள். R2699:4 கிறிஸ்துவினுடைய சீஷனாய் இருப்பதற்கான பலன்களைத் தற்கால ஜீவியத்தில் எதிர்பார்க்க முடியாது. இப்போது நாம், எதிர்காலத்தைப் பற்றிய மகிமைவாய்ந்த நம்பிக்கையோடு கூட, நம்முடைய இருதயங்களில் கர்த்தருடைய சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையுமே பெற்றிருக்க முடியும். NS602:4

**உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்** – இங்கே நாம் ஆசீர்வாதத்தில் குறைவுப்பட்டதெல்லாம், அங்கே இராஜ்யத்தில் நிறைவாய் நமக்கு ஈடுசெய்யப்படும். R5545:3 அர்ப்பணிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவரும் எந்தளவிற்குச் சுயத்தைப் பலிசெலுத்தி, கிறிஸ்துவுக்காகப் பாடுபடுகிறார்களோ, அது ஸ்தானாபதிகளாக அவர்கள் காண்பிக்கும் உண்மைத்தன்மையின் அளவாகவும் இருக்கும். E490 பரலோக இராஜ்யத்தில் சிலர் சிறியவர்களாகவும் சிலர் பெரியவர்களாகவும் இருப்பார்கள். R1973:5 அப்பேர்ப்பட்ட விலைக்கொடுத்து, இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பாதவர், இராஜ்யத்திற்குப் பாத்திரவானாய் இருக்க முடியாது. R4637:1

**உங்களுக்கு முன்னிருந்த** – ஒருவேளை நமது எஜமானர் அவருடைய முதலாம் வருகையின் தோற்றத்தில் இப்போது தோன்றியிருப்பாராயின், அவரால் அவருடைய முதலாம் வருகையைக் காட்டிலும் இன்றைய உலகில் சிறப்பாக செயல்பட்டிருக்க முடியாது என்று நம்புவதற்கு நமக்குக் காரணமுள்ளது. Q752:2

**தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே** – நம்முடைய கர்த்தரையும் அப்போஸ் தலரையும் (அப்படியே துன்பப்படுத்தினார்களே). இவ்வாறு நாம் நம்முடைய அனுபவங்களில், இவ்வசனத்திற்கேற்ற நல்ல கூட்டத்தாரில் ஒருவராக இருப்போமாயின், கர்த்தர் தம்முடைய சம்பத்துகளைச் சேர்க்கும்போது, நாமும் அந்த நல்ல கூட்டத்தாரில் ஒருவராக காணப்படுவோம். R2588:6

## 12. மத்தேயு 6:28, 30

### வ. 28 – "உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;"

**எப்படி வளருகிறதென்று** – மிகவும் நியாயமான முறையில், இயற்கைக்கு முரணாக இல்லாமல், அசாதாரண அழுத்தமும் இல்லாமல் (எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்). அது எங்கு இருந்தாலும் தன்னால் இயன்றதைச் செய்து, எழிலையும் அழகினையும் வளர்த்திக்கொள்கிறது. R5990:6, 5875:1 காட்டுப்புஷ்பத்துக்கு, தன்னுடைய சொந்த போஷாக்கிற்காக, தன் சக்தியின் வரம்பிற்குள் உள்ள அனைத்தையும் பயன்படுத்த உரிமை உண்டு. ஆகவே, நமது குணாதிசயங்களை அழகுபடுத்துவதற்காகவும், ஆவிக்குரிய போஷாக்கிற்காகவும் நமது சக்தியின் வரம்பிற்குள் உள்ள அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்துவது நமது உரிமையும் கடமையுமாக இருக்கிறது. R5220:5 அதற்கென்று காட்டுப் புஷ்பம் எதுவும் செய்யாமல் சும்மா இருக்கிறது என்று சொல்ல முடியாது, இல்லையெனில் அது மரித்துவிடுமே; மாறாக அது கவலைப்படுவதில்லை என்பதே சொல்லப்படும் கருத்தாகும். R5220:4 தற்கால ஜீவியத்தின் காரியங்களைக் குறித்து நாம் கவலைப் படக்கூடாது, அதேசமயம் நமது ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்த மட்டுமீறிய கவலையும்கூடாது. R5991:1

**காட்டுப் புஷ்பங்கள் ... கவனித்துப்பாருங்கள்** – சிருஷ்டிக்கப்பட்டவைகளைக் கொண்டு, சிருஷ்டிகரைக் குறித்து அறிந்துகொள்ளுங்கள். R3313:1 இது ஒரு சாதாரணமான சிவப்பு நிற மலராகும், பொதுவாக லீலிபுஷ்பங்கள் என்று அழைக்கப்படும் வகையைச் சார்ந்தது அல்ல, ஆனால் மிகவும் அழகான மலராகும். R5875:1, 5991:1 நமது கர்த்தர் அவருடைய வழக்கத்தின்படியே, அவர் சொல்வதைக் கேட்கிற அனைவருக்கும் நன்கு தெரிந்த ஓர் உதாரணத்தையே எடுத்துக்கொண்டார். R5990:2 நேர்த்தியான வைகளைக் குறித்து கர்த்தருக்கு ஓர் ஆழ்ந்த மதிப்புண்டு (deep appreciation of the beautiful) என்பதையும், நம்முடைய உதவியின்றி அழகானவைகளைத் தேவனால் ஏராளம் ஏராளமாய் உருவாக்க முடியும் என்பதையும் காட்டுப்புஷ்பங்களின் அழகு நமக்குப் போதிக்கின்றது. R3313:2 வேர்ப்பூண்டானது தொடர்ந்து அதின் தண்டுகளுக்கு ஊட்டத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறது; சும்மா இருக்காமல், மாறாக அதன் செயல்பாடுகளை தனக்கென்றுள்ள இயற்கை விதிகளின்படியே செயல்படுத்தி வருகிறது. R5220:4 ஏதோ சில தோட்டக்கலை நிபுணரைச் சார்ந்திருக்கிற ஒரு கண்ணாடிச் செடிப்பண்ணையிலிருக்கும் மலர் அல்ல; மாறாக, மாபெரும் பாதுகாவலரின் பராமரிப்பின் கீழிருக்கும் நிலத்திலிருந்து செழித்துவளருகிற ஒரு மலராகும். R5220:4 காட்டுப் புஷ்பம் எப்போதும் ஒரு சாதாரண இடத்திலேயே காணப்படும்; அது ஒரு மரத்தைப் போல பெரியதாக இருக்காது. அதுபோலத்தான் இங்கே மாம்சத்திலிருக்கும் நமக்கும் உள்ளது. R5875:4 ஓர் எளிய மலரின்மேல் தேவன் கொண்டிருக்கும் அக்கறையானது / கவனிப்பானது, தமது சொந்த ஜனத்தின்மேல் அவருக்குள்ள மாபெரும் அக்கறையை / கவனிப்பை நினைப்பூட்டுகிறது. R5990:2 சிறுசிறு விஷயங்களையும் கருத்தில் கொள்ளத் தவறுகிற இருதயம், தேவனையும் அவருடைய திட்டத்தையும் சரியாக மதித்துணருவதற்குத் தடையாக அமைந்திடும். R5220:5

**அவைகள் உழைக்கிறதுமில்லை** – நமது குடும்பம், வீடு போன்றவற்றைக் கவனித்துக்கொள்வதற்காக நாம் நமது கைகளையும் மூளையையும் பயன்படுத்தி பிரயாசப்பட அவர் விரும்பவில்லை என்று அர்த்தமாகிடாது. R5991:1 அதுபோலவே பரலோகத்தில் தூதரும் இம்மாதிரியான கடின உழைப் பதிலிருந்து ஓய்ந்து இருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தெய்வீக வல்லமை அவர்களின் நலனுக்காக பிரயோகிக்கப்படுவதால் இம்மாதிரியான பிரயாசம் தேவையற்றதாகிவிடுகின்றது. CR65:1 ஆனால், வாழ்க்கையின் கடமைகளிலும், சத்தியத்தை மற்றவர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பு களிலும் மந்தமாக, சோம்பலாக இருப்பது ஆவிக்குரிய வறுமையின் உறுதியான ஓர் அறிகுறியாக இருக்கின்றது. R2488:4

**வ. 30 – "அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?"**

விளக்கம் அளிக்கப்படவில்லை.

## 13. மத்தேயு 6:32, 33

**வ. 32 – "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்"**

**இவைகளையெல்லாம்** – உணவு, உடை, ஆரோக்கியம் போன்றவை எல்லாம். R3718:2 உலகப் பொருளால் கிடைக்கப்படும் ஆதாயங்கள். CR9:3; NS396:6 ஆவிக்குரிய இஸ்ரயேலர், பூச்சியும் துருவும் கெடுக்க முடியாத ஆவிக்குரிய வஸ்திரம், ஆவிக்குரிய போஜனம், பரலோக ஐசுவரியம் என்பவைகளின் மதிப்பை உணரும்படிக்கு, கர்த்தரால் அறிவுறுத்தப்படுகிறார்கள். R3665:1

**அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்** – பெரும்பாலான ஜனங்களுக்கு, உணவுப்பதார்த்தங்களையும்,

உடைகளையும் வாங்குவதே மிக முக்கியமான நாட்டமாக / கவலையாக இருக்கின்றது. R5990:5; SM370:1 எந்தவொரு புதிய சிருஷ்டிக்கும் இம்மைக்குரிய ஆசீர்வாதங்களைக் குறித்து வேண்டிக் கொள்வதென்பது பாதுகாப்பற்றதாக இருக்கும். R3665:1 அவர்களால் அப்பேர்ப்பட்ட ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து புரிந்துகொள்ள முடியாததால், அவர்களால் அவைகளுக்காக ஜெபிக்க முடிவதில்லை. அவர்களைப் போல் இருக்காதீர்கள். R5202:4, 3665:1

**இவைகளெல்லாம்** – பரிசுத்தவான்களைப் பொறுத்தவரையில், கர்த்தருடைய விசேஷித்த அனுமதியின்றி வியாதியானது வர முடியாது; எனவே அதனை அவர் அனுமதியின் பேரில் வந்ததாக கருத வேண்டுமே ஒழிய, நேரடியாக சாத்தானிடமிருந்து வருவதாக கருதக்கூடாது. R2007:2 வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும், காரியமும் (ஒவ்வொரு நொடிப்பொழுதும்) நம்முடைய உயரிய நன்மைக்கேதுவாக மேற்பார்வையிடப்படுகின்றன. R2468:5

**உங்களுக்கு வேண்டியவைகள் என்று** – புறஜாதிகள் நாடித்தேடும் விஷயங்களைக் குறித்து வேண்டிக்கொள்வதற்குப் பதிலாக, நாம் ஏற்கனவே அனுபவித்து வருகிற ஆசீர்வாதங்களையும், தயவுகளையும் விவரித்துச்சொல்லி, நன்றி செலுத்தி, ஆராதித்து, போற்றும் வண்ணமாக நமது ஜெபங்கள் இருக்க வேண்டும். R1999:5 இருப்பினும், ஜீவனின் மெய்யான, நிஜமான தேவைகளைப் பற்றி எதுவுமே அறியாத பலர், அசம்பாவிதம் ஏற்பட்டு ஆடம்பரங்களை இழந்துவிடுவோம் என்கிற பயத்தினால்/கவலையினால் அதிகமாக ஆட்கொள்ளப்படுகிறார்கள். R873:6, 832:5

**உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்** – அவர் நமக்குக் கொடுப்பவைகளை, நமது சிறந்த நலன்களுக்காகவே கொடுக்கிறார் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். R4567:5 கவலைகள் இல்லாமல் இருக்கவேண்டும் எனும்போது சரியான அக்கறையுடன் இல்லாமல் காணப்படுவதையும், வேலை தேடுவதிலும், வேலை செய்வதிலும் முயற்சி எடுக்காமல் காணப்படுவதையும் குறிப்பதில்லை. R4567:5 தங்களுடைய காரியங்கள் தங்களுடைய சொந்தக் கட்டுப்பாட்டில் இருப்பதைக்காட்டிலும், (அவரது மேற்பார்வையின்கீழ் அவை) மிகவும் ஞானமாகவும், மிகவும் சாதகமாகவும் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதைக் கண்டு அவர்கள் சந்தோஷப்பட வேண்டும். SM371:T பிள்ளைப் பருவம் என்பது எத்துணை மகிழ்ச்சியான மற்றும் கவலைகளில்லா பருவமாக இருக்கின்றது. அந்தப் பருவத்தில் பெற்றோருடைய அறிவின் மீதும், அவர்களுடைய அன்பின் மீதும் பிள்ளைகள் வைக்கும் பூரண நம்பிக்கையானது அவர்களுடைய எல்லா பயத்தையும் புறம்பே தள்ளுகின்றது. R732:1* கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். R4101:5* (அதாவது, தங்கள் கைகளினால் நலமான வேலைசெய்து பிரயாசப்படாமல், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய கர்த்தரிடத்தில் தங்கள் குறைவைக் குறித்து மன்றாடாமல், மாறாக ஒருவரிடத்திலொருவர் பிச்சை (alms) கேட்பது முறையற்றதாகும். இக்காரியத்தை நியாயப்படுத்தும் வண்ணமாக எந்தவொரு வசன ஆதாரமும் வேதாகமத்தில் காணப்படுவதில்லை. எபே. 4:28; 2 தெச. 3:11; சங். 37:3, 25, 84:11 போன்ற வசனங்களைக் காணவும் – R4101: “GIVE US TODAY OUR DAILY BREAD”). (அதேசமயம் மற்றவர்கள் மனமுவந்து இரக்கம் பாராட்டி ஒருவருக்கொருவர் உதவி செய்வதை ஏற்றுக்கொள்வது பிச்சை எடுப்பது என்றாகாது – R2021:5.)

### வ. 33 – “முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.”

**முதலாவது** – முதன்மையாக; முதல் அல்லது பிரதான முக்கியத்துவம் கொடுங்கள் என்பது போல. SM370:1; F679; R5990:6, 4567:5, 2765:5; NS680:6 இவை முதல் ஆர்வமாக இருக்கட்டும்; இதற்கு ஊக்கமும், மனதின் ஒருமுகத்தன்மையும் அவசியம். R5917:6 இப்போக்கினைப் பின்பற்று பவருடைய பூமிக்குரிய நலன்களை தேவன் கவனித்துக்கொள்வார். R4567:5 நமது இராஜ்ய

நோக்கத்திற்கு இசைவாயிருப்பதையே செய்யுங்கள். R5171:1, 4913:5 இவர்கள் இம்மைக்குரிய நன்மைகளை இழக்க நேர்ந்தாலும், விசுவாசத்தின் மூலமாக, அது தங்களின் ஆவிக்குரிய நன்மைக்கேதுவாக கிரியை செய்கிறதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். R4730:6 இராஜாக்களாகவும் ஆசாரியராகவும் ஆவதற்குத் தகுதியடைய வேண்டுமெனில், இப்போது நாம் நமது சொந்த நலன்களையும், உரிமைகளையும் இராஜ்யத்திற்கு ஆதரவாகப் பலிசெலுத்தத் தயாராக இருக்கிறோம் என்பதை நிரூபிக்க வேண்டும். SM374:1 இராஜ்ய வேலைகளுக்குப் பணம் தேவைப்படும்போது, கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட பணத்தை, நமது சுயத்தைத் திருப்தி செய்வதற்காக நாம் செலவுசெய்தால், நாம் தவறுசெய்ததாக நமது மனம் உறுத்திடும். R5220:2

**தேவனுடைய இராஜ்யத்தையும்** - தேவனுடைய இராஜ்யத்தில் உடன்-சுதந்தரத்துவத்திற்கான அழைப்பு. SM370:1; NS680:6 தற்கால வாழ்வாதாரத்தின் நியாயமான தேவைகளுக்குச் செலவழித்தது போக மீதம் இருக்கிற நேரம், கவனம், சிந்தனை, ஆற்றல், செல்வாக்கு மற்றும் பொருள் / பணம் ஆகியவற்றை தேவனுடைய இராஜ்யத்திற்கென்று கொடுப்பது. R2765:5, 5918:5 முதலில் யூத தேசமே தேவனுடைய இராஜ்யமாக மாறுவதற்கு அழைக்கப்பட்டது. R5917:2 இதற்காகவே ஆவிக்குரிய இஸ்ரயேலரும் இப்போது அழைக்கப்பட்டுள்ளனர். R4730:6 மேசியாவின் இராஜ்யம் சில சமயங்களில் தேவனுடைய இராஜ்யம் என்றழைக்கப்படுகிறது. Civ இராஜ்யத்தைத் தேடுவது நமது பூமிக்குரிய சில வாய்ப்புகளுக்குத் தடையாக இருப்பதாகத் தெரிந்தால், பரவாயில்லை, அவ்வளவுக்கும் அது நன்மையே. (விலையுயர்ந்த முத்து உவமையில் சொன்னதுபோல) தேவனுடைய இராஜ்யத்திற்கென்று நமக்குண்டான எல்லாவற்றையும் இழக்க வேண்டுமென்று நமது ஆண்டவர் கூறியுள்ளார். R5048:5

**அவருடைய நீதியையும்** - தேவனிடமும் மனிதரிடமும் காட்டப்பட வேண்டிய பரிபூரண அன்பின் தரநிலை. SM371:1 (இப்போதும்கூட) கண்டிப்பாக இராஜ்யத்தின் சுதந்தரர் இராஜ்யத்தின் பிரமாணங்களால் ஆளப்பட / கட்டுப்படுத்தப்பட வேண்டும். SM372:1 இராஜ்யத்தில் பங்கடைவதற்குத் தேவையான நீதி. R5219:6; NS680:6 தேவன் கிறிஸ்துவில் ஒரு நீதியை அருளியுள்ளார். R5918:4 நாம் இராஜ்யத்தைத் தேடுவது மாத்திரமல்லாமல், அதன் நீதியையும் தேடுவோமாக: இது இராஜ்யம் கொண்டுவரும் நீதியாகும், தேவன் அங்கீகரிக்கும் நீதியாகும். SM371:1 நாம் அவருடைய நீதியைத் தேடிக் கண்டடைந்தால், அவருடைய இராஜ்யத்தையும் கண்டடைவோம். (2 பேது. 1:5 – 15) R2804:6* நமது முதல் கவனம் தேவனுடைய மகிமைக்காகவும்; நமது இரண்டாவது கவனம், நமது சொந்த பிரயோஜனத்திற்காகவும்; நமது மூன்றாவது கவனம் பிறர் நலனுக்காகவும் இருக்க வேண்டும். இங்கே நாம் நம்மை முதன்மைப்படுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளோம், ஏனெனில் நம்மை நாம் ஊழியத்திற் கென்று பொருத்தமாக தகுதிப்படுத்திக்கொண்டால், மற்றவர்களுக்கு உதவுவதற்கான அதிகப்படியான வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். R5130:1,4

**தேடுங்கள்** – உண்மையான மகிமையிலும், வல்லமையிலும் வரவிருக்கிற மீட்பருடைய இராஜ்யத்தில் அவருடன் ஓரிடத்தை அடைவதற்கு நாடுவதையும் இது அர்த்தப்படுத்தும். R4730:6 வெறுமனே ஜெபத்தில் அவைகளைத் தேடுவதல்ல; பூமிக்குரியவைகளை நாம் நாடாமல், மேலானவைகளை நாம் நாடுவதன் மூலமாக நாம் அவற்றைத் தேட வேண்டும். R2479:5 அது யார் மீதும் திணிக்கப்படாது. SM369:1

**இவைகளெல்லாம்** – உணவு, உடை, முதலானவை. SM370:1 இம்மைக்குரிய தேவைகள், வெளிச்சம், தேவையான கவனிப்புகள் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்கள் (disciplines), தெய்வீகக் கிருபையின் ஆறுதல்கள், நட்பு மற்றும் அனுதாபம், இப்படி எதுவுமே குறைவுப்படாது. R1745:2,4

**உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்** - அவருடைய ஊழியத்தில் அவர் உங்களைப் பட்டினி கிடக்க

விடமாட்டார். B119 தேவையான அனைத்து விஷயங்களுமே நமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளன. R5219:6, 5990:6, 5991:1 அவருடைய ஞானத்தின்படி. F679; SM371:T; NS680:6 உண்மையில் நாம் அவைகளுக்கு அடிமையாக இருப்பதற்குப் பதிலாக, அவை நமக்கு ஊழியம்செய்பவைகளாக மாறிவிடும். R2804:6*

## 14. மத்தேயு 10:30

### "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது."

**உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம்** – நம்முடைய மிகச்சிறிய நலனும்கூட கவனிக்கப்படாமல் விடப்படுவதில்லை. R1906:5

**எண்ணப்பட்டிருக்கிறது** – அவர் அறியாமலும், அவருடைய ஒப்புதல் இல்லாமலும் காயம் ஏற்படாது. HG294:6 தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு எதுவுமே தற்செயலாக நடப்பதில்லை F646; ஒருக்காலும் தேவனுடைய அனுமதியின்றி, அவருடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு, எந்தவொரு அசம்பாவிதமும் ஏற்படுவதில்லை. R2007:2

## 15. மத்தேயு 11:27

### "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்."

**சகலமும்** – வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு பிதாவால் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத். 28:18) பிதாவிற்கு அடுத்தபடியாக, "அவரே அனைவருக்கும் ஆண்டவராய்" இருக்கிறார், ஏனெனில் "கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார்." (1 கொரி. 11:3) R296:3

**வேறொருவனும்... அறியான்** – அடையாளங்காணமாட்டான். R2268:1 சீஷர் அவரை ஒரு மனுஷனாகவே அறிந்திருந்தார்கள், ஆனால் அவருடைய அற்புதமான ஜீவநிலையாகிய அவருடைய மனித சுபாவத்துக்கு முந்தைய மகிமையின் இரகசியத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. R1059:5

**குமாரனும்... தவிர** – அவர் மாம்சமான பிறகு, "அவர் கண்டதையும் கேட்டதையும், அவர் சாட்சியமளிக்கிறார்" என்று அவரைக் குறித்துச் சொல்லப்படுமளவுக்கு, அவர் மனிதனாக வருவதற்கு முன்பு, பல நூற்றாண்டுகளாக நீடித்துவந்த, பிதாவுடனான அவருடைய ஐக்கியமானது, போதுமான தெளிவுடன் அவரில் பதியப்பட்டிருந்தது (impressed). (யோவா. 3:32) E91

**குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர** – எவையெல்லாம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோ அவைகளை மாத்திரமே நம்மால் அறிந்துகொள்ள முடியும். R106:1* மாபெரும் போதகர் தம்முடைய பள்ளியில் மாணவராய் இருக்கும் அனைவருக்கும் பிதாவை வெளிப்படுத்துகிறார். R4599:5, 5075:5 தம்முடைய மகிமைவாய்ந்த நோக்கங்களில் சிலவற்றை நமக்குத் தெரியப்படுத்துவது கர்த்தருக்குப் பிரியமாக இருக்கும்போது, அவற்றில் ஆழமாக ஆர்வங்காட்டாமலும், அவைகளைத் தெரிந்துகொள்ள முற்படாமலும் இருப்பது, நமது தரப்பில் நாம் அவமரியாதை செய்வதாக இருக்கும். NS683:4

**வேறொருவனும்... அறியான்** – ஒருவன் தனது நெருங்கிய சிநேகிதனுடைய சிந்தையையும், இருதயத்தையும் அறிந்துவைத்திருப்பது போல, பிதாவையும் குமாரனையும் நெருக்கமான விதத்தில் அறிந்துகொள்வது. R2625:1

## 16. மத்தேயு 18:10

**“இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.”**

**இந்தச் சிறியரில் ஒருவனையும்** – இந்த மனத்தாழ்மையுள்ள தேவபிள்ளைகளில் ஒருவனையும். R2661:5, 3797:3,6 தேவன் தம்முடைய மிகவும் பலவீனமான மற்றும் அதிக அறிவு இல்லாத பிள்ளைகளுடைய சகல காரியங்களிலும் ஜாக்கிரதையாக கவனம் செலுத்தி வருகிறார். Q270:3 துர்க்குணத்திலும், பெருமையிலும், உலகத்தின் மதிப்பீட்டிலும் “சிறியராய்” இருப்பவர்கள். R2063:4

**அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்** – அவர்களை வெறுக்காதீர்கள், அல்லது எந்த வகையிலும் துன்புறுத்தாதீர்கள். R1767:4 அல்லது அவர்களை இழிவுபடுத்தும் வகையில் எதையும் செய்யாதீர்கள். R3797:6 அவர்கள் சிறுமையானவர்களாகவும், அற்பமானவர்களாகவும் தோன்றலாம், ஆனால் (உண்மையில்) அவர்கள் தேவனுடைய சிநேகிதர்களாக – ஆம், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றார்கள், அவர்களை அவர் பேணிப் பாதுகாத்து வருகிறார், அவர்களுக்கு ஏற்படுத்தும் ஒவ்வொரு காயமும் அவரையே அவமானப்படுத்துவதாக இருக்கும். R2661:5 இம்மாதிரியான சிறியர் இன்னும் பெயரளவிலான சபையிலும் காணப்படுகிறார்கள், இவர்கள் பாபிலோனில் முக்கிய ஸ்தானங்களை வகிக்கும் கிறிஸ்தவத்தின் பெருமைமிகு மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டு, கண்டுகொள்ளப்படாமல் இருக்கின்றனர். R657:4*

**அவர்களுக்குரிய தேவதூதர்கள்** – ஒவ்வொரு தேவபிள்ளையும், தனது நலன்களைக் கவனித்துக் கொள்ளும் ஒரு விசேஷித்த தேவதூதனைப் பெற்றிருக்கிறான்(ள்). CR472:6; F76; R5606:1, 5387:5, 5257:3, 5131:4, 4926:6, 3798:1, 3441:2, 2661:5; Q270:4 அவருடையவர்களாய் இருப்பவர்களை “கர்த்தருடைய தூதன் ... சூழப் பாளயமிறங்கியிருக்கிறார்” (சங். 34:7). “அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?” (எபி. 1:14) F76; R5606:1 எலிசாவின் வேலையாளுக்கு வழங்கப்பட்ட தரிசனத்தின் மூலமாக சித்தரிக்கப்பட்டது போல. R3441:1 அவர்கள் மிகவும் விசேஷமான தெய்வீக மேற்பார்வையின்கீழும், தெய்வீகப் பாதுகாப்பின் கீழும் உள்ளனர். NS337:4 ஒருவேளை ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு பாதுகாக்கும் தூதனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ இருக்கக்கூடும். R2350:4 ஆபத்து மற்றும் துன்ப வேளைகளில், அவர்களின் பணிவிடைகள் தேவைப்படுகின்றன மற்றும் தாராளமாக செய்யவும்படுகின்றன. நமது இரட்சகருக்கே, அவருடைய பூமிக்குரிய ஜீவியத்தின்போது, தேவதூதர்களின் உதவி தேவைப்பட்டது, மேலும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவும் செய்தார். R75:1* அவர்கள் நமக்காக நடுநின்று, நம்மைக் காக்கும் உயிருள்ள ஆவியின் ஜீவிகளாக இருக்கலாம், அல்லது தேவனுடைய செல்வாக்குகளாகவோ வல்லமைகளாகவோ இருக்கலாம், அது எப்படிப்பட்டது என்பது உங்களுக்கோ எனக்கோ முக்கிய மில்லை (வாக்களிக்கப்பட்டுள்ள பாதுகாப்பானது எவ்வகையிலாவது நம்மை வந்துசேரும்). Q270:4 தூதன் என்ற வார்த்தையானது உயிருள்ள மற்றும் உயிரற்ற தேவனுடைய அனைத்து வல்லமை களையும் குறிக்கலாம், இவர்கள் அல்லது இவைகள் மூலமாக தேவனால் தம்முடையவர்களைக் குறித்து அறிந்துகொள்ளவும், அவர்களுக்கு உதவவும் முடிகிறது. R3798:2 பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பாதுகாக்கும் தூதன் (guardian angel) இருப்பதாகக் கருதுவது தவறானதாகும். உலகத்தாருக்கு இப்பேர்ப்பட்ட விசேஷித்த பாதுகாப்பை வழங்குவதாக கர்த்தர் எங்குமே குறிப்பிட வில்லை. R3798:1

**எப்போதும்** – இவர்களே, இவர்கள் மாத்திரமே தங்களுடைய ஜெபங்கள் எப்பொழுதும் கேட்கப் படுகின்றன என்பதை அறிந்துகொள்ளலாம். HG622:3; Q270:4 அவர்களுடைய நல்லது கெட்டது

சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களுமே, மகா இராஜாவின் கவனத்திற்கு, எந்தத் தாமதமும் இல்லாமல், கொண்டு வரப்படுகின்றன என்கிற கருத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். R2661:5, 2350:4

**என் பரமபிதாவின்** – அவர்களுடைய தகவலுக்கு / செய்திகளுக்குக் கவனம் செலுத்த அவர் எப்போதும் ஆயத்தமாய் இருக்கின்றார். Q270:4; R5387:5

**சமுகத்தை ... தரிசிக்கிறார்கள்** – அவர்களால் அவருடைய திருமுன்னிலைக்கு / சமுகத்திற்கு முன்பாக செல்ல முடியும். R5634:3, 5257:3, 4926:6, 3441:2; CR472:6 உடனடித் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். R5387:5 ஆவியின் ஜீவிகளால், "மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிற" தேவனைப் (1 தீமோ. 6:16) பார்க்க முடியும் மற்றும் பார்த்தும் கொண்டிருக்கிறார்கள். B132

## 17. மத்தேயு 28:20

**"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."**

**கட்டளையிட்டயாவையும்... கைக்கொள்ளும்படி** – எல்லா மனுஷரும் பாவிகளே, கிறிஸ்து மீட்கும்பொருளாக தம்மையே கொடுக்க வந்தார், அவரே ஜீவனுக்கான ஒரே வழி, யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் அவருடைய சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும், எல்லா விசுவாசிகளும் அவருடன் ஒன்றாக இருக்கிறார்கள், அவரில் உள்ள ஒவ்வொரு கொடியும் கனிகொடுக்க வேண்டும் இல்லையேல் நீக்கப்படுவார்கள், அவரை நம்புகிறவர்கள் அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்க்க வேண்டும், நமது நம்பிக்கையின் இறுதி முடிவு ஓர் உயிர்த்தெழுதலில் உள்ளது, மேலும் அன்பு என்பது நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருக்கின்றது (என்பவைகளை யெல்லாம் கைக்கொள்ளும்படி). R2319:2, 4

**அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்** – தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்தும், ஆவியின் குணங்கள் குறித்தும், உலகப்பிரகாரமான சுயநலத்தின் ஆவியை வேரறுப்பது குறித்தும் அவர்களுக்கு அறிவுறுத்துங்கள். R2810:2 வானியல், புவியியல் அல்லது உலகம் அனுமானிக்கும் வீணான தத்துவங்கள் என எதையும் அவர்களுக்கு உபதேசம் பண்ணாமல், மாறாக "நான் உங்களுக்குக் கட்டளையிட்டவைகளை" உபதேசம் பண்ணுங்கள். R5045:4, 3200:2

**உலகத்தின் முடிவு** – கிரேக்க வார்த்தை, சுன்ட்டேலையா / suntelia, முடிவு. R223:1* யுகத்தின் முடிவு. R5727:3, 5625:4; B105 சுவிசேஷ யுகமானது, தெய்வீக நோக்கத்தை நிறைவு செய்வதற்குத் தேவையான போதியளவிலான சீஷரை ஒன்றுகூட்டி முடிக்கும் காலம் வரையிலும். R5588:5 யுகத்தின் முடிவில், அவர் இன்னும் நெருக்கமாகவும், விலையேறப்பெற்றவராகவும் காணப்படுவார். R4784:2 யுகத்தின் முடிவில், அதாவது, நமது ஆண்டவருடைய இரண்டாம் பிரசன்னத்தின் அறுவடைக்காலத்தில் இது எப்பேர்ப்பட்ட விசேஷித்த உண்மையாக இருக்கிறது! R3166:6 பின்னர் அவர் தமது திருச்சபையை உயர்த்தவும், தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், இஸ்ரயேலைப் புதிய உடன்படிக்கையால் ஆசீர்வதிக்கவும், அவர்கள் மூலமாக முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கவும், ஒரு தனிப்பட்ட மற்றும் அதிகாரப்பூர்வமான அர்த்தத்தில் மீண்டும் வருவார். R4714:6, 2319:5 நாம் இப்போது இந்த யுகத்தின் முடிவிற்கு வந்துள்ளோம். CR476:1

**பரியந்தம்** – யுகம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்றோ, அல்லது அனைத்து இடைப்பட்ட சோதனைகளும்

சிரமங்களும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்றோ அவர் நமக்குக் கூறவில்லை; நம்முடைய நன்மைக்காகவே அவர் இந்த விஷயத்தில் நம்மை அறியாமையில் விட்டுச் சென்றுள்ளார். R4185:2

**சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்** – பரிசுத்த ஆவியினாலும், வார்த்தையினாலும். A89; E204; R2455:6, 531:2 ஆசீர்வதிக்கவும், ஆறுதல்செய்யவும், பலப்படுத்தவும், ஐக்கியங்கொள்ளவும் மற்றும் பெரும்பாலும் அவர்களின் இம்மைக்குரிய நலன்களின் நஷ்டத்தில் அவர்களின் உயர்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களுடன் (கூட இருக்கிறார்). R4714:5, 3166:6; B105, 203 உங்கள் மீதான அன்பிலும், சிந்தனையிலும், அக்கறையிலும் (அவர் உங்களுடனேகூட இருக்கிறார்). B105, 203 பிரதான தூதனாக, தேவனுடைய தூதனாக. R5634:4 அவர்களின் ஆழ்ந்த துயரத்தை அவர்களுக்குப் பரிசுத்தமாக்கி தருவதற்கு அவர் கூடவே இருக்கிறார். R5095:6 யுகம் முழுவதும் அவர் தனிப்பட்ட விதத்தில் உலகத்தில் காணப்படுவார் என்பதாக அல்லாமல், மாறாக, தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியின் மூலமாக (கூடவே இருந்து வருகிறார்). R4185:4, 2810:6 அவர் சரீரத்தில் இல்லை, மாறாக ஆவியில் இருக்கிறார். R102:4* அவர் பணியை மேற்பார்வையிடுவார் என்கிற பொருளில். R2811:1 அன்புசெய்வதற்கும், சுயத்தை வெறுப்பதற்கும், யுகம் முழுவதும், ஏறெடுக்கப்பட்டு வருகிற சகல பிரயாசங்களிலும், நமது கர்த்தர் தம் பிரதிநிதிகளுடன் கூடவே இருந்து வருகிறார். R3166:6 இப்போது நாம் தனியாக இல்லை. "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாக்களித்தவரின் தோழமை நமக்குண்டு. (எபி. 13:5) NS451:3 சுவிசேஷ யுகத்தின்போது அவர் தமது ஜனத்திடமிருந்து தூரத்தில் இருக்கும்போது, அவருடைய வல்லமை, ஆவி, பராமரிப்பு மற்றும் அன்பு என்பவை, அவர்களின் நலன்களைக் காப்பதற்காக அவர்களுடனேகூட இருந்து வருகின்றன. R2319:5, 1820:6 கர்த்தர் அப்போஸ்தலருக்கு மாத்திரமல்லாமல், அவருடைய வார்த்தையின் மூலம் அவரை விசுவாசிக்கின்ற அனைவருக்குமே ஒரு மாபெரும் கட்டளைப்பணியை (great commission) வழங்கினார் என்பதை இது காட்டுகின்றது. R2810:6 (அவர்களுக்குத் தேவையானவைகளை) அவர் ஓரிடத்தில் வழங்கினதுபோல, இன்னொரிடத்திலும் அவரால் வழங்க முடிந்தது. R5625:4 நமது கர்த்தர் கூறிய இந்த வாக்கியம், அவர் உலகத்தை விட்டுச் செல்லவில்லை என்பதை ஒருக்காலும் குறிக்க வில்லை, மாறாக அவருக்குச் செவி கொடுப்பவர்கள், தொடர்ந்து யுகத்தின் முடிவிலும்கூட இருப்பார்கள் என்பதைக் குறிக்கின்றது. R2319:4

## 18. லூக்கா 11:13

**"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்."**

**நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது** – அன்பான பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மாம்சீக உணவைக் கொடுப்பதற்கும், நம்முடைய அன்பான பரமபிதா தம்மிடம் கேட்பவர்களுக்கு தம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடுப்பதற்கும் இடையேயான ஓர் ஒப்பீடு. E224 பூமிக்குரிய பரிசுகள் / ஈவுகள். R1581:4, 3665:4, 2006:1 நாம் பூமிக்குரிய காரியங்களுக்காக – போஜனம், பானம், ஆடை போன்றவைகளுக்காக ஜெபிக்கக் கூடாது. F685; 3354:2 பெற்றோரிடம் ஆசீர்வாதங்களைக் கேட்டால், அதற்கு மாறாக தீங்கு விளைவிப்பவைகளைக் கொடுக்க மாட்டார்கள். R3807:5

**தம்மிடத்தில் வேண்டிக்** – நாம் எதையாவது கேட்கிறோமென்றால், நமக்கு அது வேண்டும் என்பதாலேயே நாம் அதைக் கேட்கிறோம், மேலும் நாம் முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்டிருந்தால், தேவன் கொடுக்க விரும்பும் வழியில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்ப வேண்டும்.

R376:2 இந்த அன்பின் ஆவியை நமக்குக் கொடுப்பதில் தேவன் பிரியமாயிருக்கிறார்; ஆனால் பொறுமையாக விடாமுயற்சியுடன் வாஞ்சித்து நாடுவோருக்கு மாத்திரமே அதனை தருகிறார். R3153:4 கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இந்த ஆசீர்வாதத்தைக் கொடுப்பதற்காகவே தம்மை வெளிப் படுத்தினார்; ஆயினும்கூட, அவர்கள் அதின் மதிப்பை உணர்ந்து, அதனை ஊக்கத்துடன் வாஞ்சிக்க கற்றுக்கொள்ளும் வரையில், அவர் அதைக் கொடாமல் வைத்திருக்கிறார். R2866:1, 2123:4* நாம் வெறுமனே ஆவிக்காக ஜெபித்துவிட்டு, சத்திய ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கான சரியான வழிகளைப் பயன்படுத்தாமல் இருந்தோமேயானால், நாம் அதிகபட்சம் “கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக” மாத்திரமே இருப்போம். E225 “பரிசுத்த ஆவியை எனக்குக் கொடுங்கள்” என்கிற வார்த்தைகளை நாம் அவசியம் பயன்படுத்த வேண்டும் என்றோ, பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தைக் கொடுங்கள் என நாம் கேட்க வேண்டும் என்றோ அல்ல; மாறாக நாம் சத்தியத்தின் ஆவியையும், தெளிந்த புத்தியையும், பரத்திலிருந்து வருகிற ஞானத்தையுமே கேட்க வேண்டும். R5202:3 மேன்மேலும் பரிசுத்த ஆவியைக் கேளுங்கள் – அவருடைய ஆவியுடன் மேன்மேலும் முழுமையாக இணங்கி நிற்கும் மனப்பான்மையைக் கேளுங்கள். E223 அதன்மூலம் நாம் ஜெயத்தின்மேல் ஜெயம்பெற்று, முன்னோக்கி நகர முடியும். R2123:3 (ஆவிக்குரிய) புசிப்பை நாம் புறக்கணித்துவிட்டு, ஜெபம் (மாத்திரம்) செய்வது பயனற்றதாகும். E225

**கொள்ளுகிறவர்களுக்கு** – அதை ஊக்கத்துடன் நாடிடும் இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்கள். R5379:6

**பரிசுத்த ஆவியை** – மாம்சத்தின் பரிசுத்தமற்ற, அன்பற்ற, சுயநலமான, நியாயந்தீர்க்கும் மற்றும் தவறு கண்டுபிடிக்கும் ஆவிக்கு மாற்றாக, இப்பரிசுத்த ஆவியே நமக்குத் தேவைப்படுகின்றது. R2590:2 ஆதி திருச்சபையார் அனுபவித்திட்ட ஆவியின் அற்புதமான பரிசுகளை / வரங்களை அல்ல, மாறாக பரிசுத்த ஆவியை அல்லது பரிசுத்த மனநிலையை, “கிறிஸ்துவின் சிந்தையை” நாம் கேட்க வேண்டும். R3153:4 பரிசுத்த ஆவியின் மற்றொரு ஞானஸ்நானத்திற்காக ஜெபிப்பது தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலும் இசைவாயிருக்காது என்றாலும், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்று ஜெபிப்பது சரியானதாயிருக்கும். R376:2; E223 நமது வேண்டுதல்களுக்கும், அதற்கொத்த முயற்சிகளுக்கும் ஏற்ப பரிசுத்த ஆவியின் கிருபைகள் கிடைக்கும் என்று விசேஷமாக கூறப்பட்டுள்ளது. R2006:1 நாம் விசேஷமாக நாடி, விசேஷமாக ஜெபிக்க வேண்டிய ஒரே காரியம் பரிசுத்த ஆவியாகும் – அதாவது, பரிசுத்த ஆவி, தேவனுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்தியத்தின் ஆவி, தெளிந்த புத்தியின் ஆவி, அன்பின் ஆவி என்பவைகளுக்காகும். F685; R5036:6, 2722:4 பரிசுத்த ஆவி என்பது தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் காண்பிக்கப்படும் அன்பின் ஆவியாகும். பழைய, சுயநலமான, தவறான ஆவி நம்முடைய இருதயங்களிலிருந்து அகற்றப்படும் அளவிற்கேற்ப தற்போதைய சூழ்நிலையின்கீழாக, அந்தப் பரிசுத்த ஆவி நமக்கு அருளப்படும், மற்றப்படிக்கு அருளப்படாது. R3665:4 முதிர்ச்சியடைந்த பரித்தவான்களின் வேண்டுதல்கள் ஆவிக்குரிய தயவுகளுக்காகவே இருக்கும். R1581:4 புதிய சிருஷ்டிகளாகிய நம்முடைய வாஞ்சைகள், விசேஷமாக, புதிய சிருஷ்டியைப் பற்றின காரியங்களுக்காகவே இருக்க வேண்டும், மேலும் இந்த வகையான ஆசீர்வாதத்தினைக் கேட்கவும், போராடிப் பெறவுமே கர்த்தர் நம்மை அழைக்கிறார். R2865:6 “சத்திய ஆவி” நாம் வாஞ்சிக்கிற நிரப்புதலைத் தருவதற்குத் தயாராக உள்ளது, ஆனால் நாம் விருந்தில் பங்கடைய – புசிக்க – வேண்டும், இல்லையேல் நாம் நிரப்பப்பட மாட்டோம். ஒரு நிரம்பிய மேசையிலிருந்து புசியாதவன், ஏதோ உணவே இல்லாதது போல், உண்மையில் பட்டினி கிடப்பான். R376:2; D225 தம் பிள்ளைகள் தம்மிடம் (பரிசுத்த ஆவி எனும்) இன்னொரு கடவுளைக் கேட்பதில் பரமபிதா பிரியப்படுவார் என்பதாக இந்த வேத வாக்கியத்தில் எதுவுமே சொல்லப்படவில்லை – அதாவது, மூன்று சரிசமமான கடவுள்கள் என்று சொல்லும் திரித்துவத்தில் ஒரு கடவுளாகிய பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பது தொடர்பாக இந்த வேத வாக்கியத்தில் எதுவுமே சொல்லப்படவில்லை. E224 (இந்தப் பரிசுத்த

ஆவி) மிகவும் விசேஷித்த யுகத்தில், மிகவும் விசேஷித்த ஒரு நோக்கத்திற்காக, மிகவும் விசேஷித்த முறையில் மட்டும் வழங்கப்படுகிறது. R5133:3 சத்தியத்தின், கிறிஸ்துவின், தெளிந்த புத்தியின், ஞானத்தின் ஆவி. R2866:1, 5202:4, 5036:6, 193:1* ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அனுபவங்களையும் கொடுப்பார் – இவை அவருடைய பிள்ளைகளில் அவரது சொந்த ஆவியை வளரச் செய்கின்றன. R3806:6; OV404:3 "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாய் ... இருக்கிறது." (யோவா. 6:63) E225 குடும்பத்தாருக்கு முன்பாக அப்பம், மீன், முட்டை என்பவை வைக்கப்படுகின்றன, ஆனால் எவர்மீதும் திணிக்கப்படுவதில்லை. E224 ஜெநிப்பிக்கப்படாதவர்களும், அஞ்ஞானிகளும் செய்வது போல நாம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க வேண்டியதில்லை. E223

**(உங்களுடைய) பரமபிதாவானவர் ... கொடுப்பது** – "எல்லாம் குமாரனாலே உண்டாயிருக்கிறது" (1 கொரி. 8:6) என்றாலும், மற்றெல்லா இடங்களைப் போலவே, இங்கேயும், ஆசீர்வாதங்களின் ஊற்றாகிய பிதாவுக்கு மகிமையையும் கனத்தையும் தருகிறார். E222 நம்முடைய பரமபிதா நன்மையான காரியங்களை வைத்துள்ளார்; அவர் அவைகளை நமக்குத் தருவதாக வாக்களித் துள்ளார்; அவற்றை நமக்குக் கொடுப்பதில் அவர் பிரியமாயிருக்கிறார், அவற்றில் சில இன்னும் தூரத்தில் இருக்கின்றன. R3353:6 ஆத்துமாவுக்குத் தடைகள் நீங்கி, அவருடைய அன்பான ஆவி அவர்களில் பெருகும்படியாக காரியங்களை ஒழுங்குப்படுத்தித் தருவதற்கு பிதா பிரியமாயிருக்கிறார். E223 இருப்பினும், நாம் அதனை வேண்டிடும் அளவுக்குத்தக்கதாக விரைவாகவும் முழுமையாகவும் வழங்கிடாமல், படிப்படியாகவே அவர் அதை நமக்கு வழங்கிடுவார். R3665:4 நாம் அவரை ஐசுவரிய வானாக, தயாளராக, தயவுள்ளவராக, தாராளமானவராக, ஞானமுள்ளவராக, அன்பானவராக எண்ணிப்பார்க்க வேண்டும். R4983:6

**அதிக நிச்சயம்** – அவர் சிறந்ததைக் கொடுப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம், மேலும் பிதாவின் அந்த வாக்குத்தத்தத்தில் நாம் மனத்திருப்தியுடன் இளைப்பாறிடலாம். E223 அப்படிப் பெறப்பட்ட காரியம் ஒருபோதும் தீங்கு விளைவிப்பதாகவோ அல்லது பயனற்றதாகவோ இருக்காது. R1946:1 நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகள் அவருடைய திட்டத்திற்கு இசைவாக இருந்தால், அவைகளை நமக்குத் தருவதில் அவர் பிரியமாயிருப்பார். R4983:6 இயேசு நமது பரம பிதாவைக் குறித்த ஒரு மகிமையான நிலைப்பாட்டை அவர்கள் முன்பாக வைத்தார். R5834:2

## 19. லூக்கா 12:32

### "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்."

**பயப்படாதே** – பலிபீடத்தின் மீது உங்கள் சிறிய அனைத்தையும் வைத்து, தகனிக்கும் அக்கினிக்கு அதை உட்படுத்தி, உங்கள் அர்ப்பணிப்பை முழுமையாக நிறைவேற்றுவதற்குப் பயப்பட வேண்டாம். R2130:6* உலகத்தின் அறியாமையும், நம்பிக்கையின்மையும் அல்லது தங்களைக் கிறிஸ்தவரென்று கூறிக்கொள்ளும் பெரும்பாலானோரின் அனலற்ற அலட்சியமும் தப்பெண்ணமும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு இடறுதலின் கற்களாக இருக்காது. அப்படிப்பட்டவர்களால் இடறவும் முடியாது; அவர்கள் வஞ்சிக்கப்படவும் மாட்டார்கள். B189

**சிறுமந்தையே** – சுவிசேஷ யுகத்தின் உண்மையுள்ள சபை. R1908:6 சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் திரள்கூட்டத்தாருக்கு மாறாக. R828:4, 778:3*, 772:1*; NS236:5 (வேதாகமத்தின்படி கிறிஸ்தவர் என்றால் கோடானகோடி பேர்கள் எனக் கணக்கிடப்படவில்லை (மெய்க் கிறிஸ்தவர் சிறுமந்தையாக இருப்பார்கள்). R5407:1; NS388:6 எல்லோரும் தங்களுடன் (கிறிஸ்துவின்

சேனையில்) சேர வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது என்பதையும், உலகம் அதன் சொந்த போராட்டத்தைப் போராடட்டும், அதன் சொந்த திட்டங்களுக்காகப் போராடட்டும் என விட்டுவிடுவதில் தாங்கள் திருப்தியடைய வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ளும் காரியமானது, கர்த்தருடைய உண்மையான பின்னடியாரில் பலருக்கும் கடினமாயிருக்கின்றது. NS61:6 உண்மையான கோதுமைகளாக அல்லாமல், களைகளாக இருக்கும் பெரும்பாலானோர், தாங்கள் அழைக்கப்பட்டுள்ள பிரதான தயவுக்குத் தகுதியில்லாதவர்கள் என்று நிராகரிக்கப்பட்டு, கர்த்தருடைய சம்பத்தில் ஒருவராக எண்ணப்படாமல் போவார்கள். B205 பூமிக்குரிய சபை பதிவேடுகளில், தங்களுடைய பெயர்களை எழுதப்பெற்றிருக்கும் அனைவரும் அல்ல, மாறாக யார் "பரலோகத்தில் பேர் எழுதப்பட்டுள்ளார்களோ," யாருடைய பெயர்கள் உண்மையற்றத்தன்மையின் காரணமாக கிறுக்கிப்போடப்படவில்லையோ, அவர்கள் மாத்திரமே (சிறுமந்தை ஆவார்கள்). HG315:6 சுவிசேஷம் தேசங்களை மனமாற்றமடையச் செய்யவில்லை. அதற்கென்று அது வடிவமைக்கப்படவுமில்லை. A72; HG271:4, 540:2; NS190:2, 513:1 உலகத்துடன் ஒப்பிட்டாலும், இதில் அநேகர் இல்லை, அல்லது நீதிமானாக்கப்படுவதற்காய் விசுவாசத்தின் முதல் படியை எடுத்து வைப்பவர்களுடன் ஒப்பிட்டாலும் கூட, இதில் அநேகர் இல்லை. R4133:6, 4148:1, 3707:6; SM680:1; NS41:4, 364:6 செவிமடுப்பவர்களில், அவ்வாறு அழைக்கப் படுபவர்களில், சிலர் மாத்திரமே தெரிந்துகொள்ளப்படுவார்கள். NS474:4 பரிசுத்தவான்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள் எப்போதும் போலவே இன்றும் அரிதாகிவிட்டனர். OV387:2; SM383:1 விலையேறப்பெற்ற கற்களைப் போல அரிதானவர்கள். HG752:1; NS150:2 இவர்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பமும், இவர்களின் செல்வாக்கு மிகவும் அற்பமுமாகும், எந்தளவுக்கு என்றால் இவர்கள் உலகத்தின் எந்தவொரு பெரிய சபை உட்பிரிவினரிடையேயும் பதிவு செய்யப்படுவதில்லை / இடம்பெறுவதில்லை, மாறாக இவர்கள் அனைவரும், அனைத்து சபை உட்பிரிவுகளால் துடைத்துப் போடப்படும் அழுக்குகளாகக் கருதப்படுகின்றனர் – சில சமயங்களில் பரிதாபமாக பார்க்கப்படுகின்றனர், சில சமயங்களில் தூற்றப்படுகின்றனர். SM383:2; NS49:3 ஆகவே, கிறிஸ்துவின் உண்மையான சபை மிகப் பெரிய அமைப்பாக இருக்கும் என நாம் எண்ண வேண்டியதில்லை. R1102:6 "(தேவன் தெரிந்து கொண்டவர்களில்) மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." (1 கொரி. 1:26) NS128:3, 318:5, 388:6 பிரதானமாக இந்த உலகத்தின் எளியவர்களிலிருந்து. NS66:1, 647:1 முதலாம் உயிர்த்தெழுதலின் எண்ணிக்கை மிகவும் அளவிடப்பட்டதாகும் (limited). HG230:6, 615:4 எனவே, கடைசி நாட்களில், கர்த்தருடைய மாபெரும் சேனையாக இருக்கப்போவது இந்தப் பரிசுத்தவான்கள் அல்ல என்பது தெளிவாகிறது. D543 முழு உலகத்தையும் அடையாளப்படுத்துகிற இஸ்ரயேலின் சேனைகளுடன் ஒப்பிடுகையில், அன்றைக் கிருந்த ஆசாரியரின் எண்ணிக்கை (ஐந்து என்பது) மிகவும் சிறியது என்பதைக் கவனிக்க வேண்டும். R1836:3; T118 ஐந்து ஆசாரியரில் இருவர் கர்த்தரால் அழிக்கப்பட்டதை நாம் நினைவுகூருகையில், 8,580 லேவியருக்கு 3 ஆசாரியர் எனும்போது, 2,800 பேருக்கு 1 ஆசாரியன் மட்டுமே இருந்ததாகக் காண்கிறோம். T119 யூதர் மற்றும் புறஜாதிகள் இருவரிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், கர்த்தரிடமிருந்து வருகிற இரக்கத்தின் செய்திக்குப் பதிலளிக்கிறவர்கள், மற்றும், மனவிருப்பத்துடனும், பேரார்வத்துடனும், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க விரும்புகிறவர்கள். HG685:4 பரலோக சபையின் தகுதிகாண் அங்கத்தினராக (probationary members) ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைவரின் தற்கால சோதனைகள் கடுமையானதாயும், பெரும் கவனமும் ஈடுபாடும் தேவைப்படுபவையாகவும் இருக்கின்றன. இதன் விளைவாக, கிறிஸ்தவ ஜனங்களால் பொதுவாக நினைக்கப்படுவதைக்காட்டிலும் தெரிவானது (selection) மிகவும் சிறியதாக இருக்கின்றது. R1570:6 ஒரு சிலர் மட்டுமே தங்கள் இருதயங்களை அறிவுரைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து, தெய்வீக வழிகாட்டுதலை முழுமையாகப் பின்பற்றுகிறார்கள்; இதன் விளைவாக ஒரு சிலர் மட்டுமே கர்த்தருடைய கனிவான பராமரிப்பை உணர்ந்துகொள்ளும் பாக்கியத்தை அறிந்திருக்கிறார்கள். R2130:1* இந்தச் சிறுமந்தையானது, சுவிசேஷ யுகத்தில், இயேசுவின் அடிச்சுவடுகளில், இடுக்கமான வாசல் வழியாகச்

செல்லும் அனைத்து பரிசுத்தமான சீஷர்களாலான ஒன்றாகும். R6013:3 ஆண்டவர், கீழ்ப்படியாத ஆடுகளை மேய்ப்பவர் அல்ல (இருப்பினும், வெயில் மழை எனும் பொதுவான ஆசீர்வாதங்கள் அனைவருக்கும் கிடைப்பதற்கு அவர் அனுமதிக்கிறார்). R1396:2 சத்திய பிரசங்கத்தின் மூலமாக, உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். R3004:6 தற்காலத்தில் ஒரு சிறு மந்தை மட்டுமே; ஆனால், ஏற்றகாலத்தில், அவர் எல்லோரையும் இழுத்துக்கொள்ளுவார் (யோவா. 12:32), இந்த நோக்கத்திற்காகவே சிறு மந்தை உயர்த்தப்பட்டு, அவருடன் இணைந்திருக்கப்போகின்றது. R1055:4 யுகங்களின் வரைபடத்தில் பிரமிடு 'n' ஆல் குறிப்பிடப்படுகிறது. A235; R275:1 சுவிசேஷயுகக் காலத்தில் அங்கும் இங்கும் தெரிந்துகொள்ளப்படுகிற பரிசுத்தக் கூட்டத்தார், உண்மையுள்ள மீதியான ஜனம். A72; R5707:1, 2773:5, 2407:5, 1983:4 கர்த்தர் தாமே தெரிந்துகொள்ளுகிற விலையேறப்பெற்ற மணிகள். B190; R5038:2, 2972:2 கிறிஸ்துவின் மணவாட்டி, மகிமைவாய்ந்த ஆயிரமாண்டு இராஜ்யத்தில் அவருடைய உடன் சுதந்தரராக இருப்பவர்கள். SM313:T; R5769:1, 5038:3, 4148:1, 3004:6, 2972:4, 2442:1 "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." (1 கொரி. 1:26) OV297:T; R2693:2, 1102:6 அந்த ஆவிக்குரிய கூட்டத்தாரில் மற்ற நாட்டினரைப் போல யூதரும்கூட இருப்பார்கள். CR156:3 "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்கள்." (2 பேது. 1:4) R270:3, 5677:4, 4390:1, 1360:4, 828:4 முதற்பலன்கள். (யாக். 1:18) R5870:2, 4702:4, 2490:2 "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள்." (வெளி. 20:6) R331:4, 4914:6 "பரம அழைப்பின்" சிறுமந்தை (பிலி. 3:14) R4714:5, 2490:1 "ஜெயங் கொள்ளுகிறவர்கள்." (வெளி. 3:21) R1360:4, 5575:2, 2123:2, 828:4, 275:1 "மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கு" வருகிறவர்கள். (உரோ. 2:7) R5407:1 இராஜரீக ஆசாரியக்கூட்டம். (1 பேது. 2:9) R4999:1, 4591:1, 4537:4, 4397:6, 3115:6; T119 "பரிசுத்த ஜாதி." (1 பேது. 2:9) R2364:2; OV251:2 "இராஜாக்களும் ஆசாரியர்களும்." (வெளி. 1:6, 5:10) R4298:3, 5575:1 "அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களும்." (வெளி. 17:14) R4397:6 "முதற்பேறான வர்களின் சபை." (எபி. 12:23) R270:3, 5870:2, 5066:5, 4999:1 "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்." (மத். 24:24) R2490:1, 5407:1, 2966:2 "புத்தியுள்ள கன்னிகைகள்." (மத். 25:1 – 12) R2978:6 ஆலய வகுப்பார். R828:4 இராஜ்ய வகுப்பார். R1855:3 பரிசுத்தவான்கள் அடங்கிய கூட்டத்தார். R5066:5, 4999:1 தேவனுடைய அன்பான குமாரனுடைய பிரதிகள் / சாயல்கள். R4401:1, 4928:6, 2972:1 நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட புதிய சிருஷ்டிகள். R5032:2 நல்ல மேய்ப்பனின் உண்மையான ஆடுகள். R2441:6 உண்மையான கற்புள்ள கன்னிகையாகிய கிறிஸ்துவின் சபை. SM408:2; R1718:4 விசுவாசத்தின் கண்களையும் காதுகளையும் உடையவர்கள். R3701:3 தங்கள் பிரதிஷ்டையின் உறுதிமொழியை உண்மையாக நிறைவேற்றுபவர்கள். SM636:2 கிறிஸ்து தலையாக இருக்கும் மேசியாவின் சரீர அங்கத்தினர். R4848:4, 4298:3, 4914:6, 828:5, 779:6 தீமையை அழிப்பதிலும், பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதிலும் இயேசுவோடு இணைந்திருக்கப் போகிறவர்கள். R188:5, 4793:3, 1571:1, 1079:2 பிரகாசமான நட்சத்திரங்களைப் போல தனியே தெரிவார்கள், மறுசீரமைக்கப்பட்ட பூமியின் மீது சூரியனைப் போல பிரகாசிப்பார்கள். R779:6 ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்து, ஆவிக்குரிய இஸ்ரயேல். R4390:1; CR156:3; OV251:2. மொத்தம் 144,000 பேர் (வெளி. 14:1), மில்லியன் கணக்கான நபர்கள் அடங்கிய கிறிஸ்தவமண்டலத்துடன் ஒப்பிடும்போது இது ஒரு சிறிய எண்ணிக்கையாகும். CR156:3 ஆகவே, பரிசுத்தவான்கள் இந்த உலகத்தின் இராஜ்யங்களைத் தூக்கியெறியும் "கர்த்தருடைய மகா சேனை" (யோயேல் 2:11) ஆக இருக்க முடியாது. D543 கத்தோலிக்கர் சொல்லிக்கொள்வது போல, கத்தோலிக்க சபையின் குருமார்கள் அல்ல. OV124:4 நோவாவால் நிழலாகக் காண்பிக்கப்பட்டவர்கள். R188:4 இப்போது சோதனையின்கீழாக இருக்கின்றனர். R779:6

**இராஜ்யத்தை –** உடன் சுதந்தரராக இருக்கப்போகிற மேசியாவின் ஆவிக்குரிய, கண்ணுக்குத் தெரியாத இராஜ்யம். SM205:2; R5038:3 இராஜரீக குடும்பத்தார் மாத்திரமே இராஜ்யத்தைப் பெற்றுக்

கொள்வார்கள். மற்ற அனைவரும் இராஜ்யத்தின் குடிமக்களாக இருப்பார்கள். SM680:1 பூமியின் ஆளுகை. R2520:6 கர்த்தர் கொடுக்கப்போகிற இராஜ்யமும் நித்திய ஜீவனும், ஆதாமினுடையதாகும்; அவை ஆதாமினுடைய கீழ்ப்படியாமையால் இழக்கப்பட்டு, கல்வாரியில் நம்முடைய ஆண்டவரால் மீட்கப்பட்டவையாகும். OV251:3 இவர்கள் இராஜரீக ஆசாரியராக இருக்கப்போகிறவர்கள், இவர்களுக்கே (இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தராகிய கிறிஸ்துவின் கீழாக,) "எல்லாவற்றையும் திரும்பக்கொடுக்கும் காலங்களில்," பூமியின் முழு கட்டுப்பாடும் ஒப்படைக்கப்பட உள்ளது. (அப். 3:21) R2490:2 தானி. 2ம் அதிகாரத்தில் 'கல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ள இராஜ்யத்தினுடைய பிரதிநிதிகள். CR42:4 பூமியின் விவகாரங்கள் சிறு மந்தை கைக்கு மாற்றப்படும். R2983:5 விரைவில் உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிற அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்தரர் ஆவதற்கான பரம அழைப்பு அவர்களுக்கானதாகும். R4714:5 தனியே தேவனுடைய இராஜ்யமானது, நமது கர்த்தராகிய இயேசுவையும், வெற்றிபெறும் வகுப்பாராகிய ஜெயங்கொள்ளுபவர்களையும் மாத்திரமே உள்ளடக்கினதாயிருக்கின்றது. R5575:2 எப்படி நம்முடைய கர்த்தர் பாடுபட்டு, பிறகு அவருடைய மகிமைக்குள் பிரவேசித்தாரோ அதுபோல, அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சபையும் பாடுபட்டு, அதன்பின் தன்னுடைய கர்த்தரின் மகிமைக்குள்ளாக பிரவேசிக்கப்போகின்றது - அவருடைய இராஜ்யத்தின் பங்காளிகளாக மாறப்போகின்றது. NS579:3 இதனைப் பின்தொடர்ந்து வருகிற ஒரு யுகத்தில். A72 சபை நிறைவடையும் வரையில், இந்த இராஜ்யமானது வர முடியாது. R1718:4 அவர்கள் முதலில் ஆவிக்குரியவர்களாக மாற வேண்டும், ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது." (1 கொரி. 15:50) R1855:3 இந்த இராஜ்யம் வரும் வரை, எல்லோரும் சமமாக இருக்கும் தளத்தினை அவர்கள் அடைய மாட்டார்கள்; அப்போதும் கூட வித்தியாசங்கள் இருக்கும்: "மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது." (1 கொரி. 15:41) NS67:1 "என் பிதா எனக்கு ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்." (லூக். 22:29) A274 இராஜ்ய வாரிசுரிமை / சுதந்தரத்துவம் இஸ்ரயேல், அதாவது, யூதரிடமிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற பலன்களைக் கொடுக்கும் ஜனத்திடம் கொடுக்கப்பட்டது. (மத். 21:43) R2125:5 கர்த்தர் மற்றும் அவரது மகிமையடைந்த திருச்சபையின் நேரடி மேற்பார்வையின் கீழாகவும், அந்த சர்வ அதிகாரமுள்ள இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதன் மூலமாகவும், உலகம் இதுவரை அறிந்திராத ஒரு மிகப்பெரிய சீர்திருத்தம் ஏற்படும். SM786:T நமது தரப்பில் எழுப்பப்படும் குரல்கள் இன்றைக்கு எவ்வளவு பலவீனமாக இருந்தாலும் சரி, நமது (கர்த்தருடைய) இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது, உண்மையும் சத்தியமுமே நிலவும். R3068:4 சபை நிறைவடையாமல், இந்த இராஜ்யம் வர முடியாது, ஆசீர்வாதங்களும் ஆரம்பமாக முடியாது. R1718:4; CR244:5 கர்த்தர் ஒரு நோக்கத்திற் காகவே, தம்முடைய சீஷருக்கு, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான காலத்தைப் பற்றிய எந்தத் திட்டவட்டமான தகவலும் தராமல் இருந்தார். R5399:2 உலகம் எதற்காகக் காத்திருக்கிறதோ அந்த இராஜ்யம். OV237:6 அந்தகாரத்தின் அதிபதி கட்டப்பட்டு, ஒளியின் அதிபதி பிரகாசிக்கும்போது. R5038:3, 4148:1 "நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி... சிங்காசனங் களின்மேல் உட்காருவீர்கள்." (லூக். 22:30) A274 பாவப்பட்ட முழு உலக மனுக்குலத்தையும் ஆசீர்வதித்து, அறிவூட்டி, உயர்த்தும் பணிக்கான மேசியாவின் இராஜ்யம். R4148:1, 5345:6, 5399:2 தங்களுடைய மீட்பருடன் உடன்-சுதந்தரராக. R5038:3; OV257:3 ஆளும் வகுப்பாரில் ஒருவராக மாறுவதற்காக. R5575:2 "இராஜாக்களும் ஆசாரியர்களும்." (வெளி. 5:10) R2074:4 அநேக உபத்திரவத்தின் வழியாக நீங்கள் அதிலே பிரவேசிப்பீர்கள். (அப். 14:22) R1801:6

**உங்களுக்கு... கொடுக்க** - ஆனால் (அவர்களே அதை) வைத்துக்கொள்வதற்காக, அவர்களுக்கு அது கொடுக்கப்படுவதில்லை. பலிசெலுத்துவதற்காகவே பூமிக்குரிய திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் அவர்களுடையதாயிருக்கின்றன. OV251:3 அதற்காக காத்திருக்க வேண்டுமென இது நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. CR69:6; OV237:6; SM408:2 மீட்பரோடு உடன்-சுதந்தரராக இருக்கும்

இவர்களுக்கு, பரமபிதா இந்த இராஜ்யத்தைக் கொடுக்கும்போது, சகலமும் மாறிவிடும். அந்தகாரத்தின் அதிபதி கட்டப்பட்டிருப்பான், ஒளியின் அதிபதி பிரகாசித்துக்கொண்டிருப்பார். R5038:3 இவர்கள் கீழ்ப்படிவதற்கும், நீதியை நடப்பிப்பதற்கும் தேவனிடம் உடன்படிக்கை செய்துகொண்டு, பிற்பாடு பரலோக நலன்களுக்காக பூமிக்குரிய நலன்களைப் பலிசெலுத்துவதற்கான ஒரு விசேஷித்த அர்ப்பணிப்பும் செய்தவர்களாவார்கள். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்." (எபே. 4:4) F125

**பிதா பிரியமாயிருக்கிறார்** – "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவா. 16:27); "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்." (சங். 91:4) R3331:2

## 20. லூக்கா 12:37

**"எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

**எஜமான் வரும்போது** – வந்திருக்கின்றபோது. R1877:5 வந்த பிற்பாடு. R149:4*, 191:4 நமது காலக்கணக்கீட்டின்படி, தம்முடைய விழித்திருக்கும் ஊழியருக்கு ஊழியஞ்செய்வார் (சத்தியத்தைப் பரிமாறுவார்) என்று நமது ஆண்டவர் வாக்களித்த ஏற்ற வேளையில், இசைவான சத்தியத்தைப் பெற்றுக்கொண்டோம் எனும் கூற்றானது, நாம் புரிந்துகொண்டபடி, கால அம்சங்கள் சரியானதாய் இருக்கின்றன என்பதற்கு ஒரு சான்றாக இருக்கின்றது. R5368:3, 4067:5

**விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற** – யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டம் குறித்து அற்புதமாக வெளிப்படுத்தப்படும்போது, இரண்டாம் பிரசன்னத்தின் நாளைப் பற்றின தீர்க்கதரிசன அறிவிப்புகளின் நிறைவேற்றத்தைச் சிலர் காண்பார்கள், மேலும் அதனை பிரசன்னத்தின் அடையாளங்களில் ஒன்றாக அடையாளங்கண்டுகொள்வார்கள். D599 தாங்கள் இயேசுவைக் காண்போம் என்பது போல, வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் குறிக்கவில்லை; மாறாக வேதாகம சாட்சிகளைக் கவனித்திருப்பதையும், காலத்தின் போக்கைக் கவனித்திருப்பதையும், தங்களது சொந்த இருதயங்களைக் கவனித்திருப்பதையும், தேவனுடைய திருச்சபையின் நலன்களைக் கவனித்திருப்பதையும் குறிக்கின்றது. R5400:5 விழிப்பு; இராஜ்ய செய்தியை அறிவிப்பதற்கான வாய்ப்புகளை உற்றுநோக்கி இருப்பது. R5400:5 விழித்திருப்பதும் ஜெபம் செய்வதும் இணைப்பிரியக் கூடாதவையாகும்; ஜெபம் என்பது விசுவாசத்தையும், விழித்திருப்பது, கிரியைகளையும் குறிக்கின்றன. R2692:3 விழித்திருக்கும் காரியமானது திருச்சபையின் நம்பிக்கை, கிறிஸ்துவுடன் மகிமையில் மீண்டும் இணைவது, உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக அவரோடு ஆளுகை செய்வது என்பவைகளை எப்போதும் மனதில் வைத்திருக்கச்செய்யும், மேலும் இருதயத்தைக் கர்த்தருடனான இசைவிற்குள்ளாக வைத்திருக்கவும் உதவும். R1796:5

**ஊழியக்காரரே** – கர்த்தருடைய இரண்டாம் வருகையின் போது வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து ஊழியரையும் குறிக்கிறது. R5400:4 இயேசுவின் பரோஷியாவில், அவரது இரண்டாம் வருகையில், அவர் முதலில் தம்மை தம்முடைய உண்மையுள்ள பின்னடியாருக்கே வெளிப்படுத்துவார். R5399:3

**பாக்கியவான்கள்** – நாம் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து, அவரை ஏற்றுக்கொண்ட நாள்துவக்கி நமக்குக் கிடைக்கின்ற அனுபவமானது, உண்மையிலேயே ஆசீர்வாதமானதாய் இருந்து வருகின்றது. R87:3 தேவனிடம் முழு நம்பிக்கை கொண்டதன் மூலமாக, அவர்கள் இப்போது தங்கள் எஜமானருடைய சந்தோஷத்திற்குள்ளாக பிரவேசிக்கத் தொடங்குகிறார்கள் (மத். 25:21). R1797:1

**அவர் அரைகட்டிக்கொண்டு** – வீட்டு எஜமான் அதன் ஊழியக்காரனாக மாறுகிறார். R3355:1, 5368:4 எஜமானரே இந்தச் சத்திய விருந்தினை பரிமாறுபவராக, வெளிப்படுத்துபவராக, முன்வைப்பவராக இருப்பார். R5399:6 எஜமானன் – தேவன் மற்றும் அவருடைய ஜனத்தின் மகா ஊழியன் – "உடன்படிக்கையின் தூதன்" – கிறிஸ்து. (மல். 3:1) D613 முதன்மையாக எஜமானர் மூலமாகவும், தொடர்ந்து மற்றவர்களாலும் பரிமாறப்பட்டது. D612; NS43:4 இந்தப் "புதியதும் பழையதுமானவை" (மத். 13:52) ஓர் ஊழியக்காரனிடமிருந்து இன்னொருவருக்கும், பின்பு முழு வீட்டாருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டாலும், எஜமானரே நமக்குப் புத்துணர்ச்சியூட்டும் சுவையான பதார்த்தங்களை விநியோகிக்கிறார் என்பதை யாரேனும் சந்தேகிக்க முடியுமா? R3415:5 வீட்டின் எஜமானரே இதைச் செய்கிறாரெனும்போது, அவர் தம்மிடமிருக்கும் உச்சிதமானவைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதையே இது அர்த்தப்படுத்துகின்றது. R2692:4 எங்களுடைய எழுத்துகளில், கர்த்தருடைய செய்தியை எங்களுடைய செய்தியாக முன்வைக்காமல், கர்த்தருடைய செய்தியை கர்த்தருடைய செய்தியாகவே முன்வைத்துள்ளோம், ஒவ்வொரு உபதேசத்திற்கும் பொருத்தமான வேதாகம அதிகாரத்தையும் வசனத்தையும் நாங்கள் கொடுத்துள்ளோம். இருப்பினும், பலர் எங்கள் மீதும், மற்றவர்களின் மீதும் சாய்ந்துவிடுவார்களோ என்றும் அஞ்சுகிறோம். R4709:3, 1867:3 பாஸ்டர் ரசல் அவர்கள் செய்த வேலை அவருடையதாக மட்டுமல்லாமல், அது கர்த்தருடைய வேலையாகவும் இருந்தது, இப்போதும் அப்படியாகவே இருக்கின்றது. R6015:2*

**அவர்களைப் பந்தியிருக்கச்செய்து** – அவருடைய பிரசன்னத்தை, வேத வாக்கியங்களில் கொடுக்கப் பட்டுள்ள சாட்சியங்களால் மட்டும் அறிந்துகொள்ளாமல், அவருடைய மேற்பார்வையின் கீழாக தங்களுடைய இருதயங்களில் பிரகாசிக்கின்ற திட்டத்தின் தெளிவு மற்றும் அழகின் வாயிலாக ஒரு விசேஷித்த நிரூபணமும் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும். NS199:6 ஒரு விசேஷித்த ஆவிக்குரிய விருந்து – இது விசேஷமானது, ஏனென்றால், ஒரு விசேஷித்த சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படுகின்றது, அதிலும் அவர்கள் தங்கள் ஆர்வத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தியதற்காக அது ஒரு விசேஷித்த வெகுமதியாக முன்வைக்கப்படுகின்றது. R3355:1 அவருடைய பிரசன்னத்தைப் பற்றி உலகம் அறியாதிருக்கும் ஒரு காலமளவும் இந்த ஊழியம் நடைபெறும். NS7:3 விசுவாசத்தினாலே நாம் எஜமானரின் பந்தியில் ஏற்கனவே அமர்ந்திருக்கிறோம், வாக்களித்தபடி, அவரே புறப்பட்டு வந்து நமக்கு ஊழியஞ்செய்கிறார். C197 தற்கால சத்தியம். R4211:6* புத்துணர்ச்சியூட்டி, பலப்படுத்துகிற சத்தியம். R515:4 உலகம் அறியாத புசிக்கக்கூடிய போஜனம். R4446:6; D612 பலமான ஆகாரம் – இது குறிப்பாக கிறிஸ்துவில் குழந்தைகளாய் இருப்பவர்களுக்கானதல்ல, மாறாக நன்கு வளர்ந்தவர் களுக்கானதாகும், அதாவது, ஏற்றகால தற்கால போஜனத்தைப் பகுத்தறிவதற்கும், பாராட்டுவதற்கும் "பயிற்சியினால் முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களை உடையவர்களுக்கானதாகும்" (மத். 24:45, எபி. 5:14). B196 அவர்களின் புத்துணர்ச்சிக்காகவும், ஆறுதலுக்காகவும், தெய்வீக வார்த்தையிலிருந்து புதியதும் பழையதுமானவைகளைக் கொண்டு வருவார். R5399:5 கி.பி. 1874 துவக்கி அவர் வேதவாக்கியங்களை நமக்குத் திறந்து, அவருடைய தற்போதைய மகிமையான சுபாவம், அவருடைய வருகையின் நோக்கம், விதம், நேரம் மற்றும் விசுவாசத்தின் வீட்டாருக்கும் உலகிற்கும் அவர் எத்தன்மையில் வெளிப்படுவார் என்பவை பற்றிய சத்தியங்களை நமக்கு எடுத்துக்காண்பித்துக் கொண்டிருக்கிறார். B171 நீதியின் மீது (சத்தியத்தின்மீது) பசி தாகம் உள்ளவர்கள் மட்டுமே இந்தப் பந்திக்கு வரவேற்கப்படுகிறார்கள். R4782:3 மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே கர்த்தருடைய உண்மையான ஐக்கிய பந்தியில் பங்கேற்க முடியும். HG603:4 நாம் கி.பி. 1875 துவக்கி நடந்து வருகிற அறுவடைக் காலத்தில் இருக்கிறோம். இந்தக் காலத்தில் தம்முடைய ஜனங்களை, சம்பூரணமான ஆவிக்குரிய போஜன பந்தியில் அமர வைப்பதாக கர்த்தர் வாக்களித்துள்ளார். வேதாகமப் பாடங்கள் (தொகுதிகள்) அந்த வாக்குறுதியுடன் அடையாளம் காணப்படுகின்றன. R4709:6, 4448:5; NS155:3 சத்தியத்தின் பந்தி. R4782:3 அவர்களை தமது சிநேகிதராகக் கையாளுகிறார்.

R2692:4 பரலோக விஷயங்களைப் பற்றிய ஒரு விசேஷித்த அறிவு. R2693:5 "ஏற்றவேளை போஜனம்." (மத். 24:45) R1897:5, 2693:5, 2200:1, 1867:3 "விருந்துசாலையில்" (அவர்களைப் பந்தியிருக்கச்செய்து) (உன். 2:4) D612 உலகம் அறியாதவைகளை. D612 வரவிருக்கும் நற்காரியங்களுடைய முன்சுவை நமக்கு ஏற்கனவே கிடைத்துள்ளது. C196 புத்துணர்ச்சியூட்டி, பலப்படுத்துகிற சம்பூரணமான ஆவிக்குரிய போஜனங்களடங்கிய ஓர் உயர்தரமான சத்திய விருந்து. R4525:2, 5399:3, 4710:1, 4448:5, 515:4

**அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்** - அறுவடைக் காலத்தின் அனைத்து ஆசீர்வாதங்களுடனும் (bounties). R2036:3, 1899:2 நாம் உண்மையுள்ளவர்களாக அவருக்கு ஊழியம்செய்கிறோம் என்பதை நிரூபிக்கும் வரையில், நாம் பந்தியிருக்கவும், அவர் நமக்கு ஊழியஞ்செய்வார் என்று எதிர்பார்க்கவும் கூடாது. R1953:5 அவருடைய மகிமைவாய்ந்த சுபாவம், அவர் திரும்ப வந்திருத்தலின் நோக்கம் மற்றும் விதம், தெய்வீகத் திட்டத்தின் கால அம்சங்கள், அறுவடை வேலை மற்றும் உபத்திரவ காலம் என்பவைகள் பற்றின சத்தியங்களுடன். B171 எஜமானரே ஊழியக்காரனாக, சத்தியத்தை வெளிப்படுத்துபவராக இருப்பார். R5399:6, 5368:4, 4525:2 அவருடைய உவமைகளையும், மறை பொருள்களையும் நமக்கு விளக்கி, காலங்காலமாக தலைமுறை தலைமுறையாக மறைந்திருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். R5399:5, 713:2 அவர் பிரசன்னமாகியிருக்கும் இரகசியத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்துவது. R1796:6 தெய்வீக வார்த்தையிலிருந்து அவர்களுக்கு விருந்து ஏற்பாடுபண்ணுதல். R5399:5 ஒவ்வொரு உண்மையுள்ள ஜாமக்காரரும் (விழித்திருப்பவர்களும்) இந்தப் பந்தியில் பங்கேற்பார்கள். R5399:6

## 21. யோவான் 6:45

**"எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்."**

**தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்** - சகல மெய் ஞானத்தின் மூல ஆதாரம் (source). (யோவா. 17:17; நீதி. 2:6) R3550:3 ஆயினும், தேவன், எல்லோருக்கும் ஒரே நேரத்தில், ஒரே விதத்தில் கற்றுக்கொடுப்பதில்லை. 6,000 ஆண்டுகளாக அவர் பாவத்தின் மிகுந்த பாவத்தன்மையையும், அதன் கசப்பான விளைவுகளையும் குறித்து உலகிற்குக் கற்றுக்கொடுத்து வருகின்றார். போகப்போக அவர் அவர்களுக்கு நல்லொழுக்கம் மற்றும் பரிசுத்தத்தின் பாக்கியத்தையும் குறித்து போதிப்பார். R385:1* ஆவியினால் வழிநடத்தப்படும்போது, ஒவ்வொரு விஷயத்தையும் நாம் தேவன் பார்க்கும் விதத்தில் பார்த்துக்கொண்டிருப்போம். நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கேதுவாக, நமது அன்பானது அவரது சித்தத்தைத் தெரிந்துகொள்ளும் வாஞ்சையை உண்டுபண்ணிடும்; நமது விடாமுயற்சியும், பொறுமையும், அந்த அறிவினை அடைவதற்கு எந்த வழிவகையையும் பயன்படுத்தாமல் இருக்காது; தேவன் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசமானது, அவருடைய வார்த்தையில் உள்ளான நம்பிக்கை வைப்பதற்கு நம்மை வழிநடத்தும்; நமது சாந்தமான மனத்தாழ்மையானது பெருமையையும், சுயமேன்மைக்கான பிரியத்தையும் புறம்பே தள்ளும். R385:5* தேவன் தமது புத்திமதிகளைத் தெரிவிப்பதற்குப் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்துகிறார். அவைகள் அவருடைய சீஷர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள் போன்றவர்கள் மூலமாக நமக்குக் கிடைக்கலாம், ஆனால் அவை அனைத்தையும், (மனுஷரிடமிருந்து அல்லாமல், மாறாக) பிதாவிடமிருந்து குமாரன் மூலமாக வெளிப்பட்டவையாகவே நாம் அடையாளங்காண வேண்டும். Q843:4 மாபெரும் தலைமை போதகராகிய பரமபிதாவின் நியமனத்தின் மூலமாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மனுஷருக்கு மாபெரும் போதகராக இருந்தார், இன்றும் இருக்கின்றார். அவ்வாறே, நம்முடைய

கர்த்தரும் தமக்குக் கீழாக, தம்முடைய மந்தையின் உடன் மேய்ப்பர்களாக இருக்கும்படிக்கு, விசேஷித்த போதகராகிய அப்போஸ்தலரையும், இன்னும் சிலரையும் நியமித்தார். E50 நமது மீட்பர் பேதுருவிடம் கூறியது போல, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்." (மத். 16:17) NS516:5 மனித போதகர்களைத் தலைவர்களாகப் பின்பற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். அவர்களின் போதனைகள் சத்திய வார்த்தையுடன் ஒத்துப்போனால் மாத்திரமே நாம் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். R386:4* சத்திய அறிவினை உங்களுக்குக் கொண்டு வருவதற்காய், தேவன் பயன்படுத்திய மனிதப் பிரதிநிதி யாராக இருந்தாலும்சரி, அவர் வெறுமனே, பரிசுத்தப் புத்தகத்தில் உங்களுக்காக அதைக் கண்டறிய உதவும் ஆட்காட்டி விரலாக மாத்திரமே செயல்படுகிறார். R1321:1 தேவன் வேதாகம வார்த்தைகள் மூலமாக நமக்குப் போதிக்கின்றார். CR454:5 இந்த விலையேறப்பெற்ற சத்தியம் உங்களுக்கான தேவனுடைய செய்தியாக இருக்கின்றதே ஒழிய, மனிதனுடைய செய்தியாக அல்ல. ஒருவேளை தேவன் தமது ஆவியால் அத்தகைய உயர்ந்த மற்றும் மகிமைவாய்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தாமல் போயிருந்தால், அந்நம்பிக்கையானது மனிதனுடைய சிந்தையில் தோன்றியிருக்கவே முடியாது. R1321:2 யார் ஒருவர் சத்திய ஆவியுடன் தொடர்புடைய சுயாதீனத்தின் ஆவியைக் குறித்து ஒரு புரிதலுக்குள் வராமலும், தனக்கென்று மனச்சாட்சியின் சுயாதீனத்தை விரும்பாமலும், அதேபோன்ற சுயாதீனம் மற்றவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என விரும்பாமலும் இருக்கிறாரோ, அவர் உண்மையான தேவபிள்ளையாக, "தேவனால் போதிக்கப்பட்டவராக," கிறிஸ்துவின் பள்ளியில் ஒரு மேம்பட்ட நிலையை அடைந்தவராக இருக்க முடியாது. NS64:1 ஒவ்வொரு அங்கத்தையும் மற்ற அங்கத்தின்மேல் சாராமல் சத்திய அறிவில் கட்டியெழுப்புவது என்பது தேவனுடைய திட்டம் அல்ல. சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் முழு சரீரத்தையும் கட்டியெழுப்புவதற்கு அதனதன் பங்கைச் செய்ய வேண்டியிருக்கிறது. R386:1* எதிராளியின் கண்மூடித்தனமான தாக்கங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு, அதற்கு மாறாக அவர்களுக்குச் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. R2268:1 இப்படியாக, "தேவனாலே போதிக்கப்பட்ட" இயேசுவின் உண்மையான பின்னடியார்களால் இயேசுவின் கருகலான மற்றும் "கடினமான உபதேசங்களை" (வசனம் 60) புரிந்துகொள்ள முடிந்தது, புறம்பான ஜனங்களுக்கோ இவைகள் அருளப்படவில்லை; இருப்பினும், இவைகள் அர்த்தப்படுத்தாத ஏதோவொன்றை உலகத்திற்குப் போதிக்க வாய்ப்பிருக்கிறது. NS307:3 தெய்வீக வார்த்தையின் எழுத்தும், ஆவியும் தேவனுடைய இரகசியத்தின் திறவுகோல்களாக இருக்கின்றன. R2419:3 சீஷர்கள் தெய்வீக மேற்பார்வையான அறிவுறுத்தலின்கீழாக வர வேண்டும் என்று எஜமானர் விரும்பினார், அது தேவனுடைய வார்த்தையின் மூலமாகவே வரும் என்று அவர் சுட்டிக்காட்டினார். R5319:6 தெய்வீகச் சத்தியத்தில் எது விசுவாச குடும்பத்தாருக்கு "ஏற்றவேளை போஜனமாக" (மத். 24:45) இருக்கின்றதோ, அதனை தேவன் தாம் நியமித்த வழியில் நம் கவனத்திற்குக் கொண்டு வருவார். R4685:4, 5615:4 மாபெரும் போதகர் இப்போது பிரசன்னமாகி, "அறுவடை" வேலையை மேற்பார்வையிட்டு வருகின்றார் என்பது, இந்த வரிசையில் கூடுதலான ஓர் உறுதிப்பாடாக இருக்கின்றது என்று நாங்கள் நம்புகிறோம். R3856:5

**கேட்டுக்... கொள்ளுகிறவன்** – முதலில் காதால் கேட்காத வரையில், எந்த மனிதனாலும் செயல்பட முடியாது. Q282:1 கேட்கக்கூடிய காது இல்லாத, அல்லது செய்தியை ஒருபோதும் கேட்காத மனிதர்கள், இழுக்கப்படுவதில்லை, அழைக்கப்படுவதில்லை. Q282:1 ஒருவேளை கதவுக்கு வெளியே இருபது பேர் இருந்து, அந்த இருபது பேரில் பத்து பேர் காது கேளாதவர்களாய் இருந்து, நான் கதவுக்கு வெளியே சென்று உரத்த குரலில், "உங்களில் யார் உள்ளே வருகின்றீர்களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் நான் பத்து டாலர் பணம் தருகிறேன்!" என்று சத்தமிட்டேனேயானால், நான் எத்தனை பேரை அழைத்திருப்பேன்? பதில்: (கேட்கக்கூடிய) காதுள்ளவர்களை மாத்திரமே. Q282:1

**என்னிடத்தில் வருகிறான்** – இதுவே சத்தியத்தின் ஒரே நோக்கமாகும். இது வெறுமனே ஆர்வத்தைத்

திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது வெறுமனே தேவனுடைய குணலட்சணத்தை வெளிப்படுத்து வதற்காகவோ கொடுக்கப்படவில்லை, மாறாக அந்த வெளிப்பாட்டின் மூலம் நம்மை அவருடைய சாயலாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே கொடுக்கப்பட்டது R385:6* யாரெல்லாம் மோசேயை நம்பினார்களோ, யாரெல்லாம் தேவனால் போதிக்கப்பட்டிருந்தார்களோ அவர்கள் அனைவராலும், அவர் மாம்சத்தில் வந்திருந்தபோது, அவரை ஏற்றுக்கொள்ள முடிந்தது. R40:1*

## 22. யோவான் 7:17

**"அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்."**

**அவருடைய சித்தத்தின்படி** – பிதாவினுடைய சித்தத்தின்படி. R4334:2, 5948:3, 3188:4, 2453:6, 923:1 இனி மனிதனுக்குப் பயப்பட மாட்டேன், இருண்ட யுகத்து விசுவாச அறிக்கைகளுக்கு அடிபணிய மாட்டேன், மாறாக கர்த்தரை எனது மேய்ப்பனாக ஏற்றுக்கொள்ளுகிறேன், அவருடைய வார்த்தையின் சத்தத்துக்கு மாத்திரமே செவிசாய்த்து, அதன் வழிகாட்டுதலின்படி மாத்திரமே நடந்து, மனுஷருக்குப் பயப்படாமல் தேவனுக்கே பயந்து இருப்பேன் என்று தீர்மானிப்பவர்கள் பாக்கியவான்கள். NS400:4 தேவனுடைய சித்தம் என்பது தேவனுக்கும், கிறிஸ்துவின் சரீரத்துக்கும், முழு மனுக்குலத்திற்கும் நேரான சிந்தையிலும், சொல்லிலும், செயலிலும் அடையப்படும் உண்மையான பரிபூரணத்தைப் பிரதிபலிக் கின்றது. இதுவே நியமிக்கப்பட்டுள்ள தெய்வீகத் தரநிலையாக இருக்கின்றது, ஆனால் யூதர்களை விடவும் அந்தத் தெய்வீகத் தரநிலை முன்வைக்கும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, நாம் இயலாதவர்களாய் இருக்கிறோம் (கலா. 5:17). R5137:5

**செய்ய மனதுள்ளவன்** – சித்தமுள்ளவன், அல்லது விரும்புகிறவன். R285:5, 210:5* முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, அவருடைய சித்தத்தையும் அவருடைய திட்டத்தையும் அறிந்து கொள்ளுவதற்கான முழு வாஞ்சையுடையவன். R5137:5 யூதர்களும்சரி, கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்பவர்களில் பெரும்பாலானவர்களும்சரி அவருடைய வார்த்தைகளை இப்போது புரிந்து கொள்ளுவதில்லை. கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் மாத்திரமே இப்போது புரிந்துகொள்ளுகிறார்கள். R2419:3 பலியினாலே தேவனுடன் உடன்படிக்கை செய்தவர்களுக்காக ஏற்பாடொன்று செய்யப்பட்டுள்ளது, அதன் மூலமாக தெய்வீகச் சித்தத்தைச் செய்ய வாஞ்சிக்கிற, மற்றும் அதற்கான முயற்சிகளை வெளிப்படுத்துகிற மனவிருப்பமுள்ள அனைவரும், நீதிமான்களாகக் கருதப்படுகிறார்கள். R5137:5 நாம் சத்தியத்தில் முன்னேறியிருந்தால், பரிசுத்தத்திலும் முன்னேறியிருக்க வேண்டும்; மேலும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவது சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு நமக்குப் பேருதவியாக இருக்கிறது. R24:6*

**எவனோ** – அவரது திட்டத்தை நாம் புரிந்துகொள்வதற்கு கர்த்தருடைய உதவி நமக்கு வேண்டுமானால், கீழ்ப்படிதல் முக்கியமாகும். R85:4*, 74:2* ஆழமான அறிவு, பகுத்தறியும் ஆற்றல் அல்லது தீர்க்கதரிசன நுண்ணறிவு போன்றவை, சத்தியத்தின் மீதான அன்பு, தேவன்பேரிலான விசுவாசம் மற்றும் தனிப்பட்ட பரிசுத்தத்திற்கான அர்ப்பணிப்பு என்பவைகளால் தகுதியடைய வேண்டியிருக்கிறது. R782:1* உபதேசங்களைப் பொறுத்தமட்டில், தவறான மனப்பான்மை தவறான சிந்தையோடு நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது என்பதே இங்கே சொல்லப்படுகிறது. R4334:2 கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் கீழ்ப்படிவது நம்மை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது, அதேசமயம் கீழ்ப்படியாமை அல்லது கர்த்தருடைய ஆவியை இழப்பது சந்தேகத்திற்கு இடமின்றி நம்மை ஒளியிலிருந்து விலகச்செய்து நம்மைச் சுற்றியுள்ள இருளுக்குள்ளாக நம்மை வழிநடத்திட செய்யும். R4334:3 ஆகையால், கிறிஸ்துவின் உபதேசங்களை ஒருமுறை பெற்றுக்கொண்ட பின்னும், அவற்றை

இழந்துபோகிறார் என்றால், நிச்சயமாக அவர் அவற்றைக் குழப்பத்தினால் மாத்திரம் இழந்திருக்க மாட்டார், அதைக்காட்டிலும் அதிகமான ஒன்று அங்கு நடந்திருக்க வேண்டும். அவருடைய இருதயம் முன்பே கர்த்தரிடமிருந்து பிரிந்திருக்க வேண்டும். R5948:3

**உபதேசம்** – “உபதேசம்” என்கிற வார்த்தையே பெரும்பாலான கிறிஸ்தவருக்கு வெறுப்பாகத் தோன்றுகிற ஒரு நாளில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஒவ்வொரு சபை உட்பிரிவும் அதன் சொந்த உபதேச அமைப்பு அபூரணமானது என்பதை உணர்ந்து கொள்கிறது, மற்ற அனைவருக்கும் கூட இது பொருந்தும் என நம்பப்படுகிறது. R5136:3 நம்முடைய கர்த்தர் அவருடைய வார்த்தையையும், உபதேசத்தையும், உண்மையான சீஷத்துவத்தோடு தொடர்புபடுத்துகிறார். R3188:4* உபதேசங்களை விட்டுவிலகுவதற்குப் பதிலாக, நம்முடைய இருளையும் மூடநம்பிக்கைகளையும் சிதறடிப்பதற்கும், தேவனுடைய ஜனங்கள் அனைவரும் இன்னும் நெருங்கி சேர்வதற்கும் அவை தேவைப்படுகின்றன என்பதை நாம் உணர வேண்டும். R5136:6 பரிணாமவாதிகள் கிறிஸ்தவத்தின் அடிப்படை போதனைகளை நிச்சயமாக பெற்றிருக்க முடியாது. CR119:6

**நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று** – இயேசு இந்தப் போதனைகளைச் சுயமாய் உருவாக்கினாரா அல்லது தாம் செய்த எல்லாவற்றிலும், தாம் போதித்த எல்லாவற்றிலும் அவர் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தாரா என்று. R5137:6 தேவ ஜனமாகிய நாம் அனைவரும், மனிதக் கோட்பாடுகளையும், மனுஷருடைய சுவிசேஷங்களையும் தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் நற்செய்தியைப் புதிதாகப் பற்றிக் கொள்ள வேண்டும். இந்த மனுஷருடைய சுவிசேஷங்கள் வேதாகமம் முன்வைக்கும் சுவிசேஷமாக இராமல், மற்ற நம்பிக்கையின் செய்திகளாக இருக்கின்றன. R5137:2

**என்று அறிந்துகொள்ளுவான்** – “உள்ளாக இருந்து” மாத்திரமே தேவனுடைய மகத்தான திட்டத்தைக் காணவும் பாராட்டவும் முடியும், மேலும் “சகோதரர்” மாத்திரமே இந்த உள்ளான பார்வைக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். R2453:6 யூதர்கள் மட்டுமின்றி, மற்ற அனைவரும்கூட, தெய்வீக வார்த்தையின் எழுத்து மற்றும் ஆவி ஆகிய இரண்டிற்கும் நெருக்கமாக இசைந்துபோகிற அளவிற் கேற்பவே, அவர்கள் தேவனுடைய இரகசியத்தின் திறவுகோல்களைப் பெற்றிருப்பார்கள். R2419:3 வேத வாக்கியங்களில் அவர் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவருடைய வசனங்களைப் புரிந்துகொள்ளும் போதுதான் அவர் நம்முடைய இருதயத்திற்கு உண்மையிலேயே வெளிப்படுத்தப்படுகிறார்; மேலும் அப்படிப் புரிந்துகொள்ளுவதற்கு கீழ்ப்படிதலின் ஆவி இன்றியமையாததாயிருக்கின்றது. நாம் கிருபையிலும் அறிவிலும் வளர வேண்டும். R74:2* “நீதிமானுக்காக வெளிச்சம்... விதைக்கப் பட்டிருக்கிறது.” (சங். 97:11) R4809:4, 1114:6 அவர்கள் இருளில் நடக்க மாட்டார்கள். R1114:6 இராஜரீக குடும்பத்தில், இராஜரீகப் பணிக்கென்று தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுவதற்கு இவர்கள் விரைவாகவே கற்றுக்கொள்ளுவார்கள். R285:5, 210:5* தாங்கள் ஊழியஞ்செய்கிற கர்த்தருக்கும், சத்தியத்திற்கும் பலிசெலுத்தி, பாடுபட்டு, சகிப்பவர்கள், “எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாக” இருக்கிறார்கள் (2 கொரி. 6:10) ஏனெனில், பிதாவின் சித்தத்தைச் செய்கின்றபடியால், அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்திருக்கிறார்கள். R1103:2 அறிவும் சிந்தனைப் பழக்கமும், காரியங்களை நாம் எவ்வாறு பார்க்கிறோம் என்பதோடு அதிக தொடர்புடையதாய் இருக்கிறது, அதேசமயம், தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்வதே தங்களுடைய முழு வாஞ்சையாக கொண்டிருக்கிற நேர்மையான மனிதர்கள் ஒவ்வொருவரும், வேதாகமத்திடம் சென்று வெவ்வேறான மதக் கண்ணோட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று எண்ணுவது, ஒன்று தேவனுடைய வார்த்தை ஒரு வெளிப்பாடே கிடையாது என்பதை அர்த்தப்படுத்திடும், இல்லையேல் விழுந்துபோன மனிதன் சிருஷ்டிகருடன் அறிவார்ந்த ரீதியில் பேச முடியாத அளவுக்கு மாறிப்போயிருக்கிறான் (விழுந்துபோயிருக்கிறான்) என்பதை அர்த்தப்படுத்திடும். R922:6

## 23. யோவான் 8:31, 32

**வ. 31 – "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்."**

**திருவிவிலியம் – "இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, 'என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்' என்றார்."**

**தம்மை விசுவாசித்த** – பாவிகள் சீஷத்துவத்திற்கு அழைக்கப்படுவதில்லை, மாறாக மனந்திரும்பி, பாவமன்னிப்பு பெற்று, நீதிமானாக்கப்படுவதற்காக மீட்பர் மீது விசுவாசம் வைப்பதற்காகவே அழைக்கப்படுகிறார்கள். R2439:3 சத்தியமானது விசுவாசித்தவர்களைச் சலித்து, பிரித்திடக்கூடும் என்பதற்காக, அவர்களிடையே அவர் சத்தியத்தை முன்வைக்க வேண்டியது அவசியமாக இருந்தது. R3511:3 குறிப்பாக பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு மாத்திரம் அல்ல, பொதுவான அனுதாபத்தினால் இழுக்கப்பட்ட யூதருக்கும் கூட; அப்படி இழுக்கப்பட்டவர்களில் ஒருவராக நிக்கொதேமுவும் இருந்திருக்கலாம். R5506:6

**யூதர்களை** – நமது கர்த்தர் தம்முடைய முதலாம் வருகையின்போது, தேவனுடன் உடன்படிக்கைக் குள்ளாக இருந்த யூத தேசத்திடமே வந்தார். இவர்களுக்கே அவர் தேவனுடைய புத்திரராகும் பாக்கியத்தை முதலில் வழங்கினார். R5506:3

**நோக்கி** – இது கூடாரப்பண்டிகையின்போது நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட பிரசங்கங்களில் ஒன்றாகும், அநேகமாக பண்டிகையின் கடைசிப் பெருநாளில் வழங்கப்பட்டதாக இருக்கலாம். R3511:1

**என் வார்த்தைகளை** (திருவி) – இது யோவான் 17:17ம் வசனத்திலிருந்து வேறுபட்டதாகும், அங்கு யாவே / யேகோவா தேவனுடைய வார்த்தை பரிசுத்தமாக்குகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கே இயேசு, 'நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால், பரமபிதாவைக் குறித்தும் அவருடைய வார்த்தையைக் குறித்தும் நீங்கள் மேன்மேலும் அறிந்துகொள்வீர்கள்' என்று கூறுகின்றார். R5507:1

**நீங்கள் … நிலைத்திருந்தால்** – இந்தப் பள்ளியின் மகத்தான நோக்கம் நிறைவேறும் வண்ணமாக அவரது வழிகாட்டுதலின் கீழாகவும், அவரது சத்திய வார்த்தையின் வழிகாட்டுதலின் கீழாகவும், உண்மையாகவும் விடாமுயற்சியோடும் தொடர்வது. R2440:1 கிறிஸ்துவை நம்முடைய மீட்பராக ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாக நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்பது எனும் முதலாம் அடியை எடுத்து வைப்பது பாக்கியமான ஒரு விஷயமாகும். ஆனால் இந்த முதலாம் அடிக்கான வெகுமதியானது அவருடைய வார்த்தையில் நாம் தொடர்ந்து நிலைத்திருப்பதைப் பொறுத்ததாயிருக்கின்றது. R5508:1, 3153:3 ஐந்து, பத்து, இருபது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தை மனதில் வைத்துக்கொண்டு, நாம் அனைத்திலும் சரியாக இருக்கிறோம், இராஜ்யத்தில் நிச்சயமாகப் பங்கடைந்திடுவோம் என்று எண்ணுவது ஆபத்தான ஒன்றாகும். இப்போது நமது நிலை என்ன? என்பதே காரியம். R38:5* சிறிது காலம் பொறுத்துக்கொள்ளுங்கள், ஏற்றவேளையில் நீங்கள் சூழ்நிலையை நன்கு புரிந்துகொள்வீர்கள். விசுவாசத்தையும், பொறுமையையும் தொடர்ந்து கைக்கொள்ளுங்கள். R5506:6 அவற்றைப் படிப்பதும், தியானிப்பதும், அவற்றில் முழுமையாக நம்பிக்கை வைப்பதும், நம்முடைய குணாதிசயங்களை உண்மையாக அவற்றோடு இணங்க வைப்பதுமே இங்குள்ள உட்குறிப்பாக இருக்கின்றது. R5508:2, 3153:5 அவர்கள் தங்களிடம் வரவிருந்த வெளிச்சத்திற்கு எவ்வளவு உண்மையாக இருந்தார்களோ, அந்தளவிற்கு அவர்களின் ஆசீர்வாதமும் இருந்தது. R5506:3 கிறிஸ்துவுடனான உறவு என்பது முறிந்துபோவதற்கு வாய்ப்புள்ள ஒரு விஷயமாகும். R2439:2 ஒரு சீஷன் என்பவன் ஒரு மாணவன், ஒரு கற்றுக்கொள்பவன் ஆவான்; எப்போது ஒரு மனிதன் கிறிஸ்துவின் மாணவனாகவும் சீஷனாகவும் இருப்பதை நிறுத்திவிடுகிறானோ, அப்போதிலிருந்து அவன் அவருடைய சீஷனாக இல்லாமல் போகிறான். R5508:1, 3153:3

**மெய்யாகவே என் சீஷராய்** – கிறிஸ்துவின் பள்ளியில் தங்கள் படிப்பை முடித்து, பட்டம் பெற்று, தங்கள் கர்த்தருடன் உடன்–சுதந்தரராகி, இறுதியில் பூமியின் சகல குடிகளையும் போதித்து, ஆசீர்வதிப்பதில் அவரோடேகூட இணையப்போகிறவர்கள். R2440:1 அவர்கள் இன்னும் முழுமையாக அவருடைய சீஷராக ஆகியிருக்கவில்லை. இந்தச் சீஷத்துவம் என்பது அவரது செய்தியை இன்னும் கேட்கும் வாஞ்சையையும், என்ன விலைக்கொடுத்தாவது அதற்குக் கீழ்ப்படிவதற்கான விருப்பத்தையும் குறிக்கின்றது. R3511:2 உண்மையான மற்றும் பெயரளவிலான சீஷருக்கு இடையே உள்ள வேறுபாட்டைக் குறிக்கிறது. வெறும் பெயரளவிலான சீஷரின் பாசாங்குத்தனம்/மாய்மாலம் கர்த்தருக்கு அருவருப்பானதாயிருக்கிறது. R5508:1, 3153:3 நம்முடைய கர்த்தர் அவரது வார்த்தையையும் உபதேசத்தையும் உண்மையான சீஷத்துவத்துடன் தொடர்புபடுத்துகிறார். R3188:4 கிறிஸ்துவின் பள்ளியானது அன்பினால் தூண்டப்பட்டு, பக்தியால் பராமரிக்கப்பட்டு, சுயத்தை மறுத்து, சுயத்தைப் பலியாக்கும் பள்ளியாகக் கருதப்படலாம். R2439:3

**இருப்பீர்கள்** – நீங்கள் முழுவதுமாக என்னுடைய சீஷராக மாறும்போது, சத்தியத்தைப் பற்றின அறிவானது உங்களுக்கு அருளப்படும். R5506:6

### வ. 32 – “சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.”

**சத்தியத்தையும் அறிவீர்கள்** – நம்முடைய கர்த்தர் தரும் இந்தச் சத்தியமானது பின்வரும் பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது: முதலில், பாவத்திற்கு நாம் அடிமையாக இருப்பதை உணர்ந்து கொள்வது; அடுத்து, இயேசு அதின் வல்லமையை அவமாக்குவதற்காய் மரித்தது; மூன்றாவதாக, ஆயிரமாண்டு யுகம் உலகத்தை விடுவிப்பதற்கான காலமாயிருக்கும் என்பவையாகும். R3512:3 பெந்தெகொஸ்தே வந்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டனர். பிற்பாடே அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கத் தொடங்கி, தங்களுடைய அறிவொளி பிரகாசிப்பிக்கப் படலாயினர். R5507:1 நமது கர்த்தர், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் போன்ற தெய்வீகமாக நியமிக்கப்பட்ட வாய்க்கால்களில் மாத்திரமே தெய்வீகச் சத்தியம் காணப்படுகிறது. R5508:2, 3153:5 இந்த யோசனையானது கர்த்தர் அவ்வப்போது எழுப்புகிற அனைத்து உதவிகளுக்கும் செவிசாய்ப் பதுடன் ஒத்துப்போகிறது (எபே. 4:11 – 15; 1 கொரி. 12:13 – 14); ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய போதனையை, தவறில்லாத தேவ வார்த்தையைக்கொண்டு பரிசோதித்துக்கொள்வது அவரவரின் கடமையாக இருக்கின்றது. R3153:5 நாம் சத்தியத்தைப் பற்றிய அறிவை ஒரே அடியில் அடைவதில்லை; மாறாக நாம் படிப்படியாக, மெள்ள மெள்ள சத்தியத்திற்குள்ளாக அழைத்துச் செல்லப்படுகிறோம். R5508:4, 3153:5, 2440:1 சத்தியம் என்று நாம் நம்பாத எதையும் விசுவாச குடும்பத்தார் முன்பாக வைப்பதற்கு நமக்கு எந்தக் கட்டளையும் இல்லை. R1406:3 அதற்கென்று, நீங்கள் “எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாக” இருக்கக்கூடாது. (2 தீமோ. 3:7) R5508:2, 3153:3

**சத்தியம்** – சத்தியமோ அசத்தியமோ -- நாம் எதை நம்புகிறோம் என்பது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது, நம்முடைய கிரியைகளைக் கொண்டுதான் கர்த்தர் நம்முடைய நிலையைத் தீர்மானிப்பார் என்று பலர் (வேதவாக்கியத்திற்கு முரணாகச்) சொல்கிறார்கள். SM292:2 வேதாகம ஆராய்ச்சிக்கும், தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கும், பரிசுத்தமாக்கப்படுவதற்கான வாஞ்சையோடு இருதயத்திலும் வாழ்க்கையிலும் அதைப் பயன்படுத்துவதற்கும், விசேஷித்த கவனம் செலுத்துகிற எந்தச் சபை பிரிவினரையோ தரப்பினரையோ நாம் எங்கேயாவது கண்டதுண்டா? NS471:2 சத்தியத்தைப் பெற்றுக்கொள்ளுபவர்களுடைய நெற்றியில் அது முத்திரையிடப்படும் (வெளி. 7:1 – 3), மனுக்குலத்தின் மற்றவர்கள் மீது முத்திரையிடப்படாத வகையில் அவர்கள் முத்திரையிடப்படுவார்கள். R4880:5 சத்தியம் மற்றும் நியாயப்பிரமாணம் பற்றின அறிவே, இயேசுவின் நாட்களில்

நியாயசாஸ்திரிகளை “குருடரான வழிகாட்டிகளே” எனக் கடிந்துகொண்ட அவருடைய சுயாதீனத்துக்கு அடித்தளமாக இருந்தது. (மார்ட்டின் லூதர் மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் ஆகியோரது வாழ்விலிருந்து இதர எடுத்துக்காட்டுகளைப் பார்க்க முடிகிறது.) R402:1, 310:2

**உங்களை விடுதலையாக்கும்** – ஒரு நல்ல மற்றும் நேர்மையான இருதயத்திற்கு, சத்தியமானது எந்தளவிற்குக் கிடைத்தாலும்சரி, அது கிடைத்தவுடனே, அது பாவம், அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் பயம் என்பவைகளின் கட்டுகளைத் தகர்க்கத் தொடங்கிவிடும். R5508:4, 3153:6 மூடநம்பிக்கையின் விலங்கினை உடைத்து, ஜனங்களை விடுதலையடையச் செய்வதே சத்திய வெளிச்சத்தின் பொதுவான தாக்கமாக இருக்கின்றது. R2440:1 கிறிஸ்தவ திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினனும் அனைத்து மனித கட்டுகளிலிருந்தும், விசுவாச அறிக்கைகளிலிருந்தும் விடுபட்டு, சுதந்திரமாக நிற்பதற்கு, திருச்சபையாருக்கு இன்னும் அதிகப்படியான சுயாதீனம் நிஜமாக தேவைப்படுகின்றதாய் இருக்கின்றது. F242; R5144:6 சபை உட்பிரிவுக் கட்டுகளிலிருந்து விடுபட்டு, தைரியமாக “ஜெயங்கொள்ளு கிறவர்களால்” மட்டுமே, அந்தச் சபை உட்பிரிவுகளிலிருந்து கிடைக்கின்ற போஜனம், மனுஷரின் கனம் மற்றும் ஊழிய வாய்ப்புகள் என்பவைகளுடனான பிணைப்புகளை அறுத்தெறிவதைப் பற்றி சிந்திக்கக்கூட முடியும். R5145:1 கடந்த காலத்தின் பயங்கரமான கோட்பாடுகளிலிருந்து விடுபட்டு, தேவனை அன்புகூருவதற்கும், அவருடைய வார்த்தையை நம்புவதற்கும், ஒவ்வொரு மனிதனுக் காகவும் இயேசு எப்படி மரணத்தை ருசிபார்த்தார் என்பதை விசுவாசித்துப் புரிந்துகொள்வதற்கும், மீட்டுக்கொண்டவர் சீர்பொருத்துவார் என்று நம்புவதற்கும் சுயாதீனமுள்ளவர்களாக இருப்போமாக. SM33:1 அறியாமை மற்றும் சந்தேகத்திலிருந்து விடுபட்டு, தேவனுடைய முழு ஆலோசனையையும் அறிவிப்பதற்கு தைரியமாக இருப்பது. R1425:2 மூடநம்பிக்கைகள் மற்றும் அறியாமையிலிருந்து மாத்திரமல்ல, பாவத்தின் ஊழியத்திலிருந்தும் விடுதலையாக்கும். R2440:2 நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஆக்கினையிலிருந்து விடுவித்தது மாத்திரமல்லாமல், பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவித்தது. R5507:1 இந்தப் பொக்கிஷத்தை நாம் இந்த மண்பாண்டத்தில் பெற்றிருக்கும் வரையில், புதிய சிருஷ்டி அபூரண மாம்ச சரீரத்தை தன்னுடைய கருவியாகவும், ஆதரவாளராகவும் பயன்படுத்த வேண்டியிருக்கும் வரையில், இந்த விடுதலை முழுமையடையாது. R2440:2 திருப்திகரமான முன்னேற்றம் காண்பவர்கள் – முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலமாக – பாவத்திலிருந்தும், மாம்சத்தின் அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும், சொந்த மாம்சத்திலிருந்தும்கூட முழு விடுதலையைப் பெற்றுக்கொள்வார்கள். R5507:4, 2440:2 நீண்ட காலமாக உலகை ஆண்ட மாபெரும் அரசியல் மற்றும் சபை அமைப்புகள் பயங்கரமாக அசைக்கப் படுவதால், பூச்சக்கரத்தின்மீது வரப்போகிற அச்சத்திலிருந்தும் நம்மை இது விடுதலையாக்கியது. R5508:5, 3153:6 நீங்கள் எவ்வளவுக்கதிகமாக சத்தியத்தைப் பெற்றுக்கொள்கிறீர்களோ, அவ்வளவுக்கதிகமாக நீங்கள் மெய்யாகவே விடுதலை அடைந்து வருவீர்கள். CR14:2

## 24. யோவான் 10:3

**“வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்.”**

**வாசலைக் காக்கிறவன்** – இஸ்ரயேலின் உடன்படிக்கையான மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வாசல் நீதியால் தடுக்கப்பட்டிருந்தது. R2441:5 இப்படியாக உண்மைக்கும் பொய்க்கும் இடையில் பகுத்தறியக்கூடிய வாசலைக் காக்கிறவனாக நியாயப்பிரமாண உடன்படிக்கை காணப்பட்டது. நம்முடைய கர்த்தர் நியாயப்பிரமாணத்தின் தேவைகளை முழுமையாகப் பூர்த்திசெய்தார், எனவே உரிமையுள்ள மேய்ப்பனாக நமக்கு அடையாளம் காட்டப்படுகிறார். R4157:2, 2672:2 தேவனுடைய பரிசுத்த ஆவி. R1647:3

**திறக்கிறான்** – உண்மையான மேய்ப்பன் வந்தபோதோ, அவர் வாசலைக் காத்துக்கொண்டிருந்த (the porter) நியாயப்பிரமாணத்தைத் திருப்திப்படுத்தினார். R2672:2 அவருடைய ஞானஸ்நானத்தின்போது, மறுரூப மலையின்மீது, அவருடைய மரணத்தின்போது, என்பது போன்ற இடங்களில் அவரே தேவனுடைய குமாரன் என அறிவித்திட்ட பலவிதங்களின் வாயிலாக. R1647:3

**தன்னுடைய ஆடுகளை** – சாந்தம், பணிவு, தன்னம்பிக்கையின்மை, தாங்கள் முழுமையாக நம்புகிற மேய்ப்பனுக்குக் கீழ்ப்படிவது போன்றவை செம்மறியாடுகளின் விசேஷித்த குணாம்சங்களாய் இருக்கின்றன. R5491:4 இங்கிலாந்தின் உயர்குடிமக்களும் பிரபுக்களும் சிங்கத்தின் தலைகள், புலிகளின் தலைகள், கழுகுகளின் தலைகள் போன்றவற்றை ஏற்றுக்கொண்டனர். இது சுபாவ மனிதனுடைய சிந்தையை வெளிப்படுத்துகிறது. ஆனால் தம்மை ஒரு நல்ல மேய்ப்பனாகவும், தம்மைப் பின்பற்றுபவர்களை செம்மறி ஆடுகளாகவும் பிரதிநிதித்துவப்படுத்தியவருக்கு, முழு காரியத்தைக் குறித்த மிகவும் வித்தியாசமானதொரு சிந்தையே காணப்பட்டது. R4157:1, 2441:2

**பேர்சொல்லி** – பாலஸ்தீனத்தில் ஒவ்வொரு செம்மறியாடும் தன்னுடைய மேய்ப்பனுடனும், மேய்ப்பன் ஒவ்வொரு செம்மறியாடுடனும் தனிப்பட்ட வகையில் பரிச்சயமாகியிருப்பார்கள், மேலும் மேய்ப்பர்கள் ஒவ்வொரு செம்மறியாட்டுக்கும் தனித்தனி பெயரை வைத்திருப்பார்கள், மேலும் ஒவ்வொரு செம்மறியாடுமே தனக்கென்றுள்ள பெயரை நன்கு அறிந்திருக்கும் என்று கூறப்படுகிறது. R2672:3, 2441:3 ஆடுகளுக்கு ஒடிந்தவன் (torn), உடைந்த காலன், ஒற்றைக் கண்ணன் என்பது போன்று, அவைகளுடைய குறைபாடுகளுடன் தொடர்புடைய பெயர்களை வைக்கும் வழக்கத்தை கிரேக்கரும் கொண்டிருந்தனர். நூறாயிரக்கணக்கான ஆடுகளுள்ள மந்தைகளில் ஒவ்வொரு தனி ஆடுமே தன்னுடைய பெயரை அறிந்திருக்கும், அதைக்கொண்டே அவை அழைக்கவும் பட்டன. R4157:6 தற்காலத்தின் அழைப்பு பொதுவானது அல்ல, மாறாக ஒரு விசேஷித்த அழைப்பாகும். R2441:6 அவர் ஒட்டுமொத்த மந்தையின்பேரிலேயும், தனித்தனி ஆடுகளின்பேரிலேயும் கவனம்செலுத்துகிறவராய் இருக்கின்றார். R1647:5 அவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய பெயரைக் கொடுக்கிறார், மேலும் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவருக்குப் பரிச்சயமாகியிருக்கிறோம் – நமது தனிப்பட்ட குணாதிசயங்கள், சிறப்பியல்புகள், நமது பலம் என்ன, நமது பலவீனங்கள் என்ன என அனைத்தையும் அவர் அறிவார். R2672:3 இது கிறிஸ்துவுக்கும், அவருடைய மந்தையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் இடையே உள்ள உறவின் நெருக்கத்தை நமக்கு வலியுறுத்துகிறது. R2672:2

**அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்** – அவைகள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழாக "அடைத்துவைக்கப்பட்டிருந்தன." R3527:6, 2672:2, 2441:5 இருப்பினும், வழியில் அவைகளை நடத்திச் செல்லுகையில், அவர் அவற்றை ஓட்டிக்கொண்டு செல்லமாட்டார். மாறாக அவைகள் அவரைப் பின்தொடர்ந்து வருவதற்கேதுவாக அவைகளுக்கு முன்னே அவர் நடந்து போவார். R2672:3 இது அவரது உண்மையான சீஷர்கள் ஒவ்வொருவரின் காரியங்களும், நலன்களும் மிகவும் விசேஷித்த வகையில் மேற்பார்வையிடப்படுகின்றன என்பதைக் குறிக்கின்றது. இவர்களுக்கு எது நேர்ந்தாலும் அது விருப்பத்தேர்வின் (choice) அல்லது அதிர்ஷ்டத்தின் (luck) காரியமாக இருக்காது. R5711:5 செம்மறியாடுகள் நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒழுங்குப் படுத்துதல்களைக் (disciplines) குறித்து நமது கர்த்தருடைய உவமையானது கூறவில்லை, மாறாக இவை தீர்க்கதரிசன சங்கீதத்தில், "உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" என்ற வார்த்தைகளில் நமக்கு முன்பாக வைக்கப்படுகின்றன. (சங். 23:4) R2672:5

## 25. யோவான் 10:4, 5

**வ. 4 – "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால்**

அவனுக்குப் பின்செல்லுகிறது."

**வெளியே விட்டபின்பு** – அவை அனைத்தும், புல்லுள்ள இடங்கள் வழியாகவும், ஆத்தும புத்துணர்ச்சிக்கான அமர்ந்த தண்ணீரின் வழியாகவும் செல்லுவதற்கேதுவாக அவைகளைக் மேற்பார்வையிடுவதைக் குறிக்கின்றது. (சங். 23:2) R2672:3 அவைகள் புல்லுள்ள இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டியிருக்கிறது. ஆடுகளை அடைக்கும் பட்டியானது/ஆட்டுக்கிடையானது இளைப்பாறுதல் மற்றும் பாதுகாப்பிற்கான இடமாக இருக்கின்றதே ஒழிய உணவளிப்பதற்கான இடமாக இருப்பதில்லை. R4732:2

**அவைகளுக்கு முன்பாக** – ஓட்டிச்செல்வதற்காக அவைகளுக்குப் பின்பாகச் செல்லாமல், வழிநடத்திக் கொண்டுபோகும்படிக்கு அவைகளுக்கு முன்பாக (போகிறார்). R1648:2 பாலஸ்தீனத்தில் மேய்ப்பன் தன் மந்தைக்கு முன் செல்ல, ஆடுகள் அவனைப் பின்தொடர்ந்து செல்லும். CR497:5 கிறிஸ்தவரின் அனுபவங்கள் எவ்வளவு வேறுபட்டதாய் இருந்தாலும்சரி, கர்த்தர் அனைத்தையும் அறிவார், ஏனெனில் அவரும் "பாவமில்லாதவராய்" இருந்தபோதும், அவற்றையெல்லாம் (இப்பூலோகத்தில் இருந்தபோது) உணர்ந்திருக்கிறார். (எபி. 4:15) R140:1

**அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால்** – உண்மையான மேய்ப்பனுடைய சத்தத்தில் சரியான தொனி/அதிர்வொலி ஒன்று காணப்படுகிறது. அந்தச் சத்தத்தில் அன்பு, ஞானம் மற்றும் வல்லமையுடன் கலந்த நீதி எனும் சத்தமும் காணப்படுகிறது. R4732:3, 4158:1, 2672:5 சத்தியம், ஒரு காந்தத்தைப் போல, தன்மீது ஈர்ப்புக்கொள்ளும் அனைவரையும் தன்னிடமாக இழுத்துக்கொள்ளும். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் அதை வைக்கலாம், அது எப்போதுமே நேர்மையும் உண்மையுமுள்ளவர்களைக் கண்டுபிடிக்கின்ற தன்னுடைய வேலையைச் செவ்வனே செய்திடும். R1362:2 முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் கர்த்தருடைய மந்தையின் உண்மையான அங்கத்தினராகவும், அவருடன் நெருங்கிய தொடர்புடையவராகவும், அவருடைய வார்த்தையை, அவருடைய சத்தத்தை நன்கு அறிந்தவராகவும் மாற வேண்டும் என்பதாகும். R2441:3 தெய்வீக நிலைப்பாட்டில் அறிவானது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது, அதாவது, வெறும் தலை அறிவு மாத்திரமல்ல, மாறாக இருதய அறிவும், கர்த்தருடனும் அவரது மகிமையான திட்டத்துடனுமான நெருங்கிய உறவும் எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது. R4158:4

**ஆடுகள்... அவனுக்குப் பின்செல்லுகிறது** – செம்மறியாடுகள் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, அவருக்குப் பின்செல்லுவதன் மூலமாக, அந்த ஆடுகள் அவருடைய மந்தைகளாக தங்களுக்கு இருக்கும் உறவை வெளிப்படுத்துகின்றன. R2442:1

### வ. 5 – "அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்."

**அந்நியருடைய சத்தத்தை** – மற்றவர்கள், ஆடுகளை கர்த்தருடைய நாமத்தில் அழைப்பதற்கு முற்படுவார்கள் என்றும், கர்த்தருடைய வழிநடத்துதலுக்கு முரணாக அவர்கள் அவற்றை வழிநடத்தவும் முயல்வார்கள் என்றும் மறைமுகமாக தெரிவிக்கப்படுகிறது. R910:2

**அறியாதபடியினால்** – அவைகளுக்கு அடையாளம் தெரிவதில்லை. CR444:5

**அந்நியனுக்குப்** – உலகளாவிய இரட்சிப்பு, பரிணாமம் அல்லது நித்திய சித்திரவதை போன்ற கருத்துகள் உட்பட. R1648:4 சிதறடிக்கப்பட்ட ஆடுகளாகிய இஸ்ரயேலுக்கு, உண்மையான மேய்ப்பனை அடையாளம் காண்பிப்பதற்கு உதவி செய்திருக்க வேண்டிய நபர்களே, கர்த்தருடைய ஆடுகள் மேய்ப்பனை அடையாளங்காணாதபடிக்கு தடைபண்ணிக்கொண்டிருந்தனர். R2441:1

**பின்செல்லாமல்** – உண்மையான ஆடுகளில் ஒன்றாகிலும் பொய்யான சுவிசேஷத்தால் திருப்தி அடையாது என்கிற கர்த்தருடைய உறுதிப்பாடு நமக்கு இருக்கிறது; பொய்யான சுவிசேஷம் அவைகளுடைய இருதயங்களை ஈர்க்காது. R4158:1 செம்மறியாடு வேறு சத்தம், வேறு ஒலி அல்லது செய்தியை பேசும் அந்நியனைப் பின்தொடருவதில்லை. R4732:3 சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகியிருந்து, தெய்வீக வார்த்தையோடு நெருங்கியிருக்கும் மாணாக்கராக இருப்பவர்கள், தப்பறையை விரைவாகக் கண்டுபிடித்துவிடுவார்கள், அது சத்தியம் போன்ற வேஷத்திற்குப் பின்னால் பதுங்கியிருந்தாலும்சரி, அவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள். R1206:3 ஒவ்வொரு சகோதரனையும், உள்ளூர் அல்லது பொதுவான ஒரு கண்காணியாக முன்வைப்பதில் ஆதரவு தெரிவிப்பதற்கு முன்பாக, அவருடைய செய்திக்கும் அவரது நடத்தைக்கும் விசேஷித்த கவனம் கொடுப்பது ஒவ்வொரு ஆட்டினுடைய கடமையாக இருக்கின்றது. F247 நாம் நமது சொந்த கற்பனைகளையோ அல்லது தேவ ஏவுதல் பெறாத மற்ற மனுஷரின் கற்பனைகளையோ பின்பற்றுவதைக்காட்டிலும் கர்த்தருக்கும், அவர் தெரிந்து கொண்ட வாய்க்கருவிகளுக்கும் செவிசாய்ப்பது சாலச்சிறந்தது. R3346:5 எது சத்தியம் என்பது பற்றிய முரண்பட்ட கருத்துகளைக் கருத்தில் கொள்ளும்போது, சிலர் செய்யும் ஒரு மாபெரும் தவறு யாதெனில், (தேவனால் பயன்படுத்தப்படும்) ஒவ்வொரு மனித கருவிகளையும் நிராகரித்துவிட்டு, வேதாகமம் மூலம் மாத்திரமே தேவனுடைய வழிகாட்டுதலை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகும். R1206:4 ஸ்காத்துலாந்து நாட்டைச் சேர்ந்த பயணி ஒருவர் ஒரு மேய்ப்பனுடைய ஆடைகளை வாங்கி உடுத்திக்கொண்டு, மாறுவேடத்தில் ஆடுகளை கூப்பிடத் தொடங்கினார்; அவைகளோ கண்டுகொள்ளாமல் இருந்தன; பின்னர் பயணியுடைய ஆடைகளை அணிந்திருந்த உண்மையான மேய்ப்பன் சத்தமிட்டபோதோ, அவனுடைய விசித்திரமான ஆடைகளைத்தாண்டியும், அவை அனைத்தும் அவனை அடையாளங் கண்டுகொண்டு அவனிடம் ஓடிவந்தன. R4158:1, 2441:3 இவர்கள் கர்த்தருடைய மந்தையைச் சேர்ந்தவர்கள்தான் என நாம் எண்ணிய சிலர், வேறொரு சத்தத்திற்குச் செவிசாய்ப்பதாக நாம் காண நேர்ந்தால், நாம் பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் கர்த்தருடைய மந்தையின் உண்மையான ஆடுகளாக இருந்தார்களேயானால், அவர்களால் நீண்ட காலம் வஞ்சிக்கப்பட முடியாது. R2673:1

**அவனை விட்டோடிப்போம்** – கூடுமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பதற்காய் எதிராளியானவன்தாமே ஒளியினுடைய வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியிருந்தாலும், அவர்கள் அவனால் வஞ்சிக்கப்பட மாட்டார்கள். R2441:3

## 26. யோவான் 10:27

### "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது"

**என் ஆடுகள்** – சுவிசேஷயுகத்தின்போது கர்த்தருக்கு ஒரே சபை, அவரைப் பின்பற்றும் ஒரே மந்தை மாத்திரமே உள்ளது. R4784:3 அனைவருக்கும் சாந்தமான, செம்மறி ஆடு போன்ற சுபாவம் இருப்பது நல்லது, ஆனால் செம்மறி ஆடுகளுக்கு (கர்த்தரைப் போன்ற) குணலட்சணம் இருப்பதும் அவசியமான தாயிருக்கின்றது, இல்லையெனில் அவர்களால் ஜெயங்கொள்ளுபவர்களாக இருக்க முடியாது. F247

**என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது** – கீழ்ப்படிகிறது. F247; R279:4, 142:5 தேவனுடைய வார்த்தைக்கு. R2672:5 தேவன் எப்படி அழைக்கிறார்? சுவிசேஷத்தின் மூலமாக அழைக்கிறார். (2 தெச. 2:14) இயேசு பூமியில் இருந்தபோது சுவிசேஷம் மூலமாக அழைத்தார், பின்னர் அவர் அப்பணியைத் தம்முடைய சீஷரிடம் ஒப்படைத்தார், இப்படியாகப் புறஜாதிகளின் நிறைவு அடையப்படும் வரையிலும், அழைப்பானது நீண்ட இருளான இராக்காலம் முழுவதும் சென்றுகொண்டிருக்கிறது.

R810:6* உலகில் பல சத்தங்கள் உள்ளன, சில ஒரு திசையிலும் சில வேறு திசையிலும் அழைக்கின்றன. உலகம் நம்மை அழைக்கிறது, மாம்சமும் நம்மை அழைக்கிறது, எதிராளியும் நம்மை அழைக்கிறான், எஜமானரும் நம்மை அழைக்கின்றார். R3163:3, 2672:6, 2257:1 நமது மேய்ப்பனிடமிருந்தும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதிலிருந்தும் நம்மை விலகச்செய்யக்கூடிய பல்வேறு சத்தங்கள் நமது காதில் விழுவதற்கேதுவான சூழ்நிலைக்கு உள்நோக்கத்தோடே (intentionally) உட்படுத்தப்படுகிறோம். R2257:2 எதிராளியின் சத்தத்தையும் நல்மேய்ப்பனின் சத்தத்தையும் பகுத்தறிவதில் நமக்குச் சிரமம் இருக்கலாம், ஏனெனில் மேய்ப்பனுடைய சத்தத்தைப் போன்ற சத்தத்தையோ அல்லது போலியானதையோ உருவாக்குவதே எதிராளியின் தந்திரமாக இருக்கிறது. R3163:6 தற்காலத்தில் மேய்ப்பனுடைய சத்தத்தை எல்லோராலும் கேட்கவும், அடையாளம் காணவும் முடிவதில்லை. பெரும்பான்மையானவர்கள் இந்த விஷயத்தில் காது கேளாதவர்களாய் இருக்கிறார்கள். “காதுள்ளவன் [நற்செய்தியைக்] கேட்கக்கடவன்” என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (வெளி. 2:7) R2257:1 உண்மையான ஆடுகள் மேய்ப்பனுடைய மெல்லிய சத்தம்கூட கேட்கப்படுகிறதா என வெகு ஜாக்கிரதையாக கவனித்திருக்கும். R5491:4 இது அவருடைய இரண்டாம் பிரசன்னத்தின் வேளையாய் இருக்கின்றபடியால், மாபெரும் மேய்ப்பனாகிய கர்த்தருடைய சத்தமானது அவருடைய செம்மறி ஆடுகளுக்கு மத்தியில் இப்போது கேட்கப்பட வேண்டியதாயிருக்கிறது. R5693:6 இந்த அறுவடைக் காலத்தின்போது, வெளிச்சம் அதிகரிப்பதும், கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பது அதிகரிப்பதும், ஒரு பரீட்சையைக் கொண்டுவருகிறது – அதாவது, இந்த மந்தையைச் சேராத மற்றவர்களிடமிருந்து உண்மையான செம்மறி ஆடுகளைப் பிரிக்கும் பரீட்சையைக் கொண்டுவருகிறது. R3883:6 உண்மையான ஆடுகள், “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” (மத். 16:24) என்று கூறிடும் மேய்ப்பனுடைய சத்தத்தைக் கேட்கின்றன. R1790:3 அவருடைய கற்புள்ள, நிச்சயிக்கப்பட்ட கன்னிகை வகுப்பாரைச் சேர்ந்த நாம் அனைவரும் இனி ஒருபோதும் விசுவாச அறிக்கை வேலிகளால், உட்பிரிவுகளாக குழுக்களாக பிரிந்திருக்காமல், ஒன்றாக இருக்க வேண்டும் என்பது அவருடைய சித்தமாக இருக்கிறது என உறுதியளிக்கும் அவருடைய சத்தத்தை நாம் கேட்கிறோம். SM125:2 யாரேனும் பாபிலோனிலிருந்து, இப்போது கர்த்தர் அவர்களை வெளியே வரும்படிக்கு அழைக்கின்ற சத்தத்தைக் கேட்கவில்லை என்றால், அவர்கள் அவருடைய உண்மையான ஆடுகள் அல்ல என்பதே அனுமானமாய் இருக்கிறது. R5697:5 ஒரு மந்தையின் மேய்ப்பன் தன் ஆடுகளைக் குழுக்குழுவாக அழைக்கிறார், ஒரு குழு தண்ணீர் குடித்து முடித்ததும், அந்த ஆடுகளுக்கு நன்றாகப் புரியும் சத்தத்தைக்கொண்டு அவைகளுக்குக் கட்டளையிட்டு, அப்புறமாக அனுப்பிவிட்டு, மற்றொரு குழுவை அழைக்கிறார். R4157:6 “மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்” என்று அப்போஸ்தலன் நமக்குக் கூறுகிறார். (ஏசா. 1:3) மிருகங்களாக இருந்தாலும், தங்களுக்கான போஷாக்கிற்காக எங்கு செல்ல வேண்டும் என்பதை அவை அறிந்திருக்கின்றன. R3786:1

**அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது** – மேய்ப்பனின் சத்தத்தை, வழிமுறைகளைப் பின்பற்றிடும். E386 “சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா.” (மாற். 10:21) R279:4, 142:5 நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள, நாம் கர்த்தரின் “ஆடுகளாக” மாற வேண்டும், மேய்ப்பனின் கட்டளையைப் பின்பற்றவும் வேண்டும். இது யார்மீதும் பலவந்தம்பண்ணப்படமாட்டாது, மாறாக அதைப் பெற்றுக் கொள்ளப்போகிற அனைவராலும் அது விருப்பத்தோடு வாஞ்சிக்கப்பட்டு, பற்றிக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாயிருக்கிறது. R1878:4, 1648:2

## 27. யோவான் 14:3

**“நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே**

## நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"

**நான் போய்** - அவர் தமது மந்தையை ஒரு காலமளவும் விட்டுச் சென்ற காரியமானது அவர்கள் சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்படுவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் இன்றியமையாததாய் இருந்தது. R5694:5

**நீங்களும் இருக்கும்படி** - சகலத்தையும் தெய்வீகச் சித்தத்திற்கு அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற ஒருவருடைய காரியங்களில் காணப்படும் கர்த்தருடைய சமுகமும் (பிரசன்னம்/Presence), தெய்வாதீனமான கவனிப்பும், உலகம் அறியாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொண்டு வருவதாய் இருக்கின்றன. NS451:3

**நான் மறுபடியும் வந்து** - இது இரண்டாம் வருகையைக் குறிக்கிறது. CR401:6; R5654:6 எஜமானர் நாம் அவரிடம் செல்லுவோம் என்பது குறித்து ஒரு வார்த்தையும் கூறவில்லை, மாறாக, அவர் மறுபடியும் வந்து நம்மை அவரிடத்தில் சேர்த்துக்கொள்ளுவார் என்றே கூறியிருக்கிறார். R5132:2, 2765:2, 1881:6, 700:2 அப்போஸ்தலர் மரித்த உடனே பரலோகத்திற்குச் சென்றார்கள் என்றால், இதை அவர் ஏன் சொல்லியிருக்க வேண்டும்? HG347:5, 334:5 இயேசு பிதாவை விட்டு "புறப்பட்டு," அதே நேரத்தில் தம் சீஷரிடம் "மறுபடியுமாக வருவார்." Q751:2 திருச்சபையின் ஒவ்வொரு அங்கமும் மரணத்தின் போது உடனடியாக மகிமைக்குச் செல்லுகிறார்கள் என்ற கோட்பாட்டை (theory) ஏற்றுக் கொண்டால், இந்த வேதவாக்கியம் அர்த்தமற்றதாகிவிடுமே. HG267:6 கடந்த கால விசுவாசிகளும், தற்கால விசுவாசிகளும் நம்முடைய கர்த்தரிடம் செல்ல முடியாத காரணத்தினால் தான், அவர்களெல்லாரும் அவருடைய இரண்டாம் வருகைக்காக, அவருடைய திரும்பி வருதலுக்காக ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தார்கள். R2438:3 உலகத்தைப் பொறுத்தவரையில், எப்படி அவர் அமைதியாகவும், இரகசியமாகவும், தம்முடைய பின்னடியார்கள் தவிர வேறு யாரும் அறியா வண்ணமாகவும் பரமேறினாரோ அதே விதத்தில் (மறுபடியும் வந்து). B154; NS656:6 நமக்கு விசுவாசமிருக்குமாயின், நாம் பின்னோக்கிப்பார்த்து, சிலுவையில் மரித்துக்கொண்டிருந்த கிறிஸ்துவை நோக்கிடுவோமாக, அதேபோல நமக்கு நம்பிக்கையிருக்குமாயின், கிறிஸ்து மீண்டும் வந்துள்ளதைக் குறித்து இன்னுமதிகமாக முன்னோக்கி பார்த்திடுவோமாக. R2798:3* அவர் வந்திருக்கிறார், இப்போதும் கூட அவர் இருக்கிறார், விரைவிலேயே நம்மை என்றென்றைக்குமாக அவரிடமாக சேர்த்துக்கொள்ளுவார். R5863:1 நமது கர்த்தருடைய மரணத்திற்கும், அவரது இரண்டாம் வருகைக்கும் இடையே உள்ள இடைக்காலமானது நீண்ட காலப்பகுதியாக இருக்கவில்லை: தேவனுடைய பார்வையிலோ, "ஆயிரம் வருஷம் ஒருநாள்போல இருக்கிறது" (2 பேது. 3:8); விசுவாசியின் பார்வையிலோ, அவனவனது சராசரி வாழ்க்கை மற்றும் காத்திருப்புக் காலம் என்பது ஏறக்குறைய 50 ஆண்டுகளாக இருக்கிறது. R2454:3 சிலர் ஓர் ஆவியின் ஜீவியாக வந்திருக்கிற கிறிஸ்துவின் பிரசன்னத்தை, கிறிஸ்துவுடைய ஆவியின் பிரசன்னத்துடன் குழப்பிக்கொள்கிறார்கள். அவை இரண்டும் வெவ்வேறானவை. பிந்தையதோ சபையை விட்டு ஒருக்காலும் நீங்கினதில்லை. ஆனால் இங்கே நாம் காண்பதோ தனிப்பட்ட ஒருவரது பிரசன்னமாகும் - அவர் ஒருகாலத்தில் சென்றிருந்தார், திரும்பி ஓர் ஆவிக்குரிய சரீரத்தில் வருவார் என்பதாக இங்கு குறிப்பிடப்படுகிறது. R580:4; A89; B105; OV222:1 பாவிகள் மனமாற்றமடையும் போது, அது கிறிஸ்துவின் வருகையின் ஒரு பாகமாக இருக்கும் என்று பலர் நினைப்பது போலல்லாமல், மாறாக அது தனிப்பட்ட வருகையாக இருக்கிறது. HG341:3; OV222:2 இது பெந்தெகொஸ்தே நாளில் நடந்த பரிசுத்த ஆவியின் பொழிவையோ அல்லது எருசலேமின் அழிவையோ குறிக்கவில்லை, ஏனென்றால் 26 ஆண்டுகளுக்குப் பிறகு, வெளிப்படுத்தலில், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று அவர் கூறியிருக்க, அதற்கு அப். யோவான், "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று கூறினார். (வெளி. 22:12, வெளி. 22:20) A89 தப்பறையானது இந்தத் தெளிவான கூற்றை மூடிமறைத்துவிட்டதால், அவருடைய உண்மையுள்ள சீஷரில் ஒருவர் மரிக்கும்போதெல்லாம், இயேசு மீண்டும் வருகிறார் என்கிற

கருத்தைப் பலர் கொண்டிருக்கின்றனர். HG664:4 இந்த நடைமுறைகள் அனைத்தும் குமாரன் மூலமாக இருந்தாலும், அவை பிதாவினுயுடையதாயிருக்கின்றன. F399

**என்னிடத்தில்** – மேலும் உயிர்த்தெழுதலில், பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோகச் சுபாவத்திற்கு மறுரூபமாக்குவதன் மூலமாக, உங்களைப் பரலோக தளத்திற்கு அழைத்துச் செல்லுவேன். CR401:6 அவருடைய மணவாட்டியாக மகிமையடைந்த சபை இருக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் திருமணம் நடைபெறுகிறது. அதன் பிறகு, மணவாட்டியும் மணவாளனுமாகிய கிறிஸ்துவின் ஆளுகை நடைபெறும். Q838:2 யூத வழக்கத்தின்படி, நிச்சயதார்த்தம் ஆகிவிட்டதென்றால், அது திருமணத்திற்கு இணையாக கருதப்பட்டபடியால், திருமணத்திற்குரிய கற்பு ஒழுக்கம் நிச்சயதார்த்தத்திற்கும் பொருந்தினதாக இருந்தது. இப்படியாக, பரலோக மணவாளனுடனான திருமணம் அவரது இரண்டாம் வருகை வரை நடைபெறாது என்றாலும், சபை, அவள் எடுத்துக்கொண்ட உறுதிமொழியினிமித்தமாக, முழுமையாக இந்தப் பந்தத்தில் பிணைக்கப்பட்டுள்ளாள். SM122:T இவ்வாறு அவருடைய மகிமைக்குள் பிரவேசித்து, தேவனுடைய சுதந்தரராகவும், இராஜ்யத்தில் அவருடன் உடன்-சுதந்தரராகவும் மாறுவதற்காக. NS296:1 அவர்கள் அவருடன் கூட்டிச்சேர்க்கப்படும் காரியமானது அவருடன் அவர்கள் வருவதற்கு முன்னதாக நடந்தாக வேண்டும். (சக. 14:5) R154:6*

**உங்களை... சேர்த்துக்கொள்ளுவேன்** – கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நோக்கமானது, அவருடைய திருச்சபையைத் தமக்கென்று சேர்த்துக்கொள்வது அல்லது ஒன்று சேர்ப்பது ஆகும். கிறிஸ்துவோ அப்.பவுலோ எந்தக் கால இடைவெளியையும் குறித்து குறிப்பிடாததால், அவர் வந்த உடனேயே கூட்டிச்சேர்க்கப்படுதல் நடக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. R154:6* ஒப்பீட்டளவில் மெய்க் கிறிஸ்தவரில் பெரும்பகுதியினர், இந்தச் சந்திப்பைச் சந்தோஷத்துடன் எதிர்பார்க்கும் மனப்பான்மையோடு, தங்கள் அன்றாட ஜீவியத்தை ஜீவிப்பதில்லை. R3191:3 தவறான உபதேசங்கள் மாத்திரமல்லாமல், பாவமும்கூட, அந்தச் சந்தோஷமான எதிர்பார்ப்புகளுக்குத் தடையையும், வெட்கத்தையும், பயத்தையும் உண்டுபண்ணுகின்றன – நம்முடைய இந்த இருதய நிலையைச் சக ஊழியரிடமிருந்து நாம் மறைக்கலாம், ஆனால் எஜமானரிடமிருந்து மறைக்க முடியாது. R3191:3 அப். பவுல் இந்த உபதேசத்தை நம்பினார், மற்றவர்களுக்கும் போதித்தார், மேலும் தான் "கர்த்தரோடுகூட இருக்கப்போகிற" வேளைக்காக, பரலோகத்திலிருந்து இரட்சகர் வரக் காத்திருந்தார். (பிலி. 3:20; 1 தெச. 1:10; 1தெச. 4:16 – 17) F671; R1827:1

## 28. யோவான் 14:21

**"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்"**

**என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு** – கற்பனைகள் என்பது பன்மையாகும், எனவே இதுவும், "நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன்" (யோவா. 13:34) என்று கூறப்பட்டதும் ஒன்றாகாது; இதுவும், நியாயப்பிரமாணத்தின் பத்துக் கட்டளைகளைச் சுருக்கி கொடுக்கப்பட்ட இரண்டு பிரதான கட்டளைகளும் கூட ஒன்றல்ல. R5520:3 வாழ்க்கையின் சகல காரியங்கள் தொடர்பாக கர்த்தர் கொடுத்த பொதுவான போதனைகளே இந்தக் "கற்பனைகளாக" இருக்கும் எனத் தோன்றுகிறது. R5520:4 என்னுடைய கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு, என் சீஷனாக மாறுவதற்குத் தயாராக இருப்பவனைக் குறிக்கிறது. R5520:1 நியாயப்பிரமாணம், கிறிஸ்து கொடுத்த கட்டளைகள் மற்றும் நியாயப்பிரமாண உடன்படிக்கை என்பவைகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டை நாம் அடையாளங் காண வேண்டும். R5520:2 கர்த்தர், அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளுடைய தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகளில், தேவ சித்தமானது கற்பனையின் மேல் கற்பனையாகவும், பிரமாணத்தின்

மேல் பிரமாணமாகவும், வெளிப்படுத்தப்பட்டு, விளக்கப்பட்டு, எடுத்துக்காட்டப்பட்டு, வலியுறுத்தப் பட்டிருப்பதைக் காண்கிறோம். R2093:3* ஆகையால், கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்து, அவருடைய கற்பனைகளைப் பெற்றுக்கொள்ளாமல், தங்களுடைய சொந்த கற்பனைகளின் சத்தத்திற்கே செவிசாய்ப்பவர்கள், இந்த வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என மிகவும் தவறாக நினைத்துவிடுகிறார்கள். R3251:2

**அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே** - நம்முடைய கர்த்தர் தம்முடைய வார்த்தையிலுள்ள படிப்பினைகளை, நம் தலைக்கு / மூளைக்கு மாத்திரமல்ல, நம் இருதயங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்கிறார். R2093:6* அவருடைய கற்பனைகளைக் கேட்டு, அவற்றைச் செய்வதற் கேதுவான அன்பினால் தூண்டப்படுபவர்களுக்கே இந்த அனுபவங்கள் நிபந்தனையுடன் வாக்களிக்கப் பட்டுள்ளன. R2456:1 பரலோக ஞானத்திற்குக் கீழ்ப்படிவதென்பது, தேவன்மீது நாம் கொண்டுள்ள அன்பின் சான்றாக அமைகிறது. இவ்விதமாக நீதியின் மீதான நமது அன்பும் நிரூபிக்கப்படுகிறது. R2093:3* சரியானதைச் செய்வேன் (அ) தேவனுக்குக் கீழ்ப்படிவேன் என்று முடிவெடுப்பது (அ) தீர்மானமெடுப்பது மாத்திரம் போதாது. நாம் இன்னும் மேலே சென்று, உண்மையில் குணலட்சணத்தில் முன்னேற்றமடைய வேண்டும், இல்லாவிடில், தோல்வியே அடைவோம். R1802:2* “அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்” (1 கொரி. 8:1) என்பதை மறந்துவிட்டு, நமது ஆவிக்குரிய வளர்ச்சியை நஷ்டப்படுத்திக்கொண்டு, அறிவை மாத்திரம் வாஞ்சிப்பதற்கும், வளர்ப்பதற் குமான ஆபத்திற்குள்ளாகும் நிலையில் நாம் அனைவரும் இருக்கிறோம். அறிவு மகிழ்ச்சியை உண்டுபண்ணாமல், மாறாக, கீழ்ப்படிதலே மகிழ்ச்சியை உண்டுபண்ணும். R1802:2* வெறுமனே கற்பனையைக் கேட்பது அல்லது கற்பனையைப் புரிந்துகொள்வது மாத்திரம் அதனை பெற்றுக் கொள்வது என்றாகிடாது. R5520:2 ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது ஒரு காரியம், “நீங்கள் ஆவியினாலே நிறைந்து” என்று அப்போஸ்தலனால் வலியுறுத்தப்பட்ட அந்த நிலையை அடைவது என்பது மற்றொரு காரியமாகும். (எபே. 5:18) R2456:1 இது, வார்த்தையின் எந்தப் பகுதிகள் நம்முடைய தனிப்பட்ட தற்போதைய தேவைகளுக்குப் பொருந்தும் என்பதை நாம் காணும்படிக்கு, நம்மைக் குறித்தும், தெய்வீக வார்த்தையைக் குறித்தும் தியானிப்பதைக் குறிக்கின்றது. R2094:1* ஒரு நபர் ஒரு பள்ளியில் பார்வையாளராக (visitor) இருக்கலாம், ஆனால் அவர் அப்பள்ளியின் விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத வரையில், அதாவது அந்தப் பள்ளி எந்தக் கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளின்கீழ் இயங்கிவருகின்றதோ அந்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளாத வரையில், அவர் அந்தப் பள்ளியில் ஓர் உறுப்பினராக (member) இருக்கமுடியாது. R5520:2 நம்பிக்கையின் முதல் படியையும், அதற்குப் பதிலளிப்பது (response) எனும் இரண்டாம் படியையும் எடுத்த பிறகு, ‘அவர் சொல்வதைத்தான் நான் செய்கிறேனா?’ என்பதே நாம் ஒவ்வொருவரும் நமக்குள் கேட்க வேண்டிய முக்கியமான கேள்வியாக இருக்கிறது. R3163:6 சுயத்தைத் திருப்திசெய்வது அல்ல, மாறாக சுயத்தை வெறுத்து, சுயத்தைச் சுத்திகரிப்பதாகும். சாந்தத்தோடும் மனத்தாழ்மையோடும் நாம் நம்மை வெறுக்க வேண்டும். R2094:6* ஒருவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலைக்குள்ளாக வருவதற்கு முன்பாக, இருதயத்தில் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் கொண்டிருப்பதோடுகூட, பரிசுத்த ஆவியிலும், விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் தொடர்ந்து வளர்வதும் அவசியமானதாயிருக்கிறது. R2456:1 கர்த்தருடன் செய்யப்பட்டுள்ள இந்தவொரு திட்டவட்டமான ஒப்பந்தத்தின் காரியமானது மிக முக்கியமான ஒன்றாகும். அதைச் செய்யாதவர்கள் உண்மையிலேயே அவருடைய சீஷராய் இராமலும், உண்மையில் அவர் கைகளில் தங்களை வைக்காதவர்களாயும், சேதத்திற்குள்ளாகும் அபாயத்திலிருப்பவர்களாயும் இருக்கிறார்கள். R5520:2 நான் என்னை அர்ப்பணித்தபோது, நான் செலுத்தின பலியைப் பலிபீடத்தோடு நெருக்கமாகக் கட்டிவைப்பதே, நான் செய்துகொண்ட உறுதிமொழியாக இருந்தது. அந்த நாள் துவக்கி, நான் பலவீனமாகவும், வலுவிழந்தும், வயதுகூடிக்கொண்டும் போகின்றபோதிலும், கர்த்தர் என்னைத் தம்மிடமாக இன்னும் நெருக்கமாகவே சேர்த்துக்கொண்டார். R4402:3* “உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்.” (எரே. 15:16) R2093:6*

**என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்** – கட்டாயம் செய்யப்பட வேண்டியவை என்கிற பாணியில் நமது கர்த்தருடைய கட்டளைகள் முன் வைக்கப்படவில்லை, மாறாக அவரை அன்புகூருகிறவர்கள் எவராயினும் அவருக்கு ஊழியஞ்செய்வார்கள் என்பதே காரியமாகும். R5520:5 எதுவுமே ஒரு தன்னிச்சையான கட்டளையாக முன்வைக்கப்படாமல், கொள்கைகளின் வாக்கியமாக மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை நமக்குக் கட்டளைகளாக மாறுகின்றன. அவரில் அன்பு கூருகிறவர்களுக்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய விரும்புகிறவர்களுக்கும் அவருடைய சித்தத்தை அறிவதென்பது ஒரு பிரமாணமாக இருக்கின்றது. R5520:5

**என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்** – அவர் பிதாவாகிய தேவனின் வாய்க்கருவியாக இருக்கிறார், ஆக அவரைப் பிரியப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிவதன் வாயிலாக நாம் பிதாவைப் பிரியப்படுத்தி, அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களாகிறோம். R2456:4 தகப்பனுக்குரிய அன்பும் பரிவும். R139:6*

**நானும் அவனில் அன்பாயிருந்து** – இந்த மகத்தான கனத்தை மதித்துணருபவர்களைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார், மேலும் அவர் தமது மணவாட்டியை அழைத்துச்செல்ல வரும்போது, இவர்களே அவருடன் ஆளுகை செய்பவர்களாக இருப்பார்கள். R5520:6 அன்பில் இரண்டு வகைகள் உள்ளன: ஆழமான, விசேஷித்த அன்பு, மற்றும் பொதுவான அன்பு, அதாவது, விசாலமான மனதுடைய தயாளமும், இரக்கமுமான அன்பு; மேலும் இந்த இரண்டு வகையான அன்பையும், நமது கர்த்தரோடும் பரமபிதாவோடும் தொடர்புபடுத்தி, வேதாகமம் முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணலாம்: நேச அன்பு (affectionate love) மற்றும் அன்பான இரக்கம் (loving kindness). இங்கே நாம் விசேஷித்த அன்பை அல்லது நேசத்தைப் பார்க்கிறோம். R1254:3, 139:3* கிறிஸ்துவின் அன்பானது மணவாளனுடைய அன்பைப் போன்றது. திருமணம் என்பது தலைக்கும் சரீரத்திற்குமான ஐக்கியமாகவும், சரீரத்தின் அனைத்து அங்கங்களுக்கும் இடையிலான ஐக்கியத்தின் முழுமையான வெளிப்பாடாகவும் இருக்கிறது. R139:6*

**என்னை வெளிப்படுத்துவேன்** – பரிசுத்த ஆவியின் மூலமாக. R2455:6 நமது இருதயங்கள் தாழ்மையாகவும், ஊக்கமாகவும், உண்மையாகவும் இருக்குமேயானால்; மேலும், சத்தியத்திற்கு இசைவாக நாம் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கேதுவாக எப்பொழுதும் தூய நோக்கத்தையும், சரியான சத்தியத்தையும் கண்டறிவதே நமது நேர்மையான, கருத்தான பிரயாசமாக இருக்குமேயானால் (அவர் நமக்கு வெளிப்படுத்துவார்). R1823:6 தூரத்திலிருந்து பார்க்கும்போது, கர்த்தர் பயங்கரத்தையும் கடூரத்தையும் அணிந்தவராக இருக்கிறார். அவரைக் கிட்ட நெருங்கி பார்க்கும்போதுதான் நம்முடைய திகில்/நடுக்கம் பயபக்தியாக மாறுகின்றது. R139:6*

## 29. யோவான் 14:23

**"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்"**

**என்னில் அன்பாய்** – பிரியத்தோடு ஏற்றுக்கொள்ளுகிற பிதாவின் உண்மையான ஒரு குமாரன் இயல்பாகவே அவரது அன்பின் கதகதப்பை அனுபவிக்கிறான். விசேஷமாக, ஒவ்வொரு கிருபையின் பூரணத்தையும் தன்னுடைய பரமபிதாவினில் அடையாளங்காண்கிற உண்மையான குமாரன் உண்மையிலேயே அந்தக் கதகதப்பை அனுபவிக்கிறான். R1914:3 பிதா மற்றும் குமாரன் இருவருடனும் ஐக்கியங்கொள்வதற்கான வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுள்ளோம்; இருவரும் சமமாக வணங்கப்பட/தொழுதுகொள்ளப்பட வேண்டும், அன்புகூரப்பட வேண்டும். R1581:1

**ஒருவன்... இருந்தால்** – "இருந்தால் / if " என்பதை உள்ளடக்கிய அன்பானது நிபந்தனைக்குட்பட்ட

அன்பை அல்லது அதிகாரத்தின் நிமித்தமாக ஏற்படுகிற அன்பைக் குறிக்கிறது. R1253:5 யாரேனும் ஒருவர், விசுவாசத்தை இழப்பதன் மூலமாக, கிறிஸ்துவுடனான தனது உறவினை இழந்தாலோ அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவத்தின் மூலமாக பரிசுத்த ஆவியை இழந்தாலோ, அத்தகையவர் இயேசுவின் மூடுதலிலிருந்து வெளிப்பட்டு, ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுந்திடுவார், மேலும் நடந்தவைகளை வைத்தும், கிரியைகளை வைத்தும் நியாயந்தீர்க்கும் அவருடைய நியாயத்தீர்ப்பிலும் விழுந்திடுவார். அனைத்து அபூரண சிருஷ்டிகளுக்கும் இது மரணத்தைக் குறிக்கின்றது. R2456:4 கிறிஸ்துவின் சரீரம், ஒட்டுமொத்தமாக, ஒன்றாக இருக்க வேண்டும், ஆனாலும் இந்த ஒருமைப்பாடானது ஒவ்வொரு தனிநபராலும் பங்களிக்கப்பட்டு, உருவான ஒன்றாக இருக்கிறது. R2638:4*

**அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்** – நிச்சயமாக அன்பை நிரூபிக்க பக்தியைப் பார்க்கிலும் சிறந்த பரீட்சை வேறெதுவும் இருக்க முடியாது, அதேபோல் பக்தியை நிரூபிக்க கீழ்ப்படிதலைப்பார்க்கிலும் சிறந்த பரீட்சை வேறெதுவும் இருக்க முடியாது. R2456:4

**அவனில் என் பிதா அன்பாயிருப்பார்** – ஆவியின் கனிகள் தொடர்ச்சியாகக் கனிந்துவரும்பட்சத்தில், தெய்வீக அங்கீகாரமும், தெய்வீகத் தயவும் நாளுக்கு நாள் அதிகளவில் நமக்கு அருளப்படும். R3215:4 நம்முடைய பூமிக்குரிய யாத்திரையில், நம்மைச் சூழ்ந்து நிற்கின்ற அனைத்து சோதனைகள் மற்றும் பரீட்சைகள் மத்தியில், "நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று சொல்லும் நம் தேவனுடைய சத்தத்தை நாம் அடையாளங்காணலாம். (ஆதி. 15:1) R1906:1

**நாங்கள்** – பிதா மற்றும் குமாரனுடைய சிந்தனையும், பராமரிப்பும், அக்கறையும் / கவனமும் எப்போதும் நம்மேல் இருக்கும்; அத்துடன் நாம் ஒருவருடைய அல்லது இருவருடைய விசேஷித்த கவனத்தையும் பெற்றுக்கொள்ளலாம். R1865:2

**அவனிடத்தில் வந்து** – ஜீவப் பாதையில், கீழ்ப்படிதல் மற்றும் அன்பான ஊழியத்தின் பாதையில் நடப்பதன் மூலமாக, நாம் தேவனிடம் நெருங்கி வருவோமேயானால், நாளுக்கு நாள் தேவனுடைய பிரசன்னத்தையும் தயவையும் உணர்வது நம்முடைய பாக்கியமாக இருக்கும். R1949:2

**அவனோடே வாசம்பண்ணுவோம்** – பரிசுத்த ஆவியின் மூலமாக. R2455:6 அவ்வப்போது கவனத்தோடு கேட்கப்படுவது குறித்த வாக்குத்தத்தம் மாத்திரமல்லாமல், பிதா குமாரன் என இருவருடைய நிலையான பிரசன்னத்தின் வாக்குத்தத்தமும் கூட இவர்களுக்கு உரியதாயிருக்கிறது. R1865:1 இவ்வாறு ஒவ்வொரு பரிசுத்தவானும், "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக" (எபே. 2:22), ஒரு பரிசுத்த ஆலயமாக, ஓர் இராஜரீக வீடாக மாறுகின்றார். R1981:4 பரிசுத்தத்தின் ஆவியானது சரீரத்தையும், உடையையும், வீட்டையும், நாம் தொடர்புக்குள்ளாக வருகிற அனைத்தையும் சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ள நம்மை உந்தச்செய்கிறது; ஏனெனில், புறம்பான மனுஷன் உள்ளான சுத்த இருதயத்திற்கு ஏற்றாற்போல காணப்பட வேண்டும், மேலும் நம்முடன் தங்கும் பரத்திற்குரிய விருந்தினரோடும் இசைந்திருக்க வேண்டும். R1739:6 ஒருவருக்குள்ளாக மற்றொரு ஜீவி (கர்த்தர்) மர்மமாக வாசம்செய்வதால், அந்த நபர் தவறேசெய்யாதநிலையில் இருப்பார் (personal infallibility) என்கிற கருத்து உருவாகின்றது – இது கடுமையானதொரு தப்பறையாகும். R3251:2

## 30. யோவான் 14:27

**"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக"**

**உங்களுக்கு** – அவர் இந்தச் சமாதானம் எனும் சுதந்தரத்தை ஆதிகால திருச்சபைக்கென்று மாத்திரம் வைத்துப்போகவில்லை. இது யுகத்தின் முடிவுபரியந்தம், முழு திருச்சபையின் பாக்கியமான சுதந்தரமாக இருக்கிறது. R1834:5, 5432:1

**சமாதானத்தை... வைத்துப்போகிறேன்** – தேவசமாதானமானது பெரும் அமளியின் மத்தியிலும், பல்வேறு விதமான துக்கம் வலி மத்தியிலும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்றாகும்; ஏனெனில் இது வெளிப்புற சூழ்நிலைகளைச் சார்ந்ததாய் இராமல், மாறாக சிந்தையையும் இருதயத்தையும் சரியாக சமநிலைப்படுத்துவதைச் சார்ந்ததாய் இருக்கிறது. R4818:5 நமக்கு இளைப்பாறுதலும் சமாதானமும் நித்திய ஜீவனும் தேவைப்படுகின்றன. நம்மைச் சுற்றியுள்ள உலகில் இவற்றைக் காண முடியாது. கர்த்தருடைய ஏற்பாட்டிற்கு வெளியே உண்மையான சமாதானம் காணப்படுவதில்லை. R4883:2 பரிசுத்தவான்கள் “மகிமையோடே களிகூருவார்கள்” (சங். 149:5) என்பதை அறியும்போது, அது நமக்கு எந்த ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதில்லை; ஆனால் நாம் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிற அபூரணம் மற்றும் உடல் பலவீனம் எனும் தற்போதைய நிலையானது, துதிகளும் ஸ்தோத்திரங்களும் சந்தோஷமும் மேலோங்கியிருக்க வேண்டிய ஒரு நிலையாக இருக்க வேண்டும் என்பது சிலருக்கு விசித்திரமாகத் தோன்றலாம். R2231:6 அவர்களின் நிலை எதுவாக இருந்தாலும்சரி, நோயாக இருந்தாலும் சரி, ஆரோக்கியமாக இருந்தாலும் சரி, மிகவும் ஏழ்மையாக இருந்தாலும்சரி அல்லது வசதியான சூழ்நிலையாக இருந்தாலும்சரி, இவைகளின் மத்தியில் தங்களுக்குள் சமாதானத்தைப் பெற்றிருந்து, போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்பதை உணர்ந்திருக்கவும் செய்வார்கள். (1 தீமோ. 6:6) R1245:3 இந்தப் “பொல்லாத நாளின்” “கொடிதான காலங்களுக்கு” மத்தியில், தெய்வீகப் பாதுகாப்பு, கவனிப்பு மற்றும் தனிப்பட்ட அன்பு என்பவைகளின் உத்தரவாதங்கள் பரிசுத்தவான்களுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றவையாக இருக்கின்றன. R3331:2 வேதாகம காலத்திய உண்மையுள்ள ஊழியர்களால், எப்படித் தங்களுக்கான கடமையை நிறைவேற்றுவதில் தேவன் தங்கள்மேல் வர அனுமதித்த எந்த அனுபவத்திலும் மகிழ்ச்சியடைய முடிந்ததோ அதுபோல, நாமும் அந்தத் தேவன் தான் நமது தேவனும்கூட என்பதையும், அவர் மனம் மாறாதவர் என்பதையும் நினைவில் கொள்வோமாக. R3123:2 தேவனுடைய அன்பு, வல்லமை மற்றும் ஞானத்தின் மீது அவர்கள் வைத்திருந்த விசுவாசமே, வாழ்க்கையின் கடும்புயல்களிலிருந்து தப்பிக்கக் கூடிய இந்த நிலையான சமாதானத்தின் அஸ்திபாரமாகவும் உத்தரவாதமாகவும் காணப்பட்டது. R1834:6 நாம் கர்த்தருடைய கையாளுதல்களைச் சரியாகப் பார்க்கவும், அவர் மீது விசுவாசம் வைக்கவும், அவருடைய மேற்பார்வைகளைக் கவனித்து வாக்குத்தத்தங்களை நம்பவும் கற்றுக் கொள்ளுகிற அளவிற்கேற்ப, ஒவ்வொரு புயல் மற்றும் துயரத்தின் வேளையிலும் நம்மால் சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் பெற்றுக்கொள்ள முடியும். NS660:5 கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு அடிக்கடி புயல்போன்ற வாழ்க்கைப்பிரயாணம் இருப்பதால், கிறிஸ்தவரின் வாழ்க்கை என்றாலே அது சமாதானத்திலிருந்து தூரமான ஒன்றாகத்தான் இருக்கும் என்பது போல உலகத்தாருக்குத் தோன்றலாம். ஆனால் நம்முடைய இருதயங்கள் கிறிஸ்துவின் மீது தொடர்ந்து நிலைத்திருந்தால், வாழ்க்கையில் ஏற்படும் புயல்களின் ஊடேயும் நாம் பாதுகாக்கப்படுவோம். R5432:1 இந்தச் சமாதானமான நிலையே விதியாக (rule) இருக்க வேண்டும்; மற்றனைத்தும் விதிவிலக்காகவே இருக்க வேண்டும், இன்னுமதிகமாக அரிதான விதிவிலக்காகவே இருக்க வேண்டும். NS66:5

**என்னுடைய சமாதானத்தையே** – அந்த ஆத்தும அமைதியையே; அந்த மனதின் இளைப்பாறுதல் மற்றும் அமரிக்கையையே; அவர் தாமே கொண்டிருந்ததும், பிதா தாமே எப்போதும் அனுபவித்தது மாகிய அந்த அதே தேவ சமாதானத்தையே. R1834:2 தேவனிடம் இந்தச் சமாதானமானது அவருக்குள் மையங்கொண்டிருந்தது, ஏனெனில் அவர் தம்மில் சர்வ ஞானமும், சர்வ வல்லமையும் இருப்பதை உணர்ந்திருந்தார். அதேசமயம் கிறிஸ்துவின் சமாதானமோ அவருக்குள் அல்லாமல், மாறாக தேவனிடத்தில் மையங்கொண்டிருந்தது. R1834:2 அலட்சியம் மற்றும் கவனக்குறைவினால் வரும்

சமாதானம் அல்ல, சுயத்தைத் திருப்திசெய்வதனால் வரும் சமாதானம் அல்ல, சோம்பலினால் வரும் சமாதானம் அல்ல, விதியின் / தலையெழுத்தின் (fatalism) மீது நம்பிக்கை வைப்பதால் வரும் சமாதானம் அல்ல; மாறாக கிறிஸ்துவின் சமாதானமாகும். R2456:6 சில சமயங்களில் சாதகமான சூழ்நிலையின் போதும், நண்பர்கள் நிறைந்திருக்கும்போதும், ஆரோக்கியம் நிலைத்திருக்கும்போதும் அனுபவிக்கப் படுகிறதாய் இருக்கின்ற உலகத்தின் குறுகிய கால சமாதானமும் அல்ல. மாறாக இழப்பு, துன்புறுத்தல், பரியாசம் மற்றும் அவமதிப்பு என்பவைகளின் ஊடேயும் நிலைத்திருக்கிற சமாதானமாகும். R1834:5 இருள் சூழ்ந்த வானங்கள், அதிர்ந்த பூமி, பிளவுபட்ட கன்மலைகள், தேவாலயத்தின் கிழிந்த திரைச்சீலை, இவை அனைத்துமே உலகத்தால் பெற்றுக்கொள்ள இயலாத ஆறுதலின் செய்தி யொன்றை அவர்களுக்குத் தெரிவித்தன. R1834:4 அவர் நம்மில் குணலட்சணத்தை வளர்ப்பதற்கே வாஞ்சிக்கிறார், எனவே பரீட்சைகளையும், “அக்கினி போன்ற சோதனைகளையும்” அனுமதிக்கிறார், மேலும் வாழ்க்கையின் இந்தச் சிரமங்கள் மற்றும் துன்பங்களுக்கு மத்தியில் “எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்” நம்முடைய இருதயங்களில் ஆளுகை செய்யும் என்று வாக்கும் அளிக்கின்றார். (பிலி. 4:7) NS597:1 ஆழமான மற்றும் நிலைத்திருக்கும் சமாதானம் – சகல பரிசுத்தவான்களுடனேகூட, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக, தெய்வீகக் கிருபையின் ஐசுவரியங்களைக் குறித்து நாம் புரிந்துகொள்ளும் அளவிற்கேற்ப அதிகரிக்கின்ற நிலையான ஒரு சமாதானம். R2456:5 எதுவுமே எந்த விதத்திலாவது அவருடைய உண்மையுள்ளவர்களைக் காயப்படுத்தாது என்றும், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்றும், தெய்வீக ஞானத்தை இருதயப்பூர்வமாக நம்புகின்ற ஒரு சமாதானம். (உரோ. 8:28) R2456:6 திரைக்கு அடியில் குனிந்து கடந்து செல்லும் முழு அர்ப்பணத்தைச் செய்தோமேயானால், அதன் விளைவாக முழு அல்லது பூரண சமாதானம் நமக்குக் கிடைக்கும். R4901:5, 4579:4

**உங்களுக்குக் கொடுக்கிறேன்** – நமது கர்த்தருடைய இறுதி விருப்பமும் / உயிலும், மரண சாதனமும். R1834:2 ஆயினும்கூட, அப்போதே மிகவும் கருமையாகி வந்து கொண்டிருந்த பிரச்சனையின் புயல் மேகங்கள், எவ்வளவு விரைவாக அந்தச் சீஷரின் தலையின்மேல் சீற்றமாக கொட்டித்தீர்க்கலாயின - அந்தச் சீஷருக்கே இந்த வார்த்தைகள் நேரடியாகச் சொல்லப்பட்டன. R1834:3

**உலகம் கொடுக்கிறபிரகாரம்... இல்லை** – அதாவது, பற்றாக்குறையான அளவிலோ அல்லது அழியக்கூடிய தரத்திலோ அல்ல. R4818:5

**உங்கள் இருதயம் கலங்காமலும்... இருப்பதாக** – “எல்லாப் புரிதலுக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவினால் காத்துக்கொள்ளும்.” (பிலி. 4:6 – 7, டயக்லாட்டு மொழியாக்கம்) R1046:4*

**பயப்படாமலும் இருப்பதாக** – பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. “தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?” (உரோ. 8:31) CR149:1 மனிதன் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளுகிற பயங்கரமான கசையடிகளில் ஒன்றாக பயமானது இருந்து வருகிறது. CR147:1

## 31. யோவான் 15:2

**“என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.”**

**என்னில்** – “கிறிஸ்துவில்” இருப்பது என்பது அவரது சரீரத்தில் அங்கம் வகிப்பதைக் குறிக்கிறது; அதாவது, திராட்சச்செடியில் அங்கம் வகித்து, அதிலிருந்து ஊட்டத்தை உண்பது எனும் கருத்தைத் தருகின்றது; “கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்.” (கொலோ.

1:27) R5227:3, 140:2 கிறிஸ்துவில் தேவன் வழியைத் திறந்து, அவருடைய திருச்சபையில் நாம் அங்கத்தினர் ஆவதற்கு வழியை ஏற்படுத்தியிருந்தாலும், அந்தத் திருச்சபையில் இணைவது / பங்கடைவதென்பது நமது தரப்பிலான வேலையாகும், மேலும் அதை முழு அர்ப்பணிப்பால் மட்டுமே நிறைவேற்றிட முடியும். R1301:4, 374:1; Q303:2 அப்போஸ்தலர் ஒருவரோடொருவர் இணைந்து கொள்ளவில்லை, மாறாக ஒவ்வொரு அப்போஸ்தலரும் இருதயத்தில் ஒன்றுபட்டு இருந்தார்கள். அதுபோலவே நாமும் அப்போஸ்தலருடன் இணைந்துகொள்ளவுங்கூடாது, மாறாக ஒவ்வொருவரும் ஓர் அங்கமாக, கர்த்தருடன்தான் இணைந்துகொள்ள வேண்டும், ஒவ்வொருவரும் கனிகொடுக்கத் தக்கதாகத் திராட்சச்செடியின் உயிர்ச்சாற்றைப் பெற்றிருக்க வேண்டும். R3544:5 திராட்சச்செடியின் உயிர்ச்சாறு கர்த்தருடைய பரிசுத்த ஆவிக்கு ஒத்திருக்கிறது, அது சபை முழுவதும் வியாபித்திருக்கிறது. NS378:1

**கனிகொடாதிருக்கிற** – அர்ப்பணிப்பு செய்வது மாத்திரம் போதாது, அதைத் தாண்டி கனிகொடுக்க வேண்டும். அர்ப்பணிப்பானது நமக்குக் கதவைத் திறந்து, நிற்கத்தக்க நிலைப்பாட்டை அளிக்கிறது. ஆனால் இந்த நிலைப்பாட்டை நிலைநிறுத்துவதற்கு, அன்பையும் பக்தியையும் நிரூபிக்கும் கனிகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். F78 ஆவியின் கனி. R1414:6, 1301:6 எப்படி, பூவும் திராட்சக்காயும் என்பது முழுமையாக கனிந்த திராட்சப்பழத்தை நோக்கிய பல்வேறு வளர்ச்சிநிலைகளாக இருக்கின்றதோ, அதுபோலவே, ஆவியின் கனிகள் அனைத்துமே ஒரே கனியாகிய அன்பின் பல்வேறு வளர்ச்சிநிலைகளாக இருக்கின்றன. R1301:6, 2667:3 இயேசு தமது மரணத்தை அடையாளப்படுத்த திராட்சப்பழரசத்தைப் பயன்படுத்தினார், மேலும் திராட்சச்செடியின் ஒவ்வொரு கொடியிலிருந்தும் எதிர்பார்க்கப்படும் கனி ஒன்றுதான், அது உலகத்திற்காக தங்கள் ஜீவனைக்கொடுப்பது எனும் கனியாகும். R140:2 சிலர் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக ஆகியும், கவனிக்கத் தவறிப்போய், கனிகொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றனர். R3545:2 நாம் புது சிருஷ்டியான ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியின் கனிகள் நம்மில் முளைவிட்டாலும், இவைகள் வளர்ந்து முதிர்ச்சி அடைய வேண்டும். நாம் கனிகொடுக்க வேண்டும். R5208:5 திராட்சச்செடியின் அனைத்துக் கொடிகளும், தங்களுக்காகவே தங்களது பலத்தைச் செலவிடும் தன்மைக் கொண்டிருக்கின்றது; அதாவது கனிகளைக்கொடுப்பதைப் பார்க்கிலும் கொடிகளை உருவாக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. R2465:2 மறுரூபமாகும் வேலை நமக்குள் நடக்கவில்லை என்றால், நாம் இறந்து விட்டோம் என்று அர்த்தம், அல்லது, மரித்துக்கொண்டிருக்கும் கொடிகளாக இருக்கிறோம் என்று அர்த்தம், அவை கூடிய விரைவில் செடியிலிருந்து துண்டிக்கப்படும். R1414:6, 1081:5 அதாவது, முன்னர் கொடியானது திராட்சச்செடியோடு இணைந்திருந்தாலும் கனிகொடுக்காமல் இருந்தது, அதாவது, கிறிஸ்துவைப் போல் ஆவதற்கு முயற்சி செய்யவில்லை. R5901:4*

**கொடி எதுவோ** – "என்னில் உள்ள... கொடி" என்பது ஒவ்வொரு பெயர்க் கிறிஸ்தவனையும், கிறிஸ்தவன் என்று தன்னை கூறிக்கொள்ளுகிற அனைவரையும், அல்லது ஒவ்வொரு "நீதிமானாக்கப் பட்ட" விசுவாசிகள் அனைவரையும் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக அர்ப்பணிப்பின் வாயிலாக, "கிறிஸ்துவினுடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே கொடிகள் ஆகுகின்றனர்." R2465:1

**அவர்** – பிதா. R5023:4, 1301:4; Q404:2 மற்றவரைப் பார்த்து அவர் தன்னுடைய அர்ப்பணிப்பை நிறுத்தி விட்டார் என்று கூறுவதற்கு எவருக்கும் தகுதி இல்லை. யார் நிறுத்தி விட்டார், யார் நிறுத்தவில்லை என்பதைத் தீர்மானிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட வேலை கிடையாது. இது கர்த்தருக்கே உரிய வேலையாகும், மேலும் சரீரத்தில் யார் இருப்பார்கள் என்பதை அவர்தான் தீர்மானிக்க வேண்டும். Q106:T

**அறுத்துப்போடுகிறார்** – ஓர் "உறிஞ்சி" எனக் கருதப்பட்டு, இணைப்பிலிருந்தும் சிறப்புரிமையிலிருந்தும்

அது துண்டிக்கப்படும். E206 செடியின் ஐக்கியத்திலிருந்து அது துண்டிக்கப்படும். R4494:5, 5208:5, 4663:4, 1698:5 நம்முடைய தற்போதைய அங்கத்துவ நிலையானது இறுதியானது அல்ல, மாறாக தகுதிகாண் நிலையிலேயே (probationary) காணப்படுகின்றது. R1698:5, 1570:3, 1302:1; E230 சரீரத்தின் எந்த அங்கத்தினர் தங்கள் பங்கினைச் செய்ய தவறுகிறார்களோ, அவர்கள் சரீரத்திலிருந்து அறுப்புண்டுபோகும் ஆபத்து உள்ளது. மேலும் அந்த வேலைக்கு அதிகம் தகுதிவாய்ந்த வேறு அங்கத்தினர் நியமிக்கப்படுவார்கள். R732:2 உண்மையான திராட்சச்செடியில் கொடியாக மாறுகிற ஒவ்வொருவரும் சொந்த கிரியைகளினாலோ, சொந்த புண்ணியத்தினாலோ அங்கத்துவமடை வதில்லை. ஆனால், ஒரு கொடியாக மாறிய பிறகு, அவர்கள் கட்டாயம் கனியைக் கொடுக்க வேண்டும். R4494:4 எல்லா விதத்திலும் கொடிகள் என்று அடையாளங்கண்டுகொள்ளப்படுவதிலிருந்து நிறுத்தப்படும் நிலைக்கு ஆளாகுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களது புத்துணர்வைச் சிலகாலம் வரையிலும் தக்க வைத்துக்கொள்ளலாம். எனினும், கொஞ்சம் காலத்திற்குள்ளாக நேர்மைக்கான (fidelity) அனைத்துச் சுவடுகளையும் இழந்து, உலர்ந்துபோய்விடுவர். R2465:2 அனுபவமிக்க கண்களையுடைய தோட்டக்காரர், திராட்சக்குலைகளைக் கொணரும் மொக்குகளுக்கும், இலைகளை மாத்திரம் கொணரும் மொக்குகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் அறிகின்றார். கனிக்குரிய மொக்குகள் இல்லாதவைகள் “உறிஞ்சிகள்” என்று அழைக்கப்படுகின்றன; காரணம் இவைகள் திராட்சச்செடியின் சாற்றை மாத்திரம் உறிஞ்சிக்கொள்கின்றது மற்றும் தோட்டக்காரரால் நாடப்படும் எவ்விதமான கனிகளைக் கொடுப்பதுமில்லை. R3545:2 தொடர்ந்து உண்மையில்லாமல் இருக்கும் சூழ்நிலைகளின்கீழாக, கர்த்தர் நம்மை, அவருடைய வேலையையும், அவருடைய வார்த்தையையும் விட்டு வெளியேற அனுமதிப்பது மட்டுமல்லாமல், உண்மையில் அவ்வாறு செய்யும்படி நம்மைக் கட்டாயமும்படுத்துவார். R2287:1 அடைய வேண்டிய தரநிலையாகிய கிறிஸ்துவின் குணாதிசயமானது படிப்படியாக எட்டப்படுவதால், இந்தக் குணலட்சணத்தை வளர்ப்பதில் நாம் மும்முரமாக / தீவிரமாக இருக்க வேண்டும், இல்லையேல் கூடிய விரைவில் நாம் கர்த்தரிடமிருந்து முற்றிலும் மற்றும் என்றென்றைக்குமாகப் பிரிந்து விடுவோம். R5901:4 இந்த நிபந்தனைபேரிலான வாக்குத்தத்தமானது இறுதிவரை உண்மையோடு இருப்பது, பொறுமையோடு சகிப்பது என்பவைகளைப் பொறுத்ததா யிருக்கிறது. R4911:1 சபையில், அதாவது பெயர்ச் சபையில் மாத்திரமல்லாமல், உண்மையான சபையின் அங்கத்தினரிலும் அநேகர், பலவீனமடைந்து, வியாதிப்பட்டுள்ளனர், மேலும், அநேகர் முற்றிலும் நித்திரைக்குள் போய்விட்டனர், அதாவது ஆவிக்குரிய காரியங்களுக்கு மரித்துப் போய்விட்டனர், அதிலும் மரித்துப்போன கிளைகளென, திராட்சச்செடியிலிருந்தும், ஜெயங்கொள்ளும் சபையிலிருந்தும் வெட்டப்பட்டுப் போய்விட்டனர். R467:5 திரள்கூட்டத்தார், சுயத்தைப் பலிசெலுத்தும் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியதால், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்காமல் “இராஜரீக ஆசாரியத்துவத்தில்” இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்கின்றனர். T69 கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய மணவாட்டியாக இருக்க வேண்டும் என்ற நமது பரம அழைப்பு தொடர்பாக, அவர்கள் தூக்கியெறியப்பட்டவர்களாக மாறுகிறார்கள். R140:2 நிச்சயமாக தோட்டக்காரர் மரித்துப்போன கொடிகளை அறுத்துப்போடுவார், அல்லது மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்பவர்கள் தங்களைத் தாங்களே அறுத்துக்கொள்வார்கள். R140:3 கனிகளைத் தருவதே திராட்சச் செடிக்குள் வந்ததன் முக்கிய நோக்கமாக இருப்பதால், ஆவியின் கனிகளை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பதென்பது உங்களை நீங்களே துண்டித்துக் கொள்வது போலாகும், தேவன் கேட்கும் கனிகளைக் கொண்டுவராமல் நீங்கள் தவறிவிட்டதே அதன் காரணமாகும். OV303:2

**கனிகொடுக்கிற** – புதிய கொடியின் தளிர் முதலில் தோன்றும்போதே அதிலிருந்து பழுத்த திராட்சப்பழங்களைச் சேகரிக்க அவர் எதிர்பார்ப்பதில்லை; அதேபோல, பெரிய திராட்சத்தோட்டக்காரரும் (1 கொரி. 3:9) படிப்படியாக பழம் பழுப்பதற்காகக் காத்திருக்கிறார். R3020:5, 2465:2, 1301:6 இருப்பினும், அன்பின் கனி உருவாகின்றது என்பதற்கான வெளிப்பாடுகள், அவருடன் நாம் இணைந்த

உடனே, கர்த்தரால் எதிர்பார்க்கப்படுகின்றது. R3020:5 கொஞ்சமாக கொடுத்தாலும் பரவாயில்லை (அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்). R67:4*

**கொடி எதுவோ** – கிறிஸ்துவின் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினர். R4663:4 இரண்டு வகுப்பார் காணப்படுகின்றனர்; அதாவது கனிகொடுக்கின்ற கொடிகள் மற்றும் கனிகொடுக்காத கொடிகள். R2465:1 ஆனால் இவர்கள் இருவரின் நிலையும், ஒவ்வொரு விதமான வளர்ச்சி என்று சொல்லப் படலாம்; ஒவ்வொரு கொடியும் மிகச் சிறிய முளைகளாகவே ஆரம்பிக்கின்றன; ஒவ்வொரு கொடியும் இலைகளை வளரச்செய்கின்றன; ஒவ்வொரு கொடியும், முக்கிய நடுதண்டாகிய கிறிஸ்து மற்றும் தெய்வீக நோக்கம் மற்றும் வாக்குத்தத்தங்கள் எனும் ஒரே வேரிலிருந்து உயிர்ச்சாறாகிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒரே மாதிரியான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றது. R2465:2

**அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி** – நாம் சோதனையில் இருக்கிறோம்; நமது நேர்மையை நிரூபிப்பதே அந்தச் சோதனையாகும். சோதனை காலம் அல்லது தகுதிகாண் காலம் திருப்திகரமாக இருந்தால், நம்முடைய அங்கத்துவமும் நிரந்தரமாக்கப்படும். R4911:4

**அதைச் சுத்தம்பண்ணுகிறார்** – சுத்தப்படுத்துவது. R4911:2, 5208:5, 3544:5; F401 சுத்தம் பண்ணுதல் என்பது வாழ்க்கையில் வரும் சோதனைகளையும் சிரமங்களையும் குறிக்கின்றது, ஆனால் இவை கிறிஸ்துவில் உள்ள கொடிகளுக்கு மட்டுமானதாகும். Q303:2; CR109:4 அவருடைய சத்தியத்திற்கும், நம்முடைய நன்மைக்கும் எதிராக உள்ள எல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவித்து, நம்மை மேலும் உண்மையுள்ளவர்களாக ஆக்குகின்றார். R1302:2 அவர் பூமிக்குரிய பிணைப்பு களையும், பூமிக்குரிய விஷயங்களைப் பிடித்துக்கொள்ளுகிற போக்கையும் சுத்தம்பண்ணுகிறார். CR109:4; R4872:3 கொடியின் ஒரு தனித்தன்மை என்னவென்றால், அதனை எந்தளவிற்குச் சுத்தம்பண்ணுகிறோமோ (prune) அந்தளவிற்கு அது நன்கு செழித்து வளரும். R2373:1 உறிஞ்சிகள் தவிர, கனிக்கான மொக்குகளைக் கொண்டிருக்கும் சில கொடிகளானது, நன்கு கனிந்த பழங்களை ஒருபோதும் கொடுப்பதில்லை. ஆகவே ஞானமுள்ள தோட்டக்காரர், அதனை அதிகமான கனிகொடுக்க த்தக்கதாக, கனிக்கான மொக்குகளுக்கு மேலாகக் காணப்படும் முளைகளைக் கிள்ளி எறிந்து விடுகின்றார். R3545:3; NS377:6 சரியான கொடிகளில் கனிக்கான மொக்குகள் காணப்படுவதையும், உறிஞ்சிகளிடத்தில் இந்தக் கனிக்கான மொக்குகள் காணப்படுவதில்லை என்பதையும், திராட்சத் தோட்டத்திற்கான உதவியாளர்கள் ஆரம்பத்திலேயே கண்டுகொள்ளலாம் என்று நமக்குத் தெரிவிக் கின்றனர். R2465:2 கனிதரும் கொடிகள் கூட, தோட்டக்காரரால் தங்கள் ஆதரவிற்காக வழங்கப் பட்டதைத் தவிர அந்நியமானவைகளைப் பிடித்துக் கொள்கின்றன. அதேபோல, அர்ப்பணிக்கப்பட்டவர் களிடையே, தேவனுடைய வார்த்தைக்கு வெளியே ஆதரவைத் (supports) தேடுவதற்கும், இந்த உலகத்தின் விஷயங்களைப் பற்றிப்பிடித்துக் கொள்வதற்குமான போக்கே காணப்படுகின்றது. R1302:1 திராட்சச்செடியின் சிறப்பான/நல்ல கொடிகளுக்கும்கூட வெட்டிவிடுதல் அவசியமாய் இருப்பது போன்று, கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் மிகவும் நேர்மையுள்ளவர்களாகக் காணப்படுகிறவர்களுக்கும்கூடக் கர்த்தருடைய ஒழுங்குப்படுத்துதல் அவசியப்படுகின்றது, இல்லையேல், இவர்களும் விரைவில் செடித்தண்டை வளர்க்கின்றவர்களாகிவிடுவார்கள். R2465:3; NS377:5 ஒவ்வொரு ஆண்டும் ஒரு திராட்சச்செடி பெரிதாக வளர்ந்து, புதிய செடித்தண்டை உருவாக்குவது எவ்வளவு சரியானதோ, அதுபோல ஆண்டவருடைய ஜனங்களும் ஆண்டுதோறும் வளர்ந்து, பரவி, விரிவடைய வேண்டும். NS377:5 ஆனால் முக்கியமான விஷயம் கனிகொடுப்பது. கனியின் சரியான வளர்ச்சியில் தலையிடாத அளவிற்கு மட்டுமே வளர்ச்சி அனுமதிக்கப்படும். NS377:6 நம்முடைய குறிக்கோள்கள் பல்வேறு திசைகளில் முளைவிடுவதை நம்முடைய பரமபிதா காண்கின்றார். மேலும் இந்த முளைகள் நம்மை எவ்விடத்திற்கு நடத்திடும் என்பதை நாம் அறியோம், ஆனால் அவர் அறிவார்; நம்முடைய இந்த முளைகளானது அவருடைய வழிநடத்துதலினால் கிள்ளிவிடப்படுகின்றது. R2465:3 நாம் அதிகளவில்

தாலந்து பெற்றிராத காரியங்களில் ஏறெடுக்கப்படும் நம்முடைய பிரயாசங்கள், திட்டங்கள், ஏற்பாடுகளில் சிலவற்றைக் குலக்கிப்போடுவதிலும், நம்மால் பூரணமான பலனைக்கொண்டுவருவதற்கு ஏதுவானவைகள் மீது நமது பிரயாசங்களைச் செலுத்துவதிலும் ஒரு ஞானம் விளங்குகிறது. R2466:2 பூமிக்குரிய வாழ்வின் பல்வேறு ஈர்ப்புகள் (attractions) அனைத்தையும் பிடித்துக் கொண்டிருக்கிற பல கொடிச்சுருள்கள் வெட்டப்படுகின்றன. R2287:4 ஆகவே, கனிதரும் கொடிகளுக்கு அவர் அளிக்கும் அறுத்துப்போடுதலும், சுத்தம்பண்ணுதலும் நம்மிடமும் செய்யப்படுமானால், நாம் நல்ல தோட்டக் காரருடைய பராமரிப்பில் இருக்கிறோம், நல்ல நிலையில் இருக்கிறோம் என்பதை எண்ணி சந்தோஷப் படுவோமாக. R5023:4; Q404:2 சிலசமயம் பூமிக்குரிய ஆஸ்தி (அ) சொத்தை எடுத்துவிடுவதன் மூலமாக அல்லது சிலசமயம் மனதில் பேணி சீராட்டின திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளைத் தடைப்பண்ணுவதன் மூலமாக, சிலசமயம் துன்பங்களை அல்லது நோய்களை அனுமதிப்பதன் மூலமாக நமது "உறிஞ்சிகளைக்" கிள்ளிவிடுகின்றார்; இப்படியாக, சிலர் பூமிக்குரிய விஷயங்களில் மூழ்கிக் காணப்பட்டப்படியினால், கர்த்தர் அவர்களைக் கொஞ்ச காலம் ஓய்ந்திருக்கப்பண்ணினார். R3545:3 கிளைக் கழித்தலிலும், நேர்மையையும் கீழ்ப்படிதலையும் சோதிப்பதிலும் வலி இருக்கிறது, ஆனால் கீழ்ப்படிதலின் ஒவ்வொரு வெளிப்பாடும் மணவாட்டி வகுப்பாரில் அங்கமடைவதற்கு நம்மைத் தயார் பண்ண உதவுகிறது. R5208:5 பாலஸ்தீனத்தின் திராட்சச்செடி வளர்ப்பாளர்களிடையே, கொடி புதிய முளைகளை முளைக்கச் செய்யும்படிக்கு, வருடந்தோறும் கொடியினை அதன் வேர்கள் வரைக்கும் வெட்டுவது வழக்கமாக இருக்கின்றது. R2373:1 ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும், மெய்யான கொடிகள் மாத்திரம் காணப்படத்தக்கதாக முழுமையான கிள்ளிவிடுதல்கள் காணப்படும் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. R3545:1

## 32. யோவான் 15:7

### "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."

**நீங்கள்** – இது சில நிபந்தனைகளின் கீழாக, குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. யார் வேண்டுமானாலும் கேட்கலாம் என்று இது சொல்லவில்லை. OV400:2 யார் கேட்கலாம் என்பதைக் காட்டுகிறது: என்னில் நிலைத்திருந்து, உங்களுடைய சித்தத்தை கிறிஸ்து இயேசுவின் சித்தத்தில் புதைத்திருக்கிற அல்லது மூழ்கடித்துள்ள விசுவாசிகளாகிய நீங்கள் (கேட்கலாம்.) R1998:6

**என்னில்... நிலைத்திருந்தால்** – கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மாத்திரமே கிறிஸ்துவில் நிலைத்திருக்க முடியும். F679; R4983:3; OV400:2 இதற்கும் மேலாக, அவர் புதிய சிருஷ்டியின் ஓர் அங்கமாக, சரீரத்தின் ஓர் அங்கமாக கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருக்கவும் வேண்டும். F680 நாம் தொடங்கும் போதிருந்ததைப் போலவே தொடர்ந்து முன்னேறுவதன் மூலமாக நாம் அவரில் நிலைத்திருப்போம். புதிய பலியொன்றினைச் செலுத்துவதாக அல்லாமல், மாறாக ஏற்கனவே அர்ப்பணிப்பு செய்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில், ஒவ்வொரு நாள் காலையிலும், கர்த்தரிடம் மீண்டும் நம்மைப் புதியதாக ஒப்புக்கொடுக்கும்படிக்கு நாங்கள் அறிவுறுத்துகிறோம். OV403:7 அவருடைய பராமரிப்பின்கீழாக நாம் தொடர்ந்து இருக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகிறது. F120 நாம் அவரில் நிலைத்திரு ந்தால், இது நாம் அவருடைய சித்தத்தில் நேர்மையாக நிலைத்திருக்கிறோம் என்பதையும், நம்முடைய சொந்த சித்தமல்லாமல் அவருடைய சித்தமே நம்மில் செய்யப்பட வாஞ்சிக்கிறோம் என்பதையும் அர்த்தப்படுத்தும். NS226:1 எப்படி நான் என்னுடைய பிதாவின் அன்பில் நிலைத்திருக்கிறேனோ, எப்படி என்னுடைய சித்தமல்லாமல் என்னை அனுப்பினவருடைய சித்தத்தைச் செய்ய நான் நாடுகிறேனோ அதுபோல, நீங்களும் என்னுடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் முற்றிலுமாகக் கீழ்ப்பட்டிருந்தால். R1999:3 கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்கள், முன்பே விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும்

அர்ப்பணத்தின் மூலமாக அவருக்குள் ஏற்கனவே பிரவேசித்திருப்பவர்களாய் இருப்பார்கள். R3663:2, 5708:2 நம்முடைய கர்த்தராகிய இயேசு தொடர்ந்து தூபம் எரிந்துகொண்டிருக்கும்படிக்குப் பார்த்துக் கொண்டார், அதுபோல, உடன்-ஆசாரியர்கள் தேவனுக்கு விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் எனும் தூபத்தைத் தொடர்ந்து செலுத்திக்கொண்டிருக்கும்பட்சத்தில், தேவசமுகத்தில் அவர்களுடையதும் எப்போதும் கேட்கப்படும். T120 வேண்டுதல்செய்பவர் பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவையும், சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார் என்பதே இதன் அர்த்தமாகும். R4913:2 அவர்கள் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட உறவிற்குள்ளாக பிரவேசித்திருப்பது மாத்திரமல்லாமல், அவர்கள் அங்கேயே தங்கியிருக்கிறார்கள், அங்கேயே வசிக்கிறார்கள்; அவர்கள் நல்ல நிலையில் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராக இருக்கிறார்கள் என்பதையும் அர்த்தப்படுத்துகின்றது. R5311:2, 5708:2 அவரில் நிலைத்திருப்பதென்றால், அவர்களுடைய விசுவாசம் நிலைத்திருக்கும் என்பதும், பாவத்திற்கான மனந்திரும்புதலும் அதற்கான எதிர்ப்பும் நிலைத்திருக்கும் என்பதும், மேலும் கர்த்தருக்கான அவர்களுடைய அர்ப்பணிப்பும் அவருடைய ஊழியமும் நிலைத்திருக்கும் என்பதுமாகும். R4983:3, 3663:2 கிறிஸ்துவின் குணலட்சணமும் வாழ்க்கையும் நிச்சயமாக நம்மில் உருவாகியிருக் கின்றன என்று அர்த்தமாகும். R3251:6 தீமையுடன் உறவு கொண்டிருக்கும் பெரும்பாலானவர்கள், எப்போதாவது மாத்திரமே சில பிரச்சனைகள்நிமித்தமாக கர்த்தரிடமாக தஞ்சமடைய ஓடிவருகிறார்கள், அதிலும் அவருடன் எந்த உடன்படிக்கை செய்துகொள்ளாமலும் அல்லது புத்திரர்களாக அங்கீகாரம் பெறாமலும், அதனை வாஞ்சியாமலும் இப்படியாக ஓடிவருகிறார்கள். R5692:3

**என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்** - என் போதனைகள். T120 நீங்கள் என் போதனையை நினைவில் வைத்து செயல்பட்டால். R5758:2 கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாக, அவர் கொடுக்க பிரியப்படுவதை மாத்திரம் கேட்பதற்குத் தேவையான ஞானம் பின்னடியாருக்கு இருந்தால். இல்லையேல், “தகாததைக்” கேட்பதால், அவரது ஜெபங்கள் பதிலளிக்கப்படாமல் போகலாம். F680; T120; NS225:6 வேண்டுதலானது தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக இருக்க வேண்டும். Q774:3; R5219:6 கர்த்தருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருந்தால், அது அவைகள் மீது நாம் வைத்திருக்கும் அன்பைக் குறிக்கின்றது, அதோடுகூட கர்த்தருடைய வார்த்தைகளையும் அந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சித்தத்தையும் அறிந்துகொள்ளுவதற்கு ஏறெடுக்கப் படும் ஜாக்கிரதையான தியானத்தையும் குறிக்கின்றது. NS226:1 கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக முழு (சுய)சித்தம் விழுங்கப்பட்டதைக் குறிக்கிறது; விண்ணப்பம் செய்பவருடைய சுய சித்தமானது காணாமல் போகும்போது, அந்நபர் நிச்சயமாக கிறிஸ்துவின் வார்த்தைகளுடன் கலந்து ஆலோசித்த பிறகே, கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவிடம் முன்வைப்பதற்கான தனது வேண்டுதலைக் கட்டமைக்க முற்படுவார். R798:2 நாம் தெய்வீகக் கிருபையை நாடுவதோடுகூட, நமது பிதாவாகிய தேவனுடைய சித்தத்தைப் பற்றிய தெய்வீக வெளிப்பாட்டை நாம் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாய் இருக்கின்றது. R2466:3 நாம் வேதாகமத்தைத் தியானிக்க வேண்டும். இது மாத்திரமே தேவன் நமக்கு என்ன சொல்லி வைத்துள்ளார் என்பதை அறிந்து கொள்வதற்கான ஒரே வழியாக இருக்கின்றது. OV404:2; R4984:1 அவர்கள் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கும், அவர் எதையெல்லாம் வாக்களித்துள்ளார், எதையெல்லாம் வாக்களிக்க வில்லை என்பதை அறிந்துகொள்வதற்கும், அவர்கள் எதைக் கேட்கலாம், எதைக் கேட்கக்கூடாது என்பதை அறிந்துகொள்வதற்கும் அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்க வேண்டும். R4983:3, 5311:2, 5480:5, 4913:2, 1999:3 வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கர்த்தருடைய சித்தத்தின்படி வேண்டப்படும் வேண்டுதல்களுக்குப் பதிலளிக்கப்படும், ஆனால் அவருடைய சித்தத்திற்கு முரணாக வேண்டப்படும் வேண்டுதல்கள் பதிலளிக்கப்பட மாட்டாது. R5202:6

**if / இருந்தால்** – நிபந்தனைகள் இரண்டு இருக்கின்றன: ஒன்று, கிறிஸ்துவில் (நாம்) நிலைத்திருப்பது, மற்றொன்று அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருப்பது. R4983:3, 4913:2 ஒரே ஒரு நிபந்தனை

அல்லது வரம்பு யாதெனில், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கவனம் கொடுக்க வேண்டும், இதனால் அவருடைய சித்தம் என்ன என்பதையும், அவருடைய சித்தத்தின்படி அவர்கள் எதைக் கேட்கலாம் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள முடியும். R3546:4 தேவனுடைய புத்திரராக மாறியவர்களுக்கும் கூட, ஜெபம் எனும் சிலாக்கியத்தை இழந்துபோகக்கூடிய ஓர் ஆபத்து இருப்பதைக் குறித்து இயேசு தெரிவிக்கிறார். R5692:3, 1998:6

**நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ** – இரண்டு தகுதிகளையும் (கிறிஸ்துவில் நாம் நிலைத்திருப்பது மற்றும் அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருப்பது) உடையவர்கள் மாத்திரமே, தங்களுடைய வேண்டுதல்கள் தேவனுடைய ஏற்றகாலத்தில் பதிலளிக்கப்படும் என்கிற விசுவாசத்தின் பூரண நிச்சயத்துடன் பரலோக கிருபாசனத்தண்டை சேருவதற்கு எதிர்பார்க்கலாம். F680; R5219:6 சொல்லப் படும் கருத்து என்னவென்றால்: பிதாவிடம் கேட்பது என்பது, திராட்சச்செடியின் உயிர்ச்சாறாகிய பரிசுத்த ஆவியை நாம் அதிகமதிகமாகப் பெற்று, ஆவியின் கனிகளை வளர்த்துக்கொள்ள உதவிடும் ஒரு வழிவகையாக இருக்கின்றது. R2466:3 நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்று முதலில் தோன்றலாம். ஆனால் இது மிகவும் குறிப்பிட்ட வரம்புகளைக் கொண்டுள்ளது. R5311:2 இவ்வாறு அவரில் நிலைத்திருப்பவர்கள் பிரதானமாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையே கேட்பார்கள். OV404:3 நமது சித்தங்கள் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும். R2163:6* தேவன் தாம் கொடுப்பதற்கு மிகவும் பிரியப்படுவதாக என ஏற்கனவே அறிவித்துள்ளவைகளை மாத்திரமே கேட்க வேண்டும் என்பதே ஜெபத்தின் எல்லையாக இருக்கின்றது. R4983:2, 798:1 இவ்வாறு தெய்வீக வாக்குத்தத்தங்களைக் குறித்து நன்கு அறிந்து, தெய்வீகச் சித்தத்திற்கு முழுவதுமாக அடிபணிந்துள்ள ஒருவர், தேவன் கொடுப்பதற்குப் பிரியப்படுபவைகளையே தானும் வேண்டிடுவார். R3663:2 தேவனுடைய வார்த்தையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள எதை வேண்டுமானாலும் நாம் கேட்கலாம்; ஏனெனில், அவருடைய வார்த்தை நம்மில் பூரணமாக வாசம்செய்யும்போது, அது அங்கீகரிக்காத எதையும் நாம் கேட்கத் துணியமாட்டோம். R5708:2, 5758:2; CR421:4 நாம் பல விஷயங்களுக்காக ஜெபம் பண்ணலாம் – அவைகளுக்கான பதில் தெய்வீகத் திட்டங்களில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாதவாறே காணப்படும். வாழ்க்கையின் சிறிய சம்பவங்கள் உட்பட அனைத்துமே முன்குறிக்கப் பட்டவை (foreordained) மற்றும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டவை (predestinated) என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. R4913:4 பிதா தம்முடைய திட்டங்களை உங்களுக்காக மாற்றி, உங்களது சித்தத்தைச் செய்வார் என்பதாக தெரிவிக்கப்படவில்லை, மாறாக உங்களால் ஒருக்காலும் அதிருப்தி அடைய முடியாது எனும் அளவிற்கு உங்களால் பிதாவுடன் முழு இசைவிற்குள்ளாக வர முடியும் என்பதாக தெரிவிக்கப்படுகிறது. R1999:3 "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது" என்று நாம் ஜெபிக்கும்போது, எப்போதுமே நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும்; அதிலும் அத்தகைய ஜெபங்கள் இரத்தினச் சுருக்கமாக (very modest) காணப்படும். (லூக். 22:42) R4983:4, 1999:4, 798:2; NS226:2 பிச்சை கேட்கும் வகையில் அல்லாமல், நமது சித்தத்தின்படி கர்த்தருக்கே அறிவுறுத்தும் வகையிலும் அல்லாமல்; மாறாக நம்முடைய பிதாவுடன் இருதயத்தில் ஐக்கியங்கொள்ளும் வகையில் அது இருக்கும், இதன் மூலமாக தெய்வீக அனுதாபத்தை உணர்ந்தவர்களாக, நமது பாரமும் குழப்பமும் அடைந்துள்ள இருதயங்களை நாம் இளைப்பாறச் செய்யலாம். R799:2, 4984:1, 4983:2 சிறப்பான முடிவைக் கொண்டுவரும் வகையில் காரியங்கள் எவ்வாறு ஒழுங்குசெய்யப்படலாம் என்று நாம் தேவனுக்குப் போதித்துக்கொண்டிருப்பது ஜெபம் என்றாகாது, மாறாக ஜெபம் என்பது அவருடைய வார்த்தையின் மூலமாக அவருடைய பதிலையும் ஆலோசனையையும் கேட்பதற்கு நாம் ஆயத்தமாவதற்கானதாகும். R4983:1, 797:6 தேவ பிள்ளையின் இருதயத்தையும் சிந்தையையும், தேவனுடைய இருதயத்துடன் நெருங்கிய தொடர்புக்குள் வைப்பதே ஜெபத்தின் நோக்கமாகும். R4983:1, 797:6 நம்முடைய அன்புக்கும் விசுவாசத்திற்கும் மிகவும் பாத்திரமானவரும், நாம் மிகவும் அன்புகூர்ந்து போற்றித் துதிக்கிறவருமானவருடைய சித்தத்திற்கு முழு இசைவாக இல்லாத எதையுமே, முழுமையாக அர்ப்பணித்துள்ளவன்

விரும்பமாட்டான். R5480:5 நாம் ஐசுவரியத்தையாவது, கனத்தையாவது, உயர்தர உணவையாவது, உயர்தர ஆடையையாவது கேட்கக்கூடாது. இவைகளுக்காக ஜெபிப்பது எஜமானருடைய ஆவிக்கு முரணானதாக இருக்கும். ஆனால், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று நாம் கேட்கலாம். (மத். 6:11) R798:3 சீஷரில் மிகவும் சிறியவனுக்கு, ஒரு மரத்தையோ மலையையோ அகற்றுவது தெய்வீகச் சித்தத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்றும், 'தள்ளுண்டு போ' எனக் கட்டளை கொடுப்பதே அவனுடைய கடமை என்றும் தேவையான சான்றாதாரத்தோடுகூட, அவனுக்கு உறுதியளிக்கப்பட்டிருக்குமேயானால், அதற்கு இணையாக அவனும் அதினுடைய முடிவுகளின்பேரில் பலமான விசுவாசத்தோடு காணப்பட வேண்டும். R1967:3

## 33. யோவான் 15:9

**"பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்"**

**நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்** – பிதாவானவர் தம்மீது வைத்திருக்கும் அதே வகையான அன்பைத்தான் நம்முடைய எஜமானரும் நம்மீது வைத்திருக்கிறார். R3546:5, 2466:4

**நிலைத்திருங்கள்** – தொடர்ந்து நிலைத்திருங்கள், கூடுமானால், உங்கள் அர்ப்பணிப்பை இன்னும் அதிகரிக்கச்செய்திடுங்கள், இப்படியாக "கிருபையிலும் அறிவிலும்" வளருவதன் மூலமாக, அவருடனான நட்பின் புத்தம் புதிய அத்தாட்சிகளை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். R231:4 இந்த வார்த்தைகள், கர்த்தருடைய அன்பை நாம் இழந்துவிடுவதற்கும், அதிலிருந்து தள்ளப்பட்டுப் போவதற்கும் நமக்கு வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவிக்கின்றன. R2466:5 கனிகளை உண்டு பண்ணும் உயிர்ச்சாறானது, திராட்சச்செடி மற்றும் வாக்குத்தத்தமாகிய அதன் வேருடன் தொடர்ந்து உறவு கொண்டிருப்பதன் மூலமாகக் கிடைக்கப்பெறும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை உறவிலிருந்து பிரிந்து போவோமானால், அனைத்து நம்பிக்கைகளும் உலர்ந்து போய்விடும். R2465:4 தங்களது அறிக்கையின் நேர்மையை நிரூபிப்பவர்கள் மாத்திரமே, ஆலயத்தின் வாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடி அடையாளப்படுத்தும் மகிமையடையும் சபையின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். R2466:4

## 34. யோவான் 15:16

**"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்."**

**நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்** – தெய்வீக அழைப்பு மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப் படுவதன் மூலமாக உலகத்திலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டவர்கள். R5760:5; F132 நம்மில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை மகிமைப்படும் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார். R5862:6 அந்தச் சிலர், அவர் அழைக்க வேண்டும் என்று சித்தங்கொண்டிருந்ததால் மாத்திரம் தெரிந்துகொள்ளப்படவில்லை, மாறாக அவர் அவர்களை ஒரு நோக்கத்திற்காக அழைத்திருக்கின்றார் என்பதாலேயே தெரிந்துகொள்ளப்பட்டுள்ளனர். அவர் ஒரு நோக்கத்தை, ஒரு பயன்பாட்டைக் கொண்டுள்ளார். பலரின் நன்மைக்காக அந்தச் சிலர் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். R25:1*

**என் நாமத்தினாலே** – இது அவரது அதிகாரத்தால் மாத்திரம் என்பதைக்காட்டிலும் அதிகமான ஒன்றை

அர்த்தப்படுத்துகின்றது. வேண்டிக்கொள்பவன் தனது உண்மையான தகுதியில்லாததன்மையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும், எனவே அவன் தன்னுடைய மீட்பராகிய கிறிஸ்துவின் நாமத்தின்பேரிலும் புண்ணியத்தின்பேரிலும் தன்னை முன்வைக்கிறான் என்பதையும் இது அர்த்தப்படுத்துகின்றது. R1410:5 இது யூதரையும், முகமதியரையும், புறமதத்தவரையும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவும், மீட்பர் என்ற விசுவாசமும் இல்லாத அனைவரையும் விலக்கி வைக்கிறது. R2252:3

**நீங்கள்... பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ** – நாம் எந்தளவிற்குக் கனிகொடுக்கிறோமோ, அந்தளவிற்கு நாம் ஜெபத்தில் வெற்றியடைவோம்; மேலும் அந்தளவிற்கு ஜெபத்தின் வாயிலாக சகோதர சகோதரிகளுக்கு ஆசீர்வாதத்தையும் ஞானத்தையும் இரக்கத்தையும் பெற்றுத்தருவதன் மூலமாக, அவர்களுக்கு நம்மால் இன்னுமதிகமாக ஊழியஞ்செய்யவும் முடியும். R5901:5*

**கனிகொடுக்கும்படிக்கும்** – ஆவியின் கனிகள் வெளியரங்கமாயிருக்கின்றன: சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு. (கலா. 5:22 – 23; 2 பேது. 1:5 – 11) R5760:5; CR444:1 அப்போஸ்தலன் "நிலைத்திருப்பவை" என அறிவித்துள்ளவைகளாகிய விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு என்பவை அற்புதமான வகையில் நமக்குக் கொடுக்கப்படும் ஈவுகள்/வரங்கள் கிடையாது, மாறாக அவை வளர்ச்சிகளாக இருக்கின்றன, மற்ற இடங்களில் இதனை அவர் "கனிகள்" என்று சொல்லியிருக்கிறார். E207 பரிசுத்தத்தில் வளருவது. R5901:5*

**நான் உங்களை ஏற்படுத்தினேன்** – உங்களை நியமித்தேன். (ரிவைஸ்டு மொழியாக்கம்) R5002:2 அப்.14:23ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையிலிருந்து வேறுபட்ட கிரேக்க வார்த்தை; இங்கே வரும் டித்தெமி / tithemi எனும் வார்த்தையானது 1 தீமோ. 2:7ல், "நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும்... நியமிக்கப்பட்டிருக்கிறேன்" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. F276 இது சபையார் அனைவருக்கும் பொருந்தாது, மாறாக பிரதானமாக அப்போஸ்தலருக்கே பொருந்தும். R2658:1 கர்த்தரே அப்போஸ்தலரை நியமித்து, அவர்களின் வேலையை அங்கீகரித்தவர். F204 கிறிஸ்துவின் திருச்சபையாகிய அபிஷேகம் செய்யப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக அபிஷேகஞ்செய்யப்பட்டுள்ளனர். (ஏசா. 61:1 – 3) R2157:1*

## 35. யோவான் 16:13

**"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."**

**சத்தியஆவி** – அதாவது, "தெளிந்த புத்தியின் ஆவி." NS563:5 தேவன் என்பவர் ஓர் ஆவி என்பதாக நாம் காண்கிறோம், அதாவது தேவனே ஆவியாய் இருக்கிறார் என்பதாக இல்லை; அதேசமயம் பரிசுத்த ஆவியை நாம் ஒரு தனி நபராக, பிதாவிடமிருந்தும், குமாரனிடமிருந்தும் பிரிந்து காணப்படுகிற ஒரு நபராகவும் பேசுவதில்லை (மாறாக அது பிதா மற்றும் குமாரனிடமிருந்து வெளிப்படும் வல்லமை அல்லது செல்வாக்காக இருக்கிறது). R4165:5

**வரும்போது** – பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானது திருச்சபையின் மீது வந்தது – இது அவர்கள் அனைவரையும் தேவனுடைய மறைபொருளையும் ஆழமானவைகளையும் மதிப்போடு கேட்பதற்கும், சிலருக்கு அவ்விஷயங்களைப் போதிப்பதற்கும் உதவியது. R1722:2

**சகல சத்தியத்திற்குள்ளும்** – தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட திட்டத்தை முழுமையாகவும், இசைவான வகையிலும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே சத்தியத்தைத் தேடுபவர்களாகிய நமது நோக்கமாக இருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாக இதனை எதிர்பார்ப்பதற்கு நம்மிடம்

நியாயமான காரணம் இருக்கின்றது. A11 அதாவது, ஏற்றகாலத்திய சகல சத்தியத்திற்குள்ளும். R309:2*, 1416:1 கிறிஸ்தவரில் முந்தைய எந்தத் தலைமுறையினரைக் காட்டிலும் இன்றைய தலைமுறையினர், தீர்க்கதரிசனம் மற்றும் தேவனுடைய திட்டத்தைக் குறித்து அதிகம் அறிந்திருக்கிறார்கள். R67:2* அப்போஸ்தலருக்கான ஆவியின் ஏவுதல் மூன்று மடங்காக / பகுதிகளாக (threefold) இருந்தது: ஒன்று, தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்படுதல்; இரண்டு, கர்த்தர் கற்றுக் கொடுத்த தனிப்பட்ட போதனைகளை நினைவுகூர்ந்து, அதனை சொல்வதற்கு நினைவாற்றல் புதுப்பிக்கப்படுதல்; மற்றும் மூன்று, வரப்போகிற காரியங்கள் குறித்த விசேஷித்த வெளிப்பாடுகள் கிடைக்கப்பெறுதல். F218; R1525:3 சத்தியத்தைத் தேடுபவர்களாகிய நமது நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதையும், நாம் எதைத் தேட வேண்டும் என்பதையும், தேவனுடைய எந்த வாக்குத்தத் தங்களையெல்லாம் கண்டடையலாம் என்பதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். R1868:4 நீங்கள் தேவபிள்ளையாக இருக்கும்பட்சத்தில், அவருடைய வார்த்தையைக் குறித்து அறியாதவராக இருக்க மாட்டீர்கள் என்றும், மேலும் தற்கால சத்தியத்தைக் குறித்து மாத்திரம் வெளிச்சத்தில் காணப்படாமல், "வரப்போகிற காரியங்களைக்" குறித்தும் சற்றேனும் தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்றும் ஆவியானது சாட்சி பகர்கின்றது. R374:5, 231:5 பிதாவானவருடைய நோக்கங்களைப் புரிந்து கொள்வதற்காகவும், தேவனுடன் எப்போதும் உடன் வேலையாட்களாக இருப்பதற்காகவும், பிதாவின் ஆவியினாலும் வார்த்தையினாலும் வழிநடத்தப்படுவது என்பது தேவ "புத்திரராக" இருக்கும் அனைவரின் சிலாக்கியமாக இருக்கின்றது. R1948:1 அவர் திருச்சபையின் ஒரு பகுதியை சத்தியத்திலும், ஒரு பகுதியை தவறான உபதேசத்திலும் வழிநடத்துவாரா? இல்லை! R309:2* காலங்களையும், வேளைகளையும், சரியாக சாட்சியளிப்பது தொடர்பான சகல காரியங்களையும் அறிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் வாக்களிக்கப்பட்டுள்ள வல்லமையானது, ஆதி முதல் அந்தம் வரைக்குமான முழு திருச்சபைக்குமே பொருந்துகின்றது. B120 ஆவிக்குரிய இஸ்ரயேலரை அழைக்கும் பணியானது அப்போஸ்தலருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட பணியாகும், அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் பணியை, பரிசுத்த ஆவியின் ஊழியத்தின் கீழாக, எதிர்காலத்திற்கென்று விட்டுச் சென்றார்கள். R2924:4 யாவே / யேகோவா தேவனுடைய திட்டத்தின் "இரகசியங்களைப்" புரிந்துகொள்ளுவதற்கு. R1177:3 தேவனுடைய ஒரு சில இரகசியங்கள் ஒரே நேரத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டியிருந்தது, வேறு சில, யுகம் முழுவதும் படிப்படியாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது, ஆனால் நமக்கான மாபெரும் வெளிப்பாடானது யுகத்தின் இறுதி வரைக்கும் வைக்கப்பட வேண்டியிருந்தது. (வெளி. 10:7) R2208:2, 368:3 தேவனுடைய வார்த்தை ஒரு மாபெரும் பொக்கிஷசாலையாக இருக்கின்றது, அதிலே அவர் எல்லாக் காலத்திற்கும் தேவையான சகல அறிவையுமே, கடந்த காலத்தில் மறைத்து வைத்திருந்தார். இது ஒரு பெரிய களஞ்சியமாகும், அதில் இருந்து அவருடைய ஊழியர் புதியவைகளையும் பழையவைகளையும் வெளிக்கொணர முடியும். R318:2 இராஜ்யத்தின் மகிமையின் விளிம்பில் நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைத் தெளிவாகக் கூறிடும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தைக் குறித்து மாத்திரமல்லாமல், கடந்த காலத்தின் ஒட்டுமொத்த காரியமும் நமக்கு வெளியரங்கமாக காணப்படுகிறது. R67:2* நமது உண்மையான அன்பு கீழ்ப்படிதலில் வெளிப்படும். அறியாமையினிமித்தமாக கீழ்ப்படியாமல் போனால் என்னவாகும் என்று ஒருவர் கேட்பாரேயானால், பதில், கர்த்தர் நமது அறியாமைக்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என்பதாகும். R5082:5, 2466:6 பொதுவாக, பூமிக்குரிய சபைகளில் ஒன்றில் உறுப்பினராவதற்கு அவர்களின் விசுவாச அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளதை அப்படியே நம்ப வேண்டும் என்றிருக்கிறது. இது சத்திய ஆவி சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவதற்கான எந்த வாய்ப்பையும் அளிப்பதில்லை. R1067:3 ஆதிகாலங்களில் போப்புகளும், அவருடைய கூட்டத்தாரும் கோட்பாடுகளை ஏற்படுத்தி வைத்தனர், ஆனால் லூதருடைய நாள்களில் வேதாகமத்தை மாத்திரமே சார்ந்த கோட்பாடுகளுக்கு இடமளிக்கப்பட்டு, மதமறுமலர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது அல்லது மத போதனைகள் வேதாகமம் சார்ந்த போதனைகளாக முன்னேற்றமடையத் துவங்கின, இதினிமித்தமாக ஏற்பட்ட அதிர்வானது உரோம சபையை அந்நாட்களில் பெரும் அதிர்வுக்குள்ளாக்கியது. R780:5

**உங்களை நடத்துவார்** – படிப்படியாக. R1951:3 முதலில் அப்போஸ்தலரையும், பின்னர் அவர்கள் மூலமாக முழு திருச்சபையையும் (நடத்தி வருகிறார்). R1524:6; F218 ஆவியானது சத்தியத்தைத் தெரிவிப்பதற்கு பெரும்பாலும் மனித பிரதிநிதிகளைப் பயன்படுத்துகிறது. R231:5 அவர் அதை நீண்ட காலமாக ஆயத்தமாக்கப்பட்ட வாய்க்கால்கள் வழியாக அனுப்பியிருக்கிறார்: நம்முடைய கர்த்தர் மற்றும் அவருடைய ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலருடைய ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் மூலமாக நமக்குத் திறக்கப்பட்ட கடந்த காலத்தின் தீர்க்கதரிசன மற்றும் நிழலான போதனைகள் மூலமாக (சத்தியத்தை) அனுப்பியிருக்கிறார். E267 தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலரும் எழுதுவதற்கு ஆவியின் ஏவுதலைப் பெற்றிருந்தனர், திருச்சபை அதைப் புரிந்துகொள்வதற்கேதுவாக அதே ஆவி உதவவும் செய்கின்றது. R66:6* அப்போஸ்தலருக்கு மாத்திரம் இது உண்மையாக இருப்பதில்லை: தங்களுடைய சரீரத்தை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருவருமே, மாபெரும் மத்தியஸ்தரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர், பின்னர் பலிசெலுத்துபவர் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதிய சிருஷ்டியாக ஜெநிப்பிக்கப்படுகின்றார். R5088:3 இதனை அவர் அப்போஸ்தலர் மூலமாகவும், முழு சுவிசேஷ யுகத்து விசுவாசிகளாலும் செய்துள்ளார். R4827:1, 368:3 அவருடைய ஞானத்திலும், அன்பிலும், மேலும் அவருடைய தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களின்படி அனைத்தையும் செயல்பட வைக்கின்ற அவருடைய வல்லமையிலும் முழு நம்பிக்கை வைத்திருப்பவர்கள். B262; R969:2 நாம் நம்மை அர்ப்பணிக்கும்போது, அந்தப் படிநிலைக்குத் தேவையான அறிவை நாம் பெற்றிருப்போம். நாம் தொடர்ந்து முன்னேறும்போது, சத்தியத்தின் அறிவுக்குள்ளாக நாம் வழிநடத்தப்படுகிறோம். இப்படியாக பார்க்கையில், பரிசுத்த ஆவியே இயேசுவையும் வழிநடத்தியிருந்தது. R5156:3 இவ்வாறாக சபையின் முழு பாதையுமே அதிகமதிகமாக பிரகாசிக்கும் வெளிச்சத்தின் பாதையாக இருந்து வருகிறது. R5055:4 தேவனுடைய வார்த்தையின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிச்சத்தைக் கொண்டவர்கள் மட்டும் அந்தகாரத்தில் காணப்பட மாட்டார்கள், அவர்கள் “வரப்போகிற காரியங்களைக்” குறித்து புரிந்துகொள்வதற்கேதுவாக வழிநடத்தப்படுவார்கள், இவைகளை உலகத்தின் கண்ணோட்டத்தி லிருந்து பகுத்தறிய இயலாது. R820:5 ஒவ்வொரு அம்சத்திற்குரிய ஏற்றகாலம் வரும்போது; உலகம் அறிந்துகொள்வதற்கு முன்பாக, உண்மைக்கூற்றுகளுக்கு / facts முன்பாகவே (வருங்காரியங்களை உணர்த்துவார்). R2973:6 என்னதான் தீர்க்கதரிசிகளின் எழுத்துகள் கர்த்தருடைய வார்த்தையாகப் புனிதமாகக் கருதப்பட்டு, மாம்சீக இஸ்ரயேலரால் பயபக்தியுடன் வாசிக்கப்பட்டிருந்தாலும், பரிசுத்த ஆவி அருளப்படும் வரைக்குமே, அந்த எழுத்துகள் அதின் மெய்யான அர்த்தத்தைக்காட்டிலும் மிகக் குறைவாகவே புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. R3052:3 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் யூதர்கள் சம்பந்தப்பட்ட பல காரியங்களை எடுத்துக்காட்டுவதினிமித்தம் மதிப்புமிக்கவையாக இருக்கின்றன, ஆனால் அவை நிழல்களாக மாத்திரமே உள்ளன, அப்போஸ்தலர் மூலம் ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டவைகளைக்கொண்டு அவற்றைப் பகுத்தறியும்போது மாத்திரமே, அவற்றில் கொஞ்சம் ஆவிக்குரிய போஜனம் இருப்பதாக தெரிகின்றது. R442:5 பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு எழுதப்பட்ட வேதவாக்கியங்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டின் காரியங்களை விளக்கிச் சொல்வதாக இருந்தன, அவற்றின் அடையாளங்களை ஒளிரச் செய்வதற்கேதுவாக, புதிய அம்சங்களை இவை சேர்த்து, அவற்றை விளக்கலாயின. இவ்வாறு புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினைத் திறக்க உதவும் திறவுகோலாக இருக்கிறது. R715:6* இரண்டாம் மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடிய பாவத்தை, சுவிசேஷ யுகத்திற்கு முன்பே செய்திருக்க முடியாது, ஏனென்றால் பரிசுத்த ஆவியானது திருச்சபையை சத்தியத்திற்குள்ளாக வழிநடத்துகிற ஓர் ஆசிரியராக, பெந்தெகொஸ்தே நாள் வரைக்குமே அருளப்படவில்லை. R261:1, 137:5*

**தம்முடைய சுயமாய்ப் பேசாமல்** – கிரேக்க வார்த்தை, ஹீயாடூ / heautou. அதே வார்த்தை அடிக்கடி சரியாக “தன்னை / itself ” என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. நம்முடைய பொது மொழிப்பெயர்ப்பில் இது ஆண்பாலிலும், பெண்பாலிலும், பொதுவாகவும் மற்றும் நடுநிலை பாலினங்களிலும்

வழங்கப்பட்டுள்ளது. E170 தம்மிடம் “இருந்து.” (Diaglott, Revised Version, Rotherham, and Young போன்ற மொழியாக்கங்களைப் பார்க்கவும்) R614:2 “தம்மிடமிருந்து / தாமாக” பேசுவது என்பது வேதவசனங்களைச் சாராமல் பேசுவதும், அவற்றிற்கு இரண்டாம் நிலை முக்கியத்துவத்தை மாத்திரம் வழங்குவதுமாகும். R614:2 அதாவது, சத்திய ஆவியானது என்னுடைய போதனையைச் சாராமலும், அதற்கு இசைவில்லாத வகையிலும் போதிக்க மாட்டார். E265; R372:2, 1524:6 எனது போதனைக்கு எதிரான ஒரு புதிய போதனையை நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம், மாறாக எனது போதனைக்கு ஒத்தவாறு முழு வளர்ச்சியையும் புத்திமதியையுமே நீங்கள் எதிர்பார்க்கலாம். E266 இது ஒரு வாய்க்காலாக மாத்திரம் இருக்குமே ஒழிய, ஓர் அதிகாரமாக இருக்காது. R4166:4; E266 தேவனுடைய ஆவி அவருடைய வார்த்தையின் மூலமே அல்லாமல் வேறெந்த ஊடகத்தின் மூலமாகவும் அவருடைய பிள்ளைகளை வழிநடத்திடும் என்று வேதவாக்கியத்தில் நமக்கு எந்தக் குறிப்பும் கொடுக்கப்படவில்லை. R614:2

**தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும்** - அதாவது, நான் போதித்த அல்லது கேள்விப்பட்ட விஷயங்களையே அது இன்னும் விரிவாகவும் முழுமையாகவும் போதிக்கும். R372:2; E266 அதாவது, அது உங்களுக்கு என்னுடைய தூதனாக இருக்கும். R1524:6

**வரப்போகிற காரியங்களை** - உலகம் பார்க்க முடிகின்றதைக்காட்டிலும் எதிர்காலத்தைக் குறித்து இன்னுமதிகமாய்ப் பார்ப்பதற்கான தயவு. வேதவாக்கியமானது படிப்படியாக எவ்வாறு நிறைவேற்றப் படுகிறது என்பதைப் பார்ப்பதற்கு ஆறுதலாகவும், விசுவாசத்தைப் பலப்படுத்துவதாகவும் இருக்கின்றது. R362:1, 820:5 எதிர்கால விஷயங்களை நீங்கள் புரிந்துகொள்வதற்கான ஏற்றசமயம் வரும்போது, என்னுடைய பிதாவின் இந்த ஆவியானது, நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய பொருத்தமான அனைத்தையும் குறித்து முழுமையான புரிதலுக்குள்ளாக உங்களைப் படிப்படியாக வழிநடத்திடும். E266 அற்புதமான பகுத்தறியும் தொலைநோக்கு பார்வையில் பார்க்கும்போது, வரவிருக்கும் ஆயிரமாண்டு யுகத்தில் அனைவரின் ஆசீர்வாதத்திற்கான அவரது ஞானமான கொள்கையை நாம் காண்கிறோம். B16 தேவனுடைய ஆவியால் வழிநடத்தப்படுவது குமாரத்துவத்தின் ஓர் அடையாளக் குறியாக, முத்திரையாக அல்லது சான்றாக இருக்கின்றது. B169; E239; R310:5, 231:5 ஏதோ வெறுமனே ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல், சீஷராகிய நாம் தெய்வீகச் சிந்தையுடன் இன்னும் முழுமையாக ஒத்திசைவாக வேண்டும் எனும் காரணத்திற்காகவே, வரப்போகும் காரியங்களும், கடந்த கால மற்றும் நிகழ்கால விஷயங்களும் திருச்சபைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. R1354:1 முதலில், நாம் பயத்தினால் திணறிவிடக்கூடாது என்பதற்காக; இரண்டாவது, நாம் தேவனோடு சேர்ந்து வேலை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக; மற்றும், மூன்றாவதாக, புதிய உறவுகள் மற்றும் அதற்குரிய கடமைகள் மற்றும் சிலாக்கியங்கள் என்பவைகளுக்குள்ளாக பிரவேசிப்பதற்கு முழுமையாக ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதற்காக. R1354:2 தற்காலத்திய சோதனைகளையும் உபத்திரவங்களையும் தாண்டி அப்பால் பார்க்கும்போது, தற்போதைய துன்ப காலத்தைத் தொடர்ந்துவரும் மகிமைகளை நாம் காண்கிறோம். OV177:5 சகல ஞானத்திலும் மிகப் பெரியதும், தெய்வீக வெளிப்பாடுமாகிய வேதாகமத்திற்கு மாணவர்களாய் இருப்பவர்கள், அதில் வாக்களிக்கப்பட்டிருக்கும் “வரப்போகிற காரியங்களை” தேடுவதற்காக, அதின் மூலமாகவே வழிநடத்தப்படுகிறார்கள்; மேலும், வாக்களித்துள்ளபடி, அவர்கள் அவற்றைக் கண்டுபிடித்து, சரித்திரமாக மாறப்போகிறவைகளை எதிர்பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். R2369:1 சத்தியத்தைத் தேடுகிற இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே, வரப்போகிற விஷயங்களைப் பற்றிய அறிவையும், கடந்த கால மற்றும் நிகழ்கால விஷயங்களுக்கும், இன்னும் எதிர்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கும் காரியங்களுக்கும் உள்ள உறவைப் பற்றிய அறிவையும் அருளப்பட்டவர்கள் மாத்திரமே தெய்வீகச் சத்தியத்தின் அழகையும், ஒட்டு மொத்தமாக அதற்கிருக்கும் இசைவையும் பார்க்கிறார்கள். R1354:1 எவ்வளவுதான் பரி. பவுல் தான் ஒன்றுமில்லை என்றிருக்க விரும்பினாலும்,

கர்த்தரானவர் மற்றெல்லாரைக்காட்டிலும் தனக்கு வரப்போகிற காரியங்களைக் குறித்து அதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் குறித்து குறிப்பிடுவதற்கு, சத்தியத்தின்பேரிலான அவரது கடமை அவரை உந்தச்செய்தது. R5941:6, 1525:3; OV6:1 எதிர்காலம் மற்றும் கடந்த காலம் என இரண்டையும் காட்டுகிறது. R5156:6 நாம் நம்புகிறபடி, கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கத்தினராகிய "அவருடைய பாதங்கள்" (ஏசா. 52:7) இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறார்களேயானால், பாதங்களைக் குறித்து தெளிவாகக் குறிப்பிடும் வசனப்பகுதிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டிய நேரம் இதுவே ஆகும். R303:6

**உங்களுக்கு அறிவிப்பார்** – அப்போஸ்தலரால் பரிசுத்த ஆவியின் மூலமாக வெளிப்படுத்தப் பட்டவைகள். R3486:6

## 36. யோவான் 16:22

**"அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்."**

**நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்** – நான் உங்களுக்கு என்னை வெளிப்படுத்துவேன். HG374:2

**உங்கள் சந்தோஷத்தை** – ஆகவே, அவருடைய சீஷரைப் போலவே நாமும், நம்முடைய கர்த்தர் நம்முடைய மீட்பராக மரித்ததற்காக மாத்திரமல்லாமல், அவர் மரித்தோரிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்ததற்காகவும், அவர் யுகத்தின் முடிவில் தம்மை வெளிப்படுத்தி, யுகம் முழுவதும் ஆவிக்குரிய வகையில் கூட இருப்பதற்காகவும் சந்தோஷப்படுகிறோம். HG374:2 அவர் விட்டுச்சென்ற போது, கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்; அவ்வாறே, அவர் மீண்டும் வருகிறபோது, அவர்களுடைய சந்தோஷம் நிறைவாய் இருக்கும். B154 பரிசுத்தவான்கள் "மகிமையோடு களிகூருவார்கள்" (சங். 149:5) என்பதை அறிவதில் எந்த ஆச்சரியமுமில்லை, ஆனாலும் நாம் தவித்துக்கொண்டிருக்கிற இந்த அபூரண நிலைமையே நம்மில் சந்தோஷம் குடிகொண்டிருக்கும் ஒரு நிலைமையாகவும் இருக்க முடியும் என்பது சிலருக்கு விசித்திரமாகத் தோன்றலாம். R2231:6 இந்தச் சந்தோஷம், வரவிருக்கும் ஆசீர்வாதங்களின் முன்சுவையாகவும் நம்முடைய சுதந்தரத்தினுடைய அச்சாரமாகவும் இருக்கின்றது, மேலும் இது, தாம் துவங்கிய பணியைச் செய்து முடிப்பதற்கு அவர் வல்லவராயும் சித்தமுள்ளவராயும் இருக்கின்றாரென நாம் அவர் பேரில் கொண்டுள்ள நம்பிக்கையால் ஏவப்பட்டதாகும்/தூண்டப்பட்டதாகும். R2232:1

## 37. யோவான் 16:24

**"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்."**

**கேளுங்கள்** – என்னுடைய நாமத்தில் கேளுங்கள். R2205:5 பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்பதாக அல்லாமல், மாறாக சத்திய ஆவியையும், தெளிந்த புத்தியையும், பரத்திலிருந்து வருகிற ஞானத்தையுமே நாம் கேட்க வேண்டும். R5202:4 ஜெபத்தில் தொடர்ந்து கேட்பது மற்றும் உறுதியாக இருப்பது என்பதைப் பொறுத்தவரையில், நமது இயற்கையான விருப்பங்கள் எதுவாக இருந்தாலும்சரி, நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்தே நமக்கான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். R5836:1, 2005:5

**உங்கள் சந்தோஷம்** – "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தம்... உண்டு." (சங். 16:11) ஜெபமானது

ஆத்துமாவைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து நிறுத்துவதால் தான், அது தெய்வீக ஆசீர்வாதத்திற்கும், மேலான சந்தோஷத்திற்குமான வழியை ஆயத்தம்செய்கிறது. F679 தேவன் பாராட்டின சகல நன்மைகளுக்காக போற்றித்துதிக்கும் ஆவியையும், நன்றிநவிலுதலையும், அன்பார்ந்த பாராட்டையும் வளர்த்திக்கொள்வதே, கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சியான வாழ்க்கையின் இரகசியமாக இருக்கின்றது. R2031:5

**நிறைவாயிருக்கும்படி** – நமது கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தை எதிர்நோக்கி யிருக்கிறவர்களுக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் இருக்கின்றது. R5202:3

## 38. யோவான் 16:27

**“நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.”**

**நீங்கள் என்னைச் சிநேகித்து** – கிரேக்க வார்த்தை, பிலையோ / phileo, கடமை அன்பு; அன்றைக்கு ஒட்டுமொத்த சீஷராலும் அன்பின் இந்த உயரிய வடிவத்தை மாத்திரமே மதித்துணர முடிந்தது, ஏனெனில் அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியையும், அதன் அகாபே, அதாவது, மிக உயரிய தன்னலமற்ற அன்பையும், அதன் குணலட்சணத்தையும் பெற்றுக்கொள்ளாமல் இருந்தார்கள். R2807:3

**பிதா தாமே** – எனவே புதிய சிருஷ்டிகளுக்கும், பிதாவுக்கும் இடையில் எந்த மத்தியஸ்தரும் தேவைப்படாது. R4516:5; 3916:1 தன் பிள்ளைகளை நேசிக்கும் தந்தைக்கும், தந்தையை நேசிக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் தேவையில்லை. SM720:2; NS356:4 கிறிஸ்து தமது நீடித்த ஆசாரியத்துவத்தின் மகிமையில் பிரசன்னமாகியிருப்பதே நமது சார்பாக தேவைப்படும் ஒரே வேண்டுதலாக (appeal) இருக்கின்றது: தேவன்தாமே நம்மை சிநேகிக்கிறார். R1829:5 சர்வவல்லமை யுள்ளவரை மீறி, பரிசுத்தவான்களுக்கு எதிராக உயர்த்தப்படும் மாம்சீக கரமானது உண்மையில் அற்பமானதும் வலிமையற்றதாகவுமே இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் உயர் நீதிபதி, கிறிஸ்துவுக் குள்ளான அனைவரையும் ஒரேதரமாக, அதுவும் என்றென்றைக்குமாக விடுவித்துள்ளார். R1141:4 வேதாகமத்தின் தேவனை நாம் உண்மையில் அறிந்துகொள்ளும்போது, அவரை அன்பின் ரூபியாகக் காண்கிறோம். (1 யோவா. 4:8) NS524:4

**உங்களைச் சிநேகிக்கிறார்** – பிரியத்தோடு ஏற்றுக்கொள்ளுகிற பிதாவின் உண்மையான ஒரு குமாரன் இயல்பாகவே அவரது அன்பின் கதகதப்பை அனுபவிக்கிறான். விசேஷமாக, ஒவ்வொரு கிருபையின் பூரணத்தையும் தன்னுடைய பரமபிதாவினில் அடையாளங்காண்கிற உண்மையான குமாரன் உண்மையிலேயே அந்தக் கதகதப்பை அனுபவிக்கிறான். R1914:3 அவர்கள் மீதான பிதாவின் அன்பு பிலையோ/phileo, கடமை அன்பாகும். அவரால் அவர்கள் இருக்கும் வண்ணமாக அன்புகூர முடியவில்லை, ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவிடம் ஒரு கடமை-அன்பை மாத்திரமே காட்டி, அவருடைய சிநேகிதர்களாகிவிட்டதால், தேவனாலும் அவர்கள் மீது கடமை-அன்பையே பிரயோகிக்க முடிந்தது. R2807:3 முதலில், தேவன் உலகத்தை அன்புகூருகிறார். இரண்டாவதாக, மிக உயரிய அர்த்தத்தில், கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டு, அவருக்கென்று தங்களை அர்ப்பணித்துள்ளவர்களை அவர் அன்புகூருகிறார். இந்த அன்பு பகுதியாகவோ அல்லது இறுதியில் முழுமையாகவோ இழக்கப் படுவதற்கும் வாய்ப்புள்ளது. R3033:6, 5724:6; CR461:1 தேவன் உலகை ஒரு பரந்த, அனுதாப அன்புடன் சிநேகிக்கிறார்; ஆனால் இந்தச் சுவிசேஷ யுகத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அவரது உண்மையான திருச்சபையார் மீது அவருக்கு விசேஷித்த அன்பே காணப்படுகின்றது. OV423:3; R5276:1 இயேசு பிதாவின் பிரதான அன்புக்குரியவராயிருக்கிறார்; மேலும் மணவாட்டி வகுப்பாராகிய, திருச்சபையார், அவர்களின் தலையாகிய கிறிஸ்துவின் – பிரியமானவரின்–

அங்கத்தினராக இருக்கப்போகிறார்கள். R5694:5 நம்முடைய கர்த்தராகிய இயேசு, பிதாவின் அன்பை முழுமையாக வெளிப்படுத்தினபடியால் (expressed and fully manifested), அவர் மிகவும் பிரியமானவராய் இருந்தார் என்பதை நம்மால் உடனடியாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் அதே அன்பைத்தான் பிதா நம் மீதும் செலுத்துகிறார் என்பதை அறிந்துகொள்ளும்போது அது நம்மைப் பெரிதும் வியக்க வைக்கிறது! R5082:6, 5724:6 நமது குணலட்சண சாயலின் காரணமாக அல்லாமல், மாறாக அவருடைய ஆவி நம்மிடம் இருப்பதால் (நம்மைச் சிநேகிக்கிறார்). CR323:2 அப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய புத்திரர் என்பதற்கு ஆதாரம் உள்ளது, அவர்கள் தேவனால் போதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள். NS507:5 நம்முடைய நலன்கள் குறித்து பிதாவிற்கு இருக்கும் அக்கறையை உணர்ந்துகொள்வது நம்மை அவமானமாக உணரச் செய்தாலும், அதாவது அது நமது பலவீனத்தை உறுதிப்படுத்துகிறபடியால் நம்மை அவமானமாக உணரச் செய்தாலும்கூட, அது நமது பிதாவின் அன்பை உறுதிப்படுத்துவதால், அது புத்துணர்ச்சியும் ஊக்கமும் அளிக்கின்றதாய் இருக்கின்றது. R5117:5 வாழ்க்கையின் புயல்கள் எவ்வளவு கடுமையாக நம்மைத் தாக்கினாலும்சரி, நாம் ஒருபோதும் நமது நங்கூரத்தை விட்டுவிட்டு, நம்மை நாமே அடித்துச்செல்ல அனுமதியாமல், இது போன்ற வாக்குத்தத்தங்களை எப்போதும் நாம் நம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். R4817:6; 3331:2 பலருக்கு கர்த்தர் உறங்கிக் கொண்டிருப்பது போலவும், பலருக்கு அவர் தம்முடையவர்களைப் பற்றி கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும் இருப்பது போலவும் தோன்றிடும். ஆனால் கர்த்தரோ அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டே அறிந்தவராவார், மேலும் மனுஷனுடைய கோபத்தை அவரது மகிமையை விளங்கப்பண்ணும் வண்ணமாக மாற்றியமைக்க வல்லவராய் இருக்கிறார். NS662:1 ஆனால் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை நாம் வெளிப்படுத்தினால் மட்டுமே, இந்தக் கிருபையான வாக்குத்தத்தங்களை நமக்குப் பயன்படுத்தி, நம்மால் அவற்றில் இளைப்பாற முடியும். R3944:5 தாம் இந்த உலகத்தில் விட்டுச் செல்லவிருந்த அந்தச் சீஷருக்கான நமது ஆண்டவருடைய அறிவுரையையும், ஊக்கமும் எச்சரிப்பும் கொண்ட அன்பான வார்த்தைகளையும், உருக்கமான ஜெபத்தையும் குறித்து வாசிக்கும்போது, இதோ, அவர் அவர்களை எவ்வளவாய் அன்புகூர்ந்தார் என்று சொல்லும்படிக்குத் தூண்டப்படுகிறோம்! R847:3* தேவன் ஏன் தமது குமாரனுடனான உறவை ஒரு கணம் துண்டித்தார் என்ற தாத்பரியத்தை உணர்ந்துகொள்ளும் போது, அது நம்மை மீண்டும் பிதாவின் ஐக்கியம் மற்றும் அன்பிடமாக திரும்பி வருவதற்கான பாக்கியத்தின் மதிப்பினை உணரச் செய்திட வேண்டும். R4173:2 யோசேப்பு மீது யாக்கோபு கொண்டிருந்த விசேஷித்த அன்பினால் இது சித்தரிக்கப்படுகிறது. R3971:3

## 39. யோவான் 17:23

**“ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.”**

**ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும்** – இங்குள்ள கருத்து முழுமை / நிறைவு பற்றினதாகும். வேலையானது முடிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கப்போகிற யுகத்தின் முடிவைக் குறித்து குறிப்பிடுகிறார். R5358:6

**நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல** – உலகம் காரியத்தை முழுவதுமாகப் புரிந்துகொள்ளும்போது, ‘பிதா கர்த்தராகிய இயேசுவை அன்புகூருவதுபோல் திருச்சபையையும் அன்புகூருகிறார்’ என்கிற கர்த்தருடைய வார்த்தையின் உண்மையை அவர்கள் அனைவரும் புரிந்துகொள்ளுவார்கள். நமது கர்த்தரிடத்தில் சுயநலமான எதுவுமே காணப்படுவதில்லை. R5359:1 “அவர்கள் எப்பொழுதும்

என்னைவிடத் தாழ்ந்தவர்களாகவே இருப்பார்கள். நான் பெறப்போகும் மகிமை அவர்களுக்கு ஒருபோதும் கிடைக்காது என்று அவர் கூறவில்லை. R5359:1 மற்றொருவருடைய அதே அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றினால், அவர்கள் அடைந்த அதே இலக்கினை நாமும் அடைந்திடலாம். R233:3*

**அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும்** – நாம் பாவிகளாக இருந்தோம், அவருடைய அன்புக்குப் பாத்திரமான எதுவும் நம்மிடத்தில் காணப்படவில்லை. ஆனால் நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பிறகு, நம்முடைய மண்பாண்டங்கள் எவ்வளவு அபூரணமாக இருந்தாலும்கூட, நம்முடைய இருதயங்கள் அவருடைய பார்வையில் பூரணமானவையாக காணப்படுகின்றன. R3161:6

**உலகம் அறியும்படிக்கும்** – அந்த ஒரு சரீரத்தை, ஏற்றகாலத்தில், பூரணப்படுத்தியதன் விளைவாக. R827:5 ஆனால் இந்த வாக்கியத்தைப் பிதா மற்றும் குமாரனுடன் ஒன்றுபடுவதன் மூலமாக மாத்திரமே புரிந்துகொள்ள முடியும். R2431:4

## 40. உரோமர் 6:5

**“ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.”**

**அவருடைய மரணத்தின்** – நாம் அவருடன் மரித்திருக்க வேண்டும், அவருடனே பாடுபடவும் வேண்டும். R191:1, 3152:5

**சாயலில்** – முன்மாதிரி அல்லது உதாரணம். R2477:2 அதேபோன்ற பலிசெலுத்தும் வகையில். R649:1 புதிய சுபாவத்தை அடைவதற்கு வேறெந்த வழியுமில்லை. R5871:4

**இணைக்கப்பட்டவர்கள்** – அவருடன் ஒன்றிணைக்கப்பட்டவர்கள். (ரிவைஸ்டு மொழியாக்கம்) HG264:2 ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள். R132:3 கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில், மரணத்திற்குள் இணைக்கப்பட்டவர்கள். F441 தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றால் போதும், இராஜ்யத்தில் ஓர் இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது மிகவும் மலிவான உத்தரவாதமாக இருக்கும். HG263:6 இன்னும் முழுமையாக பலி செலுத்தி முடிக்காதவர்கள். R99:3*

**அவர் உயிர்த்தெழுதலின்** – முதலாம் உயிர்த்தெழுதல். R190:6, 2671:6, 2477:2, 1542:6; SM152:3 திவ்ய சுபாவம். R1442:1 பிரதான உயிர்த்தெழுதல். R1511:2 நம்முடைய கர்த்தர் தலையாயும், பல சகோதரரில் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவராயுமிருக்கிறார். R2477:2: மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கு. (உரோ. 2:7) R2773:1, 5871:4, 1262:6, 1260:2, 649:1 ஆவிக்குரிய பரிபூரணத்திற்கு. R649:1 புதிய சுபாவத்திற்கு மற்றும் இறுதியில் பரலோக இராஜ்யத்தில் பங்கடைவதற்கு (உயிர்த்தெழுவது). R3152:6 ஏற்கனவே நித்திரையடைந்தவர்களுக்கு நடந்தது போலல்லாமல், இப்போதுள்ளவர்களுக்கு மாற்றமானது உடனடியாக / கணநேரத்தில் நடக்கும். R1260:2 நாம் உலகத்திற்கு மரித்து, “மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பதற்கு” எழுப்பப்படுகிறோம். (உரோ. 8:1, உரோ. 8:4) R133:6

**சாயலிலும்** – உயிர்த்தெழுதலில் சகோதர சகோதரிகள் பெறவிருக்கிற அனுபவமானது தங்கள் கர்த்தருடைய அனுபவங்களின் பிரதியாக / சாயலாக (duplication) மாத்திரமே இருக்கும். R2477:2

**இணைக்கப்பட்டிருப்போம்** – பங்காளிகளாக்கப்பட்டிருப்போம். R1542:6, 1278:6, 1260:2 அவருடைய உயிர்த்தெழுதலில் ஒருபோதும் பங்கடையமாட்டாத ஆயிரக்கணக்கானோர் தண்ணீரினால் இணைக்கப்பட்டுள்ளனர். F441

## 41. உரோமர் 6:8

**"ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்."**

**நாம்** – திருச்சபை. E411 மனித சிருஷ்டிகளாகிய நாம். A213 நீதிமான்களாக்கப்பட்ட நாம். R649:4

**கிறிஸ்துவுடனேகூட ... மரித்து** –அதே, பலியின் மரணத்தை மரிக்க வேண்டும் ஒழிய வேறு மரணத்தை அல்ல. CR327:5; F439; E411; R1260:2, 1015:6 அநுதினமும் உலகத்தின் ஆவிக்கும், நம்பிக்கைகளுக்கும், நோக்கங்களுக்கும், இலட்சியங்களுக்கும் மரிப்பது. R2123:2 சரீரத்தின் செய்கைகளை அழிப்பதற்குச் சுயத்தை வெறுப்பது. R2123:2, 281:3 சுயநலமும் சீர்கெட்ட இச்சைகளும் கொண்ட சுயத்தை, மரித்ததாகக் கருத வேண்டும். D476; E411 மனிதர்களாகிய நாம் பலிகளாக அழிவுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம். A213 அவருடன் பாடுபட்டு. C208 கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் அவரால் அவருடைய பாகங்களாக அல்லது அங்கங்களாக பலியிடப் படுகிறார்கள், மேலும் அவர்களின் இரத்தம் (மரணம்) கிறிஸ்துவின் இரத்தத்தின் ஒரு பகுதியாகவே கணக்கிடப்படுகிறது. R4397:6 இந்தச் சிந்தனையே நினைவுகூருதலில் பங்குகொள்பவர்களின் சிந்தையிலும் காணப்பட வேண்டும். R5643:1, 3962:1 அவரது மரணம் ஆதாமுக்குரிய மரணம் அல்ல. R382:6 இது இயேசுவின் முதலாம் மரணம்; அவரோடு மரித்தவர்களுக்கு இது இரண்டாம் நிலை மரணமாக இருக்கின்றது (எப்படியெனில், ஆதாமுக்குள் அவர்கள் ஏற்கனவே முதலாம் நிலை மரணத்தைப் பகிர்ந்துள்ளனர், ஆக கிறிஸ்துவுடனேகூட மரிப்பவர்களுக்கு அது இரண்டாம் நிலை மரணமாக இருக்கிறது). R514:5 ஆதாமுக்குரிய மரணம் நம்மைக் கடந்துபோயாயிற்று, ஜெயங்கொள்ளுகிறவர்களோ இரண்டாம் நிலை மரணத்தினால் சேதப்படுவதில்லை. R514:5, 649:5 (மற்ற இடங்களில் அல்லாமல், இந்த வெளி. 2:11ல் வரும் 'இரண்டாம் மரணம்' மாத்திரம் கிறிஸ்துவுக்குள் ஜெயங்கொள்ளுகிறவர்கள் அடையும் இரண்டாம் நிலை மரணத்தைக் குறிக்கிறது, மாறாக, மனப்பூர்வமான பாவிகளுக்காக வைக்கப்பட்டுள்ள இரண்டாம் மரணத்தைக் குறித்து இந்த வெளிப்படுத்தல் வசனம் பேசுவதில்லை. R649:5)

**ஆகையால்... (மரித்தோ)மானால் / Now if** – அப்போஸ்தலன் உடன் சுதந்தரராவதற்கான நிபந்தனைகளை இங்கு சேர்க்கின்றார். R3709:3 பாவிகளாக இயேசுவின் பலியில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, அதன் மூலம் நீதிமான்களாக்கப்பட்ட பிறகு. R649:4

**அவருடனேகூடப் பிழைத்தும்** – மனித தளத்தை விடவும் உயரிய தளத்தில். R328:6 "கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்." (உரோ. 8:17) C208; R5643:1, 1542:5 சிந்தையானது பூமியிலிருந்து பரலோகத்திற்கு மறுரூபமாக்கப்படுவதே அந்தச் சுபாவ மாற்றத்தின் தொடக்கமாக இருக்கும். A202, 213 அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்துகொள்ளுவதற்கும், அவருடைய துன்பங்களில் பங்கடைவதற்கும் நாம் எதிர்பார்த்திட வேண்டும். R80:3

**இருப்போம்** – நமது மனித சரீரங்களில் அநுதினமும் ஏற்படும் மாற்றங்கள் நம்முடைய தனி-அடையாளத்தை (identity) இழக்கச் செய்வதில்லை. A202; R626:6

**என்று நம்புகிறோம்** – புதிய ஆவிக்குரிய ஜீவிகளாக. A213

## 42. உரோமர் 8:16

**"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்."**

**தேவனுடைய பிள்ளைகள்** – "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (உரோ. 8:14) E163; R3203:6

**ஆவி ... தாமே** – தேவனுடைய வார்த்தையின் மூலமாக. E229

**நம்முடைய ஆவியுடனேகூட** – எல்லாப் பரிசுத்தவான்களிலும் மேற்கண்டவைகளில் சில சாட்சிகள் மட்டும் காணப்படும்; ஆனால் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்குள் அவை அனைத்துமே காணப்படும். E261, 240 கர்த்தரால் தாங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டோம் என்பதே புதிதாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முதல் சாட்சியாக இருக்கின்றது. E240

**சாட்சிகொடுக்கிறது** – பாவத்திலிருந்து மனந்திரும்பி வந்ததற்கான சாட்சி மற்றும் இயேசுவை மீட்பராக அடையாளங்கண்டுகொள்வதற்கு பரமபிதாவால் இழுத்துக்கொள்ளப்பட்டதற்கான சாட்சி. E229 தேவனுடைய ஊழியத்திற்காக நம்மிடம் உள்ள அனைத்தையும் அர்ப்பணித்ததற்கான சாட்சி. E229; R374:1 சிட்சை மற்றும் ஒழுங்குப்படுத்தப்படுதல் (discipline) எனும் சாட்சி. E231; R374:2 தேவனுடைய சித்தத்திற்கு மனமுவந்து அடிபணிந்ததற்கான சாட்சி. E235; R374:3 உலகத்திலிருந்து பிரிந்திருந்து, நம்மிடமுள்ள வெளிச்சத்தைப் பிரகாசிக்க செய்ததற்காக அவர்களால் வெறுக்கப்பட்டு துன்புறுத்தப் பட்டதற்கான சாட்சி. E235; R374:3 இயேசுவை உங்களுடைய மீட்பராகவும் எஜமானராகவும் அங்கீகரிப்பதில் மகிழ்ச்சி அடைவதன் சாட்சி மற்றும் பொருத்தமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய வார்த்தையை உண்மையுள்ளவர்களாக முன்வைப்பதன் சாட்சி. E237; R374:4 உடனடியான கீழ்ப்படிதல் மற்றும் மனமுவந்த பலி என்பவைகளின் சாட்சி. R759:5* உலகத்தை மேற்கொள்வதற்கான சாட்சி, ஆவிக்குரிய மற்றும் நித்திய விஷயங்கள் மீதான விசுவாசத்தின் மூலமாக உலகத்தின் நோக்கங்கள், நம்பிக்கைகள், இலட்சியங்கள் ஆகியவற்றுடன் ஒத்துப்போகாததன் சாட்சி. E237 – 238; R374:4 ஆவியின் குணலட்சணங்களிலும் (கனிகள்), வரவிருக்கும் விஷயங்களைப் பற்றிய அறிவிலும் வளர்ச்சியடைவது குறித்த சாட்சி. E238 – 239; R374:2,5 "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோ. 3:12) R374:3; E235

## 43. உரோமர் 8:17

**"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்."**

**பிள்ளைகளானால்** – தேவனுடைய புத்திரராக இருக்கும்படியாக பரிசுத்த ஆவியானல் ஜெநிப்பிக்கப் பட்டபோது. R5830:6, 5207:4 எல்லாவற்றிற்கும் மேலான தேவனுடைய அதிகாரத்தைப் பற்றின ஒரு மாபெரும் பாடமாகவும், அனைத்து பரிணாமக் கோட்பாடுகளுக்கு முரணாகவும், உடன் சுதந்தரர் ஆகும்படிக்கு நம்மை அழைத்த தேவன் நம்மை பிள்ளைகளெனவும் ஆக்கியுள்ளார். E395 நம்முடைய அனைத்து அனுபவங்களும் தேவனுடைய மேற்பார்வையின்கீழாகவே நமக்கு வருகின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். R5418:5 இயேசு மாத்திரமே நேரடியாக ஜெநிப்பிக்கப்பட்டார். R5439:2 தேவனுடைய புத்திரர். R5739:5 சுவிசேஷ யுகத்து உண்மையுள்ளவர்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் அல்ல, மாறாக அவரது பிதாவின் பிள்ளைகளாவார்கள், அவர்கள் பிதாவின் ஆவியினாலும், பிதாவின் சுபாவத்திலும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். E143 பெந்தெகொஸ்தே நாள் துவக்கி அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்து வருகிறார்கள். R5830:6, 5207:4

**சுதந்தரருமாமே** – தலையாகிய இயேசுவும், அவரது சரீரமாகிய சபையும், நிழலின் நிஜமாகிய ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாய் இருக்கின்றனர். (கலா. 3:29) R5450:2, 5207:4, 3937:3,

1493:5, 398:6 தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கென்று வழங்கியுள்ள காரியங்களின்மீது புத்திரருக்கு உரிமை உண்டு. R5163:6

**தேவனுடைய சுதந்தரரும்** – பிதாவினுடைய ஒவ்வொரு குமாரனுக்கும் மகிமையின் கிரீடம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. R5532:3; A19 தேவன் திவ்ய சுபாவத்தையும், இராஜ்யத்தின் கனங்களையும் வைத்துள்ளார். R4751:1, 274:4; CR464:2 ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம். R5205:4 இந்தச் சுவிசேஷ யுகத்து அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளுக்கென்று அருளப்பட்டுள்ள தேவனுடைய இந்த மகிமையான கிருபையின் அற்புதங்களுக்கு இணையாயிருக்கிற ஒன்று கூட, சகல உலக புனைக்கதைகளிலும், காவியங்களிலும் காணப்படுவதில்லை. R3988:6 பிதாவானவர் கிறிஸ்து இயேசுவின் மேல் வைத்துள்ள அன்புக்கு இணையான அன்பினை நம்மேல் வைத்துள்ளார் என்பது இதன் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. R3161:6

**உடன் சுதந்தரருமாமே** – மணவாட்டி என்றும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்றும் சொல்லலாம். R5919:6 இது சுவிசேஷ யுகத்தில் கொடுக்கப்பட்டுவருகிற ஒரே அழைப்பாக இருக்கின்றது. CR470:6; R5173:4, 2581:1, 1574:1 சுவிசேஷயுகத்து சபையின் உன்னத அழைப்பு. R1566:1, 1262:3 தேவனுடைய குடும்பத்தில் புத்திரராக சுவிகரிக்கப்படுவது. OV425:5 திவ்ய சுபாவத்திலிருக்கிற இயேசுவின் பங்காளிகள். (2 பேது. 1:4) SM67:1; A196; R5562:4, 4998:6, 2409:4, 1881:4, 1360:4, 274:4 அவரிடம் உள்ள அனைத்திலும் நாம் அவரோடு பங்கடைய வேண்டும் அல்லது பங்கேற்க வேண்டும். CR215:1 எல்லா வகையிலும், தற்கால ஜீவியத்தின் பாடுகள், சுயத்தை வெறுப்பது, துன்புறுத்தல்கள் மற்றும் தியாகங்கள் என்பவைகளிலும், அத்துடன் எதிர்கால ஜீவியத்தின் மகிமைகள், கனம் மற்றும் அழியாமை என்பவைகளிலும் (உடன் சுதந்தரர்). R5003:3, 2405:4 எல்லாவற்றிலும். (எபி. 1:2) R1617:4, 4071:3, 3161:6 "கனத்தையும் மகிமையையும் அழியாமையையும்" பெற்றுக்கொள்ளுதல். (உரோ. 2:7) R5080:2, 2773:1, 2761:6 ஆயிர வருட அரசாட்சியில். D618; R4997:1, 2652:3, 2505:4

**அவருடனேகூட** – அவரது சரீரத்தின் அங்கத்தினராக அவருடன் மரணஸ்நானத்தை அடைவது. F439 உடன்படிக்கையானது உண்மையான மரணத்தில் உண்மையாக நிறைவேற்றப்படும் வரையிலும். F445 காளையுடன் கர்த்தருடைய ஆட்டைப் பலிசெலுத்தினதில் நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. T61 நமது கர்த்தருடைய விஷயத்தைப் பொறுத்தவரையில், அவர் மகிமைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக அவர் பாடுபட வேண்டியது அவசியமாக இருந்தது. R1782:6 "இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்." (2 கொரி. 4:10) "அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." (1 பேது. 4:13) "நான் அவரையும் ... அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும்." (பிலி. 3:10) T50; R80:3, 30:6* "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை... நிறைவேற்றுகிறேன்." (கொலோ. 1:24) F632; T50; R5079:4, 4398:5, 2787:2, 2511:1, 2415:4, 840:4, 467:1; CR49:4

**உடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு** – ஒரே நேரத்தில் என்றில்லாமல், மாறாக அவருடைய அதே மகிமையில் பங்கடைவது. R2156:4, 5838:1, 5822:2, 4973:3, 280:6 முழு சரீரத்திற்கும் பாடுகள் இருக்கும்பட்சத்தில், முழு சரீரத்திற்கு மகிமையும் இருக்கும். R19:2, 579:5, 263:2, 218:2 அவர்கள் ஆசாரிய இராஜ்யமாக (Kingdom of priests) அல்லது இராஜரீக ஆசாரியக்கூட்டமாக (Royal Priesthood) இருப்பார்கள். R5859:3 பரிசுத்தவான்கள் தங்கள் ஆண்டவராகிய இயேசுவோடுகூட இணைந்து உலகை ஆளுகைசெய்து, நியாயந்தீர்த்து, ஆசீர்வதிக்கப்போகிறார்கள். D618 அனைவரும் மகிமைப்படுவதே ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணமாக இருக்கும். R169:3* "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்." (கொலோ. 3:4) A86; R616:2* "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும்

செய்வோம்.” (2 தீமோ. 2:12) T26, 50; R2787:2, 623:6*, 80:3, 30:6* “கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம்.” (உரோ. 6:8) A212 “நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று ... அறிந்து.” (2 கொரி. 1:7) T50

**நாம்... பாடு** – மரணம். F445: R270:5, 140:4, 134:6 நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்செய்வதன் விளைவாக. E294 ஜீவபலிகளாக. R2409:5 இவ்வாறு “சுதந்தரத்தில் பங்கடைய” செய்கிறது. E121; OV425:1; R2761:1 தேவனுடைய நிலைப்பாட்டில், நாம் எந்தளவிற்கு கிறிஸ்துவுக்காக நமது சுயத்தைப் பலிசெலுத்தி, பாடுபடுகிறோமோ, அந்தளவிற்கு அது நமது உண்மைத்தன்மையின் அளவினைச் சுட்டிக்காட்டிடும். E490 இவ்வளவு பெரிதான மேன்மைக்கான வாய்ப்புடன்கூட, நிபந்தனைகளும், வரம்புகளும், சோதனைகளும், விசுவாசம் மற்றும் உண்மைக்கான பரீட்சைகளும் சேர்ந்தே வருகின்றன. OV379:4; R1652:6 பரமபிதா நமது அன்பின் அளவு நிரூபிக்கப்பட வேண்டும் என விரும்புகிறார். CR214:5; R2409:5 மரணபரியந்தம் சுயத்தைப் பலிசெலுத்தி, விசுவாசத்தோடும், தெய்வீக அன்பின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிதலோடும் இருப்பதன் மூலமாக நேர்மையைக் காட்டிடுங்கள். R4799:2, 2074:5, 140:4 பாடுபடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போனால் அது கதவு மூடிவருவதையும், உடன் சுதந்தரத்துவத்திற்கான இடுக்கமான வழி தடைப்பண்ணப்படுவதையும் அர்த்தப்படுத்திடும். C207 அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம். (எபி. 13:13) R3917:4 உபத்திரவங்கள், தவறாக சித்தரிக்கப்படுதல் என தெய்வீக மேற்பார்வை அனுமதிக்கும் எல்லாவற்றிலும் சந்தோஷமாயிருங்கள். R5008:2, 4398:5, 2000:3, 280:6 மிகுந்த உபத்திரவத்தின் மூலமாக மாத்திரமே அவர்கள் இராஜ்யத்தில் பிரவேசித்து, கிறிஸ்துவுடன் அதன் மகிமையில் பங்கடைய முடியும். NS680:4 சத்தியத்திற்காக பாடுபடுபவர்கள் சிங்காசனத்தைப் பகிர்ந்துகொள்ள பாத்திரவான்களாகக் கருதப்படுவார்கள். R832:2 நம்மை ஜெயங்கொள்ளும் வகுப்பாரில் ஒருவராக்கச்செய்கிற உலகத்திற்கு மரித்திருக்கும் நிலையை நாம் அடைந்தால், நாம் அநுதினமும் மரிக்க வேண்டியிருக்கும். R2123:2 சுயத்தை வெறுப்பது மற்றும் சுயத்தைப் பலிசெலுத்துவது எனும் இடுக்கமான வழியில். R2074 உலகத்தின் பரியாசம், இகழ்ச்சி மற்றும் அவமதிப்பு. R1372:3 இப்போது மற்றவர்களுக்காக பிட்கப்பட்டுவருகிற ஒரே அப்பத்தின் அங்கங்களாக. R1787:5, 2773:1 பாடு மற்றும் அவமானத்தின் “பாத்திரத்தை” கிறிஸ்துவுடன் நாம் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பிற்காக நாம் தேவனைத் துதிக்க வேண்டும். R5192:6, 2272:2, 1637:2, 840:4, 467:1 இந்தச் சிந்தனையே நினைவுகூருதலில் பங்குகொள்ளுபவர்களின் சிந்தையிலும் காணப்பட வேண்டும். R5643:1, 5341:6, 3962:1 இந்த யுகத்தின் முடிவில் கர்த்தர் தம்முடைய ஜனங்களை, அக்கினி போன்ற உபத்திரவத்தின் மத்தியில், கூட்டிக்கொண்டு போக வாய்ப்புள்ளது. R5677:4 ஒரு சமரச மனப்பான்மையோடு, அக்கினி போன்ற சோதனைகளைத் தவிர்ப்பவர்கள், மகிமையில் உடன் சுதந்தரராக இருப்பதற்கான வாய்ப்பை இழக்கிறார்கள். T61 திருச்சபையின் உபத்திரவங்கள் அவளுடைய ஆளுகையின்போது இருக்காது, மாறாக அதற்கு முன்னரே நடந்து முடிந்திருக்கும். R2413:3 கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாகிய, அவருடைய சரீரமாகிய சபை, கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிறார்கள். (கொலோ. 1:24) SM783:1; R2760:6 மகிமைவாய்ந்த எதிர்காலத்திற்குத் தயாராவதற்கு நிகழ்காலத்தில் சோதனைகள் அவசியம் என்பதை, பரமபிதாவின் சீர்பொருத்தும் பள்ளியில் பயிலும் சபை வகுப்பார் புரிந்துகொள்கிறார்கள். OV425:2 தீர்க்கதரிசிகள் தேவனுக்குச் சாட்சிகளாக துன்பப்பட்டிருக்கலாம், ஆனாலும் கிறிஸ்துவின் துன்பங்களின் ஒரு பகுதியாக எண்ணப்படுகிற சுவிசேஷயுகத்து திருச்சபை யினுடைய துன்பங்களைப் போல, தீர்க்கதரிசிகளுடைய துன்பங்கள் இருந்ததில்லை. R218:2 மாம்சீக இஸ்ரயேலானது விசேஷித்த தயவாகிய ஆவிக்குரிய இராஜ்யத்தை இழந்தது, ஏனென்றால் கிறிஸ்துவுடன் துன்பப்பட வேண்டும் என்கிற அதனோடு இணைக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகளின்

அடிப்படையில் அதனை ஏற்றுக்கொள்ளுவதற்கு அவர்கள் இருதய அளவில் தயாராக இருக்கவில்லை. D624

**பட்டால்** – அப்படிப் பாடுபட்டால் மாத்திரமே. E233; F88 கிறிஸ்துவுடனான நமது ஆளுகையானது அவருடைய ஊழியத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைச் சார்ந்ததாயிருக்கிறது. C208

**அப்படியாகும்** – சுவிசேஷ யுகத்தின் துன்பங்களெல்லாம் கடந்துபோன பிறகு. நீங்கள் "கொஞ்சக்காலம் பாடநுபவித்த" பிறகு. (1 பேது. 5:10) T50 அக்கினி போன்ற சோதனைகளைத் தவிர்ப்பதற்காக நாம் சமரசம் செய்யும் ஒரு போக்கைப் பின்பற்றிச் செல்லவில்லை என்றால், அப்படியாகும். T61

## 44. உரோமர் 8:18

**"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்."**

**பாடுகள்** – சோதனைகள். R569:4 இழப்புகள், பற்றாக்குறைகள், சுயத்தை வெறுப்பது. R443:4 புதிய சிருஷ்டி இயேசுவுடன் பாடுபட வேண்டும். Q679:4; R443:4 இப்போது பாடுகள் இருக்கும், பிறகு (எதிர்காலத்தில்) மகிமை இருக்கும். CR379:2 அவருடைய சரீரத்தில் நாம் அங்கம் வகிப்பதால் நமக்கு ஏற்படும் எந்தத் துன்பங்களுமே கிறிஸ்துவின் பாடுகளின் ஒரு பகுதியாக இருக்கின்றன. Q679:4 சோதனைகள், சிரமங்கள், சுயத்தை வெறுப்பது. NS105:1

**இனி** – திருச்சபையின் உபத்திரவங்கள் அவளுடைய ஆளுகையின்போது இருக்காது, மாறாக அதற்கு முன்னரே நடந்து முடிந்திருக்கும். R2413:3

**நம்மிடத்தில்** – ஜெயங்கொள்ளுபவர்கள்; உண்மையுள்ளவர்கள். CR80:4; R3001:5; OV189:2 உலகத்திலிருந்து சபையைக் கூட்டிச்சேர்க்கும் வரையிலும், கிறிஸ்து தம்முடைய இராஜ்யத்தின் (சபையின்) மகிமையில் வரமுடியாது. R19:2, 2209:5, 579:5, 263:2 பரத்திற்குரிய கனங்களும், பூமிக்குரிய கனங்களும் கிறிஸ்துவின் பாதத்தில் வைக்கப்படும். A292

**வெளிப்படும்** – கிரேக்க வார்த்தை, அபோகலுப்டோ / apokalupto, வெளிப்படுத்தப்பட்டது, வெளியரங்கமானது. R2979:2 அவர் வெளிப்படும்போது. R569:4

**மகிமைக்கு** – மனைவி கணவனுடைய மகிமையாயிருப்பது போல, மணவாட்டி வகுப்பார் கிறிஸ்துவின் மகிமையாக இருப்பார்கள். R19:2, 579:5, 263:2

**ஒப்பிடத்தக்கவைகள் அல்ல** – ஒப்பிடத் தகுதியற்றவை; இதுவே சரியான கருத்தாகும். அதிகபட்சம் அவை "இலேசான உபத்திரவங்கள்" ஆக இருக்கும். (2 கொரி. 4:17) OV189:2; R569:4 "எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்." (பிலி. 3:8) F467

**என்று எண்ணுகிறேன்** – "எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை." (அப்போஸ்தலர் 20:24 – திருவிவிலியம்) R3001:3

## 45. உரோமர் 8:28

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."**

**அவருடைய தீர்மானத்தின்படி** – முழு மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்காக, அவர்களை தம்முடைய பிரதிநிதிகளாக ஆக்குவது எனும் மகிமைவாய்ந்த தீர்மானத்தின்படி. R2538:6, 25:2*

**அழைக்கப்பட்டவர்களாய்** – "மற்றும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களும்." (வெளி. 17:14) C232 இராஜ்ய வகுப்பார். SM369:T மணவாட்டியாவதற்கு, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாவதற்கு (அழைக்கப்பட்டவர்களாய்). R4784:2, 5249:2 முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையப்போகிறவர்கள். OV231:T இந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார், தெரிந்துகொள்ளப் படாதவர்களின் ஆசீர்வாதத்திற்கான தேவனுடைய கருவியாக இருப்பார்கள். SM91:1; R2538:6 சுவிசேஷ யுகத்தின் சபைக்குப் பொருந்தும், ஆனால் ஆபிரகாமின் காலந்துவக்கி இருந்துவந்த எபிரெயருக்கும் இது பொருந்தியது என்று சொல்வதிலும் ஓர் அர்த்தம் இருக்கிறது. R5217:2

**தேவனிடத்தில் அன்புகூருகிற** – அவரை எல்லாவற்றுக்கும் மேலாக அன்புகூருவது. R5633:5, 1911:2; F154 உண்மையான இருதயத்தோடு. R4308:1 நாம் தேவனை அன்புகூருகிற அளவிற்கேற்ப, நம்முடைய அனுபவங்களிலிருந்து நாம் நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். R5759:5 இவர்களால் வாழ்வின் அனைத்துப் புயல்களின் மத்தியிலும் அமைதியாகவும் சமாதானமாகவும் காணப்பட முடியும். OV200:5

**அவர்களுக்கு** – கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக மாறியவர்கள்; உலகத்தார் அல்ல. CR149:1; R5403:2, 4386:1 ஒரு வகுப்பார் விசேஷித்த மேற்பார்வையின் கீழாக உள்ளனர், தேவனுடைய கட்டளைக்குப் புறம்பான எதுவுமே இவர்களுக்கு நடக்காது. R738:6 அவரது பரிசுத்தவான்களுக்கான தேவனுடைய விசேஷித்த அன்பும் ஏற்பாடும், உலகத்திற்கான தேவனுடைய அன்பு மற்றும் ஏற்பாட்டிலிருந்து வேறுபடுத்தப்பட்டதாய் இருக்கும். R1254:5 ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் எல்லா வகையிலும் அதிகமான அனுகூலத்தையே பெற்றிருக்கிறார்கள். R5681:5 கர்த்தருடைய சித்தத்தில் தனது சித்தத்தை முழுவதுமாக மூழ்கடித்தவரால் ஏமாற்றமடைய (disappointment) முடியாது; மேலும் அவர் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயத்திலும், விசுவாசத்தின் மூலமாக, தெய்வீக மேற்பார்வையை உணர்ந்திடுவார். R2412:6 உலகத்தின் காரியங்களிலும் நலன்களிலும் இந்தச் சிறுமந்தை வகித்திருக்கும் முக்கியமான இடத்தைக் குறித்து உலகம் உணராதிருக்கிறது. R4133:6

**சகலமும்** – தாமதங்கள், சிரமங்கள், பிரச்சனைகள், உபத்திரவங்கள் மற்றும் அசம்பாவிதங்கள் கூட. R2025:5, 5781:5, 5403:1, 5402:3, 5333:4, 5217:2, 5118:5, 4983:4, 4926:6, 2699:1, 2356:6, 798:2 பொருளாதார நெருக்கடிகள் கூட. R5589:1, 2699:1 உண்மைத்தன்மையின் வரிசையில் நமக்கு வருமனைத்தும். R5811:4 சகோதர சகோதரிகள் மீதும், நமது சொந்த குடும்பத்தார் மீதும், அண்டை வீட்டார் மீதுமான அன்பிற்கான சோதனைகளை நாம் சந்திக்க நேரிடலாம். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் அன்பினைச் சோதித்துப்பார்ப்பதற்காக, கர்த்தர் தமது முகத்தை நம்மிடமிருந்து சிறிது காலத்திற்கு மறைக்கக்கூட செய்யலாம். OV422:2 எல்லா நேரங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் சந்தோஷமாயிருப்பது என்பது நமக்கான பாக்கியமாகவும், எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தேவனுக்கு நன்றி செலுத்துவது என்பது நமக்குப் பேரின்பமாகவும் இருக்கிறது. R1489:6, 4200:5 வாழ்க்கையின் சோதனைகளும் சிரமங்களும், கனம், மகிமை மற்றும் அழியாமைக்காக நம்மை வனைந்தும், பொருத்தியும் வருகின்றன. R5713:6, 2083:3, 2061:1; CR307:4 குணலட்சணம் மேன்மேலும் பலமடையும்போது நமக்கு வரும் பரீட்சைகளெல்லாம், இறுதியாக குணலட்சணம் நிலையானதாக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படுவதற்கேதுவாக, இன்னும் அதிக வலிமை, அழகு மற்றும் கிருபை என்பவைகளை வளரச்செய்யும்படிக்கு உதவுகின்றன. R4767:5, 2465:6 இந்த ஒரே வாக்குத்தத்தத்தில், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் சுருக்கமாக அடங்கியிருக்கின்றன. F134 உண்மையாக அர்ப்பணிக்கப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளின் அனைத்து காரியங்களும் இதுமுதற்கொண்டு

தேவனுடைய காரியங்களாகவும், அவருடைய பராமரிப்பின்கீழாகவும் இருக்கின்றன. உலகம் விபத்துகளுக்கு ஆளாகலாம், ஆனால் தேவனுடைய சிறியரோ அவருடைய விசேஷித்த கவனிப்பைப் பெற்றிருப்பார்கள். HG294:6 அவர்களின் அனுபவத்தில் என்ன நடந்தாலும் சரி, அது தெய்வீக அறிவு மற்றும் அனுமதியின் பேரிலேயே நடக்கும். R5781:5 இதில் மிகவும் முரணாக, மிகவும் தீயதாக, மிகவும் பாதகமாகத் தோன்றும் விஷயங்களும்கூட உள்ளடங்கியிருக்கின்றது. R5118:5, 4219:2 பிற்பாடு அடையாளங்காணப்பட்டு, எதிராளியின் தந்திரங்களுக்கு எதிராக மாபெரும் பெலமடைவதற்கு வழிவகுக்கிற தோல்விகள் கூட, நமது ஆசீர்வாதத்திற்கேதுவாக நமது ஆண்டவரால் மேற்பார்வையிடப் படலாம். R4790:4 தேவன் தமது சபையின் மற்றும் உலகத்தின் சகல காரியங்களையும், நலன்களையும் ஒழுங்குப்படுத்தி வருகிறார். R5249:2

**நன்மைக்கு ஏதுவாக** – சமாதானமான நீதியின் கனிகளை நம்மில் வளர்த்தி வருகின்றது. F181; R1646:4 புதிய சிருஷ்டியின் நலனுக்கும், நன்மைக்கும் ஏதுவாக. R5606:1, 5402:3 நமது பிதாவின் சித்தத்தின்படி அல்லாமல், வேறெதினாலும் நம்மைக் காயப்படுத்த முடியாது. R5546:6 நன்மைக்கு ஏதுவாக மேற்பார்வையிடப்பட முடியாத எதுவுமே தடுக்கப்பட வேண்டும், நிறுத்தப்பட வேண்டும், தொடரவிடக் கூடாது. R4133:6 ஒவ்வொரு தேவ பிள்ளையும் தங்களுடைய தோல்விகளாலும் சரி, தங்களுடைய வெற்றிகளாலும் சரி பயனடைய வேண்டும். R4307:6, 5811:4 தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு, தீமையின் வல்லமைகளால் எந்தத் தீங்கும் வராது, எனவே விசுவாசமின்மைக்கான அடையாளங்களாக அல்லது ஆதாரங்களாக இருக்கிற பயங்களைத் தூர எறிந்து போடுவோமாக. R4736:3, 4069:5 நம்முடைய பரமபிதா நமக்கு நன்மையானவைகளையே கொடுக்க விரும்புகிறார். சில சமயங்களில், நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதற்கு முன்பாக நாம் காத்திருப்பது நல்லது என அவர் காண்கிறார். R5480:4 தேவன் தமது உண்மையான பிள்ளைகளுடைய வாழ்க்கையின் சகல காரியங்களையும் நெருக்கமாக கவனித்து வருகிறார் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமான பாடங்களில் ஒன்றாகும். R5264:4 அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களுக்குத் தேவையான அனைத்து அறிவுரைகளும், கிருபையும், ஆறுதலும், ஒழுங்குப்படுத்தப்படுவதும் (discipline), பயிற்சியும், கவனிப்பும் (ஏற்றவேளையில்) கிடைத்திடும்; மேலும், மிக உயர்ந்த ஆவிக்குரிய நித்திய ஆசீர்வாதத்திற்கு மிகவும் உகந்ததாயிருக்கிற இம்மைக்குரிய நன்மையும் (ஏற்றவேளையில்) கிடைத்திடும். R1396:3 சில சமயங்களில் நம்முடைய வேண்டுதல்களுக்குப் பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக, நாம் நீண்ட நேரம் காத்திருப்பது நல்லது என நம்முடைய பரமபிதா காண்கிறார்; வேறு சில சமயங்களில், அவர் நம்முடைய ஜெபத்திற்கு விரைவான பதிலைக் கொடுக்கவும் வாய்ப்புள்ளது. R5480:4 “பொல்லாப்பு உனக்கு நேரிடாது.” (சங். 91:10) R3332:2 “ஆண்டவரே என் ஆயர்: எனக்கேதும் குறையில்லை.” (சங். 23:1 – திருவிவிலியம்) R1396:3 இருப்பினும், கர்த்தர் ஒவ்வொரு விஷயத்திலுமே நம்முடைய இம்மைக்குரிய நன்மைக்கேதுவாக காரியத்தை நடத்திக் கொடுப்பார் என்று நினைப்பது தவறாகும். R2130:3* பூமிக்குரிய காயமோ தீங்கோ, தனிப்பட்ட புதிய சிருஷ்டிக்கு அல்லது கர்த்தருடைய பொதுவான நோக்கத்திற்கு நன்மை தரும் என பரமபிதா கண்டு அதனை அனுமதித்தாலன்றி, மற்றபடிக்கு இவர்களுக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. R4926:6 ஒருவன் தனது நிதானிப்பைப் பயன்படுத்தி காரியத்தை நடப்பித்து, பிற்பாடு தான் சிறந்த வகையில் நிதானிக்கவில்லை என உணர நேரிடும்போது, தேவன் அதனை அனுமதித்தப்போதும், அதிலிருந்து பிரயோஜனமான பாடத்தைக் கொடுப்பதற்கேதுவாக அதை பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்புள்ளது. R5212:6 நமது பரமபிதா அவர்களுடைய ஒவ்வொரு இம்மைக்குரிய மற்றும் மறுமைக்குரிய சகல நலன்களையும் பார்த்துக்கொள்வார். NS654:6 அவை எவ்வளவு எரிச்சலூட்டுவதாக அல்லது குழப்பமூட்டுவதாக அல்லது சோதிப்பதாக இருந்தாலும் சரி. R1489:6 சிறந்தவற்றிற்கு (best) ஏதுவாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை (என்றாலும், நன்மைக்கு (good) ஏதுவாக நடத்தி தருவார்). R5118:5

**நடக்கிறதென்று** – தேவன் நம்மை அன்புகூருகிறார், மேலும் புதிய சிருஷ்டிகளாக நமது நன்மைக்கு ஏதுவாக சகலத்தையும் நடத்திக்கொடுப்பார். CR461:2; R5561:6, 5402:3, 4660:2, 2699:4, 738:6 அவருடைய ஆவியின்படி அவருடைய பிள்ளைகளாக இருக்கும் அனைவருக்கும் இந்த வாக்குத்தத்தம் உறுதியாக அருளப்பட்டுள்ளது. CR461:2; R5645:5 இதை நாம் அறிந்துவைத்திருந்தால், நமக்கு வரும் அனைத்தையும், அடிபணிதலோடும் நம்பிக்கையோடும் நாம் ஏற்றுக்கொள்ளுவோம். R5759:5, 3208:5 (ஒரு விபத்து ஏற்படுகிறதென்றால்,) ஒரு தேவையான பாடத்திற்கான அல்லது ஆசீர்வாதத்திற்கான ஒரு வாய்க்காலாக அது இருக்காது என தேவன் முன்கூட்டியே கண்டிருந்தாரே யானால், அந்த விபத்தினை அனுமதித்திருக்க மாட்டாரே என்பதை இந்த வசனத்தின் அடிப்படையில் விசுவாசிப்போமாக. R5425:5 எவ்வளவுக்கதிகமாக விசுவாசம் இருக்கிறதோ, அவ்வளவுக்கதிகமாக இந்த வசனத்தின் மதிப்பினை உணர்ந்துகொள்வோம். R5118:5 இதனை நிறைவேற்றுவதற்காக தேவனுடைய இரக்கமும் நன்மையும் நம்மைப் பின்தொடர்கின்றன (சங். 23:6). R5654:6 நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும் வரையில். R5645:5 நம்மால் தாங்கிக்கொள்ள முடிவதைக்காட்டிலும் அதிகமாக நாம் சோதிக்கப்படவோ அல்லது பரீட்சிக்கப்படவோ கர்த்தர் அனுமதிக்க மாட்டார். (1 கொரி. 10:13) R5569:6 இந்த மேற்பார்வையான கண்காணிப்பை உணர்ந்தவர்கள், மிகவும் தாழ்மையாகவும் நம்பிக்கையுடனும் இருப்பது மாத்திரமல்லாமல், வாழ்க்கையின் அசம்பாவிதங் களாலும், மற்றவர்களின் தவறான நடத்தைகளாலும் எரிச்சலடைய மாட்டார்கள், அதிருப்தியடையவும் மாட்டார்கள். R1646:4 பரம்பரை பலவீனங்கள் கூட உண்மையுள்ளவர்களுக்கு “மிகவும் அதிகமான நித்திய கனமகிமைக்கு” ஏதுவாக கிரியை செய்யலாம். (2 கொரி. 4:17) R4712:4 அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடக்கச் செய்கிறார். R5132:3 “இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்க ளினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகள்” எனும் பிரதிநிதிகள் (agency) மூலமாக. (எபி. 1:14) F76

**அறிந்திருக்கிறோம்** – நமது உயரிய நன்மைக்கானவையே அல்லாமல் வேறெதுவும் நமக்கு நேரிடாது என்று தேவன் வாக்களித்துள்ளார். R5403:1, 4628:5, 4219:6 வாழ்க்கையின் அனைத்து அனுபவங்களும் தெய்வீக மேற்பார்வையின்கீழ் இருப்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம். R5403:1, 5781:5, 5132:3, 2412:6, 2083:3 இது கிறிஸ்தவருக்கு வல்லமையின், பலத்தின் ஓர் ஆதாரமாக இருக்கின்றது. R5977:6 இது நமக்கு உண்மையான “இரண்டாம் ஆசீர்வாதமாக” அமைகிறது – இது நமது இருதயங்களை ஆழ்ந்த இளைப்பாறுதலுக்குள்ளாகவும், தேவன் பேரிலான முழு நம்பிக்கைக்குள்ளாகவும் அழைத்துச் செல்கிறது. F134

## 46. உரோமர் 8:31

### “இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?”

**நாம் என்ன** – நமது நடத்தையிலும், ஜெபத்திலும் நாம் வெளிப்படுத்துகிற பெலவீனங்களையும், குறைபாடுகளையும் தேவன் பொருட்படுத்தாமல், நம்முடைய சிந்தைகளின் ஆவியின்படி (மனப்பான்மையின்படி) நம்மை ஆசீர்வதிக்கிறார் எனும் பார்வையில். E290 – 291

**இவைகளைக்குறித்து... சொல்லுவோம்?** – இங்கே மகிமை மற்றும் சுதந்தரத்துவத்திற்கான அடிப்படையாக அல்லது படியாக நீதிமானாக்கப்படுதல் இருக்கிறது என அப். பவுல் விவாதித்து வருகிறார். R504:1

**தேவன்** – சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார், அவருடைய வாக்குத்தத்தங்களும் பராமரிப்புகளும், சுற்றிலும் இரட்சிப்பு மற்றும் பாதுகாப்பின் அரண்களாக இருக்கின்றன. R1653:5

அவரது எல்லையில்லாத ஞானம் மற்றும் வல்லமையோடும், சகல பரம அதிகாரங்களோடும். R2377:5, 4214:3

**நம்முடைய பட்சத்தில்** – இப்படியாக, நம்முடைய தெரிந்துகொள்ளுதலுக்காக தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால். E291; F183; R4213:2, 2376:3 நம் பக்கத்தில். CR461:1 சிறு மந்தை. R2377:5, 4214:3, 2378:1 தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்து, அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தால் நம்மை மீட்டு, அவருடைய “தெரிந்துகொள்ளப்பட்ட” சபையாவதற்கு நம்மை அழைத்திருக்கிறார். R3052:4, 1141:4, 504:1, 393:4 தேவனுடைய சமாதானம் நம்முடைய இருதயங்களில் ஆண்டுகொண்டிருந்தால், அது எல்லா மனித புரிதலுக்கும் அப்பாற்பட்டதாயிருக்கும். R4708:1 தேவன் நம்முடைய பக்கம் இருப்பதாலும், எல்லா எதிர்ப்புகளின் ஊடேயும் அவர் நம்மை தூக்கி சுமந்து செல்வதற்கு முற்றிலும் வல்லவராயிருக்கிறார் என்பதாலும், எந்த எதிர்ப்பும் நமக்கு பயத்தையோ நடுக்கத்தையோ ஏற்படுத்த வேண்டியதில்லை. F183 இது சர்வவல்லவரின் ஞானம் நமது நலனுக்கேதுவாக வேலைசெய்கிறது என்பதையும், சர்வவல்லவரின் வல்லமை நமது சார்பாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும், சர்வ வல்லவரின் அன்பும் எல்லையற்ற நற்குணமும் நம்மைக் கவனித்து, நம்மைப் பராமரித்து, உதவி செய்து வருகின்றது என்பதையும் அர்த்தப்படுத்துகின்றது. R4212:3 இந்தப் பாக்கியமான வாக்குறுதியானது போதகருக்குத் தைரியத்தைக் கொடுத்தது. R4708:1 சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க ஜனங்களுக்காக; அதிலும் குறிப்பாக அழைக்கப்பட்டவர்களில் தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்பவர்களுக்காக. R2377:4, 4214:2 மெத்தடிசம், யுனிவர்சலிசம் மற்றும் யூனிடேரியனிசம் என்பவை போதித்தபடி, எல்லாருக்குமானதும் அல்ல, எல்லா இடங்களிலும் அல்ல. R2375:6, 4212:3

**இருந்தால்** – நான் அதை நிரூபித்திருந்தால். R2378:2, 4214:6

**நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?** – நமக்கு எதிராக யார் வெற்றியடைய முடியும். R3052:4 பேய்களாக இருந்தாலும் சரி, மனிதராக இருந்தாலும் சரி, எவ்வளவு திரளாக இருந்தாலும் சரி, எவ்வளவு வலிமையாக இருந்தாலும் சரி. R4379:6, 5043:6, 4214:6, 2378:2-5 உள்ளேயும் புறம்பேயும். R1985:2 மேற்கொள்ளுவதற்கு, நமது நம்பிக்கையை முறியடிப்பதற்கு. R1956:2, 3155:6, 3052:4 பாதகமான அனுபவங்கள் கூட தெய்வீக அனுமதி பெற்றவையாக இருக்கின்றன. R4325:4, 1956:2 நமக்கு எவ்வளவு எதிராளிகள் இருந்தாலும்சரி, நமது சார்பாக சகல ஞானமும், சக்தியும், அன்பும் பயன்படுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. R2378:5, 4215:4, 2880:5, 1141:4 நமது எதிராளிகள் அனைவரும் ஆவியின் பட்டயத்தால் எதிர்க்கப்பட வேண்டும். ஏற்றகாலத்தில் தேவன் தற்கால தவறுகளையும் பொய்களையும் சரிசெய்வார். R2378:4, 4215:2. இந்த அதிகாரத்தின் 31 – 39 வரையிலான வசனங்கள், “ஒருதடவை கிருபையில் இருந்தால், எப்பொழுதுமே கிருபையில் இருப்பதாகும்” என்பதைப் போதிக்கின்றன என நம்புகிறவர்கள், ’கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்’ என்று தெரிவிக்கும் ஏராளமான மற்ற வசனங்களைப் பார்த்ததில்லை என்பதையே அர்த்தப்படுத்தும். R2286:3

## 47. 1 கொரிந்தியர் 3:21, 23

### வ. 21 – “இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே;”

**எல்லாம்** – மகிமை, கனம் மற்றும் அழியாமையில் அவரோடு உடன் சுதந்தரராவதற்காக பூமிக்குரிய விஷயங்களைப் பலிசெலுத்துவது. R4998:6, 3161:6

**உங்களுடையதே** – புதிய சிருஷ்டிகளுடையது; விசுவாசிகளுடையது – இதுவரைக்கும் எதுவுமே உலகத்திற்குச் சொந்தமாகவில்லை. R5088:3, 4998:6 இப்போதும்கூட கர்த்தருடைய பின்னடியாரில் சாந்தகுணமுள்ளவர்கள், “சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்” என்கிற வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தை ஓரளவுக்குப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். R3734:6 ஓர் அடையாள அர்த்தத்தில், விசுவாசத்தின் மூலமாக. R2586:3 கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கடைகளில் காட்சிப்படுத்தப்பட்ட கலைப் படைப்புகளை, தங்களுடைய விசேஷித்த பராமரிப்பின் கீழாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற எந்த வாஞ்சையும் இல்லாமல், அவைகளைப் பார்த்து இரசிக்கலாம். R3734:6 அபிஷேகம் செய்யப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் எனும் கூற்றிற்கான பொதுவான மேற்கோளாக இருக்கிறது. R2157:2

### வ. 23 – “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்.”

**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்** – எந்தவொரு சபை உட்பிரிவோ அல்லது குழுவோ அல்ல, மாறாக சபை பாகுபாடின்றி, கர்த்தருடன் இருதய உடன்படிக்கையில் பிரவேசித்திருக்கும் தனிநபர்கள். இவர்கள்தான் வேதாகமத்தில் தேவனுடைய பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். R5692:2 இயேசு நம்மை விலைக்கொடுத்து வாங்குபவராக இருக்கிறார் எனும்போது, எல்லா மனுஷரும் அவருக்குச் சொந்தமானவர்களும், அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் இருப்பவர்களுமாவார்கள்; தாம் விரும்புகிறபடியெல்லாம் அவர்களுக்குச் செய்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. R387:4 பிரபஞ்சத்தின் மகாராஜாவின் மாட்சிமைமிக்க குமாரனுடன் நாம் இன்றியமையாத வகையில் இணைக்கப்பட்டுள்ளோம். R4784:1

**கிறிஸ்து தேவனுடையவர்** – தேவன் தமது மகிமையிலும், பிரபஞ்சத்தின் ஆளுகையிலும், கிறிஸ்துவையே தம்முடைய ஒரே பங்காளியென ஆக்கியுள்ளார். R4784:1 தேவனே மாபெரும் மூல ஜீவ ஊற்றாகவும், ஆசீர்வாதத்தின் ஊற்றாகவும், நமது கர்த்தராகிய இயேசுவால் செயல்படுத்தப்பட்ட மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் காரணராகவும் – அனைவருக்கும் மகத்தான பிதாவாகவும் ஆண்டவராகவும் இருக்கிறார். E142; NS609:6

## 48. 1 கொரிந்தியர் 10:13

### “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்”

**தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்** – நமது தரப்பிலும் உண்மைத்தன்மை தேவைப்படுகின்றது. R1211:2* நாம் உண்மையுள்ளவர்களாக சகிக்கும் போது கர்த்தர் நம்மோடுகூட அருகில் இருப்பார் என்பதை உணர்ந்து, உபத்திரவத்தில் மேன்மைபாராட்டுகிறோம். R3281:4, 4004:6 நம்மால் எவ்வளவு சகிக்க / தாங்கிக்கொள்ள முடியும் என்பதை பிதாவானவர் அறிவார். R5440:4; Q459:T

**உங்கள் திராணிக்கு மேலாக** – நம்மால் தாங்கிக்கொள்ள முடிகிறதையும் தாண்டி. R5440:4, 962:2 எதிர்த்து நிற்பதற்கும் மேற்கொள்வதற்கும். R2568:5, 699:1 தாங்கிக்கொள்வதற்கான திராணி. R964:6, 962:2 சோதனையான அனுபவங்கள் புதிய சிருஷ்டியை நசுக்க வேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கம் அல்ல; மாறாக எதிராளியையும், ஒவ்வொரு தீமையையும் எதிர்த்து நிற்பதற்காக ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியுமே நம்மை இன்னுமதிகமாக பலப்படுத்திடும். R5902:6,

5764:1*, 5440:4 நமது குணலட்சணங்கள் எனும் விலையேறப்பெற்ற பொன்னானது அழிக்கப் படுமளவுக்கு அல்லது சேதமடையுமளவுக்கு சூளையின் வெப்பம் மிகவும் உக்கிரமடைவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. R5802:6, 4386:6 “அவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது” என்கிற உத்தரவாதத்தின் கீழாக, கர்த்தராகிய இயேசுவே ஆவியினால் ஜெநிப்பிக்கப் பட்டவர்களுடைய சகாயராக இருப்பதினால், அவர்களுக்கு அதிக நன்மைகள் இருக்கின்றன. (உரோ. 8:28) R5681:5, 5878:6, 5239:4, 4628:5, 3865:1; NS122:3, 373:5, 482:1

**சோதிக்கப்படுகிறதற்கு** - மற்றும் பரீட்சிக்கப்படுகிறதற்கு. R962:2 அவர் நாம் இடறுவதற்கு அனுமதித்தாலும், நாம் அவரை நம்பும் வரையில், அவர் நம்மை முற்றிலும் தள்ளுண்டு போகும்படிக்கு – இரண்டாம் மரணத்தில் விழும்படிக்கு – விட்டுவிடமாட்டார். F161

**இடங்கொடாமல்** – அனுமதியாமல். R964:6, 962:2; Q459:T

**தாங்கத்தக்கதாக** - சோதனைகள் புதிய சிருஷ்டியின் பலவீனத்தின் அளவிற்கேற்ப இருக்கும். R4628:5, 4164:6 ஆனால், எந்தவொரு உண்மையான தேவனுடைய குமாரனும் பொறுமை, விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றுக்குத் தேவையான சோதனைகளிலிருந்து விலக்கப்படுவதில்லை எனுமளவுக்கு அதை நாம் நம்பலாம். R3820:1, 3281:5, 3236:6

**சோதனையோடுகூட** - ஒவ்வொரு சோதனையோடுகூட. R4628:5 அல்லது பரீட்சை. R2005:3, 28:3*; NS565:5 சிரமம். R699:1 தாங்குவதற்கு மிகவும் கடினமான. R2357:1 நாம் கர்த்தரை நோக்கி கூப்பிடத்தக்கதாக, புயல்கள் நம்மை மேன்மேலும் அழுத்துவதற்கு அவர் அனுமதிக்கின்றார். அப்போது அவர் நம்மைக் கேட்டருளி நமக்குத் தேவையான விடுதலையைத் தந்தருளுவார். R5239:4 பூர்வ காலத்துப் பாத்திரவான்களை விடவும் பெரிய பெரிய சோதனைகளைச் சகிப்பதற்கு நாம் அழைக்கப் படவில்லையே. R28:3*

**தப்பிக்கொள்ளும்படியான** - சோதனையிலிருந்து. R962:2 சிக்கலைக் கையாளும்படியான. R5498:2 அதனால் வாழ்க்கையின் சோதனைகள் புதிய சிருஷ்டிகளாக நம்மை எரித்துவிடாமல், வெறும் களிம்பை மாத்திரம் நீக்கும்படியாக. NS671:6 பொல்லாங்கன் மெய்யாகவே கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களை முற்றிலும் அழித்துவிட முடியும், ஆனால் அவ்வாறு செய்ய அவன் அனுமதிக்கப்படமாட்டான். இவ்வளவு தூரம் போக அவன் முயற்சி செய்யலாம், ஆனால் அதற்கு மேல் அவனால் செல்ல முடியாது. R3807:3; SM392:2 தேவையற்ற துக்கத்தையும், தேவையற்ற துன்பத்தையும் அனுமதியாதளவுக்கு அவர் நம்மை மிகவும் நன்றாய் அன்புகூருகின்றார். R5802:6 தேவன் இஸ்ரயேலரை மாராவின் கசப்பான தண்ணீரிலிருந்து ஏலிமுக்கும், அதன் இளைப் பாறுதலுக்கும், நிழலுக்கும் அழைத்துச் சென்றதில் இது அடையாளமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. (யாத். 15:27) R5278:6

**போக்கையும் உண்டாக்குவார்** - ஒரு வழியைத் தந்தருளுவார். R4628:5, 5498:2, 699:1 கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கான வாஞ்சை இல்லாத காரணத்தினால் அல்லாமல், மாறாக மாம்சீகப் பலவீனத்தின் காரணமாக, நமது பலமும் சகிப்புத்தன்மையும் தோல்வியடையும் அந்தத் தருணத்தில் அவரே ஒரு வழியைத் திறந்தருளுவார். R962:2 நமக்கு மிகவும் பாரமாக இருக்கும் விஷயங்களிலிருந்து தேவன் நம்மை விடுவிக்கின்றார். R5119:2 அவர் நமது நலன்களை மேற்பார்வை செய்வார். SM392:2 ஒருவேளை லவுகீக கவலைகளினால் அதிக பாரமடையும்படிக்கு நீங்கள் பலமாய்ச் சோதிக்கப்பட நேர்ந்தால், தேவன் சுட்டிக்காட்டும் தப்பித்துக்கொள்ளும்படியான போக்கிற்காக விழிப்போடு கவனித்திருங்கள். R572:2* இது நமது வியாபார உறவுகள் முதலிய அனைத்திற்கும் பொருந்தும். R5498:1, 572:2* நாம் ஊக்கத்தோடு, நம்மால் செய்ய முடிந்ததைச் செய்வோம் என்றால். R699:1

## 49. 2 கொரிந்தியர் 4:8 – 10

**வ. 8 – "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;"**

**திருவிவிலியம் – "நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை: குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை."**

**ஒடுங்கிப்போகிறதில்லை** - தொல்லைகள் / இன்னல்கள் அனைத்தும் நன்மைக்கேதுவாகவே செயல்படும் என்று, கர்த்தருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின்மேல் நம்பிக்கையாயிருப்பதினால் (ஒடுங்கிப்போகிறதில்லை). R5670:6 பரி. பவுலுக்கு எப்போதும் தேவனுடைய கிருபையே போதுமானதாயிருந்தது. R2426:1*

**நம்பிக்கை இழப்பதில்லை** (திருவி) - காரியங்கள் மிகவும் இருளாகத் தோன்றினாலும், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை" என்று கர்த்தரே கூறியிருப்பதால், கர்த்தருடைய ஜனங்கள் மனமுறிவடைகிறதில்லை / நம்பிக்கை இழப்பதில்லை. (எபி. 13:5) R5671:2 கர்த்தருடைய ஜனத்தின் கவலையோ நிச்சயமற்றதன்மையோ ஒருபோதும் நம்பிக்கை இழந்தநிலை என்கிற அளவிற்குச் சென்றுவிடக்கூடாது. R5671:2

**வ. 9 – "துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை."**

**திருவிவிலியம் – "துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை: வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை."**

**துன்பப்படுத்தப்பட்டும்** - தேவன்மீதும், அவருடைய திட்டத்தின்மீதும் நீங்கள் கொண்டுள்ள அன்பினிமித்தமாகவும், சுவிசேஷத்தைச் சொல்ல விரும்புவதனிமித்தமாகவும், பெயர்க்கிறிஸ்தவர் கூட உங்களை விசித்திரமானவர் என்று நினைப்பார்கள்; கிறிஸ்துவினிமித்தம் நீங்கள் கனவீனமடைந்து, பைத்தியம் என்று எண்ணப்படுவீர்கள். A347 சிலர் துன்புறுத்தலை அனுபவிக்கும் மையப் புள்ளியாக இருப்பார்கள், மற்றவர்களோ அப்படித் துன்புறுத்தப்படுபவர்களுடன் சேர்ந்து பாடுபடுவதன் மூலமாக, அந்தத் துன்புறுத்தல்களில் பங்கடைகின்றனர். R5670:3 துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடுபவர்களை நாம் கண்டனம் செய்யக்கூடாது. "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்." (மத். 10:23) R5671:3 துன்புறுத்தல்கள் நமக்கு வரும்போது, அவைகள் ஏற்படுவதற்கு நமது போக்கினில்தான் ஏதாவது காரணமாக அமைந்துவிட்டதா என முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். R5671:3

**கைவிடப்படுகிறதில்லை** - நீதியினிமித்தம் துன்புறுத்தப்பட்டாலும், கர்த்தருடைய ஜனங்கள் கைவிடப்படுகிறதில்லை. R5671:3

**கீழே தள்ளப்பட்டும்** - ஆவியில் ஒரு பாரம், தனிமையின் உணர்வு, மன அழுத்தம் போன்றவற்றை உணருவது; இவை ஓரளவிற்கு சரீர ஆரோக்கியத்தில் ஏற்படும் பலவீனத்தின் மூலமாக இன்னும் மிகுதியாக நமக்குள் உணரப்பட வாய்ப்புள்ளது. (சரீரரீதியாக பலவீனமாகவோ அல்லது வலியுடனோ இருப்பவர்கள் மன அழுத்தத்தையோ மனக்கஷ்டத்தையோ மிகுதியாக உணருவதற்கு வாய்ப்புள்ளது.) R5671:4

**அழிந்துபோவதில்லை** (திருவி) - சுவிசேஷத்தின் ஆறுதல்கள் இல்லாமல், சுவிசேஷத்தின் உபத்திரவங்களைச் சகிக்க முடியாது. R27:3* கர்த்தர் துன்பத்தை அனுமதிப்பாராயின், அது நம்முடைய விசுவாசத்தையும், நேர்மையையும் அழிக்க அனுமதியாதபடிக்கு, நாம் மன உறுதியைக் / துணிவைக்

கடைப்பிடிக்க வேண்டும், பொறுமையுடன் சகிக்க வேண்டும். R5671:4

### வ. 10 – "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."

**எங்கள் சரீரத்தில்** – மனித சரீரத்தில் – இந்தச் சரீரம் புதிய சிருஷ்டிக்குச் சொந்தமாகும். R5671:6 இப்போது நாம் பிரயோஜனமுள்ளவர்களாக இருக்கத்தக்கதாக நாம் கர்த்தருடைய ஆவியை மேன்மேலும் வளர்த்திக்கொள்ள வேண்டும். முதலில், எடுத்துக்காட்டாக (ஜீவிப்பதன் வாயிலாக). தேவன் இதனை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். நீங்கள் கொடுக்கக்கூடிய அத்தகைய எடுத்துக்காட்டும் தூண்டுதலும் சகோதர சகோதரிகளுக்குத் தேவைப்படுகின்றது. R5901:5*

**விளங்கும்படிக்கு** – தெளிவாக வெளிப்படும்படிக்கு என்று (கிரேக்கப் பாஷையில்) வழங்கப்பட்டுள்ளது. E77

**இயேசுவின் மரணத்தை** – கிறிஸ்து மேலும் படவேண்டிய வேதனையை அவருடைய சரீர அங்கங்கள் நிறைவேற்றுகின்றனர். (கொலோ. 1:24 – திருவிவிலியம்) T50; R5053:6, 212:1* அவரது சரீரத்தின் மரித்துக்கொண்டிருக்கும் அங்கத்தினராக, எப்பொழுதும் கிறிஸ்துவையும் அவரது பலியையும் பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டிருக்கிறோம். R2416:1 கர்த்தரைப் போல அவருடைய ஜனங்களும், அநுதினமும் மரிக்கிறார்கள், "தங்கள் ஜீவனைக் கையளிக்கிறார்கள்." R5671:6 தலையும் சரீரமுமுடைய கிறிஸ்து எனும் மரணசாதனத்தை எழுதியவர் வாயிலாகத்தான் இஸ்ரயேலர் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறார்கள் (எபி. 9:16). நாம் பெற்றுக் கொண்ட திரும்பக்கொடுத்தல் உரிமைகளைக் கையளிப்பதே நம்முடைய பலியாகும், அவ்வாறு கையளிப்பதே மரணசாதனத்தை எழுதியவரின் சரீரமாகிய நாம் மரிப்பதாக இருக்கும். R4498:2 சாதாரணமாக மாம்சத்தைச் சிலுவையிலறைவதைக்காட்டிலும் அதிகமான ஒன்றை இந்த வேத வாக்கியம் போதிப்பதாக தெரிகிறது. R128:1 கிறிஸ்துவின் ஜீவன் அல்லது ஆவி உங்கள் சாவுக்கேதுவான சரீரத்தில் வெளிப்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார். R5901:5*

## 50. 2 கொரிந்தியர் 4:17

### "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது."

**அதிசீக்கிரத்தில் நீங்கும்** – நாம் பெற்றுக்கொள்ளப்போகிறோம் என்று எதிர்நோக்கி இருக்கிற நித்தியத்துடன் ஒப்பிடும்போது (இவ்வுபத்திரவமெல்லாம் அதிசீக்கிரத்தில் நீங்குபவையாகும்). R3275:2, 2405:1 ஒரு மாபெரிய மாற்றம் வந்துகொண்டிருக்கிறது. நாம் பக்தியினால் உந்தப்பட்டு ஊழியஞ்செய்வதால், நீதியினிமித்தமாக விடப்பட்ட ஒவ்வொரு பெருமூச்சும், சிந்தப்பட்ட ஒவ்வொரு கண்ணீரும், செலுத்தப்பட்ட ஒவ்வொரு பலியும், நம்முடைய தற்போதைய அற்ப புரிதலுக்கு அப்பாற்பட்ட வகையில் முழுமையாக ஈடுகட்டப்படும். R2543:4; OV425:T

**இலேசான நம்முடைய உபத்திரவம்** – அதாவது, சோதனைகள் – இதில் நமது சொந்த மாம்சத்துடனான போராட்டங்களும் உள்ளடங்கியிருக்கலாம். R3275:2 தற்காலத்தின் பாதகமான தாக்கங்கள், மணிகளை மெருகூட்டிவருகிற சாணைக்கல்லாய் (grindstone) இருக்கின்றன. தன்னுடைய பல்வேறு அமைப்புகளின் (agencies) மூலமாகச் செயல்பட்டுவருகிற சாத்தானை, கர்த்தர், சாணைக்கல்லைச் சுற்றுவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளுகிறார். SM325:T நமது எஜமானருடைய அனுபவங்களையும்,

அதில் அவர் காண்பித்த உண்மைத்தன்மையையும் கருத்தில் கொள்ளும்போது, அது நம்முடையதை மிகவும் இலேசானதாகத் தோன்றச்செய்கிறது. R5684:5 "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." (ஏசா. 26:3) "இந்த அடைக்கலத்தை இறுகப் பற்றிக்கொண்டிருக்கும்போது, எந்தப் புயலாலும் நம்முடைய உள்ளான அமைதியை அசைக்க முடியாது." வெளிப்புற சூழ்நிலைகள் எப்படியாக இருந்தாலும்சரி, நமக்கோ சமாதானம் இருக்கும். R5879:2 இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரால் இப்போது தங்களுடைய விசுவாசத்தின் மூலமாக வாக்குத்தத்தங்களை தங்களுடைய தென்று உறுதியாக பிடித்துக்கொள்ள முடிகின்றபடியால், தங்களுக்கு முந்தி அந்நியமாக இருந்த – உலகத்தால் கொடுக்கவோ எடுக்கவோ முடியாத – அந்தச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும்கூட இப்போது அவர்களால் பெற்றுக்கொள்ள முடிகிறது. R2762:6 கிறிஸ்துவினிமித்தம் நமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு முள்ளின் காயத்தின் மத்தியிலும், ஒவ்வொரு கசப்பான வார்த்தைகள் எனும் கூர்மையான அம்புகளின் வலியின் மத்தியிலும் கூட, ஆவியிலே களிகூருவது என்பது நம்முடைய தைரியத்திற்கும் வைராக்கியத்திற்கும், அவசியமானதாயிருக்கிறது. R4592:4 உரோ. 12:1 – "நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் – இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." நியாயமான பகுத்தறிவு வாதம், நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம், நிழல் மற்றும் சரித்திரம் என்பவைகள் மூலமாகப் பரி.பவுல் சத்தியத்தைப் போதிக்கின்றார். R1566:1 இழப்புகள் முதலில் பாரமாகத் தோன்றலாம், ஆனால் கிறிஸ்துவினிமித்தம் நீங்கள் அவைகளைச் சற்று சகித்துக் கொண்டால், பிற்பாடு அதற்குச் சரிஈடுசெய்யும்படியாகக் கிடைக்கப்போகும் ஆசீர்வாதங்களுடன் ஒப்பிடும்போது இந்த இழப்புகளெல்லாம் ஒன்றுமேயில்லை என்று உங்களால் விரைவிலேயே சொல்ல முடியும். (பிலி. 3:8) R2444:2 நம்முடைய பிதாவின் ஞானம் மற்றும் அன்பின் மீது நாம் வைக்கும் விசுவாசமே நம்மை நிலைநிறுத்தச் செய்கின்றது, நாம் விசுவாசிப்பதற்கும் காரணமாகின்றது, மேலும் நமது துன்பங்களால் நம்மை ஆதாயமடையவும் செய்கின்றது. R423:6* இந்தச் செதுக்குதல்கள், சிட்சைகள் "இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல." (உரோ. 8:18) NS604:5, 338:2 உண்மையான கிறிஸ்தவராகிய தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், கிறிஸ்து இயேசுவுடன் மேன்மையான சந்தோஷங்களை அனுபவிக்கின்றபடியால், அவர்களால் பூமிக்குரிய துன்பங்களுக்காக அடிக்கடி தேவனுக்கு நன்றி சொல்ல முடியும். "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்." (சங். 119:67) SM330:T அப்போஸ்தலருடைய வார்த்தையின் மூலமாக விசுவாசிக்கிறவர்கள், உபத்திரவங்களை ஈடுகட்டும் வேதவாக்கிய ஆறுதல்களைப் பெற்றிருக்கிறார்கள். SM271:T தேவபக்தியினிமித்தமாகவும், நீதியினிமித்தமாகவும், கர்த்தர் நிமித்தமாகவும், அவருடைய ஜனங்கள் நிமித்தமாகவும், சத்தியத்தினிமித்தமாகவும் சுயத்தைப் பலிசெலுத்துவதினால் வருகிற பாடுகளோடுகூட சந்தோஷமும் சமாதானமும் இணைசேர்ந்து வரும்; தன்னை திருத்துவதற்காகவும், தான் உண்மையில்லாமல் இருந்ததினிமித்தமாகவும் வருகின்ற துன்பங்கள் சந்தோஷத்தையும், களிகூருதலையும் உண்டுபண்ணமாட்டாது. R1699:6 நமது மாம்சத்தை அழியப்பண்ணும் காரியமானது, வேறெந்த ஆதார மூலத்திலிருந்து (source) வருவதைக்காட்டிலும், சகோதரர் என்று கூறிக்கொள்பவர்களிடமிருந்தே அதிகமாக வருகின்றது. NS592:2; SM630:1 நம்முடைய வியாபாரத்தையும், நம்முடைய குடும்பத்தையும், உலகத்தையும், அதன் (சிற்றி)இன்பங்களையும், எதிராளியானவன் நம்மைத் திசைத்திருப்புவதற்காக நம்மைச்சுற்றிலும் வைத்துள்ள மற்ற காரியங்களையுமே நாம் கண்ணோக்கிக் கொண்டிருந்தால், நம்முடைய துன்பங்கள் / பாடுகள் நமது பரத்திற்குரிய மகிமைக்கேதுவாக கிரியைசெய்யாது. R456:1*

**மிகவும் அதிகமான** – இராத்தல் பற்றின உவமையானது (லூக். 19:17) உண்மையுள்ளவர்களுக்கான வெகுமதியில் காணப்படும் வேறுபாடுகளைக் காட்டுகின்றது. மத். 11:11ம் வசனமானது சிலர் "பரலோக இராஜ்யத்தில் சிறியவனாய்" இருப்பதைப் பற்றி பேசுகிறது. R1973:5 மிகவும் அதிகமான

மகிமையொன்று தெரிந்துகொள்ளப்பட்ட சபையார் அனைவருக்குமான ஒரு சுதந்தரமாகக் கிடைக்கப் போகிறது என்றாலும், அந்தப் பொக்கிஷத்தை விசேஷித்த வைராக்கியத்தாலும், உண்மைத்தன்மை யினாலும் வெகுவாய் அதிகரித்திடலாம் என்பதை அப்போஸ்தலன் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். R1821:2

**நித்திய கனமகிமையை** – "நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிறார்." (1 பேது. 5:10) A211 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக." (2 தெச. 2:14) A211 "மகிமையின் ஐசுவரியம்." (கொலோ. 1:27) A211 "அவருக்கு ஒப்பாயிருப்போம்." (1 யோவா. 3:2) A211 நாம் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக அழைக்கப்பட்டுள்ளோம்." (2 தெச. 2:14) R5684:5 "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்." (யோவா. 17:22) A211 பரலோக மகிமை – கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்களித்த காரியங்கள். R5223:6 உபத்திரவத்தின் போதும் நாம் சந்தோஷப்படுவோம்; ஏனென்றால், நாம் அதனை சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, அது நமக்கு "நித்திய கனமகிமையை" உண்டாக்கும். துன்பத்தின் மத்தியிலும் தாங்கிப்பிடிக்கும் கிருபையை அருளுவேன் என்று கர்த்தர் வாக்களிக்கிறார். R5758:4, 5546:6 அவரை நம்புகிறவர்களுக்கும், "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்று கர்த்தர் நமக்கு உறுதியளிக்கிறார். (உரோ. 8:28) நமக்கு ஆசீர்வாதமாக இல்லாத எதுவுமே நமக்கு அனுமதிக்கப்பட மாட்டாது. R5546:6 கர்த்தரைச் சேவிக்கவும் அவருக்குப் பிரியமாயிருக்கவும் விரும்புகிறோம்; அவருடன் முடிந்தவரை நெருக்கமாக இருக்க விரும்புகிறோம். தற்கால சோதனைகளின்போது, உண்மையுடன் அவரிடத்தில் எந்தளவிற்கு நெருக்கமாக வருகிறோமோ, அந்தளவிற்கு எதிர்காலத்திலும் அவருடன் நெருக்கமாக காணப்படுவோம். R3362:6 வாழ்க்கையின் சோதனைகளையும், சிரமங்களையும் துன்பங்களையும், நமக்கான பாடங்களென்று சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, அவை மாறுவேடத்தில் வந்த ஆசீர்வாதங்களாக காணப்பட்டு, எதிர்காலத்தில் மகிமையையும் உண்டுபண்ணிடும். R2737:3 "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்." (சங். 73:24) பெரும்பாலும் வலிமிகுந்ததாக இருந்தாலும், தற்போதைய தீமைகளுக்கு நாம் உள்ளாகுவது, தேவனுடைய பராமரிப்பின்கீழாக, அவசியமாயிருக்கின்றது. R1561:2 கிறிஸ்துவின் ஆளுகை தொடங்கும் போது, அனைத்து சரீர அங்கங்களும் மகிமையைப் பகிர்ந்துகொள்ளுவார்கள், ஆளுகையைப் பகிர்ந்துகொள்ளுவார்கள். NS338:3 பழைய சுபாவத்துக்கும், புதிய சுபாவத்துக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போரில், அவைகளுடைய நாட்டங்கள் / நலன்கள் ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்டதாயிருக்கின்றன; ஒன்றின் வளர்ச்சியும் வெற்றியும், மற்றொன்றை வீழ்த்தவும், அழிக்கவும் செய்யும். SM632:T தனது எஜமானரின் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தானும் பகிர்ந்துகொள்ளப்போகிறேன் என்கிற நம்பிக்கை பரி.பவுலிடம் காணப்பட்டபடியால், அவர் இயேசு கிறிஸ்துவின் ஒரு நல்ல போர்ச்சேவகனாகக் கஷ்டத்தைச் சகிக்கவும், தன்னுடைய அனைத்துப் பாடுகளையும் இலேசான உபத்திரவங்களாக எண்ணவும் தயாராக இருந்தார். R5851:1 தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத் தெய்வீகத் தயவை வழங்கும் நேரம் இன்னும் வரவில்லை. அது வரும்போது, திருச்சபை தங்கள் கர்த்தரோடு மகிமையில் பிரகாசித்துக்கொண்டிருப்பார்கள். NS338:2 "மனுஷர் உங்களை நிந்தித்தால் ...பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." (மத். 5:11, 12) "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்." (2 தீமோ. 2:12) R3776:5 ஆவியினால்–ஜெநிப்பிக்கப்பட்ட ஆபிரகாமின் ஒரு சந்ததியானது பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்காக, மகிமையில் தேவனுடைய பிரதிநிதியாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக, அவர்கள் சோதனைகள் மூலமாக வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது. SM784:1

**Worketh for us / (நமக்கு) உண்டாக்குகிறது** – நம்மை ஆயத்தப்படுத்துகிறது. R2413:3 அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தங்கள் வளர்ச்சி மற்றும் பரீட்சைக்காக, "கிறிஸ்துவின் பள்ளியில்" தற்போது காணப்படுகின்றனர். R3637:2 பலிசெலுத்துபவர்களின் வாழ்வில் அனுமதிக்கப் படும் மரபுவழி சரீர பலவீனங்கள், பிரச்சனைகள் மற்றும் வலிகள் போன்றவை தேவனுடைய கோபத்தின் வெளிப்பாடுகள் அல்ல, மாறாக அவர்களை மகிமைக்குத் தயார்ப்படுத்துவதற்கேதுவாக அவை மேற்பார்வையிடப்படும் என்று கர்த்தர் நமக்கு உறுதியளிக்கிறார். E411 தேவன் எதிராளி அனுப்புகின்ற எதிர்ப்பின் வெளிப்பாடுகளைப் பயன்படுத்திக்கொள்கிறார், மேலும் மனிதர்கள் மற்றும் பிசாசுகளின் கோபத்தை தமக்கு மகிமை உண்டாக்கும்வண்ணமாக கிரியைசெய்ய வைக்கிறார்; அவருடைய திருச்சபைக்கான இந்த அனுபவங்கள் நம்முடைய மகிமைக்கு ஏதுவாக கிரியைசெய்கின்றன. F628 கிறிஸ்துவின் துன்பங்கள் கிறிஸ்துவின் வரவிருக்கும் மகிமைகளை அளவிடுவதாக இருக்கும்பட்சத்தில், அந்த மகிமைகளில் பங்கடைவதற்கேதுவாக கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிரப்புவதற்கு தான் தயாராகவும் ஆர்வமாகவும் இருப்பதாக அப். பவுல் நியாயமாக தன்னுடைய கருத்தை முன்வைக்கிறார். R5951:5 கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவரும், தற்காலத்தில் துன்பப்படுவதன் மூலமாக, தங்கள் கீழ்ப்படிதலை நிரூபிக்க வேண்டியிருக்கிறது, இப்படியாக அவர்கள் மகிமைக்குத் தயாராக்கப்படுகிறார்கள். அதிக துன்பங்களை அனுபவிப்பது என்பது மறுமையில் உயரிய மகிமைக்கான தகுதியைக் குறிக்கிறது. R2825:4 நாம் தெய்வீக மேற்பார்வையின்கீழாக இருக்கிறோம். இதுவே நமது தைரியத்திற்கான அடித்தளமாகும், மேலும் தேவனுடைய சமாதானத்தையும் இது நமக்குத் தருகின்றது. "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது." (யோவா. 19:11) R2786:6 உள்ளவன் (பயன்படுத்தியவன்) எவனோ அவனுக்கு (அதிகமாக) கொடுக்கப்படும், இல்லாதவன் (பயன்படுத்திக்கொள்ளாதவன்) எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். (மத். 13:12) சிறிய சோதனைகளில் உண்மையாக இருப்பது கர்த்தருக்குள் அதிக பலத்தை உண்டுபண்ணும். R2496:6 நமக்குத் தேவையில்லாத, நமக்கு நித்திய மகிமையை உண்டுபண்ணாத எந்தக் கசப்பான அனுபவங்களையும், கர்த்தர் நம்முடைய துக்கம் மற்றும் சோதனையின் பாத்திரத்தில் ஊற்றுவதில்லை. R2469:1 கிறிஸ்துவுடன் துன்பப்படுவதற்கு வாய்ப்பில்லாத எவரும் "அழைக்கப்பட்டவர்களில்" ஒருவராக இருக்க முடியாது; நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன: அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; பாடுகள் நம்முடைய மகிமைக்கு ஏதுவாக கிரியைசெய்திடும். (2 தீமோ. 2:12) R1782:6 வழக்கத்திற்கு மாறான துன்பங்களால் எதிராளி நம்மைச் சோதிப்பதற்கு பிதாவாகிய தேவன் அனுமதிக்கும்போது, (அநித்தியமான) காணப்படுகிறவைகளை ஆசையோடு துரத்திச்செல்வதை நிறுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருப்போம், அப்போது நமது ஆவி மிகுந்த அழுத்தத்துடன்: "ஆண்டவரே! எங்களை இரட்சியும்!" என்று உரத்த சத்தமிடும். R456:1* நம்முடைய அன்பான மீட்பர், நம்முடைய வாழ்க்கையில் சோதனைகளை, பல சமயங்களில் அக்கினி போன்ற சோதனைகளை, நம்மைத் தாக்குவதற்காக அனுமதிக்கிறார், மேலும் அவை நம்முடைய மகிமைக்கு ஏதுவாக கிரியைசெய்யும் என்றும் உறுதியளிக்கிறார். NS597:1 தேவனுடைய பிள்ளைகளாகச் சுவிகரிக்கப்பட்டு, விசேஷித்த ஒழுங்குப்படுத்தும் சோதனைகளுக்கு உள்ளாகிறவர்கள் தேவனுக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளாக (God's favorites) இருக்கிறார்கள். NS578:2 சாத்தான் நம்மீது வெற்றி பெறவதுபோல தோன்றினாலும்கூட. R5185:1 கவலைப்படாமல் / கண்டுகொள்ளாமல் இருப்பதை விடவும் வாக்குவாதம் சிறந்ததாய் இருக்கும்; இத்தகைய கடுமையான சோதனைகள் உங்களுக்கு நல்ல பலனைத் தரும். வெதுவெதுப்பானவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும் பாக்கியத்தை இழக்கிறார்கள், ஆனால் சிறு மந்தை வகுப்பார் இந்த அனுபவங்கள் தங்களுக்கு நன்மைசெய்ய ஏதுவாக கிரியைசெய்ய அனுமதிக்கிறார்கள். R5118:4

## 51. 2 கொரிந்தியர் 5:1

**"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்."**

**கூடாரமாகிய** – கூடாரம் என்பது ஒரு தற்காலிக கட்டமைப்பாகும். CR457:4 ஒரு கூடாரம், இது திருப்தியற்றதாக இருந்தாலும்கூட, ஒன்றும் இல்லாததைக்காட்டிலும் தங்குவதற்கென்று கிடைத்த ஒரு கூடாரமாகும். F673

**பூமிக்குரிய... நம்முடைய வீடு** – பரிசுத்தவான்களின் தற்போதைய சாவுக்கேதுவான சரீரங்களே அவர்கள் பரதேசியாய்த் தங்கியிருக்கும் வீடுகளாக இருக்கின்றன. (சங். 119:54) R2231:2 மனித சரீரமானது புதிய சிந்தைக்கு, ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டிக்கு, தற்காலிக வாசஸ்தலமாக மாறியுள்ளது. R701:3* இப்போது நாம் எப்படி ஒரு "பூமிக்குரிய வீட்டில்" தங்கியிருக்கும் புதிய மனிதர்களாக இருக்கிறோமோ, அதுபோல நமது சரீரங்கள் "பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயி ருக்கிறது" என்று கூறப்படுகின்றது. (1 கொரி. 6:19) R237:2* பெயரளவிலான சபை கரைந்துபோய்க் கொண்டிருக்கிறது. என்ன ஆனாலும் சரி ("பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.") தாங்கள் இந்தப் பூமிக்குரிய வீட்டோடு ஏதோவொரு வகையில் இணைந்திருக்க மாட்டோம் என்று அஞ்சின கொரிந்தியருக்கும் கலாத்தியருக்கும், அப். பவுல், அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்றும், மாறாக அது விசேஷித்த நிஜத்துக்கு ஏற்ற ஒரு நிழலாக மாத்திரமே இருக்கிறது என்றும் கூறினார். R180:2,4* உலகத்தாருக்குச் சரீரம் என்பது தங்களில் ஒரு பாகமாக இருக்கின்றதே ஒழிய ஒரு வீடாக இருப்பதில்லை. R701:3*

**அழிந்துபோனாலும்** – பலிசெலுத்தப்பட்டாலும், கிறிஸ்துவுடன் மரித்தாலும். E196 மனித ஜீவி மரிக்கப்போகிறது – பூமிக்குரிய உருவம் கையளிக்கப்பட வேண்டும். (2 பேது. 1:14) R344:5, 340:6* தேவனுடைய ஏற்றகாலத்தில், தங்களுடைய பூமிக்குரிய வீடு கரைந்துபோன பிறகு, தாங்கள் பரலோக வீட்டைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்துகொள்வது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு முன்பே, பரிசுத்தவான்களுக்குக் கிடைத்த பாக்கியமாக இருந்தது. R702:4*

**கைவேலையல்லாத** – மனித சக்திகளால் உருவாக்கப்படாத. F673; R2231:3

**தேவனால் கட்டப்பட்ட... வீடு** – புதிய சிந்தையும், அதன் பரிசுத்தத்தின் ஆவியும் தங்குவதற்கு, எல்லா வகையிலும் தகுதியான ஒரு புதிய, மகிமைவாய்ந்த, ஆவிக்குரிய சரீரம். E196; F663; R371:3 புதிய சிந்தையின் வாஞ்சைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்ட ஒரு புதிய அல்லது ஆவிக்குரிய சரீரம் அவர்களுக்காக ஆயத்தஞ்செய்யப்பட்டுள்ளது. R701:3* "நீங்கள் (தனியாகவும் ஒட்டுமொத்தமாகவும்) தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்;" ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறீர்கள், நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்; ஆயினும் இப்போது அது மாம்சத்தில் இருக்கிற ஒரு கூடாரமாக இருக்கின்றது. (1 கொரி. 3:9, 1 கொரி. 3:16; எபே. 2:22) R1982:2 ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் தேவனுடைய வீடாக இருப்பார்கள், மோசேயின் வீடாகவோ (மாம்சத்தின்பிரகாரமான) தாவீதின் வீடாகவோ, வேறெந்த வீடாகவோ அல்லாமல், மாறாக தேவனுடைய நித்திய வீடாக இருப்பார்கள். R179:6* நாம் நம்முடைய இருதயங்களை உண்மையாக / நேர்மையாக (loyal) வைத்துக் கொண்டால், ஏற்றகாலத்தில் அதில் பிரவேசிப்போம். அப்போது நம்முடைய ஆண்டவர் நம்மை நமது பிதாவின் முன்பாக நிறுத்துவார். R5907:4 கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் தங்களுடைய சரீரங்களிலிருந்து பிரிக்கப்பட்டதாயும், வேறுபட்டதாயும் பேசப்படலாம். R5686:4

**நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு** – கிறிஸ்துவுடன் மறைந்திருக்கும் புதிய ஜீவன் மரிக்காது.

R344:5 மறுரூபமடைவதற்கு முன்பாக கர்த்தருடனான முழு ஐக்கியத்தைப் பெற்றிருக்க முடியாதே என்பதை நினைவில் வைத்தவர்களாய், மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு நாம் மறுரூபமடைவது நிறைவேற வேண்டும் என்பதே திருச்சபையின் நம்பிக்கையாக இருக்கின்றது. R701:6

**அறிந்திருக்கிறோம்** – அப்போஸ்தலன், சுபாவ மனிதனுக்கு எழுதாமல், புதிய சிருஷ்டிக்கே எழுதுகின்றார். F673

## 52. 2 கொரிந்தியர் 6:18

**"அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்."**

**உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்** – அவரது பிள்ளைகளாக மாறுவதற்கும், நம்மீது அவர் வைத்திருக்கும் தகப்பனுக்குரிய பாசத்தின் உறுதி (assurance) நமக்குக் கிடைப்பதற்கும் குறித்த என்னே ஒரு வாக்குத்தத்தம்! R5739:5

**எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்** – குமாரராகிய நாம் நமது பிதாவின் குணலட்சணத்தை அவருடைய வார்த்தையின் மூலமாக அறிந்துகொள்ளும் பாக்கியத்தை / சந்தோஷத்தைப் பெற்றிருக்கிறோம். R5739:5

## 53. 2 கொரிந்தியர் 9:8

**"மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."**

**எல்லாவற்றிலும்... சம்பூரணமுடையவர்களாயும்** – இது ஆடம்பரத்தையும், சகல சவுகரியங்களையும் குறிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை; மாறாக எவர்களிடம் "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தி" காணப்படுகிறதோ, அவர்கள் "எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாய்" இருப்பார்கள் என்பதே காரியமாகும். (1 தீமோ. 6:6) R5927:5, 2212:4 நாம் ஒருபுறம் பாத்திரத்திலிருந்து அள்ளிக்கொண்டிருக்க, மறுபுறம் சர்வவல்லமையுள்ள தேவன் அதில் ஊற்றிக்கொண்டிருக்கையில், நாம் ஒருபோதும் வறுமையில் இருக்க மாட்டோம். R449:6* அர்ப்பணிப்பு செய்த பிறகு, "நான் ஆண்டவருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என நாம் ஒருபோதும் கேட்கலாகாது, மாறாக நாம் சகலத்தையும் அவருக்கு அர்ப்பணித்துவிட்டபடியால், இப்போது "நான் எனக்காக எவ்வளவு பயன்படுத்திக்கொள்ளலாம்?" என்றே நாம் கேட்க வேண்டும். R548:4

**சகலவித கிருபையையும் பெருகச்செய்ய** – தேவனுடைய ஆவியின் மற்றெல்லா குணங்களுடனே கூட, கொடுப்பது (ஈகை) எனும் குணமும் பிரிக்கமுடியாதபடிக்கு இணைக்கப்பட்டுள்ளது. R2540:3 தெய்வீக ஊழியத்தில் யாதொன்றையாவது கொடுப்பவர், அதற்கேற்ப தானும் பல்வேறு கிருபைகளில் பெருகிவருவதைக் காண முடியும். R5927:5, 2212:4

## 54. 2 கொரிந்தியர் 12:9

**"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்**

**என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்."**

**என் கிருபை** – என் தயவு. R1745:1 ஆவிக்குரிய தயவுகள், மாறாக பூமிக்குரிய தயவுகள் அல்ல. R2009:3 நமது ஆண்டவர், சில சமயங்களில், சரீர நிவாரணத்தை வழங்குவதில் பிரியப்படலாம், மற்ற நேரங்களில் அவர் பரி. பவுலுக்குச் செய்ததைப் போல் செய்யலாம் – அதாவது, உடல் உபாதைகளைத் தாங்கிக்கொள்வதற்கான அதிக கிருபையை நமக்களிக்கலாம். R2281:1 சிரமத்தை / கஷ்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, அச்சிரமத்தை / அக்கஷ்டத்தை எதிர்கொள்வதற்கு அதிக கிருபையையும், அதிக பலத்தையும், அதிக சகிப்புத்தன்மையையும் தருவதாக கர்த்தர் நமக்கு வாக்களித்துள்ளார். R4433:5, 5952:4; CR468:5 கர்த்தர் இருதயத்திற்கு ஆறுதலளிக்கிறார், இது அவருடைய பிள்ளைகளை உபத்திரவத்தில் சந்தோஷமடையச் செய்யும். R5758:4 கர்த்தருடைய கிருபை நம்முடைய சோதனைகளின் அளவிற்கேற்ப கிடைக்கும் எனும்பட்சத்தில், அவருடைய கிருபையை அதிகமாகப் பெற்றுக்கொள்ளும்படியாக அவர் அனுப்பும் எல்லா சோதனைகளையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளுவோமாக. R4184:6 அவருடைய கிருபை நம்மை நீதிமான்களாக்குகின்றது, அவருடைய கிருபையால் நாம் திவ்ய சுபாவத்தில் பங்கடைவோம். CR469:6

**உனக்கு** – ஒரே சரீரத்தில் உள்ளவர்களும், அதின் ஒரே ஆவியால் ஆற்றல் பெற்றவர்களுமாகிய நம்மனைவருக்கும். R4433:2

**போதும்** – ஒரு புதிய சிருஷ்டியாக, பவுலுக்கு எது சிறந்ததாய் இருந்திருக்குமோ, அதையே கர்த்தர் அவருக்குக் கொடுத்திருப்பார். R5624:4 இது நமது பூமிக்குரிய வாழ்க்கையையே பலிசெலுத்த வைத்திடும் – சகோதர சகோதரிகளுக்காக தேவனுடைய ஊழியத்திலும், நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போது எல்லா மனுஷருக்கும் நன்மை செய்வதிலும் நமது ஜீவனையே கையளிக்க வேண்டியிருக்கும்; ஆனால் அவர் நமக்கு ஒத்தாசையையும், தேவையான அனைத்து உதவிகளையும் தருவதாக வாக்களித்துள்ளார். F374 உண்மையுள்ளவர்களுக்கு, எப்போது உதவி தேவைப்பட்டாலும், அவர்களது குறைவை அவர் நிவர்த்தி செய்திடுவார். R5437:4, 5477:2; Q440:T "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." (எபி. 13:5) R5058:3 ஆறு இக்கட்டுகளில் நான் உன்னுடன் இருப்பேன், ஏழாவதிலும் நான் உன்னைக் கைவிடமாட்டேன். (யோபு 5:19) R4784:2 "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலி. 4:13) R1558:5 எந்தெந்த சோதனைகளையும், சிரமங்களையும் / கஷ்டங்களையும் அவர் நம்மிடமிருந்து அகற்றவில்லையோ, அவற்றை அவர் ஞானமான மற்றும் அன்பான நோக்கங்களுக் காகவே அனுமதித்திருக்க வேண்டும். R4433:5 கிருபை எல்லாவற்றிலேயும் உதவியாக இருக்கிறது, (பவுலுடைய) முள்ளை அகற்றியிருந்திருப்பாரேயானால், அந்த ஒன்றில் மாத்திரம் அவருக்கு நிவாரணம் கிடைத்ததாய் இருந்திருக்கும். R4433:5, 5963:2 ஒருவருடைய ஊக்கமிழந்த தருணம்தான், அவர் இரட்சகரின் தேவையை உணர்வதற்கும், அவரிடம் மனம்விட்டு அழுவதற்கும், மேலும் வாக்களிக்கப்பட்ட பெலத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும் சரியான தருணமாக இருக்கின்றது. NS619:6 அப்போஸ்தலன் எருசலேமுக்குப் புறப்படுவதற்கு முந்தைய நாள் மாலையில், எதிராளியானவன் உபத்திரவத்தைக் கிளப்புவதற்கு அனுமதிக்கப்பட்டான். அப்போஸ்தலனோ, "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" (உரோ. 8:28) என்பதை அறிந்திருந்தார். R4432:1 அப்போஸ்தலன் தியானாள் தேவித் தொடர்பாக இரக்கமற்ற ஒரு வார்த்தை கூட சொல்ல அவருக்கு அங்கு எந்த அவசியமும் இருக்கவில்லை (மாறாக நற்செய்தியைப் பிரசங்கிப்பதே அவருக்குக் கொடுக்கப்பட்ட பணியாக இருந்தது). அதேபோல பாபிலோனிலுள்ள நம் நண்பர்களிடத்தில் நாம் இரக்கமற்ற வார்த்தையைச் சொல்லவோ அல்லது இரக்கமற்ற செயலைச் செய்யவோ நமக்கும் எந்த அவசியமும் இருப்பதில்லை. R4433:1 நாம் சில சமயங்களில் சோதனையில் அகப்படாமல் போகலாம் என்பதை இது அர்த்தப்படுத்தாது. R5668:6

**என் பலம்** – நம் மீட்பராகிய இயேசுவின் மதத்தில் ஓர் அற்புதமான வல்லமை இருக்கின்றது. R4432:6 திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். (யோவா. 16:33) A214 பெலவீனரும்சரி, பெலமுள்ளவரும்சரி, அவரவருக்குத் தேவையானது அருளப்படும் – கர்த்தருடைய ஏற்பாட்டின்படி, ஒருவரால் செய்ய முடிந்ததை விடவும் அதிகமான ஒன்றை யாரும் செய்ய வேண்டியதில்லை. R5886:4 வாழ்க்கையின் ஓட்டத்துடன் போராடும்போது நமது பெலத்தின் ஆதாரத்தை (Our source of strength) நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது – "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்." (ஏசா. 43:2) R4005:4 பெந்தெகொஸ்தேக்கு முந்தைய அப்போஸ்தலரை விடவும் இப்போது இருக்கும் நமக்கே அதிக அனுகூலங்கள் இருக்கின்றன. (கர்த்தருடைய இறுதி மணி நேரங்களில் சீஷருக்கு வந்த சோதனைகள்) – அவை யாவும் அவர்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்படுவதற்கு முன்பாக வந்தவையாகும், நமக்கோ நாம் அபிஷேகிக்கப்பட்ட சரீரத்திற்குள் வந்த பிறகுதான் பரீட்சைகள் வருகின்றன. R4167:6 நாம் எவ்வளவாய் விசுவாசத்தைப் பயன்படுத்துகிறோமோ, அவ்வளவுக்க திகமாகக் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவோம். இவ்வாறு தெய்வீகக் கிருபையினாலும், எஜமானரின் உதவியினாலும் நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாறுவோம். R2568:5

**பலவீனத்திலே... பூரணமாய் விளங்கும்** – உங்கள் பெலவீனத்தில் வெளிப்படும். R1745:1, 5510:1; HG652:3 எந்த வகையிலாவது எந்தளவிலாவது நாம் சோதிக்கப்படும்போது, நாம் சார்ந்து நிற்க வேண்டிய "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களில்" இதுவும் ஒன்றாகும் (2 பேது. 1:4). R1802:5* ஒவ்வொரு வெற்றிகரமான கிறிஸ்தவனுடைய வாழ்க்கையின் இரகசியமும் இதுதான். R5942:4, 1745:1 நமது பலவீனங்களும், குறைபாடுகளும் நமது மீட்பருடைய நீதியின் வஸ்திரத்தால் மூடப்படுகின்றன, இது நமது "கல்யாண வஸ்திரத்தில்" உள்ளடங்கியிருக்கிறது. இவ்வாறு நாம் பிரியமானவருக்குள் முழுமையடைந்து பிதாவின்முன்பாக நிற்கிறோம். R5855:3 'எமது பலம் பூரணமான மற்றும் மெருகூட்டப்பட்ட பாத்திரத்தைக்காட்டிலும், இந்த அபூரண மண் பாண்டத்தில் செயல்படும்போது, அது மனுஷர் முன்பாக இன்னும் அதிகமாக வெளியரங்கமாகும்' என்பதாக நாம் புரிந்துகொள்ளலாம். R1920:6 பரி. பவுலின் முள் அகற்றப்பட்டு, பலியிடுவதற்காக அவர் அர்ப்பணித் திருந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதித்திருந்தால், அது பூமிக்குரிய காரியங்களைப் பலிசெலுத்தும்போது தேவன் அருளும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவர் தப்பவிடுகிறதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கும். R4433:4 பரிசுத்த ஆவியின் கனிகளிலும், குணங்களிலும் நாம் அடையும் முன்னேற்றத்தை நாம் கவனிக்கும்போது, ஒருவேளை முன்னேற்றம் பெரிதாக இருந்தால் களிகூருவோமாக, இல்லை சிறிதாக இருந்தால் அதைப் பற்றி வருந்துவோமாக, ஆனால் ஊக்கமிழந்து போகுமளவிற்கோ அடிபணிந்துவிடுமளவிற்கோ வருத்தப்பட வேண்டாம். R4100:5 ஒருவேளை நாம் நமது எதிர்காலச் சோதனைகளைக் குறித்து முன்கூட்டியே அறிந்துகொண்டால், நாம் அநியாயமாக திணறடிக்கப்பட்டிருப்போம், ஆனால் நாம் ஒவ்வொரு அடியாக எடுத்துவைக்கும்போதோ, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையாக இருப்பதைக் காண்கிறோம்: நாம் நிலைநிறுத்தப்படுகிறோம். நம்மால் தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு எதுவும் வரப்போவதில்லை. நம்மால் ஜெயங்கொள்ள முடியும். R4164:3 சோதனையின் வேளையானது கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்து விடும், ஆனால் அவர்களின் அன்பு, வைராக்கியம் மற்றும் அதன் விளைவாக வரும் தெய்வீகத் தயவின் ஆசீர்வாதங்கள் என்பவைகளினிமித்தம் அவ்வாறு வஞ்சிக்கப்படுவதற்குச் சாத்தியமில்லை. R4167:6 இந்த அதிகாரமானது (2 கொரி. 12) கிறிஸ்தவ அனுபவத்தின் உதாரணங்களை நமக்குத் தருகிறது – நாம் பழைய மனிதனைக் களைந்து, கிருபையிலும் அறிவிலும் வளர்ந்து, கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் பிரயாசப்படும்போது, நாம் நம்மை உலகத்தால் கறைபடாதபடிக்குக் காத்துக்கொள்ள வேண்டும். R1022:4 "இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரராக" ஆக வேண்டுமென்கிற நம்பிக்கையில் ஈர்க்கப்பட்ட விசுவாசிகள், பாதையின் சோதனைகள் மற்றும் சிரமங்களினால் பயப்படுவதில்லை, குறிப்பாக மீட்பரின் வார்த்தை அவர்களை ஊக்குவிப்பதைக் கேட்கும்போது அவர்கள் பயப்படுவதில்லை. HG652:3

**ஆகையால்... மிகவும் சந்தோஷமாய்** – ஒருவேளை உபத்திரவம் வருவது என்பது அதிக தெய்வீகக் கிருபையை அர்த்தப்படுத்துமேயானால், பரி. பவுல் மனத்திருப்தி அடைந்திருப்பார் என்பது உறுதியே. R4356:6

**கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி** – (தேவனுடைய வல்லமையே) ஆயத்தமாக காணப்பட்ட கருவியாகிய சாந்தமும், மனவிருப்பமும், துடிப்புமுள்ள பரி.பவுல் மூலமாக கிரியை செய்தது. R1921:1 நம்முடைய எதிராளிகள் எவ்வளவுக்கதிகமாக நம்மைத் தாக்கி, நம்மேல் பொய்யாகக் குற்றஞ்சாட்டு கிறார்களோ, அவ்வளவுக்கதிகமாகக் கர்த்தர் நம்மையும், நம்முடைய பொறுப்பின் கீழுள்ள அவருடைய பணியையும் ஆசீர்வதிக்கிறார். R4660:6

**என் பலவீனங்களைக்குறித்து** – சரீர மறுசீரமைப்பு என்பது "சிறு மந்தைக்கு" முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை இல்லை. R749:4, 2364:6

**நான்... மேன்மைபாராட்டுவேன்** – பரி.பவுல் மற்ற அப்போஸ்தலரை விட ஏராளமான வெளிப் பாடுகளைப் (revelations) பெற்றிருந்தார், மேலும் அவர் அதிகமானோரைக் கிறிஸ்துவுக்குள் வரச் செய்து, அதிகமான சபைகளை நிறுவியுமிருந்தார், ஆயினும், அவர் தமக்கு வரும் பாடுகளையே (sufferings) மிகவும் முக்கியமானவையாகக் கருதினார். R552:1 அதற்கேற்ப நான் அவைகளை எதிர்த்து நின்று, அவைகளால் பிரயோஜனமடைவதற்கேதுவாக தேவனுடைய கிருபையை அதிகமாகப் பெற்றுக் கொள்வேன் என்பதால் (மேன்மைபாராட்டுவேன்). SM324:2

## 55. கலாத்தியர் 3:29

**"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்."**

**நீங்கள்** – சபை, மணவாட்டி. E26; R4998:6, 4956:6, 4528:5, 4370:2, 4319:3, 3937:4, 3205:6, 2854:6, 2398:3, 2209:4; CR11:2; NS273:4, 291:3, 310:5, 399:6, 443:3 இந்த வார்த்தைகள் ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலரால் கிறிஸ்தவருக்கு உரைக்கப்பட்டது, இன்றும் அவை அதே வகுப்பாருக்கு அதே அழுத்தத்துடன் பொருந்தி வருகின்றது. R1696:2

**கிறிஸ்துவினுடையவர்களானால்** – அவருடைய உண்மையான சீஷர்கள். R4453:5 கிறிஸ்துவின் அங்கத்தினர். R4528:5, 3205:6, 201:2 அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள். R1696:6 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். PD85/99; NS352:3, 540:4 நீங்கள் நிபந்தனைகளுக்கு இணங்கினால். R4681:6, 1697:1, 1696:6; Q185:4 நீங்கள் அவருடையவர்களாக இருந்தால். Q191:6; R1697:1 நாம் அவரைப் புசித்து, அவருடைய ஜீவனில் பங்கடைந்தால். R327:4* அவரோடும் அவருடைய தரநிலைகளோடும் இணைந்துகொண்டு, சிலுவையின் நல்ல போர்ச்சேவகனாக இருந்தீர்களானால். R4911:1 குறிப்பாக கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருந்தால். F361; T91; R4371:4, 4370:2, 161:2*; SM45:T நீங்கள் "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்தால், கிறிஸ்துவைத் தரித்திருந்தால்," "அவருடைய சரீர அங்கங்களாக" ஆகி இருந்தால். R11:5 நீங்கள் பிதாவின் குமாரனுடன் உடன் – சுதந்தரர் ஆவதற்காக அவர் அருளும் வாய்ப்பை, நிழலான ரெபெக்காளைப் போல, ஏற்றுக்கொண்டீர்க ளேயானால். R1386:6, 2795:4 கிறிஸ்து என்ற வார்த்தையின்மீது எவ்வளவு விஷயம் சார்ந்திருக்கிறது! CR215:2 ஆபிரகாமின் உண்மையான சந்ததியானது, மரணபரியந்தம், அதாவது, பலிசெலுத்து வதோடுகூட மரணபரியந்தம் கீழ்ப்படிந்திருக்கத்தக்கதாக, விசுவாசத்தின் பரீட்சையைப் பெற்றிருக்க வேண்டும். R4378:2 அவருடைய சரீரமாகவும், ஆத்துமாவாகவும், ஆவியாகவும், இன்றும் என்றும் அவருடையவர்களாய் இருப்பது; வசதியான மற்றும் சந்தோஷமான சமயத்திலும் சரி, சிரமமான,

வலியான மற்றும் கடினமான சமயத்திலும்சரி, அவர் திட்டம்பண்ணின வழியிலும், நேரத்திலும் அவருடைய சித்தத்தைச் செய்கின்ற அவருடைய ஊழியனாக இருப்பது. R1697:1 எல்லா வகையிலும் சுயத்தை வெறுமையாக்க வேண்டும் – சுயத்திற்கு மரித்து, கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கென்று பிழைத்திருக்க வேண்டும். R1697:2 “நீங்கள் யூதராக இருந்தால்” அல்லது “நீங்கள் ஆங்கிலோ–இஸ்ரயேலராக இருந்தால்” அல்லது “நீங்கள் சபை உறுப்பினராக இருந்தால்” என்று அவர் கூறவில்லை. R1696:2 நாம் வேறு யாருக்கும் சொந்தமாக இருக்க முடியாது, ஏனென்றால் எந்த மனிதனாலும் இரண்டு எஜமானருக்கு ஊழியம் செய்ய முடியாது. R1697:1 உலகத்தோடும்சரி, கிறிஸ்துவின் சீஷர்களிடையே உள்ள உலக கொள்கை மற்றும் ஆவியோடும்சரி, நாம் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. R1697:2 கலாத்தியாவிலுள்ள விசுவாசிகளின் சபைகள் ஒன்றில் வழக்கமாக கலந்து கொள்ளுபவராக அறியப்படுவது மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை – சக கிறிஸ்தவருடன் நல்ல குணத்தோடும் நல்லொழுக்கத்தோடும் உள்ள ஒரு சகோதரனாக இருப்பது மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை (அதைக்காட்டிலும் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்க வேண்டும்). R1696:6

**ஆபிரகாமின் சந்ததியாராயும்** – நிஜமான சந்ததி. R1617:2, 3502:1 ஈசாக்கால் நிழலாகக் காண்பிக்கப்பட்டது. R4931:1, 4334:3 ஈசாக்கு மீட்பருக்கு நிழலாக இருந்தார். OV164:1 தேவனுடைய சந்ததி. R161:2, 345:1 தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். R5301:4 தலையும் சரீரமுமாகிய முழு சபை. R5549:3, 5198:5, 4964:5, 4793:3, 4365:6, 4334:3, 2691:6, 2563:6, 2415:5, 2128:6, 1364:4, 1149:2, 1140:6, 6:1; T33; CR196:2, 460:5; OV205:5; SM10:1, 530:T ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி, கிறிஸ்துவின் சரீரம். E395, 403; R5818:1, 5170:5, 5018:3, 4642:4, 4436:6, 2940:4, 2854:6, 2604:3, 1850:2, 1615:5, 536:1, 384:2, 201:2, 95:2; CR96:4, 368:1; NS782:5; OV236:2, 350:4; Q191:6 கிறிஸ்து மற்றும் அவரது ஜெயங்கொள்ளும் சபை. NS6:3, 32:4, 530:2; R905:1; HG442:4 “நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே.” (யோவா. 8:39) R2604:6 மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இல்லாத நாம், நம்முடைய விசுவாசத்தினிமித்தமாகவும், நாம் ஆவிக்குரிய சந்ததியின் அங்கத்தினராக இருப்பதினிமித்தமாகவும், நாம் ஆபிரகாமின் சந்ததியாக எண்ணப்படுகிறோம். R4606:1 தங்களுடைய இருதயத்தில் விருத்தசேதனம்பண்ணப்பட்ட ஆவிக்குரிய சந்ததி. R4442:6 மூல தெய்வீகத் திட்டத்தின் படி, பலபேர் அடங்கிய ஒரு “சந்ததி” இருக்க வேண்டும் என்பது ஆரம்பத்தில் இருந்தே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். R2122:4, 2854:1 “சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களை உடையதாயிருக்கிறது.” (1 கொரி. 12:14) A82 மத்தியஸ்தரின் சரீர அங்கங்கள். R4332:5 சந்ததி / வித்து பாம்பின் தலையை நசுக்க வேண்டும். R2842:2, 544:1, 533:4, 270:5, 257:3, 134:6 தேவன் முதல் இருவரையும் ஆதாம் என அழைத்தார், அவர்கள் மனித குடும்பத்தின் மீது மரணத்தையும் துன்பத்தையும் கொண்டு வந்தனர். இரண்டாவது ஜோடியை தேவன் “கிறிஸ்து அல்லது வித்து / சந்ததி” என்று அழைக்கிறார், இவர்களோ ஜீவன் கொடுப்பவர்களாய் இருக்கிறார்கள். R139:1*, 305:2 பூமியின் அனைத்து குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக சபை இராஜரீக ஆசாரியக்கூட்டமாக இருக்கும். R5713:6, 2360:5, 2297:1, 2122:5, 1790:6, 405:4* மீட்பர் மற்றும் சபை மூலமாக, தேவனுடைய ஆசீர்வாதம் “எல்லா ஜனங்களுக்கும்” வரும். R5822:2, 5178:1, 4734:2, 4372:2, 4302:2, 3694:1, 3294:1, 2750:1, 2238:1, 2055:1, 1910:1, 1771:3, 1750:1, 1073:5 இயேசு இந்த ஆபிரகாமுடனான உடன்படிக்கையை மாம்சத்தின்படி சுதந்தரிக்கவில்லை, மாறாக புதிய சிருஷ்டியாக சுதந்தரித்துக்கொண்டார், இயேசு மாம்சத்தில் காணப்பட்ட வரைக்குமே, அவர் மூலமாக உலகம் ஆசீர்வதிக்கப்படுவது சாத்தியமற்றதாயிருந்தது. R5226:6.3; CR96:4 ஒரு வகையில் நாம் ஏற்கனவே ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறோம், ஆனால் “அவருடைய உயிர்த்தெழுதலில்” நாம் பங்கடையும் வரையில், முழுமையான அர்த்தத்தில் நாம் சந்ததியாக இருக்க மாட்டோம். R4681:6; Q185:4; CR49:5 ஆபிரகாமின் சந்ததியைத் தேர்ந்தெடுப்பதிலும்சரி, அந்தச் சந்ததியில் அங்கத்துவம் அடைவதிலும்சரி

சிறப்புரிமை முதலில் யூதருக்குத்தான் அளிக்கப்பட்டது. R2758:1, 5273:4 இந்த மகிமையான கிறிஸ்து சுவிசேஷ யுகத்தின் முடிவில் முழுமை பெறுவார், மேலும் அவர்கள் ஒட்டுமொத்தமாக ஆபிரகாமின் வாக்களிக்கப்பட்ட சந்ததியாக இருப்பார்கள். SM45:T ஆனால் முற்பிதாக்கள் மூலமாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிற ஆபிரகாமின் மாம்சீக சந்ததி என்ற ஒன்றும் இருக்கப்போகிறது, மேலும் பலரும் இருக்கப்போகிறார்கள். Q192:T; R5859:4, 83:2 அதேபோல், நீங்கள் கிறிஸ்துவின் சந்ததியாக இருந்தால், சிங்காசனத்தில் அமர்ந்து மேசியாவாக இருக்கப்போகிற தாவீதின் சந்ததியாகவும் இருப்பீர்கள். Q192:2 ஆபிரகாமின் சந்ததிகள் என்று (பன்மையில்) சொல்லப்படவில்லை. HG12:2, 38:3

**வாக்குத்தத்தத்தின்** - ஆபிரகாமுக்குச் செய்துகொடுக்கப்பட்ட உடன்படிக்கை - ஆபிரகாமுடனான உடன்படிக்கை. R5444:5, 5198:6, 5169:2, 4964:5, 4515:6, 4510:5, 3684:2, 2122:5, 1850:2, 1728:6, 1697:5, 1000:5; A85; HG386:2; ஆணையிட்டுக்கொடுக்கப்பட்ட மாபெரும் வாக்குத்தத்தம். NS290:6, 291:3, 408:4, 460:6; R4297:4, 3178:5; HG380:4 பூமியிலுள்ள சகல குடிகளும் இந்தச் சந்ததியின் மூலமாக ஆசீர்வதிக்கப்படும் எனும் வாக்குத்தத்தம். OV198:6; R5818:1, 4793:3, 4682:3, 4515:5, 4496:5, 3915:1, 1167:4, 902:6; A97; E476; T91; CR196:3, 216:6; HG181:4; NS273:4, 286:6; SM64:3 முதலாம் உடன்படிக்கை. R70:2, 283:4 நிஜமான வாக்குத்தத்தம். R1617:2 வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை, தெரிந்துகொள்ளப்பட்ட ஆபிரகாமின் சந்ததி நிறைவடையும் வரை அது நிறைவேறாது. SM93:1; R5391:6, 5302:1, 3198:5, 1316:2; NS499:2; OV157:2 தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளப்படாதவர்களை ஆசீர்வதிப்பார்கள். PD85/99; R4213:1, 2538:6, 2376:3, 1881:5, 1311:2; HG334:1, 545:6; NS321:5, 540:3, 778:6 ஆவிக்குரிய சந்ததி மூலமாக மாம்சீக சந்ததியின் மீது ஆசீர்வாதங்கள் வரவிருக்கின்றன. OV81:2, 143:6, 350:4; R3066:2, 1786:3, 220:1; NS286:6, 288:1, 460:6, 625:5 ஆவிக்குரிய சந்ததியின் மூலமாக மேசியா இராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஒவ்வொரு தேசத்தாருக்கும், ஜாதிக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் ஆயிரமாண்டின்போது சென்றடையும். R5314:5, 4140:3, 1908:6, 334:1 “உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக” என்ற நமது கர்த்தருடைய ஜெபத்தில் சொல்லப்பட்ட வேண்டுதலை நிறைவேற்றச் செய்திடும். R2862:1 ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியானது, வானத்தின் நட்சத்திரங்கள் போலவும் வானத்தின் பிரகாசம் போலவும் இருக்கும், இவர்கள் இரண்டாம் நிலை மாம்சீக சந்ததி தன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்க்கால்களாக இருப்பார்கள். R4365:6; CR368:2 இந்த வாக்குத்தத்தம் முப்பத்தைந்து நூற்றாண்டுகளாக இஸ்ரயேலின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. PD23/34 மாம்சத்தில் உள்ள யூதருடன் தேவனுடைய தொடர்புகள், சுவிசேஷ யுகத்து ஆவிக்குரிய சந்ததியின் வளர்ச்சியால் இடை நிறுத்தப்பட்டன. HG440:1; R1971:6, 704:6; NS679:1

**படியே** - அந்த வாக்குத்தத்தத்தின் மிகவும் உயர்ந்த அம்சத்தின்படி, ஆவிக்குரிய அம்சத்தின்படி. R4453:5 இவர்கள் ஆவிக்குரிய தளத்தில் தேவனுடைய சம்பத்துகளாக இருக்கப்போகிறார்கள். R4931:1

**சுதந்தரராயும்** - கிறிஸ்துவுடன் கூட உடன் சுதந்தரராயும், வாரிசுகளாயும். R2691:6, 6013:3, 5178:1, 3867:6, 3050:3, 2885:6, 2209:4, 1510:6, 1386:6, 1155:1 இந்த உயரிய கனத்தின். R924:4 ஆபிரகாமில் நிழலாகக் காண்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள். R1386:6 ஆபிரகாமிடம் செய்யப்பட்ட உடன்படிக்கையின் (சுதந்தரர்) - மாறாக, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் அல்லது புதிய உடன்படிக்கையின் சுதந்தரர் அல்ல. R4474:2, 4344:4, 3974:4 இராஜ்யத்தின் மற்றும் உலகத்தை ஆசீர்வதிக்கும் அதன் பணியின் (சுதந்தரராயும்). SM367:T; PD35/46; R5761:4 கிறிஸ்து, மூல வாக்குத்தத்தத்தின்படி, பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பார், அப்போது நாமும்

அவருடன்கூட அதனை சுதந்தரித்துக்கொள்ளுவோம். R3219:5, 1278:2 ஒலிவமரத்தில் ஒட்ட வைக்கப்பட்ட கிளைகள். F433; R3446:4, 3365:6, 2622:4; NS50:1 இஸ்ரயேலின் புறம்பாக்கப் பட்டவர்களும், தகுதியுள்ள புறஜாதிகளும் தேவனுடைய பிள்ளைகளாகவும் ஆபிரகாமின் சுதந்தரராயும் ஆகியிருக்கின்றனர். R5005:1, 2417:2, 2401:5; NS820:4; PD60/72 எவ்வாறு ஒரு தரப்பினரின் மரணத்தால் மனித திருமணம் களைக்கப்படுகிறதோ, அதுபோல, கிறிஸ்து நியாயப்பிரமாண உடன்படிக்கையை நிறைவேற்றினார் என்பதை அடையாளம் கண்டு கொண்ட யூதரால் கிறிஸ்துவுடன் கூட ஐக்கியமாக முடிந்தது. R4319:4 சபையானது ஈசாக்கின் மணவாட்டியாகவும், அவரது உடன் சுதந்தரராயும் – இப்போது நிச்சயிக்கப்பட்டுள்ளது, மேலும் யுகத்தின் முடிவில் அவரோடு திருமணமாகி, அவரது தாயாரின் கூடாரத்திற்குள் பிரவேசித்திடுவார்கள், அதாவது (தாயாகிய) உடன்படிக்கைக்குச் சொந்தமான சகல ஆசீர்வாதங்களிலும் உட்பிரவேசித்திடுவார்கள். R4440:2, 5169:2 கணவனுடன் உயிரோட்டமாகத் தொடர்பு கொண்டதன் மூலமாக, தன் கணவனுக்குரிய கனங்களையும் சிலாக்கியங் களையும் பகிர்ந்துகொள்கிற மனைவிக்கொப்பான ஓர் அடையாளத்தினை இங்கே அப்போஸ்தலன் வெளிப்படுத்துகிறார். R3513:5 தற்கால துன்பங்களிலும், வருங்கால மகிமையிலும் பங்கடைபவர்கள். R4319:3, 6013:3; SM207:2 ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியானது, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்க பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக, முதலில் அவர்கள் சோதனைகள், ஒழுங்குப்படுத்தப்படுதல் (disciplines), பரீட்சைகள், பலிகள் மூலமாக வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது. SM784:2; R2112:4; HG134:4 நாம் சுதந்தரராய் இருக்கிறோமென்றால், ஆயிரவருட இராஜ்யம் வரையிலும், இந்த வாக்குத்தத்தம் நிறைவேறாமல் இருக்கும். R3206:1, 4642:3, 2409:1, 1697:5, 1195:4; HG546:1 திருச்சபை தன்னுடைய ஆண்டவரோடு இணைந்து உலகத்திற்கு ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கும்போது, உலகத்தின் அந்த மாபெரும் ஆசீர்வாதமானது சபையினுடைய மகிமையுடன் எந்த வகையிலும் தலையிடாது, மாறாக அது திருச்சபையின் மகிமையை மேம்படுத்தவே செய்திடும். R5654:6, 2908:5

**இருக்கிறீர்கள்** – விசுவாசிகள். HG386:2; R2604:3, 284:2 இயேசுவுடனே கூட இணைந்து. A85; R1386:6, 1000:5 கர்த்தரைப் போல, உடன்படிக்கை ஆசீர்வாதங்களுக்கு இயற்கையான சுதந்தரவாளியாக இருப்பதன் மூலமாக அல்லாமல், மாறாக கிறிஸ்துவுடன் நீங்கள் இணைந்ததன் மூலமாக சுதந்தரராய் இருக்கிறீர்கள். R1386:6

## 56. எபேசியர் 2:10

**“ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.”**

**நாம்** – உண்மையான கிறிஸ்தவன். R5967:3 அவருடைய ஜனம். R1506:5, 5402:5 சபை. R5713:5 முதலில் நாம் ஒரு பாவி என்பதை உணர்ந்துகொள்கிறோம். R5320:3

**கிறிஸ்து இயேசுவுக்குள்** – தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்கிறார். R3166:5 கருதப்பட்ட வகையில் (Reckonedly); ஏற்ற காலத்தில், அவன் அவரில் நிலைத்திருந்தால், அவன் உண்மையில் ஒரு புதிய சிருஷ்டியாக இருப்பான். R1438:1, 3770:1

**சிருஷ்டிக்கப்பட்டு** – சத்திய வார்த்தை மூலமாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். R3770:1

**தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்** – சபை தேவனுடைய சிருஷ்டியாக இருக்கின்றது. R589:5, 5759:5, 5713:5, 3166:5; SM433:3 தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும்

செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி. 2:13). CR325:2, 395:2, 420:1, 444:3, 461:2; R5284:4, 4417:6; SM433:3 பிரித்தெடுத்து வைப்பதை, பிதாவானவர் தம்முடைய சத்தியத்தின் வாயிலாக செய்கிறார். R5320:3 தேவன் நம்மில் கிரியை செய்ய வேண்டி நம்மை நாம் ஒப்புவிக்கிறோம். R5855:6, 4417:6, 4255:6 தேவன் தமது குமாரனுடைய சாயலுக்கேற்ப இந்த விலையேறப்பெற்ற கற்களை வெட்டி மெருகூட்ட ஏற்பாடு செய்துள்ளார். R5119:1, 2404:3 ஆலயமானது மாபெரும் கட்டுநராகிய (the Master – builder) தேவனால் கட்டப்பட்டு வருகின்றது. R2520:6, 2737:6 கிறிஸ்து இயேசுவுக்குள்ளான ஒரு புதிய மற்றும் தனி சிருஷ்டி. R3166:5 தேவனுடைய கிருபையைப் பற்றி கேள்விப்பட்டதால், நம்முடைய இருதயங்கள் அதற்குப் பதிலளித்தன. R4255:6 நற்கிரியைகளினால் அல்லாமல், மாறாக நற்கிரியைகளுக்காக ஆயத்தப்படுத்தப் படுகின்றது. R3166:5 தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் அறிவுரைகளால் தேவனுடைய வல்லமை உங்களில் கிரியை செய்கின்றது. CR325:3 ஒவ்வொரு ஒழுங்குப்படுத்தப்படுதலும் (discipline), நமக்குள் எஜமானர் கிரியைசெய்வதன் ஒரு பகுதியாக இருக்கின்றபடியால், அவைகளில் நாம் மகிழ்ச்சியடைவே செய்கிறோம். R2737:6 தன்னிச்சையாக அல்ல, மாறாக தனிநபருடைய சித்தத்தின் ஒத்துழைப்பில். R5967:3 வெறுமனே ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவது அல்ல, மாறாக இரட்சகரின் குணலட்சண சாயலில் ஆவியினால் வளர்ச்சியடைவது. R5967:3 எனவே, பரலோக மகிமை, கனம், அழியாமை என்பவைகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிற வாழ்க்கையின் சோதனைகளும் சிரமங்களும் இன்றியமையாததாய் இருக்கின்றன. R5713:5, 2520:6 திரைக்கு அப்பால் எந்த மாற்றமும் செய்யப்படுவதற்கு அவசியம் இருக்காது எனும் வகையில் அவருடைய பணி மிகவும் பூரணமாக நிறைவேற்றப்படும். R5713:5 தேவனுடைய பிள்ளைகள்; கிறிஸ்துவின் சகோதர சகோதரிகள். R5320:3, 5402:5 தெய்வீகக் கிருபையே முழு முடிவுக்கும் / பலனுக்கும் காரணமாக இருக்கின்றது. R2404:4

**நடக்கும்படி** – புதிதான ஜீவனில். R3166:5 கர்த்தருடைய பாவத்திற்கு எதிரான பரிசுத்த பாதையில், குணலட்சணத்தை வளர்த்திக்கொள்வது. R3166:5 புதிய சிருஷ்டி நற்கிரியைகளில் நடக்க வேண்டும். R4189:3, 3166:5

**ஆயத்தம்பண்ணியிருக்கிறார்** – முன்குறித்திருக்கிறார். R3166:5

## 57. பிலிப்பியர் 1:5

### "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,"

**நற்கிரியையை** – குணலட்சணத்தை வளர்த்திக்கொள்ளுதல் எனும் நற்கிரியையை நம்மில் தொடங்கினவர். (எபி. 12:6 – 8) R1721:2 செருபாபேல் ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டது போல, அவரும் அதை செய்து முடிப்பார். இயேசு பெந்தெகொஸ்தே நாளில் புத்திரர் வீட்டாரை நிறுவியது போல, அவர் அவர்களைச் செதுக்கி, மெருகூட்டி, வடிவமைத்து, ஆயத்தம் செய்து, அவர்களில் தொடங்கின நற்கிரியையையும் நிறைவேற்றுவார். R3651:4

**தொடங்கினவர்** – நமது பிரயாசங்கள் எதுவாக இருந்தாலும் சரி, வெற்றி என்பது நமது சொந்த குறிக்கோள்களாலும், சிறந்த பிரயாசங்களினாலும் மாத்திரம் அடையப்படுவதில்லை. எனவே நாம் தனியாக நமது இரட்சிப்பை நிறைவேற்றுவதில்லை (தேவனே நம்மில் கிரியை செய்து வருகிறார்). R4796:2

**இயேசுகிறிஸ்துவின் நாள்** – ஆயிரமாண்டு யுகம் – அதின் அதிகாலையில் சபையானது உதவப்பட்டு,

இரட்சிக்கப்பட்டு, “மறுரூபமாக்கப்பட” வேண்டும். R4133:5; HG315:3 முடிசூட்டும் நாள். R1721:2 இந்த யுகத்தின்போது நடந்துகொண்டிருக்கிற சபையின் சோதனை அல்லது நியாயத்தீர்ப்பானது இந்தக் கர்த்தருடைய நாளில் முடிவடையும். இந்த நாளைத் திருச்சபையின் நம்பிக்கையின் நிறைவேற்றத் துக்கான நேரமாக அப்.பவுல் சுட்டிக்காட்டுகிறார். R593:2 ஆயிரமாண்டு நாளானது “கிறிஸ்துவின் நாள்,” “தேவனுடைய இராஜ்யம்” என்றவாறெல்லாம் அப்போஸ்தலர்களால் விசேஷமான வகையில் பிரசங்கிக்கப்பட்டது. இது ஆதிகால திருச்சபையின் தீவிர விசுவாசமாக இருந்தது. HG315:3 இந்த “நியாயத்தீர்ப்பு நாள்” என்பது 24 – மணி நேர நாளாகப் புரிந்துகொள்ளப்படாமல், ஒரு பெரிய அளவிலான ஒரு நாளாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் – “கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்.” (2 பேது. 3:8) NS329:3 திரள்கூட்டத்தாரில் நற்கிரியையைத் தொடங்கியவர் அதைப் பூரணப் படுத்திடுவார் – ஆயிரமாண்டு அல்லது “இயேசு கிறிஸ்துவின் நாளின்” திறப்பில் நடக்கவிருக்கும் மகா உபத்திரவத்தில் அது முடிந்தாலும் கூட, அதைப் பூரணப்படுத்திடுவார். R2160:6

**பரியந்தம் முடிய** – இல் / In (நாளில்). R5118:5

**அதை... நடத்திவருவார்** – அதை முடிப்பதற்கு வல்லவராயும் சித்தமுள்ளவராயும் இருக்கிறார். R5425:2, R5118:5, R4133:5, R3651:4, R3155:6, R2738:4, R2642:2 நாம் உண்மையாக இருக்க வேண்டும் (faithfulness), அதுவே ஒரே நிபந்தனையாகும். தேவன் ஒருபோதும் தவறுவதில்லை. அவர் பின்னாளில் இரத்து செய்யவோ அல்லது திருத்தம் செய்யவோ விரும்பும் ஓர் ஏற்பாட்டை ஒருபோதும் செய்வதில்லை. தேவனிடம் (மனம்)மாறக்கூடிய தன்மை இல்லை. R5855:6 பரி. பவுல் மற்றும் தாவீது இராஜா (சங். 23:6) என்பவர்கள் வெளிப்படுத்தும் நம்பிக்கையை (confidence) முழுமையாக உணர்ந்துகொள்ளும் சிலரால், அதில் மாபெரும் சந்தோஷத்தையும், மாபெரும் ஆசீர்வாதத்தையும், மற்றவர்கள் எவருக்கும் இல்லாத மாபெரும் இருதய இளைப்பாறுதலையும் பெற்றுக்கொள்ள முடியும். R5425:2, R2642:2 அவருடைய கண்மணியைப் போல நாம் அவருக்குப் பிரியமானவர்களாய் இருக்கிறோம். யாரை அவர் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிறாரோ, தெய்வீக அன்பும் அக்கறையும் அவர்களுடைய காரியங்களை மேற்பார்வையிட்டு, சகலமும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக செய்து தரப்படும். R5118:5 தேவனுடைய கிருபையை உணர்ந்துகொள்வது என்பது, அவருடைய அனைத்து கிருபையான ஏற்பாடுகளையும் முழு நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவரை விசுவாசிப்பதற்கு நேராய், அவருடைய வார்த்தையை நம்புகிறதற்கு நேராய் நம்மை வழிநடத்திட வேண்டும். R4133:5 நாம் அவரை அனுமதித்தால், அவர் அதை முடித்துதருவார் என்ற பூரண நிச்சயம் நமக்களிக்கப்பட்டுள்ளது. R2154:3 “நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.” – சங். 37:23, 24; R3155:6 அவருடைய ஞானத்திற்கும், அன்பான கவனிப்பிற்கும் நமது சித்தங்களையும், நம் வாழ்க்கையையும், நம் அனைத்தையும் தொடர்ந்து சரணடையச்செய்திட வேண்டும். நாம் முதலில் நம்பினபோது இருந்ததைப் பார்க்கிலும் இப்போது நமது இரட்சிப்பு மிகவும் சமீபமாயிருப்பதால் நமது தலையை உயர்த்துவோமாக. தொடங்கிய நற்கிரியையை அவர் செய்து முடிப்பார். R2738:4 நம்பிக்கையின் பூரண நிச்சயமும் (எபி. 6:11), விசுவாசத்தின் பூரண நிச்சயமும் (எபி. 10:22) கர்த்தருடைய ஜனங்களிடத்தில் காணப்பட வேண்டிய சரியான மனநிலைகளாக இருக்கின்றன என பரி. பவுல் பேசுகிறார். “நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத் திருப்பேன்.” R2642:2 திருச்சபையை நோக்கமாக கொண்டு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய தற்போதைய அக்கறை, கவனிப்பு மற்றும் அவர்களுக்கு நேரான உண்மைத்தன்மை பற்றிய தெய்வீக உறுதிமொழிகளையும், உலக மனுக்குலத்திற்குப் பொருத்திப்பார்ப்பது சத்திய மொழியினைத் தாறுமாறாக்குவதாக இருக்கும். R1298:1 திரள்கூட்டத்திற்கும் ஒரு நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளதால் நாம் சந்தோஷப்படுகிறோம். மேலும் அவரை உண்மையாக நேசிக்கும் மற்றும்

நம்புகிற அவர்களிலும் நற்கிரியையைத் துவங்கியவர், அதை தொடரச்செய்து, அதை முடித்தும் தருவார். அழுக்கானதாக இருந்தாலும், அவர்கள் இன்னுமே வஸ்திரத்தை அணிந்தவர்களாய் காணப் படுகிறார்கள். R2160:6

**என்று நம்பி** – நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் பூரண நிச்சயமே கர்த்தருடைய ஜனங்களுக்கேற்ற சரியான மனநிலைகளாக காணப்படுகின்றன. (எபி. 6:11; எபி. 10:22) R2642:1 மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளுங்கள். நாம் பரத்திலிருந்து நமது பலத்திற்கான விநியோகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்: அவை தேவனுடைய ஆவியால் அங்கு பதிக்கப் பட்டவையே தவிர நமக்குள் ஏற்கனவே இருக்கவில்லை. R2154:3

## 58. பிலிப்பியர் 2:13

**“ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.”**

**திருவிவிலியம் – “ஏனெனில், கடவுளே உங்களுள் செயலாற்றுகின்றார். அவரே தம் திருவுளப்படி நீங்கள் செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் தருகிறார்.”**

**தேவனே** – (நோய், வலி, துக்கம், உபத்திரவம் என்பது போன்ற) அனுமதிக்கப்பட்ட அனைத்து தீமைகளுமே தெய்வீக ஞானத்தாலும், அன்பினாலும், வல்லமையாலும் நன்மைக்கேதுவாக மேற்பார்வையிடப்படும். E410, E411; R5855:5 அவருடைய வார்த்தையில் காணப்படுகிற வாக்குத்தத்தங்களின் மூலமாக. F71; R4929:4, R4790:1, R3586:2, R2879:1, R2228:5, R2123:4*, R597:6*; CR335:1; SM389:T முழு காரியத்தையும் திட்டமிட்டு நம்மில் கிரியை செய்துகொண்டிருப்பவர் தேவனே. நாம் தானாகவே இந்தப் பணியைத் தொடங்கவில்லை. அவர் நம்மை அழைக்காமல் இருந்திருந்தால், கிறிஸ்துவோடு அவரது கனம் மகிமை அழியாமையில் பங்கடைவதற்காக பிரயாசப்படுவது பற்றி நமக்கு ஒருபோதும் தோன்றியிருக்காது. R5855:5 இந்தப் போர் நாம் தனியாக போரிட வேண்டிய ஒன்றல்ல என்பதை அறிவது உத்வேகமளிக்கின்றதாய் இருக்கிறது. சகல பரலோக வல்லமைகளும் நமது பக்கத்தில் உற்ற துணையாக நிற்கின்றன. R5854:3, R2228:5 இந்த வேலையை நம்மால் மட்டும் செய்ய முடியாது. நம்மில் கிரியை செய்து வரும் வல்லமை தேவனுடையதாகும். R5284:4, R2878:6 நாம் மேன்மைபாராட்டலாம், ஆனால் நம்மைப் பற்றி அல்ல. நம்மில் கிரியை செய்து வரும் தேவன்பேரிலேயே நாம் மேன்மைபாராட்டுகிறோம். R5114:1 கர்த்தருடைய ஆவி நமக்கு வல்லமை, பலம், தைரியம், ஆற்றல் என்பவைகளின் ஆவியைத் தருகிறது; இப்படியாக, நம்மால் செய்ய முடிந்ததை விடவும் அதிகமானதைச் செய்ய வல்லவர்களாகிறோம். R5094:2 நம்முடைய நீதிமானாக்கப்படுதலை நாமே நிறைவேற்ற / செய்துகொள்ள முடியாது. R4929:4, R3586:2, R2228:5 வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள், அதின் ஒழுங்குப் படுத்துதல்கள் மற்றும் மனத்தாழ்மையுள்ளவர்களாக்கிடும் செயல்முறைகள் மூலமாக. ஒவ்வொரு பாடத்தையும், அது நம்மிடத்தில் வரும்போது, நாம் அதற்குச் செவிமடுக்க வேண்டும். R4790:1, R2123:4*, R1920:3 நமக்குள் வாசஞ்செய்யும் அவருடைய ஆவியால் அல்லது மனநிலையால். R3251:6, R3586:2, R2123:3* வழி, சத்தியம், ஜீவன் எனும் வழிவகைகளை வழங்குவது கர்த்தருடைய பங்காகும். அப்படிக் கொடுக்கப்பட்ட வழிவகைகளைப் பயன்படுத்துவதும், அதன் மூலம் பரிசை அடைவதும் நம்முடைய பங்காகும் / பொறுப்பாகும். R3021:4 கிறிஸ்து மூலமாக தேவன் நம்மில் கிரியை செய்கிறார், அதேசமயம் அவருடைய பலத்தினாலேயே நாம் நம்முடைய சொந்த இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுகிறோம். R2123:4* பரிசுத்தத்தை நோக்கிய நமது முதல் தூண்டுதலுக்காகவும், அவருடைய வாக்குத்தத்தங்களின் உத்வேகத்திற்காகவும், நாம் தொடர்ந்து கர்த்தரைச் சார்ந்து

இருக்கிறோம். R1698:6 நமது குறைபாடுகள் தேவனுடைய வல்லமையை இன்னும் பிரகாசமாக பிரகாசிக்கச் செய்யும் என்பதால் நாம் சந்தோஷமடையலாம்; நமது திறமை அவர் பாராட்டின தயவினால் உண்டானது. R1046:2* ஒவ்வொரு நாளும் நமது சொந்த வழிகளையும், நம்முடைய சொந்த (சிற்) இன்பங்களையும் பின்தொடர்ந்து செல்லாமல், நமது சுய வார்த்தைகளைப் பேசாமல் தவிர்த்துக்கொள்வதே முறையான கிறிஸ்தவ ஓய்வுநாள் ஆசரிப்பாகும். HG583:5* நமது கடந்தகால பாவங்களை மன்னிப்பதும், கடந்தகால ஆக்கினையிலிருந்து நம்மைச் சுத்திகரிப்பதும், வேண்டு மென்றே செய்யப்படாத நமது குறைகளை மூடுவதும், நம்மை நல்ல வழியில் ஊக்குவிப்பதும் தேவனுடைய பங்காகும். SM395:1

**தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி** - மரணபரியந்தம் சுயத்தைப் பலிசெலுத்தும் பணியை மேற்கொள்ளுவது எனும் தம்முடைய தயவுள்ள சித்தம். R5720:1; Q264:5 கிறிஸ்தவ பகுத்தறிவானது, தெய்வீகப் பிரமாணத்தின் கொள்கைகளையும், அதின் கற்பனைகளையும் கவனித்து, அதற்கேற்றபடி செயல்படும். R1781:4 முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்களை வழிநடத்துவது தேவனுடைய தயவுள்ள சித்தமாயிருக்கிறது. R1272:6

**விருப்பத்தையும் செய்கையையும் / செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும்** (திருவி) - நாம் கிருபையிலும், அறிவிலும், தேவனுடைய குணாதிசயத்திலும் வளர்ந்து முன்னேற்றமடைவது படிப்படியாக நடக்கிற காரியமாகும். R5759:5 அவருடைய வார்த்தையில் தம்முடைய சித்தமென்று அவர் நமக்குத் தெரிவித்துள்ளதைச் செய்வதற்கு. R5728:1, R4910:4, R1175:3 விருப்பம் / விரும்புவது முதலில் வருகிறது, பிறகு உயிர்ப்பிக்கப்படுவது, வலுவூட்டப்படுவது, செயல்படுவது என்பவை வருகின்றன. R5303:6; CR458:1 விருப்பங்கொள்வது - நாம் அர்ப்பணித்தபோது நடந்தது - இது போதாது. கிரியை செய்வது - நமது நல்நோக்கங்களை நம்முடைய வாழ்வில் நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். R4796:2 தேவனுடைய திட்டம், சத்தியத்தின் உண்மைகள் பற்றிய கூடுதல் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, முதலில் பெற்றுக்கொண்ட சத்தியத்தை நம்முடைய இருதயங்களில் கிரியைசெய்ய அனுமதிக்க வேண்டும். R2753:1 விருப்பங்கொள்வதற்கும், வாஞ்சிப்பதற்கும், அவரைப் பிரியப்படுத்துவதற்கும் நீங்கள் கர்த்தரால் வழிநடத்தப்பட்டிருந்தால், அவருடைய விருப்பத்தை / சித்தத்தை நிறைவேற்றவும், செய்யவும், உங்களுக்கு நிச்சயமாக ஒரு வழி கிடைக்கும். R548:6 இயேசு ஞானஸ்நானம் எடுத்த காலந்துவக்கி, அவரது வார்த்தைகளும் கிரியைகளும் தேவனுடையவையாகவே காணப்பட்டன. நாம் ஆவியால் வழிநடத்தப்படுகையில், நாம் புத்திரராக மாறுவோம், அவரும் நம்மில் கிரியை செய்திடுவார். R418:4

**உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்** - திருச்சபை. R1175:3, R5303:6 கிருபையின் வேலையானது அவருடைய மேற்பார்வைகளின் வாயிலாகவும், அவருடைய வார்த்தையின் அறிவுரைகள், எச்சரிக்கைகள், ஆலோசனைகள் என்பவைகளின் வாயிலாகவும் நம் இருதயங்களிலும் ஜீவியங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. R5855:6 பிதாவானவர் புதிய சிருஷ்டிகளாக நம்மில் கிரியைசெய்கிறார் - மாம்சத்தைக் கட்டுப்படுத்த நாம் பிரயாசப்படும்போது, நாம் பலமடைகிறோம். R5759:4 நீங்கள் கிரயத்திற்கு வாங்கப்பட்ட உடனேயே அல்ல, மாறாக நீங்கள் ஜெநிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கப்படும் காலத்திற்கு முன்பே. அர்ப்பணிப்புக்கு முன்பே நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டீர்கள். R5303:2 விருப்பம் / விரும்புவது முதலில் வருகிறது, பிறகு உயிர்ப்பிக்கப்படுவது, வலுவூட்டப்படுவது, செயல்படுவது என்பவை வருகின்றன. அவருடைய வாக்குத்தத்தங்கள் உதவுகின்றன; மேலும் அவர் நமக்கான பரிந்துபேசுகிறவரையும் வழங்கியிருக்கிறார் - (நமது சித்தம்/விருப்பம் பரிபூரணமாக இருக்கலாம், ஆனால்) நம்மால் பரிபூரணமாக செயல்பட முடியாது (ஏனெனில் நமது மாம்சம் பலவீனமானது). R5303:6 தேவன்தாமே இயேசுவில் கிரியை செய்தார். அதே விதத்தில், இப்போதும் தேவன்தாமே நமக்குள்ளும் கிரியை செய்கிறவராயிருக்கிறார்.

R4597:1, R1920:3, R164:6 நாம் நீதிமானாக்கப்பட்ட பிறகு, தேவனுடைய வல்லமை நம்மில் கிரியை செய்யத் தொடங்குகிறது, நம்மை ஒன்றிணைக்கிறது, நம்மை மேய்ப்பனுடன் முழுமையாக ஒன்றாக்குகிறது. R4321:4 தேவன் தம்முடைய வார்த்தையின் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் அர்த்தத்தை இன்னும் தெளிவாக நமக்கு வெளிப்படுத்துவதன் மூலமாக, நமது புதிய சிந்தையைப் பலப்படுத்துகிறார். R3986:5, R2661:4 "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது." (2 கொரி. 3:5) நாம் தேவனுடைய ஆவியால் நிரப்பப்படும்போதுதான் நம்மால் இவற்றைச் செய்ய முடியும். R2123:3* நாம் தொடர்ந்து கர்த்தரையே சார்ந்திருக்கிறோம். R1698:6 தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசுவாராக! வழிகாட்டுவாராக! வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். நமது அனுபவங்களைத் தொடர்புபடுத்துவதிலோ அல்லது ஜெபத்திலோ நம்மை உயர்த்திக்கொள்ளாதபடிக்கு கவனமாய் இருப்போமாக. R317:4* அவர் நம் விருப்பத்திற்கு / சித்தத்திற்கு விரோதமாக நம்மில் கிரியைசெய்யமாட்டார். CR444:4, CR335:1

## 59. பிலிப்பியர் 4:7

### "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்."

**அப்பொழுது** – நாம் சந்தோஷம் மற்றும் நம்பிக்கையின் ஆவியை உடையவர்களாக இருந்து, அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே வேண்டுதல்செய்து, அதன்பிறகு அவருடைய மேற்பார்வையானது நமக்கு எதை அனுப்புகிறதோ அதை நாம் நன்றியோடும் ஸ்தோத்திரத்தோடும் ஏற்றுக்கொள்ளும்போது, தேவசமாதானம் நமக்குக் கிடைக்கின்றது. R3128:6

**எல்லாப் புத்திக்கும் மேலான** – எல்லா மனித புரிதலுக்கும் / புத்திக்கும் (மேலான). R5591:3; NS594:5 எல்லா உலகப்பிரகாரமான புரிதலுக்கும் / புத்திக்கும் (மேலான). R1652:3 "எல்லா அறிவுக்கும் மேலான." (டயக்லாட்டு மொழியாக்கம்) R1046:4* இது விசுவாசத்தினால் கிடைக்கப்பெறும் ஓர் இருதய இளைப்பாறுதலாகும். இந்தச் சமாதானத்தில், சிந்தையின் பல்வேறு பண்புகள் அனைத்திற்குமான ஒரு மனத்திருப்தி / மனநிறைவு கிடைக்கப்பெறுகின்றது, அது யாரிடம் இருக்கிறதோ அவர்களைத் தவிர வேறு யாராலும் அதனை புரிந்துகொள்ள முடியாது. R4818:2, R1652:3 சமாதானத்தைப் பெற்றிருப் பவர்களும் கூட அதன் தாத்பரியத்தைச் சிரமத்துடனே முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகின்றது; சில சமயங்களில் இது, பொதுவாகப் புறம்பான அனுபவங்கள்மீது சார்ந்ததாயிருக்கின்ற மனித சமாதானத்துடன் மிகவும் முரண்பட்டதாக / நேர்மாறாக இருக்கின்றது. NS594:5, NS24:6 தேவன் நம்மைக் கையாள்வதும், தேவன் நம்மை அன்புகூருவதும் கூட, "எல்லாப் புத்திக்கும் மேலானதாக" இருக்கின்றது. R4972:3

**தேவசமாதானம்** – இந்தச் சமாதானமானது, கணிசமானளவிற்கு, பரிசுத்த ஆவியினுடைய சாட்சியின் அர்த்தத்தைப் பற்றி ஒருவர் பெற்றுள்ள தெளிவான புரிதலைச் சார்ந்ததாய் இருக்கின்றது. E226 மாம்சத்தின் சமாதானம் அல்ல, மாறாக இருதயத்தின் சமாதானமாகும். F602 ஒரு பரிசுத்த செல்வாக்கு தங்களுடன் கூடவே செல்லுமளவிற்கு, இந்தச் சமாதானமானது, கர்த்தருடைய பிரதிநிதிகள்மீது அப்பேர்ப்பட்ட கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். R5980:2 தேவனுக்கென்று தங்களையே முழுமையாக வரம்பின்றி அர்ப்பணித்தவர்களுக்கு மாத்திரமே இந்தச் சமாதானம் கிடைக்கும். ஆத்துமாவானது தனிப்பட்ட விதத்தில் தேவனோடு நெருங்கி உறவாடுவதன் விளைவாக இந்தச் சமாதானமானது கிடைக்கின்றது. R5432:1, NS66:5 இந்தச் சமாதானத்தை இந்த வாழ்க்கையின் மாற்றங்கள் மற்றும் மாறுபாடுகள் யாதொன்றாலும் கன்னமிட முடியாது, எதிராளிகளால் தொடவும் முடியாது. இந்தச் சமாதானத்தை நாம் பெற்றிருந்தால், பிதாவின் அன்பான மேற்பார்வை அனுமதிக்கும்

அனைத்தையும் நம்மால் சகிக்க முடியும். R5432:4, R5879:2 இந்தச் சமாதானத்தின் மூலமாக, நம்மால் நமது கண்ணீரின் ஊடேயும் நமது நம்பிக்கையின் மகிமைவாய்ந்த பலனைக் குறித்து சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருக்க முடியும். R5432:6, NS435:3 தங்களுடைய இருதயங்களை ஆளும் இந்தச் சமாதானமானது கருநிலை இராஜ்ய வகுப்பார் அனுபவிக்கும் மகத்தான ஆசீர்வாதங்களில் ஒன்றாக இருக்கின்றது. R5097:4; HG720:3 தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிப்பதன் விளைவாக பரிசுத்த ஆவியின் மூலமாக பூரண சமாதானம் கிடைக்கின்றது. R4901:2, R4579:3; NS66:5 நம்முடைய சொந்த சமாதானம் அல்ல, மாறாக தேவனுடைய சமாதானமாகும் - தேவனுடைய வல்லமையையும், அவருடைய நன்மையையும், அவருடைய பிள்ளைகளாக நம்மை தமது வலது கரத்தால் பிடித்துக்கொள்வதற்கான அவருடைய மனவிருப்பத்தையும் உணர்ந்துகொள்வதன் மூலமாக வரும் சமாதானமாகும். R4898:2, R3128:6 விசுவாசத்தினால், தேவனில் மையம்கொண்டிருக்கும் சமாதானம். R4818:2 தேவசமாதானம் இருதயத்தை ஆண்டுகொண்டு வந்தால், அது இலட்சியங்களையும், ஆற்றல்களையும் கட்டுப் படுத்திடும். R3306:3 இது தேவனுடைய உள்ளார்ந்த ஞானம் மற்றும் வல்லமையிலிருந்து ஊற்றெடுக்கும் சமாதானமாகும். அதிகப்படியான ஒழுங்கின்மை மற்றும் பிரச்சனையின் மத்தியில் கூடவே இணைந்திருக்கும் ஒரு சமாதானமாகும். R1833:1,4 சமாதானம் என்பது அமரிக்கையான அல்லது அமைதியான, தொந்தரவு அல்லது கிளர்ச்சியிலிருந்து விடுபட்ட, சலனமில்லாத, இளைப் பாறுதலான ஒரு நிலையாகும் என வரையறுக்கப்படுகிறது. R1832:3 நமது கர்த்தர் கிருபையான வார்த்தைகளையே பேசினார், அப்போஸ்தலர் பயத்தைப் பிரசங்கிக்கவில்லை; நாமும் சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பரவச்செய்து, பிதாவை மகிமைப்படுத்தி, நம்முடைய சக மனிதனை ஆசீர்வதிக்க வேண்டும். R1502:4 ஒரு மனிதன் சபையின் போதக வகுப்பாரை (pastorate) விட்டு வெளியேறி, வாஞ்சையோடு சத்தியத்தைத் தேடி, ஒரு சபை உட்பிரிவிலிருந்து இன்னொரு பிரிவெனச் செல்வது, சீயோனில் நித்திரை பண்ணுகிறவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது, ஆனால் கர்த்தர், அப்படித் தேடிச்செல்லும் மனுஷனை வழிநடத்தி, அவனுக்குச் சமாதானத்தை அருளுவார். R1237:6* மேலும், நம்முடைய எஜமானர், “என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்!” (யோவா. 14:27) என்று கூறினார். பரீட்சைகளும் “அக்கினி போன்ற சோதனைகளும்” நம்முடைய குணலட்சணத்தை வளர்க்க அனுமதிக்கப்படுகின்ற அதே வேளையில், நம்முடைய இருதயங்களில் சமாதானமும், போதுமான கிருபையும் அருளப்பெறுவோம். NS597:1, NS66:5 உலகத்திற்குப் பொதுவாயிருக்கும் மனக்கலக்கமான கவலைகளிலிருந்து ஓர் இளைப்பாறுதல் - கிறிஸ்துவின் மீதான விசுவாசம் கவலையை நீக்கிவிடுவதால், இந்த இளைப்பாறுதல் பெரும்பாலும் ஓர் அளவிலான ஆரோக்கியத்தையும் நமக்குக் கொண்டுவருகின்றது. HG720:3 அனைத்தும் சாதகமாக இருக்கும் போது புறம்பே சமாதானம் காணப்படும் என்பதைப் பலரும் அறிவார்கள், ஆனால் உள்ளுக்குள் ளேயோ சமாதானமின்மையும், மகிழ்ச்சியின்மையுமே நிலவும்; ஆனால் தேவ சமாதானத்தைப் பொறுத்தவரையிலோ, புறம்பான தொல்லைகள், சண்டைகள் மற்றும் துயரங்கள் மத்தியிலும் அதனை நம்மால் தக்கவைத்துக்கொள்ள முடியும். NS594:4 இந்தச் சமாதானமானது ஏதோ ஒரு தற்காலிகமான விருந்தாளி போல வந்துபோகாமல், “சகோதர சகோதரிகளின்” இருதயங்களில் ஆளுகை செய்கின்றதாய் இருக்கின்றது. நாம் அதைத் தொடர்ந்து வளரச்செய்ய வேண்டும், அதேசமயம் உலகத்திற்கான நம்பிக்கையுடனும் அனுதாபத்துடனும் சகலத்தையும் எஜமானரிடமே விட்டுவிட வேண்டும். NS525:1, NS435:3 “துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை” -ஏசா. 48:22. “துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது” - ஏசா. 57:20. அறியாமையில் இருப்பவர்களால் தேவசமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. NS524:2 நித்திய வேதனை பற்றிய பயமுறுத்தும் போதனைகள், அழகான வெற்று சம்பிரதாயங்கள் போன்றவை சபைகளில் காணப்படுகின்றன, இவை மனிதனுடைய இருதயத்தைத் திருப்திப்படுத்தாத காரணத்தினால் கிறிஸ்தவ

சபைகளானது அதிருப்தியும், பதற்றமும், கவலையும் அடைந்து வருகின்றன; இது "கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம்" (ஆமோ. 8:11) என வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. NS522:4 "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." (மத். 4:4) இந்தக் காரணத்தினால்தான், மனிதனுடைய செழிப்பு (man's prosperity) சமாதானத்தைக் கொண்டுவருவதில்லை, அதேசமயம் தாழ்மையான, தேவ பக்தியுள்ள அவனுடைய முன்னோர்களோ அதிக சமாதானத்தைக் கொண்டிருந்தனர். NS521:3 தேவசமாதானத்தையும், அவரது தயவையும், மகிமையான நம்பிக்கைகளையும் அனுபவித்துவருகிற கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய ஊழியத்தில் வைராக்கியத்துடனேகூட, அவற்றை மற்றவர்களிடமும் பரிமாறிக்கொள்வார்கள். NS67:6 இந்தச் சமாதானமான நிலையே விதியாக / பிரமாணமாக (rule) இருக்க வேண்டும்; மற்றவையெல்லாம் விதிவிலக்காகவும் (exception), இன்னுமதிகமாக, அரிதான விதிவிலக்காகவும் (rare exception) இருக்க வேண்டும். NS66:5

**உங்கள் இருதயங்களையும்** – கிறிஸ்தவனுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சமாதானமானது புறம்பான வாழ்க்கைக்குப் பயன்படுத்தப்படாமல், அவனுடைய இருதயத்தை ஆண்டு, காத்துக்கொள்ள வேண்டும். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவா. 16:33), ஆனால் என்னில் உங்களுக்கு (உங்களுடைய இருதயங்களில்) சமாதானம் உண்டு. R1652:3 கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரிடம் மனமகிழ்ச்சியாக இருக்க வேண்டும், மனரம்மியத்துடன் அவர்மேல் தங்கள் இருதயங்களை இளைப்பாறச்செய்ய வேண்டும், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணின [மகிமையான]வைகளைத்" (1 கொரி. 2:9) தியானித்துச் சந்தோஷமடைய வேண்டும். NS67:6

**And / (மற்றும்)** – அப்போஸ்தலன் சிந்தைக்கும் இருதயத்திற்கும் இடையே வேறுபடுத்துகின்றார். இருதயமானது நாட்டங்களை / நேசங்களைக் (affections) குறிக்கின்றது. நல்ல உணர்வுகளை நாம் கொண்டிருக்க வேண்டும் என்பது மாத்திரமல்லாமல், அதோடுகூட நம்முடைய சிந்தைகளும் இளைப்பாறுதலில் காணப்பட வேண்டும். R4898:1

**உங்கள் சிந்தைகளையும்** – எண்ணங்கள். R3305:6, R3306:3 "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." (ஏசா. 26:3) தேவன் சமாதானத்தை உண்டுபண்ணுகிறார். அவருடையவர்களைத் தவிர வேறு யாரும் அறிந்துகொள்ள முடியாத அடைக்கலமொன்று நமக்கு உள்ளது. எத்தீங்கும் நமக்கு நேரிடாது. R5879:4 இந்தச் சமாதானமானது ஒவ்வொரு கலகத்தனமான அல்லது கவலையளிக்கும் எண்ணம் அல்லது பயத்திற்கு எதிராகத் தொடர்ந்து அரணாக நிற்கின்றது. இருதயத்தில் கர்த்தருடன் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் கொண்டிருக்குமளவுக்கு இது கிறிஸ்தவருடைய சிந்தையைக் காத்துக்கொள்கின்றது. R3129:1, R4898:4

**கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக** – எப்படி நம்முடைய மாபெரும் பரிந்துபேசுபவர் மூலமாக நாம் இந்தச் சமாதானத்திற்குள் பிரவேசித்தோமோ அதுபோல, அவர் தொடர்ந்து நம்முடைய பரிந்துபேசுபவராக இருப்பதன் மூலமாக மாத்திரமே நாம் இந்தச் சமாதானத்தில் தொடர முடியும் என்பதைப் பரிந்துரைக் கின்றது. R4898:4 அவருடைய தகுதி, அவருடைய பலி, அவருடைய உதவி. R3129:1

**காத்துக்கொள்ளும்** – கவலை, பதற்றம் போன்றவற்றிலிருந்து. R3129:1 "பாதுகாக்கும்." (டயக்லாட்டு மொழியாக்கம்) R1046:4*, R3306:3

## 60. பிலிப்பியர் 4:9

**"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்."**

**என்னிடத்தில்... கண்டும்** – இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டிய தரநிலையாக இருக்கிறது – அனைவருமே கர்த்தருக்கான ஸ்தானாபதிகளாக இருக்கின்றனர். R3129:4

## 61. பிலிப்பியர் 4:13

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."**

**கிறிஸ்துவினாலே** – அவருடைய வல்லமை நமக்குப் போதுமானதாயிருக்கிறது. R5330:1 தேவன் மீதும், அவர் வாக்களித்துள்ள கிருபையின் மீதும் நம்பிக்கை வைப்பது, விரும்பத்தக்க மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் தக்க வைக்கின்றது, அதேசமயம் பரி. பவுலால் பரிந்துரைக்கப்பட்ட தைரியத்தையும் சக்தியையும் தருகின்றது – "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது." (2 கொரி. 3:5) R5113:6 எந்தளவிற்கு அர்ப்பணிக்கிறோமோ, எந்தளவிற்கு பிதாவின் சித்தத்திற்கு முழுவதுமாக ஒப்புக்கொடுக்கிறோமோ, அந்தளவிற்கு கர்த்தருடைய ஊழியத்திற்குத் தயாராக இருக்கும் அவரது வாய்க்கருவிகளாக, அவரது கருவிகளாக நாம் அவரால் பயன்படுத்தப்படுவோம். R4458:5 "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." (யோவா. 15:5) "எல்லாம் உங்களுடையது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்." (1 கொரி. 3:22,23) இந்த வாக்குத்தத்தங்களின் பெலத்தில், நாம் தைரியத்தைப் பெற்று, கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசிக்கிறோம். R4064:1 "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்." (யோவா. 15:7) நாம் என்ன செய்ய வேண்டும் என்பது தெய்வீக வார்த்தையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வரம்புகளுக்கு அப்பால் நாம் தெய்வீக உதவியைத் நாடக்கூடாது. R4061:6 வாழ்க்கையின் நீரோட்டத்துடன் எதிர்த்துப் போராடுவதிலுள்ள நமது பெலத்திற்கான ஆதாரம் யார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. R4005:1 கிறிஸ்துவின் வல்லமையே பரி. பவுலின் மேல் தங்கியிருந்தது. (2 கொரி. 12:9, 10) R1558:5 நாடுகிறதற்தாக நமக்குள் இலவசமாக கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பலத்தின் மூலமாக. R772:5* ஆவியினால் மாத்திரமே நம்மால் ஜெயங்கொள்ளவும், மகிமையடையவும் முடியும். R160:2*

**எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு** – பிரதிஷ்டை மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பவைகளின் மூலமாகவே, புதிய சிருஷ்டிகளாகிய நம்மால் (தேவன்) ஏற்றுக்கொள்ளக்கூடிய கிரியைகளைச் செய்ய முடியும். R5759:2 "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (1 யோவா. 5:4) R3088:4 தம்முடைய கிருபையைச் சார்ந்திருப்பவர்களை நன்கு பெலப்படுத்தி, சகாயமும்செய்வார் – "என்னைப் பலத்தால் இடைகட்டுகிறவர் தேவனே." (சங். 18:32) R2154:3 வ.11 மற்றும் 12 என்பவைகளின் அனைத்து விஷயங்களையும் (செய்ய எனக்குப் பெலனுண்டு). R1920:6 ஆவியினால் மாத்திரமே நம்மால் ஜெயங்கொள்ளவும், மகிமையடையவும் முடியும். R160:2* தேவனுடைய பராமரிப்பு நமக்குப் போதுமானதாயிருக்கின்றது / போதுமானதைத் தருகின்றது – நமக்கான பரிந்துபேசுபவர், நமக்கு ஆதரவளிக்கவும், தப்பிக்கும் போக்கை வழங்கவும், நம்மைப் பெலப்படுத்தவும், "ஏற்றகால போஜனத்தைக்" கொடுக்கவும், நம்மை திடப்படுத்தவும், அவருடைய வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டவும் வல்லவராயிருக்கிறார். NS755:5

## 62. பிலிப்பியர் 4:19

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."**

**உங்கள் குறைவையெல்லாம்** – ஆடம்பரங்களை அல்ல, மாறாக கட்டாயமாக தேவைப்

படுபவைகளையெல்லாம். R3400:4 மிகவும் பயன்தரக்கூடிய வகையில், சத்தியத்தை மற்றவர்கள் முன் வைப்பதற்கான உங்களுடைய திறன். R415:5

**தேவன்... நிறைவாக்குவார்** – "அவர் உங்கள் மேல் அக்கறையுள்ளவராய் இருக்கிறார்." (1 பேது. 5:7 – TCV) – காகங்களைக்கொண்டு எலியாவைப் போஷித்ததன் மூலமாக இது சித்தரிக்கப்படுகின்றது. R3400:4 எந்த வகையிலாவது எந்த அளவிலாவது நாம் சோதிக்கப்படும்போது, நாம் சார்ந்துநிற்கக் கூடிய இதுபோன்ற "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்காக," (2 பேது. 1:4) "வார்த்தையிடம் பறந்து செல்வோமாக." R1802:5*

## 63. கொலோசெயர் 2:10

**"மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்."**

**நீங்கள்** – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள், இவ்வாறு பிரியமானவர் மூலமாக பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். R2671:5 உடன்–ஆசாரியர்களாகவும், தற்காலத்தில் பாடுகளைப் பகிர்ந்துகொள்பவர்களாகவும், அதில் உண்மையுள்ளவர்களாக இருந்தால் பிற்காலத்தில், இந்த முறைமையின் பிரதான ஆசாரியராகிய இயேசுவின் மகிமைகளைப் பகிர்ந்துகொள்ளு பவர்களாகவும் ஆவதற்கு அழைக்கப்பட்டுள்ள நீங்கள். R2671:5

**சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற** – பிதாவால் நம்முடைய கர்த்தராகிய இயேசுவிற்கு அளிக்கப்பட்ட அவருடைய இராஜ்யத்தின் மகிமையைப் பற்றின வேதவாக்கியம். E79:2 தேவன் கிறிஸ்துவின் தலையாக இருந்தாலும், தம்முடைய குமாரனை இன்னொரு தலையாக்கி அவரைக் கனம்பண்ணுவதில் அவர் பிரியப்படுகின்றார். R1550:1

**அவருக்குள்... பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்** – "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்." (எபே. 5:27) R2587:6 கிறிஸ்துவின் புண்ணியமானது நமக்கு அவருடனான ஐக்கியத்தையும், ஒத்துழைக்கும் வாய்ப்பையும் அளிக்கிறது; தேவனுக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், நமக்கு முக்கியத்துவத்தையும் (weight), செல்வாக்கையும், சக்தியையும் அளிக்கின்றது. "பிரியமானவருக்குள்" ஏற்றுக்கொள்ளப்பட்டு. (எபே. 1:6) HG387:3; R3149:4 "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." (யோவா. 15:5) R5902:2

## 64. கொலோசெயர் 3:4

**"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்."**

**நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து** – ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேதாகமப்பூர்வமான சாட்சியானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், உயிர்த்தெழுதலையும், முதலாவது திருச்சபையின் நம்பிக்கையாகவும், இரண்டாவது உலகத்தின் நம்பிக்கையாகவும் இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றது. F664 நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு அவர் நம்மை மரித்தோரிலிருந்து எழுப்ப வேண்டியிருக்கிறது. CR321:3 நாம் அவரோடேகூடப் பாடுபட்டால், ஒன்றாக மகிமையும் அடைவோம். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவினுடைய இராஜ்யத்தில் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள். (உரோ. 8:17; 2 தீமோ. 2:11, 12; மத். 13:43) A86 கிறிஸ்துவுக்கான மணவாட்டியைத் தெரிந்தெடுக்கும் நோக்கத்திற்காக இராஜ்யம் வருவதில் தாமதம் ஏற்பட்டது. CR268:5

**வெளிப்படும்** – வெளிப்படும் (manifest). R914:6, 616:1*

**போது** – பின்னர், திருச்சபை நிஜத்தில் ஒரு மகிமைவாய்ந்த சரீரமாக இருக்கும், சதாகாலத்திற்கும் தேவகுமாரனுடைய துணைவியாக, கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கப்போகிற உயரிய பதவிக்கு எல்லா வகையிலும் பொருத்தமான ஒரு சரீரமாக இருக்கும். R1102:3 அவர் அதிகாரப்பூர்வமாக உலகத்தின் இராஜாவாக பதவி ஏற்கும் முன்பு அவருடைய அங்கத்தினர் நிறைவடைய வேண்டும். *Ciii*

**நீங்களும்** – ஜெயங்கொண்டவர்கள். R1669:3 திருச்சபை. R5399:5 திருச்சபை, இந்த யுகத்தின் செம்மறியாடுகள். R4784:6 மணவாட்டி வகுப்பார். R4693:1

**மகிமையிலே** – அவருடைய அவயவங்களோடு சேர்ந்து நாம் பாடுபடுவோமானால், ஒன்றாக நாம் மகிமையுமடைவோம். R4398:4 மேலும் அந்த மகிமையான தோற்றத்தின் நோக்கமும், அந்த இராஜ்யமும், மனுக்குலத்தின் காயத்திற்காக அல்லாமல், மாறாக முழு உலக ஆசீர்வாதத்திற்காக இருக்கும். CR269:2 முதலில் உலகத்திலிருந்து சபையானது கூட்டிச்சேர்க்கப்படும் வரையில், கிறிஸ்து தம்முடைய இராஜ்யத்தின் (சபையின்) மகிமையில் வரமுடியாது என்பதை நாம் அறிவோம். R579:5, 263:2, 19:2 நம்முடைய இழிவான சரீரத்திலிருந்து அவருடைய மகிமையான சரீரத்திற்கு மாற்றப்படுவோம். R2064:5 நம் ஆண்டவர் தாம் பெற்றுள்ள தெய்வீகச் சுபாவத்தையே தம்முடைய பின்னடியாருக்குக் கொடுக்கும் சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார். R4155:1 திருச்சபை மகிமையில் தன்னுடைய கர்த்தருடன் கூட்டிச்சேர்க்கப்படும் வரை கர்த்தருடைய இராஜ்யம் முழுமையாக வெளிப் படாது. R5567:1 கிறிஸ்து மகிமையில் வருகிறாரா? நாமும் அவருடன் மகிமையில் தோன்றுவோம். R30:6* "அவரில் காணப்பட" வேண்டும் என்ற பரி. பவுலின் கவலையையும் (பிலி. 3:7 – 11), மேலும் அவர் எந்த விலைகொடுத்தாவது அந்தச் "சரீரத்தில்" அங்கத்துவத்தையும், அது அனுபவிக்கும் உயர்ந்த அல்லது பிரதான உயிர்த்தெழுதலையும் அடைய நாடினார் என்பதையும் கவனியுங்கள். R827:6 அப்போஸ்தலர் தாங்கள் மரித்தவுடனே மகிமை கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை, மாறாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயே மகிமை கிடைக்கும் என எதிர்பார்த்தார்கள். HG334:3 பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த பிறகு, மகிமையில் தோன்றுவதை புதிய ஏற்பாடு தெளிவாகக் காண்பிக்கிறது. R56:2* முழு கிறிஸ்துவும் இவ்வாறு வெளிப்பட்டு, மாம்சத்தில் பாடுபட்டது போல, அவர்களும் உலகத்திற்கு முன்பாக "ஒன்றாக மகிமைப்படுத்தப்படுவார்கள்." T84 சபை அவருடன் அவரது சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும். SM224:2 கர்த்தர் அவருடைய சிங்காசனத்தில் இருக்கும் போது, சபை அவருடன் ஆளுகை செய்யும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். HG336:5 அவரது இரண்டாம் வருகையில். R2958:6, 1102:3 நமது கர்த்தருடைய மகிமையின் வெளிப்பாடு என்பது மற்றொரு வருகை அல்ல, மாறாக அதே வருகை அல்லது பிரசன்னத்தின் (பரோஷியா) மற்றொரு படிநிலை அல்லது வளர்ச்சி ஆகும். R2303:6 மறுரூப மலை சம்பவத்தில் இது முன்னரே நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. (மத். 17:1 – 9) R32:6 பலியிடுதல் அனைத்தும் முடிந்து, சபை மகிமைப்படுத்தப்பட்ட பிறகு, அவர் எல்லா ஜனங்களையும் இரட்சித்து ஆசீர்வதிப்பதற்கு இரண்டாம் முறையாக வருவது. R5655:6 வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் நடக்கும் கர்த்தருடைய எபிப்பானியா அல்லது அப்போகலுப்சிஸ் என்பது, திருச்சபைக்கோ அல்லது திருச்சபைக்காகவோ அல்லாமல், மாறாக உலகிற்கும் உலகிற்காகவுமே இருக்கும். R4543:6 உலகிற்கு. R5399:5 "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." (1யோவா. 3:2) R1881:6, 98:5*; NS338:4; HG334:3

**வெளிப்படுவீர்கள்** – கிறிஸ்துவுடன் பரிசுத்தவான்கள் கூட்டிச்சேர்க்கப்படுவது அவர்கள் அவருடனே கூட வருவதற்கு (அ) வெளிப்படுவதற்கு முன்னதாக நடந்தாக வேண்டும். R206:6 தேவனுடைய தெய்வீகப்

புத்திரர் மற்றும் சுதந்தரரின் இந்த மகிமையான வெளிப்பாட்டிற்காகவே பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியானது காத்திருக்க வேண்டியிருக்கிறது. R616:2* இந்தத் தோன்றுவது அல்லது வெளிப்படுத்தப் படுவது உலகிற்காக இருக்கும். R5008:2 இம்மானுயேலின் எபிப்பானியா, வெளிப்படுதல், வெளிக் காட்டப்படுதல். R5523:1

### 65. 1 தெசலோனிக்கேயர் 5:24

### "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்."

**உண்மையுள்ளவர்** – தேவன் தாம் வாக்களித்துள்ளதை நிறைவேற்றுவதற்கு வல்லவராயுமிருக்கிறார். R1142:1 ஒருவரால் அடையவே முடியாத ஓர் அழைப்பைக் கொடுத்து, யாரையும் நம்முடைய பிதா பரியாசஞ்செய்வதில்லை. R200:1 அவர் (தேவன்) தம்முடைய வாக்குத்தத்தத்தின்படி, ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்தவுஞ்செய்வார். R946:5 அத்துடன் நம்முடைய தரப்பிலும் உண்மைத்தன்மை தேவைப்படுகின்றது. R1211:2* யாரேனும் ஒப்பந்தத்தை மீறினால், அது (தேவனாக இருக்காது, மாறாக) நாமாகத்தான் இருப்போம். தேவன் நிச்சயமாக அவருடைய பங்கை நிறைவேற்றுவார் / செய்திடுவார். OV422:4; தேவன் நமக்கு இந்தப் பாதையில் ஒத்தாசையையும், தேவையான அனைத்து உதவிகளையும் வாக்களித்திருக்கிறார். அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கிறது. F374 நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் பள்ளியில் நமக்குக் கொடுக்கப்படுகிற அனுபவங்களினால் நாம் சரியாகப் பயிற்சி பெற்றுக்கொண்டோமேயானால், அவருடைய அங்கீகாரத்தை (approval) நாம் பெற்றுக்கொள்வோம். R5460:2

**அவர் அப்படியே செய்வார்** – தாம் கொடுத்த வாக்கை அவர் காப்பாற்றுவார். R225:4 நாம் நினைக்கிறதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் எதிர்பார்ப்பதற்கும் மிகவும் அதிகமாகவும், மிகுதியாகவும் அவர் நமக்குச் செய்வார். CR274:5; R3660:1 அப்போஸ்தலனுடைய ஜெபத்திற்கு இசைவாக தெசலோனிக்கே பட்டணத்துச் சபை இருக்கவில்லை என்பது ஏதோ தேவனுடைய தரப்பில் உண்மையற்றத்தன்மை காணப்பட்டது என்பதைக் காட்டவில்லை, மாறாக அப்போஸ்தலன் யாருக்கு உரையாற்றினாரோ அவர்கள் தரப்பில் காணப்பட்ட புறக்கணிப்பும் உண்மையற்றத்தன்மையையுமே அது காட்டியது. R3138:1 எவர்களுடைய இருதயங்கள் அவருடைய சித்தம் செய்வதற்கு முழு ஆயத்தத்தோடு இருக்கின்றதோ, அவர்களுடைய அபூரணமான ஊழியம்கூட தேவனுக்குப் பிரியமாக இருக்கும். இருதயத்தின் எண்ணங்களையும் நோக்கங்களையும் பகுத்தறிகிற கர்த்தர் ஒருபோதும் தவற மாட்டார், அவருடைய வாக்குத்தத்தங்கள் குறித்து அவர் தாமதிக்கவும் மாட்டார். R1018:5* வாக்குத்தத்தமானது அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், (ஏற்றுக்கொள்ளப் பட்டவர்களும்), உண்மையுள்ளவர்களுக்குமானது. R1142:1 நம்முடைய பங்கை நாம் உண்மையுள்ள வர்களாக / உண்மையாகச் செய்வோமா என்பதுதான் கேள்வியே, ஏனெனில் தேவன் நிச்சயமாக அவருடைய பங்கைச் செய்திடுவார். R5907:1, 4420:4

### 66. 2 தெசலோனிக்கேயர் 3:3

### "கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்."

விளக்கம் அளிக்கப்படவில்லை.

### 67.2 தீமோத்தேயு 1:7

### "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள

ஆவியையே கொடுத்திருக்கிறார்."

**நமக்கு** – உலகத்தை விட்டுப் பிரிந்து, பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள். R5093:3

**பயமுள்ள** – புதிய சிருஷ்டியானது அடிமைத்தன பயத்தின் ஒவ்வொரு தாக்குதலையும் புறம்பே தள்ளிவிட்டு, கர்த்தர் மீது நம்பிக்கை வைப்பதை வளர்த்திக்கொள்ள வேண்டும். R5977:3 சந்தேகம், விசுவாசத்தில் குறைச்சல், பரிசுத்த ஆவியில் பற்றாக்குறை. E249 அச்சத்தின் ஆவி; கூச்சம் / கோழைத்தனத்தின் ஆவி. R5093:6, 4378:3 அடிமைத்தன பயம், இது விழுந்துபோன மாம்சத்திற்குச் சொந்தமான ஒன்றாகும். R5977:3 நாம் பயப்படுபவர்களாகவோ, மனுஷரைப் பிரியப்படுத்து பவராகவோ அல்லது (முகஸ்துதி) துதிப்பாடுபவர்களாகவோ இருக்கக்கூடாது. R2263:4 சகல பயமும், சுயநலமாக ஆசைப்பட்ட ஒன்றை இழந்துவிடுவோமோ என்பதன் வெளிப்பாடாக இருப்பதால், பயம் என்பது சுயத்தை அன்புகூரும் அம்சங்களால் ஆனதாக இருக்கின்றது. பயத்தின் ஆவி தேவனிடமிருந்து வருவதில்லை. R5094:1 "பயத்தின் ஆவியைப்" புதிய சிருஷ்டிக்கு ஊழியம்செய்கிற பயனுள்ள ஊழியனாக (a valuable servant) வைத்துக்கொள்ளலாம், அதேசமயம் அது சகிக்க / சமாளிக்க முடியாத எஜமானனாக (an intolerable master) இருக்கும். பரிசுத்தம், சந்தோஷம், சமாதானம், அன்பு மற்றும் ஐக்கியம் எனும் உங்களின் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதற்காக, உங்கள் இருதயக் கதவுக்கு வெளியே கட்டிவைக்கப்பட்டிருக்கும் உங்கள் காவல் நாயாக அதனை ஆக்கிடுங்கள். E197

**ஆவியை** – மனப்பான்மை. D326; R3325:6, 2560:5, 1737:5, 1693:2, 1414:1, 1412:5, 1081:1, 1079:3

**பலமும்** – தைரியம். R4378:6 வலிமை, சரியான ஒவ்வொன்றிற்காக உறுதியாக நிற்பது. R5094:2 அன்பினால் விழித்தெழுப்பப்பட்ட ஆற்றல், வைராக்கியம். R2166:1 நம்மை, "அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு பலமுள்ளவர்களாக்குகிறது." (2 கொரி. 10:4) E250 நாம் இந்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் அளவிற்கேற்ப, இந்தப் பலத்தின் வல்லமையையும், தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துவதற்கு வல்லவராயும் சித்தமுள்ளவராயும் இருக்கிறார் என்கிற உறுதிமொழியின் ஆவியையும் பெற்றுக்கொள்கிறோம். (உரோ. 8:28) R5094:2, 5977:6 அன்பு மற்றும் தெளிந்த புத்தியின் ஆவி என்பது ஒரு பலம் என்பதை "பாரம்பரிய மதமானது" பார்க்கத் தவறிவிட்டது. R1122:2 கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவிற்கேதுவாக நாம் வளர்ச்சியடையும்போது நம்மை முழுமையாக ஆளும் சக்தியாகும். R1414:1, 1081:2 சுயமரியாதையால் வருவது அல்ல, மாறாக தேவன் மீதான விசுவாசத்தின் அடிப்படையில் வரும் ஒன்றாகும். R4378:3

**அன்பும்** – பெரும்பாலும் சுயநலமாக இருக்கின்ற "சுபாவ" அன்பு அல்ல, மாறாக சுயத்தைத் தாராளமாகத் தியாகஞ்செய்யும் அன்பாகும். E250 தேவனை அறிகிற உண்மையான அறிவால் ஏவப்பட்ட அன்பு. R5977:6, 4379:1 வழி தவறியவர்களிடம் மேன்மேலும் மனதுருக்கம் கொள்ளச்செய்வதற்கேதுவாக கிறிஸ்தவருக்கு உதவுகிற இரக்கம் மற்றும் கனிவின் ஆவி. R5977:6, 5094:4 மன்னிப்பானது அன்பு மற்றும் சகோதர சிநேகத்தின் ஆவியால் தூண்டப்பட வேண்டுமே ஒழிய, நச்சரிப்பினாலோ அல்லது தவறு செய்தவர்கள் படும் அவஸ்தை அல்லது துயரத்தைக் கண்டு பரிதாபப்பட்டோ நம்மிடமிருந்து பலவந்தமாக வெளிப்பட்டதாக இருக்கக்கூடாது. R1693:6 நம்மிடம் எந்தளவிற்குப் பரிசுத்த ஆவி இருக்கின்றதோ, அந்தளவிற்கு நம்மிடம் அன்பும் இருக்கும் – முதலில், தேவனிடமும்; இரண்டாவதாக, தேவபிள்ளைகளிடமும்; மூன்றாவதாக, நமது அண்டை வீட்டாரிடமும் நண்பர்களிடமும்; இறுதியாக, நமது எதிரிகளிடமும் அன்புகூருவோம். R5094:3

**தெளிந்த புத்தியுள்ள ஆவி** – பொதுவாக உலகம் அப்படிப்பட்ட தெளிந்த புத்தியைக்

கொண்டிருப்பதில்லை என்பதை இது உணர்த்துகிறது. R3773:2 பரிசுத்த ஆவியால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே இந்த ஆவியைப் பெற்றிருப்பார்கள். R3972:2 தேவனுடைய பார்வையில், இது ஒரு புதிய சிந்தையாக இருக்கிறது. E257; R5093:3, 3773:2, 1414:1 கிறிஸ்துவின் சிந்தை, அவரது ஆவி, அவரது சிந்தை. R3325:6, 5888:3 ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வார்த்தையால் வலுப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்ட சிந்தை; அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்திற்குள் கொழுந்துவிட்டு எரிகின்ற அன்பின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்கேதுவாக காலங்களையும், வேளைகளையும், முறைகளையும் குறித்து ஞானமாக நிதானிக்கும் ஒரு சிந்தை. R2166:1 உலகில் மிகவும் விரும்பத்தக்க ஒன்றாக தெளிந்த புத்தியின் ஆவி இருக்கின்றது. R5099:3, 1414:1, 1081:1 நல்ல ஆரோக்கியமான நிலையில் இருக்கின்ற மற்றும் அதன் அனைத்து திறன்களையும் முழுமையாகப் பெற்றிருக்கின்ற ஒரு சிந்தை. R1412:6, 1079:3 அதனை உடையவருக்குக் காரியங்களை இன்னும் சரியாகப் பார்க்க உதவுகிறது, மேலும் வாழ்க்கையின் சகல காரியங்களுக்கும் தேவையான ஞானத்தையும் கிருபையையும் கொடுக்கிறது. R2263:3,4 பாவத்தின் மூலமாக உண்டான மனம்சார்ந்த மற்றும் ஒழுக்கம்சார்ந்த சமநிலையற்றத்தன்மையால் (mental and moral unbalance) தெளிவற்ற சிந்தை உருவாகின்றது. R1080:4 திட்டவட்டமாகச் சொல்வதானால், உலகத்தில் பூரணமான தெளிந்த புத்தி என்ற ஒன்று காணப்படுவதில்லை. R1412:6, 1080:1 சரியான மனப்பான்மை. R2685:6 எத்திசையிலும் பாரபட்சமோ, தவறான அபிப்பிராயமோ இல்லாமல் இருப்பது. R1412:6, 4407:5 வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் எது சரி எது தவறு என்று சிந்திப்பதற்கு இந்த ஆவி நம்மை வழிநடத்துகிறது. R5094:5 பகுத்தறிவு மற்றும் நீதியின் ஆவி. R5942:6, 4485:2 அன்பு மற்றும் நியாயமான பகுத்தறிவின் ஆவி. R5417:6 நாம் தெளிந்த புத்தியின் ஆவியில் வளர வளர, தெய்வீகச் சித்தத்திற்கு, தெய்வீக ஆவிக்கு இசைவாக மனுஷரோடு எப்படி நடந்துகொள்வது என்பதை இன்னும் நன்றாகக் கற்றுக்கொள்கிறோம். R5417:2 வாழ்வாதாரத்திற்கான வழிவகையைத் (வேலையைத்) தேர்ந்தெடுப்பதில், தீர்மானம் எடுக்கும் கேள்வியாக இருப்பது யாதெனில், நான் எந்தத் தொழிலில் கர்த்தருக்குச் சிறந்த முறையில் ஊழியஞ்செய்ய முடியும்? என்பதாகும். R5358:2 நாம் சத்தியத்திற்கான நல்ல நிருபங்களாக (subjects) இருக்கிறவர்களுக்கும், அப்படி இல்லாதவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கண்டறிவதில் தெளிந்த புத்தியின் ஆவியைப் பயன்படுத்த வேண்டும். R5376:4 சத்தியத்தைப் பற்றிய தெளிவான புரிதலுக்கும், அதற்குக் கீழ்ப்படிவதற்கும் மிகவும் அவசியமான ஆவி இதுவாகும். R1412:5 நம்முடைய சிந்தைகள் அனைத்தும் பரிபூரணமற்றவையாக, தெளிவற்றவையாக இருக்கின்றன. அவருடைய வார்த்தையில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய சித்தத்தினால் நாம் வழிநடத்தப்படும்போது, நாம் தெளிந்த புத்தியின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறோம். R5726:3 தேவனுடைய சிந்தையோடு நம்முடைய சிந்தை இசைவாகி, நம்முடைய சிந்தைகள் அவருடைய சிந்தைக்கு அடிபணியும்போது, நம்முடைய சிந்தை மேன்மேலும் தெளிவடைகின்றது. Q452:3; R5843:5, 5978:1; Q44:7 பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலின் கீழாக, கிறிஸ்தவர் தங்களுக்கு எழும் பல்வேறு கேள்விகள் தொடர்பாக, தங்கள் சொந்த நிதானிப்புகளிலுள்ள தவறுகளைப் படிப்படியாகச் சரிசெய்வதற்குக் கற்றுக்கொள்ளுகிறார்கள். E253 “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.” (யாக். 1:5) R1777:1 வீணாகப் புறம்பேசுவதும், பிறருடைய காரியங்களில் வீண்அலுவல்காரராக இருப்பதும் தெளிந்த புத்தியின் காரியங்களாக இருக்காது, மாறாக அவை அறிவீனமான காரியங்களாக இருக்கின்றன. R1413:2, 1080:2 பிசாசுகளின் ஆவியே தெளிவில்லாத புத்தியின் ஆவியை உண்டுபண்ணுகிறது. R2185:2

## 68. 2 தீமோத்தேயு 2:11, 12

**வ. 11 – “இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட**

**மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;"**

**அவரோடேகூட மரித்தோம்** – உலகத்திற்கும் நமது சொந்த சித்தத்திற்கும் மரித்து – தேவனுடைய சித்தத்திற்குப் பிழைத்து. R297:4, 4616:3, 4453:2, 127:3*, 121:3 ஆண்டவருக்காக தற்கால ஜீவியத்தைக் கையளிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருப்பது. R2615:5 நாம் அவருடனேகூட பாடுபட்டால் மாத்திரமே அவருடனேகூட ஆளுகையும் செய்வோம். R5621:3 எப்படி உண்மையில் நாம் ஆதாமுடனேகூட மரித்தவர்களாக இருந்தோமோ, அதுபோல கிறிஸ்துவுடனேகூட மரித்தவர்களாக எண்ணப்படுவது. R914:3 பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகள் தங்கள் மீட்பராகிய கிறிஸ்துவுடன்கூட மரித்துக்கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறார்கள். R1454:4, 5342:1 கிறிஸ்துவும் அவருடைய சபையும், தற்காலத்திற்கும் நித்திய காலத்திற்குமான மனித நம்பிக்கைகள் மற்றும் நலன்களுக்கு மரித்து, நீதிக்காகத் தங்கள் ஜீவனைக் கையளித்து, துன்பப்படுகிறார்கள். R5495:5 நாம் நமது பூமிக்குரிய சுபாவங்களை முற்றிலும் தகனஞ்செய்துவிட்டால், திவ்ய சுபாவத்தை நாம் பெற்றுக் கொள்ளுவோம். R5250:5, 4784:3, 4525:5 அதாவது கிறிஸ்துவின் சரீர அங்கத்தினரின் மரணத்திற்கான அர்ப்பணிப்பைக் குறிக்கின்றது. R4980:5

**மரித்தோமானால்** – நாம் மரித்தாகிவிட்டால். R297:4

**அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்** – அவருடைய திவ்ய சுபாவத்தில் பங்காளிகளாக இருப்போம். CR348:6; R4398:1, 2615:5, 121:6 ஆபிரகாமிடம் செய்யப்பட்ட உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களின் பரத்திற்குரிய பாகத்தை அவரோடேகூடப் பகிர்ந்துகொள்ளுவோம். R4453:2 மரண பயமோ அல்லது கிரீடத்தைப் பற்றின உயர்ந்த எண்ணமோ நம்மை ஆட்டுவிக்கும் உள்நோக்கமாக இருக்கக்கூடாது, மாறாக அவர் நமக்காகச் செய்து வருபவையும், அவர்மேல் நமக்குள்ள அன்பும், அவரைப் பிரியப்படுத்துவதற்கான நமது வாஞ்சையுமே நம்முடைய உந்துசக்தியாக இருக்க வேண்டும். R3561:4 அவர் அனுபவித்த அதே உயிர்த்தெழுதல் மாற்றத்தை நாமும் பெற்றுக்கொண்டால் மாத்திரமே இது நடக்கும். R1260:2

**வ. 12 – "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;"**

**பாடுகளைச் சகித்தோமானால்** – அவரோடேகூட. R5739:6, 5546:6, 5421:5, 5420:6, 5196:6, 5108:4, 5090:5, 5079:3, 5051:4; T26 அவரது அங்கங்களாக. R5180:4 சரியானதைச் செய்வதற்காக; பிதா நமக்காக ஊற்றும் எந்தப் பாத்திரத்தையும் நாம் மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் பருகுவோமாக. R5739:6 பாடு மற்றும் மரணம் எனும் அவரது பாத்திரத்தைப் பருகுவது. R4547:4, 5643:4, 5420:6, 5192:6, 4147:5 அவரோடுகூடப் பாடுபட்டு, மரிப்பவர்கள் மட்டுமே மேசியாவினுடைய மகிமையின் சிங்காசனத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். R5180:6, 5638:3, 5622:2, Q610:4; SM144:T இந்த யுகத்தின் அழைப்பானது பலிசெலுத்துபவர்களுக்கு மட்டுமானதாகும் – மரணபரியந்தம், நமது மீட்பரின் சுயத்தை வெறுக்கும் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதற்கான அழைப்பாகும். R4920:3, 5392:2, 5090:5, 5067:3, 5063:5, 4453:2; OV189:T துன்பங்கள், சோதனைகள், சிலுவைகள், சுயத்தைப் பலிசெலுத்துவது என்பவைகளின் கீழாக, உண்மைத்தன்மைக்கான பரீட்சையில் நிலைநிற்பவர்கள் மட்டுமே, திருச்சபையின் ஜெயங்கொள்ளுபவர்களுக்குரிய மகிமைகளில் கிறிஸ்துவுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளனர். OV188:4, 379:4; CR80:1, R30:6* "தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; ...அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்." (உரோ. 8:17) A212; E144, 146; F439; T50; R5677:4, 5643:1, 5192:6, 5079:4, 2787:2, 1782:6, 1574:1, 1566:1, 1372:3, 623:6 இந்த அம்சம் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை. CR93:6 இந்தப் பாடுகள் என்பது

மனுக்குலத்தில் பொதுவாக காணப்படும் வியாதி முதலான பாடுகளைக் குறிக்காது, மாறாக, கிறிஸ்துவினிமித்தமாக வரும் பாடுகளை, அதாவது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஈடுபடுவதன் மூலமாக வரும் பாடுகளைக் குறிக்கின்றது. R1782:6 இயேசுவின் பாடுகள் பலியினிமித்தமாக வந்தவையாகும், மாறாக எந்தத் தவறுக்காகவும் கிடைத்த பாடுகள் அல்ல; எனவே அவருடைய பாடுகளில் நாம் பங்கடைகிறோமென்றால், நமது பாடுகள் பலியினிமித்தமாக வந்தவையாக இருக்க வேண்டும். R4616:3 பாடுபடுவதற்கான இந்த மனவிருப்பமானது நமது கர்த்தருடன் நாம் செய்திட்ட பலியினாலான உடன்படிக்கையாக இருக்கின்றது. R5108:4 அவரது மரணத்திற்கு ஒப்பாகுவதன் மூலமாக. R4964:6 நம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதன் மூலமாக நம்மேல் நாம் வருவித்துக் கொள்ளும் பாடுகள். R5117:4 கர்த்தரால் தயவு பெற்றவர்கள், மற்றவர்களை விடவும் அதிகப்படியான பாடு அனுபவங்களைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. தங்களை தங்களது எதிர்காலப் பணிக்காக தயார்செய்கின்ற தெய்வீகத் தயவின் அடையாளங்களாக இந்தத் துன்பங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். R2761:1 இது ஒரேயொரு பலியாகும், அதாவது ஒரேயொரு ஆசாரியரின் ஒரே சரீரமானது பலிசெலுத்தப்படுவதாகும். R4965:3 பாடுகள் முடிந்தவுடன் மகிமை தொடங்கும். CR327:5; R157:2 தலையும் சரீரமுமாகிய மகத்தான கிறிஸ்துவின் மகிமையானது, அவர்களது பாடுகள் அனைத்தும் முடிவடைவது வரையிலும் ஆரம்பமாக முடியாது. R3683:3 இந்த எண்ணம் நினைவுகூருதலில் பங்கேற்பவர்களின் மனதின் முன்பாகக் காணப்பட வேண்டும். R5643:1 இந்த யுகத்தின் முடிவில் கர்த்தர் தமது ஜனங்களை அக்கினிப்போன்ற உபத்திரவத்தின் ஊடே கொண்டு போகலாம்; ஆனால் எலியாவிற்கு நடந்தது போலவே, அது அவர்களை பரம வீட்டிற்கும், மகிமை கனம் அழியாமைக்கும் அழைத்துச் செல்லும் ஓர் இரதமாகவே இருக்கும். R5677:4 ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் சவுகரியம் எனும் மலர்ப் படுக்கையிலே கிடத்தப்பட்டு, பரலோகத்திற்குச் சுமந்து செல்லப்படுவார்கள் என்று எதிர்பார்ப்போர் நிச்சயமாக தவறாக நினைக்கிறார்கள். R4138:4

**அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்** – ஆவிக்குரிய தளத்தில், நமது தலையானவரின் மகிமைகளையும் கனங்களையும் பகிர்ந்து கொள்ளுவோம். R4398:1, 5392:2, 5196:6, 5180:4, 5067:3, 4855:6, 4547:4, 3709:3, 1176:3; A196 அவர் பூமியில் தமது இராஜ்யத்தை நிறுவியிருக்கும் போது. R1151:5 புதிய யுகத்தின் திறப்பிலும், அதன் ஆசீர்வாதங்களை வழங்குவதிலும் பங்கடைவோம். R5421:5 ஆயிரமாண்டு யுகத்தில். OV254:4; R3683:2 திவ்ய சுபாவத்திலும், மகிமை, கனம் மற்றும் அழியாமையிலும், இயேசுவுடன் பங்கடைவது. R5677:4 நாம் துன்புறுத்தலைத் தவறவிட்டால், ஆசீர்வாதத்தையும் தவறவிடுவோம். CR493:1 பாவத்தின் அனுமதியால் இது சாத்தியமானது. அதாவது விழுந்துபோன சந்ததியில், இயேசுவைப் போன்ற அதே மனப்பான்மையுள்ள வர்களை, பாடுகள் வழியாக தங்கள் ஜீவனைக் கையளிப்பதற்கும், அவருடன் ஆளுகைசெய்வதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்கும் தேவனால் நியாயமான முறையில் அனுமதிக்க முடிந்தது. SM67:1 “நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.” (2 தெச. 2:14) T80 “நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.” (கொலோ. 3:4) A86

**நாம் அவரை மறுதலித்தால்** – புறக்கணித்தால் / ஏற்க மறுத்தால். R1139:4* சரியானது எனும் ஒரே காரணத்திற்காக அவர்களும் தம்மைப் போல சரியானதைச் செய்வதற்கேதுவாக, தேவன் மனிதனுக்கு நல்லதையோ தீயதையோ தேர்ந்தெடுக்கும் சுயாதீனத்தை முழுமையாக அளித்திருந்தார். R725:5 அவரை அறிக்கைசெய்யும் தைரியத்தை அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். SM182:3 “அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்.” (தீத். 1:16) E490

**அவரும் நம்மை மறுதலிப்பார்** – அப்போது, அவர் நம்மை மறுதலிப்பார். E490

## 69. 2 தீமோத்தேயு 2:19

**“ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.”**

**திருவிவிலியம் – “கடவுள் இட்ட அடித்தளம் உறுதியாய் நிலைத்து நிற்கிறது. அதில் ‘ஆண்டவர் தம்முடையோரை அறிவார்’ என்றும், ‘ஆண்டவரின் பெயரை அறிக்கையிடுவோர் அநீதியை விட்டு விட வேண்டும்’ என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.**

**தேவனுடைய... அஸ்திபாரம்** – வழங்கப்பட்ட மீட்கும்பொருள். R566:6 கர்த்தருடைய வார்த்தை. R4826:1

**உறுதியாய் நிலைத்து நிற்கிறது** (திருவி) – மற்ற அனைத்து அஸ்திபாரங்களும் பயனற்றவையாக இருக்கின்றன – மற்ற அனைத்து கோட்பாடுகளும் வீணாய்ப் போய்விடும். R4839:1

**தம்முடையவர்களை** – மெய்த் திருச்சபை. D158; R3156:1, 1103:3 அனைத்து உட்பிரிவுகளிலும், குழுக்களிலும் உள்ள பரிசுத்தவான்கள். R5067:1; CR268:6, 252:1 சபை உட்பிரிவுகளைப் பொருட்படுத்தாமல், அவர்களை அவர் பார்த்துக்கொள்வார். OV239:7 பிரிவினைவாதத்திற்கோ உலகப்பொருள் எனும் பொன் கன்றுக்குட்டிக்கோ தலைவணங்காத ஒரு பெரும் எண்ணிக்கையினர் இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். SM702:1 இவர்கள் கர்த்தருக்காக பயபக்தியை வெளிப் படுத்துகிறவர்கள் – மேலும், அதற்கேற்ப அவரும் அவர்களின் தற்போதைய மகிழ்ச்சிக்காகவும், அவர்களின் நித்திய நலனுக்காகவும் அவர்களுடன் ஒத்துழைத்து, பல்வேறு யுகங்களாக, பல்வேறு வழிகளில் தமது தயவை வெளிப்படுத்தி வருகின்றார். R3964:1 கர்த்தர் தம்முடையவர்களைக் கண்டுபிடித்து, போஷித்து, பலப்படுத்துகிறார். R3781:2 பரமபிதாவுக்கு முன்பாக இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற பரிந்துபேசுபவராக அவர் செயல்பட்டுவருகிறார். CR472:1 தற்கால சத்தியத்தைப் பசியாயிருக்கும் ஜனங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக, கர்த்தர் நம்மைச் சார்ந்திருக்கிறார் என நாம் ஒருக்காலும் சொல்ல முடியாது, மாறாக நமது நன்மைக்காகவே அவருடன் இணைந்து பணியாற்றும் பாக்கியத்தை அவர் நமக்கு அளித்திருக்கிறார். R3781:2 தேவன் கொடுத்த விளக்கத்தின் உதவியோடு, உண்மையான சபை அங்கத்தினர் எங்கு காணப்பட்டாலும், அவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வார்கள். R1103:3 “அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.” (மல். 3:17) F76 “கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்.” (சங். 1:6) R3155:6 “அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிடுகிறான்.” (யோவா. 10:3) R2441:6 எப்படி அப்போஸ்தலரை அவர்கள் காலத்து யூத தேவாலயத்துடன் அடையாளப்படுத்த மாட்டோமோ, அதுபோல மணவாட்டி வகுப்பாரை இன்றைய பெயரளவிலான கிறிஸ்தவ சபைகளுடன் நாம் அடையாளம் காணக்கூடாது. SM206:1 தம்முடையவர்களல்லாத, வெறும் வஞ்சிக்கப்பட்ட களைகளாக இருப்பவர்களையும் அவர் அறிவார். NS94:4

**கர்த்தர்... அறிவார்** – நிச்சயமாக, மெய்யான செம்மறியாடுகள் யார் யார் என்பது கர்த்தரைத் தவிர வேறு யாருக்கும் உண்மையாகத் தெரியாது. OV123:1; R5707:4 இருதயங்களை நம்மால் வாசித்தறிய முடியாதபடியால், பரிசுத்தவான்கள் மாத்திரம் அடங்கிய பொதுவுடைமை அமைப்பை (a communism of saints only) நிறுவுவது சாத்தியமற்றதாயிருக்கும். R1861:6

**கிறிஸ்துவின்** – பிதாவாகிய தேவனுடைய பிரதிநிதி. R1527:3

**நாமத்தைச் சொல்லுகிற** – “உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.” (யாத். 20:7) R1527:3

**அநியாயத்தைவிட்டு விலகக்கடவன்** – அநீதியான எல்லாவற்றிலிருந்தும் (விட்டு விலகக்கடவன்). R4335:3 விசுவாசம், நடத்தை மற்றும் பழக்கவழக்கங்கள் பொறுத்தவரையில், தவறாக இருக்கும் எல்லாவற்றிலிருந்தும் (விலகக்கடவன்). F83

## 70. 2 தீமோத்தேயு 3:12

### "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."

**கிறிஸ்து இயேசுவுக்குள்** – அவருடைய ஆவிக்குரிய சரீர அங்கத்தினர். R5116:6 இவர்கள் தாங்கள் ஒரு பலியினாலான உடன்படிக்கையில் பிரவேசித்துள்ளனர் என்பதைக் குறித்த அறிவைக் கொண்டுள்ளனர். R5394:3 அவர்கள் நீதியின் கொள்கைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டுமே ஒழிய, பாவத்துடனும், உலகத்துடனும் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. R5394:6

**தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற** – தேவனைப் பிரியப்படுத்துவதற்காய் வாழ மனதாயிருக்கிற. R1467:4 நீதியின் கொள்கைகளால் ஏவப்பட்டு, உலகத்தின் போக்கிற்கும், நம்முடைய சொந்த மாம்சத்தின் போக்கிற்கும் எதிராக ஜீவிப்பது. R5117:1, 5394:6 கிறிஸ்து இயேசுவிற்கு இசைவாகவும், நீதியாகவும், ஜீவனையே கையளித்திடுமளவுக்கு உண்மையுள்ளவராகவும் ஜீவிப்பது. R5116:6, 5118:1 தங்களுடைய வாழ்க்கையை நிர்வகிக்கிற தேவனுடைய நீதியின் கொள்கைகளை அவர்கள் இன்னும் தெளிவாகக் காண்கிறார்கள். R5394:3 இவர்கள் பிறர் துன்பப்படுவதற்குக் காரணமாகிவிடக் கூடாது. R5117:2 நம்முடைய வெளிச்சத்தை உண்மையாகப் பிரகாசிக்கச் செய்வதன் மூலமாக, துன்புறுத்தல் தானாக நமக்கு வந்து சேரும். R5544:3 தேவபக்தியாய் வாழ்வது என்பது கொடிய வெளிப்படையான பாவத்திலிருந்து விலகி இருப்பது மாத்திரமல்ல, அதோடுகூட போராட்டத்தில் ஒரு வீரனாகவும், சரியானவற்றிற்குப் பாதுகாவலனாகவும், தீமையை எதிர்ப்பவனாகவும், நீதியின் ஊழியனாகவும், சிலுவையின் போர்ச்சேவகனாகவும் இருப்பதுமாகும். R4866:4 நாம் உலகத்தின் போக்கிற்கு எதிராக செல்ல வேண்டும். R5117:1 இவர்கள் உலகத்திடமிருந்து எதிர்ப்பு, தவறாகச் சித்தரிக்கப்படுதல், அவதூறு, எல்லா வகையான எதிர்ப்புகள் போன்றவற்றை எதிர்பார்க்கலாம். R3801:3, 5094:6 நம்முடைய இருதயங்களிலும், நம்முடைய இயல்புகளிலும் அன்பு வளர்ச்சியடைவதும் இதில் அடங்கும். R5116:3 தற்கால நிலைமைகளின் கீழாக உண்மையாயிருப்பது என்பது மரணபரியந்தம் உண்மையாக இருப்பதை அர்த்தப்படுத்துகின்றது. R4897:4 இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால், சுயத்தைப் பலிசெலுத்த வேண்டும், மாம்சத்தை அழிக்க வேண்டும், இதைத் தவிர வேறு வழியில்லை. R5118:2 பூமிக்குரிய காரியங்களைப் பலிசெலுத்துபவர்களால் மாத்திரமே பரத்திற்குரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். R4902:4 இந்தத் தற்போதைய பொல்லாத உலகில் அல்லது காலக்கட்டத்தில். R1652:3 பிரதானமாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இருப்பவர்கள்; இரண்டாவதாக நீதியின்படி ஜீவித்தாலும் துன்பப்படுவதிலிருந்து பின்வாங்கினவர்கள்; மூன்றாவதாக பழைய ஏற்பாட்டுப் பாத்திரவான்கள். R5116:6

**யாவரும்** – இந்தத் தற்கால பொல்லாத உலகத்தின் அல்லது யுகத்தின் போது. A68; R5252:2, 2251:4 தற்கால நிலைமைகளின்கீழாக. E191; R2251:4 பழைய மனிதனும்சரி, புதிய மனிதனும்சரி, இருவருமே சில துன்பங்களை அனுபவிக்கிறார்கள். ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர்கள் இருவருமே பாதிக்கப் படுவார்கள் எனுமளவிற்கு அவர்களின் நலன்கள் மிகவும் நெருங்கிய தொடர்புடையவையாக இருக்கின்றன. Q534:2 தற்காலத்தில், கிறிஸ்து இயேசுவுக்குள் இல்லாவிட்டாலும், நல்லவர்களாகவும், மேன்மையானவர்களாகவும் இருக்கக்கூடிய அனைவருக்கும், திரும்பக்கொடுத்தலின் காலத்தில் சீர்பொருந்துவதற்குக் கொஞ்ச படிகளே இருக்கும் (அவர்கள் எளிதில் சீர்பொருந்த வாய்ப்புள்ளது). R5395:1

**துன்பம்** – தவறாக புரிந்து கொள்ளப்படுவது; அவதூறு பண்ணப்படுவது. R5094:6 தீமை பேசுதல், முதலியன. CR35:4 ஒவ்வொரு உண்மையான போதகரின் அனுபவம். R1320:6 இந்தப் பிரமாணத்திற்கு எந்த விதிவிலக்கும் இல்லை. R5778:3 சாத்தான் தன்னுடைய கள்ள உபதேசங்களால் குருடாக்கியிருக்கிற வைராக்கியமுள்ள மதவாதிகளிடமிருந்து. R5441:6; PD86/99 கிறிஸ்தவனுடைய சொந்த வீட்டிலும் குடும்பத்திலுமிருந்து, அல்லது சபையிலிருந்து, அல்லது உலகத்திலிருந்து வருகின்ற துன்பம்; அந்நபர் உண்மையுள்ளவராக இருந்தால், இதிலிருந்து அவர் தன்னை விடுவித்துக்கொள்ள மாட்டார். R4407:2 தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கும் உலகத்தாரிடமிருந்து வருகின்றது. R5395:2 பூர்வகால தீர்க்கதரிசிகள் மற்றும் முற்பிதாக்கள் நீதியினிமித்தமாக அநேக துன்பங்களைச் சகித்தனர். R5547:1 எதிர்க்கும் உலகத்திலிருந்தும், தேவ ஜனங்கள் மத்தியில் எழும் கள்ள சகோதரரிடமிருந்தும். R1320:6 ஏனெனில், உலகம் நீதிக்கு எதிரான திசையில் – சுயநலம் மற்றும் மாம்சத்தைத் திருப்திப்படுத்தும் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. R5218:2 இயேசுவுக்கு வந்த துன்புறுத்தலில் பத்தில் ஒன்பது பங்கானது மதத்தலைவர்களிடமிருந்தே வந்தது. R374:3 சத்தியத்திற்கு நேர்மையாக இருப்பதால் வரும் வெறுப்பையும் ஏளனத்தையும் தாங்கிக்கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோமா? அப்படியானால், அவருடைய நாமத்தில் நாம் சந்தோஷத்துடனே முன்னோக்கிச் செல்லலாம். R5441:6 ஒருவன் ஒரு கிறிஸ்தவனாக – சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் பாடுபட்டால் – அவன் வெட்கப்பட வேண்டாம். (1 பேது. 4:16) R2782:1 நம்முடைய உண்மைத் தன்மைக்கும் குமாரத்துவத்திற்குமான ஒரு சான்று. R5544:3 இது குறிப்பாக, இந்தக் கடைசி நாட்களில் உண்மையாக இருக்கின்றது. R5773:3 இயேசுவின் அடிச்சுவடுகளில், மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான பாதையானது மிகவும் கரடுமுரடானதாய் இருக்கின்றது. R5465:6 நம்மில் எவரேனும் துன்பப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டிருந்தால், அவன் தன்னுடைய நிலையைக் குறித்து பயந்திருக்கக்கடவன், மேலும் தான் கண்டடையக்கூடிய அனைத்து சிலாக்கியங்களுக்கும் வாய்ப்புகளுக்கும், தான் உண்மையுள்ளவனாக இருக்கின்றானா இல்லையா என்பதைக் குறித்து கவனமாக ஆராய்ந்துபார்க்கக்கடவன். R4407:2, 5227:5; OV438:1*; Q740:4, 361:6 தற்காலத்து கர்த்தருடைய பின்னடியார்கள் நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவதற்காக அழைக்கப்படுகிறார்கள், அப்படித் துன்பப்படுவது நியாயமானதாகவோ சரியானதாகவோ இருக்கும் என்பதாக அல்லாமல், மாறாக கர்த்தர் தம்முடைய ஜனங்ளைச் சோதித்து, நிரூபித்து, மெருகூட்ட விரும்பி, தீமையை அனுமதிப்பதற்குத் தயாராக இருக்கின்றார் என்ற காரணத்தினாலேயே நீதியினிமித்தம் துன்பப் படுவதற்காக அழைக்கப்படுகிறார்கள். R4813:6, 2415:2 நாம் நீதியினிமித்தம் துன்பப்பட்டால், தேவனுடைய ஆவி நம்மேல் தங்கியிருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். R5395:5, 5227:5 நாம் இன்னும் இந்தத் துன்புறுத்தல் காலத்தில்தான் இருக்கிறோம்; மாபெரும் எதிராளி இன்னும் கட்டப்படவில்லை. R2437:3 ஒருவர் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டு, அதனை உண்மையாக அறிவிக்கின்ற அளவிற்கேற்ப துன்பமும் காணப்படும். R1467:5 இந்தக் காலத்தில், உண்மையற்ற வர்களைக்காட்டிலும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களே அதிக கஷ்டங்களை அனுபவிப்பார்கள். R5294:5 இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும், அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரர், தேவனுக்குத் தங்களுடைய நேர்மையைக் காட்டுவதற்கு, நிந்தைகளையும் இழப்புகளையும் அனுபவிக்க அனுமதி வழங்கப்படுவது தெய்வீகச் சித்தத்தின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றது. R5189:3; SM451:4 இது அப். பவுல் மற்றும் எஜமானருடைய சொந்த அனுபவங்களில் முழுமையாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. SM217:1 கடந்த காலங்களில் இருந்ததை விடவும் தற்காலமானது அதிக முன்னேற்றமும், நாகரீகமும் அடைந்திருப்பதாக காணப்பட்டாலும், சில சமயங்களில் மிகுந்த கடுமையான வலி, துக்கம் மற்றும் மனவேதனை போன்றவை இன்றைக்கும்கூட ஏற்படுகின்றன. SM630:T துன்புறுத்தல் என்பது ஒரு வார்த்தையோ ஒரு செயலோ அல்ல, மாறாக ஒருவர் ஒரு கருத்தினைக் கொண்டிருப்பதினாலோ ஒரு நடத்தையைப் பின்பற்றுவதினாலோ அவரைத் தண்டிக்கும் நோக்கில், தொடர்வரிசையான இரக்கமற்ற வார்த்தைகளைப் பேசுவதும், இரக்கமற்ற

செயல்களைச் செய்வதுமாகும்; துன்புறுத்தல் என்பது வேண்டுமென்று செய்யப்படுவதாகும், துரத்திப்பிடித்துச் செய்யப்படுவதாகும். R5395:2 நாம் ஒரே சரீரத்தின் அங்கங்களாக இருந்துகொண்டு ஒருவரையொருவர் துன்புறுத்தக்கூடாது. R5395:2 ஊடுருவி செல்கிற உண்மையான சுவிசேஷத்தின் ஒளியை உலகத்தால் தாங்கிக்கொள்ள முடியாது. R2415:2 "நீங்கள் உலகத்தாராயிராதபடியினால் ... உலகம் உங்களைப் பகைக்கிறது." (யோவா. 15:19) F628; R5441:5, 5189:5, 2501:2, 374:3 "பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்." (மத். 5:11) F464; R5294:5, 3223:2, 1790:3 தற்கால யுகத்தில், ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு பூமிக்குரிய செழிப்பு கிடைக்காது என்பது தெளிவாகத் தெரிகிறது. R4051:3

**படுவார்கள்** – இவ்வாழ்க்கையில். R3223:2 தற்போது தீயவர்கள் செழிக்கிறார்கள், அதேசமயம் கர்த்தருடைய பிள்ளைகள் துன்பப்படுகிறார்கள். R569:2 "நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும்." (யோவா. 15:19) E235 தீச்செயல்களுக்குத் தண்டனையாக துன்பமும் உபத்திரவமும் துன்மார்க்கன் மீதுதான் வரும் என்கிற பொதுவான கருத்திற்கு மாறாக. B137 நீதி சுட்டிக்காட்டும் வெகுமதிகளும், தண்டனை முறைகளும் இப்போது செயல்படுத்தப்படவில்லை. R4730:3 தேவன் தம்முடைய ஜனங்கள் சரியானதைச் செய்ததற்காக பாடுபட அனுமதிக்கிறார். R5778:3 தற்கால பொல்லாத நிலைமைகளுடன் நாம் ஒத்துப்போகாமலிருக்கும்போது (துன்பப்படுவோம்). R5117:2 குணலட்சணத்தை வளர்த்தி, அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதால், சபை பாடுபட தேவன் அனுமதிக்கின்றார். R5117:5 "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து." (1 பேது. 4:16) R5117:6 வேத வாக்கியங்களில் வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் இவர்களுக்கே உரியது. R5117:2 நம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதன் மூலமாக, நம்மீது நாமே வருவித்துக்கொள்ளும் துன்பங்கள். நம்முடைய மரபுவழி உடல்நலக் குறைபாடுகள் கிறிஸ்துவின் பாடுகளாக கருதப்படமாட்டாது. R5117:4 ஒருவன் கிறிஸ்தவனாக மாறாதவரையில், அவனால் கிறிஸ்தவனாகப் பாடுபட முடியாது. R5117:3 நம்முடைய தவறுகளினிமித்தம் நமக்குத் துன்பம் வரநேரிட்டால், நம்மால் அதில் மகிமைப்பட முடியாது, மாறாக வெட்கப்பட மாத்திரமே முடியும். R2782:1

## 71. எபிரெயர் 1:14

### "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?"

**இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள்** – சபையார் ஒவ்வொருவரும். Q437:4 பரிசுத்தவான்கள். R657:2*, 3965:1

**போகிறவர்களினிமித்தமாக** – போகிறவர்களுக்கு. R3004:2

**ஊழியஞ்செய்யும்படிக்கு** – பணிவிடை செய்வதற்கு. R3798:1 நமது நலன்களைக் கவனித்துக் கொள்ளுவதற்கு. R4823:5 நாம் நமது தரப்பில் கர்த்தர் மீதான பயபக்தியிலிருந்து விலக நேரிட்டால், அதற்கேற்ப இந்தப் பரிசுத்தமான பாதுகாக்கும் செல்வாக்கிலிருந்து பிரியவும் நேரிடும். R4218:4 தேவன் தமது ஜனங்களால் செய்ய முடிகின்ற ஓர் ஊழியத்தை, வேறு பரலோக ஆவியின் ஜீவிகளைக் கொண்டு செய்து முடிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கு நம்மிடம் மிகக் குறைவான காரணமே உள்ளது. R5816:6

**அனுப்பப்படும்** – இந்த யுகத்தில் கிறிஸ்து தேவதூதரைக் கட்டுப்படுத்தி வருகிறார். R61:5*

**பணிவிடை ஆவிகளாய்** – ஊழியர். CR316:6 இரக்கத்தின் பணிவிடைக்காரர். R99:5* ஆவியின் ஜீவிகள் தொடர்ந்து "தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச்" சூழ்ந்துள்ளனர்; தெய்வீக வல்லமை

தேவஜனத்தைச் சூழ்ந்துள்ளது. R2377:6, 4214:4; CR314:4 ஆவியின் ஜீவிகளால் கண்ணுக்குத் தெரியாதவாறு இருக்க முடியும் மற்றும் அடிக்கடி அவ்வாறு இருந்தும் வருகிறார்கள். A182; R2974:3, 348:3, 261:5, 18:3 இப்பரிசுத்த தூதர்கள் சபையின் நலன்களைக் கவனித்து வருவதோடல்லாமல், நாம் சரியான வழியில் இல்லை என்றால் அதைக் குறித்தும் தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் நம்மைத் தீங்கிலிருந்து பாதுகாக்கிறார்கள்; நமது தேவைக்கு ஏற்ப நமக்கு உதவவும், அல்லது அடிகள் கொடுக்கவும் செய்கிறார்கள். Q437:4; R4823:5, 657:2*, 143:4 தேவதூதர், கர்த்தருடைய பிரதிநிதிகளாக, அவருடைய சித்தத்தின்படி, நமக்குத் தேவையான எந்த வேலையையும் செய்வதற்காக ஆயத்தமாக இருக்கின்றனர். R2140:5 தங்களுக்கு மேலாக உயர்த்தப்படப்போகிற சபை மக்களுக்குப் பணிவிடை செய்வதை ஒரு பாக்கியமாக கருதுகின்ற, அன்பான தயவு நிறைந்த தேவனுடைய சிருஷ்டிகளாக இவர்கள் காணப்படுகிறார்கள். R1478:6 இவர்கள் அந்தகாரத்திலோ "ஆவியுலக இடையீட்டாளர்" ("mediums") மூலமாகவோ செயல்படமாட்டார்கள். R2179:3 கர்த்தருடைய தூதர்கள் அவருடைய ஜனங்களுடன் எப்போதும் காணப்படுகிறார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. R5606:1 "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்." (சங். 34:7) F76; R2974:3, 578:6, 265:2, 18:3 "அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்." (மத். 18:10) F76; R5634:3, 4214:4, 2377:6, 657:2

**இருக்கிறார்களல்லவா?** – பரிசுத்த தூதர்கள். R2179:3, 4214:4; Q437:4

## 72. எபிரெயர் 3:14

**"நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்."**

**முடிவுபரியந்தம் உறுதியாய்** – "இறுதிவரை அசைவில்லாத உறுதியோடு." (டயக்லாட்டு மொழியாக்கம்) R714:1, 3952:4, 3476:2 "கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்." (பிலி. 4:1) R90:1

**கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்** – "நாம் அபிஷேகம் செய்யப்பட்டவரின் கூட்டாளிகளாயிருப்போம்." (டயக்லாட்டு மொழியாக்கம்) R3952:4, 714:1

## 73. எபிரெயர் 4:16

**"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்."**

**ஆதலால், நாம்** – புதிய சிருஷ்டியின் அங்கத்தினர்; மற்றவர்களுக்கு அனுமதி இல்லை. F680; R4932:1 ஆவிக்குரிய தேவபுத்திரர். R5200:6, 4615:6, 2070:5 அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பார், உடன்–ஆசாரியக்கூட்டத்தார், புதிய சிருஷ்டி. R5201:4, 5200:6 தேவனிடம் எந்த அர்ப்பணிப்பும் செய்யாதவர்கள், அவரை அணுகுவதற்கு தேவையான எந்தப் பரிந்துபேசுகிறவரையும் தங்களுக்காக பெற்றிருக்கமாட்டார்கள். R5200:6 விசுவாச வீட்டார். NS674:2 தேவ ஜனம்; ஆனால் இந்தத் தீங்கு நாளில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு இப்போது விசேஷித்த வகையில் இது முக்கியமானதாய் இருக்கின்றது. R5744:3 கிறிஸ்துவின் சீஷராகி, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாய் இருப்பவர்கள் மாத்திரமே தேவனிடம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். R5962:5, 5420:4, 3805:3, 3802:2, 2024:4 ஆசரிப்புக்கூடாரத்தினுடைய படத்தை நம் மனதின் முன் கொண்டு வந்தவர்களாய், பரிசுத்த பவுல், ஒன்றையும் சந்தேகிக்காமல் பரமபிதாவிடம் வரக்கூடிய அனைத்து விசுவாசமுள்ள புத்திரருக்காகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு பாவநிவிர்த்தி செய்திருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். NS674:2

**இரக்கத்தைப் பெறவும்** – ஆதி பாவத்திற்காக அல்ல – மாறாக நமது அன்றாட அறியாமையினிமித்தமான குற்றங்களுக்காக அல்லது பலவீனத்திற்காக. R4354:2, 5103:4, 5089:3, 4898:5, 4615:5 மன்னிப்பு. R1984:1, 5586:4, 5492:4, 5073:1 நம்முடைய இருதயங்கள் ஏற்றுக் கொண்டதும், ஒத்தசாயலை அடைவதற்குப் பிரயாசப்படுகின்றதுமான உயரிய தரநிலையின் அளவுக்கு நாம் வாழத் தவறியதினிமித்தமாக ஏற்படும் தோல்விகள் தொடர்பாக (இரக்கத்தைப் பெறவும்). R5123:5 நமது குறைபாடுகள் அல்லது குற்றங்கள் தொடர்பாக (இரக்கத்தைப் பெறவும்). SM725:T; NS358:1 அன்றாட வாழ்வின் குறைபாடுகளுக்காக (இரக்கத்தைப் பெறவும்). R5103:4 நம்முடைய அடிகளில் கவனக்குறைவாய் இருந்துவிட்டு, நமது தேவனுடைய இரக்கத்தினை அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பது என்பது ஒருக்காலும் இருக்கக்கூடாது. R5492:4, 5586:4 நாம் உண்மையிலேயே கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கப் பிரயாசப்படும்போது, இரக்கத்தையும் பெற்றுக் கொள்வோம். நம்முடைய அபூரணமான சரீரங்களை நம்மால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது என்பது அவருக்குத் தெரியும். R5586:1 நமக்கு இரக்கம் காட்டுவதற்காகவே கிருபாசனமானது இருக்கின்றது. R5966:5, 5586:4; Q709:2 இது கிறிஸ்துவின் மாபெரும் பலிதனில் தேவனால் வழங்கப்பட்டது. R2004:3, 5103:4, 4796:6 நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியர் மூலம் வழங்கப்பட்ட இந்த இரக்கங்கள் மற்றும் சிலாக்கியங்களைப் பயன்படுத்தி, நம்மால் பாவத்திற்கு எதிரான ஒரு நல்ல போராட்டத்தைப் போராட முடியும். R5123:5 மரபுவழியாக சுதந்தரிக்கப்பட்ட கறைகளை மேற்கொள்ளுவதில் கொஞ்ச முன்னேற்றம் காணப்பட்டாலும், அதுகுறித்து ஏமாற்றமடையாமல் / வருத்தமடையாமல், கிருபாசனத்திடம் சென்று சுய பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். R3168:5 நம்முடைய இரட்சகர் மிகவும் உயர்த்தப்பட்டு, மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருந்தாலும், அவருடைய சிங்காசனமானது இரக்கத்தின் சிங்காசனமாகவும் இருக்கின்றது, அதேசமயம் யாவே / யேகோவா தேவனுடைய சிங்காசனமோ நீதியின் சிங்காசனமாய் இருக்கின்றது. R5966:4; Q709:2

**ஏற்ற சமயத்தில்** – ஒவ்வொரு எதிர்கால சமயத்திலும். R3255:5 நாம் (அனலின்றி) குளிர்ந்து போனவர்களாகவோ அல்லது பாரமடைந்தவர்களாகவோ அல்லது ஆவிக்குரிய சிலாக்கியங்களைப் புறக்கணிக்கிறவர்களாகவோ இருக்கும் சமயங்களில், விசுவாசக்குறைச்சலோ, அல்லது செய்த தவறுகளுக்குப் பரிகாரம் செய்யாமலிருப்பதோ, அல்லது முழு அர்ப்பணிப்பில் குறைவுபடுவதோ, வாஞ்சித்த ஆசீர்வாதம் கிடையாதபடிக்குத் தடை உண்டுபண்ண வாய்ப்புள்ளது. F145, 148 சோதனைகளை எதிர்த்து நிற்பதில் நாம் எப்போதும் வெற்றியடைவதில்லை என்பதை நாம் உணரும் போது. R5966:4; Q709:1 நம்முடைய பரமபிதா நமக்கு என்ன தேவையென்பதை அறிந்திருந்தாலும், நமக்காக ஏராளமான ஏற்பாடுகளைச் செய்திருந்தாலும், அவர் தம்முடைய ஜனங்களால் வேண்டப் படுவார், விண்ணப்பிக்கப்படுவார். R2004:3 நமக்குத் தேவை இருப்பதால்தான் தேவன் நமக்கு இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுத்துள்ளார். R5420:5, 1802:1 இது நமக்குத் தேவைப்படுவதற்கு முன்பு அல்ல, மாறாக சோதனையின் தருணத்தில். R2249:5

**சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும்** – சகாயஞ்செய்யும் புண்ணியத்தை. NS737:4 மேலும் பாவ மன்னிப்பு. R5745:1 முக்கியமாக தேவனுடைய வார்த்தையின் மூலமாக, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் வழங்கப்படுகின்றது. R1007:3, 5744:6, 5586:1, 5123:5 கர்த்தர் நமக்கு உதவியை / சகாயத்தை அருளுவார். R4488:6 சந்தேகத்திற்கிடமின்றி, மரபுவழியாக சுதந்தரிக்கப்பட்ட பலவீனங்களினால் தம்முடைய ஜனங்கள் மீண்டும் மீண்டும் தோல்வியடைவதினால், மிகவும் வெட்கி மனமடிவடையக்கூடும் (abashed) என்பதைக் கர்த்தர் முன்னறிந்ததால்தான், அவர்களை ஊக்குவிப்பிற்காக இந்த விசேஷித்த புத்திமதியை வழங்கியிருந்தார் என்பது தெளிவாகிறது. R4932:1, 5746:1 நம்முடைய பல்வேறு சோதனைகளையும், சிரமங்களையும் உண்மையுள்ள ஆவியுடன் எதிர்கொள்வதற்காக; எதிராளியையும், நம்முடைய சொந்த மாம்சத்தில் வேரூன்றியிருக்கும் எதிரிகளையும் எதிர்ப்பதற்காக; எதிராளியின் சோதனைகள் மற்றும் தாக்குதல்களால் சரியாகப்

பயிற்றுவிக்கப்படுவதற்காக. R5745:6, 28:2* ஜெபத்தின் நோக்கமே, நமக்கு நன்மைப்பயப்பதற்கும், நமது பிதாவினுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கும் மனப்பான்மைக்கு நம்மைக் கொண்டுவருவதுமாகும். R5745:4 நமது ஜெபங்கள் மாம்சத்தின்படி அல்ல, மாறாக ஆவிக்குரிய பிரகாரமாக இருக்க வேண்டும். புதிய சிருஷ்டிகளாக நாம் இந்தப் புதிய சுபாவத்தின் நலன்களுக்கு இசைவாகவே எப்போதும் ஜெபிக்க வேண்டும். R5745:5 புதிய சிருஷ்டிகளாகிய நமக்கு, தேவையான "மற்ற எல்லாவற்றையும் அவரோடேகூட நமக்கு அருளாதிருப்ப தெப்படி?" F411 மற்றவர்களுக்கோ அல்லது நமக்கோ சோதனைகள் அல்லது பரீட்சைகள் வராமல் தடுத்துவிடுமாறு நாம் கர்த்தரிடம் ஜெபம் செய்வது சரியாக இருக்காது, ஏனெனில் அவை என்னவாக இருக்க வேண்டும் என்பதைத் தெய்வீக ஞானமே தீர்மானிக்கும். R5928:6

**தைரியமாய்** – தைரியமாக, நம்பிக்கையுடன். F145; R5745:1, 5472:2, 5420:5, 5201:4, 5200:6, 5073:1, 4932:1, 4615:6, 2848:3, 1865:1; NS226:4, 674:2 பரிசுத்த தைரியத்துடனும், நம்பிக்கையான விசுவாசத்துடனும். R5492:4 முழு விசுவாசத்துடன். R5041:5, 2848:3; Q654:2 சந்தேகப்படாமல். R5585:6 தாராளமாய்ச் செல்லுங்கள். R5123:5 விசுவாசத்தினால். R2004:3 பணிவான தைரியத்துடன். R469:4* ஜெயங்கொள்ளுவதற்கு நமது சொந்த இயலாமை குறித்த புரிந்துணர்வுடன். R2878:2 "நமக்காக ... பரிந்துபேசுகிற ஒருவர் இருக்கிறார்." (1 யோவா. 2:1 – TCV) R1829:5, 5089:3, 4898:5, 4875:4, 3255:5; OV181:4 இப்படிப்பட்ட துரிதமான மற்றும் அன்பான அழைப்புகள் இருக்கும்போது, எந்தவொரு தேவபிள்ளையும் அடிக்கடி (கிருபாசனத்திடம்) வருவதற்குத் தயங்கிநிற்க வேண்டாம். R1865:3 நாம் ஒருபோதும் ஊக்கமிழந்து மனச்சோர்வடையக்கூடாது, மாறாக நாம் திரும்பத்திரும்ப அவரிடம் வருவதினால் அவர் ஒருபோதும் சலிப்படைவதில்லை என்பதையும், அவர் நம்மை வெறுமையாகத் திருப்பிவிட மாட்டார் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டு, தயங்காமல் கர்த்தரிடம் திரும்பத்திரும்ப செல்வோமாக. R5966:5; Q709:3 நாம் வேண்டுமென்றே பாவம் செய்யவில்லை என்றால், நமது பாவங்கள் நெருக்கிநிற்கும் மாம்சத்தின் குறைபாடுகள்நிமித்தம் செய்யப்பட்டதாக இருந்தால், கர்த்தர் புரிந்துகொள்ளுகிறவர் என்பதை அறிந்தவர்களாய் நாம் தைரியமாய் வரலாம். நாம் மண் என்பதை அவர் நினைவுகூருகின்றார். (சங். 103:13, 14) R5585:6, 1984:1; Q655:T ஜெபத்தில் மனதை ஒருமுகப்படுத்துவதில் சிரமம் உள்ளவர்கள் ஜெபத்தின் தீவிரத்தை (intensify) அதிகப்படுத்தி, தங்கள் விண்ணப்பங்களைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். R5746:4 நமது ஜெபங்களும் வேண்டுதல்களும் ஆவியில் ஏறெடுக்கப்பட வேண்டுமே ஒழிய சிரத்தையற்றதாகவோ அல்லது சம்பிரதாயமாகவோ இருக்கக்கூடாது. R5746:4 ஒருவர் "ஜெபங்களை உச்சரிப்பதற்கும்," ஜெபம்பண்ணுவதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. ஜெபத்தில், நம் மனதின் முன்பாக சில திட்டவட்டமான விண்ணப்பங்களை வைத்திருக்க வேண்டும், அதன்மூலமாக நம்மால் ஞானமாக ஒரு பதிலை எதிர்பார்த்திட முடியும். R5203:4 நாம் பரிசுத்த ஆவிக்காகவும், அதிக அன்பு, கனிவு, பொறுமை, ஞானம் மற்றும் கர்த்தரிடமிருந்து வழிகாட்டுதல் என்பவைகளுக்காகவும் ஜெபிக்கலாம். ஆனால் என்ன செய்ய வேண்டும் என நாம் அவருக்குச் சொல்லிக்கொடுப்பவர்களாக இருக்கக்கூடாது; ஏனென்றால் பொதுவான விஷயங்களில் அவருடைய சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்வதற்கு நமக்கு எந்த வழிவகையும் கொடுக்கப்படவில்லை. R5203:2 நாம் அடிக்கடி (frequently) மற்றும் கிரமமாய் (regularity) ஜெபிக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், ஜெப சிந்தையில் எப்போதும் காணப்பட வேண்டும். ஒவ்வொரு குழப்பத்திலும், அனுபவத்திலும் வழிகாட்டுதலுக்காக கர்த்தரையே நோக்கிப்பார்க்கும் மனப்பான்மையில் நாம் காணப்பட வேண்டும். R5203:6 நாம் பணிந்து ஒப்புக்கொடுக்கிறவர்களாக இருந்தால், நமது ஜெபங்கள் அதிகமதிகமாய் நன்றி தெரிவிக்கும் ஜெபங்களாக மாறிவிடும். எஜமானருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாம் அதிகமாய் வாஞ்சித்திடுவோம். அவர் தம்முடைய விண்ணப்பங்களோடு, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று

கூறினார். R5203:2 ஊழியஞ்செய்வதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும்போது, நமக்கிருப்பதைக்காட்டிலும் அதிகமான பலம் தேவைப்படுகிறது எனும்பட்சத்தில், நாம் ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாகச் சென்று, 'தேவையான பலத்தையும், தேவையான மற்றெல்லா காரியங்களையும் நீர் அருளுவீர் என்று நம்புகிறோம்' என்று சொல்ல வேண்டும். R5202:6 "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணுவது." (எபே. 6:18) R5745:2 அர்ப்பணிக்கப்பட்ட வகுப்பார் மட்டுமே தைரியமாய் வரலாம், அதேசமயம் "விசுவாச குடும்பத்தை" சேர்ந்த அனைவரும் ஜெபத்தின் சிலாக்கியங்களை ஓரளவு அனுபவிக்கலாம். R5201:4; F681

**கிருபாசனத்தண்டையிலே** – தெய்வீகக் கிருபை. R1984:1 இரட்சகரின் சிங்காசனம் கிருபையின் சிங்காசனம்; யாவே / யேகோவா தேவனுடைய சிங்காசனம் நீதியின் சிங்காசனமாகும், இயேசுவின் சிங்காசனமோ இரக்கத்தின் சிங்காசனமாகும். R5966:4; Q709:2 நம்முடைய பிதாவின் அன்பினால் ஏற்பாடு பண்ணப்பட்டது – அது இல்லாமல் நாம் எவ்வளவாய் அதமாகியிருப்போம். R5492:4 நமது அநுதின, வேண்டுமென்றே செய்யப்படாத, விரும்பிச்செய்யப்படாத குற்றங்களை மன்னிப்பதற்கு தெய்வீகக் கிருபை நமக்குத் தேவைப்படுகின்றது. R5420:4, 5745:1, 4932:1 எல்லாக் கிறிஸ்தவரும் கர்த்தரிடம் அநுதினமும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும், மேலும் இந்த மன்னிப்பு மற்றும் சகாயஞ்செய்யும் கிருபையைப் பெற்றுக்கொள்ளாமல் ஒருபோதும் நித்திரைக்குச் செல்லக்கூடாது. R4932:1

**சேரக்கடவோம்** – கிரேக்க வார்த்தை, Proserchomai / ப்ரோசெர்கோமாய்; அணுகுவதற்கு, அல்லது நோக்கி வருவதற்கு. B158 உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட நம்முடைய மாபெரும் பிரதான ஆசாரியரிடமாக (சேரக்கடவோம்). R5966:4, Q709:1 நாம் குற்றம் புரியும்போது, (கிருபாசனத்திடம்) செல்ல நம்மை நிர்ப்பந்திக்கக்கூடிய அவமானமான அனுபவத்தை நாம் சந்திப்பது நமக்குச் சாதகமாகத்தான் இருக்கும். R4615:5 ஊக்கமுள்ள கிறிஸ்தவர் தன்னுடைய இருதயத்திற்கும் கர்த்தருக்கும் இடையே நேரடியான மற்றும் தொடர்ச்சியான ஒரு தொடர்பு / இணைப்பு இருக்கின்றதா எனப் பார்த்துக்கொள்ள வேண்டும். R5744:6, 5746:4 அநுதினமும் (சேரக்கடவோம்); கர்த்தராகிய இயேசுவினுடைய நல்லதொரு போர்ச்சேவகன் தலைமையகத்துடன் தொடர்ந்து நெருங்கிய தொடர்பில் காணப்பட வேண்டும். R5745:1, 5586:4 தேவனை அணுகும் பாக்கியத்தையும், பூமிக்குரிய வல்லவர்களை அணுகும் பாக்கியத்தையும் நாம் வேறுபடுத்திப் பார்த்தால், தேவனுடைய மாதயவின் குறிப்பிடத்தக்க வெளிப்பாட்டை நம்மால் காண முடியும். R5745:1, 5201:1 கிருபாசனத்தை அணுகுவதற்கு முன்பாக, கர்த்தர் பார்வையில் ஏற்புடைய அல்லது ஏற்புடையதல்லாத விஷயங்கள் எவை என்பதைத் தெரிந்துகொள்வதற்கு நாம் நாடிடவேண்டும். R5745:2,4 நாம் கர்த்தரிலும் அவருடைய வார்த்தைகள் நம்மிலும் நிலைத்திருந்தால், நாம் எதைக் கேட்க வேண்டும் என்பதை அறிந்திருப்போம்; தவறாக எதுவும் கேட்டுவிடாதபடிக்கு நாம் கேட்பதில் மிகவும் கவனமாக / ஜாக்கிரதையாக இருக்கக்கடவோம். R5203:3 தங்கள் எஜமானர் அவருடைய சொந்த ஆரோக்கியத்திற்காக வேண்டிக்கொள்ளாதபோது, பரிசுத்தவான்களும் தங்கள் சொந்த ஆரோக்கியத்திற்காக வேண்டிக்கொள்வது சரியாக இருக்காது. அவர்கள் அர்ப்பணித்துவிட்ட திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களையோ அல்லது அவர்களின் பலிகளையோ இரத்து செய்யும்படிக்கு கேட்பதும் சரியாக இருக்காது. R5204:3

## 74. எபிரெயர் 6:19

**"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது."**

**அந்த நம்பிக்கை** – ஆணையின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டு, ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட அந்த நம்பிக்கை. R5177:3, 5300:5, 5137:2, 4496:5, 4367:4, 3972:3, 3683:6, 3205:6 நாம் நியாயப்பிரமாண அல்லது புதிய உடன்படிக்கைகளை விடவும் இன்னும் உயர்ந்த மற்றும் மகத்தான ஓர் உடன்படிக்கையின் கீழாக இருக்கிறோம்; நாம் விசுவாச உடன்படிக்கை, கிருபையின் உடன்படிக்கை, ஆபிரகாம் உடன்படிக்கை, ஆணையிடப்பட்ட உடன்படிக்கையின் கீழாக இருக்கிறோம். R4344:4, 4320:1; NS360:5 இவ்வாறு இந்த உடன்படிக்கை இன்னும் நிறைவேறவில்லை என்று அப்போஸ்தலன் அறிவிக்கிறார். R5177:6, 3198:6; OV428:2; SM529:2; HG389:2, 442:2; NS529:3 அப். பவுலும்சரி, எபிரெய கிறிஸ்தவர்களும்சரி, தாங்கள் புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் வாழ்ந்துகொண்டிருந்ததாக நினைக்கவில்லை. அவர்கள் அனைவரும் ஆபிரகாமுக்குரிய உடன்படிக்கையிலேயே நம்பிக்கை வைத்திருந்தனர். (புதிய உடன்படிக்கை என்பது மனுக்குலத்தோடு சம்பந்தப்பட்டதாகும்.) R4511:5 தேவ வார்த்தையே நமது நம்பிக்கையின் அடிப்படையாக இருக்கின்றது. நாம் நம்பிக்கையை கைவிட்டால், எல்லாவற்றையுமே கைவிடுகிறவர்களாகிவிடுவோம். OV429:5 கிழிக்கப்பட்ட திரையின் ஊடாக “மகா பரிசுத்தமான ஸ்தலத்திற்குள்ளாக” இருப்பவைகளை எதிர்நோக்கி, மாம்சத்திற்கு அப்பாற்பட்ட மகிமை, கனம் மற்றும் அழியாமையின் காட்சிகளைக் காண்கின்ற “பரிசுத்த ஸ்தலத்தில்” உள்ள ஆவிக்குரிய சிந்தைகொண்ட புதிய சிருஷ்டியின் நம்பிக்கை. T21; NS488:4 இது மாம்சீக மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலின் நம்பிக்கையாக இருக்கின்றது. R3683:6; SM530:2; NS441:5, 530:3

**நிலையும் உறுதியும்** – மாற்ற முடியாதது. R4496:5 தேவன் தம் உடன்படிக்கைகளை ஒருபோதும் மீறமாட்டார்; எந்தக் குறிப்பிட்ட விஷயத்திலும், அவர் அவற்றைத் திருத்தியமைக்கவோ அல்லது மாற்றவோ மாட்டார். R3109:3, 2210:1 “என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதைமாற்றாமலும் இருப்பேன்.” (சங். 89:34) R3109:5

**திரைக்குள்ளாக** – நமது கர்த்தராகிய இயேசு காண்பித்திட்ட மரணபரியந்தமான தமது சொந்த கீழ்ப்படிதலினால் அவர் பெற்றுக்கொண்ட மாதயவானது, பிதா இழுத்துக்கொண்ட உண்மையுள்ள வர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது, ஆனால் அது திரைக்குள்ளாக ஆவியின் ஜீவியாக இருக்கும் கிறிஸ்துவிடமாக நங்கூரமிடப்பட்டிருக்கின்றது. R3946:4 சரீரத்தின் கடைசி அங்கத்தினன் திரைக்குள்ளாக கடந்து செல்லும்போது, அனைத்து பலிகளும் நிறைவடைந்துவிடும். R5776:3

**போகிறதுமான** – விசுவாசத்தினால். R2163:6*

**ஆத்தும நங்கூரமாயிருக்கிறது** – எதிர்காலத்தின்பேரிலான, இராஜ்யத்தின்பேரிலான நம்பிக்கையின் இந்த நங்கூரமானது, இந்தத் தற்போதைய பொல்லாத உலகத்தின் சோதனைகளையும், புயல்களையும், சிரமங்களையும் கடந்து பாதுகாப்பாகவும், ஒப்பீட்டளவில் அமைதியாகவும் கடந்து செல்லுவதற்கு உதவிடும். R3352:4; HG442:3 ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கையானது இன்னும் நிறைவடையவில்லை – அது இன்னும் நமது விசுவாசத்திற்கான ஒரு நங்கூரமாக உள்ளது. R4939:5; OV429:5 பூமிக்குரிய ஐசுவரியங்களுக்காக பிரயாசப்படுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய ஊழியர் தங்கள் ஆத்துமாக்களுக்கு நங்கூரமாக இருக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களின் உண்மையான ஐசுவரியங்களைக் குறித்து கற்றுக்கொண்டனர். CR16:2 புயலின் போது நங்கூரமிடப்பட்டு நிற்கும் கப்பலின் படத்தை அப். பவுல் இங்கே சித்தரிக்கின்றார் – அதுபோலவே வாழ்க்கையின் புயல்களின் மத்தியில் இருக்கும் தேவபிள்ளையும் – திரைக்குள்ளாக இருக்கும் விஷயங்களின் மீது ஓர் உறுதியான நங்கூரங்கத்தைப் பாய்ச்சியிருப்பார். OV429:4

## 75. எபிரெயர் 10:23

**“அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்**

**உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."**

**நம்முடைய நம்பிக்கையை** – தேவபிள்ளையினிடத்தில் காணப்படும் விசுவாசத்தின் உறுதியும், அவர் தனது விசுவாசத்தின் அறிக்கையைப் பற்றிப்பிடித்திருக்கும் உறுதியும், கிறிஸ்தவ ஜீவியத்தில் இருக்கவேண்டிய அவரது நிலைத்தன்மையுடன் அதிகம் தொடர்புடையதாயிருக்கின்றன. R5698:1 நம்முடைய விசுவாசம் தங்கியிருக்கும் பலமான மற்றும் உறுதியான அஸ்திபாரமொன்று உள்ளது; "என்ன வந்தாலும் சரி, விசுவாசமானது நிச்சயமாக அவரை நம்பும்." R5497:2 நமக்குள் இருக்கும் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்போமாக. நம் நம்பிக்கைக்கு ஓர் உறுதியான அஸ்திபாரத்தைக் கர்த்தர் தந்திருக்கிறார். R5497:4 "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்." (எபி. 11:6) R5698:2

**அறிக்கையிடுகிறதில்** – நாம் (நம்முடைய நம்பிக்கையை) அறிக்கையிடாத வரைக்குமே, நமக்குச் சரியானதொரு விசுவாசமோ நம்பிக்கையோ இருப்பதாக கர்த்தர் கருதமாட்டார். நாம் கர்த்தரை நம்முடைய வாயால் அறிக்கைபண்ணுகிறோம். R5497:2 மாபெரும் பிரதான ஆசாரியரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களாக, உடன் ஆசாரியர்களாக. NS561:4, 560:4

**அசைவில்லாமல்** – இறுதிவரை உறுதியாக இருங்கள். R5497:4 எந்தச் சந்தேகங்களையும், அச்சங்களையும் மனதில் குடிகொள்ள செய்யாமல். R5698:4 ஆதிகால சபை ஒரு காலத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தபோதிலும், போகப்போக சபையானது வெளிப்படையாகவே வெதுவெதுப்பாக மாறிப்போனது. R5698:1, 5332:2 நாம் தயங்கியும் தடுமாறியும் இருக்கின்றோமேயானால், ஒன்று நாம் நம்முடைய விசுவாசத்தையோ, இல்லையேல் கீழ்ப்படிதல் மற்றும் அன்பின் ஆவியையோ இழந்து வருகிறோம் என்று அர்த்தம். R5698:5

**உறுதியாயிருக்கக்கடவோம்** – உறுதியாக இருங்கள். R5497:4 ஆதிகால சபையில், தடுமாறி அலைந்துகொண்டு, சரியாகப் பிடித்துக்கொள்ள தவறிய சிலருக்கு அப்போஸ்தலன் இதை எழுதினார். R5698:1 நம் விசுவாசத்தை நாம் உறுதியாகப் பற்றிக் கொள்ளாவிட்டால் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம். R5698:2 நாம் இன்னும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உறுதிசெய்ய, நாளுக்கு நாள் நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். R5698:5 நமது உண்மைக்கான பரீட்சைகள் பின்தொடர்ந்து வரும். ஊக்கமிழந்து போவதற்கான சோதனைகளும் வரும். நம்முடையதோ ஓர் அற்புதமான அழைப்பாகும், மேலும் தெரிந்துகொள்ளப் பட்ட வகுப்பாரின் இடங்களை நிரப்புவதற்கு, எஜமானரின் ஆவி நிரம்பிய திடமிகு / வீரமிகு ஆத்துமாக்கள் (heroic souls) மாத்திரமே தேவைப்படுகின்றனர். R5497:3 மகிமையான சத்தியத்தை எழுத்தில் மாத்திரமல்லாமல், ஆவியிலும், அதன்பேரிலான அன்பினிமித்தமாகவும் உறுதியாகப் பற்றிக் கொள்வோமாக. R5497:6

**வாக்குத்தத்தம் பண்ணினவர்** – அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை அசட்டைபண்ணுவதில்லை. R5698:5 தேவனுடைய உறுதியான வாக்குத்தத்தங்களாலும், அவருடைய ஆணையினாலும் ஆதரிக்கப்பட்ட ஒரு நம்பிக்கை. R5497:4

**உண்மையுள்ளவராயிருக்கிறாரே** – பொறுப்பு நம்மேல் தங்கியிருக்கிறது – கர்த்தர் தம்முடைய பங்கைச் செய்திடுவார். CR470:6 தோல்வியோ உண்மையற்றத்தன்மையோ இருக்குமேயானால், அது நம் தரப்பில் தான் காணப்படும். R1698:5 இந்த உறுதியே நமது இறுதி வெற்றியில் காணப்படப்போகிற நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையாக இருக்கும். R5698:4 அழுத்தமான மற்றும் ஆபத்தான காலங்களில் அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் நமக்காக வைக்கப்பட்டுள்ளன, அவர் நம்மை ஏமாற்றமாட்டார் / கைவிடமாட்டார் என்பதும் நமக்குத் தெரியும். R5497:5, 5698:4 "உங்களை

அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.” (1தெச. 5:24) R4818:6

## 76. எபிரெயர் 10:35

**“ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.”**

**பலன்** – இந்தப் பலன்கள் மரணபரியந்தம் விசுவாசத்தைக் கைக்கொள்ளுபவர்களுக்கானதாகும். R5095:5 அவருடைய வாக்குத்தத்தங்களின்படி நாம் அவரை நம்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், மேலும் அத்தகைய விசுவாசத்திற்குப் பலனும் அளிப்பார். R3002:4 நமது விசுவாசம், நம்பிக்கை, உண்மை, நேர்மை என்பவைகளின்படி தேவன் நமக்குப் பலன் அளிப்பார். அவர் கிரியைகளை விடவும் விசுவாசத்திற்கே பலன் அளிக்கிறார் – மாறாக, நம்மால் என்னவெல்லாம் சாதிக்க முடியுமோ அதற்கென்று அவர் பலன் (rewards) அளிப்பதில்லை. R5594:1, 5595:3 உண்மையாகச் சகிக்கப்படும் சோதனையானது எவ்வளவு கடுமையானதாக இருக்கின்றதோ, அந்தளவிற்கு உண்மையுள்ளவர்களுக்கான பலனும் (reward) பெரிதாக இருக்கும் என்று நாம் கருதலாம். NS566:5

**உங்கள் தைரியத்தை** – உங்கள் விசுவாசம், உங்கள் நம்பிக்கை. R5594:1; CR214:2; NS563:3 தேவனில் நம்பிக்கை. R5594:6; CR214:2; NS566:4 வெளிப்படைத்தன்மை (Outspokenness). SM182:2 எந்தளவிற்கு நாம் அறிவைப் பெற்றுக்கொண்டு, கிருபையில் வளருகின்றோமோ, அந்தளவிற்கு நமது தைரியமும் (confidence) வலுப்பெற்று வரும். இது நமது இருதய நிலைமையைக் குறிக்கின்றது. R5595:2, 188:1 செம்மறியாடுகளின் பெரிய மேய்ப்பனாகிய நம்முடைய தலைவரில். R188:1, 4926:6 கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராக இருப்பதற்கான தேவனுடைய அழைப்பில். R5595:1 கர்த்தரிலும் அவருடைய வார்த்தையிலும். NS563:4, 566:4 சகோதரத்துவத்தில் அல்லது பொதுவாக உலக மனுக்குலத்தில். R566:4 தேவனுடைய திட்டம் நிறைவேறிவருவதன் மீதான நம்பிக்கை, மற்றும் விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசம் வைத்து, தங்கள் அன்றாட வாழ்வில் ஆவியின் கனிகளைக் கொடுக்கும் அனைவர் மீதுமான நம்பிக்கை. R1653:4, 5595:1 தேவன் மற்றும் “மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்” மீதான விசுவாசமே அனைத்து கிறிஸ்தவ பிரயாசங்களுக்கும் அடிப்படையாக இருக்கின்றது. R5095:2 கடந்த காலத்தில் நாம் வழிநடத்தப்பட்டு வந்ததை நாம் நினைவுகூரும்போது, முன்னெப்போதைக்காட்டிலும் நாம் அதிக தைரியத்தைக் கொண்டிருப்போம் என்பது நிச்சயம். R191:5 ஒருவரால், தேவன் மீதான இந்த விசுவாசம் இல்லாமல், ஒரு நல்ல போராட்டத்தைப் போராட முடியாது. R5095:2 வெறுமனே விசுவாசித்து நம்பிக்கொண்டும், கோழைத்தனமான முறையில் நம்முடைய வெளிச்சத்தை மறைத்து வைப்பதற்கும், கர்த்தர் எந்தவொரு பெரிய பலனையும் வாக்களிக்கவில்லை. SM182:2 பரீட்சைகள் எதிர்பாராத விதத்தில் வரும், மேலும் அவை நமது அன்பு மற்றும் உண்மைக்கான மிகக் கடுமையான சோதனைகளாகக்கூட இருக்கலாம். NS565:5 பரிணாமம் மற்றும் வேதாகம விமர்சனம் ஊடேயும். NS562 – 564

**விட்டுவிடாதிருங்கள்** – பின்வாங்க வேண்டாம், மனச்சோர்வடைய / ஊக்கமிழக்க வேண்டாம், மாறாக தைரியமாக / ஊக்கத்துடன் இருங்கள் என அப்போஸ்தலன் அவர்களுக்கு அறிவுறுத்துகிறார். அவர்கள் தமக்காகச் செய்த / சகித்த அனைத்தின்பேரிலும் தேவன் அவர்களை அன்புகூர்ந்து, பாராட்டவுஞ் செய்கிறார் என்று அவர்பேரில் அவர்களுக்கு நம்பிக்கை (confidence) இருக்க வேண்டும். R5818:5, 4513:3 நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாதிருங்கள்; ஊக்கமிழந்த நிலை எனும் சாம்பலிலிருந்து எழுந்து, புதுப்பிக்கப்பட்ட வைராக்கியத்துடன் சிலுவையைச் சுமந்துகொண்டு தொடர்ந்து முன்னேறுங்கள். R5095:4 சில சந்தர்ப்பங்களில், ஊக்கமின்மை / அதைரியம் எனும் உணர்வானது, சிலரை இரண்டாம் மரணமே தனக்கு கிடைக்கும் என்று திகிலோடு எதிர்நோக்கச் செய்து, பயம் மற்றும் வேதனைக்கு இட்டுச் செல்கிறது. அப்போஸ்தலன் இந்த நிலையையே மனதில் வைத்து பேசியிருப்பதாகத் தெரிகின்றது.

R5095:1 நாம் நமக்குக் கிடைத்த வெளிச்சத்திற்கு ஏற்ப வாழவில்லை என்றால் சாத்தான் நம்மிடமிருந்து தைரியத்தை (confidence) பிடுங்கிச் செல்ல அனுமதிக்கப்படுவான். R5595:2

## 77. எபிரெயர் 10:36

### "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."

**நீங்கள்** – உலகத்தை விட்டுப் பிரிந்து, அர்ப்பணிப்பு செய்துள்ள கிறிஸ்தவ சபை. R5332:1

**தேவனுடைய சித்தத்தின்படி செய்து** – நமது புத்தியுள்ள ஆராதனையாகிய நமது சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பதில். R5332:2 நமது சொந்த சித்தத்தைத் தெய்வீகச் சித்தத்தின் கீழாக முழுமையாக கொண்டு வந்தபிறகு. R4910:3 இலக்கை அடைந்துவிடுவது – நம்முடைய இருதயங்களில், நம்முடைய சித்தத்தில், அந்தக் குணலட்சணத்தை அடைந்தவர்களாய், எல்லாச் சூழல்களிலும் நிலைமைகளிலும் தேவனுடைய நீதியான சித்தத்தை வாழ்க்கையின் பிரமாணமாக நாம் நிறுவ வேண்டியிருக்கிறது. R2792:1 பரிபூரணமாக மற்றும் முழுமையாக செய்ய வேண்டும் என்கிற அர்த்தத்தில் அல்லாமல், மாறாக ஒரு புத்தியுள்ள ஆராதனையாக என்கிற அர்த்தத்தில். நாம் சாத்தியமில்லாத (impossible) காரியத்தைச் செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதில்லை. R5332:2 "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே (உங்களைக் குறித்த) தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1 தெச. 4:3) R5332:3 "சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்க" (எபே. 6:13) முழு சர்வாயுதவர்க்கத்தையும் தரித்திருங்கள். C212

**வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு** – வாக்களிக்கப்பட்ட காரியங்கள். R5594:4, 191:5 வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம். R5332:4 ஆபிரகாமின் சந்ததி உலகை ஆசீர்வதிக்கும் எனும் மூல வாக்குத்தத்தம். R5332:5, 5137:1 இக்காலத்துப் பாடுகள் உறுதியான நற்குணங்களையும், சுயநலத்திற்குப் பதிலாக அன்பையும் வளரச்செய்கின்றபடியால், இனி வரப்போகும் மகிமையில் கிடைக்கப்படும் பங்கானது இப்பாடுகளைப் பொறுத்ததாயிருக்கின்றது. R1653:1 நாம் தொடர்ந்து கிறிஸ்துவுக்கு உரியவர்களாகவும், அவரில் நிலைத்திருப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார் – நாம் அவ்வாறு காணப்பட்டால் அவரோடேகூட மகிமையும் அடைவோம். R5332:5

**பொறுமை** – கிரேக்க வார்த்தை, ஹூப்போமோனே / hupomone, சந்தோஷத்துடன் சகித்தல், நிலைத்தன்மை. R2791:1, 5332:1, 4910:4, 2792:1 கர்த்தர் நமக்கு அந்தப் பொறுமையை வளர்த்துக்கொள்வதற்கான சோதனைகளைத் தருவதன் வாயிலாக அல்லாமல் (வேறுவகையில்) நமக்குப் பொறுமையைக் கொடுக்க முடியாது. CR315:2 "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக். 1:4) தொடர்ந்து நாம் நமது வழியில் பொறுமையோடு உறுதியாக முன்னேறுவோமாக. R5650:1, 5652:6 நம்பிக்கை இல்லாவிடில், பொறுமையானது விரைவில் கரைந்துபோய் விடும்; குணலட்சணத்தின் நீளத்தையோ அகலத்தையோ ஆழத்தையோ எதிர்பார்க்கவும் முடியாது. R5213:3 கர்த்தருக்கு நேர்மையாக இருப்பதனிமித்தமாக இப்போது துன்பங்களை அனுபவித்து வருபவர்கள், துன்பங்களையும் சோதனைகளையும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டால், அவை நிச்சயமாக அவர்களுக்கு நன்மைக்கேதுவாக கிரியை செய்திடும். R5333:4, 2025:6 "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்." (யாக். 5:10) R5332:6 பொறுமை என்பது மிகவும் அடிப்படையான மற்றும் முக்கியத்துவமான கிறிஸ்தவ குணலட்சணங்களில் ஒன்றாகும். R5332:2

**உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது** – நமக்கு எவ்வளவு பொறுமை தேவைப்படுகிறது என்பதை நாம் அதிகமதிகமாக உணர்ந்துவருகிறோம். CR447:4 பாவத்தையும், தம்முடைய சித்தத்திற்கு எதிரான எதிர்ப்பையும் செழித்துவளர யாவே / யேகோவா தேவன் அனுமதிக்கும் இந்தக் காலக்கட்டத்தில் (பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது). R1781:5, 2025:5, 1273:2

## 78. எபிரெயர் 12:6, 7, 11

**வ. 6 – "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்."**

**கர்த்தர் எவனிடத்தில்** – பரமபிதா. R2425:6*

**அன்புகூருகிறாரோ** – மனத்தாழ்மை மற்றும் பொறுமை எனும் குணங்கள் அன்போடும், நேர்மையோடும் நெருங்கிய தொடர்புடையவையாக இருக்கின்றன. R5217:1 சபைமீதான கிறிஸ்துவின் விசேஷித்த அன்பிற்கும், உலகத்தின்மீதான கிறிஸ்துவின் அன்பிற்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. R1254:5 கிறிஸ்தவ சமயத்திற்கே உரிய ஓர் உபதேசம். R4325:1

**அவர் சிட்சித்து** – அவர் ஒழுங்குப்படுத்துகிறார் (disciplines). R2425:6*, 2007:6, 1745:5, 772:3* அறிவுறுத்துகிறார், பயிற்சி அளிக்கிறார்; அவர் தமது ஆவியினுடைய ஆறுதலான செல்வாக்குகளுடன் கிட்டிச்சேர்ந்து, நம்முடைய துன்பங்களை ஆசீர்வாதங்களாக மாற்றுகிறார். R424:1* அவர் வேறு யாரையும் சிட்சிப்பதில்லை. OV131:5 எல்லா பரீட்சைகளிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் சிரமங்களிலிருந்தும் தன்னை விலக்கிக்கொள்பவன், உண்மையில் தான் ஒரு தேவபிள்ளைத்தானா எனச் சந்தேகப்படுவதற்கு எல்லா நியாயமான காரணங்களும் இருக்கின்றன. R5459:4 இந்த யுகத்தில் அவர்கள் சோதனையைப் பெற்றிருப்பது சபைக்கான ஓர் அற்புதமான சிலாக்கியமாகும், அதினால் அவர்களால் வருங்காலத்தில் மகா மேன்மையும் அருமையுமான பலனை அனுபவிக்க முடியும். R569:3 ஒரு புதிய சிருஷ்டி தான் வாசம்செய்கிற மாம்சத்தின் பாவத்திற்கு, சம்மதமோ ஆதரவோ எந்தளவிற்குக் காட்டினாலும் சரி, அது "அடிகள்" கிடைக்க ஏதுவானதாகும் – இந்த அடிகள் அந்நபரைத் திருத்தும் நோக்கில், அவரது குணலட்சண வளர்ச்சிக்கு உதவச் செய்திடும். Q603:6 ஒவ்வொரு புத்திரனும், எதிர்கால ஊழியத்திற்கென்று பொருத்தப்படுவதற்காகவும், சரீர அங்கமாக எண்ணப் படுவதற்கான தகுதியை நிரூபிப்பதற்காகவும் தண்டிக்கப்படுகிறான். R5482:1 நமது கர்த்தருக்கு வந்த அந்தச் சிட்சைகள், அவர் அதற்குப் பாத்திரமானவர் என்கிற காரணத்தினால் வரவில்லை, மாறாக அவர் தமது முழுமையான நேர்மையையும், உயர்த்தப்படுவதற்கான தகுதியையும் நிரூபித்துக் காண்பிப்பதற்கான அனுபவங்களாகவே அவை இருந்தன. R5482:1 "உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்," (1 பேது. 4:12) R569:3, 2412:3,4, 1944:2, 569:3, 199:4*; NS447:5

**தாம் சேர்த்துக்கொள்ளுகிற** – அர்ப்பணிக்கும் அனைவருமே தாங்கள் மரிப்பதற்கு முன்னதாக, உறுதியாக்கப்பட்ட குணலட்சணம் எனும் இந்த இலக்கை அடைவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. R5081:4

**எந்த மகனையும்** – ஒரு மகனாக இருப்பது என்பது விசேஷித்த தயவு மற்றும் விசேஷித்த சகிப்புத்தன்மை ஆகிய இரண்டையுமே குறிக்கின்றது. R1008:4 கர்த்தர் ஒவ்வொரு மகனுக்கும் சோதனைகளையும் சிரமங்களையும் தருகின்றார். R5459:5, 4138:4, 4989:3, 1008:4 துன்பங்களும் தொல்லைகளும் உலகத்தின் மீதும், கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மீதும் வருகின்றன,

ஆனால் பிதாவின் சித்தத்திற்கும் வேலைக்கும் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அவை புத்திரத்துவத்தின் அடையாளங்களாக இருப்பதில்லை. E233; R374:2 நமது கர்த்தர் தாம் பட்ட பாடுகளால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். (எபி. 5:8) R5147:4

**தண்டிக்கிறார்** – சிட்சிக்கிறார். R5147:4 அவர் நமக்குக் கற்றுக்கொடுக்கும் கடமையைச் செய்யாமல் அலைந்துதிரியும்போதே அல்லது புறக்கணிக்கும் போதே (தண்டிக்கிறார்). R424:1* நமது கர்த்தருடைய சரியான குணலட்சண சாயலில் நம்மை வளர்த்திக்கொள்ளுவதற்காக நமக்குச் சோதனைகளும் சிரமங்களும் இருக்கும் என இந்த வாக்குத்தத்தமானது உறுதியளிக்கின்றது. R5081:4, 4513:3; NS447:6 கிறிஸ்துவின் பின்னடியாருக்கு உபத்திரவம், துன்பம், துக்கங்கள், சோதனைகள், சிரமங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுவதில்லை. R4138:4; SM271:T

### வ. 7 – “நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?”

**சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால்** – பொறுமையாக சகிக்கிறவர்களாயிருந்தால். R1721:2 ஒழுங்குப்படுத்துதலை (Discipline). R2007:6, 772:3*; E231 விசுவாசம், பொறுமை, குணலட்சணம் ஆகியவற்றுக்கான சோதனைகள் – இவைகளுக்கு மற்றவர்கள் உட்படுத்தப்பட மாட்டார்கள். R2761:1 அவற்றில் பல, பாவத்திற்கான தண்டனைகளாக இருப்பதில்லை, மாறாக அடுத்த யுகத்தின் பணிக்கான ஆயத்தமாக இருக்கின்றன. R5147:1,6, 3133:1 ஆவிக்குரிய சந்தோஷங்களின் மதிப்பினை உணராதவர்கள், தற்கால பயிற்சியைப் பொறுமையுடனும் நன்றியுடனும் சகித்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. R5147:6 நம்முடைய அனுபவமானது இருதயத்தின் நேர்மைக்கான பரீட்சையாக இருக்கின்றது – அதாவது, கர்த்தர் கற்றுக்கொடுக்கும் பாடத்தைக் கற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோமா மற்றும் அவற்றின் (தெய்வீக) மூல ஆதாரத்தை (source) நாம் அடையாளம் கண்டுகொள்கிறோமா என்பதற்கான பரீட்சையாக இருக்கின்றது. R5147:1,3,5 இது கசடுகளை நீக்கி, கனிதரும் பண்புகளை வளரச் செய்வதாக இருக்கின்றது. E231

**உங்களை** – திருச்சபைக்கு, மிக உயரிய ஒழுங்கிற்குரிய குணலட்சண வளர்ச்சியில், நடைமுறை ரீதியிலான படிப்பினைகள் தேவைப்படுகின்றன, மேலும் அவர்கள் பிரபஞ்சத்தில் உள்ள வேறெந்த சிருஷ்டிகளும் பெற்றுக்கொள்ளாத அனுபவரீதியிலான அறிவைப் பெற்றுவருகிறார்கள். R5147:2

**புத்திரராக எண்ணி** – தேவன் அவர்களைப் பணிவிடைக்காரராக அல்லாமல், புத்திரராகவும், எதிர்ப்பவர்களாக (அ) எதிராளிகளாக அல்லாமல், பிள்ளைகளாகவும் நடத்தி வருகிறார். R5624:2 இத்தகைய அனுபவங்கள் மனுக்குலத்திற்கோ தேவதூதருக்கோ கிடையாது; மாறாக மீட்பருடன் இணைந்திருக்கப்போகிறவர்களுக்கானதாகும். R5147:3 அவர்களைக் கனமான பதவிகளுக்கும், எதிர்காலத்திற்குரிய சொல்ல முடியாத ஆசீர்வாதங்களுக்கும் ஆயத்தப்படுத்தி வருகிறார். R2761:1 நாம் மாம்சத்தின்படி தேவனுடைய புத்திரராக இருக்கவில்லை, மாறாக புதுச்சிருஷ்டியின்படி தேவனுடைய புத்திரராக இருக்கின்றோம் – இவர்களது மேலான நலன் கருதி, மாம்சத்திற்கு அனுகூலமாக இல்லாத அனுபவங்களே இவர்களுக்கு அடிக்கடி கொடுக்கப்படும். R5624:2

**தேவன்... நடத்துகிறார்** – அதினால் நாம் தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாக ஒத்துப்போகக்கூடும். R5147:2 யூதர் தாங்கள் ஒரு நோக்கத்திற்காக ஒரு ஜனங்களாக இருக்கிறோம் என்பதையும், எதிர்காலத்திய தெய்வீகப் பணிக்கு தங்களைப் பொருந்தச்செய்வதற்காக கடினமான அனுபவங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதையும், மேலும் அவை உண்மையில் தெய்வீகத் தயவின் சான்றாதாரங்களாக இருக்கின்றன என்பதையும் மறந்தே போயிருந்தார்கள். R4930:3

**தகப்பன்** – தகப்பன் கடிண்டித்து ஒழுங்குப்படுத்தாத புத்திரன் உண்டோ? (டயக்லாட்டு மொழியாக்கம்) R772:3*

**சிட்சி** – சரிசெய்தல். R5275:2, 3133:1, 2613:2, 1748:5, 424:4* நீதியில் ஒழுங்குப்படுத்தப்படுதல் அல்லது அறிவுறுத்தப்படுதல். R5147:2, 2007:6, 1748:5, 1721:2; NS162:2 (இதனை ஏதோ) நமது பிதாவினால் ஏற்க மறுக்கப்படுவது என்றும், தனி நபர்தான் ஏதோ பாவம் செய்துள்ளார் என்றும் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக அறிவுறுத்தலாக புரிந்துகொள்ள வேண்டும். R4897:1 நாம் மற்றவரிடம் இரக்கம் பாராட்டுவதற்கேதுவான சீர்திருத்த பாடங்கள். R5275:1, 4138:4 நம்முடைய கர்த்தர் “பாத்திரத்தின்” (“cup”) ஒரு பகுதியாக, பல்வேறு சோதனைகளையும், ஒழுங்குப் படுத்துதல்களையும் பெற்றுக்கொண்டார். R4897:1 ஒரு புதிய சிருஷ்டி பாவத்திற்கு சம்மதமோ அனுதாபமோ காட்டினால், அந்நபர் அடிகள் கிடைக்க பாத்திரவானாகிறார், இது அவருடைய குணலட்சண வளர்ச்சிக்கு சரியான வகையில் உதவிடும். Q507:5 “பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்.” (நீதி. 13:24) F524

**புத்திரனுண்டோ?** – நமது கர்த்தர் உண்மையான புத்திரனாயிருந்தார், அதினால் அவரும் தமக்கான சிட்சைகளின் பங்கினைப் பெற்றிருந்தார். R3133:1, 772:4*, 28:2* கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம். R5147:4 ஒரு பணிவிடைக்காரனைப்பார்க்கிலும் ஒரு புத்திரனுக்கு மிகவும் கவனமான பயிற்சி தேவைப்படுகின்றது. ஏனெனில் அவர் தேவனுடைய பிரதிநிதியாகவும், சுதந்தரவாளியாகவும் இருக்கிறாரே. R2405:4

**வ. 11 – “எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.”**

**எந்தச் சிட்சையும்** – எந்த உபத்திரவமும். R5395:4 எந்த ஒழுங்குப்படுத்துதலும். R2007:6, 1944:4 பாடுகளினால் ஒழுங்குப்படுத்தப்பட்டு அடையப்படுகிற படிப்படியான சீரான வளர்ச்சியின் வாயிலாக விசுவாசத்தில் நிலைநிறுத்தப்படுகிறோம். R1053:3; HG373:3 உபதேசத்திலும், குணலட்சணத்திலும் நடைபெறுகின்ற சீர்திருத்தங்கள். R4449:3* “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை … நிறைவேற்றுகிறேன்.” (கொலோ. 1:24) R28:1*, 424:4*

**அதில் பழகினவர்களுக்கு** – சரியாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு. R1780:1, 4449:3* சரியாகப் பயிற்சிபெற்றவர்களுக்கு. R2007:6 பொறுமையைப் பயிற்றுவிக்கையில், அனுபவத்தின் படிப்பினைகள் ஒருவரைப் பலப்படுத்துகின்றன. R1721:3 தேவபக்திக்கும், தெளிந்த புத்திக்கும், ஆழ்ந்த மற்றும் ஊக்கமான பக்திக்கும் நேராய் (பயிற்றுவிக்கப்படுதல்). R1944:4 இவ்வாறு அவர்களை மிகவும் அதிகமான நித்திய கனமகிமைக்கு ஆயத்தப்படுத்துகிறது. E411; R5627:4; PD68/81

**நீதியாகிய** – நாம் நீதியின் பொருட்டு பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என நாம் உணர நேர்ந்தால், தேவனுடைய ஆவி நம்மேல் தங்கியிருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். R5395:5 கர்த்தர் தலையிட்டு, நம்மைப் பாதுகாக்க முடியும் என்பதையும், அவர் எதை அனுமதித்தாலும் அது நமது நன்மைக்காக இருக்கும் என்பதையும் அறிந்தவர்களாய், நாம் கர்த்தரையே நம்பி, நமக்கு எந்த அனுபவங்கள் ஏற்பட்டாலும் அவைகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். R1780:1; HG373:3 சோதனைகள் வரும்போது அவை அனைத்தும் அதி சிறந்த நன்மைக்காகவும், கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்காகவுமே வருகின்றன என்பதை நாம் அறிவோம். HG373:3

**சமாதான பலனை** – ஆசீர்வாதமான பலன்கள். R5395:5 சாந்தம், தயவு, பொறுமை, அன்பு.

R5899:3 அனுபவம் மற்றும் ஒழுக்கத்தின் படிப்பினைகள் உங்களை அதிக பலமுள்ளவர்களாக்கி, உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கச்செய்து, கர்த்தருடன் நெருங்கிய தொடர்பு மற்றும் ஐக்கியத்திற்குள்ளாக உங்களை இழுத்திடச் செய்யும். R4897:3, 1721:3; HG373:3 "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் (experience), பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது." (உரோ. 5:3) R1721:3

**அது ... தரும்** - கர்த்தருடைய ஆவி உள்ளுக்குள் வாசமாயிருப்பதன் ஒரு வெளிப்பாடு. R2804:1; HG373:3 அவர்களின் இருதயங்கள், முழுமையான கீழ்ப்படிதலுடனும், கற்றுக்கொள்வதற்கு ஆர்வத்துடனும் இருப்பதால், அவர்கள் அதில் மகிழ்ச்சியே அடைகின்றார்கள். HG373:4

## 79. எபிரெயர் 13:5

**"நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே."**

**பணஆசை** - பெற்றிருப்பதற்கு, வைத்துக்கொள்வதற்கு, அனுபவிப்பதற்கான ஓர் ஆசை/இச்சை; இது குறிப்பாக மற்றொருவருக்குச் சொந்தமானதும் நம்மிடம் இல்லாததுமாகிய ஏதொவொன்றினைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகிறது. R4876:3 கர்த்தருக்குச் சொந்தமானதை தானே வைத்துக்கொள்வதும், மற்றொருவருக்குச் சொந்தமான ஒன்றைப் பெற்றிருக்கவும், அனுபவிக்கவும் வேண்டுமென்கிற ஆசையும் / இச்சையும் இதிலடங்கும். R4876:3 சில சமயங்களில் அதிக வசதி, சவுகரியம், ஆஸ்தி மற்றும் சமுதாய செல்வாக்கிற்கான ஓர் ஆசை / இச்சை; தவித்துக்கொண்டிருக்கும் சிருஷ்டியின் வலிகள் மற்றும் வேதனைகளின் ஒரு பங்கிற்கு எதிரானதொரு போராட்டம்; அல்லது அன்புக்குரிய ஒருவரின் நோய் மற்றும் மரணத்திற்கு எதிரானதொரு போராட்டம். R4876:5 தெய்வீகப் பராமரிப்பானது தங்களுக்கென்று என்ன வடிவமைத்துள்ளதோ அதில் அதிருப்தியடைவது. R4876:2

**நடந்து** - நடத்தை (conduct) - வெறும் வார்த்தைகள் மாத்திரமல்ல, வாழ்க்கையின் பார்வைகளும் செயல்களும் கூட. R4876:2, 5539:6 அறுவடை சலித்தெடுப்புகளும் பிரித்தல்களும் வெறும் உபதேசரீதியிலான பரீட்சைகளாக மாத்திரம் இராமல், அதோடுகூட குணலட்சணங்கள் மற்றும் ஆவியின் கனிகள்ரீதியிலும் இருக்கும். R2353:5

**உங்களுக்கு இருக்கிறவைகள்** - தற்கால ஜீவியத்தைப் பொறுத்தவரையில், மிகவும் பாதகமான சூழ்நிலைகளின்கீழாக கூட, நாம் நியாயமாக சந்தோஷப்படக்கூடிய காரியங்கள் நம்மிடம் காணப்படவே செய்கின்றன. R2352:2 நாம், தேவனுடைய கிருபையினால், அதிக விலையேறப்பெற்ற முத்து ஒன்றினைக் கண்டுபிடித்தோம், அது எந்த நிபந்தனைகளின்பேரில் நமக்கு அருளப்பட்டதோ அதில் நாம் மனத்திருப்தியடைவதோடுகூட, மிகவும் மகிழ்ச்சியோடும், மனவிருப்பத்தோடும், சந்தோஷத்தோடும், அதனை தக்கவைத்துக்கொள்வதற்காக சகலத்தையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணவும் செய்கிறோம். R2352:2 இருப்பினும், நமது நிலைமையை மேம்படுத்துவதற்காக கர்த்தரால் திறக்கப்படும் தெய்வாதீனமான கதவுகளைப் பயன்படுத்திக் கொள்வது முறையற்றதாக இருக்கும் என்பதை இது அர்த்தப்படுத்துவதில்லை. R3400:4, 4876:2

**போதுமென்று எண்ணுங்கள்** - தெய்வீக மேற்பார்வையானது நமக்கு அருளியிருப்பவைகளைப் (போதுமென்று எண்ணுவது). R3352:6 அதில் நிலைமைகளனைத்தும் தாங்கக்கூடியவையாக இருக்கும். R5665:4 ஆவிக்குரிய இஸ்ரயேலர் தங்களுக்கு எட்டுந்தூரத்திலிருக்கும் காரியங்களைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும், அனைத்தையும் நன்றியோடு தேவனுடைய ஈவுகளாக

ஏற்றுக்கொள்ள வேண்டும். R4876:6 தேவையான பூமிக்குரிய காரியங்கள் (அருளப்படுமென) நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. தேவைக்கு அதிகமாக நம்மிடம் எது இருந்தாலும், அவை தற்காலத்தில் கர்த்தர் நமக்கு வாக்களித்துள்ளதை விடவும் அதிகமே. R2352:5 ஆவியின் கனிகளுடனேகூடிய விசுவாசம், நம்பிக்கை, மனநிறைவு, தேவபக்தி ஆகிய ஐசுவரியங்கள் மெய்யான ஐசுவரியங்களாக இருக்கின்றன என்பதை உணர்ந்து, கர்த்தருடைய ஞானத்தினாலும் கிருபையினாலும் அவர் உங்களை மிகவும் சாதகமான இடத்தில் வைத்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். R2353:2,6 இது நமக்கு ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும் கர்த்தருக்குள்ளான சந்தோஷத்தையும் கொண்டு வருவதற்கு நல்லதொரு மருந்தாக மாத்திரமல்லாமல், நமது உடல் ஆரோக்கியத்திற்கும்கூட மிகவும் பிரயோஜனமாய் இருக்கின்றது; மனக்கவலையும் மகிழ்ச்சியின்மையும் சரீரரீதியான குறைபாடுகள் மற்றும் நோய்களை மேலும் மோசமானதாக்கிவிடுகின்றன. R2352:6 வரவிருக்கிற நல்ல காலம் குறித்த நிச்சயமான நம்பிக்கையினிமித்தம் மனநிறைவுடன் இருந்து, தற்கால சோதனைகளுக்கு மனமகிழ்ச்சியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்கிற ரீதியில் பரிசுத்தவான்களின் முன்மாதிரியும் ஆலோசனையும் காணப்பட வேண்டும். A341 நம்மைச் சுற்றிக் காணப்படும் தட்பவெப்ப நிலை (weather) குறித்து முறுமுறுப்பதற்குப் பதிலாக, அதில் நாம் மனரம்மியமாக இருக்கக்கடவோம். நாம் அதை உருவாக்கவில்லை, நம்மால் அதை மாற்றவும் முடியாது. R2352:6 அதிருப்தி பரவும் அளவிற்கேற்ப மகிழ்ச்சியில்லாமல் காணப்படுவோம், மேலும் ஓர் அமைதியற்ற மனநிலையும் உருவாகும். R2351:2 அதிருப்தி மற்றும் சுயநலமான குறிக்கோள் என்பவை, சாந்தம், பொறுமை, மென்மை / தயவு, சகோதர சிநேகம், அன்பு எனும் கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமாக உள்ளன. R2351:2 மனநிறைவும், அது உணர்த்தும் விசுவாசமும் தேவபக்திக்கு அவசியமானவையாகும். R2353:6 போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். “என்னை வழிநடத்துபவர் என் தேவனே, ஆக எனக்கு எதிலும் மனநிறைவே / மனரம்மியமே.” R3400:4, 2351:3; A340; NS63:1 உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுவதெல்லாம் மிகவும் மோசமான அறிவுரை என திரு. உலகஞானி கூறுகிறார். R2351:1

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை** – கர்த்தருடைய பராமரிப்பையும், அவருடைய ஞானமும் கிருபையும் நம்மீது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்பதையும், நமக்கு எது சிறந்ததோ அதனையே அவர் அருளி வருகின்றார் என்பதையும் உணருவதே மனநிறைவின் உண்மையான அடித்தளமாயி ருக்கின்றது. R2353:4 நமக்கு ஒருபோதும் ஐக்கியமும், ஆதரவும் குறைவுபடாது. R1745:5 நாம் தனித்திருப்பதில்லை, ஏனெனில் இதை வாக்களித்தவரின் துணை நமக்கு என்றுமுள்ளது. NS451:3 தேவன் தம்மை அன்புகூருகிறவர்களை – அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப்பட்டவர்களை – ஆறுதல்படுத்தவும், ஆசீர்வதிக்கவும், சகலத்தையும் நன்மைக்கேதுவாக நடத்தி தருவதற்கும் அவர் எப்போதுமே அவர்களுடன் கூடவே இருக்கின்றார். R1672:1 நமது காரியங்களில் காணப்படும் கர்த்தருடைய பிரசன்னமும், மேற்பார்வையான பாதுகாப்பும், அனைத்தையும் தெய்வீகச் சித்தத்திற்கு அர்ப்பணித்திருப்பதும், உலகம் அறியாத ஒரு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொண்டு வருகின்றன. NS451:3

**உன்னைக் கைவிடுவதுமில்லை** – வாழ்க்கையின் புயல்கள் நம்மேல் அடித்து, நம்மை சூழ்ந்து கொள்ளும்போது (அவர் நம்மைக் கைவிடுவதுமில்லை). R5058:3 நமது எஜமானர் நம்முடன் இருக்கின்றார், நமது சகோதர சகோதரிகளின் ஊக்குவிப்பும் (encouragement) நமக்கு இருக்கின்றது. R5551:6, 5095:5 உலகத்தில் நாம் தனியாக இல்லை; அல்லது நம்முடைய மிகச் சிறிய நலனும்கூட கவனிக்கப்படாமல் விடப்படுவதில்லை. R1906:4 இதை அறிவிப்பவர் மீதே நமது பலமும் நம்பிக்கையும் (confidence) காணப்பட வேண்டும். R698:3, 2353:2 இதுவரை நம்மைக் காப்பாற்றி, போஷித்து, வழிநடத்திய கர்த்தருடைய அன்பு, எப்போதும் போல இன்றும் நம்மோடு இருக்கின்றது. R4876:5 “நீ

பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்." (ஆதி. 15:1) R1906:4, 1905:6

## 80. எபிரெயர் 13:6

**"அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே."**

**கர்த்தர் எனக்குச் சகாயர்** – அவருடைய அன்பையும், ஞானத்தையும், வல்லமையையும் நம்புவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். R5296:1 நம்முடைய சொந்தப் பாதுகாப்பிற்காக நாம் நம் சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்ய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்; பின்னர் நமக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதை அறிந்தவர்களாய், நம்மையே நாம் முழுமையாக கர்த்தருடைய கரங்களில் ஒப்படைத்துவிட வேண்டும். R5540:1 நாம் நம்மை அவருடைய பராமரிப்பிலிருந்து நீக்கிக்கொள்ளாமலிருந்தால், அவரே நமது புதிய சிருஷ்டியின் மிக உயரிய நலன்களுக்கு உகந்ததாயிருக்கும் சகல இம்மைக்குரிய உதவியையும் அருளிச்செய்திடுவார். R5540:1 பிதா தம்முடைய பிள்ளைகளின் சரியான வளர்ச்சிக்குத் தேவையான எதையும் வழங்காமல் இருப்பதில்லை. R5296:4 எல்லையற்ற ஞானத்தோடும் அன்போடும், சகலத்தையும் நம்முடைய நன்மைக்கேதுவாக நடத்திட அவர் வல்லவரும் சித்தமுள்ளவருமாயிருக்கிறார். R2353:4 வாழ்க்கையின் ஒவ்வொரு அவசரக் காலத்திலும், பிதாவே பாத்திரத்தை ஆயத்தம்செய்திருக்கிறார் என்பதையும், அதனை நாம் பருகும்போது அவரே நம்மை ஆதரித்து ஆசீர்வதிப்பார் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். R2353:3 தற்கால துன்பம் மற்றும் வருங்கால மகிமை என்பவைகளைப் பொறுத்தவரையில், கர்த்தருடைய மேற்பார்வையின்மீதான விசுவாசமானது வேறு எதைப்பார்க்கிலும் அவருடைய ஏற்பாட்டையே விரும்பிடும். R2354:4 நம்முடைய தேவனை வெல்வதற்குப் பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் முடியாது; மேலும் அவர் தாமே தம் பிள்ளைகளுக்கு ஆதரவாகவும் கேடகமாகவும் இருப்பதாக அறிவித்துள்ளார். அவர்மேல் நம்பிக்கையாயிருப்போருக்கு அவரே பலத்த துருக்கமாயுமிருக்கிறார். R5539:3 நாம் கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்திருந்தால், அவர் நம்மை ஆறு இக்கட்டுகளில் விடுவித்து, ஏழாவதிலும் நம்மைக் கைவிடமாட்டார். R5539:3

**நான் பயப்படேன்** – பயம் என்பது சிருஷ்டிகருடன் மனிதன் இசைவாக இல்லாததன் விளைவாக ஏற்படுகிறது. நம்முடைய ஆதி பெற்றோர் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவர்கள் பயமறியாதிருந்தார்கள். R5295:3 அவருடைய சித்தமேயல்லாமல் நமக்கு வேறே சித்தமில்லை எனும்வகையில், நம்முடைய இருதயங்கள் கர்த்தரோடு இசைவாய் இருப்பது அவசியமாகும். R5540:5 கிறிஸ்தவரைத் தவிர வேறு எவராலும் இவ்வாறு தைரியமாகவும் சுதந்திரமாகவும் இருக்க முடியாது, இருப்பினும் தேவபிள்ளை தன்னிறைவு பெற்றவராகவோ (self-sufficient) அல்லது மற்றவர்களது உதவியின்றி சுயசார்புள்ள வராகவோ (independent of outside help) இருக்க முடியாது. R5539:3 நீதிமான்கள் சிங்கத்தைப் போல தைரியமாகவும், புறாவைப் போல மென்மையாகவும், ஆட்டுக்குட்டியைப் போல சாந்தமாகவும் இருக்கிறார்கள். R5540:5 நாம் தேவனுக்குப் பயப்பட வேண்டும் எனவும், பலவீனமான மனிதனுக்குப் பயப்படக்கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறோம். R5540:5 நமது தேவன் எப்பொழுதும் நம்மோடு இருப்பார் என்பதையும், நமக்காக உள்ள தமது மகிமையான நோக்கங்களை நிறைவேற்று வதற்கேதுவாக சகல காரியங்களையும் நடத்தி தருவார் என்பதையும் அறிந்தவனாய் (நான் பயப்படேன்). R5540:4, 5296:1 தேவன் எவ்வாறு யோவான்ஸ்நானகனை, சிறையிலடைக்கப்படவும் இறுதியாக சிரச்சேதம்பண்ணப்படவும் அனுமதித்தாரோ, எவ்வாறு இயேசுவை, கைதுசெய்யப்படவும் சிலுவையிலறையப்படவும் அனுமதித்தாரோ, எவ்வாறு தமது பூர்வகால பரிசுத்தவான்களில் பலரையும் துன்பப்படவும் கொல்லப்படவும் அனுமதித்தாரோ, அதுபோல நம்மையும் துன்பப்படுவதற்கு அவர்

அனுமதிக்கலாம். R5540:4 பற்றியெரிந்த அக்கினிச் சூளையின் நடுவே போடப்பட்ட மூன்று எபிரெய புருஷரின் விசுவாசமும் தைரியமும் எவ்வளவு உன்னதமானது. தேவனுடைய வழிநடத்துதலைப் புரிந்துகொள்ள முடியாத தருணங்களிலும்கூட, நாம் அவரை நம்பலாம். R4874:4 நம்முடைய வீடு கொளுத்தப்படவோ, திருடர்கள் புகுந்து திருடவோ கர்த்தர் அனுமதிக்க மாட்டார் என்று இது கூறவில்லை. இதுபோன்ற இழப்புகளைத் தடுக்க நாம் அனைத்து நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். R5539:6

**மனுஷன் எனக்கு என்னசெய்வான்** – எந்த மனிதனும். R5539:6 பரத்திலிருக்கும் நம்முடைய பிதாவின் மகிமைக்காகவும், நம்முடைய உயரிய நலனுக்காகவும் என அவர் அனுமதிக்காத வரையில், நம்முடைய தலையின் ஒரு முடியைக்கூட சேதப்படுத்துவதற்கு மனிதன் சக்தியற்றவனாயிருக்கிறான். R5540:5 சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு உண்மையாக இருந்ததற்கான வெகுமதிகளாக சோதனையும் துன்புறுத்தலும் நமக்கு வரும்போது, அவற்றில் நாம் சந்தோஷப்பட வேண்டும், ஏனெனில் நமக்கு எதிராக இருக்கும் தீமையின் பல சக்திகள் இப்போதும்சரி இனிமேலும்சரி, நாம் ஊழியக்காரராக இருப்பதற்காக நம்மைப் பொருத்திவருகின்றன. R2352:4

**தைரியங்கொண்டு... சொல்லலாமே** – பயபக்தியோடும், தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாக அடிபணிந்தும் தேவனிடம் வருபவர்கள், கிருபாசனத்தண்டையில் தங்களுடைய நலன்கள் கேட்கப்படுவதற்கு எப்போதும் சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள். R1865:1 உண்மையான விசுவாசத்தின், தேவன்மீதான தொடர்ச்சியான நம்பிக்கையின் (confidence) சிறந்த எடுத்துக்காட்டுகள், நமது நேச மீட்பருடைய அனுபவங்களிலும் அவைகளை விளக்கும் எழுத்துகளிலும் காணப்படுகின்றன. R2353:2 தைரியத்துடனிருங்கள், தேவன்மேல் நம்பிக்கையுடன் இருங்கள் என்று அறிவுரை கூறும் அப்போஸ்தலனாகிய பவுல், தைரியமான விசுவாசத்திற்கு ஓர் உன்னதமான முன்மாதிரியாக இருந்தார், மேலும் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கு நமக்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. R5539:6 கர்த்தருடைய தாழ்மையான ஜனங்களின் ஞானமான தைரியத்தைக் கண்டு முழு உலகமும் வியந்துள்ளது. கர்த்தர்மேல் அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையே (confidence) அவர்களுடைய தைரியம் மற்றும் பலத்திற்கான இரகசியமாக இருக்கின்றது. R2353:4

## 81. யாக்கோபு 1:5, 6

### வ. 5 – “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.”

**ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்** – “ஞானமே முக்கியம்.” (நீதி. 4:7) R2262:2 நம்மிடம் ஞானமில்லை என்பதை ஒப்புக்கொண்டு, தெய்வீக வழிநடத்துதலை, தெய்வீக ஞானத்தை நாடுவதே மிகவும் ஞானமான போக்காக இருக்கும். R2262:3 நாம் எவ்வளவுக்கு அதிகமாகப் பெற்றுக்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நம்மிடம் இன்னும் குறைவு உள்ளதை நம்மால் உணர முடியும். R3980:4 தங்களுக்கு ஞானம் இல்லை என்பதையும், தெய்வீக போதகரின் வழிகாட்டுதல் தேவை என்பதையும் உணருவது. R2262:5 தேவன் நமக்காக ஏற்படுத்தி வைத்துள்ள அன்பான ஏற்பாட்டின் நீளங்களையும், அகலங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் நாம் உணர உணர, நம்மிடம் குறைவு இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளுவோம். R3988:4 நம்முடைய வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானங்களும் கர்த்தருடைய பார்வையில் ஏற்புடையதாக இருப்பதற்கு, இந்த ஞானமானது தேவ ஊழியராகிய நமக்கு மிகவும் இன்றியமையாதது. (சங். 19:14) R5202:4 கிறிஸ்தவனுக்குரிய பகுத்தறிவானது தனது மனித பலவீனத்தையும், அபூரணத்தையும் கண்ணோக்கி,

“தெளிந்த புத்தியின் ஆவிக்காக” தேவனிடமாக வந்துள்ளது. R1777:1 பரத்திலிருந்து வருகிற ஞானம் நமக்குத் தொடர்ச்சியாக தேவைப்படுகின்றது. R5633:1 அளவோடிருக்க வேண்டும் (moderation) என்கிற ஞானம் இல்லாத காரணத்தால், சிலர் மற்றவர்களின் விஷயங்களில் தலையிட்டு வீண் அலுவற்காரராய் அவதிப்படுகிறார்கள். R2493:3

**கேட்கக்கடவன்** - நமது வேண்டுதல்கள் பரிசுத்த ஆவியால், பரத்திலிருந்து வருகிற ஞானத்தால் அதிகமதிகமாக நிரப்பப்படுவதற்காகவே இருக்க வேண்டும். F686 உன்னதத்திலிருந்து வரும் கிருபை தேவைப்படுகிறது, மேலும் அது வாக்களிக்கவும் பட்டுள்ளது, கடுமையான சோதனையின் வேளைகளில் ஊக்கத்தோடு அதனை நாடிடவும் வேண்டியிருக்கிறது. F506 தங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஆற்றலையும் தாலந்துகளையும், தங்களால் எவ்வளவு சிறப்பாக முடியுமா அவ்வளவு சிறப்பான வகையில் பயன்படுத்துபவர்களுக்கு மாத்திரமே, மேற்கொண்டு ஞானம் அருளும்படிக்கு தேவனிடத்தில் கேட்பதற்கு எந்தவொரு உரிமையும் உள்ளது. R5633:1 தமது பிள்ளைகளாக மாறும் அனைவரும், தங்கள் தேவைகளை உணர்ந்து, அதற்கேற்ப வேண்டுதல்களை முன்வைக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். R5714:6 அதனை கர்த்தரிடமாக ஜெபத்தில் எடுத்துச்செல்லுங்கள். R2006:3

### வ. 6 – “ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.”

**விசுவாசத்தோடே** - உறுதியான ஆதாரமில்லாமல் எளிதில் நம்பிவிடுவது உண்மையான விசுவாசம் என்றாகாது. இது நன்கு நிதானித்துப் பார்த்து, சரியான ஆதாரத்தின்பேரிலேயே காரியத்தை நம்பும். இது மனுஷரின் போதனைகளையும், தேவனுடைய ஆதாரப்பூர்வமான வார்த்தையையும் நெருக்கமாக நிதானித்து, அவைகளுக்கு இடையே தெளிவாக வேறுபடுத்திப் பார்த்திடும். R2005:4

**கேட்கக்கடவன்** - தெய்வீக வார்த்தையில் வாக்களிக்கப்பட்டவைகளை மாத்திரம் (கேட்கக்கடவன்). R2005:4 பரலோக ஞானத்தின் பல்வேறு ஆலோசனைகள் வாழ்க்கையின் சகல காரியங்களுக்கான ஞானத்தையும், கிருபையையும் நமக்குத் தருகின்றன. R2263:4 விசுவாசத்துடன் கேட்கக்கடவன், இல்லையேல் ஒன்றுமே கேளாதிருக்கக்கடவன். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே, மாய்மாலமே. (உரோ. 14:23) R2005:4 மனத்தாழ்மையுள்ளவர் மாத்திரமே மாபெரும் ஆலோசகரிடமிருந்து வருகிற பரலோக ஞானத்தை நாடித் தேடிக் கீழ்ப்படிவார்கள்; அவர்கள் அனைவருமே தேவனால் போதிக்கப்படுவார்கள். R2262:5 எவ்வளவுக்கதிகமாக நம்மிடம் மனத்தாழ்மை இருக்கின்றதோ அவ்வளவுக்கதிகமாக கர்த்தருடைய ஞானம் மற்றும் அவருடைய அறிவுரைபேரிலான நமது நம்பிக்கையும் இருக்கும். R2262:6 நமது ஜெபங்கள் “வீண் வார்த்தைகளை அலப்புவதாக” இருக்கக்கூடாது, நாம் எதிர்நோக்காதவற்றிற்கான சம்பிரதாயமான வேண்டுதல்களாக இருக்கக்கூடாது. (மத். 6:7) R2005:4 நாம் எவ்வளவுக்கு அதிகமாகப் பெறுகிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நம்மிடம் இன்னும் குறைவு இருப்பதை நம்மால் உணர முடியும். வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்தையும் நாம் இலாபகரமாகப் பயன்படுத்திக்கொள்ளத்தக்கதாக, கிருபையின் ஊற்றிடம் நாம் தொடர்ந்து சென்றுகொண்டே இருக்க வேண்டும். R3980:4

**கடலின் அலைக்கு** - மதத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத திரளான மனுக்குலத்தாருக்கு (ஒப்பாயிருக்கிறான்). (யூதா 1:13; வெளி. 21:1) R333:1

## 82. யாக்கோபு 1:12

### “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு

**கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்."**

**சோதனையை** – சாத்தானிடமிருந்து வருகிறது, சரியானதைத் தவறாகவும், தவறானதைச் சரியானதாகவும் தோன்றச்செய்ய முயற்சிப்பான்; இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக வைப்பான். (ஏசா. 5:20 – 21) R3297:5, 1269:1 சோதனைகள் நண்பர்களிடமிருந்து வரலாம், அவர்கள் நம்மைச் சுய இச்சைகளைத் திருப்திப்படுத்தும் வாழ்க்கையை வாழவும், கர்த்தருக்கான நம்முடைய உண்மைத்தன்மையை ஓரளவு தளர்த்தவும் நம்மைத் தூண்டிவிடலாம். ஐசுவரியத்தின் (அ) உலகப்பிரகாரமான சமுதாயத்தின் கவர்ச்சிகள், நிர்விசாரமாய் / கஷ்டமில்லாமல் இருப்பதற்கான சுபாவ விருப்பம் மற்றும் கடினத்தன்மையைச் சகித்துக்கொள்வதற்கு மாம்சத்தின் விரும்பமின்மை – இவை அனைத்துமே, கிறிஸ்தவனுக்கு, வெகு நுண்ணிய மறைமுகமான சோதனைகளாக இருக்கின்றன. R5499:2 கர்த்தரை முழு மனதுடன் அன்புகூராமல், சுயத்தையோ வேறு சில விக்கிரகங்களையோ தங்களில் முதலிடம் வகிக்கச் செய்கிறவர்கள், ஏதோவொரு விதத்தில், உலகத்தாலோ, மாம்சத்தாலோ, பிசாசினாலோ, தெய்வீக வார்த்தைக்கு விரோதமான கலகத்திற்குள்ளாக கவர்ந்திழுக்கப்படுவார்கள். R5688:1, 5459:3, 5500:1 இராஜ்யத்திற்காக நம்மை ஒழுங்குப்படுத்துவதற்கும் ஆயத்தப் படுத்துவதற்கும் சிட்சைகள், சோதனைகள் அல்லது பரீட்சை என்பவை அவசியமானவையாகும். R2005:3 சோதனைகள், ஒழுங்குப்படுத்தல்கள். R5688:2; CR230:4

**சகிக்கிற** – "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்." (உபா. 13:3) R2258:2 நாம் எப்படிச் சகிப்போம் என்பதைப் பார்ப்பதற்காய், பல வருட கடின உழைப்பு, கவனம் மற்றும் சுயத் தியாகம் என்பவைகளின் நிலையான அழுத்தத்தின்கீழாக நாம் வரும்படிக்கு தேவன் நம்மை அனுமதிக்கின்றார்; இப்படியாக இறுதிவரை நிலைத்து நிற்கும் அந்த வைரம்போன்று சோதித்து நிரூபிக்கப்பட்ட குணலட்சணம் பாக்கியமானது. R3104:1 மணிதோறும், நாள்தோறும் என சோதனைக்குள்ளாகும்போது, 'பொறுமையோடு சகித்து, உண்மையாயிருக்க வேண்டும்' என்கிற மனப்பான்மையை நாம் நிரந்தரமாகத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். R5499:1,2 தைரியமாக சகிப்பது. R5688:1 சோதனையின்போது உண்மையுடன் சகிப்பது. R2258:3, 5459:3 எல்லா பரீட்சைகளிலிருந்தும், சோதனைகளிலிருந்தும், சிரமங்களிலிருந்தும் தன்னை விலக்கிக்கொள்பவன், உண்மையில் தான் ஒரு தேவபிள்ளைதானா எனச் சந்தேகப்படுவதற்கு எல்லா நியாயமான காரணங்களும் இருக்கின்றன. R5459:5 இப்போது அனைத்துமே உங்கள் சகிப்புத்தன்மையின் சக்தியைப் பொறுத்தே உள்ளது. உங்களால் இறுதிவரை நிலைநிற்க முடியுமா? R645:3*

**மனுஷன் பாக்கியவான்** – தேவ தயவு பெற்றிருக்கிற ஒருவனுடைய நிலை. அத்தகையவரின் நிலை மகிழ்ச்சியான ஒன்றாக, விரும்பத்தக்க ஒன்றாக இருக்கும். R5499:1 உணர்வுகள் அல்லது உணர்ச்சிகளுடன் தொடர்புடைய ஒரு நிலைமை அல்ல, மாறாக விளைவுடன் (outcome) தொடர்புடைய ஒரு நிலைமையாகும். ஜீவகிரீடத்தை வெல்வதற்கு தேவபிள்ளைக்கு உதவுகிற எதுவுமே, மாம்சத்திற்கு அதீத வலியை ஏற்படுத்தினாலும்கூட, அது மிகப்பெரிய ஆசீர்வாதமாகத்தான் இருக்கும். R5499:1

**அவன் உத்தமனென்று விளங்கினபின்பு** – அவனுடைய சோதனைகளுக்குப் பிறகு. R2258:3; CR230:4 சோதனை நேரம் முடிந்தபின்பு, அந்நபர் தன்னுடைய நேர்மையை முழுமையாக மெய்ப்பித்துவிட்டாரென தேவன் கண்ட பின்பு. R5499:3, 5688:5 ஒரு சோதனையை மாத்திரம் குறிக்கவில்லை, மாறாக நம்முடைய முழு வாழ்நாள் அனுபவத்தையுமே இது குறிக்கின்றது. சோதனை மற்றும் பரீட்சையின் ஒவ்வொரு கட்டத்திலும் நேர்மையை மெய்ப்பிக்க வேண்டும். R5688:5

**தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு** – எல்லாவற்றிற்கும் மேலாக அன்புகூருவது; நம் வாழ்வின் முக்கிய நாடித்துடிப்பாக இருக்கும் அன்பு. R5499:2 மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதற்காக, தேவனுடைய ஊழியத்தில் பூமிக்குரிய வாழ்வைக் கையளிக்கும் அன்பு. R5499:5

**வாக்குத்தத்தம் பண்ணின** – தம்முடைய பரிசுத்தவான்களுக்காக, தேவன் கொண்டிருக்கும் விசேஷித்த அன்பும் ஏற்பாடும், அவர் உலகத்தாருக்காய்க் கொண்டிருக்கும் அன்பிலிருந்தும், ஏற்பாட்டிலிருந்தும் வேறுபடுத்தப்பட்டதாயிருக்கும். R1254:5 இவர்கள் இருதயத்தில், தங்களுடையவர்களாய் அல்லாமல் கர்த்தருடையவர்களாய் இருப்பார்கள். R5500:1

**ஜீவகிரீடத்தை** – கர்த்தருடைய சந்தோஷங்கள் (மத். 25:21). யோவானும் அதே கிரீடத்தைப் பற்றி பேசுகிறார் (வெளி. 2:10). பரி. பவுல் அதை நீதியின் கிரீடம் எனக் குறிப்பிடுகின்றார் (2 தீமோ. 4:8). பரி. பேதுரு அதை மகிமையின் கிரீடம் என்று அழைக்கின்றார் (1 பேது. 5:4). R3211:6, 5499:3 ஜீவன் எனும் பலன்; மேலும் இந்த ஜீவன் மிக உயரிய தளத்தைச் சேர்ந்ததாகும். இது மகிமையின் கிரீடமாகும், ஏனெனில் வெகுமதியே அழியாமையைக் கொண்டுவருகின்றது; கிரீடம், அல்லது சகல ஜீவனிலும் உச்சநிலையான ஜீவநிலை, அல்லது மிக உயரிய கிரீடமானது "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குக்" கொடுக்கப்படுகிறது. R5499:3, 5688:2, 3282:1 மாபெரும் பலன். CR230:4

**பெறுவான்** – இயேசு தம்முடைய கிரீடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக மூன்றாம் நாள் வரை நித்திரையில் இருந்தார். அப்போஸ்தலரும் மற்றவர்களும் தங்களுடையதைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு பல நூற்றாண்டுகளாக நித்திரையில் இருந்தனர். R5688:5 உபத்திரவங்கள் முடிந்தவுடனேயே அந்த மகிமை பின்தொடர்ந்து வரும். SM361:1

## 83. யாக்கோபு 4:6

**"அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது."**

**பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்** – உயர்ந்த ஸ்தானத்தில் தூக்கி வைப்பதற்கு, தன்னலத்தை நாடுபவர்களையும், ஆவியில் பெருமையுள்ளவர்களையும் கர்த்தர் நம்புவதே இல்லை. R5414:6 தன்னம்பிக்கையுள்ளவர்கள். R3828:5 பிறர் உதவியின்றி தான் மட்டும் போதும் எனும் அகம்பாவமுடையவர், இறுமாப்புள்ளவர். R2700:4, 2459:5 பெருமைப்படுவதற்கோ இறுமாப்படைவதற்கோ நம்மிடம் (உண்மையில்) எதுவும் இல்லை என்பதை சர்வவல்லவர் அறிவார். R5843:3 இறுமாப்பானது இருதயம் சீர்திருத்தமடைவதிலிருந்தும், மற்றவர்களுக்கு உண்மையிலேயே பயனுள்ளவர்களாய் இருப்பதிலிருந்தும் தடுத்துவிடுகின்றது. R5186:1 "அழிவுக்கு முன்னானது [இட்டுச்செல்லுவது] அகந்தை." (நீதி. 16:18) R5843:3, 726:1 பெருமையானது சாத்தானின் மனவிருப்பமாகவும் (choice), போக்காகவும் இருந்தது. R725:6 சாத்தான் தாழ்த்தப்பட்டான், "பூமிக்கு விழ வெட்டப்பட்டான் [அல்லது மட்டுப்படுத்தப்பட்டான்]" (ஏசா. 14:12). R1686:3 சில சமயங்களில் கற்பனை கோட்டையான முக்கியத்துவங்களிலிருந்து கீழிறங்கி வரத்தான் வேண்டும். R1486:6 எந்தளவிற்கு ஆவிக்குரிய பெருமை உள்ளே வருகின்றதோ, அந்தளவிற்கு கர்த்தருடைய ஆவியும் வெளியேறிவிடுகின்றது, அத்துடன் தனிநபரின் ஆவிக்குரிய நாட்டமும் (spirituality) நின்றுவிடுகின்றது. R5955:6 பெருமையுள்ளவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறினாலும்கூட, அவர்கள் தூரத்திலேயே வைக்கப்படுவார்கள். அவர்களைக் கர்த்தரிடம் கிட்ட நெருங்க அனுமதித்தால் அது அவர்களை இன்னுமதிகமாக பெருமை கொள்ளவே செய்திடும். R5370:4

**தாழ்மையுள்ளவர்களுக்கோ** – பணிந்த ஆவியுள்ளவர்கள். R5843:3 ஆவியில் எளிமையுள்ள வர்கள். R3734:1 செய்த தவறுக்காக மனம் வருந்துபவர். R5464:4 சாந்தகுணமுள்ளவர், கற்றுக்கொள்ளக்கூடியவர், அடிபணிந்தவர். R5261:3 “சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.” (சங். 25:9) R2241:3 தேவனுடைய வார்த்தையிடமாக வரும்போது, நமது மனப்பான்மை சீஷனுடையதாக இருக்க வேண்டுமே ஒழிய, போதகனுக்குரியதாய் இருக்கக் கூடாது என்பதை எப்போதும் நினைவில் கொள்வது அவசியமாகும். R3337:1 தேவனுடன் இசைவாக இருப்பவர்கள் தாழ்மையுடன் இருக்க வேண்டும். R5186:1 கர்த்தருக்குப் பிரியமாக இருக்கவும், அவருக்குப் பிரியமானவைகளைச் செய்யவும், மனத்தாழ்மையோடு வாஞ்சிப்பவர்கள். HG751:4 கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்க விரும்பும் அனைவருமே, மனத்தாழ்மையாக இருப்பதற்கும், நடத்தையில் குறிப்பாக மனதில் மிகவும் பணிவாக இருப்பதற்கும் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். R2450:5 தாழ்மை உள்ளம் கொண்டவர்கள் உயர்த்தி வைக்கப்படும்போது அதினால் காயமடைய மாட்டார்கள், அல்லது எதிர்கால பணியிலிருந்து திசைதிருப்பப்படும் ஆபத்தில் இருக்க மாட்டார்கள். R5414:6 மனத்தாழ்மை என்பது தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாக – ஆல்பாவாக – இருந்தவருடைய போக்காகவும் மனவிருப்பமாகவும் இருந்தது. R725:6

**கிருபை அளிக்கிறார்** – தயவு. E255; R5843:3, 5464:4, 5414:6, 3866:1, 2700:4, 2450:5, 2250:4, 1486:6; HG751:5 தாழ்மையுள்ளவர்களுக்கும், சாந்தகுணமுள்ளவர்களுக்கும், கற்றுக்கொள்ளக்கூடியவர்களுக்கும் கர்த்தர் ஆசீர்வாதங்களை அருளுகிறார். R5186:1, 5261:3, 2250:4 தாழ்மையுள்ளவர்களைத் தேவன் உயர்த்துவார். (மத். 23:12) பெருமையினாலும், இலட்சிய ஆசையினாலும் சாத்தான் ஆசைப்பட்ட அந்த நிலைக்கு (மனத்தாழ்மையுள்ள) இயேசு இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறார். R1686:3

## 84. யாக்கோபு 4:8

**“தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.”**

**தேவனிடத்தில் சேருங்கள்** – கிறிஸ்துவின் பலியில் விசுவாசம் வைப்பதன் மூலமாக. Q699:5 தங்களை அர்ப்பணித்துக்கொள்வதன் மூலமாக. R5717:5, 4632:3 ஜெபத்திலும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தையைத் தியானிப்பதிலும், அவருடைய எல்லா நன்மைகளையும், அவருடைய மேற்பார்வையான பாதுகாப்பையும், அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும் தியானிப்பதிலும் அவரண்டை கிட்டிச்சேருவது. R1949:5 பாவத்திலிருந்து விலகி நீதியை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு படியுமே தேவனை நோக்கிய, தேவன் மீதான விசுவாசத்தின் அடிப்படையிலான நீதிமானாக்கப்படுதல் நோக்கிய ஒரு படியாகும்; உடன்படிக்கை உறவை நோக்கிய ஒரு படியாகும். R4632:2, 5207:5, 4871:6 இருதயத்தை தேவனிடம் திருப்புவதன் மூலமும், பாவத்திலிருந்து விலகி, கிறிஸ்துவில் அவர் நியமித்த வழியை ஏற்றுக்கொள்ளுவதன் மூலமும் (தேவனிடத்தில் சேருவது); பிதாவால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்பாக, மரணபரியந்தமான முழு அர்ப்பணிப்பு எனும் தரநிலையை அடைய வேண்டியிருக்கிறது. R4632:4; Q699:5 தேவன் தம்மைத் தேடுபவர்களால் கண்டடையப்படுவதற்கு மனவிருப்பத்துடன் இருக்கிறார். R5733:5 பாவத்தை விட்டு விலகுவது மனமாற்றத்தை நோக்கிய ஓர் அடியாக இருக்கின்றது. அந்தத் தருணமானது நிஜமான வகையில் ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கிச் செல்லுவதாக இருக்கிறது (an antitypical going toward the Tabernacle). கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே எவராலும் பிதாவிடமாக வர முடியும். R5439:1 நாம் அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்தோடு நமது சிந்தையின் ஆவியில் தேவனிடம் கிட்டிச்சேர வேண்டும்.

அவருடைய சித்தத்தைச் செய்ய நாம் விரும்ப வேண்டும். R5137:5, 5717:5 முழு அர்ப்பணத்திற்கு ள்ளாகச் செல்லத் தவறியவர்கள் முழு நீதிமானாக்கப்படுதலையும், குமாரத்துவத்தின் முத்திரையையும், கர்த்தருடனான உடன்படிக்கை உறவையும் பெறத் தவறுகிறார்கள். R4654:1 தேவன் மீதுள்ள அன்பானது, பயத்தைப் போக்கவும், அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என்கிற தைரியத்துடன் – முழு நம்பிக்கையுடன் – தேவனிடம் வரவும் உதவிடும். R4841:5

**அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்** – "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (யோவா. 14:23) R1949:2 கர்த்தர் நம்மைப் பாதி வழியில் சந்தித்தார். R4629:1 தேவனும் அந்த அளவிற்கேற்ப நெருங்கி வருகிறார். R4632:2 தேவன் தமது மேற்பார்வைகள் / பராமரிப்புகள் மூலமாக நெருங்கி வருகிறார். R5596:3 நாம் புத்திரராக சுவிகரிக்கப்பட்டது, பரிசுத்த ஆவியால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டது மற்றும் முத்திரையிடப்படுதலின் துவக்கம் என்பவைகளால் பிதா நம்மை ஏற்றுக்கொண்ட காரியமானது சுட்டிக்காட்டப்படுகிறது; முத்திரையிடப்படுதல் என்றால் புதிய சிருஷ்டிகளாக, தெய்வீக சாயல், மனநிலை அல்லது ஆவி நம்மீது பதியப்படுவதாகும். R4872:2 தேவனைத் தேடுகிற யாவரும் அவரைக் கண்டடைவார்கள். R5201:3; CR420:5 நாம் எந்தளவிற்குக் கர்த்தரிடம் நெருங்கி வருகிறோமோ, அந்தளவிற்கு நமக்கு அதிக ஆசீர்வாதமும் கிடைக்கும். CR434:3

**உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்** – எவருடைய இருதயம் (பரி)சுத்தமாக இருக்கின்றதோ அவர் ஒரே சிந்தையுள்ளவராய் இருக்கின்றார் (single-minded); அவரது சிந்தை, சித்தம், இருதயம் ஆகியன, முதலாவதாகவும் சரி, கடைசியாகவும் சரி – எப்போதுமே தேவனுடைய சித்தத்தையே நாடிக்கொண்டிருக்கும். R2734:3

## 85. 1 பேதுரு 1:3, 4

### வ. 3 – "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;"

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்** – இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறினபடியாலும், இதனால் அவர் தம்மை தாமே ஒரு தேவனாக ஆக்கிக்கொள்கிறார் அல்லது தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராக்கிக்கொள்கிறார் என யூதர் நினைத்துக்கொண்டதாலும், இயேசுவைக் கல்லெறியும்படிக்கு அவர்கள் விரும்பினார்கள். R301:3, 474:1 இயேசு சபைக்கு பிதாவாக (ஜீவன் கொடுப்பவராக) இருப்பதில்லை; மாறாக அந்த ஜீவன் நமக்கு வந்து சேரும் வாய்க்காலாகவே அவர் இருக்கிறார். R353:3, 5623:5

**பிதாவாகிய தேவன்** – ஜீவன் கொடுப்பவர். R2407:3, 5108:4, 297:1 இயேசு ஒருபோதும் திருச்சபையின் பிதாவாகப் பேசப்படவில்லை, அல்லது இயேசுவை தமது சொந்த பிள்ளைகளுக்கே நிச்சயிக்கப்பட்டவராகக் குறிப்பிடுவதென்பது பொருத்தமானதாகவும் இருக்காது. HG671:3

### வ. 4 – "அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்."

**எழுந்ததினாலே / Resurrection** – அவர் மூலம் நாம் அடையப்போகும் இறுதி வெற்றிக்கான உத்தரவாதம். R1598:2, 297:1 நமது நீதிமானாக்கப்படுதலுக்காக. R1278:2

**அழியாததும்** – கிரேக்க வார்த்தை, அஃப்தார்டாஸ் / aphthartos, கெட்டுப்போகவோ அல்லது சிதைந்துபோகவோ / அழியவோ முடியாத. R204:1, 2339:3; E398 அழியாமை, திவ்ய சுபாவம்; மணவாட்டி தனது ஆண்டவரைப் போல் இருப்பாள் – திவ்ய சுபாவமுள்ள ஜீவியாக இருப்பாள். R297:5, 1077:5, 191:3* நாம் கருநிலை புதிய சிருஷ்டிகளாக மாறியிருக்கிறோம், மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்து, தெய்வீகத் தளத்தில் ஆவிக்குரிய ஜீவிகளாகப் பிறக்கும் வரையிலும், நாளுக்கு நாள் அந்தக் கருவானது வளர வேண்டியிருக்கிறது. R5855:1, 191:3*

**மாசற்றதும்** – தூயதும். R297:5

**வாடாததுமாகிய** – மங்காதது. (டயக்லாட்டு மொழியாக்கம்) R297:5 வாடாத ஜீவகிரீடம். (1 பேது. 5:4) R1077:4

**சுதந்தரத்திற்கேதுவாக** – தேவனுடைய சுதந்தரராகவும், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகவும். R3938:4 இடுக்கமான பாதையில் உண்மையுள்ளவர்களாக நடப்பதன் மூலமாக. R5877:4

**நம்மை** – தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். R4368:1 கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக இருப்பவர்கள். R377:5, 4368:1

**ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி** – நமது பாவங்களுக்கான மீட்கும் பொருளாகிய நமது கர்த்தரின் மரணத்தினாலும், நமது நீதிமானாக்கப்படுதலுக்காக அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலும் இந்த நம்பிக்கையின் அடித்தளமானது உறுதிப்படுத்தப்படுகிறது. R1278:2 இப்போது நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல, இப்போது அறியாமையிலுள்ள, பாவமுள்ள, நீதிமான்களாக்கப்படாத பலரையும் பூரணப்படுத்தும் நம்பிக்கையும் இதில் அடங்கும். R1512:1, 377:5 இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலமாக. R297:5 ஜீவனின் நம்பிக்கை; ஒரு ஜீவனுள்ள நம்பிக்கை. R1508:3, 297:5; HG143:5 சிலுவையில் அறையப்பட்ட சமயத்தில் அப்போஸ்தலரின் நம்பிக்கைகள் வாடிப்போயிருந்தன, ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலின் போது அது புத்துயிர் பெற்றது. A80

**ஜெநிப்பித்தார்** – கிரேக்க வார்த்தை, அனா-கென்னாவ் / ana-gennao, மீண்டும் ஜெநிப்பிக்கப்படுதல். R837:1 இரட்சகரின் புண்ணியம் தரிப்பிக்கப்பட்ட தருணத்தில் நாம் பிதாவினால் அவருடைய பரிசுத்த ஆவியால் "அழியாத சுதந்தரத்திற்கேதுவாக" ஜெநிப்பிக்கப்பட்டோம். R5855:1 தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டோம். R5742:2, 1227:2, 905:2; Q40:4; SM780:1 ஜீவனின் முதல் துடிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு. R905:2 அவர் இயேசுவின் பிதாவும், நம்முடைய பிதாவும் ஆவார்; நாம் ஒரே பிதாவின் பிள்ளைகள். CR472:1; R905:2 அவருடைய வார்த்தை மற்றும் அதன் ஆவியைக் கொண்டு ஜெநிப்பிக்கப்பட்டோம். E105, 143, 456; R1510:5 கிறிஸ்துவின் சகோதரராக. E143, 144, 456; R3687:4 "இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது அல்லாமல், தேவனாலே" ஜெநிப்பிக்கப்பட்டோம். (யோவா. 1:13) R2129:1 சத்திய வார்த்தையின் மூலமாக. A196 இந்தத் தெய்வீகத் தயவை நாம் குமாரன் மூலமாக பெற்றுக்கொண்டாலும், நம்மை ஜெநிப்பித்தவர் குமாரன் அல்ல. R5507:5, 5623:5 இயேசுவை முன்னறிந்தவர் நம்மையும் இயேசுவால் முன்னறிந்திருக்கிறார். R4453:4 நீங்கள் ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறீர்கள், உங்களுக்கு ஒரு புதிய ஜீவனும் உள்ளது. CR454:2 சீஷர் முதலில் நீதிமான்களாக்கப்பட்ட மனிதர்களாக இருந்தனர், ஆனால் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு அவர்கள் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டிகளாயினர். R343:3 ஈசாக்கு ஆபிரகாமின் சுதந்தரவாளியாகவும், (சாராள் வழியாக வந்த) வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகவும் இருந்தார், எனவே நாமும் ஈசாக்கைப் போல, தேவனுடைய பிள்ளைகளாகவும், வாக்குத்தத்தத்தின் அல்லது சாராள் உடன்படிக்கையின் பிள்ளைகளாகவும் இருக்கின்றோம். R777:4

## 86. 1 பேதுரு 1:5

**"கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது."**

**கடைசிக்காலத்திலே** – கடைசிக்காலத்தில். கிரேக்க வார்த்தை, கைராஸ் / kairos, குறிப்பிட்ட உறுதி செய்யப்பட்ட நேரம் (fixed time). R1149:5* சிறு மந்தை நிறைவடைந்து, மகிமைப்படுத்தப்படப்போகிற, இந்த யுகத்தின் முடிவில். R1007:3 கர்த்தருடைய இரண்டாம் வருகையில். "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்." (2 தீமோ. 4:8) R1598:2, 1881:6 இப்போது, அதாவது, உலகம் பார்க்கப்போகிற கடைசி யுகத்தில். HG140:3

**வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற** – வெளிப்படுத்தப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற. R1149:5* கிரேக்க வார்த்தை, அபோகலுப்சிஸ் / apokalupsis மற்றும் அபோகலுப்டோ / apokalupto, இவை வெளிப்படுத்துதல், வெளிக்கொணர்தல், அவிழ்க்கப்படுதல் என்பதை அர்த்தப்படுத்துகின்றது (முன்பிருந்து மறைக்கப்பட்ட ஒரு விஷயம் அவிழ்க்கப்படுவது என்பது போல அர்த்தப்படுத்துகின்றது.) R2979:2

**இரட்சிப்புக்கு ஏதுவாக** – விசுவாசத்தால் இந்த இரட்சிப்பைப் பற்றிக்கொள்ளும் "விசுவாசிகளைத்" தவிர, சுவிசேஷ யுகத்தின் இறுதி வரைக்குமே இது வேறு யாரையும் சென்றடைவதில்லை. R2051:1

**தேவனுடைய பலத்தினாலே** – விசுவாசத்தைக்கொண்டு நாம் பற்றிப்பிடித்திருக்கிற அவருடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மற்றும் மேற்பார்வைகள். R1007:3, 4929:4, 3282:1 நாம் நம்மாலே காக்கப்படுவதில்லை (மாறாக தேவனுடைய பலத்தினாலே காக்கப்படுகிறோம்). CR444:5

**உங்களுக்கு** – கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்காக. SM334:1 இராஜரீக ஆசாரியக்கூட்டத்தின் அங்கத்தினராகவும், தேவனுடைய சுதந்தரராகவும், அவர்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகவும் இருப்பதற்கு. R2762:6

**பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது** – பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. (டயக்லாட்டு மொழியாக்கம்) R297:5 மரணத்தின் போது உடனடியாக சொந்தமாக்கிக் கொள்வதற்காக அல்லாமல், மாறாக, இரண்டாம் வருகையின் போது வெளிப்படுத்தப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. R1598:2 கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினருக்கு இந்த வாழ்க்கைக்கு அப்பால் அழியாத சுதந்தரமொன்று வைக்கப்பட்டுள்ளது. R4072:1

## 87. 1 பேதுரு 3:12

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது."**

**கர்த்தருடைய கண்கள்** – எவ்வாறு தேவனுடைய கண்கள் எப்போதும் நம்மேல் நோக்கமாயிருக்கின்றதோ அதுபோல, பெற்றோரும் தங்களுடைய கண்களும், தேவனுடைய கண்களும் எப்போதும் தங்கள் பிள்ளைகள்மேல் நோக்கமாயிருப்பதை அந்தப் பிள்ளைகளுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். R1097:4*

**அவருடைய செவிகள்... கவனமாயிருக்கிறது** – நம்முடைய பிதா மற்றும் கர்த்தராகிய இயேசு என்பவர்களுடைய சிந்தனை, கவனிப்பு மற்றும் அக்கறை போன்றவை நம்மேல் தொடர்ந்து காணப்படும். எந்த நேரத்திலும் நாம் ஒருவருடைய அல்லது இருவருடைய விசேஷித்த கவனத்தைப் பெற்றுக்கொள்ளலாம். R1865:2

**அவர்கள்வேண்டுதலுக்கு** – தேவன் தமது புத்திரர்மேல் வைத்திருக்கும் மேற்பார்வையானது மிகவும் தனிச் சிறப்புவாய்ந்த மேற்பார்வையாக இருக்கிறது. R1561:3

**தீமைசெய்கிறவர்களுக்கோ** – குற்றங்களின் தன்மைக்கேற்ப தண்டனைகள் மாற்றியமைக்கப்படும், ஆனாலும் அந்தத் தண்டனைகள் மனிதனை நீதியில் நிரந்தரமாக ஸ்தாபிக்க வேண்டுமென்கிற நல்நோக்கத்தினை உடையதாகவே காணப்படும். R2613:5, 2596:4, 723:4

## 88. 1 பேதுரு 4:12, 13

### வ. 12 – "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,"

**உங்களைச் சோதிக்கும்படி** – திருச்சபை. R266:6 எதற்கென்றால், சுத்திகரிக்கும் வேலையொன்றைச் செய்வதற்காக. R5778:5 இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் மகிமை, கனம் மற்றும் அழியாமையில் பங்குகொள்வதற்கு நாம் ஆயத்தப்படும்படியாக, கர்த்தர் களிம்பை நீக்கிச் சுத்திகரிப்பவராயிருக்கின்றார். R5118:3 உங்களை நிரூபிப்பதற்கும், உங்கள் குணலட்சணத்தைப் பலப்படுத்துவதற்கும், சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளை உங்கள் இருதயத்தில் ஆழமாக வேரூன்றச் செய்வதற்கும். R1744:2 தேவஜனமாய் காணப்படுகின்ற யாவருக்கும் சோதனைகளும் சிரமங்களும் இருக்கவே செய்யும். சாட்சிக்கூட்டங்களில் அவற்றை நம் சகோதர சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமாக, நாம் ஒருவருக்கொருவர் இரக்கங்காட்டுவதற்கு / அனுதாபப்படுவதற்குக் கற்றுக்கொள்கிறோம். F320 நம்முடைய எஜமானர், பிதா தமக்காக ஊற்றின தம்முடைய பாத்திரத்தில் ஒரு பகுதியை நமக்கென்று விட்டுச் சென்றுள்ளார். R5545:6 பிதா ஒருவரையும் சோதிப்பவரல்ல (யாக். 1:13) என்றாலும், நம்முடைய விசுவாசத்திற்கான பரீட்சையானது பொறுமையையும், அனுபவத்தையும், நம்பிக்கையையும் உண்டாக்குகிறபடியாலும், மேலும் அந்தப் பரீட்சையானது நாம் பரிசுத்தத்தில் பூரணமடைவதற்குத் தேவைப்படுவதாலும், அவர் சோதனையிலிருந்து நம்மை விலக்கிவைக்கமாட்டார். R2005:3

**பற்றியெரிகிற அக்கினி** – குணலட்சண வளர்ச்சிக்கும், உண்மையுள்ளவர்களை நிரூபிப்பதற்கும் தேவைப்படுகிறது. OV39:T சோதனைகள் "ஜெயங்கொள்ளுபவர்கள்" அனைவரின் பங்காக இருக்க வேண்டும். R2792:3 சிட்சைகள் மற்றும் திருத்தப்படுதல். R739:1 எவ்வளவு பட்சிக்கின்றதாய் இருந்தாலும், எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும், சோதனைகள் வரும்போது கர்த்தருடைய ஜனங்கள் அதை ஏதோ புதுமையென்று எண்ணி, திகைக்கக்கூடாது. இது சபைக்கான அழைப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு பகுதியாக இருக்கின்றது. R5118:3 நமக்கான மிகக் கடுமையான சோதனைகள் வெளியிலிருந்து வருவதில்லை, மாறாக தனிப்பட்ட இலட்சியத்தினிமித்தம், பொதுவாக மந்தையைக் காயப்படுத்துவதற்காக, "உங்களிலிருந்தே கள்ள சகோதரர் எழுவார்கள்" (அப். 20:30). R5118:3 அவர்கள் நம்முடைய மாபெரும் எதிராளியாகிய சாத்தானிடமிருந்து வருகிற அக்கினியாஸ்திரங்களைப் போல் வருகிறார்கள். R1744:4 இதன் ஊடே பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் போன்றுள்ளவர்கள் மாத்திரமே சேதமடையாமல் கடந்து வருவார்கள். R5097:5 பொறுமையுடன் சகிப்பதற்கான சோதனைக்குள்ளாகும்போது, நாம் ஊக்கமிழக்கவும் கூடாது, நமது விசுவாசம் தளர்ந்துபோவதற்கு அனுமதிக்கவுங்கூடாது. R5802:6 இப்படிப்பட்ட

சிட்சைகள் தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பின் நிரூபணமாக இருக்கின்றன, மேலும் நாம் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டும் என்கிற அவருடைய விருப்பத்தையும் காட்டுகின்றன. SM650:1 நமது இரட்சிப்பின் அதிபதியே சோதிக்கப்படவும், பரிசோதிக்க ப்படவும், பரீட்சிக்கப்படவும், நிரூபிக்கப்படவும் அவசியமாயிருந்ததேயானால், கோபாக்கினையின் பிள்ளைகளும், அவருடைய கிருபையினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுமாகிய நாம் நம்முடைய நேர்மையைப் பொறுத்தவரையில் முழுவதுமாக நிரூபிக்கப்பட வேண்டியது அதிக அவசியமானதாயிருக் குமல்லவா. R3059:6 யூத பெயரளவிலான சபைக்கு அதனுடைய யுகத்தின் முடிவில் ஒரு சோதனை இருந்தது போல, இந்த யுகத்தின் முடிவில் ஒரு சோதனை இருக்குமென எதிர்பார்க்கிறோம். R2496:4 நம்முடைய வளர்ச்சிக்கும், நாம் அழைக்கப்பட்டுள்ள உயரிய ஸ்தானத்திற்கு நம்மைப் பொருந்தச் செய்வதற்கும் தெய்வீகக் கிருபையின் அறிவுறுத்தல்கள் எவ்வளவு அவசியமோ அதுபோல விசுவாசம், பொறுமை, அன்பு மற்றும் சகிப்புத்தன்மை என்பவைகளுக்கான சோதனைகளும் அவசியமாயிருக் கின்றன. R1744:2 சபையின் சுத்திகரிப்பின் காலமாகிய சுவிசேஷ யுகத்தின் போது, தேவன் சுத்திகரிக்கும் அக்கினியைக்கொண்டு நம்முடைய பலவீனங்களை அழித்து, சுவிசேஷ சபையைத் தமக்கென்று சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி வருகின்றார். R1316:4 யூத யுகமும் சுவிசேஷ யுகமும் சுத்திகரிப்புக்கான காலங்களாகும் (purgatories or periods of purgation). R1316:4 நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை நாம் வாங்கிக்கொள்ள வேண்டுமானால் (வெளி. 3:18), நமது களிம்பை நீக்குவதற்கும், நமது பொன்னைப் புடமிடுவதற்கும் தேவையான அக்கினிபோன்ற சோதனைகளில், கர்த்தருடைய ஒழுங்குப்படுத்துதலுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து, அதற்கு நம்மைத் தொடர்ச்சியாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருக்கிறது. R1944:2, 2971:2; NS447:5 நம்முடைய கர்த்தர் நமது கிறிஸ்தவ விசுவாசத்தை ஒரு வீட்டுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார், மேலும் இந்த யுகத்தின் முடிவில் வருகிற சோதனைகள் ஒரு பெரிய புயல் போல் இருக்கும் எனக் குறிப்பிடுகிறார், இது ஒவ்வொரு வீட்டையும் தாக்கும், இதன் விளைவாக கற்பாறையின்மீது கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் விழாமல் நிலைநிற்கும், அதேசமயம் மணலின்மீது கட்டப்பட்ட வீடுகளோ விழுந்து அழிந்துபோகும். R2496:4 இந்தச் சோதனைகளில் சில, புறம்பான (வெளியே உள்ள) எதிரிகளிடமிருந்து வருகின்றன, ஆனால் கிறிஸ்தவனுடைய மிகப் பெரிய எதிரி அவனுடைய பழைய சுயம் அல்லது மாம்சீக சுபாவமே ஆகும், இதற்கு எதிராகத்தான் அவனுக்குள் இருக்கும் புதிய ஆவி அல்லது புதிய சுபாவம் போர்புரிகின்றது. R199:4* "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." (எபி. 12:6) R569:3 "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்." (எபி. 12:11) R1744:1 "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்." (1 பேது. 1:7) "அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போல ... இருப்பார்." (மல். 3:2) "அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்." (தானி. 12:10) R1823:2 இது பிரதானமாக, இந்த யுகத்தின் முடிவில் வரவுள்ள மகா உபத்திரவத்தைக் குறிக்கிறது, சிறு மந்தையைத் தவிர மற்ற அனைவரும் இதனைக் கடந்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. NS358:5; SM726:1 நம் இருதய நோக்கங்களைப் பொறுத்தவரையில், புளிப்பு, சீர்கேடு, பாவம் என்பவைகளின் ஆவியின் ஒவ்வொரு அம்சங்களும் அழிக்கப்படுவது அவசியமாகும். NS350:3

**ஏதோ புதுமையென்று** – புதியதென்று; முன்னறிவிக்கப்படாததென்று. R2792:3, 266:6

**திகையாமல்** – தேவன் தம் குமாரனுடன் உடன் சுதந்தரராக இருப்பதற்காய் அழைக்கப்பட்டவர்களுடைய விசுவாசத்தையும், அன்பையும் கடுமையாகப் பரீட்சித்துப்பார்க்க வேண்டியது நியாயமான காரியமாகும். அவர்கள் இறுதிவரையில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். R3281:3, 1744:2 உயரிய மேன்மைக்கான தகுதியை நிரூபிப்பதற்காக நமது கர்த்தரே மிகக்கடுமையாக சோதிக்கப்பட

வேண்டியது அவசியமாயிருந்தால், நமக்கு இது நடப்பதைக் குறித்து நாம் ஏதோ புதுமையென்று திகைக்கக்கூடாது. R1263:4 நாம் ஒரு வேடிக்கை பொருளாக இருப்பதைக் குறித்து (திகையாமல்). (எபி. 10:33) R5412:4 இந்த வரவிருக்கும் கனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக களத்தில் இருக்கும் போட்டியாளர்கள் யாருமே, இப்போது தாங்கள் உட்படுத்தப்பட்டுள்ள புத்திமதி, ஒழுங்குப்படுத்தப்படுதல் மற்றும் அனுபவம் என்பவைகளின் போக்கைக் குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை. R1164:1 கர்த்தருக்குப் பிரியமானவர்களில் பலர், கர்த்தருடைய திட்டத்தை மதித்துணராதடியால், அக்கினி போன்ற சோதனைகள் தங்களைத் தாக்கும்போது, அதை ஏதோ "புதுமை" என்றெண்ணி திகைத்துவிடுகிறார்கள். R738:3

**வ. 13 – "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்."**

**திருவிவிலியம் – "மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்."**

**கிறிஸ்துவின் மகிமை** – அந்த மகிமையின் ஒரு பகுதியாக சர்ப்பம் (சாத்தான்) நசுக்கப்படும். R11:3

**வெளிப்படும்** – கிரேக்க வார்த்தை, அபோகலுப்டோ / apokalupto; திறக்கப்படும், வெளிப்படுத்தப்படும். R2979:3

**போது** – கொஞ்சக்காலத்தில், விரைவில். R11:3

**அவருடைய பாடுகள் / கிறிஸ்துவின் துன்பங்கள்** (திருவி) – சுயத்தை வெறுத்தல் எனும் பாடு. R1783:1 பாடுகள் கல்வாரியோடு முடிவடையாமல், கிறிஸ்துவின் சரீர அங்கங்களுடனும் தொடர்கின்றன. இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கையில், மாம்சத்தில் வந்த கிறிஸ்துவின் முதலாம் வருகையானது கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கிய ஒரு படிப்படியான காரியமாக இருக்கின்றது. R3192:6, 5180:4 இது ஒரேயொரு பலியாகும், அதாவது ஒரேயொரு ஆசாரியரின் ஒரே சரீரமே பலிசெலுத்தப்படுகிறது. R4965:3 நிஜமான ஆசாரியக்கூட்டத்தாரில் அனைத்து சரீர அங்கங்களும் உள்ளடங்கியிருக்கும், எனவே அவர்கள் அனைவரின் பாடுகளும் நிறைவடைவதற்கு, முழு சுவிசேஷ யுகமும் தேவைப்படுகிறது. T50 நாமும் அவருடைய மகிமையில் பங்காளிகள் ஆகும்படியாக. R5155:5 "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்." (2 தீமோ. 3:12) R5778:3 மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாகக் காணப் படுபவர்கள், அவருடைய பாடுகளில் பங்காளிகளாக இருப்பார்கள், மேலும் கல்யாண விருந்தின்போது அவருடைய மகிமையிலும் பங்கடைவார்கள். C207 கிறிஸ்துவின் பாடுகள் அவர் நன்மை செய்ததற்காகவும் சத்தியத்தினிமித்தமாகவும் அவருக்குக் கிடைத்தன, மாறாக சுய சித்தத்தைச் செய்தோ, ஆவிக்குரிய வகையில் சோம்பேறியாக இருந்தோ, தமது உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கத் தவறியோ பாடுபடவில்லை. R739:1 நாம் முதலில் பிரதிஷ்டை செய்து, அபிஷேகம் செய்யப்பட்ட வகுப்பாரில் அங்கத்தினராகாத வரையில், அபிஷேகம் செய்யப்பட்டவர்களுடைய பாடுகளில் நம்மில் ஒருவராலும் பங்குகொள்ள முடியாது. R739:2 கிறிஸ்து இயேசுவின் பலியிலும், பாடுகளிலும் பின்வரும் காரியங்களும் உள்ளடங்கியிருந்தன: அவருடைய அர்ப்பணத்தின் விளைவாக அவர் மரணபரியந்தம் அனுபவித்த ஒவ்வொரு மனம்சார்ந்த மற்றும் சரீரம் சார்ந்த வலியும், சுயத்தை வெறுத்த காரியம்; மேலும் மனிதனுக்குரிய அனைத்து பாராட்டத்தக்க மற்றும் தகுதியான இலட்சியங்களைப் பின்தொடராமல் மறுத்துவிட்ட காரியம்; சத்தியத்திற்காக சக மனுஷரிடமிருந்து அவர் சுமந்த நிந்தை; பிரசங்கத்தினிமித்தமாகவும், பிறர் நலனுக்காகவும் தமது சொந்த உயிர்ச்சக்தியைச் செலவழித்ததால் ஏற்பட்ட சோர்வு

மற்றும் மகா களைப்பு. SM651:2; R739:2 நாம் அவருடைய பாடுகளில் பங்கடைவது என்பது, தீமைக்கான தண்டனையாகவோ, தீமை இனி வேண்டாம் எனத் துறப்பதற்காகவோ வருவித்துக் கொள்ளும் பாடுகளைக் குறிக்காது, மாறாக (நாம் பாடுபடுவதற்கு நியாயமான காரணம் ஏதுமில்லாத சமயத்தில்) தவறாக, அநியாயமாய்ப் பாடுபடுவதே அவருடைய பாடுகளில் பங்கடைவதாகும். SM650:2; R739:1 உங்கள் கனத்தையும், உங்கள் சமூக அந்தஸ்தையும், உங்கள் நற்பெயரையும், உங்கள் பரந்தளவிலான பொதுமதிப்பையும் சத்தியத்திற்காக பலிசெலுத்துங்கள். SM655:1; R740:1 இந்தச் சோதனைகளில் நமக்குப் பங்கு இல்லை என்றால், நாம் சரீர அங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை எதினால் அறிந்துகொள்ள முடியும்? R5778:6 பலி என்பது நியாயமான சரியான காரியங்களை நமக்கு வேண்டாமென மறுப்பதில் அடங்கியுள்ளது. R739:3 நாம் பாடுபடுவோமானால், அது முடிந்தவரை நல்ல நோக்கத்திற்காக கர்த்தருக்கென்று இருக்கட்டும். R1783:2 நாம் மற்றவர்களின் சுயாதீனங்களில் தலையிடாதவாறு கவனமாக இருக்க வேண்டும். R1783:2 “நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.” (உரோ. 8:17) R411:3, 1782:6 கிறிஸ்துவிற்கு வந்த சோதனைகள் மட்டுமே அவருடைய பாடுகளாக இருக்கவில்லை, மாறாக சோதனைகள் அந்தப் பாடுகளில் ஒரு பகுதியாக காணப்பட்டன; மேலும் அவை அவருக்கே அவசியமானதாக இருந்தால், நிச்சயமாக அவை நமக்கு இன்னுமதிக அவசியமானதாக இருக்கும். R28:2* கிறிஸ்துவுடன் மகிமையில் உடன் - சுதந்தரத்துவத்தை அடைய வேண்டும் என்பதை எதிர்பார்த்தே, முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அவருடைய பாடுகளில் பங்கடைவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். R1563:4 சத்திய ஊழியத்தில் நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலமாக ஏற்படும் எவ்விதமான நோய்களும் அசௌகரியங்களும், நம்முடைய நேர்மைக்கும் அன்பிற்கும் சான்றாதாரங்களாக இருக்கும்படியாக, நம்முடைய பிதாவால் அனுமதிக்கப்படுகின்றன. R2007:5 பாவம் மற்றும் அதன் தண்டனையாகிய மரணத்தின் விளைவாக மனுக்குலத்தில் பொதுவாக காணப்படும் நோய் போன்றவை கிறிஸ்துவின் பாடுகளின்கீழ் வராது; மாறாக கிறிஸ்துவின் நிமித்தமான பாடுகள், அதாவது கிறிஸ்துவின் ஊழியத்தில் ஈடுபடுவதன் நிமித்தமான பாடுகள். R1782:6 சுவிசேஷத்தை வாய்வழியாகச் சொல்வதன் மூலமாகவோ, அச்சிடப்பட்ட வடிவத்தில் செய்தியைப் பரப்புவதன் மூலமாகவோ, நண்பர்களுக்கு எழுதுவதன் மூலமாகவோ, இம்மாதிரி சத்தியத்திற்கான நேரடி ஊழியத்தில் வருகிற பாடுகள். R1783:1 மாம்சம் பாடுபடும்; ஆனால் புதிய சிந்தையோ, புதிய சித்தமோ சந்தோஷப்படும். R5459:6 நம்முடைய பாடுகள், மனுஷருடைய புகழ்ச்சியைப் பெறுவதற்காக, தற்பெருமைக்கான விஷயங்களாக மாறாதபடிக்குப் பார்த்துக்கொள்வோமாக, ஒருவேளை இன்னும் கடுமையான பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் மற்ற அங்கத்தினரிடம் தொடர்ச்சியாக நம்முடைய பாடுகளைக் குறித்து முறையிடாதபடிக்கும் ஜாக்கிரதையாக இருப்போமாக. R1783:2 தோல்விகள் கூட “படிக்கற்கள்” ஆகலாம், இதன் வழியாக நாம் தேவன் மற்றும் பரலோகத்தை நோக்கி ஏறிப்போகலாம்; அவை நம்முடைய குணலட்சணத்தைப் பலப்படுத்துவதற்கும், அதிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற ஸ்திரமான உறுதிப்பாடுக்கும் வழிவகுக்கும். R5459:5

**Inasmuch as / இத்துணை** (திருவி) – அந்த அளவிற்கு (பங்காளிகளானதால்). R1563:4

**சந்தோஷப்படுங்கள்** – கர்த்தருடைய ஜனங்கள் தங்களைச் சோதனைகளிலும், உபத்திரவங்களிலும் இருக்கக் கண்டால், மனச்சோர்வடைவதற்குப் பதிலாக, சந்தோஷப்பட வேண்டும். R5459:6 இதின் அர்த்தம் நாம் உபத்திரவங்களைச் சந்தோஷமாக அனுபவிக்கிறோம் என்பதல்ல, மாறாக இவை தேவனுக்குப் பிரியமான குணலட்சணங்களை நம்மில் வளரச் செய்கின்றன என்பதை நாம் உணர்ந்துகொள்கிறோம் என்பதாகும். R5779:4 இந்த அக்கினிப் போன்ற சோதனைகள் கர்த்தர் அனுமதிப்பவையாக இருக்கின்றதே ஒழிய, கர்த்தர் அவைகளுக்குக் காரணமல்ல, மாறாக பொதுவாக எதிராளியே காரணம் என்பதை அறிந்தவர்களாய் (சந்தோஷப்படுங்கள்). R5778:6 வருங்காலத்தில்

அவருடன் ஆளுகைசெய்வதற்கு நாம் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்காக, தற்காலத்தில் கிறிஸ்துவினிமித்தம் பாடுபடுவதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்பட்டதற்காக சந்தோஷப்படுவோமாக. R740:4; SM655:2

## 89. 1 பேதுரு 5:7

### "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்."

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்** – உங்களைக் குறித்து சிந்திக்கிறவரானபடியால். R5508:3 ஒரு கிறிஸ்தவன் தான் வாழுகின்ற ஒவ்வொரு நாளும், கர்த்தரையே அதிகமதிகமாக சார்ந்திருக்க வேண்டும். R5509:2 "என் தேவன்... உங்கள் குறைவையெல்லாம் ... நிறைவாக்குவார்." (பிலி. 4:19) R3400:4 இது காகங்களைக்கொண்டு எலியாவைப் போஷித்ததில் சித்தரிக்கப்பட்டுள்ளது. தேவன் எலியாவுக்கு ஆடம்பரங்களை / வசதிகளை வழங்கவில்லை, மாறாக கட்டாயமாக தேவைப்பட்டவைகளையே வழங்கியிருந்தார். R3400:4

**அவர்மேல்** – மந்தையின் மேய்ப்பன்மேல். R2655:6

**உங்கள் கவலைகளையெல்லாம்... வைத்துவிடுங்கள்** – அச்சவுணர்வு, கவலை, மனக்கஷ்டம் / மனக்கலக்கம். R5508:3 கர்த்தருடைய ஊழியத்தில் நமக்குத் தடங்கல் உண்டுபண்ணி, கர்த்தருக்குள்ளான நமது சமாதானத்தை நம்மிடமிருந்து பறித்துக்கொள்ளுகிற கவலைகளையும் வருத்தங்களையும், அச்சவுணர்வுகளையெல்லாம், ஏதோ கவனக்குறைவாக தூக்கியெறியாமல், மாறாக கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து புத்தியோடு தூக்கியெறிய வேண்டும். R5509:2 தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள மூப்பர்களுக்கு, சீயோனின் நலன்களைக் குறித்து எழும்புகிற அனைத்து அங்கீகரிக்கப்படாத மிதமிஞ்சிய கவலைக்கான தீர்வு இதுவே. R2655:6 நாம் கவலை நிறைந்து காணப்படுவோமே யானால், நாம் தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகளாக இருக்க முடியாது. கவலைப்படுவதென்பது ஒரு காரியம், ஆனால் சரியான கவனத்தோடு / ஜாக்கிரதையோடு இருப்பதென்பது மற்றொரு காரியமாகும். R5509:4 நாம் எதிர்காலத்தைக் குறித்தும் கவலைப்பட தேவையில்லை. R2260:4 கிறிஸ்துவின் திருச்சபையாருக்குச் சொல்லப்பட்டது. R5508:3 நம்முடைய பாரங்கள் மாபெரியதோ அற்பமானதோ, எதுவாயினும்சரி, அனைத்தையும் கர்த்தரிடம் கூறிடுவோமாக. R5509:5 அனைத்து பாடுகளும், சிலுவைசுமத்தலும் சத்தியத்திற்கெதிரான உலகத்தினுடைய எதிர்ப்பினால் வருவதில்லை. R1054:4 திருச்சபையில், சகோதரர் மத்தியில், விசேஷ சோதனைகள் எதிர்பார்க்கப்படலாம் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகப் போதிக்கின்றன. R5118:3 பெரும்பாலான துன்பங்கள், நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் தீய நாட்டங்களை மட்டுப்படுத்தி, அடக்கி வைப்பதில் நாம் உண்மையாக இருப்பதினாலேயே வருகின்றன. R1054:4 நம்முடன் பாத்திரத்தில் தோய்த்து, நம்முடனேகூட கர்த்தருடைய பந்தியிலிருக்கும் தெய்வீகச் சம்பூரணத்தில் பங்குகொண்டவர்களின் வெறுப்பு, வன்மம், தீமை பேச்சு, பொல்லாத அனுமானங்கள் என்பவைகளால் நாம் சோதிக்கப்பட வேண்டியிருக்கிறது. R4208:5 எதிராளியானவனால் துன்புறுத்தப்படுவதால் கர்த்தருடைய ஜனங்களுக்கு வருகிற கவலைகளும் இருக்கின்றன. R5509:1 இதற்கொத்த வகைகளில் ஏற்படுகிற ஒரு சிறிய கவனக் குறைவும்கூட, எதிராளியானவன் உடனடியாக நம்மைச் சிக்க வைத்து, கண்ணியில் அகப்பட வைத்து, பின்னர் அவனது விருப்பப்படி நம்மைச் சிறைபிடித்து சென்றிட ஏதுவாகிவிடும். மனதிற்குள் ஊடுருவும் இந்தத் தீய சக்திகளில், அவதூறுகளையும் புறம்பேசுதலையும் ஊக்குவிக்கின்ற தீய ஆலோசனைகளும் உள்ளடங்கும் என நாம் நம்புகிறோம். R4311:2 தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் அனைவரும் முழுமையாய்க் கவலைக் கொண்டவர்கள் (care-full) ஆவார்கள். அவர்கள் கர்த்தருடைய வேலையில் அக்கறை கொண்டுள்ளனர்; இதைக்குறித்த கவலை அவர்களுக்கு இருக்கின்றது.

அவர்களால் சீயோனின் நலனுக்கடுத்த விஷயங்களில் கவலையற்றவர்களாக இருக்கமுடியாது. R2655:4

## 90. 2 பேதுரு 1:4

**"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது."**

**இச்சையினால்** – உலகப்பிரகாரமான ஆசைகள் மற்றும் இலட்சியங்கள். R1532:4, 2154:2 ஆசை / வாஞ்சை, சுயநலம். HG446:6 மாம்சத்தின் இச்சைகள். R2155:1 'Lust' / 'இச்சை' என்று நாம் பயன்படுத்தும் வார்த்தையினுடைய பொருளானது மிகப்பெரியளவில் மாறிப்போயுள்ளது. கிரேக்கப் பாஷையிலோ இது மிகவும் பரந்த பொருளைக் கொண்டுள்ளது. மூலவார்த்தையில், இது எந்தவொரு பூமிக்குரிய ஆசைஇச்சைகளையும் அர்த்தப்படுத்துகிறதாய் காணப்படுகிறது, உதாரணமாக, அதிகாரத்திற்கான ஆசை / இச்சை. Q451:5

**உலகத்திலுண்டான** – இன்னும் உலகத்தில் காணப்படுகின்ற (கேட்டுக்குத் தப்பி). R5596:6, 4840:3; A140 விசுவாச குடும்பத்திற்கு வெளியே உள்ள மனுக்குலம் இன்னும், நித்திய மரணம் எனும் ஆதி தண்டனையின் கீழாகத்தான் இருக்கின்றனர். NS6:3; 32:3, 246:6

**கேட்டுக்கு** – உலகத்தின் மீது இருக்கும் ஆக்கினை. R1286:3; NS6:3, 32:3, 246:5; SM665:1 தெய்வீக "சாபம்" அல்லது "கோபம்" நிமித்தமாக நாம் இனி மரியாமல், மாறாக நாம் நீதிமான்களாக்கப்பட்டு, அதனை தொடர்ந்து நம்மை நாம் ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பதினால், நமது மரணமானது கிறிஸ்துவின் பலியின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்படுகிறது. E410 கேட்கும் செவிகள் மற்றும் புரிந்துகொள்ளும் இருதயங்கள் அருளப்பெற்றிருக்கும் ஒரு சிலர் மட்டுமே நித்திய மரணத்தின் சாபம் அல்லது தண்டனையிலிருந்து மீட்கப்படுகிறார்கள். NS6:3, 32:3

**தப்பி** – நாம் விடுதலை அடைந்து இருக்கிறோம். R4840:3 "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்." (உரோ. 8:24) A140 "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்க ளாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப் பில்லை." (உரோ. 8:1) R1286:3, 4998:3 "உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்." (2 பேது. 2:20) E410 அவிசுவாசிகள் தப்பவில்லை. R4546:2, 4998:3

**Ye / (நீங்கள்)** – நிச்சயிக்கப்பட்ட திருச்சபை. CR215:1; HG624:1 புதிய சிருஷ்டிகள். R826:6, 1881:4, 1149:2*, 777:4, 613:4, 456:6, 217:3; E105; F62 வானத்திலும் பூமியிலும் உள்ள மற்றெல்லா சிருஷ்டிகளிலும் விதிவிலக்கானவர்கள். R1879:1

**திவ்விய சுபாவத்துக்கு** – "மணவாட்டி" அல்லது "கிறிஸ்துவின் சரீரம்," "இராஜரீக ஆசாரியக்கூட்டம்" என்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள உயர்ரக ஆவியின் சரீரம். R1510:3 ஆவிக்குரிய சுபாவத்தின் மிக உயரிய வகை. R2980:5, 5830:1, 2859:6, 823:3; A203; F62; T40, T66; HG366:6; NS455:3, 479:1, 520:6; OV24:4, 373:6; Q502:6 இதில் ஒரு முக்கிய அம்சமாக அழியாமை அல்லது தன்னில்தானே ஜீவனுடைய நிலைமை இருக்கின்றது. R1879:3, 1642:4, 569:3, 604:1*; E388; HG358:5 ஆசரிப்புக்கூடாரத்தின் பொன்னினால் அடையாளப்படுத்தப்படுகிறது. T18; HG752:2 திருச்சபையின் நம்பிக்கை என்னவென்றால், அவள் தனது கர்த்தரைப் போல மாறி, அவரது உடன் சுதந்தரராக அவரது மகிமையைப் பகிர்ந்து கொள்வாள் என்பதாகும். R5822:2, 5152:2, 4966:5,

4734:2, 4372:2, 4302:2, 3694:2, 3294:2, 2750:2, 2238:2, 2055:2, 1910:2, 1750:2; OV427:2 தேவனுடைய சுதந்தரராகவும், கர்த்தருடைய உடன் சுதந்தரராகவும், அவருடன் அவரது மணவாட்டியாக இணைந்திருப்பதற்கு. (உரோ. 8:17) R280:6, 5206:4, 4071:3, 3149:2, 2982:6, 2409:4, 2155:1, 2138:1, 1586:2, 1532:4, 1360:4, 1262:3, 1210:6*, 916:5, 828:2, 517:2*, 217:3; CR488:5; NS625:2; OV308:4 "தேவதூதரைப்பார்க்கிலும் அதிக மேன்மையுள்ள (சுபாவம்)" (எபி. 1:4). A203; R637:5, 616:2*, 329:5 சாகவே முடியாத குற்றவாளிகள் (immortal transgressors) என யாரும் இருக்கக்கூடாது என்பதற்காக, இந்தச் சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிற அனைவருக்கும் முதலில் தங்களுக்கான சோதனைகளைப் பெற்றிருப்பது அவசியமாக இருக்கின்றது. F63 எப்போதும் உண்மையுள்ளவராகவே இருந்தார் என்று நிரூபிக்கப்பட்ட லோகோசுக்கு தேவன் முதலில் இந்தச் சுபாவத்தையும், இதனோடுகூட வருகிற அனைத்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் வழங்கினது நியாயமான ஒன்றாகும். F64, 727 "என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்." (சங். 91:14) R3332:5 பரம அழைப்பு. R456:6, 2434:2, 217:3 இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது மகிமை, கனம் மற்றும் அழியாமைக் கானதாகும். R5371:2, 5711:1, 5288:2, 4784:3, 3684:2, 3528:5, 2317:5, 826:6, 569:3, 514:3; F63, 92; HG196:5, 298:4; NS481:3; SM143:1, 361:1, 682:1 பரமபிதாவைத் தவிர, தேவதூதர் மற்றும் மற்ற அனைவரைப்பார்க்கிலும் ஒரு பெரிய கனம் மற்றும் பிரகாசம். R5035:4, 5116:5, 5025:6, 2980:5, 2409:4, 2317:5, 1510:3, 1265:1, 1262:6; A186; E388; CR392:2; HG138:2, 298:5, 358:5; NS338:5, 455:3, 520:6; OV354:1 திருச்சபை ஆதாமின் சந்ததியாக இருக்கப்போவதில்லை. R5622:2 சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்கள் மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய, திவ்ய சுபாவத்திற்கு மாற்றப்பட வேண்டும். R4071:3, 5623:5, 4799:2, 3621:3, 2051:2, 1567:2, 1178:3, 1096:6*, 667:6, 613:4, 329:6, 297:5; A196; T19; HG299:5, 315:5, 366:6, 546:1; NS551:6; OV379:2; SM682:1 தேவனுக்கான நமது முழு அர்ப்பணிப்பின் உடன்படிக்கைக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் அவரைப் போலாக்கப்படுவோம், மேலும் அவர் இருக்கும் வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம். R1532:4, 1510:5 "திரைக்கு" அப்பால் இருந்த "மகா பரிசுத்த ஸ்தலமானது" திவ்ய சுபாவத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப்போகிற உண்மையுள்ள ஜெயங்கொள்பவர்களின் நிலையைக் குறிக்கிறது. T19, 66 திவ்ய சுபாவமானது நிழலான பிரதான ஆசாரியரின் மகிமைவாய்ந்த வஸ்திரங்களில் காணப்பட்ட பொன்னினால் அடையாளப்படுத்தப்பட்டது. R1944:1 பூமியிலும் பரலோகத்திலும் உள்ள மற்றெல்லா வகுப்பாரையும், மற்றெல்லா ஸ்தானங்க ளையும் விட இந்த வகுப்பாரே மேலான மகிமையைப் பெற்றிருப்பார்கள். R5711:1 இராஜாக்கள் மற்றும் ஆசாரியர் மற்றும் உலகத்தின் நியாயாதிபதிகள் என அவரது குமாரனுடனான உடன் சுதந்தரத்துவம். R3486:5 ஆவிக்குரிய தளத்தில் தேவ புத்திரராக. SM474:1; E69 நமது அழியாமை ஒரு நம்பிக்கையே அன்றி, தற்காலத்தில் யதார்த்தத்தில் (actuality) இல்லை. SM253:1 திவ்ய சுபாவத்தில் பங்குபெறும் நோக்கில் நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம். R4665:2, 145:4*; NS101:6; Q508:4 இந்த உயர்வு, தேவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது, அதிலும் அவருடைய சொந்த நிபந்தனைகளின்பேரிலேயே கிடைக்கும். R5711:1, 1515:5, 1510:5 இது நமது கர்த்தராகிய இயேசுவால் விலைகொடுத்து வாங்கப்படவில்லை, எனவே இவர் பிதாவும் அல்ல, இதைக் கொடுப்பவரும் அல்ல. R1515:5 முதலாம் உயிர்த்தெழுதலாகிய பிரதான உயிர்த்தெழுதலில், திவ்ய சுபாவத்தின் பரிபூரணத்திற்கென்று உயர்த்தப்படுவது. SM46:3; R1442:1, 1437:1; NS535:6, 551:6 இந்த விளக்கம் திரள் கூட்டத்தை விலக்கி வைக்கிறது, மேலும் இது சிறு மந்தைக்கு மட்டுமே பொருந்தும். R5166:5; Q316:5 பூமிக்குரிய சில சிறிய பதவிகளுக்கு உழைப்பதற்குப் பதிலாக, கர்த்தராகிய இயேசுவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர்கள் அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் அவருடன் சுதந்தரராகிவிடுகின்றனர். CR16:2; OV308:3 கண்ணுக்குத் தெரியாத, ஆவியின் ஜீவிகள். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச்

சுதந்தரிக்கமாட்டாது.” (1 கொரி. 15:50) R5199:5, 5263:5 பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் மகிமையான சரீரமாக வேண்டும், அவர் இப்போது “அவருடைய தன்மையின் சொரூபமும்” (எபி. 1:3) “அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள இராஜனுமாய்,” (1 தீமோ. 1:17) “சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார்.” (1 தீமோ. 6:16) R4071:3, 667:6 மனுஷர், தேவதூதர் மற்றும் இயேசு தலையாக இருக்கின்ற புதிய சிருஷ்டிகள் என்பவர்களுக்கு யாவே / யேகோவா தேவனே ஜீவன் கொடுப்பவராக அல்லது பிதாவாக இருக்கின்றார். இங்கே மூன்று சுபாவங்கள் உள்ளன – மனித சுபாவம், தூதருக்குரிய சுபாவம் மற்றும் திவ்ய சுபாவம். இவர்கள் அனைவருக்கும், யாவே / யேகோவா தேவனே பிதாவாக இருக்கிறார், ஆனால் அவர்களில் ஒருவர் மட்டுமே (கிறிஸ்து இயேசு) தேவனோடு திவ்ய சுபாவத்திலிருக்கிறார். R354:4, 816:5, 777:4 அவருடைய உயிர்த்தெழுதல்துவக்கி இயேசுவும் ஒரு தேவனானார் (a god), முன்பை விட பெரியவரானார்; சபை தங்கள் கர்த்தருடைய மகிமைவாய்ந்த சரீரத்தின் அங்கத்தினராக அவரது மகிமையைப் பெற்றுக்கொள்வதற்காய் அழைக்கப்பட்டுள்ளது. R5748:6 வெறும் நமது கடமை மற்றும் நியாயமான ஊழியத்தைச் செய்வதற்கு, கற்பனை செய்யமுடியாத மிகப்பெரிய வெகுமதியை தேவன் நம் முன் வைத்துள்ளார் – இது எதிர்கால வெகுமதியோடுகூட, மிகப்பெரிய அளவிலான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் நமக்குக் கொண்டுவரும். R4828:6, 2480:1 ஒவ்வொரு சுபாவமும் அதற்கே உரிய நிலைமைகளுடனும், சூழல்களுடனும், பூரணத்துடனும் முழு இசைவாய்க் காணப்படும் என்பதால், ஒவ்வொருவரும் அவரவர் நிலைமையிலேயே திருப்தி அடைந்து காணப்படுவார்கள். F63 நாம் திவ்ய சுபாவத்திற்கு அழைக்கப்பட்டு, ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம். ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, அவர் திவ்ய சுபாவத்தை அடைவாரா இல்லையா – திரள் கூட்டத்தில் ஒருவரா, சிறு மந்தையில் ஒருவரா – என்பதை யாராலும் (ஒரு காலமளவும்) சொல்லவே முடியாது. Q39:T, 508:4 நமது மீட்பர் புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளின் உவமையில் விளக்கினதுபோல, இந்தத் திவ்ய சுபாவத்திற்கான கதவானது விரைவில் மூடப்படும். NS803:6 ஒன்றான தேவனுடைய (the God) சுபாவம் / ஹோ தியோசின் (ho theios) சுபாவம். E71; Q770:T ஆனால் தேவனுக்குச் சமமாக இல்லை. R802:6 இந்தக் கொஞ்ச வார்த்தைகளிலேயே விஷயத்தைக் கூறுகின்ற ஒரே வசனம் இதுவாகும். R5580:4

**பங்குள்ளவர்கள்** – முதலாம் உயிர்த்தெழுதல். R5263:5, 5199:2, 4799:2, 3132:1, 2982:6, 2051:2, 1642:4, 667:5, 474:5; E105, 396; HG299:5; OV356:3, 384:T நமது கர்த்தருடைய உடன் சுதந்தரர். HG298:4 திவ்ய சுபாவத்தில் அவருடன் பங்கடைபவர்கள். R1495:1, 1112:5, 828:2, 569:3, 603:6*; E105 நமது கர்த்தருடைய புதிய வாழ்வில் அவருடன் பங்குகொள்பவர்கள். R2148:1 முழுமையாக. R1286:4*, 1149:2* நாம் பெற்றுக்கொள்ளும்படிக்கு. HG132:3; NS270:6 திரும்பக்கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பலிசெலுத்துவதன் மூலமாக. R4498:2, 382:6; A196 என்னே ஒரு பூரணமான வாக்குத்தத்தம் இங்கே உள்ளது! இது எத்துணை மகா மேன்மையும் அருமையுமாக இருக்கின்றது! R2138:1 “நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும் படி...” (யோவா. 17:22) R442:3

**ஆகும்பொருட்டு** – வாக்களிக்கப்பட்ட பரிசைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடும்படிக்கு. C220; R1112:5 நாம் ஆகும்படிக்கு. HG284:6, 196:5, 333:6, 358:5, 367:1, 446:6; NS455:3 திவ்ய சுபாவத்தில் பங்காளிகளாவதில் படிப்படியாக முன்னேற்றமடையும்படிக்கு. CR335:1 வாக்குத்தத்தங்கள் நம்முடைய இருதயங்களில் செயல்பட்டு, அவருடைய ஊழியத்திற்கு நம்மைப் பரிசுத்தப்படுத்துவதன் மூலமாக. NS520:6 தற்போதைய வாழ்க்கையில் சுபாவ மாற்றம் என்பது புதிய நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களுக்கு இசைவாக, சிந்தை மற்றும் குணலட்சணத்தின் மாற்றத்தை உள்ளடக்கினதாய் இருக்கின்றது. R3621:3, 1567:3 பரிசுத்தவான்கள் தங்களது திவ்ய சுபாவத்தின் பூரணத்திற்கு உயர்த்தப்படுவார்கள். R413:2 “தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.” (யோவா. 1:12) R5859:5, 517:5*, 280:6 அதன் மூலமாக நாம் சுயத்தையும்,

உலகத்தையும் ஜெயங்கொள்ளலாம். R1007:3 உண்மையாயிருப்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டு, அவ்வாறு ஆகும்பொருட்டு. R2940:6

**மகா மேன்மையும்** – யூத வீட்டாருக்குக் கொடுக்கப்பட்ட பூமிக்குரிய வாக்குத்தத்தங்களுக்குப் பதிலாக பரத்திற்குரிய வாக்குத்தத்தங்கள். B207; R329:6; NS64:6 வேத வாக்கியங்களில், ஒரு “சிறு பிள்ளையில்” மிகச் சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ள எளிமையோடு, “ஒன்றுக்கும் சந்தேகப்படாமல்” இந்தப் பெரிய காரியங்களை ஏற்றுக்கொள்வது என்பது கர்த்தருடைய ஜனங்களுக்கு முறையானதாக இருக்கும். HG449:1 நமது சக மனிதர்கள் அவர்களுடைய அற்பமான வெகுமதிகளுக்காகப் பெரும் துன்பங்களைச் சகிக்கத் தயாராக இருக்கும்போது, உண்மையுள்ளவர்களுக்கு தேவன் வைத்திருக்கும் விஷயங்களை முழுமையாக நம்புகிற நாம் எதையெல்லாம் சகிப்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமல்லவா? NS455:4

**அருமையுமான வாக்குத்தத்தங்களும்** – தேவனுடைய வார்த்தை. HG446:3; NS587:3; SM342:1 வார்த்தை. R1491:1 இயேசு பேசின நித்திய ஜீவ வார்த்தைகள். R3795:5 திவ்ய சுபாவம், மகிமை, கனம் மற்றும் அழியாமை என்பவைகளில் இயேசுவுடன் பங்கடைவது பற்றின அருமையான வாக்குத்தத்தம். OV290:4; T65; R5580:4, 2138:1; CR252:5; HG366:6; Q39:T, 140:3 இது இப்போது இருக்கும் வாழ்க்கை மற்றும் வரப்போகும் வாழ்க்கையுடன் தொடர்புடையதாகும்; இது நிலைநிற்க செய்து பலப்படுத்துகிறது. R5806:2 இந்த வாக்குத்தத்தங்கள், பரிசுத்தமாக்கப்படுதல் எனும் தேவனுடைய தயவுள்ள சித்தத்தை விரும்புவதற்கும், செய்வதற்கும் ஏதுவாக நம்மில் கிரியை செய்கின்றன. Q453:2; R5126:6 ஒளிரும் எழுத்துகளில், வழிநெடுக நமக்கு உதவியாக பிரகாசிக்கின்றன. R2138:5 பலி மற்றும் சுய மறுப்பு எனும் நமது அழைப்பிற்குக் கொடுக்கப்படும் ஊக்க உதவிகள் (Incentives). R2940:6 நம்மைத் தூண்டுவதற்கும், பலப்படுத்துவதற்கும், வளர்ச்சியடைய செய்வதற்குமே தேவன் இவைகளைக் கொடுத்துள்ளார், இதன் மூலம் நீதிக்காக இன்னும் உறுதியாக நிற்கவும், பாவம் எதுவோ அதை உறுதியாக எதிர்க்கவும் முடியும். SM342:1 இவற்றின் முக்கியத்துவத்தை / அர்த்தத்தை உணர்ந்து, அவற்றை உட்கொள்ளும் அளவிற்கேற்ப, புதிய சிருஷ்டியானது பலமடைகின்றது. R5889:3, 4984:1 நாம் உண்மையுள்ளவர்களாக காணப்பட்டு, தொடர்ந்து முன்னேறும்போது அவை படிப்படியாக நமக்குத் திறக்கப்படுகின்றன. C220; R1112:5 இந்த நம்பிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் மிகவும் மகிமையானவை, அவற்றுடன் ஒப்பிடுகையில் பூமிக்குரிய விஷயங்கள் அனைத்தும் முக்கியமற்றவையாக இருக்கின்றன. NS270:6 இவைகளுக்கு ஈடு இணையே கிடையாது. தேவ திட்டத்தைப் பற்றியும், அதில் நமக்குக் கிடைக்கும் சிறப்புரிமைகளைப் பற்றியும் நாம் எவ்வளவு அதிகமாகத் தெரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் உற்சாகமடைகிறோம். OV425:4 இவைகளைக்காட்டிலும் பெரிய தூண்டுதலைக் காண முடியாது. R4929:4 இவை ஏராளமாகவும், விலைமதிப்பற்றதாகவும் இருக்கின்றபடியால், இதில் எது முதலிடம் வகிக்கும் என்பதை அறிவது கடினமாக இருக்கின்றது – ஒருவேளை 1 யோவா. 3:2 ஆக இருக்கலாம். R2138:5 இந்த அற்புதமான வாக்குத்தத்தங்களின் அர்த்தத்தை நாம் எந்த அளவிற்குப் புரிந்துகொள்ள முடிகிறதோ, அந்தளவிற்கு அவை நம்மிடம், “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமான” ஆசீர்வாதங்கள் மற்றும் உதவிகள் பற்றி எடுத்துக்கூறிடும். (எபே. 3:20) SM532:1 வரவிருக்கும் நித்தியத்துடன் தொடர்புடைய இந்த வாக்குத்தத்தங்களை கர்த்தருடைய ஊழியர் சற்றேனும் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் தங்கள் இருதயங்களில் தேவனுடைய அன்பை உண்மையான அளவில் உணர ஆரம்பிக்கிறார்கள். CR16:1 சோதனைகள் எழும் போது – இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நினைவுகூருங்கள், அவை உங்களுக்குச் சொந்தமானவை என்பதை நினைவில் வையுங்கள். R5425:5 அவை நம்பிக்கையையும் தைரியத்தையும் தூண்டிவிட்டு, அதிக உண்மையுள்ளவர்களாய் / விசுவாசமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு நம்மை ஏவவும் செய்கின்றன. CR215:1; R1698:6; OV290:3 இவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக, நாம் நமது அழைப்பையும்,

தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்து கொள்ளலாம். R4665:6 இவையே நம் இருதயங்களுக்குள் நுழைகின்ற ஜெநிப்பிக்கும் சக்தியாகும், மேலும் இவையே கர்த்தர் தம்முடைய தயவுள்ள சித்தத்தை நாம் விரும்புவதற்கும், செய்வதற்கும் ஏதுவாக தமது பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் கிரியை செய்து வருகின்ற ஜெநிப்பிக்கும் சக்தியாகவும் இருக்கின்றன. Q39:T அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர் இவற்றைக் கேட்டிருக்கிறார், ஆனால் உலகத்தார் கேட்கவில்லை. SM388:2 கர்த்தர் தம் வாக்குத்தத்தங்களை அலட்சியப்படுத்த மாட்டார்; தாம் சொன்னதையெல்லாம் அவர் செய்வார். R5698:5 நமது விசுவாசம் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும், இல்லையேல் தேவனுடைய கிருபையின் செய்தியாலும், இராஜ்யத்தில் இராஜாக்களாகவும் ஆசாரியராகவும் ஆவதற்கான நமது எதிர்பார்ப்பு களாலும் நம்முடைய இருதயங்கள் அசைக்கப்படாது. HG446:3 ஆபிரகாமிடம் செய்யப்பட்ட உடன்படிக்கையில் திருச்சபையின் பங்கு. R3207:3 “சகோதரரே நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.” (கலா. 4:28) அல்லது சாராள் உடன்படிக்கை. R777:4; E105

**அவைகளினாலே** - இதன் மூலமாக - அழைப்பு மற்றும் அதன் தேவைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலமாக. A222; R271:5 இவற்றால் ஏவப்பட்டு வருகிற இலட்சியங்கள் பரிசுத்த இலட்சியங்களாக இருக்கின்றன. E257 அவைகள் உண்டுபண்ணுகிற பலம் மற்றும் தைரியத்தின் மூலமாக. C220; R1112:5, 1859:6 உண்மையான தேவபக்திக்கு இதைவிட பெரிய தூண்டுதலைக் காணவே முடியாது. R2228:6 தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாக நம் வாழ்வில் செல்வாக்கு செலுத்தும் வகையில், அவை நம் மனதில் கிரியைசெய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அவை நமக்கு வழங்கப்பட்டன. HG446:6 அவை இயேசுவிற்குச் செய்தது போலவே, நாமும் “மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவர்களாக” இருப்பதற்காக நமக்கும் அவை பலமும், ஊக்கமும் அளிக்கின்றன. (பிலி. 2:8) R297:4 இந்த வாக்குத்தத்தங்கள் உங்களில் கிரியை செய்கின்றன, ஊக்கமளிக்கின்றன, உங்களைத் தூண்டு கின்றன, மேலும் உங்களுக்கு வழியைக் காட்டுகின்றன. CR335:1; R5250:4; Q316:5 இவை நம் சிந்தையிலும் இருதயத்திலும் செயல்படுவதன் மூலமாக, நமது வாழ்க்கைப் போக்கை கிருபையின்மேல் கிருபையையும், அறிவின்மேல் அறிவையும், மகிமையின்மேல் மகிமையும் அடையும்படிக்கு மாற்றிட வேண்டும். CR34:5 தற்போதைய சோதனை காலம் முடிவடையும் போது, பரீட்சையில் நிலைநின்ற அனைத்து உண்மையுள்ளவர்களும், பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரத்திற்குரிய சுபாவத்திற்கு மாற்றப்பட்டு, வாக்குத்தத்தங்கள் மற்றும் அவற்றின் வெகுமதியாகிய திவ்ய சுபாவம் என்பவைகளின் சுதந்தரராக விலைமதிப்பில்லாதவர்களாக மாறுவார்கள். NS446:6 (நியாயப்பிரமாணத்தின் மூலமாக அல்லாமல், மாறாக,) “மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்கள்” மூலமாக திவ்ய சுபாவத்தில் பங்கடையும் வாய்ப்பு நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மாபெரும் முடிவைக் குறிக்கும் வண்ணமாகவே கர்த்தருடைய வார்த்தையும் கொடுக்கப்பட்டுள்ளது. R98:6* நம்மால் பரிசுத்த வேதாகமம் இல்லாமல் நிலைநிற்க முடியாது. CR325:3

**நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது** - உடன் பலிசெலுத்துபவர்கள். E146; R5596:6, 905:4 திருச்சபை. R5596:6, 5371:2, 4218:6, 2138:3; E146, 455 மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்; புதிய சிருஷ்டிகள். OV379:2 தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து. R4072:1, 297:5 இவை நன்றியுணர்வையும், அர்ப்பணிப்பு செய்துகொள்ளவும் தூண்டுவதற்காக வழங்கப்படவில்லை, ஏனென்றால் இவை அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டவையாகும், நம்மைப் பலப்படுத்தவும், திடப்படுத்தவும் மற்றும் அர்ப்பணிப்புக்கான நமது உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் “ஜெயங்கொள்ளவும்” உதவுவதற்காக கொடுக்கப்பட்டவையாகும். R2723:1; OV290:3 கதவு மூடப்படுவதற்கு முன் அறுவடை வேலையில் நுழைபவர்கள். C212, 220 இயேசு தமது சொந்த ஆவிக்குரிய தேவைகளை ஒருபோதும் புறக்கணிக்கவில்லை; ஏனென்றால், தம்மை ஒரு புதிய

சிருஷ்டியாக வளர்த்திக்கொள்வதே அவருடைய முதல் கடமையாக / கவனமாக இருந்தது – நமக்கும்கூட அதுவே முதல் கவனமாக இருக்க வேண்டும். SM638:T

## 91. 2 பேதுரு 1:5, 8

### வ. 5 – "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,"

**Beside this / (இதோடுகூட)** – இந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் தேவனுடைய வார்த்தையின் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் என்பவைகளைக் கட்டுவிப்பதோடுகூட. R5822:1, 5152:1, 4734:1, 4372:1, 4302:1, 3694:1, 3294:1, 2750:1, 2238:1, 2055:1, 1910:1, 1750:1; A321 இந்த நம்பிக்கை உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டுமெனில். HG446:6

**நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய்** – உண்மையுள்ள அப்போஸ்தலன் நமக்கு முன் உள்ள போராட்டத்தையும், நமது சோதனைகளின் நுணுக்கத்தையும், மாம்சத்தின் பலவீனத்தையும் கருத்தில் கொண்டவராய், கிறிஸ்தவ குணங்களை வளர்ப்பதிலும், விலைமதிப்பற்ற சத்தியங்களை நினைவில் கொள்வதிலும் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு வலியுறுத்துகிறார். R3089:6, 1627:5* "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." (பிலி. 2:12) R2155:6

**உங்கள் விசுவாசத்தோடே** – அஸ்திபாரம். R5757:2, 2154:5, 1576:6, 471:1*, 136:6* முதன்மையான தகுதி. R5460:1 குணலட்சணத்தின் அடிப்படை. R471:4* உங்கள் "அருமையான விசுவாசம்" என வசனம் 1ல் விவரிக்கப்பட்டுள்ளது. R2154:5 மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களில். R1859:6 கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் நிறைவேற்றப் பட்ட மீட்பை மையமாகக் கொண்ட தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தின்மீதுள்ள உங்கள் நிலையான நம்பிக்கை. R2154:5, 4808:5, 1114:6 "எனக் கர்த்தர் உரைக்கிறார்" என்பது எல்லா சர்ச்சைகளுக்கும் முடிவாகவும், எல்லா சந்தேகங்களுக்கும் தீர்வாகவும், ஒவ்வொரு குழப்பத்திலும் இளைப்பாறுதலான உத்தரவாதமாகவும் இருக்க வேண்டும். R4808:5, 1114:3 இந்த விசுவாசமெனும் அஸ்திபாரம் இல்லாமல், நம்முடைய எந்த நீதியும் நம்மைத் தேவனுக்கு ஏற்புடையவர்களாக இருக்கச் செய்யாது. நமது நீதியின் செயல்கள் அனைத்தும் இந்த விசுவாசத்தின்மீது கட்டமைக்கப்பட வேண்டும். R2154:5 நாம் நமது விசுவாசத்தின்படி நியாயத்தீர்க்கப்படுவோம், ஏனெனில் இந்தப் பாவ மாம்சத்தில் இருக்கும் போது தேவன் அங்கீகரிக்கக்கூடிய கிரியைகளை நம்மால் ஒருபோதும் செய்ய இயலாது. R5460:1 ஒவ்வொரு விஷயத்தில் அல்லது ஒவ்வொரு நபரின் மீது வைக்கின்ற விசுவாசம் இல்லை, மாறாக தேவன்மீதான விசுவாசம் – கிறிஸ்வின் பதிலீடு அல்லது மாற்றீடான பலியின் மூலமாக அவரது மீட்பின் திட்டத்தின்மீதும், அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்ட அவரது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் அனைத்தின்மீதுமுள்ள விசுவாசம். R4808:5, 1576:6, 1114:3 இந்த அஸ்திபாரத்தின் மீதே சிறு உபதேசங்களும், வாழ்க்கையில் செயல்பட வேண்டிய கொள்கைகளும் கட்டப்பட்டுள்ளன. R1576:6 விசுவாசம் ஒரு தொடக்கமாக மிகவும் நல்லதுதான் என்றாலும் தேவனுக்கு இதைக்காட்டிலும் அதிகமாக தேவைப்படுகிறது. HG447:1 விசுவாசம் ஒரு நல்ல காரியமாகும்; ஆனால் நற்கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும்; மேலும் சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைப்பது என்பது ஒருபோதும் அதனை பெற்றுக்கொள்ளாததை விடவும் மோசமானதாகும். R3089:6, 3090:3, 1627:5* விசுவாசம் என்பது அடிப்படையானது, மேலும் இந்தக் குணங்கள் விசுவாசத்தின்மீது கட்டப்பட்ட ஞானத்தின் வீடு போன்றதாகும். (நீதி. 9:1) R136:6* மனிதனின் தேவைகள் (கர்த்தருடைய ஜெபத்தின்) ஏழு மனுக்களில் (petitions) வெளிப்படுத்தப்பட்டுள்ளதுபோல, கிறிஸ்தவ குணலட்சணமும் விசுவாசத்துடன் சேர்க்கப்பட்ட ஏழு குணநலன்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. R136:6*

**தைரியத்தையும்** - மனவலிமை. R5757:2, 5678:2, 5460:1, 5206:6, 4808:3,4, 3168:5, 3163:6, 3089:2, 2219:6, 2155:1, 2154:5, 2037:2, 90:2; E238; HG446:6; NS746:5; OV401:4 நீதியில் குணலட்சணம் பலமடைந்து காணப்படுவது. R4808:5, 2155:1 தைரியம். R471:4* வெறுமனே தீமையிலிருந்து விலகியிருப்பதைக் காட்டிலும் அதிகமான ஒன்றை இது குறிக்கின்றது; ஆனால் உண்மையாக ஜீவித்தல், அதாவது அவரது உடன்படிக்கைக்கு உண்மையாக ஜீவித்தல் என்பதை மனப்பூர்வமாக மீறுவது என்பது பொய் சத்தியம் செய்வதற்குச் சமமாகும். R4808:5, 1114:3 இது தேவனுடனும், சக மனுஷருடனும் உள்ள நம்முடைய தொடர்புகளில் கடுமையான நேர்மையை / நாணயத்தை வளர்த்திக்கொள்வதைக் குறிக்கின்றது; இம்மியளவும் பிசகாத நேர்மை, நியாயம் மற்றும் சத்தியம் மட்டுமே தரநிலைகளாகும். R4808:5, 2155:1 உலகத்தினின்றும், அதன் ஆவியினின்றும் பிரிந்திருப்பவர்களென உங்களை அடையாளம் காட்டும் அத்தகையதொரு முதல்தரமான குண லட்சணம். R3089:6, 1627:5* சங்கீதக்காரன் இதனைச் சங். 15:2 - 5ல் தெளிவாக வரையறுக்கிறார். R4808:5 தொழில் ரீதியான விஷயங்கள் யாவற்றிலும் மிகச்சிறந்த நேர்மையினை, உண்மையினை, நாணயத்தினைக் கொண்டிருங்கள்; சமுக உறவுகள் யாவற்றிலும் உத்தமமாய் இருங்கள்; அயலானுக்கு ஊறுவிளைவிக்காதபடிக்குச் சுத்தக் கைகளையும், தூய்மையான இருதயத்தையும், கடிவாளமிடப்பட்ட நாவையும் கொண்டிருங்கள். R3089:6, 1627:4* வாழ்க்கையின் சகல விஷயங்களிலும், கர்த்தருடன் நாம் செய்த எல்லா பொருத்தனைகளிலும், எதிர்ப்பு, முரண்பாடு போன்றவற்றை உண்மையாக சகிப்பதிலும் நமக்கு மனவலிமை கொடுக்கக்கூடிய பலமான விசுவாசமாக நமது விசுவாசம் காணப்பட வேண்டும். HG447:1 எதிராளியின் தாக்குதலுக்கு எதிராக நாம் நமது விசுவாசத்தை உறுதியாக பிடித்திருப்போமேயானால், அது மனவலிமையை அதிகரிக்கச் செய்திடும் என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். R2037:2 நற்பண்புகளினுடைய (virtue) தூண்டுதல்களானது சில விஷயங்களைச் செய்யாமல் இருப்பதற்கு மாத்திரமல்லாமல், சிலவற்றைச் செய்திடுவதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது - அதாவது மற்றவர்களில் துயரங்களைத் தணித்திடுவதற்கும், துயரப்படுவார் மீது அனுதாபங்கொள்வதற்கும், வேதனையில் காணப்படுவோரை ஆறுதல்படுத்துவதற்கும் மற்றும் மற்றவர்களைத் தூக்கிவிடுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் - வாய்ப்பிற்கேற்ப யாவருக்கும் உதவிடுவதற்கும் நாடுகின்ற பரந்தமனப்பான்மையுடன் கூடிய அன்பில் நன்மைசெய்வதற்கும் தூண்டுகின்றதாய் இருக்கின்றது. R3090:1, 4808:5, 1627:3*

**ஞானத்தையும்** - கிரேக்க வார்த்தை, நோசிஸ் / gnosis. R2037:4 தேவன் குறித்த அறிவும், நம்மைப் பற்றிய அவருடைய நீதியான சித்தம் குறித்த அறிவும் அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. R2155:2, 4808:6, 1115:3; HG447:2 தேவனுடைய குணலட்சணத்தினை நாம் மிகவும் முழுமையாய்ப் பின்பற்றத்தக்கதாக, அவரது குணலட்சணம் பற்றின அறிவையும், அவரது போதனைகளுக்கு மிகவும் இணங்கி காணப்படத்தக்கதாக, அவரது சத்தியம் பற்றின அறிவையும் கூட்டிக் கொள்ளும்படிக்கு நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது. R3090:1, 1627:6*; HG447:2 விசுவாசம் உறுதியாகப் பற்றிப்பிடிக்கப்பட்டு, மனவலிமையான குணமும் இருந்தால், இது, ஆவியின் வழிகாட்டுதலின் கீழாக, உண்மையுள்ளவரை பரந்துவிரிந்த ஆழமான அறிவிற்குள்ளாக கொண்டு வரும். R2037:2 தெய்வீக வாக்கியங்களைத் தியானிப்பதில் முழு ஜாக்கிரதையாயிருங்கள் - அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான தெய்வீகமாக நியமிக்கப்பட்ட இந்த வழிவகையைப் புறக்கணிப்பது என்பது நமது சொந்த அபூரண நீதியின் தரநிலையை நிறுவி, தெய்வீகத் தரநிலையைப் புறக்கணிப்பதற்குச் சமமாகும். R2155:2, 4808:6, 1114:3 மாம்சத்தின் சுய-சித்தத்தை நாம் அழித்து, நமது கர்த்தருடைய ஆவியை மேன்மேலும் வளர்த்திக்கொள்ள வேண்டும் என்கிற நிபந்தனைகளுக்கு நாம் இணங்கும் போது மாத்திரமே ஆவியின் பரிசுத்தமாக்கப்படுதலுக்கு அறிவு மதிப்புடையதாயிருக்கும். R5570:1 "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிந்துகொள்வதற்கே நித்தியஜீவன்." (யோவா. 17:3) HG447:2 நாம் கர்த்தரிடம் வந்தபோது நாம்

பெற்றிருந்த நமது ஆரம்பக்கால அறிவும் அல்ல; உலகப்பிரகாரமான அறிவும் அல்ல. HG447:2

**கூட்டி வழங்குங்கள் (வ. 7)** – இந்த நற்குணங்கள் அனைத்தும் தேவனால் உண்மையுள்ளவர்களாக கருதப்படுபவர்களிடமிருந்து கட்டாயமாக / முக்கியமாக எதிர்பார்க்கப்படுபவைகள் என்றாலும், அவை விசுவாசம் எனும் அஸ்திபாரத்துடன் கூட சேர்க்கப்படும்போதோ, அதன்மீது கட்டமைக்கப்படுவதாலோ மாத்திரமே அவை மதிப்புக்குரியவையாக இருக்கும். R2154:5 கிறிஸ்தவ குணலட்சணத்தை வளர்ப்பது ஒரு நாளில் செய்துவிட முடியாது; மாறாக அது படிப்படியான, அநுதின மற்றும் வாழ்நாள் வேலையாக இருக்கின்றது; நற்பண்புகளுடன் நற்பண்புகளையும், குணலட்சணத்தோடு குணலட்சணத்தையும் நாள்தோறும் மணிதோறும் கூட்டிச்சேர்க்குமொரு செயல்முறையாகும். R4808:3, 5208:5, 3587:5, 3090:3, 1628:2*, 1114:5, 374:5; HG447:3 சகல குணநலன்களையும் நாம் மீண்டும் மீண்டும் கூட்டிச்சேர்த்து வர வேண்டும், இப்படியாக அவை நமக்குள் வளர்ச்சியடைந்து, ஆவிக்குரிய புதிய சிருஷ்டிகளாக நம்மை குணலட்சணத்தில் முழுமைப்படுத்தி, ஆழப்படுத்தி, விரிவுபடுத்தச் செய்திடும். R3587:5 ஒரு தனிப்பட்ட நீதியுள்ள தேவன் மீதான விசுவாசமானது, அவருக்கு எப்போதும் மகிழ்ச்சியாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்ற குணாதிசயங்களின் அம்சங்களையும், நமது இறுதி வெற்றிக்கு மிகவும் அவசியமானதாக இருக்கின்ற குணாதிசயங்களின் அம்சங்களையும் சீராக வளர்ச்சியடைய செய்ய வேண்டும். R1859:6

### வ. 8 – “இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.”

**இவைகள்** – ஆவியின் கனிகள். R5760:5, 5692:6, 4078:3; F186; NS350:5, 376:6; OV401:4 இந்தக் கனிகள் அனைத்தும். R523:6 ஆவியின் குணங்கள். E238; SM515:1 முன்பு 5 – 7 வசனங்களில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள். F185 கிறிஸ்துவ குணலட்சணத்தை உருவாக்குவதற்கு தேவையான எட்டு அம்சங்கள். R4808:4, 1114:5 மற்றக் கனிகளில்லாமல் அறிவு எனும் கனியைத் தனியே பெற்றுக்கொள்ள முடியாது. R523:6

**உங்களுக்கு** – ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள். R2487:4 கிறிஸ்துவின் நிருபம் நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டுள்ளது. R5968:4, 4809:6, 1115:4; Q235:5 பரிசுத்த ஆவியின் கனிகளை இருதயத்திலும், முடிந்தவரை வாழ்விலும் –வார்த்தைகளிலும், கிரியைகளிலும், சிந்தைகளிலும் வளரச்செய்யும்படிக்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார். R5677:1, 5899:3 என்னதான் நமக்கு அறிவு இருந்தாலும், இவைகளில் குறைவுப்பட்டால், நாம் வீணரும் கனியற்றவர் களுமாயிருப்போம். R137:4*

**உண்டாயிருந்து பெருகினால்** – நல்ல அளவில் பெருகினால். R5760:5, 5206:6 உங்களிடத்தில் அவை கொஞ்சமேனும் இருந்தாலும்சரி, அவற்றை வளர்த்திக்கொண்டே இருங்கள், இப்படியாக அவை உங்களில் மேன்மேலும் பெருகுவதோடுகூட, உங்களில் ஆளுகையும் செய்யும். R4809:4, 5570:1, 1114:6; F169; SM515:1 அவை மேன்மேலும் பெருகும்போது, பலன்கொடுக்கும்தன்மையை வளர்த்திக்கொள்வதற்கு அவை நம்மை உந்தித்தள்ளும். R2210:6 கனிகளானது வளர்ந்து பெருகும் நிலையை அல்லது அளவை அடைந்தால். Q52:5 தேவனுடைய வார்த்தையும் கிருபையும் நம்மில் சம்பூரணமாய் வாசம் செய்வதாக. R2508:5 கிறிஸ்து நமது மீட்பராகவும், இரட்சகராகவும் இருக்கிறார் எனும் விசுவாசத்துடனே கூட இந்தக் குணநலன்களில் பெருகுவதே, விழுந்துபோகாதபடிக்கு ஆத்துமாவைக் காக்கிறது. R2155:5 கர்த்தருடைய ஆவி நம்மில் உண்டாயிருந்து பெருகினால், அது நமது வியாபாரத்திலும், நமது இன்பத்திலும், நமது வீடுகளிலும், நாம் வேலைசெய்யும் ஸ்தலங்களிலும்,

நமது சமையலறைகளிலும், நமது உணவருந்தும் அறைகளிலும், நமது படுக்கை அறைகளிலும், ஏன் நமது எண்ணங்களிலும் கூட தாக்கத்தை ஏற்படுத்தும். R4929:5 மேன்மேலும் பெருகும் அன்பே (abounding love) எதிர்பார்க்கப்படுகிறது, இதுவே மேசியா இராஜ்யத்தில் பரிபூரண உட்பிரவேசத்தை அடையப்போகிற மணவாட்டி வகுப்பாராக இருப்பவர்களின் வாழ்க்கையின் சகல காரியங்களிலும் வியாபித்திருக்கும் நமது கர்த்தருடைய செல்வாக்காகவும் இருக்கிறது. R4929:6, 2487:4 மிகக் குறைந்தளவிலான பெருகுதலோடு, கர்த்தருடைய ஆவியின் ஓர் அளவை மாத்திரம் பெற்றுக்கொண்டு, சபையில் நடக்கும் விசேஷித்த சந்தர்ப்பங்கள் போன்றவற்றில், சில ஆவிக்குரிய விஷயங்களை மாத்திரம் அனுபவிப்பது தகுமா? R4929:6

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை** – மற்றும் அவரது ஊழியத்தில். R2508:5; SM515:1 ஏனெனில் அறிவுக்கென்று அதற்கே உரிய சிறப்பு இருக்கிறது. R5968:4; Q235:5

**அறிகிற அறிவிலே** – தனிப்பட்ட நெருக்கம், பரிச்சயம். R2220:1 கர்த்தரிடம் நெருங்குதல் மற்றும் அவரது ஆவியில் பங்கடைதல். NS376:6 “சத்திய ஆவி சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்தும்.” (யோவா. 16:13) E239; R385:5* பிதாவுடனும் கர்த்தராகிய இயேசுவுடனும் நெருங்கிய ஐக்கியம் கொண்டிருப்பது – அதனால் கர்த்தர் தம்முடைய கிருபையான திட்டங்கள் மற்றும் குணாதிசயங்களைப் பற்றிய அறிவை இன்னும் தெளிவாக நமக்குத் தெரிவிப்பதற்கு வல்லவராயும் சித்தமுள்ளவராயும் இருப்பார். E238 அவருடன் நெருங்கிய, நெருக்கமான பரிச்சயம் மற்றும் தொடர்பு – அதில் அவர் “வரப்போகிற காரியங்களை” நமக்குக் காண்பிப்பதன் மூலமாக தம்மை வெளிப் படுத்துவார். R523:6, 374:5 நற்கிரியைகளும், அறிவும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவை, அவற்றைப் பிரிக்க நினைப்பது வீண்; அவை ஒரே ஆவியால் உண்டானவையாகும். R523:3 அன்பிலும்சரி, எல்லா ஆவியின் கனிகளிலும் சரி, நாம் அடையும் வளர்ச்சியானது பெரும்பாலும் நமது அறிவின் வளர்ச்சியைப் பொறுத்தே இருக்கின்றது; அதேசமயம் தெய்வீகக் காரியங்களைக் குறித்த அறிவில் நாம் அடையும் வளர்ச்சியானது ஆவியின் கனிகளில் நாம் அடையும் வளர்ச்சியைப் பொறுத்தே இருக்கின்றது. E239; NS376:6 நீங்கள் அறிவில் வளருவதைப்போல வேகமாக அன்பில் வளர முடியாது; தேவனுடைய வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படியாமல், உங்களால் தயவில் வளர முடியாது. இந்த வழிகாட்டுதல், இந்த அறிவு, அவருடைய வார்த்தையில் காணப்படுகிறது. R374:5 ஓர் ஆவியின் கனியாக, அறிவானது இப்போது அடைந்திருக்க வேண்டிய அளவை இதுவரைக்கும் அடைந்திருக்க முடியாது. இந்தக் கனியின் அளவானது அது வளருவதற்காக கொடுக்கப்பட்ட வாய்ப்புகள் மற்றும் சாத்தியங்களின் அளவிற்கேற்ப வளர்ச்சியடைந்து காணப்பட வேண்டும் எனத் தேவன் எதிர்பார்க்கிறார். R524:1 பாஸ்டர் ரசல் அவர்கள் தெளிவாகக் கற்பித்தவைகளின் ஒரு சுருக்கம் இதுவாகும், மேலும் இது வேதாகம அதிகாரத்தின் மேற்கோள்கள் மூலம் நிரூபிக்கவும்பட்டுள்ளது. R5997:5*; OV443:3*

**வீணரும்** – சோம்பேறிகளாகவும், செயலற்றவர்களாகவும். Q235:5; R5968:4, 5678:2, 5208:5, 4809:4, 2220:1; F76, 185 ஒரு மனிதன் குணங்களில் கனிகொடுப்பவனாகவும், கர்த்தருடைய அறிவில் கனிகொடாதவனாகவும் இருக்க முடியாது. R523:3

**கனியற்றவர்களுமாய்** – ஆவியின் கனிகளை நாம் காணும் விகிதத்திற்கு ஏற்ப, அந்தக் கனிகளை உண்டாக்கும் ஆவியையும் காண்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். இந்த ஆவியை உடைய அனைவராலும் கிருபையிலும் அறிவிலும் வளர முடியும். R523:3; NS350:5 இப்போது நாம் எந்த அளவிலும் நமது பிரயாசத்திற்கான பலனை எதிர்பார்த்திடக்கூடாது. R1046:2 இது தேவ பிள்ளைகள் என்று கூறிக்கொள்பவர்கள் மீது வரும் உலகத்தின் ஆவியின் எதிர்மறையான தாக்கத்தால் ஏற்படுவதாகும் – தேவ வார்த்தையைத் தியானித்து, உள்வாங்கத் தவறியதன் விளைவால் ஏற்படுவதாகும். R5678:2

**உங்களை... இருக்கவொட்டாது** – சான்றளித்திடும். NS376:6 பாஸ்டர் ரசல் அவர்கள், பரிசுத்த ஆவியின் கனிகள் மற்றும் குணநலன்களின் வளர்ச்சிக்குத் தன்னையே ஒப்புக்கொடுத்ததால், கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவரில் நிறைவேறியது. R5997:5*; OV443:2*

## 92. 2 பேதுரு 1:10, 11

### வ. 10 – "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை."

**ஆகையால்** – நீங்கள் உங்களில் நிஜமான ஆவியின் கனிகளை வளரச்செய்து வருகிறீர்களா என்பதை நன்கு கூர்ந்து ஆராய்ந்து பாருங்கள், இது உங்களில் பிரதானமாக நமது கர்த்தரை அறிகிற அறிவை அதிகரிக்கச் செய்திடும் என்பதாக பரி.பேதுரு கூறுவது போலுள்ளது. R523:6

**சகோதரரே** – தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். R3587:5 இராஜ்யத்தின் சுதந்தரர் பொறுமை, விடாமுயற்சி, நற்பண்பு மற்றும் விசுவாசம் என்பவைகளைப் பெற்றிருக்கும்படிக்கு அப். பேதுரு அறிவுறுத்துகிறார். A284

**உங்கள் அழைப்பையும்** – நாம் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரராக இருப்பதற்காக அழைக்கப் பட்டுள்ளோம். R5460:2, 3585:2 மனித சுபாவத்திலிருந்து திவ்ய சுபாவத்திற்கு மறுரூபமாக்கப் படுவதற்கும், இராஜ்ய வகுப்பாரில் இடம் பெறுவதற்கும். R4794:6, 4594:4; HG359:6 "கனம், மகிமை, அழியாமைக்கும்." (உரோ. 2:7) R3913:5; HG358:5 தேவன் புதிய சிருஷ்டி என ஒன்று இருக்குமென முன்னரே தீர்மானித்திருந்தார், சிலரை அதற்கான குணலட்சணத்தை வளர்த்திக் கொள்வதற்காக அழைத்து, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்பாடும் செய்திருக்கிறார்: முழுமையான அர்ப்பணஞ்செய்து, அழைப்பை ஏற்றுக்கொள்வதும், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஊக்கத்துடன் பாடுபடுவதும் நமது தரப்பில் நாம் செய்ய வேண்டியவைகளாகும். F185 சுவிசேஷத்தின் விதிமுறைகள் இன்றியமையாத வகையில் ஓர் அழைப்புக்கான விதிமுறைகளாக இருக்கின்றன; (அழைப்பை) ஏற்றுக்கொள்ளும் காரியத்தை, கட்டாயம் என்றில்லாமல் அழைக்கப் பட்டவர்களின் விருப்பத்திற்கே விடப்பட்டுள்ளது. R2940:3 இராஜ்யத்தில் நமது கர்த்தருடனான உடன் சுதந்தரத்துவத்துக்கான இந்தப் "பரம அழைப்பானது" மிகவும் விசேஷமானதொரு அழைப்பாகும்; அது விரைவிலேயே முடிவுக்கு வரவுள்ளது, மீண்டும் அது அங்கே வழங்கப்பட மாட்டாது. R4979:1, 2622:4, 3585:2 இந்த உன்னத அழைப்பைக்கொண்டு தேவன் நம்மை அழைத்துள்ளார், மேலும் நாம் அந்த அழைப்பை ஏற்று, தேவையான முழு அர்ப்பணிப்பைச் செய்யும் தருணம்துவக்கி, அவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரத்தை, அதாவது குமாரத்துவத்தின் ஆவியை நமக்குத் தருகிறார். R3586:5 முன்மொழியப்பட்டவர்களுக்கு (அல்லது அழைக்கப்பட்டவர்களுக்கு) மட்டுமே தெரிந்துகொள்ளப் பட்டவர்களாக மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது; முதலில் விசுவாசத்தின் மூலமாக – "விசுவாசம் கேள்வியினாலே வரும்," (உரோ. 10:17) இந்த விசுவாசமானது கடந்தகால பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்படுதலையும், தேவனுடனான சமாதானத்தையும் கொண்டுவருகிறது, பின்னர் பலியிட அழைக்கின்றது. R3586:3 தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர் என்ற உண்மையைப் பற்றி நமக்கு நாமே உறுதியளிப்பதோடுகூட, அழைக்கப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப் பட்ட பாடங்களையும் – அவர்களின் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்வதற்கான அறிவுறுத்தல்களையும் கவனித்துப் பின்பற்றிடுவோமாக. R3586:3 சுவிசேஷயுகக் காலக்கட்டத்தைச் சேர்ந்த நாம், நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படிக்கு நாடுகிறவர்களாய், அதன் சிலாக்கியங்களையும் வாய்ப்புகளையும் எவ்வளவு உயர்வாக மதிக்க

வேண்டியிருக்கின்றது. R4979:1 நீதிமானாக்கப்படுதல் மற்றும் அதனை தொடர்ந்து சத்தியத்தின்மீதான நம்பிக்கையின் மூலம் கிடைக்கிற முழுமையான பரிசுத்தமாக்கப்படுதல் எனும் நிலைமைகளின்கீழாக இருப்பவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். R2941:4 பாவிகள் மனந்திரும்புவதற்கு அழைக்கப் படுகிறார்கள்; நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகள் மட்டுமே பரம அழைப்புக்கு அழைக்கப்படுகிறார்கள் – இப்படியாக அழைக்கப்பட்டு, முழு அர்ப்பணிப்பின் மூலமாக அழைப்பினை ஏற்றுக்கொள்ளுபவர்கள் மாத்திரமே “தெரிந்துகொள்ளப்பட்ட” வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகிறார்கள் – மணவாட்டி வகுப்பார் என்பவர்கள் அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமல்ல, தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ள வர்களும் ஆவார்கள். R4078:2, 5377:5, 3586:2 புறஜாதிகளிடமிருந்து அழைக்கப்பட்ட நாம், இஸ்ரயேலின் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரின் எண்ணிக்கையில் உள்ள குறைவை நிறைவு செய்யும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளோம்; மேலும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கிடையில் பிரிக்கப்படுவோம், இருப்பினும் எந்த விதியின்படி (rule) என்பதை வேத வாக்கியங்கள் காட்டவில்லை. R3586:4 “சகோதரரே (விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, அழைக்கப்பட்டவர்களே), நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டு மென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.” (உரோ. 12:1) அழைப்புக்கு இந்த முறையில் பதிலளித்தவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிறார்கள். NS372:1 கர்த்தர் அத்தகைய பாத்திரங்களைத் தெரிந்துகொள்கிறார், அத்தகைய பாத்திரங்களும் கர்த்தரைத் தெரிந்து கொள்கின்றனர், அப்படி அவரைத் தெரிந்துகொண்டு அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கவும், அவருடைய வார்த்தையின் வழிமுறைகளைப் பின்பற்றவும் முயலுகின்றனர். NS264:2 அழைப்போடு இணைக்கப்பட்டுள்ள எதுவும் கட்டாயமில்லை. தேர்ந்தெடுக்கப்படும் சிலருடன் ஒப்பிடுகையில் பலர் அழைக்கப்பட்டுள்ளனர். R4138:6, 4078:2, 3586:3, 2415:1; NS372:1, 654:1 அறுவடை வேலைகள் ஆரம்பமாகி, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேயமயம், திவ்ய சுபாவத்துக்கான “அழைப்பும்” தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. கி.பி. 1881 அக்டோபர் வரையிலும், மீட்கும்பொருளின்மேல் விசுவாசம் வைத்து, தன்னையே தேவனுக்கு ஒரு பலியாக ஒப்புக்கொடுத்த எந்த விசுவாசியுமே ஏற்றுக்கொள்ளப்பட்டவரானார். R682:2; C219 புராட்டஸ்டன்ட்டு கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்ளும் பெரும்பான்மையினருக்கு ஒரு தெரிந்துகொள்ளப்படுதல் (election) இருப்பது தெரியாது. சிலர் தேவனுடைய அழைப்பை அல்லது முன்மொழிதலை, தெரிந்துகொள்ளப்படுதலென்று (election) கருதுகின்றனர், மேலும் இந்த வசனத்தால் குழப்பமுமடைந்துள்ளனர். R3585:6

**And / (மற்றும்)** – தெரிந்துகொள்ளப்பட்ட திருச்சபையில் அங்கத்துவம் அடைவதற்காக நாம் தெரிந்துகொள்ளப்பட்டு, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவது மாத்திரம் போதாது – அந்தப் பதவிக்கான நமது தகுதியை நிரூபிப்பதற்கு நாம் பரீட்சையில் நிலைநிற்கவும் வேண்டும். NS372:2 நாம் பிரதிஷ்டை செய்துவிட்டோம் என்பதில் உறுதியாக இருப்பது மாத்திரம் போதாது – அந்த உறுதிமொழிக்கு நாம் குணலட்சணத்தையும், நேர்மையையும், உண்மைத்தன்மையையும் வெளிப்படுத்துவதும் அவசியமாகும். Ns372:2

**தெரிந்துகொள்ளுதலையும்** – பிரதான தேவ தயவிற்கு (தெரிந்துகொள்ளப்படுவது). R4809:5, 1115:1 பரலோக இராஜ்யத்திற்கு. R3585:4, 2479:5, 874:1; SM17:1 எஜமானருடன் உடன்-சுதந்தரத்துவத்தில் பங்கடைவது. R5667:4, 3585:2 இதற்காக நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டுள்ளீரகள் அல்லது முன்மொழியப்பட்டுள்ளீர்கள். R3587:5 “தேவனுடைய முன்னறிவின்படியே... தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.” (1 பேது. 1:2) “தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.” (உரோ. 8:29) R2940:6, 3587:2 தெரிந்துகொள்ளப்படுதல் (election) முடிவடைவதற்கு முன்பே, பரீட்சிக்கப்படுதல் (testing) முடிவடைவதற்கு முன்பே, சபையானது தேவனுடைய “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்” எனப்

பேசப்படுகின்றது; எப்படியெனில், அவர்கள் அழைக்கப்பட்டுள்ளபடியால், “முன்மொழியப்பட்டு, வழிமொழியப்படுதல்” என்கிற அர்த்தத்தில் அவர்கள் “தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக” இருக்கிறார்கள். HG445:3 சபை தெரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதற்காக தேவன் அவர்களை “பரம அழைப்பைக் கொண்டு அழைத்தார் (முன்மொழிந்தார்.)” அழைக்கப்பட்டவர்கள் கர்த்தருக்கென்று தங்கள் இருதயத்தை முழுமையாக அர்ப்பணிப்பதன் மூலமாக, தாங்களாகவே “முன்மொழிவை வழிமொழியும்படிக்கு” காரியமானது அவர்களிடமே விட்டுவிடப்படுகின்றது. HG445:3 இரத்தம் தெளிக்கப்படுதலின்கீழ் அல்லாமல் – நீதிமானாக்கப்படாமல், பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக அடிபணியாமல், யாராலும் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரில் ஒருவராக இருக்கவோ, தன்னுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவோ முடியாது. R3587:2, 3586:2 ஒரு மாபெரும் பரிசு கொடுக்கப்பட உள்ளது. ஒரு தெரிந்துகொள்ளுதல் போய்க் கொண்டிருக்கிறது. R5914:4 கிறிஸ்துவுக்கான மணவாட்டி, மனுக்குலத்திலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டு வருகிறாள். R4138:5; CR435:5 நமது கர்த்தருடைய முதலாம் வருகைதுவக்கி அவருடைய இரண்டாம் வருகை வரையிலான முழு கிறிஸ்தவ யுகமும், மணவாட்டியின் தெரிந்தெடுத்தல் (election) அல்லது தேர்வு (selection) நடைபெறும் காலக்கட்டமாக இருக்கின்றது. Q788:2 தற்காலத்தில் சபையொன்றை தேவன் தேர்ந்தெடுத்து வருகிறார் என்றால், அது அவர்கள் எங்கிருந்து தெரிந்துகொள்ளப்பட்டார்களோ அந்த உலகத்தின் எஞ்சியிருப்பவர்களுடைய நலன்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அவர்கள் ஊழியஞ்செய்ய வேண்டும் என்கிற நோக்கத்திற்காகவே இருக்க வேண்டும். HG445:1 இயேசு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர், இப்போது மனுஷரிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டு வருகிற நாம் “அவருடைய சரீரத்தின் அங்கத்தினராக,” தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாராக, அவருக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கப் போகிறோம், மேலும் அவரது குணாதிசய சாயலுக்கு ஒத்தவர்களாகவும் இருக்க வேண்டும். R3587:3; F187; HG445:2 தேவன் நம்மை முன்னறிந்திருக்கிறார், மேலும் ஆயிரமாண்டின்போது அவர்களுடைய மீட்பரின் கூட்டாளியாக, அவருடைய உடன் ஆசாரியக்கூட்டமாக, அவருக்குக் கீழ்ப்பட்ட இராஜாக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபை வகுப்பார் இருக்க வேண்டும் என்று முன்குறித்திருந்தார். HG445:2 மிகவும் குறைவான வர்களே கர்த்தரால் அவருடைய தெரிந்துகொள்ளப்படுதலுக்கு முன்மொழியப்பட்டுள்ளனர் (அல்லது அழைக்கப்பட்டுள்ளனர்). R3585:6 ஒரு தெரிந்துகொள்ளப்படுதல் நடந்துகொண்டிருக்கிறது – எந்தவொரு பூமிக்குரிய நியாயாதிபதியையும் அல்லது வல்லவர்களையும் விடவும் மிகவும் உயரிய பதவிக்கு, 144,000 பேர் கொண்ட வகுப்பார் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர் – எல்லா கனங்களிலும் மிக உயரியதாக இருக்கும் அவர்களுக்கான இந்தக் கனமானது சதாகாலத்திற்குமானது என உறுதியளிக்கப்பட்டுள்ளது. R3585:2, 3586:1 உலகப்பிரகாரமான தேர்தல்களில் முறையான / நியாயமான செலவுகள் (legitimate expenses) உள்ளன; மேலும் ஒவ்வொரு வேட்பாளரும் தனது வாழ்க்கையின் ஒரு பகுதியை, அதாவது, தானோ தனது நண்பரோ தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதிசெய்திட நேரம், செல்வாக்கு, பலம் மற்றும் சக்தியைச் செலவிட வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. NS264:3; R3585:3 தேவன் நம்மை முன்மொழிந்திட்ட இந்த மிக உயரிய பதவிக்கு வேட்பாளர்களாக இருக்கும் நாம், நம்முடைய சொந்த அழைப்பையும் தெரிந்துகொள்ளப்படுதலையும் உறுதிப்படுத்துவதற்கும், நமது சகோதர சகோதரிகளுக்கும் அப்பணியில் உதவுவதற்கும் நேரத்தையும், செல்வாக்கையும், மற்ற வழிவகைகளையும் உபயோகப்படுத்துவதை உலகம் ஆச்சரியத்தோடு பார்க்கிறது. நமது நேரம் வீணடிக்கப்பட்டதாக அவர்கள் கருதுகிறார்கள். R3585:3 ஒரு ஜனாதிபதி பதவியானது முழு வாழ்நாள் முயற்சி மற்றும் திட்டமிடல் மற்றும் பெரியளவில் பணத்தைச் செலவழித்தல் என்பவைகளுக்குப் பாத்திரமானதாக கருதப்படுகிறதே, அதைக்காட்டிலும், இந்தப் பரலோக தெரிந்து கொள்ளப்படுதலின் மதிப்பு எவ்வளவாய் இருக்குமல்லவா? NS264:5 ஜீவன் ஆயிரம் பலிசெலுத்தப் பட்டு, மற்ற திசை நோக்கிய பத்தாயிரம் நம்பிக்கைகளையும் குறிக்கோள்களையும் தடுத்துநிறுத்துவது என்பதெல்லாம் “தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு” வாக்களிக்கப்பட்டுள்ள கனம் மகிமை மற்றும்

அழியாமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு சிறிய செலவாக / இழப்பாக மாத்திரமே இருக்கும். NS264:6 நாம் எப்பணிக்காய் ஓடிக்கொண்டிருக்கிறோமோ அப்பணியானது ஆசாரியத்துவமும், இராஜரீகத்துவமும் சேர்ந்தது என்பதை அறிந்தகொண்ட பிறகு, நமது தெரிந்துகொள்ளுதலில் நாம் எவ்வளவாய் அக்கறையுள்ளவர்களாய் இருக்கிறோம்! HG446:1 தேவன் யாரை முன்மொழிகிறாரோ அல்லது அழைக்கிறாரோ, அவர்களுக்கு அளிக்கப்படும் கனம், ஆசீர்வாதம், உயர்ந்த மேன்மை என்பவைகளைப் பாராட்டுகிறவர்களாய் நாம் காணப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் தெரிந்துகொள்ளுதலை உறுதிசெய்வதற்கான அவர்களின் பிரயாசங்களில் இந்தப் பாராட்டுணர்வை வெளிக்காட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது. NS264:4 உண்மையும், நேர்மையுமுள்ளவர்கள் மட்டுமே இறுதியில் "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" ஆவார்கள். "அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப் பட்டவர்களும் உண்மையுள்ளவர்களும்" என்பது கிறிஸ்துவின் பள்ளியில் மிகவும் உயரிய கனங்களுடன் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் மனப்பான்மையை விவரிக்கிறது. NS372:4, 593:3, 654:5 தேவனுடைய நிலைப்பாட்டிலிருந்து பார்க்கையில், அரசியல்மீதான விருப்பத்தின்பேரில் ஏறெடுக்கப்படும் முழுப் பிரயாசத்திற்காக, அதைக்காட்டிலும் உயரியதாய் இருக்கும் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் புறக்கணிப்பதும் அலட்சியம்செய்வதும் என்பது எப்படி இருக்கிறதென்றால், குமிழிகளைப் பிடிப்பதற்காக வைரங்களைப் புறக்கணிப்பது போன்று முட்டாள்தனமானதாக இருக்கின்றது. NS265:2 தேவன் பரிசுத்தமானவர்; அவருடைய ஆவியையும், நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கும் அவருடைய மனப்பான்மையையும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பெற்றிருக்க வேண்டும். F186 கிருபையிலும் அறிவிலும் வளர்ச்சியடைவதில் அனுபவங்கள் வாங்காதவர்கள் குறைபாடுள்ளவர்களாய் இருக்கிறார்கள், மேலும் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கிடலாம் என எதிர்பார்க்க முடியாது. R3587:5 மத். 22:14 மற்றும் வெளி. 17:14ல் உள்ள "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் / chosen" என்ற வார்த்தை "தெரிந்து கொள்ளப்பட்ட" (elect) எனும் அதே கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததாகும். R3586:3, 3587:3 தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பு என ஒன்று இருந்தால், தெரிந்துகொள்ளப்படாத வகுப்பு என்ற ஒன்றும் இருக்க வேண்டும். R3587:6; F164 சிறு மந்தையின் அழைப்பும் தெரிந்துகொள்ளுதலும், தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்கு எந்த கஷ்டத்தையும், காயத்தையும் ஏற்படுத்தாது, அவர்கள் அழைக்கப் படாததால் மேலும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவதில்லை. F164 தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (elect) குறித்த வேதாகம மேற்கோள்கள். R3586:3 – 3587 தெரிந்துகொள்ளப்படாத அனைவருக்கும் தேவன் மாபெரும் நித்திய வேதனை ஸ்தலத்தை வைத்திருக்கிறார் என்கிற வசன ஆதாரமற்ற உபதேசத்துடன் தெரிந்துகொள்ளப்படுதல் உபதேசம் (doctrine of election) பெற்றிருக்கும் தொடர்பு காரணமாக, அது கனமிழந்து போயுள்ளது (disrepute). NS263:6; HG668:2 தேர்தல் வாக்களிப்புகளில் காணப்படும் நல்லெண்ணத்துடன்கூடிய நேர்மையான முயற்சிகள்பேரில் நாங்கள் அதிக மரியாதை வைத்துள்ளோம். கிறிஸ்தவமண்டலத்தின் வெகுஜனங்கள் முடிந்தவரை மிகவும் ஆரோக்கியமான கொள்கைகளுக்கும், மிகவும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட மனுஷருக்கும் வாக்களிக்க வேண்டும். NS263:1 சிறு மந்தையும் வாக்களிக்கின்றனர். இந்த விஷயத்தில் அவர்களின் மனம் மிகவும் உறுதியாக இருப்பதால், அவர்கள் ஒரே சீட்டுக்கே எப்போதும் வாக்களிக்கிறார்கள், ஆம், அவர்கள் இயேசுவுக்கே வாக்களிக்கிறார்கள். NS263:3

**உறுதியாக்கும்படி** – இது ஒவ்வொரு தனிநபரும் செய்ய வேண்டிய வேலையாகும். R5914:4 அழைப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக இணங்கி, அதனை மரணபரியந்தமும் செய்ய வேண்டியிருக்கிறது. R5876:3, 2940:3, 2415:1; SM427:2; CR433:1 நாம் கற்றுக்கொண்ட மற்றும் நம்முடைய இருதயங்கள் ஏற்றுக்கொண்ட கிருபைவாய்ந்த உன்னத அழைப்பிற்கு முழுமையாகவும் இருதயப்பூர்வமாகவும் இணங்குவதன் மூலமாக. NS771:1 ஆவியின் குணங்களை வளர்த்தி, இவ்வாறு நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் இருதய சாயலாக வளருவதன்

மூலமாக. R3586:1, 2782:2; F186 பாத்திரத்தை உண்மையாக பானம்பண்ணுவதன் மூலமாக. (மத். 26:27) R5341:3 தேவனுக்குத் தேவைப்படக்கூடிய விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் பல்வேறு சோதனைகளை (எதிர்த்து) நிற்பதன் மூலமாக. F79; R2453:4; NS372:3, 551:6 நாம் பாத்திரவான்களாகக் காணப்படுவதற்காக, குணலட்சணத்தை ஆயத்தப்படுத்துவதில் தொடர்ந்து பிரயாசப்படுவதன் மூலமாக. R5762:2, 5950:1, 4138:6 உலகம், மாம்சம், பிசாசு என்பவைகளுடன் நடக்கும் போராட்டத்தில் நாம் நம்முடைய இருதயங்களில் வெற்றி பெற்றாக வேண்டும், இல்லையேல் நமது தெரிந்துகொள்ளுதலை உறுதிசெய்யவும் மாட்டோம், மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளவும் மாட்டோம். R3586:2, 2692:6; HG446:4; NS265:6 மீட்பரின் அடிச்சுவடுகளை உண்மையாகப் பின்பற்றுவதன் மூலமும், அவருடைய ஆலோசனைக்குக் கவனமாகச் செவி சாய்த்து, அவர் அருளும் உதவியைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும். R4138:6, 3586:1 சோதனைகள், பரீட்சைகள் மற்றும் சிரமங்களின் கீழ் உண்மையுள்ளவர்களாக இருப்பதன் மூலமாக. NS624:5 தேவன் நமக்குக் காண்பித்துள்ள காரியங்களுக்கு அதிக ஊக்கத்தோடு கவனஞ்செலுத்துவதன் மூலமும், “சகோதரராக” காணப்படுகிற மற்றவர்களுக்கு உதவுவதன் மூலமும். R2875:6, 2692:6, 2453:5 தேவனுடைய ஆழமான காரியங்களைத் தெளிவாக புரிந்துகொள்வதன் மூலமாக. Q154:5 விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக. R2220:4 கர்த்தருடைய அழைப்பை ஏற்று நாம் உடன்படிக்கை செய்துகொண்ட அவருடைய ஊழியத்தில், சுயத்தைப் பலிசெலுத்தும் உடன் படிக்கைக்கு ஏற்ப நமது திராணிக்குத்தக்கதாக ஜீவிக்கும்படிக்கு. NS372:4 நாம் நிபந்தனைகளைப் புரிந்துகொள்வது முக்கியமாகும். R4796:2 நாம் ஜீவகிரீடத்திற்குப் பாத்திரவான்களாகும்படிக்கு, ஜீவனுக்கான ஓட்டத்தை ஓடுவதன் மூலமாக. OV131:1; R4810:1, 4078:3, 1468:4 தேவனுக்காக உறுதியாக நிற்பதன் மூலமாக மாத்திரமே, நம்மால் “நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிசெய்வதற்கு” எதிர்பார்த்திட முடியும். R5614:4 நாம் அடைய முடியாத ஒன்றிற்காக அவர் நம்மை வீணாக அழைக்கவில்லை. CR443:6 இவர்களுக்குத் தேவன் தம்முடைய மேலான கிருபையை அருளிடுவார். R4914:4, 4461:3 நிச்சயமாக நம்மை முன்மொழிந்த (அழைத்த) தேவன் நமது தெரிந்துகொள்ளப்படுதலுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார், மேலும் ஒத்துழைப்பும் அருளிச் செய்வார். நிச்சயமாக நம்முடைய மீட்பர் நமக்கு எல்லா உதவிகளையும் அருளுவார். (தோல்வியடைந்தால்,) நிச்சயமாக நாமே நமது தோல்விக்குப் பொறுப்பாளிகளாக இருப்போம். HG445:5 அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் எந்த விதிமுறைகளின் அடிப்படையில் அவர்களின் தெரிந்துகொள்ளுதலை உறுதி செய்யலாம் என்பதை நம்முடைய வசனப் பகுதியானது நமக்குச் சொல்கிறது. HG446:6 உலகத்தையும், அதன் வாய்ப்புகள், செயல்திட்டங்கள், குறிக்கோள்கள், நம்பிக்கைகள் மற்றும் (சிற்றி)இன்பங்கள் என்பவைகளையும் மனமுவந்து துறந்து, அதற்குப் பதிலாக வேதவாக்கியங்களில் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள பரலோக நம்பிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ளுபவர்கள். NS264:1 ஆவிக்குரிய சரீரத்திற்கான மற்றும் இராஜ்ய மகிமைகளுக்கான சுதந்தரத்தில் ஒரு பங்கினை (உறுதியாக்கும்படி) – இதற்கு நமது ஆவிக்குரிய ஜெநிப்பிக்கப்படுதல் ஒரு முன்சுவை மாத்திரமே. R3586:5; SM17:1 பரி. பவுல் அந்தக் கனத்திற்குத் தான் உறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாயிற்று எனக் கருதவில்லை; எனவேதான், அதனை “உறுதி செய்வதற்காக” அவர் அரும் பிரயாசப்பட்டார். (பிலி. 3:11) R624:3* தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்யாதவர்கள் தங்கள் அபிஷேகத்தை இழப்பதோடுகூட, திவ்ய சுபாவத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரைப் பற்றிக் கொண்டால், அவர்கள் தங்கள் நீதிமானாக்கப்படுதலைக் காத்துக்கொண்டு, திரள்கூட்டத்தில் பங்கடையலாம். R4746:4,1; CR460:6 சிலர் இராஜ்யத்தைத் தவறவிடுவார்கள், ஆனால் இரண்டாம் மரணத்திற்குச் செல்லும் அளவுக்கு முற்றிலும் விழுந்துபோயிருக்க மாட்டார்கள். CR153:1 நாம் அழைப்பின் விதிமுறைகளின் கீழாக, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், இல்லையேல் – இரண்டாம் மரணத்திற்குத் தகுதியுள்ளவர்களென –

நித்திய ஜீவனுக்குத் தகுதியில்லாதவர்களென நிராகரிக்கப்பட வேண்டும். SM178:2

**ஜாக்கிரதையாயிருங்கள்** – அதிக ஊக்கத்தோடு கவனம்கொடுங்கள். R2220:4 இந்தக் குணங்களை வளர்ப்பதற்கு. R2330:2; F691; HG401:4 இந்தக் குணங்களைக் கூட்டிச் சேர்ப்பதன் மூலமாக. R137:4* விழிப்புடனிருங்கள், மேலும், குணலட்சணம் கருகிப்போவதையும் கெட்டுப்போவதையும் தடுப்பதற்கும், புதிய சிருஷ்டியின் உயிரைப் படிப்படியாக உறிஞ்சி எடுக்கும் பொல்லாத வல்லமைகளையும் செல்வாக்குகளையும் ஊடுருவாமல் காத்துக்கொள்வதற்கும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திடுங்கள். R4809:4 தேவன் தேவையான எல்லா உதவிகளையும் வழங்கியிருந்தாலும், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள்பேரில் நாம் ஊக்கமான வாஞ்சையோடு காணப்பட்டால்தான் நாம் விழுந்துபோகாதிருப்போம் எனும்வகையில் காரியத்தை விட்டுவிட்டார். R1458:6 ஆயிரமாண்டு இராஜ்யத்தில் கர்த்தராகிய இயேசுவுடன் பங்கடைவதற்கான ஓர் இராஜரீக ஆசாரியக்கூட்டமாக, உலகத்தை ஜெயங்கொண்டு, மரணபரியந்தம் உண்மையாக இருக்கும் ஒரு சிறு மந்தையை அழைத்து தேர்ந்தெடுப்பதே கர்த்தரின் திட்டமாக இருக்கின்றது. R3586:3, 3587:5, 1574:1; HG615:4; NS263:5 “முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுங்கள்.” (மத். 6:33) R2479:5

**For / (ஏனெனில்)** – இவ்வளவு பெரிய பரிசைப் பெற்றுக்கொள்ள முடியுமா என சிலர் கேள்விக் கேட்கக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டவராய், அப்போஸ்தலன் விசேஷித்த ஊக்கமளிக்கும் வார்த்தையைக் கொடுத்துள்ளார். R3587:5

**இவைகளை** – முந்தைய வசனங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள். R2154:5; SM633:1 கிறிஸ்தவ குணாதிசயத்தை உருவாக்கும் எட்டு அம்சங்கள் / பகுதிகள் (eight elements). R4808:4, 1114:5 சர்வாயுதவர்க்கத்தின் ஒவ்வொரு பகுதியும் (எபே. 6:13 – 18) ஆவியின் ஒவ்வொரு கனியும், இப்போது இருக்கும் இந்தத் “தீங்கு நாளுக்கு,” இந்தச் “சோதனைகாலத்திற்கு” தேவையான ஆயத்தத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது. R5678:4, 2453:2; NS541:4 கிறிஸ்துவின் ஆவியை வளர்த்திக் கொள்ளுங்கள். R1698:6, 5370:4; F408; HG401:4; SM321:2 நம்முடைய கர்த்தரில் வெளிப்பட்ட அழகிய குணங்களும், ஆவியின் கனிகளும். CR152:5; R3587:5; SM321:2 இந்த மனப்பான்மையை ஜாக்கிரதையான வகையில் வளர்த்திக்கொள்ளுவது. R4809:4, 2286:6, 1114:6 நமது பரலோக குணங்களின் சேமிப்புடன் தொடர்ந்து கூட்டிச்சேர்த்திடுங்கள். R2219:6 இந்தக் குணாதிசயங்களை நிலையாக வளர்ச்சியடையச்செய்வதன் மூலமாக, நமது ஆவிக்குரிய பார்வை தெளிவடையும், மேலும் அது தேவனுடைய சத்தியத்தை இன்னும் முழுமையாக புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவிடும். R1859:6 அறிவில் வளரவளர, அதற்குரிய கடமையைச் செய்வதிலும், அதற்குக் கீழ்ப்படிவதிலும் வளர வேண்டியிருக்கும், இப்படியாக கடமையிலும், கீழ்ப்படிதலிலும் முன்னேறும்போது, தொடர்ந்து மேலும் அறிவில் வளர வேண்டியிருக்கும். E239; R2219:6 கிருபையிலும் அறிவிலும் வளர்ச்சியடைகிறோம் என்கிற ஆவியின் நற்சாட்சியை நாம் பெற்றிருந்தோமேயானால், நாம் சந்தோஷப்பட்டுக் களிகூருவோமாக, அறிவிலும் கிருபையிலும் பூரணமடையும் வரைக்கும் அதே பாதையில் தொடர்ந்து முன்னேறிடுவோமாக. E239 நம்முடைய கர்த்தர் நமக்குக் கொடுத்த அவருடைய வார்த்தையாகிய நமது கையேட்டைத் (manual) தியானிப்பதன் மூலமும், ஆவியின் பல்வேறு கனிகளையும் குணங்களையும் வளர்ப்பதன் மூலமும். SM17:1 தேவன்மீதும், நம் சக சிருஷ்டிகள்மீதுமான அன்பு. SM17:1 நீங்கள் உடன்படிக்கை செய்துள்ளதை. R200:6; NS372:4 தேவனுக்குப் பிரியமான ஒரு ஜீவ மார்க்கத்தைப் பின்பற்றிடுங்கள். SM304:3; Q52:5 தேவனுடைய வார்த்தையின் அறிவுறுத்தலின்படி கட்டமைக்கப்பட்ட குணாதிசயமானது, கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முற்றிலும் அவசியமானதாகும். R5678:5, 5307:6 கலியாண வஸ்திரத்தின்மீதான தையல்வேலைப்பாடு. SM256:1; HG449:6 நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, நமக்குக் கொடுக்கப்பட்ட

அனுபவங்களைச் சரியாகப் பிரயோஜனப்படுத்திக்கொண்டோமேயானால், அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வோம். R5460:2, 4660:2 “பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.” (2 கொரி. 7:1) R5739:6

**நீங்கள்** – புதிய சிருஷ்டிகள் – அழைக்கப்பட்டு, தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்து கொண்டிருப்பவர்கள். CR152:2,6 நாம் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியது நமது பரிசுத்தமாக்கப்படுதலாகும். “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே (உங்களைக் குறித்து) தேவனுடைய சித்தமாயிருக்கிறது.” (1 தெச. 4:3) R5677:5 புதிய சிருஷ்டிகளாக நாம் தொடர்ந்து நமது விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடினோமேயானால். R4047:4 இந்த விஷயங்களைச் சரியாக / பூரணமாக செய்வது நிபந்தனை இல்லை, மாறாக கிறிஸ்துவின் தரிப்பிக்கப்பட்ட நீதியின் மீதான நமது விசுவாசத்தோடு (இவற்றைச்) சேர்த்துக்கொண்டு, எல்லா குணங்களையும் நம்மால் இயன்றளவுக்கு வளர்த்துக் கொண்டோமெனில், நாம் விழ மாட்டோம் என்பதே காரியமாகும். R2155:6; SM395:1 தேவன் தமது வார்த்தை மற்றும் ஏற்பாடுகள் மூலமாக, அவருடைய பங்கைச் செய்தபின்னர், நமது சொந்த நடத்தையைப் பொறுத்தே பாதுகாப்பிலும் கிருபையிலும் நாம் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும். R1698:6

**If / (செய்தால்)** – ஒரு நிபந்தனை இருக்கின்றது, அதை வைத்தே சுதந்தரத்திற்கான நமது தகுதி அல்லது தகுதியற்ற தன்மை குறித்த தெய்வீக நியாயத்தீர்ப்பின் தராசானது ஏறவோ இறங்கவோ போகிறது. R2154:4

**Do / (செய்தால்)** – பரிசுத்த ஆவியின் கனிகளின் குணங்களை ஒன்றன் பின் ஒன்றாக கூட்டிச்சேர்த்து, இப்படியாக கிறிஸ்தவ குணலட்சணத்தை வளர்த்திக் கொள்ளுங்கள். R5677:1, 5460:1, 137:4*; F79; NS541:4, 576:6, 746:4 கிறிஸ்தவ குணநலன்களின் வளர்ச்சியில் மாத்திரமல்லாமல், கிரியைகள் அதிகரிக்கும்போதும் கனி உண்டாகும். R4809:6, 1115:4 நம் கால்கள் துரிதமாக ஓடி வேலை செய்யும், நம் கைகள் தேவனுடைய கட்டளையை உடனடியாக செய்யும், நம் நாவுகள் சத்தியத்திற்குச் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கும், மிகவும் ஏராளமாகவும், திறம்படவும் செயல்படுவதற்காய் வழிவகைகளை வகுப்பதில் நம் சிந்தைகள் சுறுசுறுப்பாக இருக்கும். R4809:6, 1115:4 இவற்றை நம்புவதற்கும், இவற்றை அறிக்கையிடுவதற்கும், இவற்றைச் செய்வதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. CR152:2 இது வெறுமனே நம்புவது அல்ல, வெறுமனே பிரதிஷ்டை செய்வது அல்ல, மாறாக “நீங்கள் இவைகளைச் செய்தால்” என்று அப்போஸ்தலன் கூறுகிறார். CR152:3 உங்கள் சக்திகேற்ற அனைத்தையும் செய்யுங்கள், அதைக்காட்டிலும் அதிகமானதை தேவன் எதிர்பார்ப்பதில்லை. CR152:5 தேவன்மீது அன்பு மற்றும் பக்தி மற்றும் அயலார்மீது அன்பு என்கிற இராஜரீகப் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். R2487:3 கிறிஸ்தவராகிய நமது பணி யாதெனில், சபை வகுப்பாரின் இரட்சிப்பில் தேவனுடன் ஒத்துழைப்பதாகும் – இது நித்திய சித்திரவதையிலிருந்து இரட்சிப்பு என்பதாக அல்லாமல், மரணத்திலிருந்து இரட்சிப்பு என்பதாகும். R5677:4 இவை அனைத்தையும் பிறப்பித்தல். R523:6 பரிபூரணம் என்பது தற்போதைய வாழ்க்கையில் தோராயமாக அடையப்படும் ஒன்று மாத்திரமே. பரிபூரணத்தை அடைவதற்காக நாம் ஏறெடுக்கும் நமது முயற்சியின் அளவானது, நமது உண்மைத்தன்மை மற்றும் அதைச் செய்வதற்கான ஊக்கமான வாஞ்சையின் அளவினைச் சுட்டிக்காட்டிடும். R4809:6, 1115:4 அவர் கிரியையை எதிர்பார்க்கிறார், ஆனால் பரிபூரண கிரியையை எதிர்பார்க்கவில்லை, ஏனெனில் அவர் நம் உருவம் இன்னதென்று அறிந்திருக்கிறார். CR152:3 தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தைப் போலவே கிறிஸ்தவ குணலட்சணத்தின் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தில் ஒரு தத்துவம் உள்ளது – இரண்டிலுமிருந்து எதிர்பார்க்கப்படும் விரும்பத்தக்க முடிவு யாதெனில், முதிர்ச்சி மற்றும் செழிப்பான பலனே ஆகும். R4808:1, 4096:6*, 1113:3 எந்தக்

கனியும் தோன்றவில்லையென்றால், சாகுபடி, கத்தரித்தல் போன்றவற்றில் சிறிதளவு முயற்சியே ஏறெடுக்கப்பட்டுள்ளது அல்லது எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். R1154:4 "அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால்..." (1 கொரி. 3:14) A321

**நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை** - ஏனெனில், "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது." (உரோ. 8:28) F74; R874:1 உறுதியாக நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்படுவீர்கள். R4808:4, 1114:5 நீங்கள் ஒருக்காலும் தோல்வியடைவதில்லை. நம்முடைய தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்துவதில் நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தோல்வியடைய மாட்டோம். HG447:6; NS746:5 கர்த்தருடைய வழியைப் பின்பற்றி ஒரே மெய்யான சந்தோஷத்தைக் கண்டடைகிறோம், மேலும் ஒரே உண்மையான முன்னேற்றத்தை அடையவும் முடியும். R5559:4 நீங்கள் குணலட்சணத்தில் வளர்ந்து, இந்த வழியில் உங்களால் இயன்றதை நீங்கள் சிறப்பாகச் செய்து வந்தால் (நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை). CR152:6 இதன் உட்கருத்து என்னவெனில், விழுந்துபோவதற்கான சில போக்குகளும், சில பரீட்சைகளும் காணப்பட்டாலும், தனிநபர் நிலை நிற்பதற்கு உதவும் வகையில் இந்தக் குணநல வளர்ச்சி அவசியமானதாக இருக்கும் என்பதாகும். R5677:1 குணநல வளர்ச்சியால் வலுவூட்டப்பட்ட இவர்கள்மீது கர்த்தர் எந்தச் சோதனையை வர அனுமதித்தாலும், அதில் அவர்கள் விழமாட்டார்கள். R5678:2, 862:2 ஒரு தற்காலிக வீழ்ச்சியை அடைந்தபோதிலும், பின்னர் கர்த்தர் அவர்கள்மேல் வர அனுமதிக்கும் சோதனைகளில் வெற்றி பெற்று, இவ்வாறு அவருக்கு உண்மையாயிருப்பதை நிரூபித்துக் காட்டுபவர்கள் முழுமையாக மீட்கப் படுவார்கள். R5460:4 ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டுள்ள புதிய சிருஷ்டி, தற்காலிகமாக வசிக்கின்ற மண்பாண்டமாகிய மாம்சத்தின் "பலவிதமான சோதனைகளினாலே" அவர்கள் தடுமாற / இடற வாய்ப்புள்ளது. R3587:5 நீங்கள் தடுமாறுவீர்கள் / இடறுவீர்கள், ஆனால் தடுமாற்றம் / இடறுதல் என்பது தோல்வியடைதல் என்றாகாது. CR152:6, 153:1 தெரிந்துகொள்ளப் பட்டவர்களைத் தவிர மற்ற அனைவரும் வஞ்சனைகளால் தடுமாறலாம் / இடறலாம். R1644:3 ஒரு வெற்றிகரமான போராட்டத்தைப் போரிட்டு, நமது கர்த்தருடன் அவருடைய இராஜ்யத்தையும் கிரீடத்தையும் பகிர்ந்து கொள்ளத்தக்கதாக, நம்முடைய சொந்த சரீர பலவீனங்கள் மற்றும் நெருக்கி நிற்கிற பாவங்கள் குறித்து நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். R5678:5; F190 நீங்கள் அழைக்கப்பட்ட மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான உங்கள் இறுதித் தெரிந்தெடுத்தல் உறுதிப்படுத்தப்படும். R4809:4, 1114:6 உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு தேவன் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1 கொரி. 10:13) R1699:1 நாம் விழுந்தால், அது நமது பங்கைச் செய்யத் தவறியதாலேயே ஏற்பட்டிருக்கும். R5460:2; NS546:5 சிலர் போதுமான வைராக்கியத்தை வெளிப்படுத்த மாட்டார்கள். இவர்கள் மகா உபத்திரவங்களைக் கடந்து வர வேண்டியிருக்கும். இந்த அனுபவங்களின் மூலம் அவர்கள் கர்த்தரிடம் முழு நேர்மையைக் காண்பிக்க நேரிட்டால், அவர்களுக்கு நித்திய ஜீவன் அருளப்படும். R5460:4 இறுதியான மற்றும் மிகவும் ஆழமான சோதனைகளில் ஒன்று, மேலும் முன்பு ஒருதரம் விழித்தெழுந்து ஆயுதந்தரித்துக்கொண்டவர்களில் பெரும்பாலானோர் விழுந்துபோகக்கூடியதுமான சோதனைகளில் ஒன்று யாதெனில் அது சகோதர சகோதரிகள் பேரிலான அன்பிற்கான சோதனையே ஆகும். R2453:4 ஏறக்குறைய "விழுந்துபோகும்" அனைவருமே, முதலில் எல்லா பயத்தை இழந்து, தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாறுகிறவர்களாய் இருக்கிறார்கள். R3596:5 இதுவே நீண்ட காலமாக, "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுவார்கள்" (சங். 91:7) என முன்னறிவிக்கப்பட்ட காலமாகும், ஏனெனில், அவர்கள் தேவையான குணலட்சண வளர்ச்சியைப் புறக்கணித்துள்ளனர், வஞ்சிக்கப் பட்டுள்ளனர். R5678:4, 2450:3; NS95:6 அவிசுவாசிகளுக்காகவோ அல்லது சிறந்த தேவாலய கட்டிடங்களைக் கட்டுவதற்காகவோ பணம் திரட்டவும், தேவாலய கண்காட்சிகள் மற்றும் கேளிக்கைகள்

போன்றவற்றை ஏற்படுத்தவும் முயற்சிசெய்யும் நபர்கள், குணலட்சணத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை மதித்துணராமல், நம்மைச் சுற்றிலும் விழுந்துகொண்டிருக்கிறார்கள். R5678:5

### வ. 11 – "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்."

**நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய** – வரவிருக்கும் மகிமைகளைப் பற்றிய சிந்தனை மட்டுமே உலகத்திற்கும் அதின் கவலைகளுக்கும், அதின் சோதனைகளுக்கும், அதின் மடத்தனங்களுக்கும், அதின் (சிற்றி) இன்பங்களுக்கும் மேலாக நம்மை உயர்த்தியிருக்கின்ற தேயானால், நாம் பரிபூரணமாகவும், நமது கர்த்தரைப் போலவும் மாறி, அவருடைய மகிமையைப் பகிர்ந்துகொள்ளும்போது, நிஜங்கள் நமக்கு இன்னும் எவ்வளவுக்கதிகமானதை அர்த்தப் படுத்துமல்லவா! F728

**நித்திய இராஜ்யத்துக்குட்படும்** – எனவே இது இன்னும் எதிர்காலத்திற்குரியதாய் இருக்கின்றது. A284; NS541:5 ஆயிரமாண்டு இராஜ்யம். NS541:5 பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இரட்சிப்பை எடுத்துச் செல்லும் தெய்வீக வாய்க்கால். R5307:6 இதுவே பரம அழைப்பின் பந்தயப்பொருளாகும். R2154:1 கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பகிர்ந்துகொள்வதற்காக அழைக்கப்பட்ட விஷயமாகும். R5677:2, 3587:6 நாம் தேவனுடைய நீதியை நாடி கண்டடைந்தோமேயானால், அவருடைய இராஜ்யத்தையும் கண்டடைவோம். R2804:6* அந்த இராஜ்யத்தில் ஒரு பங்கினை அடைந்துவிடுவதே நமது குறிக்கோளாக இருக்கக்கடவது! R5570:4

**பிரவேசம்** – அவ்வாறு செய்வதால். R2782:2 எஜமானருடைய குணாதிசயங்கள் நம்முடைய இருதயங்களில் ஆழமாகப் பதிந்தபிறகு. Q235:4; R5968:4, 137:1* தங்கள் விசுவாசத்துடனே கூட ஆவியின் அனைத்து குணங்களையும் கூட்டிச்சேர்ப்பவர்கள் இராஜ்யத்தில் பூரணமாய்ப் பிரவேசிப்பார்கள். R32:3*, 4078:3, 137:1*; F691; HG668:4; NS546:4, 733:1 இது நமது தெரிந்துகொள்ளப்படுதலின் மகத்தான நிறைவையும், நமக்கான இராஜ்ய கனங்களையும் மகிமைகளையும் குறிக்கின்றன. HG447:6 தேவ குமாரனுடைய சாயல்களைப் பெற்றுள்ளவர்கள் மாத்திரமே மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைவார்கள். R4929:6, 2453:4 வரவிருக்கும் இராஜ்யத்தில் கிறிஸ்துவோடு பெற்றிருக்கும் மகிமையான சுதந்தரம். R5677:4 இராஜ்யமானது பெந்தெகொஸ்தே நாளன்று அதன் கரு அல்லது ஆயத்த வடிவத்தில் நிறுவப்பட்டதே தவிர, வேறெந்த வகையிலும் நிறுவப்பட்டதாக அப்போஸ்தலன் கருதவில்லை. HG368:4

**உங்களுக்கு** – உண்மையுள்ளவர்கள். SM584:1 இராஜரீக ஆசாரியக்கூட்டத்தார். R2490:2, 2782:2 சிறு மந்தை மாத்திரமே இதனைப் பெற்றுக்கொள்வார்களே ஒழிய மகா உபத்திரவத்திலிருந்து வெளிவரும் திரள்கூட்டத்தார் அல்ல. NS371:6

**பரிபூரணமாய்** – இருதயமெனும் தோட்டத்தில் தழைத்தோங்கும் பரிசுத்த ஆவியின் கனிகளும், பூக்களுமே ஒரு கிறிஸ்தவனை ஆயத்தப்படுத்தும். R5899:4 நாம் கர்த்தருடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டோமேயானால், அவர் தம்மை அன்புகூருகிறவர்களுக்கு வாக்களித்துள்ள மகிமையான காரியங்கள் – "மகிமை, கனம் மற்றும் அழியாமை" – நமக்கு வழங்கப்படும். R3587:6 அனைத்து ஜெயங்கொண்ட சிலுவை வீரரின் தலையின்மேல் வெற்றிமகுடங்கள் சூட்டப்படும்போது, சகல பரலோக சேனைகளின் மத்தியில் ஒரு மகிமைவாய்ந்த வரவேற்பும், மகிழ்ச்சியான வாழ்த்துதலும் இருக்கப்போகின்றன. R2154:2 ஒரு நல்ல போர்ச்சேவகனாக கடினத்தன்மையைச் சகிப்பதற்கான பெலத்திற்காக, அநுதினமும் தாழ்மையுடன் தேவனை நோக்குகின்ற மிகவும் பெலவீனமான

பரிசுத்தவானுக்கும்கூட, கிருபை மற்றும் மகிமையின் இந்தப் பரிபூரணமான சுதந்தரமானது கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. R2154:3 "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்." (வெளி. 19:7) "இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் துதிப்பார்கள்." (சங். 45:17) C193

**அளிக்கப்படும்** – அருளப்படும். R5968:4; Q235:4 ஏற்றகாலத்தில். F692 தற்கால சுவிசேஷ யுகக் காலப்பகுதியானது, தேவன் ஆயிரமாண்டில் பொதுவாக உலகத்திற்கான தம்முடைய ஊழியராகப் பயன்படுத்தபோகிறவர்களை தெரிந்தெடுக்கவும், அவர்களைப் பயிற்றுவிப்பதற்கும் மாத்திரமான காலப்பகுதி ஆகும். R2490:2, 3586:3 முழுமையாக நீதிமானாக்கப்பட்டால், அந்த மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான உங்களின் இறுதித் தெரிவானது உறுதியாக்கப்படும். R4809:4, 1114:6 தெரிந்துகொள்ளப்படுபவர்களுடைய சொந்த மாம்சத்தின் அபூரணங்களுக்காக (அபூரணம் என்பது அவர்கள் விரும்பிப் பெற்றிருக்கும் காரியம் அல்ல), அவர்கள் கடிந்துகொள்ளுதலுடனும் கண்டனங்களுடனும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்; மாறாக அவர்களது இருதயத்தின் குணலட்சணம் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டு, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். R3587:6

## 93. 1 யோவான் 1:9

### "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

**நம்முடைய பாவங்களை** – மனப்பூர்வமாக செய்யப்படாத தவறுகளையும் குறைபாடுகளையும். R2235:4, 5938:4, 5903:1, 4932:1; Q656:4 குற்றங்கள். Q656:4 நம்முடைய மாம்சத்தில் எந்தப் பூரணத்துவமும் வாசஞ்செய்வதில்லை. R5939:6, 5750:3, 5440:1, 2721:3, 2236:5 எந்தளவுக்குச் சித்தமானது பாவத்தினை நிகழ அனுமதிக்கவிட்டதோ, அது ஒரு கணமென்றாலும் கூட, அது மன்னிக்க முடியாததாகும், மேலும் எந்தளவுக்கு அதற்குப் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோமோ அந்தளவுக்கு நாம் அடிகளை, அதாவது, சிட்சைகளை வாங்க தயாராக இருக்க வேண்டும். R1985:4 சாவுக்கேதுவான பாவத்தையும், கிறிஸ்துவின் புதிய நீதியின் வஸ்திரத்தைப் பயன்படுத்துவதையும் அப்போஸ்தலன் இங்கே குறிப்பிடவில்லை. அவை அனைத்தும் கடந்த காலத்தில் செய்யப்பட்டாயிற்று. SM724:3; NS358:1 ஆதி பாவமாகிய ஆதாமுக்குரிய பாவத்தைக் குறிப்பிடவில்லை. Q656:4 இந்தக் கொள்கையானது மேசியாவினுடைய ஆளுகையின்போதும் பொருந்துகிறதாயிருக்கின்றது. முதலில் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றிலிருந்து மனம்திரும்பிட வேண்டும், இல்லையேல் ஒருவராலும் பரிசுத்த பெரும்பாதையில் முன்னேற முடியாது. R4931:6 இவ்வாறு கிறிஸ்து, மனுஷர்முன்பாக அவர்களுடைய பாவங்களை வரிசையாக வைப்பார், அவர்கள் தங்கள் பாவங்களை மனப்பூர்வமாய் அறிக்கையிட்டு, யோசேப்பின் சகோதரரைப் போலவே, தங்கள் அவமானங்களைச் சுமக்க வேண்டியிருக்கும். R1646:4 "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." (ஏசா. 1:18) R13:4

**நாம்** – கிறிஸ்து இயேசுவில் நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். R5938:1, 5939:4, 2236:1, 2235:1, 1654:3, 769:3 கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கத்தினராக இருப்பதற்காய் இப்போது தேவனால் அழைக்கப்பட்டுள்ளவர்கள். R4931:6 திருச்சபை. Q656:4 அவிசுவாசிகளின் உலகத்தையோ, பொதுவான "பாவிகளையோ" குறிக்கவில்லை. R5938:1, 4931:6, 2235:1

**அறிக்கையிட்டால்** – நாம் அறிக்கையிட்டால் மாத்திரமே. R5939:2, 2235:6 நம்முடைய அன்றாட குற்றங்கள் கர்த்தரிடம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும், மேலும் மன்னிப்பு வேண்டப்பட்டு, அதனை பெற்றுக்கொள்ளவும் வேண்டும். R5440:1 இந்தப் பாவ அறிக்கையானது, இன்னும் தேவனுடைய பிள்ளைகளாக மாறாத உலகத்துடன் தொடர்புடையதில்லை. R4931:6

**பாவங்களை நமக்கு மன்னித்து** – விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் கிறிஸ்துவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக மாறியவர்கள் – அவர்கள் முழுமனதுடன் செய்யாத குற்றங்கள் அனைத்தையும் மன்னிக்க தேவன் ஒப்புக்கொண்டுள்ளார். R4932:1, 2822:3 தெய்வீகத் தயவு மற்றும் மன்னிப்பதற்குத் தயாராய் இருப்பது என்பவைகளின் இந்த நிச்சயமானது, நம்முடைய இருதயங்களில் கனிவுறச்செய்யும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன, இது பாவத்தைத் தவிர்ப்பதற்கும், கர்த்தருடன் ஐக்கியங்கொள்வதற்கும் நம்மை மிகவும் கவனத்தோடு இருக்கச் செய்திடும். R5939:3, 2235:6 மாம்சத்தின் பலவீனம் மற்றும் தூண்டுதலின்பேரில் (temptation), சித்தத்திற்கு விரோதமாக பாவத்திற்குள்ளாக இடறிவிழுவதென்பது, ஓர் இடறுதலாகவே கருதப்பட வேண்டும், அதிலிருந்து மீண்டெழுவதற்கான எல்லா நம்பிக்கையுமுள்ளது. R3260:4 நாம் குளிராயாவது வெதுவெதுப்பாயாவது இருப்போமேயானால், ஊக்கமான வைராக்கியத்தை வளர்த்திக்கொள்வோமாக, நம் மீது கர்த்தர் பாராட்டியுள்ள கிருபையை அவ்வப்போது எண்ணிப்பார்த்து, நம்முடைய இருதயங்களில் புனித அன்பின் சுடரை அனல்மூட்டிவிடுவோமாக. R2388:4 நாம் கர்த்தரிடம் சென்று மன்னிப்பை வேண்டிட வேண்டும், மேலும் எதிர்காலத்தில் அவ்வாறு செய்யாதபடிக்குப் பார்த்துக்கொள்வோம் என்கிற நமது உள்நோக்கத்தைக் குறித்து அவருக்கு உறுதியளிக்க வேண்டும். Q656:4

**எல்லா அநியாயத்தையும் நீக்கி** – இயற்கையான மாம்சீக அபூரணங்கள் மற்றும் குறைபாடுகள். SM724:2; NS165:1, 358:1 பாவம். R5938:4, 2235:4 பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவத்தைத் தவிர (மத். 12:31 – 32); இந்த யுகத்திலோ வரப்போகும் யுகத்திலோ மனுபுத்திரரின் எல்லாவித பாவங்களும் மன்னிக்கப்படும். Q280:7; R5105:6 பாதி பெலவீனத்தினாலும், பாதி மனப்பூர்வமாயும் செய்யப்படும் கலப்பான பாவத்தின் (mixed sin) போக்கானது சாவுக்கேதுவான பாவத்தை (mortal sin) நோக்கியே வழிநடத்திடும் என்பது தெளிவாகிறது. R1985:4

**நம்மைச் சுத்திகரிப்பதற்கு** – நம் மாம்சத்தின் அபூரணங்களை உணர்ந்து, மன்னிப்புக்காக தொடர்ந்து விண்ணப்பஞ்செய்தால், அவர் நம்மைப் பாவத்திலிருந்து சுத்திகரிப்பார். R5938:5, 2235:4; NS165:1 நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்கு. பெரும்பாலும் கண்ணீர்கள் மற்றும் பாடுகள் மூலமாக நிறைவேற்றப்படுகிற ஒரு படிப்படியான செயல்முறையாகும். சட்டப்பூர்வமான வழியில் நமது பாவங்கள் மற்றும் குற்றங்களைத் தள்ளுபடி செய்வது மாத்திரமல்ல (நம்மைச் சுத்திகரிக்கவும் செய்கிறார்). Q656:5 நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்வதன் மூலமாக தேவனுடைய அன்பில் நம்மை நாம் காத்துக்கொள்ளலாம். R5440:1 சட்டப்பூர்வ நீதிமானாக்கப்படுதலைப் பின்தொடர்ந்து வருகிற இந்தச் சுத்திகரிப்புச் செயல்பாட்டில்தான், நீதிமானாக்கப்பட்ட விசுவாசி கடந்தகால பாவத்தின் சில மோசமான விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்; அவர் முந்தி எதனை விதைத்தாரோ அவ்விதைப்பினுடைய பலனை அறுவடை செய்ய வேண்டியிருக்கும். R1654:3

**நீதியும் உள்ளவராய்** – ஏனெனில் கிறிஸ்து மரித்தார். R3281:5 சர்வவல்லவர் நீதியின் மொத்த உருவமாகத்தான் இருக்க வேண்டுமென்பதை நம்மால் உடனடியாகக் காண முடிகின்றது. R4931:3 தேவனுடைய சித்தமானது நீதியைக் கேட்டது, மேலும் அவர் தாம் நீதியுள்ளவராக அதேசமயம் இயேசுவை விசுவாசித்து அவருடைய சீஷராகி, அவருடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்தொடருபவர்களை நீதிமான்களாக்குகிறவராயும் இருக்கக்கூடிய ஒரு வழியையும் திறந்துவைத்தார்.

R4931:3, 5903:1, 769:3; HG299:2 கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் மரணத்தின் சாபத்திலிருந்து நம்மை மீட்டதினால். R3656:3 இயேசு நமக்காகத் தேவன் முன்பாக பிரசன்னமாகியிருப்பதால், தேவன் நம் பாவங்களை மன்னிப்பதில் நீதியுள்ளவராக இருக்கின்றார். நம்முடைய மீட்பர் நம்முடைய பரிந்துபேசுபவராகவும் மாறியிருக்கிறார். NS243:6; R5939:4, 4931:6, 2236:1 நீதியைத் திருப்திப்படுத்தும் மீட்கும்பொருள் வழங்கப்படுவதற்கு முன்னமே, விதிக்கப்பட்ட தண்டனையிலிருந்து அவர் நம்மைத் தப்பிக்க அனுமதித்திருப்பாராயின் அது எவ்வாறு அவரை அநீதியுள்ளவராய் ஆக்கியிருக்கக்கூடுமோ, அதுபோல, அவருடைய சொந்த ஏற்பாட்டின் மூலமே நம்முடைய அபராதமானது செலுத்தப்பட்ட பிறகும்கூட, ஒருவேளை அவர் நமக்கு திரும்பக்கொடுத்தலை தடைசெய்திருப்பாரேயாயின், அதுவும் அவரை அநீதியுள்ளவராய் ஆக்கியிருக்கக்கூடும். A157 கிறிஸ்துவின் பலி "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாக" (1 யோவா. 2:2) ஏற்றுக்கொள்ளப்பட்டதால், அனைவரும் விடுதலையாக வேண்டியிருக்கிறது. R252:2; 5939:4, 2236:2

**இருக்கிறார்** – தேவன் நம்மேல் அவருடைய அன்பைப் பாராட்டினார், இத்தகைய அவருடைய அன்பே அவரை நாடுவதற்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய வாஞ்சிப்பதற்கும் நம்மை நெருக்கி ஏவுகின்றதாய் இருக்கின்றது. R4931:3

## 94. 1 யோவான் 2:5

**"அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்."**

**அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவன்** – தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களால் மாத்திரமே அதைக் கைக்கொள்ளவும், தக்க வைத்துக் கொள்ளவும், அது எதிர்பார்க்கும் தேவைகளைச் சந்திக்கவும் முடியும். R4897:4 அவன் தேவனுடைய வார்த்தையை அன்புகூருவான், மேலும் அந்த வார்த்தையின் தாக்கத்தை / அழுத்தத்தைத் திருப்பிவிடுவதிலும், திரித்துவிடுவதிலும், அதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்வதிலும் பிரியப்படாமல், மாறாக அதனை கைக்கொண்டு, அன்புடன் பேணி, அதற்கு கீழ்ப்படியவே நாடிடுவான். R2649:1 தேவனுடைய வார்த்தையைக் கொண்டு நம்முடைய ஜீவியங்களையும், நம்முடைய எல்லா செயல்களையும் ஒழுங்குப்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். R5276:5 வார்த்தையை உறுதியாகப் பற்றிக் கொள்பவர்களே "ஜெயங்கொண்டவர்களாக" இருப்பார்கள். R4897:4 இந்தக் கீழ்ப்படிதலுக்கான பரீட்சையானது நாம் புதிய சிருஷ்டிகளாக இருக்கின்றோமா இல்லையா என்பதை நிரூபிக்கின்றது. R5939:6, 4897:4, 2236:5 கர்த்தருடைய வார்த்தை நமக்கு முன்வைப்பவைகளைப் பிடித்துக் கொள்வதைக்காட்டிலும் நாம் ஏன் உலகத்தையும் மாம்சத்தையும் பிடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான பல்வேறு காரணங்களையே நாம் எல்லாப் பக்கங்களிலுமிருந்தும் கேட்க நேரிடும். R4897:4

**தேவ அன்பு** – அன்பு என்பது தேவனைப் பற்றிய தெளிவான அறிவினை அடிப்படையாகக் கொண்டது, அவர் சொன்னதை முழுமையாக மதித்துணரும் மாயமில்லாத விசுவாசத்தினை அடிப்படையாகக் கொண்டது. R5276:6 இது தேவனில் மிகவும் பரிபூரணமாகப் பிரதிபலிக்கின்ற அன்பாகும் – இது தூய்மையானதும், எல்லா சுயநலமும், எல்லாக் கறைகளும் நீங்கப்பெற்றதாகவும் இருக்கின்றது – தேவனுடைய அன்பே அவருடைய குணலட்சணத்தின் அடிப்படை கொள்கையாக இருக்கின்றது. R5276:5 தேவனுடைய சித்தத்தைச் செய்ய பிரியப்படுமளவுக்கு எவர் தேவனுடன் மிகவும் இசைவாக

காணப்படுகின்றார்களோ, அவர்கள் தங்களில் தேவ அன்பு ஏராளமாக பெருகி இருக்கின்றது என்பதற்கான சான்றினைப் பெற்றிருக்கிறார்கள். R2648:6

**பூரணப்பட்டிருக்கும்** – இந்த அன்பு நம்மில் பூரணப்படுவது, தேவன் அன்புகூருவது போல் நாமும் அன்புகூருவோம் என்பதைக் குறிப்பதாய்த் தோன்றுகிறது. R5276:6 கீழ்ப்படிதலே பரீட்சையாயி ருக்கின்றது. நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளும் அளவிற்கேற்ப தேவனுடைய அன்பு நம்மில் பூரணப்படுத்தப்படுகின்றது. R4897:5

## 95. 1 யோவான் 3:1

**"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை."**

**தேவனுடைய பிள்ளைகள்** – கிறிஸ்தவர். R761:2 நாம் அவருடையவர்கள்; மகிமையின் இராஜா நமது அனுபவங்களை மேற்பார்வையிட்டு வருகிறார். R4465:6 தேவன் நம்மை தமது ஊழியராகவும் ஸ்தானாபதிகளாகவும் இருந்து சாட்சி கொடுப்பதற்கான சிலாக்கியத்தை நமக்களித்துள்ளார். B264 புத்திரர் பூரணப்படுத்தப்பட்டு வருகிறார்கள், அதேசமயம், உலகம் அதைப் புரிந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கக்கூடாது. R50:3* "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே." (உரோ. 8:17) R4465:6, 2352:1

**நமக்கு** – அர்ப்பணிக்கப்பட்ட புதிய சிருஷ்டிகள். R991:2; NS79:2

**பாராட்டின அன்பு** – கிரேக்க வார்த்தை, அகாபே / agapee, தன்னலமற்ற அல்லது தெய்வீக அன்பு. கர்த்தர் மற்றும் அவருடைய ஜனங்கள் சம்பந்தமாக பயன்படுத்தப்படும்போது மிக உயரிய வகையிலான அன்பே பயன்படுத்தப்படும். R3949:2 தேவன் உலகத்தாருக்காய்க் கொண்டிருக்கும் அன்பிலிருந்தும் ஏற்பாட்டிலிருந்தும் வேறுபட்டதாயிருக்கிற, தம்முடைய பரிசுத்தவான்களுக்காக தேவன் கொண்டிருக்கும் விசேஷித்த அன்பும் ஏற்பாடும். R1254:5 நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மீது அவர் கொண்டிருந்த அதே அன்பு நம்மீதும் காட்டப்படுகிறது என்பதை அறிவது நம்மை ஆச்சரியப்படுத்துகின்றது. R5082:6, 2466:4 நமது கர்த்தர் பிதாவின் அன்பை முழுமையாக வெளிப்படுத்தினார். R5082:6, 2466:4 "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." (யோவா. 16:27) R5082:6 இருதயத்தை ஆண்டு, அதைக் காத்துக்கொள்ளுகிற தேவனுடைய சமாதானமானது பிரமாதமான மருந்தாக மாத்திரமிராமல், ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த மருந்தாகவும் இருக்கின்றது என்கிற உண்மையை, உலகப்பிரகாரமான மருத்துவர்களும், அவநம்பிக்கையுள்ளவர்களும் கூட, உணர்ந்து வருகிறார்கள். R2083:5

**பாருங்கள்** – கிரேக்க வார்த்தை, ஈடான் / eidon, கருதுவது, தெரிந்துகொள்ளுவது, புரிந்துகொள்ளுவது. A278; R837:3 அதைப் பற்றி நீங்கள் எப்போதேனும் நினைத்துப்பார்த்ததுண்டா? அன்பான தேவனுடைய குமாரராகவும், குமாரத்திகளாகவும் இருப்பதற்காயும், தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக சுவிகரிக்கப்பட்டு, இயேசுவை நமது மூத்த சகோதரனாகக் கிடைக்கப்பெற்று, பரலோக இராஜ்யத்தின் அனைத்து மகிமைகளையும் அவருடன் பகிர்ந்துகொள்வதற்காயும் அழைக்கப்பட்டதை நினைத்துப்பாருங்கள். R31:3*

**உலகம்** – நாம் சுவிசேஷத்தை வாழ்க்கையின் 'முழுக் கவனத்தையும் கவர்ந்துகொள்கிற' கருப்பொருளாக மாற்றினபடியால். A347 உலகத்திற்கு இது ஓர் இரகசியமாகவே உள்ளது. R368:6; A85; NS399:6 அவர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ளவே முடியாது. CR410:2 பொதுவாக உலகம்

அதிகமதிகமாக நாத்திகமாக மற்றும் மதச்சார்பற்றதாக வளர்ந்து வருகிறது. NS328:1

**அவரை அறியாதபடியினாலே** - குருவை / எஜமானரை. R5439:3 முன்னோடி மற்றும் அதிபதி (Captain). R3797:6; NS61:6 தேவன் அனுப்பிய மாபெரிய சமயப் போதகரையும், மீட்பரையும் அவர்கள் அறியவில்லை. R4755:1 இயேசு என்பவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர், உன்னதமானவரின் குமாரன் என்பதையெல்லாம் உலகம் அறியவில்லை. பிதாவின் வலது பாரிசத்திற்கு அவர் மிகவும் உயர்த்தப்பட்டிருக்கிறார் என்பதையும் அறியவில்லை. CR132:1 சீஷன் தன் எஜமானருக்கு மேலானவனாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது. R2556:5

**Because / அறியாதபடியினாலே** - அதே காரணத்திற்காக. A85; R962:2 மனுஷரின் பெரும்பான்மையினருடைய மனதை “இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்... குருடாக்கினான்.” (2 கொரி. 4:4) R1653:2; NS331:5

**நம்மையும் அறியவில்லை** - புதிய சிருஷ்டிகளாக. F437; R368:6; NS51:3, 337:1 கிறிஸ்துவின் உடன்-சுதந்தரராக. A85 அவரது சரீரத்தின் அங்கங்கள், அவரது பலியின் பாகங்கள். F467; R5455:3; NS79:2 நம்மைப் புரிந்துகொள்ளுவதில்லை. R1653:2, 991:2 நம்மைப் புரிந்துகொள்ளுவதில்லை, உணருவதில்லை / பாராட்டுவதில்லை. HG264:5; NS61:5; OV359:6 கிறிஸ்துவுடன் நாம் எழுப்பப்பட்டுள்ளோம் என்கிற மாற்றத்தைக் குறித்து எதையும் புரிந்துகொள்ளுவதில்லை. NS337:1 நாம் மறைந்திருக்கும் கர்த்தரிடம் ஒன்றுபட்டிருப்பதை அவர்கள் உணரவில்லை என்பதால். R3797:6 “உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.” (கொலோ. 3:3) NS639:4 தேவனுடைய பரிசுத்தவான்கள் பொதுவாக மாபெரியவர்களாக, செல்வாக்கு மிக்கவர்களாக இருப்பதில்லை. OV194:5 ஒரு சிறு மந்தையின் தேர்வானது தேவதூதராலும் மனுஷராலும் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகும், எனவே அது ஓர் இரகசியமாக இருந்தது, இன்னும் அப்படியாகத்தான் மனுக்குலத்திற்கு இருந்து வருகிறது. R4398:5, 1653:2; NS399:6 மாபெரிய மத போதகர்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அங்கீகரிக்கவில்லை. R4755:1 தங்களைச் சபைகள் என்று கூறிக்கொள்ளும் எந்தச் சபைகளிலும் ‘கிறிஸ்துவின் திருச்சபையானது’ காணப்படுவதில்லை என்பதை உலகம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. OV359:6 திருச்சபை கிறிஸ்துவின் அங்கத்தினராய் இருக்கின்றனர் என்கிற உண்மையும், தத்துவமும் உலகிற்கு ஒரு மறைக்கப்பட்ட இரகசியமாகும். OV124:1; NS337:1 உலகம் சிறு மந்தையை அசுத்தத்தின் ஒரு பகுதியாகவும், துடைத்தெறியப்படுகிற அழுக்காகவும், கிறிஸ்துவின் நிமித்தமான பைத்தியங்களாகவும் கருதுகிறது. R4133:6, 962:2; A347; SM9:1 இப்போது நம்மிடம் இருப்பது கசப்பான முன்சுவையாகும்; ஆனால் இதனோடு கூட உலகம் கொடுக்க முடியாத சந்தோஷமும் இருக்கிறது. R4841:6 ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளாக இது உண்மையாக இருந்து வருகிறது - கிறிஸ்துவும் சபையும் இராஜ்யத்தின் ஆரம்பக்கருவாக மாத்திரமே இருந்து வந்துள்ளனர். R5455:3; NS79:2 இந்தப் புதிய சிருஷ்டிகள் அனைவரும் தேவனுடைய குமாரராக இருக்கின்றனர், இருப்பினும் தேவனுடனான உறவில் அவர்கள் மற்றவர்களிடமிருந்து எல்லா விதத்திலும் வேறுபட்டவர்களாய் இருக்கிறார்கள் என்பதை உலகம் புரிந்துகொள்ளவில்லை. R5439:3; CR132:1; NS51:2, 337:5 நாம் ஏன் நம் சித்தத்தைக் கர்த்தருக்குப் பலியிட வேண்டும் அல்லது அர்ப்பணிக்க வேண்டும் என்பதற்கான எந்தக் காரணத்தையும் அவர்கள் காண்பதில்லை. NS51:2 மனுஷரிடையே மிகவும் உயர்வாக மதிக்கப்படும் சிலர், தேவனுடைய பார்வையில் உயர்வாக மதிக்கப்படுவதில்லை; வேறு சிலரோ மனுஷரிடையே மிகவும் உயர்வாக மதிக்கப்படாதவர்களாய் இருப்பார்கள், ஆனால் தேவனால் மிகவும் உயர்வாக மதிக்கப்படுவார்கள். R5259:1 கிறிஸ்துவின் சரீரமாகிய மெய்த் திருச்சபையானது மனுஷரிடையே வெறுக்கப்படுகிற ஒன்றாய் இருக்கின்றது. NS682:4 மனத்தாழ்மை இருந்தால், நமக்காக பெரிய காரியங்கள் செய்யப்படுவதையோ அல்லது விசேஷித்த கவனம் கொடுக்கப்படுவதையோ எதிர்பார்க்க மாட்டோம். R4466:6, 2556:4 எத்தனை தரம், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கவும், தீமையை நன்மையால் வெல்லவும்

முயற்சிக்கும்போது, நாம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, நமது நோக்கங்கள் இழிவுபடுத்தப் படுகின்றன. R255:2 நம்மை அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்காக நாம் ஏறெடுக்கும் பிரயாசங்கள் தொடர்பாக நமக்கு வரும் நிந்தனையான பழிச்சொற்கள் மற்றும் தவறான சித்தரிப்புகளில் நாம் பங்காளிகளாவதில் அதிக திருப்தி அடைவோமாக. NS557:4 யோசேப்பின் சகோதரர் தங்கள் சகோதரன் பஞ்சத்திலிருந்து தங்களைக் காப்பாற்றுபவராகவும், எகிப்தியரின் மீட்பராகவும் இருப்பார் என்கிற உண்மையைப் பார்க்காத குருடராக இருந்தனர்; அதேபோல மேசியா மூலமாகத்தான் எவருக்கும் நித்திய ஜீவன் கிடைக்கும் என்பதை உலகமும் உணருவதில்லை. R5215:3 கர்த்தருடைய சரீரத்தின் கடைசி அங்கத்தினர் கர்த்தருடைய பரோஷியா / parousia குறித்தும், அவருடைய இராஜ்யம் சமீபித்துவிட்டது என்பது குறித்தும் அறிவிக்கும்போது, விசுவாச வீட்டாரின் பார்வையில் அச்செய்தியில் ஓர் அழகு தென்படுகின்றது, ஆனால் உலகத்திற்கு அப்படி இருக்காது. R3762:5 மனுக்குலத்தின் பெரும்பான்மையினருடைய சிந்தைகள் தற்சமயம் இவ்வாறு தான் உள்ளது. NS468:2 சிலரால் மாத்திரமே நமது செய்தியை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும், அதேசமயம் நாம் நமது ஸ்தானாபதித்துவத்தை உலகிற்கு முன்பாக பிரஸ்தாபப்படுத்திக் காண்பிக்க வேண்டியதில்லை. NS466:1

## 96. 1 யோவான் 3:2, 3

**வ. 2 – "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்."**

**இப்பொழுது** – அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் உண்மையில் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள். R4932:3; Q665:1 நமது அபூரண நிலையிலும் கூட. HG449:2 இந்தப் பாக்கியமான உறவை நாம் ஏற்கனவே அனுபவித்து வருகிறோம். CR109:2 சாதகமற்ற சூழல்களாலும், அபூரண நிலைமைகளாலும் இடையூறுக்கு ஆளாகியிருந்தாலும், கர்த்தக்கு உண்மையாய் இருப்பவர்கள், அர்ப்பணிக்கப்பட்டவர்கள். NS527:2 ஆனால் இன்னும் மகிமைப்படுத்தப்படவில்லை. NS187:5

**தேவனுடைய பிள்ளைகளாய்** – பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். F365; NS458:5 அர்ப்பணத்தின் மூலமாக நாம் அவருடன் இந்தப் பாக்கியமான ஐக்கியத்திற்குள்ளாக வந்துள்ளோம். CR109:2; R4932:3; Q665:1 தற்போது கருதப்பட்ட வகையில்; தேவ கிருபையால் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாவதற்கு" எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (2 பேது. 1:4) E69; R5317:1, 4014:6, 2843:5 கரு நிலையில். R5317:1; CR432:1; Q405:4 நமது தற்போதைய குமாரத்துவம் என்பது தற்காலிகமானதாகும். நமது தகுதிகாண் சோதனையில் (probationary trial) தேர்ச்சி பெற்ற பிறகே உண்மையான குமாரத்துவம் தொடங்கும். R5317:1, 4014:6; Q405:4 நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவது ஒரு புதிய ஜீவனின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இயேசுவிட மிருந்து அல்லாமல், மாறாக பிதாவிடமிருந்தே நாம் அந்தப் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். R5623:5 கிறிஸ்துவின் மூலமாக தம்மிடம் வந்த அனைவரையும் தேவன் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, அவர்களை ஏற்றுக்கொள்கிறார். தற்காலப் பிரயாணத்தின் இறுதிவரையிலும், தற்கால பலியின் இறுதிவரையிலும் இவர்கள் அவருடைய சொந்தமாக்கிக்கொள்ளப்பட்ட பிள்ளைகளாகத் தொடருவார்கள். R3203:6 மனித சுபாவம், தூதருக்குரிய சுபாவம் மற்றும் திவ்ய சுபாவம் எனும் மூன்று வெவ்வேறு சுபாவங்களுக்கும் – யாவே / யேகோவா தேவனே பிதாவாக இருக்கிறார், ஆனால் அவர்களில் ஒருவர் மட்டுமே (கிறிஸ்து இயேசு மட்டுமே) தேவனுடைய அதே திவ்ய சுபாவத்தில் காணப்படுகிறார். R354:5, 1052:5*, 816:5 கிறிஸ்துவின் மூலம் அவருடன் உடன்படிக்கை உறவுக் குள்ளாக வந்தவர்கள் மட்டுமே தேவனை "எங்கள் பிதாவே" என்று அழைக்க உரிமையுள்ளவர்கள்.

R5219:1; CR499:5 ஆதாமுக்குப் பிறகு, இயேசுவே தேவனுடைய முதல் குமாரனாக இருந்தார்; மேலும் நமது ஆண்டவர் காலந்துவக்கி திருச்சபை தேவனுடைய பிள்ளைகள் என்றழைக்கப்பட்டு வருகிறது. R5623:5 ஒரு குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்பட்ட ஒரு குழந்தை அக்குடும்பத்தின் பெயரைத் தரித்துக் கொள்வது போலவே, தெய்வீக முன்மொழிவை ஏற்றுக்கொண்டபோது நாமும் தேவனுடைய பிள்ளைகள் என்ற பெயரை நம்மேல் தரித்துக்கொண்டோம். R4014:5 இந்தத் தேவனுடைய பிள்ளைகளில், புதிய சிருஷ்டி தேவனுடைய பார்வையில் விசேஷமான ஒன்றாக காணப்படுகின்றது. மாம்சம் இங்கே அவ்வளவு முக்கியமில்லை. R5624:2 இயேசு தம்மை தேவனுடைய ஒரு குமாரன் என்று சொன்னபோது, இதனால் அவர் தம்மை தாமே ஒரு தேவனாக ஆக்கிக்கொள்கிறார் அல்லது தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராக்கிக்கொள்கிறார் என்று யூதர்கள் நினைத்துக்கொண்டதால், அவர்கள் அவரைக் கல்லெறியப் பார்த்தார்கள். R301:3 “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனே... நம்மை... ஜெநிப்பித்தார்.” (தமிழில் – 1 பேது. 1:3, 4) R301:3, 474:1 “அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.” (யோவா. 1:12) R1005:5 விசுவாசத்தின் மூலமாக, பின்தொடர்ந்து வரும் மகிமையில் பங்கடைவது. SM147:2 மணவாட்டி வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் தங்கள் உயிர்த்தெழுதலில் ஒரு புதிய சுபாவமாகிய திவ்ய சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள். R1510:5, 752:4*; NS551:6, 610:4; OV353:2; SM154:3 யூதர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கவோ அல்லது அவரை தங்கள் பிதா என்று அழைக்கவோ பயந்தார்கள்; நமது கர்த்தருடைய மரணத்திற்குப் பிறகு, சில காலம் கழித்துதான் அவர்களுடைய விசுவாசம் அந்தச் சிலாக்கியத்தைப் புரிந்துகொண்டு, அதனை அப்பியாசப்படுத்த ஆரம்பித்தது. R5219:2 (தற்காலத்தில்) உலகத்தால் தேவனை தங்கள் பிதா என்றழைக்க முடியாது. CR499:5

**இருக்கிறோம்** – பரிசுத்தவான்கள், உண்மையிலேயே அர்ப்பணிக்கப்பட்டவர்கள். R1006:2 அவரது சரீரம். R659:5*, 447:5* மீட்பின் மீதான விசுவாசத்தாலும், ஜெயம்கொள்வதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கிருபையின் வாக்குத்தத்தங்கள் மீதான விசுவாசத்தாலும், பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கான வாஞ்சையினாலும் தேவனுடைய பிள்ளைகளெனக் கருதப்படுகிறோம். R1006:3, 197:2; NS336:2

**இனி எவ்விதமாயிருப்போமென்று** – நாம் எதிர்காலத்தில் எப்படி இருப்போம் என்று. R360:6 எவ்வளவு மகிமை வாய்ந்தவர்களாய் இருப்போம் என்று. SM619:1, 154:3; HG449:2; NS187:2 உயிர்த் தெழுதலில். R1996:1 உயிர்த்தெழுதலின் மாற்றத்தில் நமது மகிமையும் மேன்மையும் எவ்வளவு பெரியதாய் இருக்கும் என்று. NS256:5; SM154:3 கர்த்தர் நமக்கு வாக்களித்த புதிய உயிர்த்தெழுதலின் சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது நாம் எப்பேர்ப்பட்ட மாற்றத்தை அனுபவிப்போம் என்று. F365; R66:5*; HG390:1; SM532:1 “நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.” (1 கொரி. 15:51) R5299:2, 5589:6, 4914:3, 3075:3, 2798:6, 1873:5, 1693:1, 1496:6, 952:6, 242:2; E299; HG145:2; NS458:5; SM154:3 நாம் அழியாதவர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும், ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுள்ளவர்களாகவும் இருப்போம். R3174:6, 5416:6, 2587:5, 1996:4, 1952:6 ஓர் ஆவியின் ஜீவி எவ்வளவு பிரமாண்டமானது மற்றும் மகிமை வாய்ந்தது என்பது நமக்குத் தெரியாது. CR109:3 மனித மூளையின் புரிந்துகொள்ளும் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்குமளவிற்கு புதிய நிலைமைகள் மிகவும் வித்தியாசமாக இருக்கும். R5103:5, 242:2; F694; HG367:1 ஒரு மனித ஜீவி ஓர் ஆவியின் ஜீவியிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றபடியால், வேத வாக்கியங்கள் அதைக் குறித்து நமக்கு விளக்கமளிக்கக் கூட முயற்சிக்கவில்லை. OV353:2 பரத்திற்குரியவைகளைக் காட்டிலும், (மனுக்குலத்திற்குக் கிடைக்கப்போகும்) திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப் பற்றிய தெளிவான யோசனைகள் மற்றும் கூர்மையான புரிந்துணர்வுகள் நமக்கு இருப்பது இயற்கையானதே. R3891:3 யுகத்தின் முடிவில் அவர்கள் தங்கள் மாற்றத்தை அனுபவிக்கும் காலம் வரையிலும், திருச்சபை அவரை விசுவாசத்தின் கண்களால் மட்டுமே பார்க்க முடியும். R5589:6, 127:6*, 102:6*;

C305; F694; NS638:4 ஏற்றவேளையில், நமது கர்த்தரைப் போல முழு வளர்ச்சியடைந்த ஓர் ஆவியின் ஜீவியாகப் பிறக்கும் வரையிலும், பரத்திலிருந்து ஜெநிப்பிக்கப்பட்ட இந்தப் புதிய ஜீவனானது, ஆவிக்குரிய ஊட்டச்சத்தை ஜீரணிப்பதன் மூலமாக தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கும். R5580:1, 1511:5 குமாரராக பூரணமாகும்போது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நமது சுவிகாரம் நிறைவடையும்போது. R2843:5, 69:4*

**இன்னும் வெளிப்படவில்லை** – நமது மனித புரிதலுக்கு (இன்னும் வெளிப்படவில்லை). B108 ஓர் ஆவிக்குரிய சரீரம் என்றால் என்ன, அதேபோல நமது கர்த்தர் இப்போது எவ்வாறு இருக்கிறார் என்பவை (இன்னும் வெளிப்படவில்லை). B128; A182; R5547:5, 578:5, 454:1, 277:4, 206:1 அவரது இரண்டாம் வருகையின் போது நமக்கு வரும் மகிமை மற்றும் ஆசீர்வாதத்தின் முழு நிறைவு. R2352:1, 1262:3; HG334:3; SM361:1 அது எப்படியாக இருந்தாலும்சரி, அது மாம்சம், இரத்தம் மற்றும் எலும்புகளால் ஆனது அல்ல என்பதையும், அது பரத்திற்குரியதாயும், வானத்திற்குரியதாயும் ஆவிக்குரியதாயும் இருக்கும் என்பதையும் நாம் அறிவோம். A182; B128 உயிர்த்தெழுதலில் நமக்கு வாக்களிப்பட்டுள்ள புதிய சுபாவத்தின் மகிமைவாய்ந்த நிலைமைகளைப் பற்றிய யதார்த்தம் நமக்குத் தெரியாது. NS458:6 இது நமது தற்போதைய மாம்சீக சரீரத்திலிருந்து மிகவும் வித்தியாசமான ஒன்றாக இருக்க வேண்டும். R454:1

**ஆகிலும்** – இருப்பினும் தற்கால ஜீவியத்தில் தேவனுடைய பரிசுத்தவான்களின் நிலை. NS822:4

**அவர் வெளிப்படும்போது** – நமது மீட்பர் மற்றும் தலைவர். R5317:1; Q405:4 நமது ஆண்டவரும் குருவும், தேவனுடைய ஒரேபேறான குமாரனுமானவர். NS256:5 அவரது இரண்டாம் வருகையின் போது, வல்லமையிலும் மகா மகிமையிலும் வெளிப்படும். R4675:3, 4966:5, 1881:6; CR117:4, 424:3*; PD71/85 அப்போஸ்தலர், மரணத்தின் போதல்லாமல், மாறாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயே மகிமையை எதிர்பார்த்தனர். HG334:3 "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்." (கொலோ. 3:4) R1881:6, 1669:3, 98:5*; HG334:3 ஓர் ஆவிக்குரிய சரீரத்தின் தன்மை / சுபாவத்தைப் பற்றி மிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. ஆனால் அப்படிப்பட்டவர்கள் செய்த பல விஷயங்களை நாம் அறிவோம், ஆவிக்குரிய விஷயங்களை ஆவிக்குரியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவைகளைப் பரிசுத்தவான்களும் செய்யப்போகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். HG28:2 உயிர்த்தெழுந்ததி லிருந்து கிறிஸ்து ஒரு மனிதராக இருக்கிறார் என்றும், அவர் இரண்டாம் தரமும் ஒரு மனிதனாகவே வருவார் என்றும் நம்புகிற அனைவரும், அதன் மூலம் மீட்கும்பொருளை மறுதலிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். நமது கர்த்தருடைய மனுஷீகம் ஒருபோதும் திரும்பப் பெறப்படவில்லை. E299

**அவர் இருக்கிறவண்ணமாகவே** – ஒரு மகிமைவாய்ந்த ஆவிக்குரிய ஜீவி. C305; R5822:2, 5103:5, 147:3; HG367:1; OV384:T; SM458:1 முதலாம் உயிர்த்தெழுதலில். R5416:6, 5149:1, 3203:6, 3174:6; NS341:4, 351:4, 551:6; OV384:T; SM147:2, 733:T அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையைப் பகிர்ந்துகொள்ளுவோம். R5326:1, 5570:1, 5416:6, 5149:5, 5103:5, 4914:3, 3075:3, 1996:4; A211; F467, 694; HG449:2; NS351:4, 483:2, 638:4; Q461:5; SM147:2 திருச்சபையின் நம்பிக்கை. R5822:2 இந்த எண்ணம் நமக்குத் திருப்திகரமாக உள்ளது. F365 நம் மீட்பரின் மகிமையான சாயலில் நாம் விழித்தெழும்போது திருப்தி அடைவோம். NS178:5 அவரோடுகூட பூமியின் சகல குடிகளுக்கும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவோம். R4892:2; NS466:6, 822:4 நாம் அவருடைய பிரசன்னத்திலும், அவருடைய வலது பாரிசத்திலும் இருக்கப் போகிற அந்த ஆசீர்வதிக்கப்பட்ட காலத்திற்கென்று சம்பூரண மகிழ்ச்சியானது வைக்கப்பட்டுள்ளது. R1949:2, 1797:2; NS483:2 அப்போஸ்தலனாகிய பவுல் மட்டுமே நமது கர்த்தரை "அவர்

இருக்கிறவண்ணமாகவே" பார்த்தவர். கர்த்தருடைய ஆவிக்குரிய பிரசன்னம், மாம்சமாகவோ அல்லது மனிதனைப் போலவோ இல்லாமல், "சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக" அது பிரகாசித்தது. (அப். 26:13) HG347:3; NS89:1 எதிர்காலத்தில் நம்முடைய மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தரைக் காண்பது நம் கண்களைக் காயப்படுத்தாது. R5623:4, 5299:2; NS89:1 அவருடைய சாயலில் நாம் விழித்தெழும்போது. (சங். 17:15) R1387:6 அவர் நமக்காக தரித்திரனானபோதிருந்த வண்ணமாகவோ, உயிர்த்தெழுந்த பிறகு தமது சீஷருக்குத் தோன்றிய போதிருந்த வண்ணமாகவோ அல்லாமல். F694; B109; E349; R5589:6, 5416:6, 4185:5, 2798:2, 2789:6, 2479:4, 1952:6, 1873:5, 1817:5, 1693:1, 361:1, 262:3, 169 1*; NS6:6, 33:1

**நாம்** – திருச்சபையில். R1817:2; B108; HG513:6 சிறு மந்தை. T86 பரிசுத்த ஸ்தலத்தில் நிழலாகக் காண்பிக்கப்பட்ட ஆவிக்குரிய மனநிலையில் இப்போது இருப்பவர்கள். T21 மனுஷர் கிறிஸ்துவை சரீரப்பிரகாரமாக பார்க்க மாட்டார்கள், ஏனென்றால் அவர் வேறு ஒரு ஜீவ தளத்தில் இருக்கிறார். T86

**அவரைத் தரிசிப்பதினால்** – இயேசுவின் பரிபூரணமான ஆவிக்குரிய நிலையானது, மகா பரிசுத்த ஸ்தலத்தால் நிழலாகக் காண்பிக்கப்பட்டது. T21 இதை செய்வதற்கு முன்பாக, நாம் அனைவரும் மறுரூபமாக்கப்பட்டு, நமது கர்த்தரைப் போல் ஆவிக்குரியவர்களாக ஆக்கப்பட வேண்டும். D600; R5299:2, 4914:3, 1904:1, 1693:1; OV353:3; Q461:5 மாற்றம் அவருக்கு அல்லாமல், மாறாக நமக்கே ஏற்படும். R159:1* மனிதனாகிய கிறிஸ்து இயேசுவைப் போலவோ, அவர் உயிர்த்தெழுந்த பிறகு, மாம்சீக ரூபத்தை எடுத்துக்கொண்டு தமது சீஷருக்குத் தோன்றியதைப் போலவோ அல்லாமல். R5103:5 மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மறுரூபமாகாத மற்றவர்கள், "அவரை அவர் இருக்கிறவண்ணமாகவே" பார்க்க மாட்டார்கள், மாறாக ஒவ்வொரு கண்ணும் பகுத்துணரக்கூடிய வகையில், அவருடைய மேற்பார்வைகளிலும் நியாயத்தீர்ப்புகளிலுமே அவர் வெளிப்படுத்தப்படுவார். R4966:5; HG628:1 உலகத்தாரால் ஆவிக்குரிய அதிபதியைப் பார்க்க முடியாது. R1872:5; SM226:1 ஆரோன் மோசேயை மலையில் சந்தித்துப் பார்த்தது என்பது, நாம் இயேசுவைச் சந்தித்து, அவரைப் பார்ப்பதற்கு முன்பாக, நாம் முதலில் மேலே செல்ல வேண்டும் அல்லது ஆவிக்குரிய நிலைக்குச் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கிறது. R169:1*

**அவருக்கு ஒப்பாயிருப்போமென்று** – மனித நிலைகளிலிருந்து திவ்ய தளத்திற்கு மாற்றப்படும் நமது உயிர்த்தெழுதலின் மாற்றத்தால் அவருக்கு ஒப்பாயிருப்போம். R5034:6, 4625:4, 3174:6, 2454:3, 659:5*, 447:5*; A200; CR250:4; HG366:6; NS458:6; SM154:3 அவள் "திவ்ய சுபாவத்திற்குப் பங்காளிகளாக" ஆக்கப்படுவாள் என்பதே திருச்சபையின் நம்பிக்கையாகும். (2 பேது. 1:4) R5822:5, 5748:6, 5152:2, 4734:2, 4372:2, 3694:2, 3294:2, 2750:5, 2238:2, 2055:2, 1910:2, 1750:2; OV384:T, 427:2; SM361:1 மகிமைப்படுத்தப்பட்ட, "மறுரூபமான" இயேசு. F722, 729; R5440:5, 4966:5, 4675:3, 504:6; A182; CR117:4 நமது ஆண்டவரும் மணவாளனும். NS638:5 சபை பூமிக்குரிய சரீரங்களைப் போலல்லாமல் தனது உயிர்த்தெழுந்த கர்த்தரைப் போன்று ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும். E349; HG513:6 சுபாவ மாற்றம். E175; HG366:6; SM733:T சாவுக்கேதுவானதிலிருந்து சாவில்லாததற்கும்; மாம்சம் மற்றும் இரத்தத்திலிருந்து அழிவில்லாததற்கும் மாற்றப்படுவதன் மூலமாக. R1857:4, 5623:4, 5575:1, 1996:4, 1952:6, 1496:6 அவர் இருக்கும் வண்ணமாகவே நாம் அனைவரும் இருக்க வேண்டுமானால், முதலில் நாம் அவரைப் போல மாற வேண்டும். CR468:1; R5189:5 சகல தூதர், துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்களை விடவும் மிகவும் உயர்ந்தது. CR109:4, 117:4; F722; R5711:1, 4675:4; HG366:6; NS395:5, 551:6, 610:1 திரைக்கு அப்பால் ஒவ்வொருவருக்கும் தனித்துவம் (individuality) இருக்கும்; ஆனால் மகிமைவாய்ந்த பணியைப் பொறுத்தவரையிலோ அவ்வாறு இருக்காது. R4864:3 புதிய உடன்படிக்கையின் கீழாக உலகிற்கு மாம்ச இருதயங்கள் வாக்களிக்கப்பட்டுள்ளன. நாமோ ஆதாமைப் போல மாம்சப் பிறவிகளாக

அல்லாமல், நமது ஆண்டவரைப் போல ஆவியின் ஜீவிகளாக இருக்க வேண்டும். HG235:4 கிறிஸ்துவைக் குறித்து வெளிப்படுத்தப்பட்ட அனைத்துமே, நமது எதிர்காலத்தைக் குறித்து அதிகம் வெளிப்படுத்துகின்றன. HG28:1 திருச்சபை மறுரூபமாக்கப்படும்போது, ஆண் பெண் என்ற அனைத்து தனித்தன்மைகளும் முற்றிலும் நீக்கப்படும், ஏனெனில் மகிமையடைந்த திருச்சபையில் ஆணென்றோ பெண்ணென்றோ இருக்காது. Q461:5; R4914:3 திருச்சபை வெள்ளையரைப் போலவோ கறுப்பரைப் போலவோ இருக்காது, ஒருக்காலும் இரத்தமும் மாம்சமுமாக இருக்காது. HG513:6 இந்த உயர்வு, தேவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது, அதிலும் அவருடைய சொந்த நிபந்தனைகளின்பேரிலேயே கிடைக்கும். R5711:1 "ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு." (1 கொரி. 15:44) A200; R1996:1 "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது." (1 கொரி. 15:50) OV353:2; HG145:2, 231:4; NS199:5; SM154:3 "கர்த்தரே ஆவியானவர்." (2 கொரி. 3:17) ஒரு சக்திவாய்ந்த மற்றும் கண்ணுக்குத் தெரியாத ஜீவி. E175; NS6:6, 32:6 "பிதாவுடைய தன்மையின் சொரூபம்." (எபி. 1:3) T67; A200, 211; F722; R2587:6, 1872:5, 1585:3, 1262:4, 1210:6*, 277:4, 206:2; CR19:4; HG449:2 "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்." (2 தெச. 2:14) A211; R5748:6 பிரபலமான இறையியல் போதனையின் படி, நாம் அனைவரும் நம் வடுக்களையும் கறைகளையும் நித்திய நித்தியத்திற்கும் சுமக்க வேண்டும் என்று இந்த வசனம் அர்த்தப்படுத்துவதாக கூறுகின்றது. ஆனால் இது அவ்வாறு அர்த்தப்படுத்த வில்லை. B132; R1857:1

**அறிந்திருக்கிறோம்** – நமது அறிவு முற்றிலும் விசுவாசத்தின் அடிப்படையிலான அறிவாகும், இது நமது கர்த்தர் மீதும் அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதும் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சார்ந்ததாகும். R3891:6

### வ. 3 – "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்."

**இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும்** – நாம் விரைவில் உயிர்த்தெழுதலில் மறுரூபமடைந்து, நமது அன்பான மீட்பரைப் போல காணப்படுவோம் என்ற நம்பிக்கை. R3193:6, 3280:5, 351:4*; NS351:4; OV205:2 நாம் ஆவியின் ஜீவிகளாக மாற்றப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையைப் பகிர்ந்து கொள்வோம் என்ற நம்பிக்கை. R5149:5, 2517:5, 1138:3* நாம் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளோம் என்ற நம்பிக்கை. R2517:5 புதிய நம்பிக்கை, புதிய ஆவி. R2456:2 தேவனைப் பற்றிய இந்த அறிவினை உலகம் அறியவில்லை. F315; R829:5* இராஜ்யத்தில் நமது மீட்பருடன் உடன்–சுதந்தரராக மாறுவதற்கு. R2314:4; NS329:4 கிறிஸ்துவில் பூரணமாக்கப்படுவது (என்ற நம்பிக்கை); தேவனுடைய பிள்ளைகளாக நமது புத்திர சுவிகாரம் பூரணமடைவது (என்ற நம்பிக்கை). R351:4* இருதயத்தில் சுத்தமுள்ளவர்களைத் தவிர வேறு யாராலும் இந்த நம்பிக்கையை நேர்மையாகவும், உண்மையாகவும் கருத்தில் கொள்ள முடியாது. R3193:4, 830:1* முடிவாக, நித்திய ஜீவனில், உயிர்த்தெழுதலில் தெய்வீகத் தயவின் முழுமையைப் பெற்றுக்கொள்வோம் (என்ற நம்பிக்கை). NS302:2 இராஜ்யத்தில் நவமான திராட்சரசம் குறித்த நம்பிக்கை, அதாவது மகிமைகள், கனங்கள் மற்றும் உலக மனுக்குலத்தை உயர்த்துவதற்கான ஆசீர்வாதமான வாய்ப்புகள் என்பவைகளில் எஜமானருடன் பங்கேற்பது (என்ற நம்பிக்கை). R3880:4 ஆயிரமாண்டு யுகத்தில் மகத்தான கனமும் ஆசீர்வாதமும் மட்டுமல்லாமல், அடுத்தடுத்த யுகங்களிலும் தேவனுடைய கிருபையின் அதீத ஐசுவரியங்கள் என்பது குறித்த நம்பிக்கை. NS338:6 அபூரணமான மண் பாண்டங்களில் இந்தப் பொக்கிஷம் இருக்கும் போது முழுமையான பரிபூரணத்தை எதிர்பார்க்க வேண்டிய

அவசியமில்லை, ஆனால் நோக்கம், குறிக்கோள் மற்றும் முயற்சியின் பரிபூரணம் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு வெளிப்பட வேண்டும். R558:2 இந்த நம்பிக்கை இல்லாதவர், மற்ற நோக்கங்களின் அடிப்படையில் ஓரளவிற்குத் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளலாம், ஆனாலும், இந்த நம்பிக்கையால் அவர் பரிசுத்தமாகுமளவிற்குச் சுத்திகரிக்கப்பட வாய்ப்பில்லை. R3193:4 "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்." (தீத்து 2:13) NS408:3

**அவர்** – அவனை அழைத்தவர். R2671:4, 2517:5, 2022:2 கர்த்தர். R2517:5; OV205:3 நமது மீட்பரும் முன்மாதிரியுமாகிய கிறிஸ்து. R2063:5, 3280:2, 2692:3, 188:2; NS302:2 தேவன். R829:5*

**சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல** – அவரே நமது முன்மாதிரி, நமக்கான எடுத்துக்காட்டு. அவருடைய சாயலடையவே நாம் நாடுகிறோம். OV205:3 நாம் அன்பின் தெய்வீக மாதிரியைப் பின்பற்றவும், அதின் சாயலடையவும் நாடுகையில், அதனை தொடர்ந்து நமது இருதயங்களைச் சுத்திகரிப்பதும், பரிசுத்தப்படுத்துவதும் வருகிறது. நம் இருதயங்கள் (சித்தங்கள், நோக்கங்கள்) சுத்தமாகி, நம் வார்த்தைகள் மற்றும் எண்ணங்கள் மீது ஒரு காவலை வைக்கிறோம். R2517:5 சிலர், சுத்தமில்லாத அசுத்தமானவற்றுடன் தேவன் தொடர்பு வைப்பார் என்று நினைக்குமளவுக்கு மோசமானவர்களாக இருக்கின்றனர். R3987:1

**தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்** – தனது இருதயமும், வாழ்க்கையும் மணவாளனுக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும் எனும் மனப்பான்மையில் நிலைத்துநிற்க நாடுவான். C192 தன்னையும், தனது நடத்தையையும் சுத்திகரித்துக் கொள்ள முயற்சிப்பவன், அதில் வெற்றிபெற வேண்டுமானால், முதலில் இருதயத்தில் இருந்து ஆரம்பித்து, ஆவியினால் ஏவப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பயன்படுத்தி முன்னேற வேண்டியிருக்கிறது; மேலும் இது கிறிஸ்துவைப் பற்றின உபதேசங்களை அறிகிற அறிவைக் குறிக்கிறது. F315 சிந்தையின் தூய்மையால் நமது இருதய தூய்மையைக் காத்துக்கொண்டால், எதிர்கால ஆசீர்வாதங்கள், தற்கால தயவு மற்றும் மகிழ்ச்சி என்பவைகளின் நிச்சயத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம். R5149:5 இப்போது முடிந்தவரை கிறிஸ்துவைப் போல் இருக்க நாடுவது. R3280:2 புதுவாழ்வில் நடப்பது. NS329:4 நமது ஒவ்வொரு எண்ணத்தையும் செயலையும் எவ்வளவு கவனமாகக் காத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. R1139:1* நம்மால் மாம்சத்தில் அவரைப் போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாவிட்டாலும், நம்மால் நமது சிந்தையின் ஆவியில் அவரைப் போல் இருக்க முடியும். OV205:3; R3193:5 மேன்மேலும் தேவனைப் போலவும், அன்பாகவும், கனிவாகவும், மனதுருக்கமுள்ளவராகவும், இரக்கமுள்ள வராகவும் மாறுவது. NS302:3 தேவனுடைய வார்த்தை, தண்ணீரைப் போல, பரிசுத்தப்படுத்துகிறது, சுத்தப்படுத்துகிறது (purifying, cleansing). R2671:4 நமது விசுவாசமும், நம்பிக்கையும் வாழ்க்கையின் மாற்றத்திற்கு வழிவகுக்கும். NS302:2 தேவன், வாக்குத்தத்தங்கள் போன்றவைகளில் உதவிகளை வழங்குகிறார், ஆனால் சுத்திகரிப்பினை நாமே செய்யும்படிக்கு விட்டுவிடுகின்றார். எந்தளவிற்கு நாம் அவருடைய சத்தியத்தை உள்வாங்கவும், நமக்குள் செயல்படவும், நம்மைக் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கிறோமோ, அந்தளவிற்குச் சுத்திகரிப்பும் முன்னேற்றமடையும். R830:1*, 1628:5* இருதயத்தை (சிந்தையை) (பரி)சுத்தத்தை நோக்கி நகரச் செய்யுங்கள், மேலும் சொல்லர்த்தமான தண்ணீரும் அடையாளமான தண்ணீரும் பயன்படுத்தப்படும், இப்படியாக புறம்பான மனிதன் விரைவில் சுத்தமாகுவான். R2022:3 நமது ஒழுக்கம்சார் குணங்களைச் சுத்திகரிப்பதற்கு, சேறு நிறைந்த மாசுபடுத்தப்பட்ட போதனைகள் அல்லாமல், மாறாக தெய்வீகச் சத்தியம் எனும் தூய நீரே நமக்குத் தேவைப்படுகின்றது. R2671:4 அவனுடைய எண்ணங்களில் மட்டுமல்லாமல், அவனுடைய வார்த்தைகளிலும், செயல்களிலும், அவனுடைய சகல காரியங்களிலும், அகத்தையும் புறத்தையும் (சுத்திகரித்துக்கொள்ளுகிறான்). R2456:2 தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மேன்மேலும் பழைய

புளிப்பைப் புறம்பே தள்ளுவான். R2037:3 இயேசு கிறிஸ்துவின் முகத்தில் தேவனுடைய குணலட்சணங்கள் பிரகாசிக்கப்படுவதை நாம் உற்றுகவனித்து, பரிபூரண மாதிரியுடன் ஒத்துப்போகாத தூய்மையற்றவைகளை, நமது சொந்த குணாதிசயங்களிலிருந்தும் சுபாவத்திலிருந்தும் அகற்ற முயற்சிப்போமாக. R829:5* மேலானவைகளின்மீது நமது நேசத்தை வைத்து, நாம் இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்கேதுவாக, தெய்வீகத் தேவைகளுக்கு ஏற்ப நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நாடிடுவோமாக. NS31:4 உண்மையான தேவ பிள்ளைகளாகிய அனைவரிடத்திலும், சுத்திகரிப்பு செயல்முறையானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்லும். R829:6* மெல்லிய வஸ்திரம் மற்ற பொருட்களுடன் / வஸ்திரங்களுடன் கலக்கப்படக்கூடாது, அது சுத்தமாகவும் வெண்மையாகவும் காக்கப்பட வேண்டும். R351:5* "இந்த நம்பிக்கையால்" உயிர்ப்பிக்கப்பட்டு, நமது உலக வாஞ்சைகள் அனைத்தையும் சிலுவையின் அடியில் வைப்பதற்கு நாம் எவ்வளவாய் பலப் படுத்தப்படுகிறோம். R1138:6* "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளக்கடவோம்." (2 கொரி. 7:1) R3986:6, 1849:4 "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு." (எபி. 12:1) NS338:6 நாம் இப்போது பாவத்தை அடக்கி கீழ்ப்படுத்த முயற்சிக்கவில்லை என்றால், எதிர்கால மகிமைக்காக நம்பிக்கை கொண்டிருப்பது வீணானதாயிருக்கும். R830:1* நமது கர்த்தர் நாற்றத்தைக் கக்கும் புகையிலையைப் புகைத்துக்கொண்டிருப்பதையோ அல்லது தீட்டுப்படுத்தும் எதையும் அவரது வாயில் வைத்திருப்பதையோ நம்மால் கற்பனைசெய்துகூட பார்க்க முடியாது. R1849:4

## 97. 1 யோவான் 4:4

**"பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்."**

**உலகத்திலிருக்கிறவனிலும்** – உலகம், மாம்சம், பிசாசின் வல்லமைகள் என்பவை நெருங்கிய கூட்டாளிகளாகும், ஆகையால், வெற்றிப்பெறுவதற்கும், வெற்றிப்பெற்ற பிறகு ஓர் ஆட்சியை ஸ்தாபிப் பதற்கும் திட்டமிடும் ஒருவன், அதிக பலம்வாய்ந்த இன்னொரு சக்தியுடன் கூட்டணி வைத்துக்கொள்ள நாட வேண்டியிருக்கும். R5488:6 மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும். (எபே. 6:12) R4813:6 உங்களுக்கு எதிராக இருப்பவர்கள் அனைவரும். R5488:6, 4814:1, 1956:2, 1653:5

**உங்களிலிருக்கிறவர்** – உங்களுடன் – உங்களுக்காக. R5488:6 தங்களுடைய ஆவியை / மனதை அடக்கி ஆளும் பணியை ஊக்கத்துடன் செய்கிற அனைவருக்கும் அருளப்படும் வல்லமை யாதென்றால், தேவனுடைய சர்வ வல்லமையுள்ள கரமே அன்றி வேறில்லை. R5488:6 முழு மனதுடன் சோதனையை எதிர்த்து, கர்த்தருக்காகவும் அவருடைய நோக்கத்திற்காகவும் முழு மனதாக நிற்கும் தருணந்துவக்கி, நாம் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அதிகதிகமாக பலமடைய துவங்குகிறோம். R4814:1

**பெரியவர்** – சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய மேற்பார்வைகளும், இரட்சிப்பு மற்றும் பாதுகாப்பின் மதிற்சுவர்களாக சுற்றிலும் இருக்கின்றன. R1653:5 தேவனுடைய தீர்மானத்தின்படியாய் அழைக்கப்பட்ட "தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு," தீமையின் எதிர்ப்பானது நன்மைக்கு ஏதுவாக மாத்திரமே கிரியைசெய்திடும். "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்." (ஏசா. 54:17) R1956:2 கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராக இருப்பதற்கான வாய்ப்பினால் கவர்ந்து ஈர்க்கப்பட்டிருக்கும் இவர்கள், பாதையில் காணப்படும் சோதனைகளாலும் சிரமங்களாலும் பயப்படுவதில்லை. பயப்படாதே "நான் உலகத்தை ஜெயித்தேன்." (யோவா. 16:33) HG652:2

## 98. 1 யோவான் 4:12

**“தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.”**

**தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை** – அதாவது தேவனை ஒரு நபராக ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை என்பது அர்த்தமாகும். பழைய ஏற்பாட்டில் எவ்வாறு அவர் பல்வேறு சமயங்களில் காட்சியளித்தார் என்பது குறித்து கூறப்பட்டிருந்தாலும், அவையனைத்துமே ஒரு பிரதிநிதி (ஒரு தூதன்) மூலமாகவே நடந்தவையாகும். Q360:1,2

**ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால்** – எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தாங்கள் ஒருவரிடத்தில் ஒருவர் உண்மையான அன்பைக் கொண்டுள்ளனர் என்பதை விளக்கிக் காண்பிக்கும்வகையில் கர்த்தருடைய ஜனங்களின் குணாதிசயங்கள் இருக்க வேண்டும். R4849:3 கிறிஸ்துவின் சரீர அங்கத்தினரிடம் எதிர்பார்க்கப்படுகிற அன்பானது கர்த்தருடனான பரஸ்பர உறவின் விளைவாக உண்டான ஒன்றாக இருக்க வேண்டும் – இது குடும்ப அங்கத்தினரில் ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கும் மனித அன்பிலிருந்து அல்லது மிருகத்திற்குரிய அன்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். R4849:3 கிறிஸ்துவினிமித்தம், தேவன் எவ்வாறு நம்முடைய அபூரணங்களைக் (blemishes) பொருட்படுத்தாது இருக்கின்றாரோ, அதுபோல நாமும் எல்லாச் சகோதர சகோதரிகளையும் எப்போதும் அன்புகூர வேண்டும், மேலும் அவர்களின் பலவீனங்களையும் அபூரணங்களையும் பொருட்படுத்தாது, ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். R4849:6 எந்த இருதயத்தில் ஊக்கமான அன்பு ஆளுகை செய்கின்றதோ, அந்த இருதயமானது கர்த்தருக்கு முழுமையாக ஒப்படைக்கப்பட்டாயிற்று என்பதையும், போராட்டத்தில் பத்தில் ஒன்பது பங்கு ஏற்கனவே வென்றாயிற்று என்பதையுமே அர்த்தப்படுத்துகின்றது. R4850:4 “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்.” (யோவா. 15:12) இதைச் செய்வதென்பது, மற்றவருக்குக் காயம் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதைக்காட்டிலும் அதிகமான ஒன்றாக இருக்கும். இது ஒருவருக்காக இன்னொருவர் தங்களுடைய ஜீவனைக் கையளிப்பதாக இருக்கும். இது நியாயப்பிரமாணம் கேட்கின்ற எந்தத் தேவைக்கும் அப்பாற்பட்டதாயிருக்கும். R4850:2 தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்றாகும். விசேஷமான வகையில், இது சகோதர சகோதரிகளுக்கான, அதாவது, தேவனுடைய ஆவியைப் பெற்றவர்களுக்கான அன்பாகும், ஆனால் பொதுவான வகையில், முழு மனுக்குலத்தின் மீது குறைந்தபட்சம் இருக்க வேண்டிய ஓர் அனுதாப அன்பாகும். R2649:2 நம்முடைய இருதயத்தில் சகோதர சகோதரிகள் மீதான அன்பும், எல்லா மனிதரிடமும், மிருகஜீவன்களிடத்தும் கனிவான தயாளமான அன்பும் இல்லை என்றால், வேண்டிய பலிகளைச் செலுத்துவதற்குத் தேவையான ஆவி நம்மிடம் இல்லை என்பதே அர்த்தமாகும். R4850:3 நாம் முன்னோக்கி நகரவும், கூடுமானால், கர்த்தருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் எல்லா வகைகளிலும் இன்னுமதிகமாக நம்முடைய பலிகளைச் செலுத்தவும் வேண்டும். R4850:5

**தேவன்... நிலைத்திருக்கிறார்** – தேவன் நமக்குள் வாசஞ்செய்கிறார் என்பதற்கு இது ஒரு சான்றாதாரமாக இருக்கின்றது. R2649:2 அவர் தம்முடைய ஆவியை நமக்குக் கொடுத்தபடியால், நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருப்பதை இதன்மூலமாக அறிவோம். R32:1*

**And / (மேலும்)** – மேலும் அந்த. R2649:2

**அன்பும்... பூரணப்படும்** – இந்த அன்பு ஒருவருக்குள் பூரணப்படாவிட்டால், யாராலும் “தெரிந்து கொள்ளப்பட்ட” வகுப்பாரைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. மாம்சத்தின்மீதான முழுக் கட்டுப்பாட்டைப் பெறாவிட்டாலும்கூட, தன்னுடைய எண்ணத்தில் / நோக்கத்தில் பூரணமாக இருக்கும்

ஒரு நிலையை அவர் அடைய வேண்டும். R4850:1 நாம் ஒருவரையொருவர் அன்புகூருவதற்குக் கற்றுக்கொண்டு வரவர, தேவ அன்பும் நம்மில் பூரணமடைந்துகொண்டே வரும். R4849:6

## 99. 1 யோவான் 5:4

**"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."**

**தேவனால் பிறப்பதெல்லாம்** – தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டதெல்லாம். E237; R837:1, 374:4 கிரேக்க வார்த்தை, கென்னாவ் / gennao; குறிப்பிடப்பட்டுள்ள செயல் தேவனைத் தொடர்புபடுத்தி வரும்போது, அங்கு ஜெநிப்பிக்கப்பட்டது என்றே வழங்கப்பட வேண்டும். R837:1

**நம்முடைய விசுவாசமே** – நமது முழு ஜீவியைப் போதுமான அளவு உற்சாகமூட்டக்கூடியதும், கடைசிபரியந்தம் உபத்திரவத்தைப் பொறுமையுடன் சகிக்கவைக்கக்கூடியதுமான ஒரே சக்தி. R1719:3 தெய்வீகத் திட்டத்தின் நிறைவேற்றத்தில் இருள் சூழ்ந்திருக்கும் இந்த வேளையில், சாத்தான் இவ்வுலகின் அதிபதியாக இருக்கும் இந்த வேளையில், நமது ஆண்டவர் விசுவாசத்திற்கே அதிக மதிப்பினை / முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார். "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது." (மத். 9:29) F113 விசுவாசம் வளர்ச்சியடையாத வரையில், ஜெயங்கொள்வதற்கான சக்தி நம்மிடம் இருக்காது. F689 தேவனுடைய வார்த்தையில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு விசுவாசம், நன்கு ஆராயப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, இருதயத்திலும் தலையிலும் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு விசுவாசம். R1719:6, 5432:4 தேவனைப் பற்றிய விஷயங்களில், உலகத்தாரை விடவும் நமக்குக் கிடைத்துள்ள அறிவிற்காக மாத்திரமல்லாமல், விசேஷமாக இந்த அறிவு அனைத்து நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நடத்தை மீது செலுத்தும் செல்வாக்கினிமித்தமாகவும், உபதேசம் மற்றும் அதன் மீதான விசுவாசமும் முக்கியமானதாயிருக்கிறது. F315 அவருடைய போதனை மற்றும் பயிற்சியின் மீதான முழுமையான, உள்ளான நம்பிக்கையின் (confidence) மூலமாக, அவருடைய வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தலின் கீழ் தொடர்ந்து ஊக்கமும், விடாமுயற்சியுமுள்ள மாணவர்களாக நம்மை வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையின் (confidence) மூலமாக. R1967:2 நமது மேலான முயற்சிகள் அனைத்திற்கும் அடித்தளம் தேவனில் நம்பிக்கையாக (confidence) இருப்பதில் அமைந்திருக்கிறது. இந்த நம்பிக்கையே விசுவாசமாகும். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். R5243:6 கர்த்தர் மீதும் அவருக்குரியவர்கள் மீதும் உன்னத அன்பு செலுத்தி, உலகத்தின் மீது அனுதாபத்தோடு அன்பு செலுத்தும் பரிசுத்த ஆவியே அந்த விசுவாசத்தின் மையமும் ஜீவனுமாக இருக்கின்றது. R4919:1, 2205:1 அவர் மீதும், அவரது வல்லமை அன்பு மற்றும் வாக்குத்தத்தங்கள் மீதும் நாம் வைக்கும் விசுவாசத்தைப் பார்க்கிலும் நாம் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய எதுவுமே அவருடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக / பிரியமானதாக இருக்காது; இது இல்லாமல் நம்மால் வளர்ச்சியடைந்து, வெற்றியாளராக ஆக முடியாது. R2654:1; F315 சந்தேகம், வேதாகம விமர்சனம், பரிணாமம் மற்றும் பேய் சார்ந்த ஆய்வு (demonology) என்பது போன்ற எதிராளி எய்யும் அக்கினியாஸ்திரங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு விசுவாசம் எனும் கேடகம் இன்றியமையாததாய் இருக்கிறது. F657 விசுவாசம் எனும் பெரிய கேடகம் இல்லாத கிறிஸ்தவன், எதிராளி முன்பாகவும், அவனது அனைத்து பொல்லாத தூதர் சேனைக்கு முன்பாகவும் தொடர்ந்து ஆபத்தான நிலையில் காணப்படுவான். R5425:6, 2642:6 நமது விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும்படிக்கு கர்த்தரிடம் ஜெபம்பண்ணுவதும், தெய்வீக வாக்குத்தத்தங்கள் என்ன என்பதைக் கற்று, அவற்றை நமக்குச் சொந்தமாக உரிமைகொண்டாடுவதன் மூலமாக விசுவாசத்தை நாமே அதிகரிக்கச் செய்வதுமே நமக்கான பாக்கியம் / சிலாக்கியம் ஆகும். R2642:6 விசுவாசம் என்பது தேவனுடைய தரநிலையாகும்; சரியான தரநிலையைக் கொண்டிருப் பவரிடம் அதற்கொத்த கிரியைகளும் காணப்பட வேண்டும். வேதாகமத்தில் தேவனுக்குப் பிரியமாயிருந்த

அனைவருமே (favorites) விசுவாசமுள்ள மனுஷராய் இருந்தார்கள். R5243:3, 1720:4, 778:1* நாம் அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிவதற்கு, கர்த்தருடைய ஞானத்திலும், ஏற்ற சமயத்தில் கிடைக்கிற அவருடைய உதவியிலும் விசுவாசம் வைப்பது நமக்கு இன்றியமையாததாகும். R4904:5 விசுவாசத்தைப் பிரயோகிப்பதும், அதிலிருந்து வரும் கீழ்ப்படிதலும், நாம் ஜெயங்கொள்ளுபவர்களாக "முற்றிலும் ஜெயங்கொள்ளுபவர்களாக" ஆவதற்கு நமக்கு உதவிடும். (உரோ. 8:37) R4904:6 விசுவாசமானது தேவனுடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு, அவற்றின் மதிப்பை உணரச் செய்ய வேண்டும்; மேலும் தேவனுடைய வல்லமையைப் பற்றிக்கொண்டு, ஏற்றசமயத்தில் சகாயம் செய்யும் கிருபையைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும். R1859:5, 2073:5 சோதனைகளின்போது நாம் கிருபையின் சிங்காசனத்தைப் புறக்கணித்தோமே யானால், அது நம்மிடம் விசுவாசக்குறைச்சல் உள்ளது என்பதை அர்த்தப்படுத்துகிற ஓர் அடையாளமாக இருக்கும், மேலும் அந்த வகையில் நம்மால் இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாக இருக்க முடியாது, ஏனெனில் இராஜ்யத்தின் சுதந்தரர் அனைவரிடமும் விசுவாசம் காணப்பட வேண்டும். NS228:1 விசுவாசமானது உலக ஆவியின் மீது வெற்றிப் பெறுவதற்கும், இங்கேயும் மறுமையிலும் ஊழியம் செய்வதற்காக, தேவனுக்கென்று தனியே பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவதற்கும் நமக்கு உதவுகிறது. R5245:4, 2195:4, 1719:6 விசுவாசம் என்பது நம்பிக்கை அல்லது அறிவு மாத்திரம் அல்ல, மாறாக அறிவைப் பயன்படுத்தி, உட்கிரகித்து, தனக்குரியதாக்கிக்கொள்வதாகும் – அதனை நமது சிந்தனை பழக்கத்தின் ஒரு பகுதியாகவும், நமது செயல்களுக்கு அடிப்படையாகவும், நமது ஆற்றல்கள் அனைத்திற்கும் ஒரு தூண்டுதலாகவும் மாற்றிக்கொள்வதாகும். R1719:3 விசுவாசமானது, நம்மில் ஒரு ஜெயம்கொள்ளுகிற சக்தியாக இருப்பதற்கு, மூளையையும் தாண்டி இன்னும் ஆழமாக இருதயத்திற் குள்ளாக செல்ல வேண்டும், இப்படியாக நமது முழு ஜீவியையும் ஊடுருவி பலப்படுத்திட வேண்டும், மேலும் அது வெளிப்புற நடத்தையை மாத்திரமல்லாமல், ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்திட வேண்டும். R1720:1 இவ்வாறு ஆவியிலும், விசுவாசத்திலும் ஜெயங்கொள்ளு பவர்களுக்கே, இறுதியாக "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:21) என்று கர்த்தர் தம் வாயின் வார்த்தைகளை உரைத்திடுவார். R4897:6, 3060:4 அவருடைய வாக்குத்தத்தங்களின்படி, கர்த்தருக்கான நமது சகல ஊழியங்களும் நமது விசுவாசத்திற்கான நிரூபணங்களாக விசேஷமாக கருதப்படுகின்றது. R2425:4 விசுவாசம் கிரியையாக வெளிப்படாவிட்டால், விசுவாசத்தால் உயிரோடு இருக்க முடியாது (அது செத்ததாயிருக்கும்). R2425:4 விசுவாசம் என்பது ஜெயங்கொள்ளுகிற சக்தியாகும் – இதனை நமது பரம அழைப்பின் பரிசை அடைவதற்கான ஓட்டப் பந்தயத்தில் வெற்றிகரமாக ஓடி, ஜெயிப்பவர்களாய் இருப்பவர்கள் அனைவருமே பெற்றிருக்க வேண்டும். R1719:3 இதுவே நமது வாழ்வின் ஆளும் சக்தியாகவும் உத்வேகமாகவும் இருக்கக்கடவது – ஜீவனுக்கான இடுக்கமான பாதையின் முடிவு பரியந்தம் விடாமுயற்சியோடும், பொறுமையோடும் இருப்பதற்குப் பலப்படுத்தி, சுத்திகரிக்கிற ஒரு ஜீவனுள்ள விசுவாசம். R1720:4 விசுவாசம், இப்போது கடினமானதாக இருப்பதால், அதற்கான வெகுமதியும் அதிகமாக இருக்கிறது, ஆனால் பனிமூட்டம் விலக்கப்படும்போது, அது மிகவும் எளிமையான மற்றும் ஒரே நியாயமான விஷயமாக மாறிவிடும்; இப்படியாக ஆயிரமாண்டின்போது அது ஒவ்வொரிடமும் எதிர்பார்க்கப்பட்டாலும், அப்போது அது எளிதாக இருக்கும் என்பதால், இப்போதுபோல அப்போது அதற்கு விசேஷித்த வெகுமதி எதுவும் அளிக்கப்பட மாட்டாது. R2195:4 வெறும் தேவனுடைய சத்தியத்தை அறிவுசார்ந்த வகையில் ஏற்றுக்கொண்டுவிட்டு, அவருக்கு ஊழியம் செய்யாமல் இருந்தால் (கிரியை இல்லாமல் இருந்தால்) அது விசுவாசம் என்றாகிடாது, மேலும் அதை வைத்து நம்மால் உலகத்தை ஜெயிக்கவும் முடியாது, நம்மால் நமது பரம அழைப்பின் பரிசினில் பங்கடையவும் முடியாது. R1720:4 இப்படிப்பட்ட விசுவாசம் பதற்றத்துடன் / மனக்கலக்கத்துடன் புதிய ஒன்றைத் தேடிக்கொண்டிருக்காது, மேலும் அது எப்போதுமே மனுஷருடைய வீணான தத்துவங்கள் எவ்வளவு திறமையாக கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக நிலைநிற்கிறதா என்பதைக் காண்பதற்காக

அத்தத்துவங்களை துருவித்துருவி ஆராய்ந்து கொண்டிருக்காது. R1720:1 "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்." (தமிழில் – 2 கொரி. 5:6) F689; R374:4 "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்." (எபி. 11:6) F147, 315; E658, 689; R2654:1, 2642:6, 2425:4; NS228:1

**உலகத்தை** – இந்தப் போராட்டத்தில் உலகமே நமக்கு எதிராக இருக்கிறது; அது தனக்கென்று ஒரு பாதை வகுத்து, தேவனைப் புறக்கணித்து, தன் சுயபுத்தியின் மீது சாய்ந்து, தனது சொந்த வழியில் சென்றுகொண்டிருக்கிறது – அதன் ஆவி, அதன் பிரபலமான முறைகள், அதன் இலட்சியங்கள், நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்கள் என அனைத்தும் தெரிந்துகொள்ளப்பட்ட சபையிடமிருந்து வேறுபட்டதாய் இருக்கின்றன. R1719:3,5 தேவன் வாக்களித்துள்ள விஷயங்களில் நாம் உறுதியான விசுவாசத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், அதேசமயம் சாத்தானின், சக மனுஷரின் அல்லது நம் சொந்த கற்பனையின் மதிமயக்கும் மாறுபாடானவைகளுக்கும் கவனம்கொடுக்காமல் இருக்க வேண்டும். R5244:1 தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களின் மீதான விசுவாசமே உலகத்திலிருந்தும், அதன் யோசனைகள் மற்றும் திட்டங்களிலிருந்தும் பிரிந்து வாழ நமக்கு உதவுகிறது. NS132:4 தேவன் மற்றும் அவருடைய வார்த்தையின் மீது நமக்கு விசுவாசம் இருந்தால் மட்டுமே, தேவன் தம்மை அன்புகூருகிறவர்களுக்கு வாக்களித்த மகிமைகளையும் கனங்களையும் பெற்றுக்கொள்வதற் கேதுவாக, உலகத்தையும், அதன் இலட்சியங்களையும், (சிற்றி) இன்பங்களையும் துறந்து, அவைகளிலிருந்து பின்வாங்க முடியும். NS415:5 இப்படி நமது கர்த்தரை கெத்செமனேயில் மிகவும் கடுமையான சோதனையின் கீழ்க் கண்டு, எப்படி யாவே / யேகோவா தேவனின் கரம் அவரை ஆதரித்தது என்பதைக் காண்கையில், அது அவரது அடிச்சுவடுகளில் நடப்பதற்குப் பிரயாசம் எடுத்துக் கொண்டிருக்கும் அனைவருடைய விசுவாசத்தையும் பெலப்படுத்தக்கடவது! மேலும் இவர்களிடமே கர்த்தர், "திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று கூறினார். (யோவா. 16:33) R1801:6 இவ்வுலகம் அதின் தற்கால அதிபதியாகிய சாத்தானின் கீழாக, நீதிக்கும் நீதிமான்களுக்கும் எதிராக நின்றுகொண்டிருக்கிற இந்த யுகத்தின்போது (நாம் உலகத்தை ஜெயிக்க வேண்டும்). R2304:2, 778:1*

**ஜெயிக்கிற** – ஜெயம்கொள்வதற்கு தற்கால ஜீவியத்தின் இறுதி வரைக்கும் ஆற்றலும், குண லட்சணத்தின் வலிமையும், விடாமுயற்சியும், உறுதியோடு பொறுமையாக சகிப்பதும் தேவைப் படுகின்றன. R1719:3 "உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்பதில் போரிடுதல் பற்றிய சிந்தனையும் காணப்படுகிறது. உலகத்திற்கும் அதன் பொதுவான சுயநலம், பெருமை, இலட்சியம் போன்றவற்றிற்கும் ஆதரவாக, அவைகளோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கிற எவருமே ஜெயங்கொள்ளுபவராக இருக்க முடியாது. E237 முகஸ்துதியினாலோ, உலகத்தின் மடத்தனங்களில் பங்கெடுப்பதினாலோ, ஞாயிறு பள்ளிகளில் பாடம் சொல்லிக்கொடுப்பதினாலோ, ஏதோ ஒரு மதப் பிரிவினையைச் சேர்ந்த சபையில் அங்கத்தினராக இருப்பதினாலோ நாம் உலகத்தை ஜெயித்தவர்களாக இருக்க முடியாது. R374:4; E238 ஜெயங்கொள்வது என்பது நீங்கள் உலகத்தோடும், அதன் ஆவியோடும், அதன் வழிமுறை களோடும் இசைவாக இல்லை என்பதைக் குறிக்கிறது. R374:4; E237 "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." (வெளி. 3:21) இது உன்னதமான மற்றும் வீரமிக்க முயற்சிக்கு என்னே ஓர் ஊக்கமும் உத்வேகமுமாக இருக்கிறது! R1719:2 அர்ப்பணிக்கப்பட்ட அனைவரும் அவர்களின் பரம அழைப்பினை ஏற்றவகையில் மதித்துணர்ந்து, அவர்களின் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்வதற்குப் பிரயாசப்படுவார்களாக. R1586:4

**ஜெயம்** – ஜெயங்கொள்ளும் சக்தி. R1719:2 எல்லா நிலைமைகளிலும், கர்த்தருடைய நற்குணம் மற்றும்

உண்மைத்தன்மை மீதான முழுமையான நம்பிக்கையோடு அவரை நோக்கிப் பார்க்கவும், இறுதியில் சகலமும் நமக்கு நன்மைக்கு ஏதுவாகவே நடந்திடும் என்பதை உணரவும் முடிகிற விசுவாசம். R2627:4, 778:5*, 628:6* ஜெயங்கொள்வது என்பது சுற்றி நெருக்கி இருக்கிற பலவீனங்கள் மீதும், மீறுதல்களின் மீதும் சில வெற்றிகளைப் பெறுவதாகும், அதிலும் அதை நாமே அடையாமல், மாறாக அதை தேவனுடைய கிருபையினாலும் மாபெரும் பரிந்துபேசுபவரின் உதவியினாலும் அடைவதாகும். R5103:1 விசுவாசமில்லாமல் உங்களால் கிருபையையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ள முடியாது. R2108:3 இந்த ஜெயத்தை அப்பியாசப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள், அது உங்களுடைய தாகட்டும், அவரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். உங்கள் தேவனுடைய ஞானம் மற்றும் அன்பின் வாயிலாக, உங்கள் தோல்வியானது ஜெயம்பெறுவதற்கேதுவாக கிரியை செய்வதற்கு ஒழுங்குப்படுத்தப்படலாம். R778:4*

## 100. 1 யோவான் 5:18

### "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்."

**தேவனால் பிறந்த** – தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர். A196, 278; E235; R5938:5, 5742:2, 4830:2, 4810:6, 4252:3, 3281:5, 2235:5, 2003:6, 1697:6, 1250:6, 837:1, 374:3 கிரேக்க வார்த்தை, கென்னாவ் / gennao; இது நமது சுபாவ மாற்றத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது, மாறாக, அதின் நிறைவைக் குறிக்கவில்லை. R2440:3 ஒரு புதிய ஜீவியத்தின் / ஜீவனின், ஒரு புதிய சுபாவத்தின் தொடக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு. R5742:5 புதிய சிருஷ்டிகள். R4830:2 மாம்சம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை, மாறாக ஒரு புதிய சிந்தையே, ஒரு புதிய சித்தமே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டது. SM392:1 இது ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறது. அதைப் பெற்றுக்கொள்பவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவொளியைப் பெற்றுக்கொள்கிறார். அதன்பிறகு அவர் மாறிய மனிதனாக, புதிய மனிதனாக, புதிய சிருஷ்டியாக இருக்கிறார். அவர் இப்போது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இருக்கிறார். R5742:3 பரிசுத்தம் மற்றும் சத்தியத்தின் ஆவியால் ஜெநிப்பிக்கப் பட்டவர். R5938:5, 2440:4 சுபாவ மாற்றத்தை அனுபவித்தவர்கள்; முதலில் ஆதாமின் பிள்ளைகளாக மாம்சத்தின்படி ஜெநிப்பிக்கப்பட்டு, பின்னர் மீண்டும் தேவனால் ஜெநிப்பிக்கப் பட்டவர்கள். R5742:2

**எவனும்... என்று அறிந்திருக்கிறோம்** – புதிய சிருஷ்டிகள். R2721:3, 5491:5; Q141:5

**பாவஞ்செய்யான்** – மனப்பூர்வமாக. E461; R5742:6, 4810:6, 4252:3, 3281:5, 2440:3. 1698:2 பாவத்தைப் பயிற்றுவிக்கமாட்டான். (டயக்லாட்டு மொழியாக்கம்) R5491:6 மனப்பூர்வமாக – பாவத்தை அங்கீகரிக்கவோ அல்லது அதில் மகிழ்ச்சியடையவோ மாட்டான். R2440:3 (தேவனால் ஜெநிப்பிக்கப் பட்டவன்) மனப்பூர்வமாக, தெரிந்தே மற்றும் வேண்டுமென்றே பாவத்தில் ஈடுபடும் வகையில், பாவத்தின் மீது எந்த அனுதாபமும் கொண்டிருக்க மாட்டான். R5938:5, 2235:5 பாவத்திற்குத் தன்னை விட்டுக்கொடுக்க முடியாது – அவ்வாறு செய்வது அவர் பரிசுத்த ஆவியை இழந்து, மீண்டும் பரிசுத்தமற்றவராகிவிட்டார் என்பதைக் குறிக்கும். R5742:6 அதாவது மனப்பூர்வமாக செய்யப்பட்ட பாவம், வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவம்; மாறாக, நம் முன்னோரிடமிருந்து சுதந்தரிக்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகள் நிமித்தமான பாவங்கள் இல்லை. R5938:5, 2235:5; E235, 461 முழு அல்லது நிச்சயமான பாவம், வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவம். R5938:5, 2235:5 புதிய சிருஷ்டி பாவம் செய்வது கிடையாது. R5903:4 பாவத்தின் மீதான சிறிதளவு அனுதாபம் கூட தேவபிள்ளையைத் தூய்மையின் மையப்புள்ளியிலிருந்து விலகச் செய்திடும். R5743:1 அத்தகையவர்கள் மனப்பூர்வமாக, துணிந்து பாவம் செய்ய மாட்டார்கள், அதே சமயம் அவர்களிடம்

காணப்படுகிற மற்ற மாம்சீக அபூரணங்கள் பாவமென்று கருதப்படுவதில்லை. R1250:6 அப்படிப் பட்டவர்கள் ஒரு தவறினால் மேற்கொள்ளப்படலாம், நிதானிப்பில் தவறிழைக்கலாம், பழைய சுபாவத்தினால் ஆட்கொள்ளப்படலாம், ஆனால் ஒருபோதும் வேண்டுமென்றே பாவம் செய்ய மாட்டார்கள். R374:3 இந்த வசனம் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு நித்திய இரட்சிப்பிற்கான உத்தரவாதமாக இருப்பதில்லை, பரீட்சைகள், சோதனைகள், சிரமங்கள் போன்ற வற்றிலிருந்து விடுதலை என்பதற்கான உத்தரவாதமாகவும் இருப்பதில்லை, மாறாக ஜெநிப்பிக்கப் பட்டவர்கள் தெய்வீக மேற்பார்வையின்கீழாக இருக்கின்றனர். R4252:3 “மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.” (உரோ. 8:4) R2440:4, 2721:3 புதிய சுபாவமானது கெட்டுப்போகவோ, மரிக்கவோ முடியாது என்றும்; மனம்மாறிய ஒருவர் கிருபையிலிருந்து விழ வாய்ப்பில்லை என்றும் இந்த வசனம் போதிக்கவில்லை. R1698:1

**தேவனால் பிறந்தவன்** – கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபையின் மறுபிறப்பின் காரியத்தில் ஜெநிப்பிக்கிறவர் பரமபிதாவாயிருக்கிறார். E143 கிரேக்க வார்த்தை, கென்னாவ் / gennao. தேவனுடன் தொடர்புபடுத்தி வரும்போது, அது எப்பொழுதுமே ‘ஜெநிப்பிக்கப்பட்ட’ (beget or begotten) என்றே வழங்கப்பட வேண்டும். R837:1; A278 நாம் சுவிசேஷமெனும் சத்தியத்தின் மூலமாக ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். R836:3 பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே அவருடைய ஆவியைப் பெற்றிருப்பார்கள், அது குமாரனுடைய ஆவியாகவும் இருக்கின்றது. R5133:3 இயற்கையான ஜனனத்துக்கு ஒப்பான மூன்று நிலைகள் உள்ளன: ஜெநிப்பிக்கப்படுவது; செயல்பாடு, வைராக்கியம் மற்றும் வேலை என்பவைகளுக்காக உயிர்ப்பிக்கப்படுவது; இறுதியாக முழு ஆவியின் வல்லமைக்குள்ளாக பிறப்பது. R836:3

**தன்னைக் காக்கிறான்** – தேவனுடன் மிகவும் நெருக்கமாக இருந்து, நமது செயல்கள், நமது தோழமை மற்றும் நமது நடத்தை ஆகியவற்றைக் கவனித்துக்கொள்வதன் மூலமாக (நம்மைக் காத்துக்கொள்வது). R5743:4 இதனை, தேவஜனம் உள்ளே நுழையக்கூடிய ஒரு சக்திவாய்ந்த வட்டமாக, நம் மனக் கண்களுக்கு முன்பாக காட்சிப்படுத்திக்கொள்ளலாம்; ஒரு வேலியாக அல்லாமல், மாறாக எளிதில் தாண்டிச்செல்லக்கூடிய ஒரு வெளிச்சத்தின் கோடாக காட்சிப்படுத்திக்கொள்ளலாம். அதின் உள்ளே கர்த்தருடைய தயவு காணப்படுகின்றது; அவர் தலைவராக அதின் மையத்தில் காணப்படுகின்றார். R5148:4, 5743:1 கர்த்தரே நீதி, பரிசுத்தம், சத்தியம் என்பவைகளின் மாபெரும் மையமாக காணப்படுகிறார். நீதி, பரிசுத்தம், சத்தியத்தின் பக்கமாக இருப்பவர்கள் அனைவருமே பாவத்தை விட்டு விலகி இருப்பார்கள், மேலும் அதனுடன் எந்த உறவும் கொண்டிருக்க மாட்டார்கள். R5742:6 நம்மை நாமே ஜெயங்கொள்ள வேண்டும்; மேலும் விழுந்துபோன சந்ததியைச் சேர்ந்த இந்தச் சரீரத்தை அடக்கி வைக்க வேண்டும். R5923:6 பாவத்தின் தூண்டுதலுக்கு வளைந்து கொடுப்பதில் இருந்து (தன்னைக் காக்கிறான்). R4252:6 நமது செயல்கள், தோழமை, நடத்தை என்பவைகளில் கவனமாக இருக்க வேண்டும்; “உன்னதமானவரின் மறைவில்” தங்கியிருப்பது (சங். 91:1); “உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.” (எபி. 12:13) R5743:4 தேவனுடைய புத்திரரில் செயல்படும் தேவனுடைய ஆவியானது எப்போதும் நீதியை நேசித்து, பாவத்தை வெறுக்கிறது. R5440:2 பிசாசை எதிர்ப்பதன் மூலமும், அவனது கவர்ச்சியான வாதங்களை நம்மேல் தாக்கம் ஏற்படுத்த அனுமதிக்காததன் மூலமும்; அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் நமக்கு இருக்கின்றது. நாம் கர்த்தருடைய வார்த்தையை அன்புகூருவோமேயானால், அதன் மூலமாக வழிநடத்தப்படவே நாடிடுவோம். R5184:3 நாம் எந்தளவிற்கு கர்த்தருக்கு அருகில் காணப்படுகிறோமோ அந்தளவிற்கு நாம் தெய்வீகப் பாதுகாப்பின்கீழாக காணப்படுவோம். R5743:4 அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு தேவபிள்ளையும் தேவன் வழங்கிய தப்பிக்கும் வழியைக் கண்ணோக்கி, அதனை பயன்படுத்திக் கொள்ளலாம், இதனால் கர்த்தருடைய ஏற்பாட்டிற்கு இணங்கி, தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய

பாதுகாக்கப்பட்டவர்களில் ஒருவராகவும் இருக்கலாம். R4253:2 நாம் இப்போது விசேஷித்த சோதனை காலத்தின்கீழ் இருக்கிறோம் என்ற உறுதிப்பாடானது நம்மை ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கச் செய்ய வேண்டும்; மேலும் நாம் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபிக்கவும் வேண்டும். R2003:6 ஒரு காவலாளி வீட்டின் கோட்டையைக் காப்பது போல, தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவனும் தன்னைத்தானே ஜாக்கிரதையாகக் காத்துக்கொள்ளுவான். அவன் அனைத்து கதவுகளையும், அனைத்து உள்வரும் வழிகளையும் ஜாக்கிரதையாகக் காத்துக்கொள்ளுவான். R5742:6 "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (யூதா 1:21) எனும் கட்டளையானது தற்காலத்தைக்காட்டிலும் வேறெப்போதும் அவசியமானதொரு கட்டளையாக இருந்ததில்லை; மேலும் தற்காலத்தின் சோதனையானது அதிகளவில் தேவனுடைய அன்பில் நிலைத்திருப்பதைச் சார்ந்ததாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இது மீண்டுமாக சகோதரர் மீதான அன்பையே குறிக்கின்றது. R4253:3, 1889:5 "அவரில் நிலைத்திருங்கள்," "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்," "உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்," "பின்னானவைகளை மறந்துவிடுங்கள்," உலகப்பிரகாரமான இச்சைகள் மற்றும் இலட்சியங்கள் உட்பட "உங்கள் மாம்சத்தை அழித்துவிடுங்கள்." எப்போதும் எஜமானருடன் நெருங்கியே காணப்படுங்கள். R5148:5 முதன்முதலில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவராகிய நமது கர்த்தராகிய இயேசு, அதேபோல ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இளைய சகோதர சகோதரிகள் அனைவரையும் காத்துக்கொள்வார், சாத்தான் அவர்களைக் காயப்படுத்தாதபடிக்குப் பாதுகாத்துக்கொள்வார். R4252:3 திருச்சபையார் மாபெரும் எதிராளியால் சூழப்பட்டு, அக்கினி போன்ற சோதனைகளைப் பெற்றிருக்கின்றனர், ஆனாலும் முந்தி தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆண்டவராகிய இயேசுவின் பாதுகாப்பையும் பெற்றிருக்கின்றனர், அவர் உண்மையுள்ளவர்களை எதிராளியின் வல்லமையிலிருந்து காத்து வருகிறார். R4253:1

**பொல்லாங்கன்** – சாத்தான் என்கிற ஒருவன் இருக்கிறான் எனும் உண்மையானது இப்போது பலராலும் மறுக்கப்படுகிறது. F609 எதிரி. R4870:4 எதிராளி. R4252:6 சாத்தான் ஒரு தந்திரமான எதிராளியாகக் குறிப்பிடப்படுகிறான். R5743:1, 1889:2, 1684:6 பாவம், சந்தேகம் மற்றும் நம்பிக்கையிழந்த நிலை எனும் இருளுக்குள்ளாக நம்மை இழுத்துச் செல்ல எதிராளி எப்போதும் ஆயத்தமாய்க் காணப் படுகிறான். R5148:5 எந்தளவிற்கு நாம் நமது நேர்மையிலிருந்து (loyalty) வழுவி அலைந்து திரிகிறோமோ, அந்தளவிற்கு நாம் எதிராளி பக்கமாக நெருங்கி வந்துகொண்டிருக்கிறோம். R5743:4 புதிய சிருஷ்டிகள் பொல்லாங்கனிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். R4830:2, 5923:6 நம்மைச் சூழ்ந்துகொள்ளும் ஒவ்வொரு சோதனையும் அல்லது கஷ்டமும் பிசாசினால் உண்டானவை என்று நாம் நினைக்க வேண்டியதில்லை, மாறாக "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நினைவில் வைக்க வேண்டும். (யாக். 1:14) R4810:6 ஒளியின் பிள்ளையை வஞ்சிப்பதற் கேதுவாக, சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்ளுகிறான்; ஏனென்றால், பாவத்தின் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக் கொண்டால், அவர்களை வஞ்சிக்க முடியாது என்பதை அவன் நன்கு அறிவான். R5184:2 சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்த பிறகு, பாவத்தை மிகவும் நேசித்து, மனப்பூர்வமாக அதைச் செய்து, அதை அங்கீகரிப்பவர்கள், இருளின் பிள்ளைகளாக இருக்கிறார்கள் – இவர்கள் இருளை அன்புகூர்ந்து, அதன் மூலமாக தாங்கள் சாத்தானின் ஆவி அல்லது சுபாவத்தைப் பெற்றிருப்பதை எடுத்துக் காட்டுகிறார்கள். R5938:6, 2235:5 இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் தீங்கு நாளானது, தேவ ஜனம் இதுவரை அறிந்திராத மிகவும் கடுமையான சோதனைகளைக் கொண்டிருக்கும், மேலும் அந்தச் சமயத்தில் அவர்களுக்கு சத்தியம் மற்றும் நீதியின் கவசம் மிகப்பெரியளவில் தேவைப்படும். R4253:1

**அவனைத் தொடான்** – அவர்களைப் பிடித்துக்கொள்ளுவதில்லை. R2161:1, 1697:6 காயப்படுத்து வதில்லை. R5742:6, 4252:6 நம்மை மனரீதியாகவோ, ஒழுக்க ரீதியாகவோ அல்லது

வேறுவிதமாகவோ சிக்க வைக்க. CR441:2 சிறு மந்தையார் பாவத்தை மிகவும் மனப்பூர்வமாக எதிர்க்கின்றனர், மேலும் தங்கள் வஸ்திரங்களைக் கறைபடாமல் வைத்திருப்பதில் மிகுந்த ஊக்கத்துடன் காணப்படுகின்றனர், இதனால் எதிராளியால் அவர்களைப் பிடிக்க முடியாது. R2161:1, 4870:4, 1799:6 நாம் நமது சொந்த உண்மையற்றத்தன்மையால் சிக்கிக்கொண்டாலொழிய, மற்றபடிக்கு புதிய சிருஷ்டிகளாகிய நம்மை எதிராளியால் ஒருபோதும் தொட முடியாது. R5540:4,2, 5742:6, 4252:6, 1799:6; Q649:1 நாம் நம்மைக் கர்த்தருக்கு வெகு அருகில் வைத்துக்கொள்ள வேண்டும், சத்தியத்திற்கு அருகில் வைத்துக்கொள்ள வேண்டும், இதனால் எதிராளியானவனால் நம்மைத் தொட முடியாது. CR441:2; R5148:5 நாம் பிசாசுடன் தனிப்பட்ட வகையில் சண்டையில் ஈடுபடக்கூடாது. நாம் அவனுக்கு சரிசமமானவர்களல்ல. மாறாக, நாம் அவனை எதிர்த்து மாத்திரம் நிற்க வேண்டும். R5923:6, 5184:3 எதிராளியின் சோதனைகளுக்கு மத்தியிலும் கர்த்தர் அத்தகைய பாதுகாப்பையும், தற்காப்பையும், உதவியையும் வழங்குகிறார், இவை நாம் ஜெயம்கொண்டவர்களாக மாறுவதற்கும், சோதனைக்கு அடிபணியாமல் இருப்பதற்கும் நமக்குத் தேவையானவையாக இருக்கின்றன. R4252:6 "சோதனையில் எங்களைக் கைவிடாமல், பொல்லாங்கனிடமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்" – அவன் எங்களைத் தொடவோ, காயப்படுத்தவோ, தூக்கியெறியவோ, அழிக்கவோ அனுமதிக்காதீர் என்று நாம் ஜெபிக்கிறோம். R4252:6 கர்த்தருடைய சிந்தைக்கு முழு இசைவாக காணப்படாத வைகளோடு ஆதரவு கொண்டிருப்பது என்பது நம்மை ஆபத்திற்கு அருகில் அழைத்துச் செல்லும்; மாபெரும் எதிராளியாலும் அவனுடைய பிசாசு கூட்டத்தாலும் பிடித்துக்கொள்ளப்படும் அபாயத்தில் நாம் இருப்போம். R5743:1, 5148:5 நமக்கான சக்திவாய்ந்த வட்டத்திற்கு வெளியே தீய சக்திகளே காணப்படுகின்றன. இவை சில நேரங்களில் நமது பூமிக்குரிய நலன்கள் மற்றும் இம்மைக்குரிய காரியங்களைத் தொடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் புதிய சிருஷ்டியைத் தொடுவதற்கு இந்தப் பேய்களின் செல்வாக்கிற்கு எந்த அனுமதியும் கிடையாது. R5148:5 சாவுக்கேதுவான சரீரம் மரித்ததாகக் கருதப்படுகிறது, மேலும் அந்நபரது சிந்தை மற்றும் சித்தமானது தேவனுடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய சிருஷ்டியாகக் கருதப்படுகிறது. இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒரு புதிய சிருஷ்டியை 'பரிசுத்தமானவர்' என்று கூறலாம். R5035:3 ஆவியுலகத்துடன் தொடர்புகொள்வது எனும் நம்பிக்கை, வேதாகம விமர்சனம், கிறிஸ்தவ அறிவியல் என்பது போன்ற கொள்ளைநோய்களாலும், அம்புகளினாலும் சிறு மந்தை தள்ளுண்டு போவதில்லை. "எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்." (சங். 91:9) SM289:2 தெய்வீக அனுமதி யின்றி தேவ ஜனத்தின்மீது சாத்தானுக்கு எந்த அதிகாரமும் கிடையாது, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், கிறிஸ்துவில் அவருடன் செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக அவர்கள் நிலைத்திருந்தால், அவர் அனுமதிக்கும் அனைத்துமே அவர்களின் நன்மைக்கேதுவாகச் செயல்படும். R1684:6, 4660:5, 2721:3 கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கும்போது, நாம் முற்றிலும் பாதுகாப்பாக இருக்கிறோம் – ஆனால் ஆர்வத்தினால் (curiosity), சிறிதளவு சித்தத்தை விட்டுக்கொடுத்தாலும் அது ஆபத்தையே கொண்டுவரும். R5355:1 எவரேனும் எதிராளியால் தொடப்பட்டு, தற்காலிகமாக கண்ணியில் சிக்கினால், தேவன் இரக்கமுள்ளவர், அவருடன் இணக்கமாக வாழ விரும்பும் அனைவருக்கும் அவருடைய இரக்கம் என்றென்றும் நிலைத்திருக்கும். R5148:5 ஒருவன் உண்மையில் பாவம் செய்யாமலேயே தனக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. அவனுடைய இருதயம் இன்னும் கர்த்தருக்கு உண்மையாக இருக்கின்ற போதிலும், ஏதோ ஒரு விதத்தில் மற்றவர்களுடன் ஈடுபடுவதன் மூலமாக, அவன் பாவத்தால் தொடப்படலாம். R5743:4 தமது உண்மையுள்ள சீஷரின் பாதுகாப்பிற்காகவும், பொல்லாங்கனிடமிருந்து அவர்களை விடுவிப்பதற் காகவும், கர்த்தர் மாபெரிய அற்புதங்களைச் செய்ய வல்லவராயிருந்தாலும், அவர் பொதுவாக மனித கருவிகளையே பயன்படுத்துகிறார். R4252:6 தற்கால சத்தியமே பொல்லாங்கனுடைய வல்லமை யிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்காக கர்த்தர் அருளியிருக்கும் விசேஷித்த ஏற்பாடாக இருக்கிறது – அந்தத் தற்கால சத்தியத்தை, கர்த்தர் பெரும்பாலும் காவற்கோபுர வெளியீடுகள் மூலமாக அருளியிருக்கிறார். R4253:3

## 101. வெளிப்படுத்தல் 2:10

**"நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்."**

**இதோ... பிசாசானவன்** – புறமத உரோம் (Pagan Rome), அதன் இரத்தம் தோய்ந்த துன்புறுத்தல்களை வைத்துப் பார்க்கும்போது, சகல பூமிக்குரிய இராஜ்யங்களிலேயே இது மிகவும் பிசாசுத்தனமாக (most devilish) இருந்துள்ளது. R5992:6, 491:2*, 351:6*; A258 சாத்தானும் அவனுடைய சேனைகளுமே, வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு (1 தெச. 5:5) ஏற்படும் பெரும்பாலான துன்புறுத்தலுக்குக் காரணமாக இருக்க வேண்டும். SM549:2 மாபெரும் எதிராளியாகிய சாத்தான் என்கிற ஒருவன் இருக்கிறான் என்பதே இப்போது பலராலும் மறுக்கப்படுகிறது. F609

**நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாக** – கிறிஸ்தவ சகிப்புத்தன்மையின் மிக உன்னதமான காட்சிகளில் சில, ஸ்மிர்னா காலக்கட்டத்தின்போது தீட்டப்பட்டன. R5992:6, 491:2*

**காவலில்** – இவ்வாறு, கர்த்தர் தமது உண்மையுள்ள ஊழியர்களிடம், இந்த சிமிர்னா காலக்கட்டம் மாபெரும் துன்புறுத்தலின் காலமாக இருக்கும் என்று அறிவித்தார். R5992:6

**பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்** – அடையாளமான நாட்கள், உரோம பேரரசர்களின் கீழாக, அதாவது, டயக்லிஷியனின் ஆட்சியில் (Diocletian), கி.பி. 303 – 313ல் நடந்த, கடைசி மற்றும் மிகக் கடுமையான உபத்திரவத்தைக் குறிப்பிடுகிறது. R5992:6, 491:2*, 351:6*, 306:3 வில்சன் என்பவரின் அவுட்லைன் ஆஃப் ஹிஸ்டரி என்பதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோள் (Wilson's Outline of History). R351:6*

**மரணபரியந்தம்** – "நீங்கள் மனுஷரைப்போலச் செத்து." (சங். 82:7) F444 அவருடன் அரசாளப்போகிற இராஜாக்கள் இந்த வாழ்க்கையில் இராஜாக்களாக முடிசூட்டப்படவோ ஆளவோ மாட்டார்கள். A284 பலியானது மரணத்தில் நிறைவடையும் வரைக்கும் நிலைத்திருக்கக்கூடிய ஓர் உண்மைத்தன்மை. R5914:4, 5858:6, 3211:6; OV194:3 திருச்சபையின் கீழ்ப்படிதலே கீழ்ப்படிதலின் உச்சமாகும் (extreme of obedience.) R5844:6 மரணத்தின் மூலமான வெற்றி. R5495:6 சில சந்தர்ப்பங்களில் (மரணம்) முன்கூட்டியே வரலாம் (எ.கா.: பரி. ஸ்தேவான்); மற்றவர்களுக்கோ, தாமதமாக வரலாம் (எ.கா.: பரி. பேதுரு). R5173:6 பூமிக்குரிய காரியங்களைப் பலிசெலுத்துபவர்களால் மாத்திரமே பரத்திற்குரிய காரியங்களை அடைய முடியும். R4902:4 நிச்சயமாக ஓட்டத்தின் முடிவுவரைக்கும், ஒரு போராட்டம், ஒரு யுத்தம், போய்க்கொண்டிருக்க வேண்டும். OV182:1 "போதும். மேலே வா" என்று எஜமானர் சொல்லும் வரைக்கும். R5063:3 இந்த உண்மைத்தன்மையானது வாழ்க்கைப் பயணத்தின் இறுதி வரை சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டியிருக்கிறது. R3973:6; F445 நாம் சேவிக்கும் கர்த்தர் மரணச்சிறைச்சாலை கதவுகளைத் திறந்து, முதலாம் உயிர்த்தெழுதலில், தம்முடைய சொந்த இராஜ்யத்தின் மகிமை, கனம், அழியாமை என்பவைகளில் நம்மைப் பங்கடைய செய்வதற்கு வல்லவராயும் சித்தமுள்ளவராயும் இருக்கிறார். R3973:6; F445 எப்படி எஜமானர் "மரணபரியந்தம் உண்மையுள்ளவராய்" இருந்தாரோ, அதுபோல, தொடர்ந்து உண்மையுள்ளவர்களாகவும், கீழ்ப் படிதலுடனும் இருப்பவர்களுக்கு, சோதனையின் இறுதித் தருணமானது மரணத்தின் போது இருக்கும் (final moment of crisis is at death). R669:6 மரணத்தின் மூலமாக வெற்றிபெறும் இராஜாக்கள். R5495:4 பரி. ஸ்தேவான் அன்பின் ஆவியில் மரணத்தை ஏற்றுக்கொண்டது அவருடைய வெற்றியின் உச்சக்கட்டமாக இருந்தது. R5858:5, 2108:3 கர்த்தரிடமான நமது அர்ப்பணிப்பானது இரட்சகரால் குறிப்பிடப்படும் காலம் வரைக்கும் தொடர வேண்டுமே அல்லாமல், கி.பி. 1914ம் ஆண்டு அக்டோபர் வரையிலாவது அல்லது வேறெந்த காலம் வரையிலாவது இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது.

R5336:5 இது ஒரு நாள் மட்டும் அல்லது ஒரு வருடம் மட்டும் செலுத்தும் பலி கிடையாது. R3685:5 சிலுவையின் பின்னடியார்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவர்கள் மாபெரும் பரிசினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அதிபதியின் முன்மாதிரியைப் பின்பற்றிட வேண்டும். R3273:1, 3281:4 இது கர்த்தருக்கு அர்ப்பணித்த பிறகு வெறுமனே மரிப்பதை மாத்திரம் அர்த்தப்படுத்துவதில்லை (ஏனெனில், சபையும் மரிக்கிறது, திறள்கூட்டமும் மரிக்கிறது, மாறாக மரணபரியந்தம் உண்மையுள்ள வர்களாக இருந்து மரிப்பதே காரியமாகும்). R5914:2

**உண்மையாய்** – முழு விசுவாசத்துடன். R5914:1 கர்த்தருடைய வேலையைப் புறக்கணித்துவிட்டு, உலகம் அளித்திடும் நிலையில்லாத அற்ப சந்தோஷங்களையும், வெகுமதிகளையும் அடைய பிரயாசப்படாமல் இருப்பது. C225; R1113:4 தேவனிடம் நேர்மையும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள். CR158:4; R5914:1; NS62:5 ஓர் உண்மையுள்ள ஊழியக்காரன், தன் எஜமானிடத்தில் நம்பிக்கை பெற்றவனாக தன் தகுதியை நிரூபித்து, தன்மேல் வைக்கப்பட்ட நம்பிக்கையை ஒருபோதும் வீண் போகாதபடிக்குக் காத்துக்கொள்வான். R5914:1 இயேசுவைப் பின்பற்றும் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். R5473:4 முதலில் அர்ப்பணிப்புக்கு வழிவகுத்த அந்த விசுவாசத்தை, துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், உறுதியாகப் பற்றிக்கொள்வது. (2 கொரி. 6:8) R5914:1, 5858:6 கிரியைகளைப் பொருட்படுத்தாமல், விசுவாசத்திற்கான பரிசாக நம்முடைய நீதிமானாக்கப்படுதல் நமக்கு கிடைத்திருக்கின்றது, ஆனால் நமது மகிமைப்படுத்தப்படுதலோ நாம் உண்மையாயிருப்பதன்பேரிலேயே நமக்கு வெகுமதியாக கிடைக்கும். R5090:5 கோதுமை வகுப்பார் கர்த்தருக்குத் தங்கள் உண்மைத்தன்மைக்கான விலையாக தங்களுடைய ஜீவனையே கையளிக்கத் தயாராக இருக்க வேண்டும். அவர்களின் பிரதிஷ்டையானது மரணத்திற்கான அர்ப்பணிப்புக்கு நேராய் வழிவகுக்கும் என்பது உறுதி, இந்த அர்ப்பணிப்பானது இறுதியில் சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவடையும். R2778:4 தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாக அடிபணிவது. R5495:6 கர்த்தருக்கு உண்மையாயிருப்பது, இதில் சகோதர சகோதரி களுக்கும், சத்தியத்திற்கும், எல்லா வகையிலும் நீதிக்கும் உண்மையாயிருப்பதும்கூட உள்ளடங்கியிருக் கின்றது. R3973:6 தேவனுக்குச் சொந்தமான நமது சரீரத்தினாலும், நமது ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த நாடுவது. (1 கொரி. 6:20) R5090:5 நாம் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை அன்புகூருகிறோமா அல்லது சுயத்தை அன்புகூருகிறோமா என்பதை நிரூபிப்பது; ஜீவகிரீடம் எனும் மாபெரும் பரிசை வெல்வதற்காய் எல்லாவற்றையும் கையளிக்குமளவுக்கு அவரில் நமது நம்பிக்கை காணப்படுகின்றதா என்பதை நிரூபிப்பது. R5914:1 தேவனிடம் முற்றிலும் நேர்மையாக இருக்கிறோம் என்பதை நிரூபிக்கின்றவர்களைக் கொண்டே, எதிர்காலத்தின் அந்த மகிமையான வேலை நிறைவேற்றப்படும். R5461:4 சபை இப்போது விசாரணை அல்லது நியாயத்தீர்ப்பின்கீழ் உள்ளது, மேலும் உண்மையுள்ளவர்களுக்கே வெகுமதி அளிக்கப்படும். Q794:4 அவர்கள் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில், அவருடன் அவருடைய மகிமை, கனம், அழியாமையில் பங்கடைவதற்கான உத்திரவாதத்தை அவர்கள் பெற்றுள்ளனர். SM275:T, 668:1; F444; R2647:3; NS451:5; OV308:3

**நீ... இரு** – சபை வகுப்பார் ஒவ்வொருவரும். R5824:3, 5069:4 மணவாட்டி வகுப்பார். R5069:4 சுவிசேஷயுக சபை – அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள். R3327:4, 306:2 கர்த்தருடன் ஒரு விசேஷித்த ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கு இந்தச் சிலிர்ப்பூட்டும் அறிவுரையானது அளிக்கப்படுகின்றது. R5913:3

**ஜீவகிரீடத்தைத் தருவேன்** – "கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடம்." (யாக். 1:12) "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது." (2 தீமோ. 4:8) "பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்." (1 பேது. 5:4)

R3211:6 மிக உயர்ந்த தளத்தில் இருக்கும் ஜீவன்; உள்ளார்ந்த ஜீவன்; நித்திய நித்தியத்துக்குமான ஜீவன்; அழியாமை. R3211:6, 5992:6, 5914:4, 5608:6, 4668:6 ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு ஜாக்கிரதையாயிரு. (வெளி. 3:11) E490 அத்தகைய கீழ்ப்படிதல் முழு பிரபஞ்சத்திலேயே சிறந்ததொரு தரநிலையாக மாறியுள்ளது எனுமளவிற்கு மிகவும் உயர்ந்த வெகுமதியொன்றை பிதா அதற்கென்று வைத்துள்ளார். R5844:6 தமக்குக் கீழ்ப்படிகிற தம்முடைய பின்னடியார்கள் அனைவருக்கும் இயேசு சகாயம்செய்து, அவர்களைப் பரலோக இராஜ்யத்திற்கு நேராய் வழிநடத்திடுவார். R5473:4 அவர் அவர்களுக்கும் நமக்கும் சோதனைகளையும், அதற்கேற்ற உதவிகளையும் அருளுவார் என்றும், இறுதிவரை நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நமக்கு “ஜீவகிரீடம்” தருவார் என்றும் உறுதியளித்துள்ளார். PD66/78 “முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர் களுக்கு” அருளப்பட்டது. உயரிய ஜீவனுக்கான கிரீடம். R5914:4, 5608:6 விசுவாசத்தின் எதிர்கால சுதந்தரம். R3518:5 நாம் இயேசுவோடு ஆளுகைசெய்ய வேண்டுமெனில் அவருடன் பாடுபட வேண்டும் எனும் தற்கால அழைப்பானது அவரது சரீரத்தில் அங்கத்துவமடைவதைக் குறிக்கின்றது. R5913:6 கர்த்தர் எதிர்பார்க்கும் அனைத்து நியாயமான தேவைகளையும் இருதயத்தின் நேர்மையினால் பூர்த்தி செய்பவர்களுக்குக் கிடைக்கும். R5702:6 “இராஜாவினுடையவர்கள்” வெற்றிபெறுவதற்காகவே அழைக்கப்பட்டுள்ளனர், மாறாக தோல்வியுறுவதற்காக அல்ல. NS62:1 “நாம் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுவோமாக.” இலக்கு சமீபித்திருக்கிறது! (1 கொரி. 9:24) R5914:4 மத். 25:21, 23ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும். R5914:1 தங்கள் கிரீடத்தைப் பறிகொடுத்தவர்கள் தேவனுடைய எதிரிகளில் ஒருவராக அல்லது திரள் கூட்டத்தாரில் ஒருவராக எண்ணப்படுவார்கள். R2942:5 திரள்கூட்டத்தார் கிரீடங்கள் அணிந்து, சிங்காசனத்தில் அமர்வதற்குப் பதிலாக, கைகளில் குருத்தோலைகளுடன், சிங்காசனத்தின் முன்பாக நின்றுகொண்டிருப்பார்கள். SM362:T; R5533:4, 4871:1

## 102. வெளிப்படுத்தல் 2:11

**“ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.”**

**சபைகள்** – ஏழு காலக்கட்டங்களில் இரண்டாம் பாகத்தைச் சேர்ந்த எல்லா சபைகள். HG97:6

**காதுள்ளவன்** – கீழ்ப்படிதலுள்ள தாழ்மையான இருதயம். OV309:1 விசுவாசத்தின் காது என்பது சாந்தகுணமும், நேர்மையான இருதயமும், சத்தியம் நீதி மீதான வாஞ்சையும் உள்ளவர்களுக்குத் தேவன் அருளும் விசேஷித்த தயவாகும். R4557:2 உலகின் காதுகள் கேட்க முடியாத மந்தமான, “கேளாத / deaf” காதுகளாக இருக்கின்றன. திருச்சபையின் பணி இவர்களுக்கானது அல்ல, மாறாக சத்தியத்தை வாஞ்சிப்போருக்கானதாய் இருக்கின்றது. R2414:4, 336:5*; CR344:1

**கேட்கக்கடவன்** – தீர்க்கதரிசன சத்தியங்களின் சாட்சியைப் பெறக்கடவன். B16 சில செய்திகள் அனைவருக்குமானது அல்ல என்பதைக் காட்டுவதற்கு இயேசு அடிக்கடி இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். R336:5

**ஜெயங்கொள்ளுகிறவன்** – இந்த யுகத்தின்போது, முன்னோடியானவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள். (எபி. 6:20) R649:2 வெற்றி பெறுகிறவன். (உரோதர்ஹாம் மொழியாக்கம்) உலகத்தை ஜெயங்கொள்ளுகிறவர்கள். R649:5 இந்தத் தற்கால ஜீவியத்தில், கர்த்தருக்கும் ஜெயங்கொள்பவர்களுக்கும் இடையே தனிப்பட்ட அந்தரங்கமான நட்பொன்று உள்ளது. R5113:4 நித்தியத்திற்குமான சந்தோஷம் மற்றும் கனத்திற்கான வாக்குத்தத்தம். (சங். 16:11) R5993:2

**இரண்டாம் மரணத்தினால்** – தற்போதைய யுகத்தில் ஆதாமுடனோ அல்லது ஆதாமுக்குள்ளோ

(முதலாம்) மரணத்தைப் பகிர்ந்துகொண்ட பின்பு, ஆவியினால் எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடன் மரிப்பதற்குத் (இது அவனது சட்டப்பூர்வமான இரண்டாம் மரணமாகும்) தன்னை அர்ப்பணிக்கிறவன் அதனால் (கிறிஸ்துவுக்குள்ளான இந்த இரண்டாம் மரணத்தினால்) சேதப்படுவதில்லை. R528:1*, 514:5 இரண்டாம் மரணம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வேத வாக்கியமும் மனப்பூர்வமான பாவிகளின் வகுப்பாரைக் குறித்தே கூறுகின்றது, அதாவது தேவையான அறிவும் திறனும் இருந்த போதிலும், பாவத்தை விரும்பி, நீதியை வெறுக்கும் மனப்பூர்வமான பாவிகளின் வகுப்பாரையே குறிக்கின்றது; ஆனால் இந்த வேத வாக்கியம் மட்டும் விதிவிலக்காகும், இது மனப்பூர்வமாக பாவம்செய்த வகுப்பாருக்கான இரண்டாம் மரணத்தைக் குறித்து குறிப்பிடுவதில்லை. மாறாக, ஜெயங்கொள்ளுகிற வகுப்பார் ஆதாமுடன் பகிர்ந்துகொண்ட முதலாம் மரணத்தைத் தவிர, மற்றொரு மரணமொன்றை, அதாவது கிறிஸ்துவுக்குள்ளான மரணமொன்றைச் சந்திக்க நேரிடும், அந்தக் கிறிஸ்துவுக்குள்ளான இரண்டாம் மரணத்தின் விளைவாக ஜெயங்கொள்ளுகிற வகுப்பார் சேதமடைய மாட்டார்கள் என்பதையே இது நமக்கு உறுதியளிக்கிறது. R649:5 ஜீவனா இரண்டாம் மரணமா என்கிற சோதனையின்கீழ் காணப்படும் அனைவருக்கும், தற்காலமே, நியாயத்தீர்ப்பு நாளாக இருக்கின்றது. R1391:6 ஒழுங்குப்படுத்தப்படுதல் (discipline) மற்றும் அனுபவம் (experience) இருந்தபோதிலும், இன்னுமே யாரேனும் மாம்சத்தின்படி ஜீவிக்க விரும்பினால், அவர்கள் மரித்துவிடுவார்கள் (உரோ. 8:13) என்பதே அப்படிப்பட்டவர்களுக்கான அப்போஸ்தலனின் எச்சரிக்கையாக இருக்கின்றது, மேலும் அவர் இங்கே இரண்டாம் மரணத்தையே குறிப்பிடுகின்றார். R1699:5,6 சாத்தானும், அவனுடைய தீய வழியுடனும் இணைந்துள்ள அல்லது ஆதரவாயுள்ள அனைவரும் என்றென்றைக்குமாக அழிக்கப்படுவார்கள். F459; NS73:5 முதலாம் மரணம் பதிவாகி ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, வேதாகமத்தின் கடைசிப் பகுதியை அடையும் வரைக்குமே, இரண்டாம் மரணம் குறிப்பிடப் படவில்லை. இரண்டாம் மரணம் குறிப்பிடப்படுவதற்கு முன்பு, “மரணத்துக்கு ஏதுவான பாவம்” என்கிற இரண்டாம் பாவம் குறிப்பிடப்பட்டுள்ளது. (1 யோவா. 5:16) R1478:1*

**சேதப்படுவதில்லை** – எந்த வகையிலும், (கிறிஸ்துவுக்குள்ளான) இரண்டாம் மரணத்தின் விளைவாக காயமடைவதில்லை. (உரோதர்ஹாம் மொழியாக்கம்) R649:2, 514:5 சபையின் இந்தக் காலப்பகுதியின் போது தேவனுடைய உண்மையான பிள்ளைகள் மரணத்தை அனுபவித்தனர், ஆனால் அவர்கள் (கிறிஸ்துவுக்குள்ளான) இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்று உத்வேகமளிக்கப் பட்டார்கள். HG97:6 இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமானால், சுவிசேஷயுகச் சபையின் ஜெயங்கொள்ளுகிற வகுப்பாரைத் தவிர மற்ற அனைவருமே இரண்டாம் மரணத்தினால் பெரிதும் சேதமடைவார்கள். R649:5

## 103. வெளிப்படுத்தல் 2:17

**“ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது.”**

**காதுள்ளவன்** – கீழ்ப்படிதலுள்ள தாழ்மையான இருதயம் (உள்ளவன்). OV309:1 உலகின் காதுகள், கேட்க முடியாத மந்தமான, “கேளாத / deaf” காதுகளாக இருக்கின்றன. திருச்சபையின் பணி இவர்களுக்கானது அல்ல, மாறாக சத்தியத்தை வாஞ்சிப்போருக்கானதாய் இருக்கின்றது. R2414:4, 336:5*; CR344:1 விசுவாசத்தின் காது என்பது சாந்தகுணமும், நேர்மையான இருதயமும், சத்தியம் நீதி மீதான வாஞ்சையும் உடையவர்களுக்குத் தேவன் அருளும் விசேஷித்த தயவாகும். R4557:2

**கேட்கக்கடவன்** – தீர்க்கதரிசன சத்தியங்களின் சாட்சியைப் பெற்றுக்கொள்வது. B16 சில செய்திகள் அனைவருக்குமானது அல்ல என்பதைக் காட்டுவதற்கு இயேசு அடிக்கடி இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார். R336:5

**ஜெயங்கொள்ளுகிறவனுக்கு** – இப்போது இந்த வாழ்க்கையில் கர்த்தருக்கும், ஜெயங்கொள்ளுபவர்களுக்கும் இடையே தனிப்பட்ட அந்தரங்கமான நட்பொன்று உள்ளது. R5113:4 சபை வளர்ச்சியின் இந்தக் காலக்கட்டத்தின்போது பிரபலமாக இருக்க விரும்பியவர்கள், சபையிலிருந்து சேவைக்கான ஊதியங்களைப் பெற்றுக்கொண்டனர்; ஆனால் ஜெயங்கொள்ளுபவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள வெகுமதியானது என்றென்றைக்குமான மகிழ்ச்சி மற்றும் கனம் சார்ந்ததாய் இருக்கின்றது. R5993:2, 491:4*

**மறைவான மன்னா** – அழியாமையானது உடன்படிக்கைப் பெட்டியிலிருந்த மன்னாவின் பொற்பாத்திரத்தால் நிழலாகக் காண்பிக்கப்பட்டது. T122, 123; R4012:1, 360:1* கெட்டுப்போகாமல் இருப்பது என்பது, அழியாமை ஜீவனை அனுபவிக்கப்போகிற சிறுமந்தையாகிய முதற்பேறானவர்களின் சபைபேரிலான தேவனுடைய கிருபையைப் பிரதிபலிக்கிறது. R4012:1; T123 ஆவிக்குரிய போஜனமாகிய, தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது; மேலும் ஜீவனுள்ள வார்த்தை, மெய்யான ஜீவ அப்பம் என்பதையும் குறிக்கிறது. (யோவா. 6:47 – 51) R360:1* உண்மையுள்ள இருதயத்தோடு, கர்த்தருடைய மேசையில் என்னென்ன நன்மையானவைகள் இருக்கின்றன என்பதைத் தாங்களே ருசித்துபார்ப்பதற்காய் வருபவர்களால் மாத்திரமே எப்போதும் இதனை அறிந்துகொள்ள முடியும். “மறைவான மன்னா” அப்படிப்பட்டவர்களுக்கானதாகும். R1957:6 சொல்லர்த்தமான இஸ்ரயேலின் பிரயாணங்களில் அவர்களைப் பராமரித்தவர், அன்றைக்கு தொடங்கவிருந்த மிகவும் களைப்படையச் செய்யும் பயணத்திலும் இவர்களைக் கவனித்துக்கொள்வார் எனும் பெர்கமு சபைக்கான ஓர் உறுதிமொழி. R360:1* பாழாக்குதல் மற்றும் மரணத்தின் போது, அனைத்து துன்புறுத்தும் சக்தியிடமிருந்து, கிறிஸ்துவோடு தேவனுக்குள்ளாக மறைக்கப்பட்டிருக்கக்கூடிய ஜீவனுக்கான ஒரு வாக்குத்தத்தம். R360:1*

**வெண்மையான குறிக்கல்லையும்** – இருதயத்தில் பரிசுத்த ஆவியின் முத்திரை. E247 பரிசுத்த ஆவியின் முத்திரிக்கப்படுதல், இதன் மூலமாக கர்த்தர் ஜெயங்கொள்ளுபவர்களை அடையாளங் காண்கிறார். R5113:4 கர்த்தருடைய அன்பின் விலையேறப்பெற்ற அடையாளத்தைக் குறிக்கிறது. R5113:2, 5863:1 1820:6 அதிகாரத்தின் சின்னம், அதின் வெண்மை நிறமானது ஆளுகையின் பரிசுத்தத்தைக் (purity) குறிக்கின்றது. “உம்முடைய இராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.” (எபி. 1:8) R360:4* பழங்காலத்தில் ஒரு வெள்ளைக் கல் பாதியாக பிட்கப்பட்டது, மேலும் அந்தக் கல்லைக் காட்டும்போது, நட்புரீதியான உதவி கிடைத்தது. இவ்வாறு பிரிக்கப்பட்ட கல்லானது அடையாளங்காண்பதற்கான குறியாக மாறியது. R5113:1

**அதைப் பெறுகிறவன்** – நாம் கர்த்தருக்கு எந்த நாமத்தால் அறியப்படுவோம் என்பது பற்றிய முழுமையான அறிவினை நாம் உயிர்த்தெழுதலின்போது பெற்றுக்கொள்வோம். R5113:5 நமது (அவரவருடைய) புதிய நாமத்தை, அதைப் பெற்றுக்கொள்பவர்களே அன்றி, வேறு யாருக்கும் தெரியாது; ஏனெனில், அது “கர்த்தர் நம்முடைய நீதி” என்பதாகும். R238:5*

**அவனேயன்றி** – ஜெயங்கொள்ளுபவர்கள் ஒரு வகுப்பாராக மாத்திரம் அங்கீகரிக்கப்பட மாட்டார்கள், மாறாக ஒவ்வொருவருக்கும் கர்த்தருடைய தனிப்பட்ட தயவு இருக்கும். R5113:4 கர்த்தருக்கும் ஜெயங்கொள்ளுபவர்களுக்கும் இடையே தனிப்பட்ட அந்தரங்கமான நட்புபொன்று உள்ளது – நிஜமான வெண்மையான குறிக்கல்லாகிய பரிசுத்த ஆவியின் முத்திரிக்கப்படுதலை இவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். R5113:4

**வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய** – "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரி. 2:14) R1820:6 அதேசமயம், அன்றாட வாழ்வில் பரிசுத்த ஆவியின் கனிகள் வெளிப்படுவதை மற்றவர்களால் பார்க்கக்கூடும். E247

**எழுதப்பட்டதும்... ஆகிய... புதிய நாமத்தை** – மணவாட்டியின் நாமம். R5863:1, 5113:2, 1820:6 கிறிஸ்துவின் நாமம். R2571:5 நமது பிரியமானவரின் நாமம், இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர். R360:4* நமது கர்த்தர் தம்முடைய மாபெரும் வல்லமையில், தமது ஆளுகையைத் தொடங்கியபோது அவர் பெற்றிருந்த நாமம் – ஆளுகை தொடங்கியதிலிருந்து அவருடைய சரீர அங்கங்களுக்கு இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு நாமம். R360:4* இனிமேல் அது நமதாயிருக்கும்; "தமது நாமத்திற்காக ஒரு ஜனம்." (அப். 15:14) R1820:6, 5863:1 புதிய குணலட்சணத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறதாய் இருக்கும். R2571:5 மகா இராஜாதி இராஜாவிற்கும், அந்த தனிமனிதனுக்கும் இடையே உள்ள இரகசியம். R5113:4

## 104. வெளிப்படுத்தல் 3:5

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்."**

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ** – உலகத்தின் ஆவியைத் தனக்குள்ளாக ஜெயங்கொள்ளுகிறவனெவனோ. R1113:4; C225 சுயம், புகழ், உலகப்பிரகாரமான செழிப்பு, அத்துடன் மனிதனால் உருவாக்கப்பட்ட விசுவாச அறிக்கைகள் மற்றும் கோட்பாடுகள் என்பவைகளின் மீதான அன்பை (ஜெயங்கொள்ளுகிறவனெவனோ). R4870:5 ஜெயங்கொள்வதற்கான ஆவியும், வாஞ்சையும் உடையவர்கள், இருதயத்தில் நீதியை வெளிப்படுத்துகிறவர்கள். R5377:2 தேவனுடைய குடும்பத்தில் ஓர் இடத்தைத் தக்கவைத்துக்கொள்பவர்கள். R5377:4 கர்த்தரிடமிருந்து மிக உயரிய மகிமை, கனம் மற்றும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிற தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார், ஜெயங்கொண்டு தங்கள் நேர்மையை மெய்ப்பிக்க வேண்டியிருக்கிறது. R5668:3 ஏதோ கிறிஸ்தவ ஜீவியத்தின் துவக்கத்தில் மாத்திரம் சித்தத்தை ஜெயங்கொள்வதென்பது போதுமானதாய் இருக்காது, தொடர்ந்து சோதனைகளையும் பரீட்சைகளையும் சகிக்க வேண்டியிருக்கின்றது, அதுவும் அவைகளை (ஏனோதானோவென்றில்லாமல் மாறாக) ஜெயங்கொள்ளும் வகையில் சகித்திட வேண்டும். R5668:3 நமது ஜெயங்கொள்ளுதலென்பது பரிபூரணமான கிரியைகளை உள்ளடக்கினதாக இராமல், மாறாக ஒரு பரிபூரணமான இருதயத்தை அல்லது சித்தத்தை உள்ளடக்கினதாக உள்ளது. R962:5 அநுதினமும் தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றும் உண்மையுள்ளவர்கள் மாத்திரமே அவருக்குப் பாத்திரவான்களாய் இருக்கிறார்கள். R827:3 ஒரு தனிநபர் தனது சோதனையின் முடிவில், பந்தய சாலையின் முடிவில், ஜெயங்கொள்ளும் அளவிலான நீதியினைப் பெற்றிருப்பார் என்பதைக் குறிக்கின்றது. R5669:1, 5377:2 திரள்கூட்டமும் இதிலடங்கும். ஏனெனில், அவர்களும் ஜெயங்கொள்ளுகிறார்கள். R5105:2; Q309:1 (ஒரு சில வசனப்பகுதிகள் இதனை ஆமோதிப்பதாகவும், ஒரு சில வசனப்பகுதிகள் இதற்கு எதிரிடையாகவும் காணப்படுவதால்) திரள்கூட்டம் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது நமக்கு உறுதியாக தெரியவில்லை. R5377:5 திரள்கூட்டத்தார் அவர்களின் நாமங்களை ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பெற்றுள்ளனர், ஆனால் அவர்கள் மிகவும் உண்மையான அர்த்தத்தில் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருப்பதில்லை. அவர்கள் உண்மையுள்ளவர்களாக நிலைநிற்கவில்லை. R5669:2 அனைத்து அர்ப்பணிக்கப்பட்ட, தகுதிகாண்

நிலையில் இருக்கும் அங்கத்தினரும் (probationary members) கிறிஸ்துவின் உண்மையான சரீரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, மாறாக ஜெயங்கொள்ளுகிறவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் உண்மையான சரீரத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். R962:4 அவர்கள் "அவரோடேகூட மரித்தவர்கள்," (2 தீமோ. 2:11) எனவே மனப்பூர்வமாய்ப் பாவம் செய்ய முடியாது. R4870:4 எத்துனை சிலரே இந்த உயரிய தரநிலையை எப்போதும் கைக்கொண்டு வாழ்பவர்களாய் இருக்கின்றார்கள். R4870:5

**வெண்வஸ்திரம்** - உண்மையான / மெய்யான நீதி (Actual righteousness). R5377:3 எதிர்கால நிலையில் இருக்கப்போகிற நீதியானது (சாற்றுவிக்கப்பட்ட நீதியாக / imputed righteousness இல்லாமல் மாறாக personal righteousness) தனிப்பட்ட நீதியாக அல்லது பரிசுத்தத்தன்மையாக இருக்கும். உயிர்த்தெழுதலில், உடன் சுதந்தரருக்கு பாவமும் அனைத்து வகையான அசுத்தமும் நீங்கப்பெற்ற புதிய, பரிபூரணமான, ஆவிக்குரிய சரீரங்கள் வழங்கப்படும். R2159:3 நிஜமான பரிசுத்தமுள்ள (actual purity) புதிய சரீரம். நாம் "பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்வோம்." (2 கொரி. 5:2) R5669:2 உயிர்த்தெழுதலின்போது, கறைதிரையற்ற, உள்ளார்ந்த சுத்தமுடைய சரீரத்தைப் பெற்றுக் கொள்வோம். R5669:3 மகிமையடைந்த சபை நீதியின் வஸ்திரத்தைக் கழற்றுவதாகக் குறிப்பிடப் படவில்லை, மாறாக வெண்வஸ்திரத்தில் தொடர்ந்து காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது, ஆனால் வித்தியாசம் என்னவெனில் நமது நீதி நம்முடையதாக இருக்கும் (தரிப்பிக்கப்பட்டதாக இருக்காது). R5377:3 "மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே." (வெளி. 19:8) R2159:6 நம்முடைய வஸ்திரமானது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டதிலிருந்து, சாற்றுவிக்கப்பட்ட பரிபூரணத்திலிருந்து நிஜமான பரிபூரணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வஸ்திரத்துக்கு மாற்றப்படும். R5669:2 வெண்வஸ்திர அடையாளமானது கர்த்தர் தமது ஜனமாக ஏற்றுக்கொள்ளுபவர்களுடைய நீதியைக் குறிக்கின்றது என்று அவர் தமது வார்த்தையெங்கும் தெரிவித்திருக்கிறார். R2159:3 திரையைக் கடப்பதற்கு முன்னுள்ள தற்காலத்தைக் குறிக்கிறது. Q522:4

**அவனுக்கு... தரிப்பிக்கப்படும்** - இவ்வாறு தரிப்பிக்கப்படுவார். R2159:6 உயிர்த்தெழுதலில். R2159:3

**அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல்** - பந்தயத்தின் இறுதிவரை உண்மையுள்ள வர்களாக இருந்தால் மாத்திரமே அவர்களுடைய நாமம் கிறுக்கிப்போடப்படாமல் இருக்கும். R1458:4, 5669:4, 1908:3, 1699:3, 1264:2*, 827:3 ஆனால் உண்மையற்றத்தன்மையின் காரணமாக சிலருடைய நாமங்கள் கிறுக்கிப்போடப்பட்டு, மற்றவர்களுடைய நாமங்கள்கொண்டு இடம்மாற்றம் செய்யப்படும். C364; R3212:1, 2570:2, 2540:5, 1893:4, 1113:4, 694:6 "தெரிந்துகொள்ளப்பட்ட" சபை வகுப்பாருடைய நாமங்கள் மத்தியிலிருந்து இது அழிக்கப்படும். R2160:4 அனைவரும் சபையின் கூடுகைகளுக்குள் வருவதற்கு எப்படி சுயாதீனம் / சுதந்திரம் பெற்றிருந்தார்களோ, அதுபோலவே அதனை விட்டு வெளியேறுவதற்கும் சுயாதீனம் / சுதந்திரம் இருந்தது. ஒருவேளை யாரேனும் "பின்வாங்கி" போனாலோ தகுதியற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டாலோ, அவர்களின் நாமங்கள் பரலோகப் பதிவுகளிலிருந்து மாத்திரம் "கிறுக்கிப்போடப்பட்டது," ஏனெனில், மற்ற பதிவுகள் இருப்பதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. R1420:6 திரள்கூட்டத்தின் நாமங்கள் (அதில்) இருக்கலாம், ஆனால் இரண்டாம் மரணத்திற்குச் செல்பவர்களின் நாமங்கள் நிச்சயமாக கிறுக்கிப்போடப்படும். R5669:5, 5377:5 ஜீவபுஸ்தகத்திலிருந்து நாமம் கிறுக்கிப்போடப்பட்ட ஒருவர்கூட நிலைநிற்கமாட்டார்; அதேசமயம் யாருடைய நாமம் (இறுதிவரை) அதிலிருக்கின்றதோ அவர் விழவுமாட்டார். R745:2 அவர்கள் மிகவும் மனப்பூர்வமான வகையில் பாவத்திற்கு எதிராக இருக்கின்றார்கள், மேலும் எதிராளியானவன் தங்கள்மீது செல்வாக்கு செலுத்த முடியாதளவுக்குத் தங்கள் வஸ்திரங்களைக் கறைபடாமல் வைத்திருப்பதில் மிகவும் முனைப்பாகவும் இருக்கின்றார்கள். R4870:4 ஒருதரம் சுத்திகரிக்கப்பட்டு,

ஜீவபுஸ்தகத்தில் நம்முடைய நாமம் எழுதப்பட்டிருக்கிறது என்பதற்காக, இந்த நிலையை நாம் என்றென்றைக்குமாகத் தக்கவைத்துக்கொள்வோம் என்கிற எந்த உத்தரவாதமும் இல்லை. R492:4*

**ஜீவபுஸ்தகம்** - இது இந்தச் சுவிசேஷ யுகத்து ஜெயங்கொள்ளுபவர்கள் அனைவரின் நாமங்களும் எழுதப்பட்ட ஒரு விசேஷித்த புத்தகமாகும். R5377:4 தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவனுடைய குடும்பத்தார், மணவாட்டி வகுப்பார், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்பவர்களுடைய நாமங்கள் எழுதப்பட்டுள்ள புஸ்தகம். F165; R5377:4 ஒரு சபை வகுப்பார் வேண்டும் என்கிற தேவனுடைய ஆதி நோக்கத்தைக் குறிக்கிறது. R2540:5 "பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ள." (எபி. 12:23) C222; HG315:6 விசேஷித்த ஜீவபுஸ்தகம் இப்போது திறக்கப்பட்டுள்ளது, இது சுவிசேஷ யுகத்துடன் தொடர்புடையதாகும். R5377:3 கர்த்தர் தாமே, நமது நாமங்களின் பதிவுகளும், ஒவ்வொரு அங்கத்துடைய தனிப்பட்ட கணக்குகளும் அடங்கிய சபை குறித்த புத்தகங்களைத் தம்மிடத்தில் வைத்திருக்கிறார். R1893:4, 1420:6, 694:3; Q537:3 நீங்கள் கர்த்தருக்கு முழு அர்ப்பணத்தைச் செய்தபோது, உங்கள் பெயர் "பரலோகத்தில்" "ஜீவபுஸ்தகத்தில்" எழுதப்பட்டது. R694:3, 5669:3, 5532:3, 5377:4, 3212:1 தேவனுடைய ஞாபகப் புஸ்தகம். Q537:3 பரலோக பதிவுகள். R1421:1 தேவனுடைய சிந்தையே மாபெரும் ஜீவபுஸ்தகமாகும், அதில் அர்ப்பணிக்கப்பட்டவர்களின் பெயர்கள் அனைத்தும் நித்திய ஜீவனுக்குத் தகுதியானவை என விசேஷித்த பட்டியலொன்றில் எழுதப்பட்டுள்ளன. R1264:2* திரள்கூட்டம் உட்பட. Q309:1 நட்பு, அன்பு மற்றும் ஆசீர்வாதம் என்பவைகளைக் குறிக்கின்றது. தேவன் தம்முடைய நண்பர்கள் குறித்த நிரந்தரமான பதிவினை வைத்திருக்கிறார், ஆனால் அவருடைய எதிரிகள் குறித்த எந்தப் பதிவையும் வைத்துக்கொள்வதில்லை. NS69:1, 68:5 கர்த்தர் (அவர்களை) ஏற்றுக்கொண்டு, பரிசுத்தமானவர்களென தனியே பிரித்துவைத்து, அவர்களுடைய நாமங்களை ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதிக்கொண்டிருக்கின்றார். F123 நாம் உண்மையுள்ளவராக இருந்தால், அவர் நம்முடைய நாமங்களை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடவும் மாட்டார், நம்முடைய கிரீடங்களை எடுத்து மற்றவர்களுக்குக் கொடுத்துவிடவும் மாட்டார். NS188:1 "பலியினால் உடன்படிக்கை பண்ணினவர்களின்" நாமங்கள் உண்மையில் பரீட்சிக்கப்படுவதற்கு முன்பே புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. R5669:3 வேதாகமம் இரண்டு ஜீவபுஸ்தகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன - இங்கு வருவது தற்காலத்திற்கும், மற்றொன்று (வெளி. 20:12) ஆயிரமாண்டு யுகத்திற்கும் உரியவையாகும். R5377:3 பூமிக்குரிய சபை பதிவேடுகளில் இல்லை (மாறாக ஜீவபுஸ்தகத்தில்). HG315:6

**என் பிதா முன்பாகவும்** - ஜெயங்கொள்ளுபவர்கள், கர்த்தர் அவர்களைக் குறித்து வெட்கப்படாத அளவிற்கு அப்பேர்ப்பட்ட குணலட்சணங்களைக் கொண்டிருப்பார்கள். R5669:4 நாம் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், அவருடைய உண்மையான திருமுன்னிலையில் இன்னும் நாம் அவரிடம் அறிமுகப்படுத்தப்படவில்லை. R5377:5

**அவருடைய தூதர் முன்பாகவும்** - தூதுவர்கள். R942:2

**அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்** - மணவாட்டி வகுப்பார் மாத்திரமே விசேஷமாக அறிக்கையிடப் பட்டு, அறிமுகப்படுத்தப்படுவார்கள் (introduced). R5377:6 அவரது உடன்- ஜெயங்கொண்டவர் எனவும், உடன்-சுதந்தரர் எனவும் (அறிக்கையிடப்படுவார்கள்). R942:2 தங்களைக் குறித்து கர்த்தர் வெட்கப்படுவதில்லை எனுமளவிற்கான குணலட்சணத்தை ஜெயங்கொள்ளுபவர்கள் பெற்றிருப்பார்கள். அவர்கள் அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து, ஜெயங்கொண்டிருப்பார்கள். R5669:4 நாம் ஜெயங்கொள்ளத் தவறினால், நம்முடைய பெயர்கள் அறிக்கையிடப்படாமல், கிறுக்கிப்போடப்படும். Q522:4

## 105. வெளிப்படுத்தல் 3:10

**"என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."**

**என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை** – பொறுமையுடன் சகிக்கும்படிக்கு நான் கொடுத்த என் வார்த்தையை. (உரோதர்ஹாம் மொழியாக்கம்) R504:6* என் வார்த்தை தொடர்ந்து மனதில் ஊன்றசெய்கிற பொறுமை. R2790:6 பொறுமையுடன் சகித்திருத்தல் / patient endurance என்பதே கர்த்தருடைய வார்த்தை அல்லது போதனையாகும். R4910:4 தேவனுடைய உண்மை பரிசுத்தவான்களின் விடாப்பிடியான பொறுமையுடன்கூடிய விசுவாசம். R5718:2 கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையாக இருக்கும் காலப்பகுதியும் சில காலமளவும் நீடிக்க வேண்டியிருக்கிறது. R5718:1 ஏனெனில், நீண்ட காலமாகவே தேவனுடைய வார்த்தை இலேசாகவே மதிக்கப்பட்டு வந்துள்ளது. அதைப் பற்றிய குறைவான புரிதலிலிருந்து மேம்பட்ட புரிதலுக்கான முன்னேற்றமானது படிப்படியாகவே நிகழ்ந்தது. R5718:1 அதின் கிரேக்கப் பதம் ஹுப்போமோனே (hupomone) ஆகும்; அர்த்தம்: உற்சாகமான, இடையறாது சகித்திருக்கும் தன்மை. இது குணலட்சணத்தின் ஓர் அம்சமாகும், மாறாக தற்காலிகமாக உணர்ச்சியையோ செயலையோ அடக்கி வைப்பது மாத்திரமல்ல. R2791:1 சுய சித்தத்தினுடைய எதிர்ப்பேதும் இல்லாமல், தெய்வீக ஞானத்திலும் அன்பிலும் முழு நம்பிக்கை வைத்து, மனநிறைவோடு தவறையோ இன்னலையோ சகிப்பதில் வெளிப்படுகிற அப்பேர்ப்பட்ட இருதயம் மற்றும் குணலட்சணத்தின் வளர்ச்சி. R2791:1 இராஜ்யத்தில் தம்மோடு உடன் சுதந்திரராக இருக்கப்போகிறவர்களிடத்தில், நன்மையினிமித்தம் பாடுபட்டு, பொறுமையாகச் சகிப்பதற்கு மகிழ்ச்சியோடு ஒப்புக் கொடுக்கும் உண்மையை (loyalty) கர்த்தர் கேட்பது (demand) மிகவும் சரியானதே. R2791:4 மில்லர் இயக்கத்தின் பணியானது, தேவனுடைய வார்த்தையைப் பொறுமையோடு காத்துக்கொண்டவர்களுக்கும், அவருடைய வார்த்தையில் நம்பிக்கை இழந்தவர்களுக்கும் இடையே ஒருவகையான பிரித்தலை உண்டாக்குவதாக இருந்தது. R5718:2 தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய அறிவு இல்லாததால், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக்கொள்பவர்களிடையே பொறுமையின்மை, சகிப்பின்மை போன்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. R2792:5 எந்த நிலைமை பிலதெல்பியா காலக்கட்டத்தைக் குறித்து கர்த்தருக்குப் பிரியமானதாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருந்ததோ, அவை இந்தக் காலக்கட்டத்திலுள்ள நமக்கும் அவருடைய எல்லா ஜனங்களுக்கும்கூட பொருந்துவதாய் இருக்கும். R2790:1

**நீ காத்துக்கொண்டபடியினால்** – அவர்களின் உண்மைத்தன்மையினிமித்தமாக. R5651:5

**பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாக** – "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்." (1 கொரி. 3:13) R3760:6 நமது விசுவாசம், பொறுமை மற்றும் நேர்மையைச் சோதிப்பதற்கு ஓர் இடறுதலின் கல் அனுமதிக்கப்படுகின்றது. R3719:1 கிறிஸ்துவின் சிலுவையைக் காட்டிலும் இரட்சிப்பிற்கான இன்னொரு வழி உள்ளது எனும் உபதேசமே கிறிஸ்தவமண்டலம் மீது வரவிருக்கும் சோதனையாகும். R3826:2 அவர்களின் மனமேட்டிமை தாழ்த்தப்படும்போது, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யார் என்பதை அவர்கள் அறிந்துகொண்டு, இவர்களைப் பணிந்து வணங்குவார்கள். R504:6*

**பூச்சக்கரத்தின் மேலெங்கும்** – இந்தத் தீங்கு நாளின் சோதனைகள் சபையுடன் தொடங்குவதாய் இருந்தாலும், அவை அதோடு முடிவதில்லை. R5718:4 ஒவ்வொரு தேசத்து ஜனங்களிடையே, குறிப்பாக கிறிஸ்தவமண்டலத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமே சோதனை, பரீட்சை சென்று கொண்டிருக்கின்றது. R5718:4 நாம் ஏற்கனவே அதில் காணப்படுகிறோம், அது நமது சகிப்புத் தன்மையின் பரீட்சையின் ஒரு பகுதியாக இருக்கின்றது. R2792:3 பலர் தாங்கள் கடந்து வந்த

கடுமையான அனுபவங்களினால், தேவன் ஒருவர் இருக்கிறாரா எனச் சந்தேகப்படுகின்றனர். தேவனுடைய மகத்தான திட்டத்தை அறியாத ஜனங்கள், ஓர் உயர்ந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். R5718:4 சோதனை மற்றும் அசைக்கப்படுதலின் இந்தக் காலக்கட்டத்தில் அனைத்து சபை அமைப்புகளும் முற்றிலும் தூள் தூளாகிவிடும். பாபிலோன் விழுந்துவிடும். R5718:4 பூச்சக்கரத்தின் மேலெங்கும் இப்போதே வந்துள்ளது, இன்னும் அதிகப்படியான அழுத்தமும் வரவிருக்கிறது. OV429:5; R4899:1, 3929:3 இதன் பொருள் அதிருப்தி, கசப்பு, தீமையை அனுமானிப்பது, வெறுப்பு, சண்டை, கொள்ளை, கொலை ஆகும். இந்த ஆவியே சமுதாயத்தை மூழ்கடிக்கப் போகிறது. R4899:1 உலகத்தின் மீது மாத்திரமல்ல, திருச்சபையின் மீதும். R4253:1, 5981:1 ஒரு சில வகைகளில், இந்தச் சோதனைகாலமானது சபையாகிய நம்மிடமிருந்து தொடங்குவதாய் இருக்கிறது. R4899:1 விசேஷித்த சோதனைகள் திருச்சபையின் தலைவர்களிடம் இருந்து தொடங்கி, அந்தகாரத்திலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப் பட்டவர்களிடையே தொடர்ந்து விரிவடையும். R4473:6 அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு எதிரான அல்லது "தேவனுடைய வீட்டிற்கு" எதிரான சோதனைகாலமானது விசேஷ அழுத்தத்துடன் வந்தால் அது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. (1 பேது. 4:17) R4191:1, 4899:6, 4253:1, 2793:4 விசுவாசம் மற்றும் பொறுமையான சகிப்புத்தன்மையின் சோதனைகளை அனுமதிக்க வேண்டாம் என்று நாம் கர்த்தரிடம் ஜெபிக்க முடியாது; ஏனெனில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சோதிக்கப்பட்ட ஜனங்களாக இருக்க வேண்டும். R2793:5 குறிப்பாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது, குறிப்பாக மூப்பர்கள் மீது. R3943:6 கூடுமானால் "தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும்" வஞ்சிக்கும். R4167:6 அது அனைவரையும் பாதிக்கும் வகையில், ஆகாயத்தில் சம்பவிப்பதாக இருக்க வேண்டுமென நாம் புரிந்திருக்கின்றோம். சோதனை என்பது ஒவ்வொரு திசையிலும் படிப்படியாக தானாக பரவுகின்ற ஒரு காரியமாகும். R5981:1

**சோதனைகாலம்** – சோதனை வேளை. R504:6* சோதனை. R2775:4 சுவிசேஷ யுகத்தின் முடிவான தருணம். R5981:1, 5268:5, 2775:4, 2453:4 பிலதெல்பியா சபையின் மீதல்லாமல், மாறாக அவர்களுக்குப் பின் வந்தவர்களாகிய லவோதிக்கேயா சபைமீதான சோதனைகாலம். R5718:2, 4253:2, 4208:2 பரிணாமக் கோட்பாடுகள், வேதாகம விமர்சனம், கிறிஸ்தவ அறிவியல், ஹிப்னாடிசம் (மனோவசிய சாஸ்திரம்), புதிய சிந்தனை, உளச்சாந்தி (mind cures) மற்றும் அந்தகாரத்தினுடைய மற்றக் கிரியைகள் என்பவைகளினிமித்தமாக வருகின்ற அறுவடை காலத்து விசேஷித்த சோதனைகள். R5098:2, 5718:3, 4264:1, 3909:5, 3760:5, 2836:1, 2792:6 அதன் சோதனைகள் மற்றும் சுற்றிநிற்கும் சவால்கள் பல்வேறு வகையாக இருக்கும், அவற்றில் சில நுட்பமானவையாக இருக்கும்; சத்தியத்தில் முழுமையாக வேரூன்றி, நிலைத்திராத யாவரும் உறுதியான அஸ்திபாரமாகிய ஈடுபலியிலிருந்து இழுப்புண்டுப்போகும் வண்ணமாக அது வஞ்சனை மிகுந்ததா யிருக்கும். R2792:6 நாம் இந்தத் "தீங்கு நாளுக்கு" இப்போது வந்தடைந்திருக்கிறோம், இப்போது "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்!" (எபே. 6:11) என்பதே நமக்கான அவசரச் செய்தியாக இருக்கின்றது. R5678:4, 5981:1, 5184:4 அப்போஸ்தலர் தங்கள் விசேஷித்த சோதனை காலத்தை நெருங்கினபோது அவர்களுக்கான நமது கர்த்தருடைய பிரயாசங்களும் அதிகரித்தன, அதுபோலவே அவருடைய திருச்சபையாகிய சரீரத்தின் கடைசி அங்கத்தினர் பொறுத்தவரையில் கடுஞ்சோதனையான தருணத்தை அவர்கள் நெருங்கும்போதும்கூட அப்படியாக இருக்கும் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். R4167:5, 2793:4 விசுவாசமும் அன்பும் பிரதான சோதனைகளாக இருக்கும். R4475:4 நமது விசுவாசத்தைச் சோதிக்க ஓர் இடறுதலின்கல்லானது அனுமதிக்கப்படுகிறது. R3719:1 சகோதரரின் இறுதி மற்றும் மிகவும் துளைத்துச் செல்லும் சோதனைகளில் ஒன்றாக, சக சகோதர சகோதரிகளிடத்தில் காட்டும் அன்பிற்கான சோதனையானது இருக்கும். R2453:4 நமக்கு முன்பாக பல கடுமையான சோதனைகள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை,

இராப்பொழுது நெருங்குகையில், நம்மைக் குட்டுவதற்கு சாத்தானுக்கு இன்னும் அதிக சுதந்திரம் வழங்கப்படலாம். R1653:5 எதிர்காலத்தில், ஒருங்கிணைந்த சரூபத்திற்கு ஆவி கொடுக்கப்பட்ட பிற்பாடு கடுமையான சோதனைகள் பின்தொடர்ந்துவரும் என்றாலும், பலருக்கும் இப்போதுகூட சோதனையானது துவங்கப்பட்டாயிற்று. R2496:1 பொறுமையுடன் சகிப்பது எப்பொழுதாவது தேவைப்படும் என்றால், அது இப்பொழுதே ஆகும். அதனை உடையோர் மாத்திரமே இந்தத் தீங்கு நாளில் நிலைநிற்க முடியும். R2792:4, 5651:5 "அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும்" (சக. 14:13) – எனும் இந்த நிலைதான் சபையில் எதிர்பார்க்க வேண்டுமா? இதை மாத்திரமே நாம் எதிர்பார்க்க முடியுமென்று நாங்கள் கருதுகிறோம். R4208:4 நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவரா? பரீட்சையின்கீழ் நாம் எவ்விதத்தில் தீர்மானம் எடுக்கிறோம் என்பதை வைத்தே, கர்த்தர் நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பார். R4208:6 இந்த யுகத்தை நிறைவடையச் செய்யும் தீங்கு நாளானது தேவ ஜனங்களுக்கு இதுவரை அறியப்படாத கடுமையான சோதனைகளைக் கொண்டிருக்கும், மேலும் சத்தியத்தின் சர்வாயுதவர்க்கமானது ஒருபோதும் அறியப்படாதளவிற்கு அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் தேவைப் படுவதாக இருக்கும். R4253:1 பொல்லாங்கன் உலகத்தின்மீதும், பெயர்ச்சபை மண்டலத்தின்மீதும் தாக்கத்தை உண்டுபண்ணும் விதமாக அசாதாரண சோதனைகளைக் கொண்டுவர அனுமதிக்கப் படுகின்ற சோதனையின் காலத்திற்கு மிகவும் அண்மையில் நாம் இருக்கிறோம். R4253:3 அடுத்த சில வருடங்களில் அனைத்து "அமானுஷ்ய" மற்றும் "பில்லிசூனியக் கலை" மற்றும் ஆவியுலகத் தொடர்பு போன்றவைகளிலும் அற்புதமான முன்னேற்றங்கள் காணப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். R4163:5 தேவனுடைய ஜனங்கள் ஒரு நபரிடமோ அல்லது இன்னொருவருடனோ, ஒரு சத்திய விஷயத்திலோ அல்லது இன்னொரு விஷயத்திலோ, தப்பறையின் வெறியில் எல்லா நிதானத்தையும் இழந்துபோகும்படிக்கு அவர்களைச் சோதிப்பதற்காக சாத்தானுக்கும், விழுந்துபோன தூதருக்கும் அசாதாரண வல்லமை வழங்கப்படுகின்றது. R4514:6 ஏறக்குறைய 4,000 ஆண்டுகளுக்கும் மேலாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்து, இந்தச் சோதனைகாலத்தின்போது அதிக சுதந்திரமும் சலுகைகளும் விழுந்துபோன தூதருக்குக் கிடைக்குமென்பதால், அவர்களின் மிகப்பெரிய தலையீடு இருக்கும் என எதிர்பார்க்கலாம். Q18 விழுந்துபோன தூதர் வெளிப்படையாக மனித ரூபம் எடுப்பதற்கு, ஏதேனும் வழிவகைகூட அனுமதிக்கப்படலாம். Q17 எதிராளியானவன் கோபமடைந்து, பூமியின் குடிகளைக் கவர்ந்திழுக்கும்படிக்கும், சோதிக்கும்படிக்கும் தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்வான். NS563:6 பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற மாபெரும் சோதனைகாலமானது முதலில் சபையிலிருந்து துவங்குமென்று வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியாகக் கூறுகின்றன. R4583:3 கர்த்தர் யோபுவின் விஷயத்தில் எதிராளிக்கு அனுமதி கொடுத்தது போல, இந்தச் சோதனையின் காலத்திலும் சாத்தான் விசேஷித்த வல்லமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்வான். R4227:6, 4391:1 அசுத்தம், கோபம், வன்மம், பொறாமை, வெறுப்பு மற்றும் இதர மாம்சத்தின் கிரியைகள் என்பவைகளைக்கொண்டு நமது சிந்தைகளில் நஞ்சினைக் கலப்பதே எதிராளியின் முயற்சியாக உள்ளது. R4584:1 தீமையின் அதிகாரங்களானது, எதிர்த்துப்போராடும் தன்மையினைப் (combativeness) பிரதான பண்பாக்குகின்றன. R4803:5 அதிகாரம் மற்றும் வழிமுறைகள் (methods) சம்பந்தமாய் எழும்பும் முக்கியமற்ற கேள்விகள் கவனத்தைச் சிதறப்பண்ணி, பிரச்சனைகளை எழுப்புகின்றன; இது சிலரை மிகவும் கசப்படைய செய்துவிடுகின்றது. R4899:1 இச்சோதனைகாலம் இன்னும் அதன் மாபெரும் தீவிரத்தை எட்டவில்லை என்றாலும் அது சமீபித்திருப்பதாகவே நாங்கள் நம்புகிறோம். R5652:4 இப்பொழுதைக்காட்டிலும் அதிக குணலட்சண பலமடைதலும், அதிக தைரியமும் தேவைப்படுகிற காலம் முன் ஒருபோதும் இருந்த தில்லை. R5707:4 திருச்சபையின் வரலாற்றில் முன் ஒருபோதும் நமது மாபெரும் எதிராளியானவன், தற்காலத்தைப் போல, கள்ள உபதேசங்கள் மற்றும் பொருத்தமற்ற கேள்விகள் என்பவைகளின் மூலமாக சத்தியத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதில் தீவிரமாக இருந்ததில்லை. R5970:1, 3199:1 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்பது குறிப்பாக

(இக்காலத்திற்குப்) பொருந்தக்கூடியதாயுள்ளது. R2883:6 வேத மாணவர்கள் மீது ஒரு மாபெரும் ஆபத்துக் காணப்படுகின்றது என நாம் நம்புகின்றோம் மற்றும் அது எத்தனை சீக்கிரமாய்க் கண்டுணரப் படுகின்றதோ, அவ்வளவாய் அச்சோதனையானது மிகவும் வெற்றிகரமாய்க் கடந்துபோகப்படும். இது பிரிவினைகளை அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கலாம்; ஆயினும், முன்னொருபோதும் இல்லாதளவுக்கு வேத மாணவர்கள் சாந்தம், தயாளம், பொறுமை, அன்பு, பக்தி, விசுவாசம், சந்தோஷம் என்பவைகளைப் பெற்றவர்களாக இப்பொழுது காணப்படுகின்றனர். R5981:2, 5982:3,5, 4899:1 சபைக்கான பெரும்பாலான அபாயமும், இடர்பாடும், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் வாசலருகேயே காணப்படுகின்றது - எனினும் அனைவருக்கும் இப்படியாகக் காணப்படுவதில்லை, மாறாக சிறுபான்மையினரே இப்படி அபாயத்தில் காணப்படுகின்றனர். R5981:2 தொகுக்கப்பட்ட V.D.M. கேள்விகளுக்குரிய பதில்களானது திவ்விய வார்த்தைக்குறித்த நியாயமானதொரு அறிவைப் பெற்றிருப்பவர்களை அறிய உதவிடும் மற்றும் அத்தகையவர்களின் ஊழியங்களானது பாதகமாய் இராமல் பிரயோஜனமாய் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படலாம். R5982:6 ஜாதிகள் மத்தியில் ஏற்கெனவே செயல்பட்டுவருகின்றதும், வர்த்தக விஷயத்தில் உச்சநிலையை அடைய சண்டை செய்வதற்கென அவர்களை வெறித்தனமாய் இயக்கிவருகின்றதுமான சுயநலம் மற்றும் பேராசையின் ஆவியானது, அதிகமதிகமாய்ப் பெருகி, அனைவரையும், அனைத்தையும் அசைத்துக்கொண்டி ருக்கிறது. R5981:1 இந்த ஆவியானது, நம்முடைய தேசங்களில் நடைபெறும் வேலை நிறுத்தம் (strike) முதலானவைகளில் பார்க்கப்படலாம் - அனைவருமே சுயத்தைத் திருப்தி செய்வதற்கே ஆர்வமாக இருக்கின்றனர் மற்றும் கனங்கள், உரிமைகள், ஸ்தானங்கள் முதலானவைகளுக்காகப் போராடு வதற்கே விரும்புகின்றனர். R5981:1 அதே சுயநலமான, பேராசையின் ஆவியானது, சபையிலும் ஒழுங்கின்மைக்கு நேராக நடத்திக்கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக உலகத்தின் மீதுவரும் ஓர் உபத்திரவகாலத்தினையும் மற்றும் சபைமீது வரும் ஓர் உபத்திரவகாலத்தினையும் நாம் எதிர்பார்க் கின்றோம். R5981:6 சபையானவள் பேராசைமிக்க புருஷரின் (சில சமயங்களில் பேராசைமிக்க ஸ்திரீகளின்) ஆதிக்கத்தின் கீழ்த்தொடர்ந்து காணப்படுவது என்பது பொறுத்துக்கொள்ள முடியாத ஒன்றாகும். இதுவே கர்த்தருடைய வீட்டை ஓர் ஒழுங்கிற்குள் கொண்டுவருவதற்கான காலமாகும். R5981:6 ஒரு சோதனைகாலமாக இருந்தாலும், அது கர்த்தருடைய பிரசன்னம் முதலியவற்றைப் பகுத்துணரக் கூடியவர்களுக்கு ஒரு விலையேறப்பெற்ற மற்றும் அனுகூலமான காலமாகவும் உள்ளது. R713:1, 3719:1 அவர்மீது தங்களுடைய நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும். R5184:4, 4253:1 புதிய யுகத்திற்குக் கொண்டு சேர்க்கும் தீங்கு நாளில் நாம் வாழ்ந்துவருகிறோமென்பதை நாம் அறிவோம். R5268:5 மகா "உபத்திரவ காலம்" என்று அழைக்கப்படுகிற இந்தச் சோதனைகாலத்தின் பண்புகள், 2 தீமோ. 3:1 - 5 - ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. R2793:1; SM117:2 சிலுவையின் போர்ச்சேவகர் முன்னெப்போதைக்காட்டிலும் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். R4391:1, 2 தெச. 2:9 – 12 – ஐப் பார்க்கவும். R2793:2

**உன்னைக் காப்பேன்** - பொறுமையுடன் தங்களது விசுவாசத்தின் மிகக் கடுமையான சோதனையைச் கடந்துசென்ற பிலதெல்பியா சபையானது பின்னான சோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்தது. R5718:2 அந்தக் காலக்கட்டத்தினுடைய சில சபை தற்போது வரை இருக்கலாம், மேலும் அவர்கள் இந்தக் காலத்திற்குரிய விசேஷித்த சோதனைகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். அறுவடை காலத்தினுடை யவர்கள் என்று எண்ணப்படமாட்டார்கள். R5718:5 இயேசுவின் அடிச்சுவடுகளில் கவனமாய் நடப்பவர்கள் R4706:6 உண்மையுள்ளவர்கள் இந்த மாபெரும் சோதனையின் வல்லமையிலிருந்து காக்கப்படுவார்கள். R504:6* இவர்கள் சிந்தனையில் நிதானம், கர்த்தரிடத்தில் இளைப்பாறும் இருதயம், அவருடைய காலத்திற்காகவும் வழிக்காகவும் பொறுமையோடு காத்திருப்பது என்பவைகளில் தேவ வார்த்தையின் படிப்பினைகளைக் கற்றுக்கொண்டவர்களாயும், அநுதினம் கவனமாகச் சுயப்

பரிசோதனை செய்து, அடக்கியாளுவது எனும் உறுதிமொழியினால் உதவப்படுகிறவர்களாயும் இருக்கிறார்கள். R5250:4 பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுபவர்கள் – மரித்த வர்களையோ ஜீவனுள்ள மனுஷரையோ, விசுவாசப் பிரமாணத்தையோ அல்லது வேறெதையுமே விக்கிரகமென ஆராதனை செய்யாதவர்கள். R4706:6 ஒழுங்குப்படுத்தப்பட்டு, முற்றிலும் அர்ப்பணிக் கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்ட நிலைமையிலேயே காணப்படுபவர்கள், இந்தச் சோதனை வரும்போது அதன் வல்லமையைக்காட்டிலும் மிக அதிக வல்லமையோடு காணப்படுவார்கள். (சங்கீதம் 91:7; லூக்கா 21:34 – 36 ஆகிய வசனங்களைக் காணவும்) R504:6*, 4208:3 சரியான குணமுள்ள எவரும் ஜெயங்கொள்ளுவதற்கு கர்த்தரால் உதவப்படுவார்கள். R3719:1 பிலதெல்பியா சபையானது எல்லா உபத்திரவங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களும் சாதாரணமான அல்லது பொதுவான சோதனைகளைப் பெற்றிருந்தனர், ஆனால் உலகத்தின்மீது வரவிருந்த சில விசேஷித்த சோதனைகளிலிருந்து அவர்கள் தப்புவிக்கப்பட்டிருந் தார்கள். R2792:3 லவோதிக்கேயா காலத்தைச் சேர்ந்த நாமோ இந்தச் சோதனைகாலத்திலிருந்து தப்புவிக்கப்படாதிருந்தாலும், நமது கர்த்தருடைய பரோஷியாவின் (பிரசன்னத்தின்) காலத்தில் வாழ்வதன் விளைவாக அந்தச் சோதனைக்கு ஈடுசெய்யும் ஆசீர்வாதமும் நமக்குக் கிடைக்கின்றது. R5651:5, 2792:3

## 106. வெளிப்படுத்தல் 3:12

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கி வருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்."**

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ** – முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள், சிறுமந்தை வகுப்பார். R4654:5 (வேதாகமத்தில்) எல்லா இடங்களிலும் பரம அழைப்பு என்பது, ஜெயங்கொள்ளுகிற வர்களுக்கு மாத்திரமே வைக்கப்பட்டுள்ள தகுதிக்கான வெகுமதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. R4493:3

**ஆலயத்திலே** – மெய்த் திருச்சபை, கிறிஸ்து. B209; C239; F128; T70 மெய்யான மற்றும் நித்தியமான ஆலயம். R5993:5, 505:1* மகிமைப்படுத்தப்பட்ட சபை; பரம எருசலேம். R638:5*

**தூணாக்குவேன்** – தூண் என்பது சாதாரணமான ஒரு முக்கியமற்ற பகுதி இல்லை, மாறாக கட்டட அமைப்பு இருக்குமளவும் தூணை அகற்ற முடியாது என்பதால் இது ஒரு முக்கியமான / இன்றியமையாத பகுதியாக இருக்கிறது. R5993:4, 505:1* இயேசுவே "பிரதான கட்டுநராக" (master builder) இருக்கிறார். R172:3 அவருடைய உண்மையுள்ள சீஷர் ஜீவனுள்ள அங்கத்தினராகவும் தூண்களாகவும் இருப்பார்கள். R2367:5, 1813:3 செல்வாக்கில் உயர்த்தப்படுதல். R465:4* பிலதெல்பியா காலக்கட்டத்தின்போது, குறிப்பாக முதலாவது மற்றும் கடைசிப் பாகங்களின்போது, உண்மையுள்ளவர்கள் பெயரளவிலான ஆலயத்தைவிட்டு வெளியே வர வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் அல்லது தங்களுடைய நேரடியான நேர்மையான சாட்சிக்காக புறம்பாக்கப்பட்டனர். R5993:4, 505:1*

**என் தேவனுடைய நாமத்தையும்** – "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்," (2 தீமோ. 2:19) மேலும் ஏற்றகாலத்தில் அவர்களை முழுமையாகவும் நித்தியத்திற்குமாக அங்கீகரிப்பார். R5993:5, 505:1*

**புதிய எருசலேம்** – தேவனுடைய இராஜ்யம். A296; R1352:5 ஆயிரமாண்டு யுகத்தின் புதிய

ஆவிக்குரிய அரசாங்கம். R2832:4, 2647:3 தேவன் இந்த மகிமைவாய்ந்த நகரத்தில் அல்லது அரசாங்கத்தில் வாசஞ்செய்வார்; அது அவருடைய ஆலயமாக இருக்கும். R2832:5 மகிமைப்படுத்தப் பட்ட சபையாகிய மணவாட்டி வகுப்பாரைச் சித்தரிக்கும் படம். R238:1*; E42

**என் புதிய நாமத்தையும்** – மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் நாமம். E42 எப்படி இயேசு என்பது நமது கர்த்தருடைய நாமமாக இருந்து, அவரே பின்னர் கிறிஸ்துவாக, மேசியாவாக மாறினாரோ அதுபோல, அவருடைய சரீரத்தில் அங்கம் வகிக்கும் அனைவருமே அவருடைய புதிய நாமத்தின் கீழாக வருகிறார்கள், மேலும் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டு, ஒருவரால்லொருவர் கிறிஸ்துவின் அங்கத்தினராக அங்கீகரிக்கப்படலாம். R3970:5 "யாவே சித்கேனூ (எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர்) என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும்." (எரே. 33:16 – திருவிவிலியம்) மணவாளனின் நாமம் அவருடைய மணவாட்டிக்கு வழங்கப்படுகிறது. R3970:5, 238:2*; E42 திருச்சபையின் சோதனையின் கட்டத்தின் போது அவர்களின் நாமங்கள் தீயவை எனப் புறம்பாக்கப்பட்டன. அவர்கள் அவிசுவாசிகள் என்றும், வேதப்புரட்டர் என்றும் முத்திரை குத்தப்பட்டனர். அவர்கள் பரம தேசத்தின் குடிமக்களாக, கிறிஸ்தவராக அடையாளங்காணப்படவில்லை. R5993:5, 505:1* வரவிருக்கின்ற யுகத்தில், கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வ நிலையிலும் (position), தலைப்பிலும் (title) ஒரு மாற்றம் இருக்கப்போவதை இது பரிந்துரைக்கிறது. R237:3* "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளினார்." (அப். 15:14) R237:6*, 255:6, 4:5

## 107. வெளிப்படுத்தல் 3:20

**"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்."**

**வாசற்படியிலே நின்று** – அவர் பிரசன்னமாகாதிருந்தால் / வந்திருக்காவிட்டால் அவரால் இதனைச் செய்ய முடியாதே. R506:1* லவோதிக்கேயா சபைக்குத் தெரியாதவகையில் நம்முடைய கர்த்தர் திரும்பி வந்திருக்கிறார். அவர் வாசற்படியில் நின்று தட்டுகிறார். R5993:6, 457:4* பாவியின் இருதய வாசற்படியில் நின்று அல்ல, உண்மையான இஸ்ரயேலரின் இருதய வாசற்படியில் நின்றே கர்த்தர் தட்டிக்கொண்டிருக்கிறார். R177:4 மனுஷருக்குப் புலப்படாத வகையில், மகிமையிலும் வல்லமையிலும் வந்திருக்கும் அவருடைய இரண்டாம் பிரசன்னம். SM499:4

**தட்டுகிறேன்** – பிரசன்னமும் தட்டுதலும், கி.பி. 1874ன் இலையுதிர்காலத்தில் தொடங்கியது, இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. R87:4 கர்த்தர் தம்மையே "உத்தம இஸ்ரயேலருக்கென்று" கொடுக்கின்றார். NS781:5 காலத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதற்கான வாய்மொழி சான்றாதாரங்கள் அல்லது அச்சிடப்பட்ட சான்றாதாரங்கள் மூலமாக (தட்டுகிறேன்). ஊழியக்காரர் முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடாது / முடியாது, மாறாக வந்திருக்கும் போது, அதிலும் கண்ணால் பார்க்காமலும் அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. R3354:6, 5566:1, 4092:4 உலகத்தை எழுப்புவதற்காக அல்லாமல், கன்னிகைளை எழுப்புவதற்காக, தீர்க்கதரிசனங்களைக்கொண்டு மென்மையாக தட்டிக்கொண்டிருக்கிறார். R2978:4 புதிய யுகத்தின் வரவைக் குறிக்கும் அடையாளங்கள் மூலமாக, தம்முடைய பிரசன்னத்தைப் பற்றி நமக்குச் சொல்லும் அவருடைய வார்த்தையின் மூலமாக, கர்த்தர் தமது உண்மையுள்ள சிலரிடம் இப்போது பேசிக்கொண்டு இருக்கிறார். R4092:4 இந்தத் தட்டுதல் கி.பி.1875ல் தொடங்கி, இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. "தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்." (லூக். 12:36) R3355:2, 87:4

சுயத்தைக் குறித்து உணர்வுள்ள (self-conscious), ஆனால், உண்மையில் குருடாக இருக்கும் பரிதாபமான லவோதிக்கேயா சபையோ இதற்குச் செவி கொடுக்கவில்லை. R1577:6 அவர் தட்டுவதை நாம் கேட்டுள்ளோம், ஏற்கனவே திரைக்கு இப்பக்கத்தில், உள்ளே பிரவேசித்து, கொஞ்ச போஜனமும், புத்துணர்வு பானங்களும் பெற்றுக்கொண்டிருக்கிறோம். CR33:4

**ஒருவன்** – உலகத்துடன் முழுமையாக இணைந்துகிடக்கின்ற மற்றும் "அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால்" மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த மாபெரும் அமைப்பிலுள்ள ஒருவன். (வெளி. 18:3) R457:4* இப்போது இது ஒரு தனிப்பட்ட விஷயமாகின்றது. R457:4*, 224:4, 177:4, 87:3; NS43:6, 633:1 ஊழியக்காரர்களுக்கு ஆண்டவர் ஊழியம் புரிவது என்பது, ஒட்டுமொத்தமாய் அனைவருக்கும் கொடுக்கப்படும் விருந்தாய் இராமல், தனிப்பட்ட விதத்திலான வேலையாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். R3355:2, 2978:4, 224:4 ஒருபோதும் இந்தத் "தட்டலைக்" கேட்காத மனிதன், அதைக் கேட்கத் தகுதியானவனாகக் கருதப்பட்டதில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் கேட்கிறவர்கள், தற்போது பிரசன்னமாகி தட்டிக்கொண்டிருக்கும் இராஜாவிற்குப் பதிலளிக்கவும், அவரை ஏற்றுக் கொள்ளவும் கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. R2978:4 கலியாண விருந்திற்குத் தமது விருந்தினரை அழைப்பதற்காக அவர் வாசலில் நின்று தட்டும்போது அவருடைய சத்தத்தைச் சிலரே கேட்பார்கள். R1295:4*

**என் சத்தத்தைக்கேட்டு** – தட்டும் சத்தத்தை. R2983:5, 3355:2, 2978:4 லவோதிக்கேயா சபை விழித்து இருந்திருப்பார்களேயாயின், அவர்கள் இச்சத்தத்தைக் கேட்டிருப்பார்கள். R5993:6, 506:1* அவர் தற்போது பிரசன்னமாகி இருப்பதாக அறிவிக்கும் தீர்க்கதரிசனங்கள். R177:4 மாம்சீகக் காதுகளுக்குக் கேட்காது, மாறாக விசுவாசத்தின் செவிகள், புரிதலின் செவிகளால் மட்டுமே கேட்கப்படும். R2978:4 அவர் திருடனைப் போன்று வருவார் என்று நமது கர்த்தர் தெளிவாக முன்னறிவித்திருந்தார்; ஆனால் எந்த மணி வேளையில் என்பதை அவர் சொல்லவில்லை. R5993:6, 506:1* நாம் மேசியாவை அறிந்துகொள்ளும்படியாக, நமது கண்கள் இப்போது காண்கின்றபடியாலும், நமது காதுகள் இப்போது கேட்கின்றபடியாலும் அவை பாக்கியமுள்ளவை. R5075:5 இருதயத்தில் முற்றிலும் சுத்தமும், உண்மையும், நேர்மையும் உள்ளவர்கள் மட்டுமே கேட்கும் நிலையில் உள்ளனர். R3415:5 காது செவிடாய் இருப்பது பற்றி இங்கு எதுவும் கூறப்படவில்லை. அவர்கள் விழித்திருந்தால் நிச்சயம் கேட்டிருப்பார்கள். R506:1* டக், டக், டக். விழித்தெழுங்கள்; என்னை உள்ளே வர அனுமதியுங்கள். அவர்கள் கேட்கிறார்களா? உன். 5:3ம் வசனம் அதற்கான பதிலாகும். R506:1*

**கதவைத் திறந்தால்** – அவனது இருதயத்தைத் திறந்து, அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் காரியங்களை ஏற்றுக்கொண்டால். R5566:1

**நான் பிரவேசித்து** – கர்த்தர் ஒரு பணிவிடைக்காரனைப் போல, தம்மை இடைக் கட்டிக்கொண்டு, உள்ளே வந்து ஊழியஞ்செய்வார். R5566:1 கேட்பவன் கதவைத் திறந்தால், நான் உள்ளே வருவேன். R2978:5

**அவனோடே போஜனம்பண்ணுவேன்** – பரலோக போஜனத்தை அவனுக்களித்து, நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நாளின் சோதனைகளையும், சுட்டெரிப்புகளையும் தாங்கிக்கொள்ளும்படியாக அவனுக்குப் பெலன் கொடுப்பேன். NS44:1 எஜமானர் அந்த நேரத்தில் வழங்குவதாக வாக்களித்துள்ள "ஏற்றகால போஜனம்," "புதியவைகளும் பழையவைகளும்" ஆகிய பொக்கிஷம். (லூக். 12:42; மத். 13:52) R2978:5, 515:4, 191:4, 177:5, 149:4, 126:4 இது தற்கால ஜீவியத்தில் நாம் அனுபவிக்கும் காரியங்களைக் குறிக்கின்றது. CR317:1 சத்தியத்தின் மீது என்னே ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட விருந்தை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். R177:4, 149:4 திருச்சபையின் லவோதிக்கேயா காலக்கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது. R149:4*

## 108. வெளிப்படுத்தல் 3:21

**"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்."**

**நான்... ஜெயங்கொண்டது... போல** – "என் பிதா எனக்கு ஓர் இராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்." (லூக். 22:29) E38 நிர்ப்பந்தத்தின்கீழ் ஜெயங்கொள்ளும் திரள்கூட்டத்திற்கு இது பொருந்தாது. கர்த்தர் ஜெயங்கொண்டதுபோல ஜெயங்கொள்ளுபவர்களே சிங்காசனத்தில் அமரப்போகிறவர்கள். Q289:4; R4871:4

**பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட** – அண்ட பிரபஞ்சத்தின் சிங்காசனம். NS202:1 உலகளாவிய ஆதிக்கம் மற்றும் மகிமை மற்றும் வல்லமையின் சிங்காசனம். அவர் தம்முடைய மனித நிலைக்கு முந்திய நிலையைக்காட்டிலும் மிகவும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டார். R1252:2* யாவே / யேகோவா தேவனுக்குச் சொந்தமான திவ்ய சுபாவத்தில் பங்கடைபவர். R1252:2* ஆயிரமாண்டு அரசாட்சியின் ஆயிர வருடங்கள் என்பது புதிய சிருஷ்டியின் மகிமை, கனம் மற்றும் அழியாமை என்பவைகளை அப்பியாசப்படுத்துவதன் துவக்கமாக இருக்கும். F69

**நான்... உட்கார்ந்தது... போல** – அவர் தமது சொந்த சிங்காசனத்தை ஏற்படுத்தி, ஆயிரமாண்டு இராஜ்யத்தை நிறுவும் தருணத்திற்காக இது காத்துக்கொண்டிருக்கிறது. R5830:1, 506:4* அவருடைய உண்மைத்தன்மைக்கான வெகுமதி. OV307:2; R1360:4

**ஜெயங்கொள்ளுகிறவன்** – சுயம், புகழ், உலகப்பிரகாரமான செழிப்பு, மனித கோட்பாடுகள் மற்றும் அமைப்புகள் மீதான நேசத்தை ஜெயங்கொள்ளுகிறவன். D268; HG718:4 உலகத்தையும் அதன் ஆவியையும். R2461:6, 2154:2 மரணபரியந்தம் ஒரு மகிழ்ச்சியான மற்றும் மனப்பூர்வமான பலியைச் செலுத்துவது. R772:2* இந்தப் போராட்டமும் ஜெயமும், முதலில், நம்முடைய சொந்த இருதயங்களிலும் சிந்தைகளிலும் நடக்கின்றன, இரண்டாவதாக, பொதுவான தீமைகளுக்கு எதிராக போராடுவதில் இருக்கின்றன. R5662:5, 5778:2, 5439:4 நாம் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்ய வேண்டுமானால், முதலில், தேவனுக்கு உண்மையாயிருப்பது, அவருடைய வார்த்தையின்மீதான விசுவாசம், சத்தியத்திற்கான வைராக்கியம், பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மை, நிந்தை மற்றும் துன்புறுத்தல் எனும் பரீட்சைகள் வாயிலாக மரணபரியந்தம் நம்முடைய தகுதியை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. R4925:3 772:2* நீதியின் பொருட்டு மனமுவந்து துன்பங்களைச் சகிப்பவர்கள். R4637:1, 5439:4 ஆற்றல், குணலட்சண வலிமை, விடாமுயற்சி மற்றும் தற்கால ஜீவியத்தின் இறுதிவரை உறுதியோடும் பொறுமையோடும் சகித்தல் என்பவை ஜெயங்கொள்ளுவதற்குத் தேவைப்படுகின்றன. R1719:3 எதிரிடையான செல்வாக்கின்கீழ் உண்மையும் உத்தமமுமுள்ளவர்கள் (faithful and true). R5651:5, 4925:3; T89; OV184:7 பரிபூரண அன்பின் இலக்கை அடைவது. NS417:1 தேவனுடைய இரகசியங்களின் மீதான சகல உக்கிராணத்துவத்திலும் உண்மையாக இருப்பதன் மூலமாக. R1034:5 எல்லா விசுவாசிகளும் இல்லை, பெரும்பான்மையானவர்களும் கூட இல்லை; மாறாக ஒரு சிறுமந்தை மாத்திரமே. R281:1; NS396:1; OV189:5 இந்தக் காரியத்தின் மகத்தான முடிவும் உறுதிப்படுத்தப்படுவதும் (fixity) எதிர்காலத்தில் வெளிப்படும். R5393:6, 3570:3; A91 கல்யாணத்திற்கு முன், கிறிஸ்து இராஜாவாக தோன்றி / வந்து, விருந்தினரை விசாரித்து, ஜெயங்கொள்ளுபவர்களைத் தெரிந்தெடுக்கிறார். R343:5 "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." (1 யோவா. 5:4) R1719:2, 1720:4 "கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும்... கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் (திரைக்கு அப்பால், அபிஷேகிக்கப்பட்டவரின் மகிமையான சரீரத்தின் ஓர் அங்கத்தினனாகக் காணப்படும்படிக்கும்), அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்;

குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி. 3:9 - 11). HG230:1 கிறிஸ்தவ மண்டலத்தினுடைய வெளிப் படையான செழிப்பின் திடீர் எழுச்சி ஏற்படும்போது, அதில் இணையாத அனைவரும் எதிரிகளாக எண்ணப்படுவார்கள். R5063:3

**எவனோ** - ஒவ்வொருவருக்கும். R1946:2, 1284:1* பரிசுத்த ஸ்தல வகுப்பாரின். C190 பரலோக குடும்பத்தின் முதற்பேறானவர். R132:6

**என்னுடைய சிங்காசனத்தில்** - உலகத்தை மாற்றும் நோக்கத்திற்காக கிறிஸ்து ஆளுகை செய்கிறார். A91, 222; R3570:3, 858:2, 531:5; HG342:1 அவருடைய ஆயிரமாண்டு சிங்காசனத்தில். R4084:4, 2647:3, 1771:3 மேசியாவின் சிங்காசனம். Q192:2 மறுஜென்மத்தில் / மறுபிறப்பில் (regeneration). R623:6* கர்த்தருடைய உண்மையுள்ள சிறுமந்தையார், அழியாமையையும் திவ்ய சுபாவத்தையும் பெற்றுக்கொண்டவர்களாய், கிறிஸ்துவுடன் அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்து, ஆயிரமாண்டு ஆளுகை செய்வார்கள்; பூமியின் சகல குடிகளையும் உயர்த்துவார்கள். R5802:4, 255:6, 4:4; OV223:1; SM145:T பரிசுத்தவான்கள் தங்கள் கர்த்தருடன் இணைந்து உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். R4084:4, 2765:3; HG149:3 இந்த யுகத்தின் உண்மையுள்ள ஜெயங்கொள்ளு பவர்கள் கிறிஸ்துவுடன் ஜீவித்து, ஆயிரமாண்டளவும் ஆளுகை செய்வார்கள். R1488:6, 531:6; A91; HG342:1 தேவன் ஆபிரகாமுக்கு அளித்த அனைத்து கிருபையான வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றப்போகிற இராஜ்யம். R5170:6, 4453:2 இயேசுவால் சுதந்தரிக்கப்பட்டு, அவருடைய மணவாட்டியால் பகிர்ந்துகொள்ளப்படப்போகிற ஆவிக்குரிய பரலோக இராஜ்யம். R269:4, 5608:6, 2732:5 புதிய சிருஷ்டிகளாகிய நாம், நமது போக்கின் இறுதிவரை உண்மையுள்ளவர்களாக இருந்தால், முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணப்படுத்தப்படுவோம். R5550:5, 4784:1 தேசங்களை உடைக்க அவர்கள்மேல் அதிகாரம் பெறுவது. R155:4*; HG669:2 நமது மகிமையடைந்த கர்த்தருடைய வாக்குத்தத்தம். R1351:6 அவருடைய மகிமையையும் வல்லமையையும் பகிர்ந்துகொள்ளுவது. R332:2 நிலையில் / ஸ்தானத்தில் உயர்த்தப்படுவது. R465:4* இராஜ்யம் என்பது இருதயத்தில் நடக்கும் கிருபையின் செயல்பாடு மாத்திரமல்ல. A285 உலகளாவிய பற்றில்லாமைக்கு / உணர்ச்சியில்லாமைக்கு (apathy) மத்தியில், கடைசிவரை அன்பில் நிலைத்திருப்பவர்களே, சகல உண்மையுள்ளவர்களிலேயே மிகவும் உயரிய கனத்தைப் பெற்றுக்கொள்வார்கள். R1295:4* கிறிஸ்து எப்போதும் பிதாவினுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதில்லை; அவருக்கென்று சொந்தமாக ஒன்று உள்ளது. அவர் அதில் அமருவார், அவரைப் பின்தொடர்ந்தவர்கள் அவருடன் அதனை பகிர்ந்து கொள்வார்கள். R506:4*

**என்னோடேகூட உட்காரும்படிக்கு** - இராஜா வருகிற வரையில் எந்த இராஜ்யமும் இருக்க முடியாது. A288; HG663:3 முழு சபையும், மாபெரும் மேசியாவின் இராஜ்யத்தில், அவரோடு இணைந்திருக்கும். R4965:1, 5830:1, 4912:5, 1719:2, 269:4, 255:6, 4:4; CR491:1; HG663:3 அவருடைய இராஜ்ய கனங்களையும், மனுக்குலத்தை உயர்த்தும் மகிமைவாய்ந்த பணிகளையும் பகிர்ந்துகொள்வதற்கு. SM143:1, 182:T; R5418:4, OV379:5, 418:3; HG368:6, 416:1, 438:3, 513:4; NS541:5, 677:4, 767:3 அவருடைய இராஜ்யம் வல்லமையிலும் மாமகிமையிலும் ஸ்தாபிக்கப்படும்போது. R1351:6 தேவனுடைய இராஜாக்களாகவும் ஆசாரியராகவும். R1262:3 ஜெயங்கொள்ளுபவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட வெகுமதி. HG341:2 இந்தச் சுவிசேஷ யுகத்தின் உண்மையுள்ள செம்மறியாடு களுக்குரிய வாக்குத்தத்தம். NS182:3, 767:3 இந்தப் பரிசுத்தமாக்கப்பட்ட வகுப்பார் அனைவருக்கும், அவர் பாவத்தைக் கீழ்ப்படுத்துவதிலும், மரணத்தைத் தூக்கியெறிவதிலும், மனுக்குலத்தை உயர்த்துவதிலும் பங்கு வழங்கப்படும். HG666:5 பலியின் மூலம் தங்கள் எஜமானருக்கு தங்களுடைய நேர்மையை (loyalty) வெளிப்படுத்தும் சிலுவை வீரர்களுக்கு, அவர்கள் மிகவும் உயர்வாக உயர்த்தப்படுவார்கள் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. NS455:3 ஆட்டுக்குட்டியானவரின்

மனைவியாகிய “மணவாட்டி,” தற்காலத்தில் தன் எஜமானருடன் துன்பப்படுவதன் மூலம் நீதியின் கொள்கைகளுக்குத் தன் நேர்மையை மெய்ப்பிப்பதால், அவருடைய சிங்காசனத்தின் கனங்களை அவரோடு பகிர்ந்துகொள்வதற்குத் தகுதியானவளாக எண்ணப்படுவாள். NS477:1; R4576:5, 623:6*; HG230:1 நீதியினிமித்தம் அவரோடு இவ்வாறு துன்பப்படுவார்களானால், அதற்கான வெகுமதியாக அவர்கள் அவரோடுகூட அவருடைய சிங்காசனத்தில் அமருவார்கள். SM451:2 திரள்கூட்டத்தார் சிங்காசனத்தில் அமருவதற்குப் பதிலாக சிங்காசனத்தின் முன்பாக நிற்பார்கள். SM362:T, 288:1

**அருள்செய்வேன்** – விதிமுறைகளை நிறைவேற்றிய பிறகு வெகுமதி வழங்குவதென்பது கிருபையாக இருக்காது, மாறாக அது நீதியாக இருக்கும். R5073:4 மணவாட்டியை உற்சாகப்படுத்துவதற்கான ஒரு பாக்கியமான மற்றும் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம். R5863:1; A222, 255; SM490:2

-----------------------------------

*பிரதிகள் தேவைப்படுவோர் தொடர்புக்கு:*

**8428737474**